# உடப்பு

## தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று



வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்

குமரன் புத்தக இல்லம்

உடப்பு: தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று



# உடப்பு

## தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று



சி. சிவலோகதாசன்
05.08.2017

வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2014

உடப்பு: தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று
எழுதியது வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்

© வ. சிவலோகதாசன், 2014

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Uddappu: Tamilk Kalachcharaththin Urru
by Vasthiyampillai Sivalogathasan

© V. Sivalogathasan, 2014

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550, E.mail: *kumbhlk@gmail.com*
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -06

வெளியீட்டு எண்: # 626

ISBN: 978-955-659-439-3

## சமர்ப்பணம்

என் உயிருக்கும்,
உயர் கல்விக்கும் உயிரூட்டி,
ஊக்குவித்து, வளர்த்தெடுத்த
எனது பெற்றோருக்கும்,
எனது ஆசான்களுக்கும்,
தமிழ் கலாச்சாரத்தின் சொர்க்கபூமியாம்
எம் உடப்பூருக்கும்,
அவற்றை பாதுகாத்து வளர்த்தெடுத்த
ஊர்ப் பெரியார்களுக்கும்,
ஊரவர்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | viii |
| முன்னுரை | xii |
| நன்றியுரை | xv |
| 1. அறிமுகம்: வடமேல் கரைத் தமிழர் வரலாறு | 1 |
| 2. ஆதி வரலாறும், உடப்பூரும் | 13 |
| 3. இறைபக்தியும், குலதெய்வமும் | 33 |
| 4. ஈடில்லாத் தொழில்கள் | 67 |
| 5. உலவும் வாழ்வியல் சடங்குகள் | 87 |
| 6. ஊர்த் திருவிழாக்கள் | 101 |
| 7. எளிமை மிகு கிராமிய வழிபாடு | 119 |
| 8. ஏற்றம் தரு கல்வி | 150 |
| 9. ஐவர்கதையும், ஆடித்திருவிழாவும் | 168 |
| 10. ஒன்றிணைக்கும் நாட்டாரிலக்கியங்கள் | 196 |
| 11. ஓங்கி உலகளந்த எங்கள் தமிழ்மொழி | 226 |
| 12. ஔவை வழி எங்கள் மொழி | 254 |
| உடப்பூர் சொற்களஞ்சியம் | 257 |
| வாசிப்புத் துணை நூல்கள் | 277 |
| ஒளிப்படங்கள் | 279 |

# அணிந்துரை

இற்றைக்கு சுமார் இருபத்தைந்தாண்டுகளின் முன்னர் உடப்பு என்ற கலாசார அடையாளம் உடைய பிரதேசத்தை பத்திரிகைகள் வழியாகவும் உடப்பூர் வீரசொக்கன் என்ற ஊடகவியலாளரின் ஆக்கங்கள் வழியாகவும் உடப்பூர் சோமஸ்கந்தர் என்ற வில்லிசைக் கலைஞன் வழியாகவும் அறிந்து கொண்டேன். ஆனால், அந்த ஊரின் உண்மையான பண்பாட்டுக் கோலங்களை அறிந்து கொள்வதற்கான சூழல் நான் பல்கலைக்கழத்தில் விரிவுரையாளனாக நியமனம் பெற்ற போதே வாய்த்தது. 1990 களில் நான் பல்கலைக்கழகம் நுழைந்த போது உடப்பூரைச் சேர்ந்த வ. சிவலோக தாசன், பி. தேவகுமாரி, ந. பத்மானந்தன் முதலியோர் அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களின் வழி பல தகவல்களை அறிந்து கொண்டேன். உடப்பூரின் முதலாவது பட்டாதாரி திரு. வீ. நடராஜா ஆசிரியர் அவர்களின் நட்பும் எனக்குச் சாத்தியமாயிற்று. அக்காலத்தில் அங்கு வாழ்ந்த கல்விமான்களும் பல்கலைக்கழகத்தில் கற்ற இளைஞர் களும் ஒன்றிணைந்து உடப்பூர் பற்றிய பெரிய தொகுப்பு நூலொன்றைக் கொணர்ந்தனர். அதில் 'பெரியதும் சிறியதும்' என்ற கட்டுரையை எழுதினேன். அதுவே எனது முதல் ஆராய்ச்சிக் கட்டுரையாகவும் அமைந்தது. அந்நூலின் வெளியீட்டு விழாவுக்கு நான் சென்றிருந்தேன். அலைகடல் ஓரத்திலே ஓங்கி உலகளந்த உத்தமனார் கோயிலுடன் திரௌபதையம்மன் கோயிலும் இணைந்த கோயில் முன்றலிலே அந்த விழா நடைபெற்றது. அன்று தொடங்கியது என்னுடைய உடப்பூர் நோக்கிய பயணங்களும் யாத்திரைகளும்.

உண்மையிலே வடமேல் மாகாணம் இந்து கலாசார பாரம்பரியங் களின் தொட்டிலாக ஒரு காலத்தில் நிலவியிருக்கிறது என்பதற்கு முன்னேஸ்வரமும, ஐயனார் கோயில்களும, உடப்புத் திரௌபதையம்மன் ஆலயமும் மாயவன் ஆறும் இன்றும் சான்று பகர்கின்றன. அதிலும் உடப்பு என்பது பிரதான நகரங்களுக்கு சேய்மையால் அலைகடல் ஓரத்திலே தனித்துவத்துடன் விளங்குகின்ற ஓர் ஒதுக்குக் குடியிருப்புப் பிரதேசமாகும். ஆனால், கடவுள் அளித்த நன்கொடையான கடல் வளத்தை

தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பூர்வீக சனவேற்றம் அங்கு நிகழ்ந்திருக்கிறது. தமிழகத்திலிருந்து ஈழத்திற்கான சனவேற்றங்கள் பல்வேறு காலங்களிலும் பல்வேறு தளங்களிலும் நிகழ்ந்துள்ளன. எனினும், இராமநாதபுர மாவட்டத்தில் இருந்து இங்கு வந்து குடியேறிய தமிழ் இனக் குழுமம் தன்னைத் தனித்துவமான சைவ இனக்குழுமமாக பிரகடனம் செய்து கொண்டு வாழ்வது மிக முக்கியமான ஓர் அம்சமாகும். ஏனைய மதங்களின் ஊடுறுவலோ மதமாற்ற நிகழ்வுகளோ இடம்பெறாத தனித்துவமான கலாசார அடையாளம் கொண்ட ஒதுக்குக் குடியேற்றப் பகுதியாக இது விளங்குகிறது அதனால்தான் அது தனது சமயத்தை, மொழியை, கலாசாரத்தை, கிராமியப் பண்பாட்டை இழந்துவிடாமல் தொடர்ந்தும் பேணி வருகின்றது. குடிநீருக்குக் கூட பெண்கள் தலைகளில் குடங்களை ஏந்தி பூவல்களுக்குச் சென்று சிறு அகப்பைகளால் நீரைச் சேந்தி அதனைச் சுமந்து கொண்டு மீண்டும் வீடு திரும்ப வேண்டிய இடர்ப்பாடுகள் அவர்களுக்கு இருந்திருக்கிறது. மின்சாரம் விரைவில் அவர்களுக்குக் கிட்டவில்லை. நகரப் போக்குவரத்துக்கான இணைப்புக்கள் அவர்களை எட்டிப் பார்க்கவில்லை. எனினும், அவர்கள் கடல்படு திரவியத்தின் துணையுடன் வாழ்ந்தார்கள். திரௌபதையம்மன் துணைநின்றாள். கலைகளும் மொழியும் பேணப்பட்டன.

இப்பிராந்தியத்தில் திரௌபதையம்மன் ஆலயத்தைத் தவிர காளியம்மன், மாரியம்மன், முருகன், ஐயனார், இராக்குருசி அம்மன் ஆலயங்கள் எனப் பல உப ஆலயங்கள் இங்கு உண்டு. இவை எல்லாவற்றிலும் ஒரு இணக்கப்பாடு உண்டு. கிராமிய விழாக்கள் நேர்த்தியாக நடைபெறுகின்றன. இவ்வாலயங்களுக்கு தல புராணங்கள் உண்டு. பெரும்பாலும் நாட்டுப்புறவியல் சார்ந்த வழிபாட்டு மரபுகளே இங்கு பேணப்படுகின்றன. அதுபோலவே கூத்துக்கள் தொடங்கி நவீன நாடகங்கள் வரை இங்கு மேடையேற்றப்படுகின்றன. சித்திரைச் செவ்வாய் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திரௌபதையம்மன் ஆலய விழாவில் பாண்டவர் வனவாசமும் அருச்சுனன் தபசும் மகாபாரதப் படிப்பும், தீ மிதிப்பும் முக்கியம் பெறுகின்றன. வாழ்வியல் சடங்குகளும் இன்னமும் நகர்மயம் சாராத அல்லது பெருநெறி சாராதா வாழ்வியல் சடங்குகளாகவே உள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள், நம்பிக்கைகள், பழமொழிகள், சொல்வடைகள் என மொழி சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் எல்லா இடங்களிலும் பரவிக்

கிடக்கின்றன. எனவே, தனித்து விடப்பட்ட ஓர் இனக்குழும வாழ்வைத் தமது கலாசாரத்தின் தொட்டிலாக மாற்றியமைப்பதில் உடப்பூர் மக்கள் வெற்றி கண்டுள்ளனர் என்றே குறிப்பிடலாம்.

மேற்குறித்த பிராந்தியம் தொடர்பாக பல நிலைகளிலும் தகவல்கள், கட்டுரைகள், நூல்கள் எனப் பல்வேறு ஆவணங்கள் வெளிவந்துள்ளன. வீ. நடராசா ஆசிரியர், மு. சொக்கலிங்க சுவாமி, இ. சிறிஸ்கந்தராஜா ஆசிரியர், உடப்பூர் வீரசொக்கன், ந. பத்மானந்தன், தனபாலசிங்கம், திருமதி ம. தேவகுமாரி, செல்வி யூஜினா ஆகியோர் பல்வேறு காலங் களில் பல்வேறு தளங்களில் உடப்பூர் பற்றி எழுதியுள்ளனர். எனினும், உடப்பூரின் முதலாவது கலாநிதியான கலாநிதி வ. சிவலோகதாசன் அவர்கள் இந்த நூலில் மிகச் சிறந்த ஆய்வுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் சகல தகவல்களையும் ஒழுங்கு திரட்டித் தருவதற்கு முயற்சித்துள்ளார். கலாநிதி சிவலோகதாசன் துடிப்பும் திறமையும் மொழி, சமூகப் பற்றும் கொண்ட ஓர் இளம் ஆய்வாளராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்திலேயே இந்து மாணவர் சங்கத்தின் பத்திராதிபராகவும் தமிழ்ச் சங்கத்தின் பீடப் பிரதிநிதியாகவும் பணியாற்றியவர். 1991 இல் நடைபெற்ற குறிஞ்சிக் குமரன் ஆலய மகாகும்பாபிஷேக குழுவில் பொருளாளராகவும் கடமையாற்றியவர். விளையாட்டுத்துறையில் விளையாட்டு வீரனாக திகழ்ந்தவர். முகாமைத்து வத்துறையின் இளம் விரிவுரையாளராகவும் கடமையாற்றிய அவர், பல்கலைக்கழக நிர்வாகத்திலும் சமூக சேவையிலும் தேர்ச்சி பெற்றவர். தாய்லாந்திலும், மக்கள் சீனக் குடியரசிலும் தனது உயர் கல்விப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர். தற்போது இலங்கைத் திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் துறையின் தலைவராகவும் கடமை யாற்றுகிறார். அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட துறை முகாமைத்துவ மாயினும் தன்னுடைய ஊர் மீதும் மக்கள் மீதும், சமூகத்தின் மீதும், மொழியின் மீதும் பண்பாட்டின் மீதும் கொண்ட இடையறாத காதலால் இப்பெருநூலை எழுதியுள்ளார். அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் 'அறிமுகம்' தொடங்கி 'ஔவை வழி எங்கள் மொழி' ஈறாக பன்னிரண்டு இயல்களைக் கொண்டுள்ளது. உதிரி உதிரியாக வெளிவந்த தகவல்கள் யாவற்றையும் மனங்கொண்டு அவற்றின் மெய்ம்மைகளைத் தெரிவுசெய்து தான் புதுவது ஆக்கி பல்வேறு நிலைகளில் இந்தப்

பெருநூலை அவர் எழுதியுள்ளார். உடப்பினுடைய வரலாற்றினையும் பண்பாட்டினையும் அறியப் புகும் ஒருவருக்கு இந்நூல் பெரும் பொக்கிசமாக திகழும் என்பதில் ஐயமில்லை. எனவே, காலமறிந்து செய்த இந்த முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

ஆய்வியலில் அண்மைக்காலத்தில் பேசப்படும் விடயம் பிராந்தியங்கள் குறித்த நுண்ணாய்வுகள் ஆகும். பெருங்கதையாடல்களுள் அமுங்கிப் போகின்ற நுண்பிராந்தியங்கள் இவ்வாறான ஆய்வுகளின்வழி வெளிச்சத்துக் கொண்டுவரப்படுகின்றன. அப்போதுதான் உண்மையில் மக்களையும் பண்பாட்டையும் உலகோரால் அறிந்து கொள்ள முடியும். இந்தவகையில் தான் பிறந்து வளர்ந்து அலைந்து திரிந்த மண்ணையும் மக்களையும் பண்பாட்டையும் தன்னுள் தேக்கிக் கொண்ட காலாநிதி சிவலோதாசன் நாடுகடந்து இன்னொரு தளத்தில் நிற்கும் போதுதான் தன்னுடைய ஊரின் மகிமையை உணரத் தலைப்பட்டுள்ளார். அந்த உணர்வின் வெளிப்பாடாக இப்பெருநூல் இன்று நமக்குக் கிடைக்கிறது. சிவலோகதாசனின் இவ்வாறான முயற்சியில் உடப்பூர் மக்கள் மாத்திரமல்ல அனைத்துலகத் தமிழ் மக்களும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இவ்வாறான ஆவணமயமாக்கள் இன்றைய யுகத்தின் அவசரத் தேவையும் கூட. அனுபவம் - உணர்வு - நினைவு - கோவை செய்தல் - ஆராய்தல் ஆகிய அம்சங்கள் அடங்கிய இப்பெருநூல் தமிழர் வரலாற்றினதும் பண்பாட்டினதும் பெரும் பொக்கிசம் என்பதில் ஐயமில்லை.

**பேராசிரியர் வ.மகேஸ்வரன்**
தலைவர், தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

# முன்னுரை

உடப்பு (Udappu) என்பது இலங்கையின் வடமேற்கில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும். இது சுற்றிவரச் சிங்கள மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் ஊர்களால் சூழப்பட்டுள்ள போதிலும், தமிழ் மொழியையும், தமிழ்க் கலைப் பண்பாடுகளையும் கட்டிக் காத்தபடி தனக்கே உரித்தான தனித்தன்மைகளுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இந்தியப் பெருங்கடலை அண்டிய நெய்தல் நிலத்திலே கடலையே தமது வாழ்முதலாய், வாழ்வாதாரமாய் நம்பியிருக்கின்ற இம்மக்களது வாழ்க்கைமுறை பல தனித்தன்மைகளைக் கொண்டது. இக்கிராம மக்கள் ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ திரௌபதையம்மன் ஆகிய சக்தி தெய்வங்களுக்கு கோயில் எழுப்பி தங்கள் குலதெய்வங்களாக வழிபட்டு வருகின்றார்கள்.

உடப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் 'பூமிதிப்பு' எனும் தீமிதிப்பு திருவிழா பெயர் பெற்றது. பெருமளவு உள்நாட்டு, வெளிநாட்டுக் குடிமக்களும் கலந்து கொண்டு இம்மக்களின் பக்தியை கண்டு ஆச்சரியப்பட்டு நிற்கின்றனர். ஆலய திருவிழாக் காலங்களில் குடங்களிலே கடல் நீரை மொண்டு கொண்டு வந்து ஆலயத்திலே விளக்கேற்றி வழிபடுவர். ஆராய்ச்சியாளர்களும் அதிசயப்படும் இந்தச் சம்பவத்தையும், விஞ்ஞான ரீதியாக மன்னார் கடலடிப் படுக்கைகளில் எரிபொருள் வளம் இருப்பதான செய்தியையும் இணைத்துப் பார்க்கலாம்.

இக்கிராமம் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருகின்றது. எனினும் கடற்கரையிலிருந்து சொற்ப தூரத்திலே மண்ணைச் சிரட்டைகளால் கிண்டி சில அடிகள் ஆழத்திலேயே நன்னீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதும் அந்த நீர் நிரம்பிய மூன்று அல்லது நான்கு குடங்களை ஒன்றன் மேல் ஒன்றாக தலையிலே அடுக்கி பெண்கள் நடந்து செல்வதும் ஆச்சரியத்தைத் தரும் நிகழ்வுகள்.

தமிழர் செறிந்து வாழும் பகுதிகளிலேயே மறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு போன்ற பாரம்பரிய கலை வடிவங்களுக்கு உயிர் கொடுத்து ஆலயத் திருவிழாக் காலங்கள் மற்றும் ஏனைய விழாக்களில் இம்மக்கள் மேடையேற்றி வருகின்றனர்.

புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்கள் ஒரு காலத்தில் தனித் தமிழ் மக்கள் வாழும் இடங்களாகக் காணப்பட்ட போதிலும் இன்று

அந்த சூழல் வெகுவாக மாறிவிட்டது. மாற்றங்கள் சகஜம்தான். ஆனால் சிலாபத்தில் இருந்து 26 கிமீ தொலைவிலும் புத்தளத்தில் இருந்து 42 கிமீ தொலைவிலும் கடற்கரையோரமாக அமைந்திருக்கும் மீன்பிடிக் கிராமமான உடப்பு, எல்லாத் தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்து இன்றும் தனித் தமிழ் கிராமமாக விளங்கி வருகிறது. இது பலரும் அறியாத உண்மை. இங்கே 98 சதவீதமானோர் தமிழ் இந்து மக்கள். ஏனையோர் தமிழ் கிறிஸ்தவர்கள் மற்றும் தமிழ் முஸ்லிம்கள்.

சிலாபத்தில் இருந்து 23 கிலோமீற்றறில் பத்துளு ஓயா சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் குன்றும் குழியுமான பாதையூடாக ஆடியசைந்து செல்லும் போது இது ஒரு தமிழ் கிராமத்துக்கு செல்லும் பாதை என்பது நினைவுக்குவரும்.

உடப்புக்கு பயணிக்கும் போது கம்பீரமாக எழுந்து நிற்கும் 108 அடி உயர ராஜகோபுரத் தரிசனத்தால், பல கிலோ மீற்றர் தொலைவில் இருந்தே இப்போது உடப்பூர் கிராமத்தை அடையாளம் காணலாம். கோபுர தரிசனமே பெரும்பேறு என்றும் அதுவே ஒரு வழிபாடு என்றும் சொல்வார்கள். எனவே இக்கிராமத்தைச் சென்றடைவதற்கு முன்னரேயே ஒரு வழிபாட்டையும் நடத்திவிடும் பாக்கியம் கிடைக்கிறது.

இது ஒரு தமிழ்க் கிராமம் என்பதற்கு அப்பால் இன்னும் சில விசேஷங் களும் இங்கே காணப்படுகின்றன. உடப்பூரின் மொத்த சனத்தொகை 18 ஆயிரம். சுமார் 4500 குடும்பங்கள். இக்கிராம மக்கள் இந்து மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். இலங்கையிலேயே திரௌபதை அம்மனுக்கு ஒரு பெரிய ஆலயம் இங்கேயே அமைந்துள்ளது.

இந்து ஆலய பரிபாலன சபையே ஊர் பொது விவகாரங்களை நிர்ணயிக்கிறது. முடிவுகளை எடுத்து அமுல் செய்கிறது. பரிபாலன சபையின் செயற்பாடுகளுக்கும், பங்களிப்புக்கும் ஊர் மக்களின் ஒத்துழைப்பு என்றும் உண்டு. இச் செயற்பாடுகள் பல ஆக்கபூர்வமான காரியங்களை இங்கே நடத்திக் காட்டியிருக்கின்றன. சமீபத்திய உதாரணம்: ஐந்து ஆண்டு காலத்தில் எழுந்திருக்கும் 108 அடி உயரமான ராஜகோபுரம், இரு பாடசாலைகளின் அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பு, போக்கு வரத்து சேவை விருத்தி, வைத்தியசாலை விருத்தி போன்றவை.

திரௌபதையம்மன் கோவிலும் அதன் பிரசித்திபெற்ற தீ மிதித்தலும் உடப்புக் கிராமத்தின் முகவரிகள். உடப்பூர் கிராமத்தின் மையக்கருவாகவும் இயக்கு சக்தியாகவும் இந்த ஆலயமே விளங்குகிறது. எனவே அவ்வப்போது

இந்த ஆலயத்தில் திருப்பணிகள் இடம்பெற்று வருவது வழமை. இத்திருப் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்த மாதிரி ராஜகோபுரம் எழுந்துள்ளது எனலாம்.

உடப்பூர் மக்களின் ஆதி சந்ததியினர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அக்காள்மடம், தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்தவர்கள். 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளையடுத்து இனிமேல் இங்கே எமது கலை, கலாசாரத்தைப் பேணி வாழ முடியாது என்றெண்ணிய 18 குடும்பங்கள் ஏழு தோணிகளில் ஏறி மன்னார் வந்தடைந்தனர் என்றும் பின்னர் இவர்கள் உடப்பூரில் குடியமர்ந்தனர் என்றும் ஒரு வரலாறு இங்கு கர்ணபரம்பரை கதையாகப் பேசப்படுகிறது.

இந்நூல் உடப்பூரின் வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடுகள், மரபுகள் போன்றவற்றை ஆராய்வதுடன், அவற்றின் பரிணாம வளர்ச்சி அதில் உடப்பூரவரின் பங்களிப்பு என்பவற்றை அ தொடக்கம் ஔ வரை அகரவரிசையில் அதிகாரங்களாக நோக்குகின்றது. அதாவது அறிமுகம்: வடமேல் கரைத் தமிழர் வரலாறு, ஆதி வரலாறும் உடப்பூரும், இறைபக்தியும் குல தெய்வமும், ஈடில்லாத் தொழில்கள், உலவும் வாழ்வியல் சடங்குகள், ஊர்த் திருவிழாக்கள், எளிமை மிகு கிராமிய வழிபாடு, ஏற்றம் தரு கல்வி, ஐவர் கதையும் ஆடித்திருவிழாவும், ஒன்றிணைக்கும் நாட்டாரிலக்கியங்கள், ஓங்கி உலகளந்த எங்கள் தமிழ் மொழி, ஔவை வழி எங்கள் மொழி என அதிகாரங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், உடப்பும், உடப்பு மக்களின் வீரமும், பக்தி நிறைந்து வளர்ந்து ஓங்கி நிற்கும் உடப்பூர் தமிழ் கலாச்சாரமும் பண்பாடும் போன்றவை வேகமான நவீனத்துவத்திற்கு மத்தியிலும் பேணிப் பாதுகாத்து வளர்ந்து வருதல் போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

உடப்பூரைப் பற்றியும், அதன் மகிமை, ஆலயங்களின் செல்வாக்கு போன்றன பற்றியும் ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும், எமது எதிர்கால இளைய தலைமுறையினருக்கும் உடப்பூரின் பெருமையையும், பெறுமதியையும் இந்நூல் விளக்கி நிற்கும் என்பதில் ஐயம்மில்லை.

வாழ்க உடப்பூர், வாழ்க தமிழ், வளர்க எம் கலாச்சாரம்.

**வ. சிவலோதாசன்**
முகாமைத்துவத் துறை, திறந்த பல்கலைக்கழகம்

# நன்றியுரை

எம்மை இயக்கி, இந்நூலை எழுத தூண்டிய என்றும் மேலான எம் குல தெய்வங்களின் அருள்மிகு இறைசக்திக்கு என்முதற்கண் வணக்கங்கள். இவ்வுலகம் பார்க்கவைத்த எனது பெற்றோர் திரு/ திருமதி. சி. வஸ்தியாம் பிள்ளை பாக்கியம் தம்பதிகளுக்கு சிரம்தாழ்ந்தி வணங்கி இந்நூலை எழுதி வெளியிடுகின்றேன். இந்நூலிற்கு முழு வடிவமைப்பு கொடுத்து, அச்சேற்றிய எனதன்பின் மனைவி திருமதி. சோபா சிவலோகதாசனுக்கும் என்றும் நன்றிகள் உரித்தாகுக. உடப்பூர் கலை, கலாச்சாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கு காத்திரமான படைப்புக்கள் தேவை என என்றும் உணரவைத்து தூண்டி ஊக்கப்படுத்திய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்களான பேராசிரியர் வ. மகேஸ்வரன், பேராசிரியர் சி. அருணாச்சலம், பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் ஆகியோர்களுக்கும் எம் ஊரைச் சேர்ந்த சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பி. தேவகுமாரி அவர்களுக்கும், எம் ஊர் முன்னால் அதிபர்களும் எனது ஆசான்களுமான திரு. ஆர். பாலகிருஷ்ணன், திரு.மு. சொக்கலிங்கசாமி, திரு.வீ. நடராசா, திரு.கி. ஸ்ரீகந்தராசா ஆகியோர்க்கும், உடப்பின் புகழை பாரறிய பறைசாற்றிய எமது கலைவித்துவான்களுக்கும், குறிப்பாக உடப்பூர் வில்லிசை வேந்தன் அமரர் திரு.பெரி. சோமாஸ்கந்தர் ஐயா அவர்களுக்கும், உடப்பூர் வீரசொக்கன் அவர்களுக்கும், எம் ஊரையும், கோயில்களையும், அதன் கலை, கலாச்சாரப் பண்பாடுகளையும் பாதுகாக்க முன்னிற்கின்ற எமது இந்து ஆலய பரிபாலன சபைக்கும், எம்மை அன்பு மொழிகளால் என்றும் ஊக்கப்படுத்தும் எமதூர் பெரியோர்களுக்கும், எம் ஊரவர்களுக்கும், என் இளமைக் காலம் தொட்டு இன்று வரையான எனதுயிர் நண்பர்களுக்கும், தேவையான தரவுகளை வழங்கிய அன்பர்களுக்கும் எனது இனிய இதயம் கனிந்த நன்றிகள். இந்நூலை வெளியிடும் குமரன் புத்தக இல்லத்தினருக்கும் எனது நன்றிகள்.

**வ. சிவலோதாசன்**

## அறிமுகம்:

# வடமேல் கரைத் தமிழர் வரலாறு

உடப்பின் ஆதி வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ள இலங்கை வரலாற்றையும், இலங்கைத் தமிழர் வரலாற்றையும் சற்று உற்று நோக்குவது பொருத்தமாதாக இருக்கும்.

பொலன்னறுவைக் காலத்திலும் (993-1215) அதன் பின்பும் இந்திய தென்னகத்திலிருந்து வன்னியர் ஈழநாட்டிற்கு வந்தனர். ஈழத்தில் வன்னியர்வசமிருந்த படைப்பற்றுக்கள் பல வன்னிமைகள் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தன. பொலன்னறுவை அரசு அழிவுற்றதும் வன்னியநாடுகள் என வழங்கிய பல குறுநில அரசுகள் எழுச்சிபெற்றுப் பல நுற்றாண்டு களாக ஈழ வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இவை வட இலங் கையிலும் மேற்கிலே சிலாபம், புத்தளம் முதலிய இடங்களிலும் கிழக்கிலே திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் வளர்ச்சியடைந் திருந்தன எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் (1970) தனது இலங்கை வன்னியர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

மேலும், அவரது நூலில் புத்தளத்து வன்னிமை என்னும் பிரிவு, ஒல்லாந்தராட்சிக் காலம் வரை புத்தளத்திலிருந்த முக்குவ வன்னிமை பற்றிக் கூறுகின்றது. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலந்தொட்டுப் புத்தளத்து வன்னிமைபற்றிக் கிடைத்துள்ள குறிப்புக்களையும் குறிப் பிட்டுள்ளார். இவ்வரசன் (1413 - 1467) புத்தளத்து வன்னிமையைக் கைப்பற்றிய வரலாறு முக்கர ஹடன என்ற நூலில் விவரிக்கப்படுகின்றது. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு செப்பேடுகளை ஆதாரமாகக் கொண்டு புத்தளத்தை ஆண்ட நவரத்தின வன்னியன் பற்றியும், நீதி மன்றத்தில் அங்கம் வகித்த வன்னியர் பற்றியும் வன்னியர் பெற்றிருந்த சிறப்புரிமைகள் பற்றியும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பட்டினம் என வழங்கிய தமிழரசில் அடங்கிய வன்னிமைகளைப் பற்றியும் கூறுகின்றார். யாழ்ப்பாண அரசு உள்ளடக்கி

யிருந்த வன்னிநாடு மன்னாரிலிருந்து திருகோணமலைவரை பரந்திருந்த தென்றும், அதன் எல்லை சிலாபம் வரை இருந்ததென்றும் சான்றுகள் தரப்படுகின்றன.

இலங்கையின் மேற்குக் கரையோரத்திலுள்ள புத்தளம், சிலாபம், முதல் ஏறத்தாழ நீர்கொழும்பு வரை, தமிழர்கள் முக்கிய இனக் குழுமமாக வாழ்ந்து வந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்தில் இங்கு தமிழ்க் குடியிருப்புகள் நிறைய இருந்தன. சைமன் காசிச் செட்டி புத்தளத்தைச் சேர்ந்தவரே. கத்தோலிக்கக் கிறிஸ்தவம் இப்பகுதியின் முக்கிய மதமாகும். புத்தளம் சிலாபத்தை தளமாகக் கொண்ட கத்தோலிக்க பேராயப் பிரிவில் படிப்படியான சிங்கள மயவாக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் பல, படிப்படியாகச் சிங்கள மயப்படுத்தப்பட்டன. இந்த மாற்றத்தை நீர்கொழும்பில் இன்னும் காணலாம். ஆனால் அதேவேளையில் இங்குள்ள சில இந்துக்கிராமங் களான உடப்பு, முன்னேஸ்வரம் போன்றன இன்னும் தங்கள் தனித் துவத்தை பேணுகின்றன என பேராசிரியர் கா. சிவத்தம்பி (2003) தனது இலங்கைத் தமிழர் யார் என்ற நூலில் கூறியுள்ளதைக் காணலாம்.

புத்தளம் - சிலாபம் பகுதிகளில் முஸ்லிம்களும் நிறைய வாழ்கின் றனர். புத்தளத்தில் அவர்கள் அரசியல் முதன்மை பெற்றவர்களாவர். இப்பகுதியின் மதப் பண்பாட்டில் திரௌபதி வணக்கம் முக்கியமான தாகும். மட்டக்களப்பில் உள்ள திரௌபதி வழிபாட்டு முறைமைக்கும், இப்பகுதியிலுள்ள திரௌபதி வழிபாட்டு முறைமைக்குமுள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும். இங்கு ஒரு பழைமையான கூத்து பராம்பரியமும் உண்டு. தமிழ்க்கலை, இலக்கியப் பாரம்பரியம் உண்டு. இப்பிரதேசத்தின் தமிழ்த்தன்மையைப் பேணுவதில் பேராசிரியர் அ. சின்னத்தம்பி முக்கிய ஆர்வம் காட்டினார் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பதினாறாம் நூற்றாண்டளவில் விஜயநகரப் பேரரசு நிலைகுலையத் தென்னிந்தியச் சமூக வழமைகளும், அமைப்புக்களும் சீர்குலையத் தொடங்கின. அமைதியையும் வழக்காறுகளையும் நிலைநாட்டக்கூடிய அரசரின்மையால், சமூகப்பிரிவுகளுக்கிடையே உரிமைகள், பணிகள் என்பவற்றையிட்டுச் சாதிப் பூசல்கள் மலிவுறத்தொடங்கின. இவ்வாறான சூழ்நிலைகளில் ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தம் பெருமையை நிலை நாட்டிக் கொள்வதற்காக இதிகாச புராணக் கதைகளை ஆதாரமாகக்

கொண்டு தத்தங் குலங்களின் பூர்வீக வரலாற்றை விளக்க முற்பட்டனர். இதனாற் செங்குந்தர் புராணம், மறப்பாளர் புராணம், வன்னியர் புராணம் போன்ற நூல்கள் எழுந்தன. எனவே வன்னியர்புராணம், சிலை எழுபது போன்ற நூல்களில் வன்னியரின் பூர்வீக வரலாறு மறைவுற்றிருக்கின்றது

ஈழவரலாற்றிற் குறிப்பிடத்தக்கவொரு மாற்றம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. கலிங்கமாகனது படையெடுப்பின் விளைவாகப் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழமனைத்தையும் உள்ளடக்கி யிருந்த அரசு அழிவுற்றது. மன்னனை மையமாகக் கொண்ட மத்திய மயமான ஆட்சியும், பெருங்குளங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஆதாரமாகக் கொண்ட பொருளாதார முறையும் அழிந்தன. இவற்றின் அழிவில் மானிய முறையின் இயல்புகளைக்கொண்ட ஓர் அரசியலமைப்பு வளர்ச்சியடைந்தது. மாகனது படையெடுப்பின் பின் இரு அரசுகளும் பல குறுநில அரசுகளும் தோன்றி நிலைபெற்றன

ஈழத்திலுள்ள வரலாற்றுச் சார்புள்ள தமிழ் நூல்கள் யாவும் வன்னியர் தமிழகத்திலிருந்து வந்தார்களென்று கூறுகின்றன. மேலும் புத்தளத்து வன்னிமை பற்றிக் கூறும் வன்னி உபட்ட என்ற சிங்கள நூலும் அவ் வன்னிமையிற் சிறப்பிடம் பெற்றிருந்த முக்குவர் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தனரென்று கூறுகின்றது. எனவே தமிழகத்திலிருந்து வந்த வன்னியர் அதிகாரம் பெற்றதன் விளைவாக ஈழத்திற் பல வன்னி மைகள் தோன்றினரென்று கொள்ளலாம். வன்னியராண்ட பிரதேசங்கள் வன்னி நாடுகளென வழங்கி வந்தனவென்று யாழ்ப்பாண வைபவ மாலையுங் கூறுகின்றது.

முக்குவ வன்னிமைகளை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என இரு பிரிவுகளாக வகுத்துக் கூறக்காணலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க மன்னன் மாகன், முக்குவரை மட்டக்களப்புக்கு அழைத்து வந்து அவர்களின் படைத் தலைவருக்கு வன்னிபம் என்ற பட்டத்தை அளித்தானென மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. சீதவாக்கையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று குடியேறிய இஸ்லாமிய குடும்பங்களின் வரலாற்றைக் கூறும் ஓரேட்டுப் பிரதி, மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய ஏழு வன்னியர்பற்றிக் குறிப்பிடுகின்றது. தேசாதிபதி பான் கூன்ஸின் அறிக்கையையும் ஆதாரமாகக் காணப்படுகின்றது.

பாண்டிய பரம்பரையில் இருந்து வந்து சிங்கள அரச குடும்பத்தோடு தொடர்பு பூண்டிருந்த பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னன் சில காலம் அரசாள்கையில் கலிங்க தேசத்திலிருந்து கேரளப் படையுடன் மாகன் என்பான் சிங்கள அரசுக்கு உரிமை கோரி வட இலங்கையில் வந்து இறங்கினான். இவன் செயவாகு என்பவனோடு சேர்ந்து முதல் வட இலங்கை முழுவதையும் தன் ஆணைக்குள் அடக்கிக் கோட்டை கொத்தளங்கள் அமைத்தான். கொட்டகார (கொட்டியாரம்), கங்காதளாக (கந்தளாய்), காகாலய (காக்காப்பள்ளி), பதீ (பதவியாக் குளம்), குறுந்தி, மனாமத்த, மாசிந்த (மாதோட்டம்), மன்னார், பலச்சேரித்துரை, வலிகாமம், கோண (திருகோணமலை), கோணுக (கள்ளு மரைத் துறை), மதுபாத வதித்த, சூராதித்த ஆகிய இடங்களில் அரண்கள் அமைத்து வட இலங்கை முழுவதையும் பல்லாண்டுகள் ஆண்டு வந்தனர் என க.கணபதிபிள்ளை (1956) இலங்கை தமிழர் வரலாறு எனும் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

அதன் பின் புலத்தி நகர் என்ற பொலன்னறுவையைக் கைப்பற்றி அதனைத் தனது தலைநகராக்கினான். இவன் காலம் (கி.பி.1215-1235), இவனது ஆட்சிக்காலம் தொடக்கம் இலங்கையில் தமிழரசு வலிமை பெறத் தொடங்கியது. புத்தளத்திலிருந்து திருகோணமலை வரைக்கும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டின் வடக்குப் பாகம் முழுவதும் தமிழ் இராச்சியமாக அமைந்திருந்ததென்பது மேற்கூறியவற்றால் விளங்கும். அன்றியும் தமிழர் ஆதிக்கமும், அவர்தம் அரசியற் செல்வாக்கும் மாயரட்டை எனப்படும் நீர்கொழும்பு சிலாபம் பகுதி வரையும் பரந் திருந்தது. (G.C. Mendis, The Early History Of Ceylon 1954).

நான்காம் விஜயபாகு (கி.பி.1271-1273) யாப்பகுவையிலிருந்து அரசோச்சிய இவன் காடடர்ந்து கிடந்த அனுராதபுரத்துக்கு வந்து அந் நகரிலுள்ள புத்த கோயில்களைத் திருத்துவித்தான், இக்காலத்தில் வன்னிப் பகுதி தமிழ் சிற்றரசரின் கீழ் இருந்து வந்தது. குறிப்பிட்ட சிங்கள அரசன் இச்சிற்றரசர் கையில் அனுராதபுரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தான்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்னிந்தியாவில் நிகழ்ந்த இஸ்லாமிய படையெடுப்பால் பாண்டிய நாட்டில் கலகங்கள் மலிந்து கிடந்தன. அதனோடு அங்கு உள்நாட்டுக் கலகங்களும் இருந்து வந்தன. மேலும்

இந்நாட்களில் சிங்கள இராச்சியம் வலிமை குன்றி இருந்தது. இவற்றினைப் பாண்டிய தளபதியாகிய ஆரியச்சக்கரவர்த்தி பெரிதும் பயன்படுத்தித் தன்னையே வட இலங்கை தமிழ் பகுதிக்கு அரசனாக்கிக் கொண்டான்.

ஆரியச் சக்கரவர்த்தி (கி.பி.1450) காலப்பகுதியில் தமிழ் இராச்சியம் மிகுந்த வலிமையோடு செல்வமும், செழிப்பு மேலோங்கிக் கீர்த்தியோடு விளங்கியது. மன்னார், சிலாபத்துறை முதலிய இடங்களில் நடந்த முத்துக் குளிப்பினால் செல்வங் கொழித்தது. பெரிய கடற்படை ஒன்று ஆரியச் சக்கரவர்த்தி கையில் இருந்தது. அதனால் ஈழத் தமிழர், மலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்று வாணிகம் வளர்த்து வந்தனர். இத்தகைய செல்வ வளம் வாய்ந்த ஈழத் தமிழ் நாட்டிற்குப் பலர் பிற நாடுகளிலிருந்தும் வந்தனர். அவர்களுள் இபுன்பத்தூத்தா, மார்க்கோ போலோ என்போர் குறிப்பிடத்தக்கவர்கள், இவ்வரசனையும், அரசினையும் பற்றி இபுன்பத் தூத்தா கூறும் செய்திகள் கவர்ச்சிகரமானவை. அதாவது இவ்வரசனின் பெயர் ஆரியச்சக்கரவர்த்தி கடற்படை வலிமை கொண்டவன், மலை யாளத்திலே யான் தங்கியிருந்த பொழுது இவன் நாவாய்கள், சிறியவும், பெரியவுமாக நூறு கப்பல்கள் நங்கூரமிட்டுக் கெம்பீரமாய் அங்கு நின்றன. அதிதிகளை உபசரிக்கும் அன்பு சார்ந்த நெஞ்சினன், பாரசீக மொழியிலே வல்லுனன். அம்மொழியில் என்னுடன் உரையாடினான். எனக்கு நல்ல பரிசில்களை வாரி, வாரியிரைத்தான். அவை மட்டுமோ, தன் இராச்சியத்தில் கிடைக்கும், திறமான முத்துக்களையும் பரிசாக ஈந்தான். அன்றியும், யான் விரும்பிய வண்ணம் ஆதாம் மலைக்கு யாத்திரை செய்ய உதவியும் செய்தான். இபுன்பத்தூத்தாவின் கூற்றின்படி ஆரியச்சக்கரவர்த்தியின் தலை நகரம் புத்தய என்பதாகும். சரித்திர ஆசிரியர் பலர் இதனை புத்தளம் எனக் குறிப்பிட்டு உள்ளனர்.

பதினாறாம் பதினைந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் தென்னிந் தியப் படையெடுப்புக்குப் பயந்து சிங்கள அரசர் அனுராதபுரத்தை கைவிட்டனர். அதனால் பொருள் வருவாயைக் கொடுத்த அப்பகுதியிலுள்ள நெல்வயல் முதலியன பாழடைந்தன. இதே காலத்து அராபிய வணிகர் காலி தொடக்கம் புத்தளம் வரையுள்ள சில இடங்களைத் தமது வணிகத் திற்கு நிலைக்கலனாக ஆக்கிக்கொண்டனர். காலி, பேருவளை, கொழும்பு ஆகிய இடங்கள் அராபியரின் வணிகத்திற்கு மிக முக்கிய இடங்களாக விளங்கின.

ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையினரின் ஆட்சியில், இக்கரைப் பகுதியிலே, தமிழரசு மிகுந்த உச்ச நிலையை அடைகின்றது. படிப்படி யாகத் தமிழர்கள் தங்கள் நாட்டு எல்லையைப் பெருப்பித்து இலங்கையின் பெரும்பாலான பகுதியை ஆளத்தொடங்கினர்.

**புத்தளத்து வன்னிமை**

மட்டக்களப்பிற் போலப் புத்தளத்திலும் ஒல்லாந்தராட்சிக் காலம் வரை முக்குவ வன்னிமை இருந்தது. புத்தளத்து முக்குவர் எப்போது அங்கு குடியேறினர் என்பதை அறிவதற்கு எதுவித சான்றுகளுமில்லை. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலந்தொட்டுப் புத்தளத்து வன்னிமை பற்றிச் சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. வாட்டிக அபயன் காலத்தில் முக்குவர் புத்தளத்திற்கு வந்து குடியேறினரென வன்னி உபட்ட என்ற நூல் கூறுகின்றது. எனினும் இந்நூல் துவக்கு, வெடி மருந்து முதலிய வற்றைக் குறிப்பிடுவதால் பதினாறாம் நூற்றாண்டளவிற் காணப்பட்ட நிலைகளையே இந்நூல் திரித்துக் கூறுகின்றதெனக் கொள்ளலாம் என பேராசிரியர் சி.பத்மநாதன் கூறுகின்றார். கிழக்கிலங்கையிற் போலப் புத்தளத்திலும் மாகன் படையெடுத்து வந்த காலத்திற் புத்தளத்து வன்னிமை ஏற்பட்டிருக்கக் கூடுமென்பது ஆராய்ச்சிக்குரியது.

யாழ்ப்பாணப் பட்டினத்தைச் சேர்ந்த வன்னிநாடுகள் சிலாபம் வரை பரந்திருந்தனவென்று குவேறோஜஸ் சுவாமிகள் கூறியுள்ளார். எனவே கோட்டை அரசு எழுச்சி பெறமுன் யாழ்ப்பாண மன்னரின் ஆதிக்கம் புத்தளம் வரை இருந்துள்ளது எனலாம். புத்தளத்தில் வந்த அராபிய அறிஞரான இபுன்பத்தூத்தா பட்டாள நகரிலே தான் ஆரியச்சக்கரவர்த் தியைக் கண்டதாகவும், அந்நகரிலுள்ள துறைகளிற் கறுவா பெருந் தொகையிலே குவிக்கப்பட்டிருந்ததாகவும் செப்புகின்றார். இபுன்பத்தூத்தா புத்தளத்தையே பட்டாள நகரென வர்ணித்தாரென்று பல அறிஞர் கருதுவர்.

முக்கர கட்டன என்ற சிங்கள மொழியிலுள்ள நூல் புத்தளத்து முக்குவருக்கும் ஆறாம் பராக்கிரமபாகு (1415-67) விற்குமிடையில் நடைபெற்ற போரினைப்பற்றிக் கூறுகின்றது. புத்தளத்தைச் சேர்ந்த முக்குவர் புன்னால, நாகபட்டினம் ஆகிய இடங்களிற் பாளையமிட்டுப் பராக்கிரமபாகுவைத் தாக்கிய போது அவ்வரசன் அமைச்சர்களைக் கூட்டி அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக் காஞ்சிபுரம், காவிரிப்பட்டினம்,

கீழக்கரை முதலிய இடங்களிலிருந்து போர் வீரர்களை அழைத்துத் தன் படையிலே சேர்த்ததாகவும் இந்நூல் கூறும். இவ்வாறாக பராக்கிரமபாகு வரவழைத்திருந்த படைகள் புத்தளத்திற்குச் சென்று மூன்று மாதங்களாக முக்குவருடன் கடும்போர் நிகழ்த்தியதன்பின் அவ்வன்னிமையைக் கைப்பற்றின. அத்துடன் பராக்கிரமபாகுவின் ஆட்சி ஏற்பாடாகியது. பரக்கும்ப சிரித என்ற நூல் பராக்கிரமபாகு முக்கர அரசனை நிர்மூலனஞ் செய்தானென்று கூறுகின்றது. பராக்கிரமபாகுவிற்கும் இம்முக்கர அரச னுக்குமிடையில் நடைபெற்ற போரே முக்கர கட்டனவில் விரித்துரைக்கப் பட்டுள்ளது. பராக்கிரமபாகு புத்தளத்து வன்னிமையைக் கைப்பற்றி யிருந்தும் அங்கு வன்னியரின் அதிகாரம் மறையவில்லை.

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு செப்பேடுகள் புத்தளத்து வன்னிமை பற்றி அரிய சான்றுகளைத் தருகின்றன. ஏழாம் புவனேகபாகு நவரத்தின வன்னியனுக்குக் கொடுத்த செப்பேட்டில் லுணுவில என்னு மிடத்திலிருந்து அவ்வன்னியன் புத்தளத்தை ஆண்டானென்பதை அறிய முடிகின்றது. மேலும் இவ்வாவணம் புத்தளத்திலுள்ள முத்திரகூடம் என்ற நீதிமன்றம் பற்றியும் தகவல்களைக் கொண்டுள்ளது. அம் மன்றத்திலிருந்த பதினெட்டு உறுப்பினரும் ராஜவன்னியர் என்ற பட்டத்தைப் பெற்றிருந் தனர். மேலும் அவ்வன்னியர் பல சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தனர் தலைமுறை தலைமுறையாக அவ்வன்னியரின் சந்ததியினர் முத்திர கூடத்தின் உறுப்பினராயிருப்பதற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அரச னுக்குரிய வரிகளைச் செலுத்தும் பொறுப்பிலிருந்து விடுபட்டிருந்ததோடு குற்றங்களைச் செய்யினும் அவற்றிற்கான தண்டனைகளைப் பெறாத வாய்ப்பினையும் அவர்கள் பெற்றார்கள். அத்துடன் அவர்களின் உறவினரும் ஊழிய சேவையிலிருந்து அவகாசம் பெற்றிருந்தனர்.

கணையாழி. கவசம், சாமரம், பவளக்குடை, வெள்ளிவாள் போன்ற வற்றைத் தம் சமக்கட்டாகப் புத்தள முக்குவவன்னியர் பெற்றிருந்தன ரென்பதை மாதம்பையிலிருந்த தனியவல்லபன் வழங்கிய சேப்பேட்டின் வாயிலாக அறியலாம்

யாழ்ப்பாண அரசின் அளவினைப் பற்றிக் குவேறோஸ் சுவாமியார் சொல்வன ஒல்லாந்த தேசாதிபதி பான்கூன்ஸ் சொல்வனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. யாழ்ப்பாணப்பட்டினத்தைப் பற்றி அத்தேசாதிபதி மேல்வருமாறு கூறுகின்றார். இந்நான்கு மாகாணங்களும் பதின்மூன்று

தீவுகளும் யாழ்ப்பாணப் பட்டினமென்று வழங்கி வந்தன. இவற்றோடு வன்னியும் அவ்வரசைச் சேர்ந்திருந்தது. யாழ்ப்பாண மன்னர் வன்னியைக் கைப்பற்றித் திறை பெற்று வந்தனர். அதே போலப் போத்துக்கேயரும் வன்னியரிடமிருந்து திறை பெற்றனர். மேற்கிலே கற்பிட்டியிலிருந்து பூநகரிப் பக்கமாகவுள்ள கல்முனை வரை இடங்களை அடக்கிக் கிழக்கிலே திருகோணமலை வரையும் வன்னி பரந்து காணப்படுகிறது. இவ்வரசினைப் சியங்கேரி (சங்கிலி) என்ற அரசன் நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்தான்.

யாழ்ப்பாண வைபவமாலை வன்னியில் இருதடவைகளாக வன்னியரின் குடியேற்றம் ஏற்பட்டதென்று சொல்கின்றது. இவற்றுள் முதற் குடியேற்றம் குளக்கோட்டன் காலத்தில் ஏற்பட்டதெனவும். இரண்டாம் குடியேற்றம் பாண்டிய நாட்டால் வந்த ஐம்பத்தொன்பது வன்னியரின் வருகையோடு ஏற்பட்டதென்றும் அந்நூல் கூறும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் நடந்த பாண்டியப் படையெடுப்பின் பின்னணியில் வைத்தே வன்னியர் பற்றி வையாபாடல் கூறுவதை நோக்க வேண்டும். இவ்வன்னியர்கள் கைப்பற்றிய இடங்களிற் பல யாழ்ப்பாண மன்னர் ஆதிக்கத்துள் அமைந்திருந்தமையும் இக் கருத்துக்கு ஆதாரம் அளிக்கின்றது.

யாழ்ப்பாண அரசர்களின் கல்வெட்டுக்கள் என்று கொள்ளக் கூடியன இரண்டு மட்டுமே இதுவரை ஈழ நாட்டிற் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று தென்னிலங்கையில் கோட்டகம எனுமிடத்திற் கண்டெடுக்கப் பட்டது. அது பதினான்காம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவன் மலைநாட்டினுள் நுழைந்து கம்பளையிலிருந்து ஆட்சிபுரிந்த தென்னிலங்கை வேந்தனைத் தோற்கடித்தமையை கூறுகின்றது.

பதவியாவிற் கண்டெடுக்கப்பட்ட கிரந்த எழுத்துக்களிலுள்ள வடமொழிக் கல்வெட்டு ஒன்று லோகநாதன் என்ற தண்டநாயக்கன் மணிகளாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட மிக ஒளிபொருந்திய முடியைக் கொண்ட விகாரம் ஒன்றை அமைத்து, அதற்கு வேளைக்கார விகாரமெனப் பெயரிட்டான் என்று கூறுகின்றது. இக் கல்வெட்டின் தொடக்கத்திலே சேது குலத்தின் கீர்த்தி குறிக்கப்படுவதால் சேதுவை இலச்சினையாகக் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சமான யாழ்ப் பாண மன்னர் குலமே ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ளதென ஊகிக்கலாம்.

எனவே அவ்விகாரையை அமைத்த லோகநாதன் ஆரியச்சக்கரவர்த்தியின் தளபதிகளுள் ஒருவனாக இருந்திருத்தல் கூடும்.

இலங்கையில் புராதனமான சிவன் கோயில்களில் ஒன்றான முன்னேஸ்வரம் பல சிறப்புகளைக் கொண்டது. அது சைவர்கள் மிகுந்த பக்தியோடு யாத்திரை போகின்ற தலம். முன்னேஸ்வரத்திலே பாவ விமோசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது சைவர்கள் பலரின் நம்பிக்கையாகும். அரக்கர் கோனாகிய இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்காக இராமபிரான் மாயவனாற்றங் கரையிலே லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபாடு ஆற்றினார் என்பது கோயிலின் உற்பத்தி பற்றிய ஐதீகமாகும்.

முன்னேஸ்வரத்திலுள்ள மூலஸ்தானம் ஓர் அரிய தொல்பொருட் சின்னம். அது 15 ஆம் நூற்றாண்டுக்குரிய விஜயநகர கலைப்பாணியில் அமைந்தது. அது பழைய கட்டடத்தின் எஞ்சியுள்ள பகுதி. அதன் மேல மைந்த விமானத்தையும் மண்டபங்கள், கோபுரங்கள், சுற்றுப் பிரகாரங்கள் ஆகியவற்றையும் போர்த்துக்கேயப் படைகள் இடித்து விட்டனர். மூலஸ்தானத்தின் அதிஷ்டானப் பகுதியில் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்து (1412 - 1467)ச் சாசனம் காணப்படுகின்றது. அது முன்னேஸ்வர ஆலயம் பற்றிக் கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களில் முதன்மையானது. என பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. பல நெடுங்காலமாக இப்பகுதிகளில் தமிழ் சைவர்கள் தமது கலாச்சாரப் பண்பாட்டு மரபுகளோடு செல்வச் சிறப்போடு வாழ்ந்துள்ளனர் என்பதற்கு முன்னேஸ்வரம் சிறந்த ஆதாரம் எனலாம். அன்றிலிருந்து இன்றுவரை முன்னேஸ்வரத்துக்கும் உடப்பிற்கும் நெருக்கமான தொடர்பு ஆலயங் களிலும், திருவிழாக்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கரவா அல்லது கரையார் வரலாறு முக்கிய விடயங்களை தருகின்றன. கரையார் சாதியைச் சேர்ந்தவர்கள் சிங்களவர் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் வாழ்கிறார்கள். இவர்களுள் ஒரு பிரிவினர் சிங்கள வர்கள் ஆனமை, ராகவனைப் (1961) பொறுத்தவரையில் கரையார்கள் தென்னிந்தியக் கூலிப் படையினரின் வாரிசுகளாவர். இவர்கள் வரலாற்றின் முன்னைய காலங்களில் இருந்தே வரத்தொடங்கியவர்களாவர். கரை யாரிடம் ஒரு மரபார்ந்த கதை இருக்கிறது.

இதன்படி இவர்கள் மகாபாரதத்தில் காவியத்தில் வரும் கௌரவ குலத்தைச் சேர்ந்தவர்கள். பாரத யுத்தத்தில் பாண்டவர்களிடம் தோல்வியுற்ற பின்னர் இவர்கள் கலைந்து போய் எல்லா இடங்களுக்கும் பரவியதாக இது கூறும் (ராகவன் 1961). தற்போது பிரித்தானிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் முக்கர ஹட்டானா என்ற பழைய சிங்கள குறிப்பின் படி, நீர்கொழும்பானது (தற்போதய கரவா மக்களின் பிரதான நகரம்) கோட்டையைச் சேர்ந்த மன்னன் நான்காவது பராக்கிரமபாகுவினால் (1412-1467) தென்னிந்தியாவில் இருந்து பணிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படை வீரர்களுக்குப் பரவேணி நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் குடியமர்த்தப் பட்ட இந்தக் கூலிப்படையினர் படிப்படியாகத் தமது அயலவரின் மொழியையும், கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ளத் தொடங் கினார்கள் (ராகவன் 1961).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் புதிதாக மேலோங்கி வந்த புதிய மேட்டுக்குடி யினரான கரவா சாதியைச் சேர்ந்த ஜெரொனிஸ் பீரிஸ் என்பவர் பற்றி ரொபர்ட்ஸ் அவர்கள் வாய்வழியாக வழங்கப்பட்டு வந்து ஒரு கதையைக் கூறுவார். இந்தக் குடும்பக் கதையின்படி ஜெரோனிஸ் பீரிஸினுடைய தந்தையார் வட இந்தியாவைச் சேர்ந்த ராஜ்புட் மறவர் சாதியைச் சார்ந்தவர். இவர் கண்டிய அரசனான கீர்த்தி சிறீ இராஜசிங்கனது (1747 - 1782) கூலிப்படையினரின் தலைமை அதிகாரியாக இருந்தவராம். இவர் தனது பணிக்காலம் முடிந்த பின்பும் நாட்டிலேயே தங்கிவிட்டாராம்: கண்டிய உடை மற்றும் சிங்களப் பெயர் போன்றவற்றையும் ஏற்றுக் கொண்டாராம் (ரொபர்ட்ஸ் 1975).

இது தொடர்பாக ரொபர்ட்ஸ் குறிப்பிடும் போது இவரது கதையானது, சிங்களக் கரையாரிடையே பெருவழக்காக உள்ள இந்தியப் பூர்வீகம், சத்திரிய வம்சம் பற்றிய கருத்துகளை மறுதலிப்பதாக இருப்பதாகச் சுட்டிக் காட்டுகிறார். கரவா சாதியினரின் ஒன்றுகலத்தல் மற்றும் மாற்றமடைவது என்ற போக்கானது இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கரவா சாதியினரிடையே ஆய்வை மேற்கொண்ட ஸ்டிரார்ட் என்பவரது அவதானிப்பின்படி, இவர்கள் கடலிலும் வீட்டிலும் தமிழைப் பேசுகிறார்கள்: சந்தையிலும், அன்றாடப் பொது விடயங்களில் மற்றவர்களோடு தொடர்பாடச் சிங்களத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து சிங்களம் அதிகளவு முக்கியத்தைப் பெற்று வருகிறது. இந்தப் போக்கைக் கத்தோலிக்க ஆலயங்கள் ஊக்கப் படுத்துகின்றன. பௌத்தக் கரையாரைப் பொறுத்த வரையில் அவர்கள் முற்றிலும் சிங்களவர்கள் ஆகிவிட்டார்கள்.

மதம் என்ற அம்சமானது கரையாரது வகையினங்களின் வரையறை களை இன்னமும் தெளிவற்றதாக ஆக்குகிறது. கரையார் என்ற பதமானது கத்தோலிக்க, புரொடெஸ்தாந்த, இந்து, பௌத்த அனைத்து வகையின ரையும் உள்ளடக்கக் கூடியதாகும். கத்தோலிக்கக் கரையார்கள் கொழும்பின் வடக்கே சிலாபம் வரையான கரையோரங்களில் பெரும்பாலும் செறிவாக வாழ்கிறார்கள். இவர்கள் போத்துக்கீசரினால் மதமாற்றம் செய்யப்பட்ட வர்கள். பௌத்தக் கரையார்கள் தெற்கு, தென்மேற்குக் கரையோரங்களில் செறிவாக வாழ்கிறார்கள். இந்து கரையார்கள் தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து வாழ்கிறார்கள். நவீன இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் மற்றும் சிங்கள இந்துக்கள் என்ற வகையினங்கள் காணப்படவில்லை. ராகவனது கருத்துப்படி, பாதுகாக்கப்பட்ட போர்த்துக்கீச தோம்புகளில் (காணிப்பதிவு பத்திரங்கள்) புறச்சமயம் சார்ந்த பெயர்கள் இருப்பதானது, நீர்கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள கரையார்கள் மதமாற்றத் திற்கு முன்பு இந்துக்களாக இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக அமைகிறது (ராகவன் 1961).

பிரித்தானியரது ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொருளாதார வாய்ப்பு களைப் பற்றிக் கொண்டே கரவா சாதியினர், சாதி அடுக்கமைவில் உயர்வான அந்தஸ்த்து நிலையை வந்தடைந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திலும் முக்கியக் காரணியாக விளங்கினார்கள். வரலாற்று விபத்தாக, டச்சுக்காரது வருகை யானது இந்தக் கரையாரை, சிங்களவரது பக்கத்திற்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கலாம் என்ற கருத்தொன்று ரொபர்ட்ஸ் வாதங்களில் உள்ளோட்ட மாகக் காணப்படுகிறது:

கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கீசர்களது ஆட்சியானது தொடர்ந்திருக்குமானால், பெரும்பான்மையினரான கரையார்கள் கத்தோலிக்கர்களாகவே இருந்திருப்பார்கள். இதனால் ஒருவித மைய நோக்குவிசை செயற்பட்டு இவர்களை மேல்நிலையாக்கத்திற்கு வழி வகுத்திருக்கலாம். பதினெட்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிந்திய

பகுதியிலும் சிங்கள மக்கள் ஒன்றாக இணைவதும் ஒன்று கலப்பதும் இப்படியாகவே நடந்தேறியது (ரொபர்ட்ஸ் 1982).

கரையார் எப்படிப்பட்ட நிகழ்வுப்போக்கினால் சிங்களவர்களானார்கள் என்பது தொடர்பாக விரிவாக விவாதிப்பதற்கு இங்குப் போதிய சந்தர்ப்பம் இல்லை. ஆனால், நாம் இங்குச் சில விடயங்களைக் குறித்துக் கொள்வது முக்கியமானதாகிறது. சிங்கள மக்கள் ஆதிக்கம் அதிகம் இருந்த பிரதேசங் களில் வாழ்ந்த கரையார்கள் மட்டுமே சிங்களமயப்படுத்தப்பட்டார்கள் என்பது மிகவும் வெளிப்படையானது. குறிப்பிட்ட ஒரு மொழியை ஏற்றுக் கொள்வதானது, காலப்போக்கில் ஏனைய கலாச்சார அம்சங் களையும் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு பாலமாக அமைந்துவிடுகிறது.

சிங்கள மொழியானது மேல்நிலைக்கு வர, பல பழங்குடிகள் சார்ந்த கலாச்சார நடை முறைகள் (உதாரணமாகக் குணமளிக்கும் சடங்குகள்) விரிவாகப் பின்பற்றப்படத் தொடங்கின. கத்தோலிக்கர்களின் பெரும்பான் மையானோர் கூட இந்த உள்ளூர் மயமாதலில் இருந்து தப்பிக்கவில்லை (ரொபர்ட்ஸ் 1982). இந்தப் போக்கானது இன்னமும் தொடர்வதாக ஸ்ரிராட் என்பவர் காட்டுகிறார். இந்தக் கரையாரது ஒன்று கலத்தலானது, சிங்கள அடையாளம் என்பதானது, ஒரே கல்லில் செதுக்கியது போல ஒரேவகையான, பிளவுகள், சேர்க்கைகளற்ற ஒன்றல்ல என்பதைக் காட்டு கிறது. சிங்களவர்கள் ஒரு கலாச்சார, மொழி சார்ந்த சமூகம் என்பதையும் அது பல நூற்றாண்டு காலமாகக் குடிபெயர்ந்து வந்த பல்வேறு குழுக் களையும் இவர்களில் பெரும்பான்மையினரானவர் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் முதன்மையானவர்கள், இவர்களையும் உள்வாங்கி, ஒன்று கலந்துதான் இந்த சிங்கள அடையாளம் உருப்பெற்று வந்துள்ளது என்பதையும் காண முடிகிறது. இந்த ஒன்றுகலக்கும் நிகழ்வுப்போக்கானது இப்போதும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. இப்போது ஒன்று கலத்தலுக்கான சாதனமாக மதத்திற்குப் பதிலாக மொழி அமைகிறது. (குணவர்தன, 1987).

2

# ஆதி வரலாறும், உடப்பூரும்

## அறிமுகம்

இலங்கையில் இந்துசமுத்திர கரையோரத்தின் மேற்கு திசையில் அழகான வரலாற்று பொழிவுடன் அமைந்திருக்கும் இந்த உடப்பு கிராமம் கடத் தொழிலை மையமாகக் கொண்ட கரையார் சமூகமாகும்.

பொறும் மழை காரணமாக அயல் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் போது கடலோரமாக இருக்கும் உடப்பு கிராமத்தின் வழியாக அன்றிலிருந்து இன்றுவரை வெள்ளத்தினை கடலுக்கு சேர்ப்பதனால் 'உடைப்பூர்' என உருவெடுத்து, உடைப்பங்கரை என்றும் தற்பொழுது 'உடப்பு' எனவும், சிங்கள மொழியினால் 'உடப்புவ' எனவும் அழைக்கப்படுகிறது.

உடைப்பூர் என்பதை இன்னும் ஆழமாக ஆராய வேண்டும். மகா பாரதத்தின் தலைநகரான குருசெஷ்திரம் (குரு ராஜ்ஜியம்) அமைந்திருந்த இடத்தில் ராஜஸ்தானியில் பழைமையான உடைப்பூர் எனும் நகரம் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்னும் மகபாரதத்துடன் பின்னிப்பிணைந்து, தாங்கள் குருகுலத்தவர்கள் என பெருமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் உடப்பு மக்களுக்கும், இந்த உடைப்பூர் என்ற பெயருக்கும் இடையிலான தொடர்பு ஆய்விற்குரியது.

மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு இன்னும் உரிய உயர்ந்த கலாச்சாரப் பண்பாட்டுடன் திகழும் இக்கிராமத்தின் வரலாறு இலங்கை கரையார் (கரவா) வரலாற்றுடன் உற்று நோக்குவது அவசியமாகும். சமூக கட்டமைப்பு, சாதிப்பிரிவு, வதிவிட அமைப்பு (புரம், வளவு, தோட்டம்), தொழில் முறைகள் போன்ற பல அம்சங்கள் வடக்கே தொண்டமானாறு தொடக்கம் மேற்கே மன்னார், நீர்கொழும்பு வரையும், தெற்கே காலி, மாத்தறை, அம்பாந்தோட்ட வரையும் காணப்படும் கரையார் சமூகப் பண்பாட்டுடன் ஒன்றுபட்டு காணப்படுவது ஆழமாக நோக்கத்தக்கது.

வரலாற்றுரீதியாக இக்கரையோர கிராமங்கள் மத மாற்றத்திற்கும், மொழி மாற்றத்திற்கும் உட்பட்டமை வரலாறு அறிந்த உண்மை. ஆனால் உடப்புக் கிராமம் இன்னும் அதன் மத, மொழி, சமுக கலாச்சார பண்பாடு களில் மாற்றத்தை உள்வாங்காது தனித்துவமாக வளர்ந்து நிற்பது தமிழ் (இனத்)சமூகத்திற்கே பெருமை சேர்த்து நிற்கின்றது.

இம்மக்கள் இக்கிராமத்தில் அமைந்திருக்கும் ஆலயங்களின் ஆசீர் வாதம் பெற்றும். கடலின் காதல் கொண்ட காற்றலை சத்தத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆலய திருவிழா முதல் கல்யாணம், கலாசாரம், பேச்சுத்தமிழ் அனைத்தும் இராமேஸ்வரத்தின் அச்சுக்கலவை என்றே கூறலாம். காரணம் அவர்கள் இராமேஸ்வரத்தின் வேர்கள் என்பர். அன்றிலிருந்து இன்றுவரை உடப்பு கிராமத்தின் பாரம்பரிய தொழில் மீன் பிடிப்பு. காலத்துக்குக் காலம் வேளாண்மையும் செய்துள்ளனர், அதிக முதலீடான இறால் வளர்ப்பு முறையும் இவர்களால் இன்று மேற் கொள்ளப்படுகிறது.

உடப்பு என்னும் போது திரௌபதையம்மன் கோயில், ஆடித்திருவிழா, பூமிதிப்பாகிய தீமிதிப்பு திருவிழா, தமிழ்க்கிராமம் என்பதை இந்நாட்டின் அனைத்து மக்களும், உலகமும் நன்கறிந்த விடயம். ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெறும் தீமிதிப்பு விழாவில் பெருந்திரளான உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் பங்கேற்று அம்மனை வழிபட்டு திருவருள் பெறுவது வழக்கம். இவ்வாறான பக்தி கலந்த வீரத்துடன் நிமிர்ந்து நிற்கும் தமிழ் கலாச்சாரத்தின் உறைவிடம் உடப்பாகும்.

இலங்கையின் வடமேல் மாகானத்தில் சிலாபம், புத்தளம் நகர்களுக் கிடையில் புத்தளம் - முந்தல் களப்பின் அடிமுகத்துவாரத்தில் கடற்கரை யோரத்தை அண்டிய கடலும், கடல் சார்ந்த நெய்தல் நிலமும் தென்னை மரங்களால் சூழப்பட்டும், மேற்குக்கறையாக இந்துமா சமுத்திரத்தையும், கிழக்குக் கரையாக புத்தளம் - முந்தல் களப்பையும் கொண்டு பல ஆலயங்கள் நிறைந்து காணப்படும் இவ் உடப்புக் கிராமம் பல நூற்றாண்டு கால பழைமை வாய்ந்தது.

உடப்பு என்னும் அழகான, வித்தியாசமான பெயரைக் கொண்ட இக்கிராமம் இந்நாட்டின் ஏனைய தமிழ் கிராமங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. குறிப்பாக வாழ்க்கை முறைகள், விவாக முறைகள், தொழில் முறைகள், வழிபாட்டு முறைகள், இலக்கியங்கள் போன்ற கலை கலாச்சார

பண்பாடுகள் உடப்புக்கேயுரிய தனித்துவம் கொண்டவை. அண்மைக் காலம் வரைக்கும் இக்கிராமத்தில் மட்டுமே குடிகொண்டு தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்ட இவர்களது வாழ்க்கை முறைகள் வெளியுலகிற்கு தெரிய வருவதில்லை. இருப்பினும் அண்மைக் காலமாக வெளியுலக தொடர்புகளும், பிரவேசங்களுக்கு மத்தியிலும் எமது கலை கலாச்சாரப் பண்பாடுகளில் அதாவது பல நூற்றாண்டு காலமாக கட்டிக் காத்து வந்த எமது பாரம்பரியத்தை இந்த வேகமான விஞ்ஞான யுகத்திலும் பாதுகாத்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

ஒரு சமுகத்தின் பலதரப்பட்ட பண்பாட்டு விழுமியங்கள், பாரம் பரியங்கள் என்பன அச்சமூகத்தின் வாழ்வியலுக்கு ஆதாரமானவை உடப்பூரின் பாரம்பரிய மரபுகள் மிக மிகச் சிறப்பானவை, தனித்துவ மானவை மக்கள் வாழ்வுடன் இணைந்தவை. இவை காலப்போக்கில் சிதைந்து உருமாறி விடப்படும் நிலை உருவாகுமோ என ஆதங்கிக்கின்ற தமிழிலும், தமிழ் கலாச்சாரத்திலும் பற்றுள்ள பெரியார்களும், உடப்பூரின் வீரத்தையும். தூயபக்தியையும் கலை கலாச்சாரத்தையும் அறியாதோரும், உளர்.

வடமேல் மாகானத்தில் சைவத்தையும், தமிழையும், கலாச்சார மரபுகளையும் அழிய விடாது பாதுகாத்து வரும் மறவர் குலத்தவர் வாழ்ந்து வரும் இவ் உடப்பூரில் அண்மைய பல ஆண்டுகாலமாக வளர்ச்சி, புதுமை என்ற பெயரில் தனித்துவமிக்க கலை, கலாச்சார பண்பாடுகள் மாற்றுவிக்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. நீண்ட காலமாக வரலாற்று பண்பாடு, கலை, கலாச்சார, அம்சங்களை கொண்டு இன்னும் தனித்துவம் பெற்ற ஒரு கிராமமாக திகழ்ந்து கொண்டு இருக்கும் இக்கிராமத்தவர்கள் இலங்கை வாழ் ஏனைய தமிழ் மக்களோடு தொடர்பு அற்றவர்கள். ஆனால் தனித்துவமாக சைவத்தை காலம் காலமாக பின்பற்றி அழியாத தெய்வ நம்பிக்கையையும் கொண்டவர்களாக இன்னும் இந்துக் களின் பண்பாட்டு நெறியோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள். இவர்களை அறியாமலோ, அறிந்தோ என்னவோ பக்தியளவில் மாற்ற மில்லாவிட்டாலும் மரபுகளிலும் கலாச்சார வாழ்க்கை முறைகளில் மாற்றங்களையும், திரிபுகளையும், புதிது சேர்த்தல்களையும், கைவிடப் பட்டவைகளையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆத்மீகத் துறையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி மனித நேயத்தின் வீழ்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. விஞ்ஞான முன்னேற்றம் மேலோங்கி ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலும் தங்களது சமயத்தையும் பண்பாடுகளையும், பழைமையையும், பேணிப் பாதுகாத்து வருவதில் ஒரு தனித்துவத்தினைக் கொண்டிருக்கும் எம் உடப்பூர் மக்களின் வரலாறு, கலை, கலாச்சாரப் பண்பாடுகளையும் எம்மைக் காத்தருளும், குல தெய்வங்களின் பெருமைகளையும், அருட் கடாட்சங்களையும் உலகிற்கு எடுத்தியம்ப வேண்டும். என்பதில் பெரும் அவா கொண்டுள்ள எம்மவர்களுக்கு இவை எம்மை விட்டு சிறிது சிறிதாக விலகிப் போவதை அறியாது இருப்பது புதுமைக்குரியது விடய மாகும்.

தமிழகத்திலும் ஈழத்திலும் இந்துக்கள் செறிந்து வாழும் கிராமங்கள் பலவும், நகரங்கள் பலவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் புகழுடனும், செழிப்புடனும் விளங்குவதற்கு அவ்வக்கிராமங்களிலும், நகரங்களிலும் அமைந்துள்ள ஆலயங்களே முக்கிய காரணமாக விளங்கி வந்துள்ளமையை இந்து சமய வரலாற்றில் அறிய முடியும். சோழப்பேரரசன் காலத்திலும் சற்று அதற்கு முன்பும் பின்பும் கோயில்கள் வெறுமனே வழிபாட்டுத் தளங்களாக மட்டுமன்றி இந்துக்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்கலாகவும் விளங்கியமை வரலாற்றின் மூலம் அறியலாம். இவ்வகையில் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தின் கீர்த்தியே உடப்பூரை உலகெங்கும் புகழ்பெற செய்துள்ளமை மனங் கொள்ளத் தக்கது.

ஈழத்து இந்து ஆலயங்கள் பலவற்றில் தீமிதிப்பு விழா இடம் பெற்று வருகின்ற போதும், உடப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் இடம் பெற்றுவரும் தீமிதிப்பு விழா இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்கள் பலரதும் கவனத்தை அதிகம் ஈர்த்துள்ளது. தனித்துவ மிக்க பாரம்பரிய கலைகள் பலவும் பேணப்பட்டு வரும் ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயமும், உடப்பூரும் கடந்த சில வருடங்களாக பக்தர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள் என பலதிரத்தினரையும் ஈர்த்து ஆர்வத்தை துண்டியுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

**அமைவிடம்**

உடப்புக் கிராமம் - வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் கொழும்பு பிரதான வீதியில் பத்துளு ஓயாச் சந்தியிலிருந்து வடமேற்காக நான்கு மைல் தூரத்தில் இந்துமா சமுத்திரத்தின் கரை யோரத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் தெற்கே குருமன்களி என்ற கடலுடன் தொடர்பற்ற உப்புநீர் நிறைந்த அளமும், கிழக்கே ஒல்லாந்தர் வெட்டு வாய்க்காலும், வடக்கே இவ்வூரவர் குடியேறி வாழும் ஆண்டி முனைக்கிராமமும், செல்வபுரக் கிராமமும், மேற்கே இந்துமா சமுத்திரமும் காணப்படுகிறது.

இன்று உடப்பு என்று அழைக்கப்படும் இவ்வூர் ஏறத்தாள நான்கு மைல் நீளமும், அரை மைல் அகலமும் உடையதாய் நெருக்கமான குடித்தொகையைக் கொண்ட பிரதான நகரத்தையும், ஆண்டிமுனை கிராமத்தையும், செல்வபுரக்கிராமத்தையும் உள்ளடக்கியதாகும். தெற்கு எல்லையில் இருக்கும் குருமன்களி என்னும் உப்புநீர் வாவியில் மீன்பிடித் தொழிலைச் செய்ததுடன் அதன் அண்மையில் இருந்த பரந்தசதுப்பு நிலத்தில் கோடை காலத்தில் உப்பும் விளைவித்துள்ளனர்.

புத்தளத்தையும் கொழும்பையும் இணைக்கும் நீர்ப்பாதையாக ஒல்லாந்தர் வெட்டுவாய்க்கால் அமைந்துள்ளது. ஒல்லாந்தர் தமது வர்த்தக நோக்கங்களுக்காக புத்தளம் களப்பையும், களனிகங்கையையும் இணைத்து மேற்குக் கரையோரமாக இக்கால்வாயை வெட்டியுள்ளனர். முன்னைய காலத்தில் இப்பிரதேசத்தின் உற்பத்திப்பொருட்களை கொழும் புக்குக் கொண்டு செல்லவும், அத்தியாவசியப் பண்டங்களை கொழும்பி லிருந்து இப்பிரதேசத்துரைகளுக்குக் கொண்டு வரவும் இது துணை புரிந்துள்ளது.


முந்தல் களப்பின் ஒரு பகுதி காளிகோயிலுக்கு அண்மையில் குடாவாக ஊருக்குள் உள்நுழைந்துள்ளது. இக்குடா இந்து சமுத்திரக் கரையிலிருந்து ஏறக்குறைய நூறு மீற்றர் தூரத்தில் மிக அண்மையில் இருக்கிறது. இக்குடா ஆழமாக இருப்பதால் தோணித்துறையாகவும் பயன்படுகிறது. முன்னைய காலங்களில் ஒல்லாந்தர் வெட்டுவாய்க்கால் ஊடாக இவ்வூருக்குத் தேவையான பொருட்களை ஏற்றிவரும் படகுகளும் இத்துறையிலேயே பொருட்களை இறக்கின. இத்துறைக்கு அண்மை யிலேயே ஆரம்பத்தில் பாடசாலையும், காளி அம்மன் கோயிலும் காணப்

படுகின்றன. ஊருக்கு இரு மைல்கள் வடக்கில் உள்ள ஆண்டிமுனையில் நன்னீர் ஊற்றுக்களும், நீராடுவதற்கான கிணறுகளும் காணப்படுகின்றன. கடலுக்கு அண்மையிலுள்ள ஒரு வலயத்தில் நன்னீர் ஊற்றுக்கள் உள்ளன. உடப்பு மக்கள் அங்கு சென்று அகப்பையினால் மூன்றடி ஆழத்தில் மண்ணைத் தோண்டி ஊறிவரும் நன்னீரை குடத்தில் நிறைத்து தலையில் சுமந்து வந்து குடிநீராகப் பாவித்தனர். பெண்கள் காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் ஒன்று தொடக்கம் மூன்று வரையிலான நீர் நிறைந்த குடங்களை தலையில் சுமந்து வரும் காட்சி வெளியாரை வியக்க வைக்கும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஒரு தசாப்தத்திற்கு முன்பு வரை இதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஊரின் தெற்கில் அமைந்திருந்த பற்றைக்காடுகளும், புல்வெளிகளும் மந்தை வளர்ப்பிற்கு பேருதவி புரிந்தன. இன்று அவைகள் இறால் பண்ணைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. உடப்பு தாழ்நிலப் பிரதேசத் தில் அமைந்து இருந்தாலும் பெரும் வெள்ளப்பெருக்குகள் ஏற்படும்போது அண்மையில் உள்ள பிரதேசங்கள் பாதிக்கப்படுவதுபோல் இக்கிராமம் பாதிக்கப் படுவதில்லை. அறுவாய் வெட்டி வெள்ளநீரை கடலுக்குப் பாய்ச்சுவதன்மூலம் வடக்கே புத்தளம் தொடக்கம் தெற்கே ஆனை விழுந்தான் வரையுள்ள பிரதேசங்கள் வெள்ளக் கொடுமையிலிருந்து மீட்சி பெறுகின்றன. இங்கு அறுவாய் என அழைக்கப்படுவது உடப்பில் முடிவடையும் முந்தல் களப்பின். முகத்துவாரத்தின் ஊடாக வெள்ள நீர் அறுத்து கடலுக்கு பாயும் இடத்தைக் குறிக்கும். சில வேளைகளில் வெள்ளநீர் தானாகவே அறுத்துப் பாய்வதும் உண்டு. வெள்ளநீர் அறுவாய் மூலமாக சமுத்திரத்தினுள் விரைவாகச் சென்று கலந்து விடுகிறது.

**வரலாறு**

இந்தவளங்களைக் கொண்ட இக்கிராமத்தின் வரலாற்றையும், கலாச்சார பண்பாடுகளையும் ஆவணப்படுத்தும் அவசியத்தை உணர்ந்த ஊர்ப் பெரியார்கள் இந்துஆலய பரிபாலன சபையின் ஊடாக 1997ம் ஆண்டு உடப்பூர் வரலாறும், மரபுகளும் என்ற நூலை தீமிதிப்பு திருவிழா சிறப்பு மலராக வெளியிட்டனர். ஊர்மக்களினதும், கல்விமான்களினதும் பங்களிப் புடன் திரு.வ.சிவலோகதாசன், நூலாசிரியராக இருந்து வெளியிட்டு வைத்தார். உடப்பூரின் வரலாற்றை அறிவதற்கு ஒரு சில சான்றுகளே




கிடைக்கின்றன. கர்ணபரம்பரைக் கதைகளும், முன்னோர்கள் எழுதி வைத்த குறிப்புகளும், ஆலயங்களிலுள்ள பழைமையான சின்னங்களும், சிலநூல்களில் விரவி வரும் குறிப்புகளும் ஆதாரங்களாக உள்ளன.

தான் அறிந்த வரலாற்றுச் சம்பவங்களையும் தனது கால நிகழ்வு களையும், குறிப்பு எழுதி வைக்கும் பழக்கம் உடையவராக கி.பி 1871 -1945 காலப்பகுதியில் இவ்வூரில் வாழ்ந்த செம்பலிங்க உடையார் இருந்துள்ளார். அவர் இவ்வூர் மக்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது பற்றியும், அம்மக்களின் குல மரபுகள் பற்றியும் குறிப்புகளை எழுதி யுள்ளார். கோயில் வரலாறுகளையும், காணிவிபரங்களையும் குறிப் பிட்டுள்ளார். அத்துடன் அவரது புதல்வர்களாகிய சேதுபதியார் எழுதி உள்ள குறிப்புகளும், பிறைசூடி யாரது சேகரிப்புகளும் எமக்குக் கிடைக்கும் சான்றுகளாகும்.

செம்பலிங்க உடையார் அவர்களது குறிப்புகளில் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

> 1664 - துருக்கி ஆட்சியின்போது 16ம் நூற்றாண்டளவில் மதுரை மங்கம்மா ராணிக்கும் ராமநாதபுரம் ராசாவுக்குமிடையே போர் மூண்ட நேரம் மதமாற்றத்திற்குப் பயந்து 18 குடும்பங்கள் 12 வள்ளங்களில் கற்பிட்டி ஆனவாசல் தொடக்கம் கரையா குடிவரை குடியிருந்தனர்.


அத்துடன் சேதுபதி அவர்களின் குறிப்பு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

> 1654 - மொகாலிய ஆட்சியின்போது ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி மன்னரினதும், அவரின் சிற்றரசனான தொண்டமானின் ஆட்சியின் போது மதமாற்றம் நடைபெற்றபோது ராமேஸ்வரத்தை சேர்ந்த அக்காமடம், தங்கச்சி மடத்தைச் சேர்ந்தோர் மதமாற்றத்திற்கு உட்படலாயினர். சேதுக்கரை, தனுஷ்கோடியைச் சேர்ந்தோர் மத மற்றத்திட்குட்படாது வெளியேறினார்கள்.

இவ்விரு குறிப்புகளையும் ஒப்பு நோக்கினால் சில முடிவுகளுக்கு வரலாம். இவ்விரு குறிப்புகளும் ஏறக்குறைய ஒரே காலத்தில் எழுதப்பட்டன. இது இவர்கள் உடப்பை அடைந்த காலமாக இருக்க முடியாது. இராமேஸ் வரத்திலிருந்து இடம் பெயர்ந்த காலமாக இருக்கலாம் அல்லது ஒரு குழுவினர் இடம்பெயர்ந்து வந்து இவர்களுடம் இணைந்த காலமாக இருக்கலாம். மக்கள் அங்கிருந்து வெளியேற உள்நாட்டில் இடம்பெற்ற போரும், மதமாற்றமும் காரணமாக இருந்ததிருக்கலாம். இவர்கள் சேதுக்கரை, தனுஸ்கோடி பிரதேசங்களில் இருந்து வெளியேறி இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

உடப்பு மக்கள் சேதுக்கரையிலிருந்தும், கரையூரிளிருந்தும் இடம் பெயர்ந்து உடப்பிற்கு வந்ததாக இங்குள்ள கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இங்கு வந்த முன்னோர்களது பெயர்கள் சேது என்னும் சொல்லை அடிப்படையாகக்கொண்டு சேதுராமன், சேதுராமாய், சேதுராமு, சேதுபதி என்று அமைந்துள்ளது. இவர்கள் சேது அணையைக் காவல் செய்த பரம்பரையில் வந்தவர்களாகக் கருதுகிறார்கள். முத்து என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் அம்மமுத்து, கமலமுத்து, முத்துராக்காய, முத்துராமாய், முத்துவைரன், முத்துராமன் என்ற பெயர்களும் சேதுக்கரை, கரையூர் போன்ற கிராமங்களில் நிலவியதாக அறிகின்றோம்.

உடப்பில் பல குலத்தவர்கள் வாழ்கிறார்கள். இங்கு குலங்களை புரம் எனக் கூறுவர் இங்கு உள்ள அம்பலகாரர் புரம், அழகப்பர் புரம், சின்னடப்பன்புரம், சின்னாண்டி புரம் போன்ற குலப்பெயர்கள் முன்னை காலங்களில் சேதுக்கரை, கரையூர்ப் பிரதேசங்களில் காணப்பட்டதாகக் கூறுகின்றனர்.





ஆண்டிமுனை பூசாரி குடும்பத்தைச் சேர்ந்த திரு.கணபதி என்பவர் 1950ம் ஆண்டளவில் தென்னிந்தியாப் பயணத்தின் போது அங்கு சேதுக்கரை, கரையூர்க் கிரமங்களுக்கு சென்றுள்ளார். அத்துடன் ஒருவர் உடப்பில் இருந்து வந்துள்ளார் எனக் கேள்விப்பட்டு அவ்வூர் பெரியவர்கள் சிலர் இவரைக் கண்டு உரையாடி உள்ளனர். தமது முன்னோர்களில் சிலர் இங்கிருந்து உடப்பிற்கு சென்று குடியேறி உள்ளதாகவும் கூறியுள்ளனர். திரு.கணபதி அவர்கள் சேதுக்கரையில் காமன்டிக் கூத்து ஒன்றையும் பார்த்துள்ளார். அவர்கள் காமனை சிவபெருமான் எரித்த கதையை கூத்தாக ஆடியுள்ளனர். இக்கூத்து உடப்பு காளியம்மன் கோயிலுக்கு அருகில் மடம் இருக்கின்ற இடத்தில் ஆடப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு காமன்டிக்காணி என்று பெயர் உள்ளது. இக்காணி குமாரசாமி ஆசாரி யாரின் தந்தை மூக்குத்தி ஆசாரியாருக்கு சொந்தமாக இருந்துள்ளது. இக்கானியின் இலக்கம் 154474. இக் கூத்து ஊர் மக்களால் அல்லது ஆசாரிமார்களால் ஆடப்பட்டு இருக்கலாம். இன்று இக்கூத்து மறைந்து விட்டது.

மேற்கூறிய விடயங்களில் உடப்பூருக்கும் சேதுக்கரைப் பிரதேசத் திற்கும் சில பொதுமைகள் காணப்படுவதால் இம்மக்கள் சேதுக்கரை, கரையூர்ப் பிரதேசங்களிலிருந்து வந்திருக்கலாம் என ஒருவாறு தீர்மானிக் கலாம். எனினும் இரமேஸ்வரக் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று

ஆய்வுகளை நடத்தினால்தான் எமது மூதாதையரின் ஆதிக்குடியிருப்பை ஐயமின்றி அறிய முடியும்.

இம்மக்கள் சேதுக்கரையில் இருந்து வெளியேறிய ஆண்டாக 1664 ஐக் குறிப்பிடுகின்றனர். இந்தியா முழுவதும் 1595 தொடக்கம் 1795 வரை 200 ஆண்டு காலப்பகுதியில் பல தடவைகள் ஏற்பட்ட பஞ்சங் களால் பல கோடிமக்கள் இறந்துள்ளதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழகத்தில் பஞ்சம், தொற்றுநோய், போன்ற இயற்கைப் பாதிப்புக்களாலும், போர், அரசியல் குழப்பம், மத மாற்றம் போன்ற செயற்கைப் பாதிப்புக்களாலும் பல்லாயிரக்கணக்கானோர் இறக்க நேரிட்டதாகவும், தமது வாழ்விடங்களிலிருந்து அதிகமானோர் இடம் பெயர்ந்ததாகவும் ஜான் டி பிரிட்டோ என்னும் பாதிரியார் 1983ல் குறிப்பு எழுதியுள்ளார். சேதுக்கரைக்கு அண்மையிலுள்ள அக்கா மடம், தங்கச்சி மடம் என்னும் இடங்களில் இஸ்லாமிய மதமாற்றச் செயற்பாடுகள் தீவிரமாக இருந்தன. கரையோரப் பிரதேசங்களில் கத்தோலிக்க மத மாற்றங்களும் அதிகமாக நிகழ்ந்துள்ளன.

(இப்படங்கள் உடப்பின் இருப்பிடத்தை தெளிவாக காட்டிநிற்கின்றது. மேலே உள்ள படம் உடப்பையும், அதனுடன் தொடர்புடைய முந்தல் களப்பையும், ஒல்லாந்தர் வேட்டுவாய்க் காளையும். காட்டுகின்றது.)




22

எனவே நாட்டில் நிலவிய பஞ்சங்கள் அவற்றினால் உண்டான கொள்ளை அம்மை முதலிய தொற்றுநோய்கள், உள்நாட்டுபோர்கள், மதமாற்ற நெருக்குதல்கள் போன்ற காரணங்களினால் மக்கள் அப்பிரதேசங் களை விட்டு இடம் பெயர்ந்திருக்கலாம். உடப்பு மக்கள் குடியேறிய காலக்கணிப்பு மிக குழப்பமானதாக உள்ளது.

செம்பலிங்க உடையார் குறித்திருக்கும் 1664ம் ஆண்டை சேதுக் கரையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்த ஆண்டாகக் சிலர் கருதுகின்றனர். அவரின் வேறொரு குறிப்பில், 1678ம் ஆண்டு சித்திரை 15ம் திகதி கண்ட வன்னிய கால சேதுராமு அம்பலகாரன் ஓலைச் சீட்டின் படி மாரியம்மன் கோவில் என்று முடிவுறாது உள்ளது இன்னுமொரு இடத்தில் சீட்டுக்களின் அட்டவணை ஒன்று தயாரித்துள்ளார் அதில் 1678 வன்னிய முதலி என்று ஒரு சீட்டு பற்றி குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் இச் சீட்டின் விபரம் பற்றி குறிப்பிடவில்லை.

இக்குறிப்புகளை மேற்கோள் காட்டி வன்னியர் ஆட்சிக்காலத்தில் கட்டைக்காடு கிராமத்தின் உடையார் ஒருவர் உடப்பூர் மக்கள் சைவர்களாக இருக்கும் வரை ஆண்டிமுனை மாரியம்மன் கோயிலைப் பராமரிக்கலாம் என்ற ஓலைச் சீட்டில் எழுதி இருக்கலாம் என்று பிறைசூடியார் குறிப் பிட்டுள்ளார். கட்டைக்காடு உடப்பிலிருந்து வடக்கே ஐந்து மைல் தூரத்தில் உள்ள ஓர் கிராமமாகும். முன்னைய காலத்தில் வன்னிய சைவர்களாக இருந்த அவர்கள் போர்த்துக்கீசர் காலத்தில் மதமாற்றப் பட்டதனால் தாம் நிர்வகித்து வந்த கோயிலை உடப்பு ஊரவருக்கு கையளித்து இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. அவ்வாறெனின் இவர்கள் அதற்கு பல ஆண்டு களுக்கு முன்பே குடியேறிருக்க வேண்டும்.

இந்துக் கலைக்களஞ்சியத்தில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் மாரியம்மன் கோயிலில் உள்ள மாரியம்மன் செப்பு விக்கிரத்தை அது நாயக்கர் காலத்தின் இறுதிப் பகுதியை சேர்ந்தது எனவும், அது 17ம் அல்லது 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பதினெட்டு குடும்பங்கள் ஏழு தோணிகளில் இடம் பெயர்ந்தார்கள் என்றும் அவை சின்னடப்பன் தோணி, சின்னத்தோணி, கமலன் தோணி, முகாந்திரந்தோணி, கப்பயந்தோனி, பாவா தோணி, போத்தி தோணி என்பனவாகும். இவை கொம்புத்தோணிகள் என்றும். அதில் பதினைந்து

அல்லது இருபது பேர் செல்லக்கூடியதாக இருக்கும் என்றும் முதியோர்கள் தகவல் தருகின்றனர்.

இவ்வாறு வந்தவர்கள் தங்களது குலத்தாருடன் வந்து சேர்ந்ததாகவும், அவரவர் குலத்தாருடன் குடியேறி ஒரே இடத்தில் வாழ்ந்ததாகவும் அறியலாம். இவ்வாறு வந்த பதினெட்டு குலத்தாரும் பதினெட்டு புரங்களில் வாழ்ந்துள்ளனர். புரம் என்பது குலங்களை குறிக்கும் சொல். அவை: அம்பலகாரர் புரம், சேருவந்தா புரம், கதிரன்சம்மாட்டி புரம், முளை புரம், பாசை மண்டாடி புரம், பள்ளுப் புரம், அடப்பனார் புரம், முத்துப்பிள்ளை புரம், சின்னடப்பன் புரம், சிட்டன் புரம், அழகப்பன் புரம், சின்னாண்டி புரம், காம புரம், கொட்டவாலியா புரம், மாலைகட்டி புரம, பூசாரி புரம், ஆளவந்தார் புரம், பச்சையப்பன் புரம் என்பனவாம்.

இக்குலங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே நேரத்தில் இந்தியக் கரைகளை விட்டு வெளியேறினார்கள் எனக்கருத முடியாதுள்ளது. சில குடும்பங்கள் முதன் முதலாக வெளியேறி மன்னார்க்கரையை அடைந்திருக்கலாம். சில வருடங்களின் பின் மேலும் சில குலங்கள் கற்பிட்டிக் கரையை அடைந்திருக்கலாம் எனக் கொள்வதே பொருத்தமானதாகும். காலத்துக்குக் காலம் கற்பிட்டி, உடப்பு பிரதேசங்களில் வந்து குடியேறிய குலங்களையும், தோணிகளையும் அறிந்து அவற்றை ஒரே தொகுப்பாக குறித்து வைத்துள் ளார்கள் என்பது பொருத்தமானதாகும். இங்கு குறிக்கப்படும் புரங்கள் என்னும் குலங்களில் சில இன்னும் வழக்கில் உள்ளன. இன்று உடப்பில் தனியான குலங்களினைக் காணமுடியாது திருமணங்கள், சமூக இணைப் புக்கள் மூலம் அவை கலந்து விட்டன எனலாம்.

சேதுக்கரையை விட்டு வெளியேறிய அதிகமான குலங்கள் கற்பிட்டிக் கரையை வந்தடைந்து தமது குல மரபுப்படி மாரியம்மன் கோயிலையும், வைரவர் கோயிலையும் அமைத்து வழிபாடு செய்திருக்கின்றனர். உடப்பில் வைரவருக்கு தனிக்கோயில் இல்லாவிட்டாலும் கற்பிட்டியிலும், உடப்பை அண்டிய கிராமமான சின்ன உடப்பு என அழைக்கப்படும் புளிச்சாக்குலத்தில் ஓர் வைரவர் கோயில் அமைந்து இருப்பதும் குறிப் பிடத்தக்கது.

கற்பிட்டியில் அவர்கள் குறுகிய காலமே வாழ்ந்ததாகத் தெரிகின்றது. பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறினர். அதற்குச் சரியான

காரணங்களை அறிய முடியாது விட்டாலும், வாந்திபேதி நோய்களும், மதமாற்ற வற்புறுத்தல்களும் காரணங்களாக இருந்திருக்கலாம்.

கற்பிட்டியிலிருந்து பெரிய கருப்ப அடப்பனார் தலைமையில், கதிரன் சம்மாட்டி புரம், சின்னாண்டி புரம், சிட்டன் புரம் போன்ற மேலும் சில குடும்பங்கள் உடப்பிற்கு வந்திருக்கின்றனர். அடப்பனார் என்னும் சொல்லுக்கு நெய்தல் நிலத் தலைவன் என பொருள் உண்டு. அடப்பனார் புரத்தவரும், சின்னாண்டி புரத்தவரும் தலைமை தாங்கி தொரட்டுக் காடுகளை வெட்டித் துப்பரவாக்கி தங்குமிடங்களை அமைத்து வாழ்கின்றனர்.

வைரவ அடப்பனார் தலைமையில் அழகப்பன் புரம், பூவடப்பன் புரம், ஆளவந்தார் புரம் போன்ற குழுவினர் கற்பிட்டியிலேயே தங்கி விட்டனர். இவர்களில் ஆளவந்தார் புரத்தின் சில குடும்பத்தினர் கற்பிட்டியை விட்டு புத்தளம் கரையா குடியில் குடியேறினர். அங்கு ஆணைப்பந்தித் தோட்டம், வளவடித் தோட்டம், ஓடாவித் தோட்டம் போன்றவற்றை உண்டாக்கி சிறப்புடன் வாழ்ந்துள்ளனர்.

அங்கு திரௌபதை அம்மன் கோயில் அமைத்து வழிபாடு செய்து வந்தனர். திரு A.N.M சாஜகான் அவர்கள் தனது புத்தளம் வரலாறும், மரபுகளும் என்ற புத்தகத்தில் புத்தளத்தில் உள்ள களிமண் குன்று என்ற பகுதி காளியம்மன் குன்று எனவும் அயினா வெளி என்ற பிரதேசத்தில் ஐயனார் கோவில் இருந்திருக்கலாம் எனவும் கருதுகிறார். இக்கருத்துக்கள் தமிழர் குடியிருப்புக்களை உறுதிப்படுத்துவதுடன், ஆய்வுக் குரியவையு மாகும்.

கற்பிட்டியில் வசித்து வந்தவர்கள் படிப்படியான திருமணம் பந்தங் களின் மூலம் உடப்பிற்கு வந்து சேர்ந்து விடுகின்றனர். இறுதியாக வைரவ அடப்பனார் குடும்பத்தவருடன் கற்பிட்டியில் வசித்த ஏனைய குடும்பத்த வர்களும் படிப்படியாக உடப்பிற்கு வந்து சேர்ந்து விடுகின்றனர். இதை அறிந்து புத்தளத்தில் வாழ்ந்த ஆளவந்தார் குலத்தவரும் உறவினர்களை நாடி உடப்பிற்கு வந்து விட்டனர் எனலாம். அங்கிருந்த பல காணிகள் இன்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன் புத்தளத்தாருக்கு விற்கப்பட்டு விட்டன.

கற்பிட்டியில் மேலும் சில குழுக்கள் தங்கி விட்டனர். அங்கு வைரவன் கோயிலுக்கு ஒரு நன்கொடைச் சீட்டு எழுதப்பட்டுள்ளது. இலக்கம்-2066 உடைய அந்த சீட்டின் விபரம் வருமாறு:

- 1871ம் ஆண்டு ஆவணி மாதம் 18ந் திகதி பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் கற்பிட்டி றொபட் றுதிற்கு முத்துக்கிருஷ்ணன் என்பவரால் எழுதி உறுதிப்படுத்தியது.
- கற்பிட்டி கரையூரிலிருக்கும் கைமை முத்துப்பிள்ளை கற்பிட்டி வைரவர் கோவிலுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது.
- காணியின் விபரம்: – கற்பிட்டிக் கரையூரிலிருக்கும் வைரவன் கோயிலடித் தோட்டம் என்று அழைக்கப்படும் தோட்டக்காணி அதன் சகல பலன் தரும் பொருட்களிலும்... என்று உள்ளது.

இன்றும் கற்பிட்டியில் வைரவர் கோயிலும், மாரியம்மன் கோயிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

உடப்பில் வாழும் முஸ்லீம்களும் இராமேஸ்வரப் பகுதிக் கரையோரக் கிராமங்களில் இருந்து வந்திருக்கலாம். வியாபார நோக்கமாக இங்கு வந்திருக்க வேண்டும். அடப்பனார் புரம், அம்பலகாரர் புரம், சின்னாண்டி புரம் குலத்தவர்களுடன் இணைந்து இவர்கள் வெளியேறி இருக்க முடியாது. அதற்கான அவசியமும் ஏற்பட்டிருக்காது. பிரதான குலங்கள் உடப்பில் குடியேறிய பல தசாப்தங்களுக்குப் பின்பே முஸ்லிம்களின் வருகை இருந்திருக்க வேண்டும். எனினும் உடப்பில் கொன்றோயிஸ் வீதியின் கிழக்கோரத்தில் முஸ்லிம்களே அதிகம் வாழ்வதாலும், குண்டக்கா வளவிலும், பள்ளிவாசலுக்கு அண்மையிலும் அவர்கள் அதிகமாக வசிப்பதாலும், பிரதான சந்தியில் அவர்களது கடைகளே முன்னைய காலத்திலிருந்து பிரபலமாக இருப்பதாலும் அவர்கள் நீண்ட காலமாகவே இங்கு வசித்து வருகிறார்கள் எனலாம். அவர்கள் வியாபாரத்தை பிரதான மாகச் செய்தாலும் பலர் கடலுக்கு தெப்பங்களில் சென்று தூண்டல் தொழிலிலும், பிரதான மீன்பிடித்தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பிற்காலத்தில் மேலும் ஒரு குலத்தவர் தென்னகக் கரைகளில் இருந்து உடப்பிற்கு வந்தனர். அவர்கள் முந்தல் களப்பில் மீன்பிடித்தொழில் ஈடுபடவும், முந்தல் பரந்த நெய்தல் நிலத்தில் வேளாண்மை செய்யவும் வசதியாக உடப்பிளிருந்து வெளியேறி முந்தல் களப்பின் கிழக்குக் கரையில் குடியேறி உள்ளனர். அக்கிராமம் முந்தல் என அழைக்கப் படுகிறது. முந்தல் என்பதற்கு தலைப்பு என்று பொருள் தரப்படுகிறது. அதை முனை என்றும் கருதலாம். உடப்பு மக்கள் கற்பிட்டியிலிருந்து

புத்தளம் ஊடாக முந்தலில் தங்கினார்கள் எனவும், பின் அங்கிருந்து உடப்பில் குடியேறினார்கள் என்றும் தாம் முன் தங்கிய இடமே முந்தல் எனப்பட்டதாகவும் கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

எந்தக் குலத்தவரும் தமது பிரதேசங்களுக்கு தான் வாழும்போதே பெயரிடுவது வழக்கம் இன்னுமொரு பிரதேசத்தில் குடியேறிய பின் முன் வாழ்ந்த பிரதேசத்திற்குப் பெயரிடுவது இல்லை. எனவே உடப் பிளிருந்து ஒரு குழுவினர் முந்தலில் குடியேறினர் எனக் கருதுவதே பொருத்தமானதாகும். அவர்கள் களப்பின் கிழக்குக் கரையில் மீன்பிடித் தொழில் செய்துகொண்டு, பற்றைக் காடுகளை அழித்த தோட்டங்களும் செய்து வாழ்கின்றனர். திரௌபதை அம்மன் வழிபாட்டை பிரதானமாகக் கொண்டுள்ள அவர்களும் சேதுக்கரை பிரதேசங்களில் இருந்தே வந்திருக்கலாம்.

உடப்பில் வசித்த ஒரு குழுவினர் புளிச்சாக்குளத்தின் மேற்குக் கரையில் உள்ள சின்ன உடப்பு பகுதியில் குடியேறி இருந்துள்ளனர். அங்கு அவர்கள் வைரவன் கோயிலையும், மாரியம்மன் கோயிலையும் அமைத்து வழிபாடு செய்து வந்ததுடன் தோட்டக் களியில் முந்தல் களப்பின் மீன்பிடிக்கும் ஒரு பகுதியில் மீன்பிடித்தொழிலுடன், விவசாயமும் செய்து வாழ்ந்து வருகின்றனர். இன்னும் சின்ன உடப்பில் உள்ள வயல்கள் கிழவன் சேனை, அன்பலஞ்ச்சேனை, மாயாண்டி வயல் என தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளன.

உடப்பு மக்களின் ஆரம்ப காலக் குடியிருப்புக்கள் இந்துசமுத்திரமும், முந்தல் குடாவும் நெருங்கி இருக்கும் இடத்திலேயே அமைந்திருந்தது. இவ்விடத்திலேயே அறுவாய் வெட்டி வெள்ள நீரைக் கடலுக்குப் பாய்ச் சுவர். அவ்விடத்திலேயே இம் மக்களின் காவல் தெய்வமான காளியம்மன் கோயிலும், உடப்பின் முதற்க் கல்விக் கூடமான உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் அமைந்திருந்தது. பிரதான தோணித்துறையும் அவ்விடத் திலேயே முந்தல் களப்பின் உடப்புக் கரையோரத்தில் அமைந்துள்ளது.

முன்னைய காலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது வெள்ளம் தானாகவே உடைத்துப் பாய்வதால் அவ்விடத்தை உடைப்பு என்றும் பின்பு அது மருவி உடப்பு என்றும் வந்தது எனவும் பெரியோர் கூறுவர். ஆனால் இன்னொரு கருத்தும் கூறப்படுகிறது. அதாவது உடப்பு மக்கள் குடியேறிய இடத்தில் தொரட்டு முள் காடுகள் நிறைந்திருந்தன. உடப்பு

என்னும் சொல்லுக்கு தொரட்டு முள்காடு என்றும் பொருள் உண்டு. உடப்பங்காடுகளை அதாவது தொரட்டு முள் காடுகள் நிறைந்த பிரதேசத்தை வெட்டி சுத்தம் செய்து குடியேறியதால் இப்பிரதேசம் ஆரம்ப காலங்களில் உடப்பங்க்காடு என்றும், பின்னர் உடப்பங்கரை என்னவும், பின்பு மருவி இன்று உடப்பு என்று அழைக்கப்படுகிறது.

இலங்கையின் முதல் சிவில் உத்தியோகத்தராக இருந்த, கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி அவர்கள் The Ceylon Gazetteer (1834) த சிலோன் கசட்டியர் என்ற தனது நூலில் உடப்பை உடப்பங்கரை என்றே குறிப்பிடுகின்றார். ஆண்டிமுனையை அவர் ஆண்டிபனை எனக் குறிப் பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் உடப்பங்கரை ஆனை விழுந்தான் பற்றையும், ஆண்டிபனையையும் பிரிக்கும் ஒரு சிறிய களப்பின் விளிம்பில் அமைந்துள்ள ஓர் கிராமம். இங்கு மீனவர்கள் வசிக்கின்றார்கள் சில சிறிய கடைகள் உள்ளன. கடற்காற்றையும், மரங்களோ, புதர்களோ வளராத மண்ணையும் கொண்ட இந்த இருண்ட இடத்தில் உப்பு உற்பத்தியாகும் சதுப்பு நிலமும், மீன்பிடியும், சமய ஈடுபாடுமே இம்மக்களை இங்கு வாழ வழிவகுக்கிறது என கூறியுள்ளார்.

சைமன் காசிசெட்டியார் ஆண்டிமுனையைப் பற்றி கூறுகையில் ஆண்டிபனையில் ஓர் ஓய்வு விடுதியும், தபால் நிலையமும் காணப் படுகிறது. இது சிலாபத்திளிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் புத்தளம் செல்லும் வீதிலில் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளது. இங்கு குவிமாடத்தைக் கொண்ட மாரியம்மன் கோயில் ஒன்றும் காணப் படுகிறது. எனக் குறிப்பிடுகின்றார்.

இங்கு வந்து குடியேறிய ஒவ்வொரு குலத்தவரும் தத்தம் சுற்றத்த வருடன் வசிபதற்கு ஏற்றவாறு வளவுகளை அமைத்துக் கொண்டனர். இவ்வளவுகளின் நடுவில் பெரிய முற்றம் காணப்படும். இம்முற்றத்தை சுற்றி உறவினர்களின் ஏழு அல்லது எட்டு வீடுகள் அமைந்திருக்கும். இவை யாழ்ப்பாணத்தில் காணப்படும் நாற்சார் வீடுகளை ஒத்ததாக இருக்கும். எல்லோருக்கும் பொதுவான அம்முற்றகளில் நடைபெறும் பொது வைபவங்களில் அவ்வளவைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொள்வர்.

அடப்பனார் வளவில் தற்போது ஆண்டியடப்பனார் வீடுகளும், சந்திக் கடைகளும், கந்தையா அவர்களின் வீடும் அடங்கும். குந்தானியார்

வளவு என்பது நான்காம் வட்டாரத்தில் இராமலிங்கடப்பனாரின் மூதாதையர்கள் வசித்த பகுதியாகும். பூவையா ஐயா வீடுகள், முத்துராமையா வீடுகள், அத்தர் ஐயா வீடுகள் அமைந்த இடம் அழகப்பன் வளவு எனப்படும். நாகம்மா, வெள்ளையப்பனார், அழகம்மா ஆச்சி வீடுகள் கதிரன் சம்மாட்டி வளவிலுள் அடங்கும். மூவர் வளவுகளில் பச்சையப்பன் புரத்தவர் வாழ்ந்துள்ளனர். ஞானியர் வீடுகள், ரயிண்டார் வீடுகள் சின்னாண்டி வளவிலுள் அடங்கும். சாந்தாவின் வீடும், அதைச் சுற்றி உள்ள வீடுகளும் வாலியார் வளவு எனப்படும். முனியாய், நாவாத்தை ஆகியோர் வசித்து வந்த வீடுகள் உள்ள இடத்தை கண்ணாத்தா வளவு என்பர்.


இங்கு வசிக்கும் கத்தோலிக்கர்கள் சிலாபத்திளிருந்து மீன்பிடி தொழிலுக்காக இங்கு வந்து குடியேறி இருக்கலாம். இவர்களது குடியிருப்புகள் ஊரின் மத்தியில் காளிகோவிலுக்கும் பெரிய சந்திக்கும் நடுவில் காணப்படுவதால் இவர்களது வருகையும் காலத்தால் முற்பட்டது எனக் கொள்ளலாம். அவர்கள் இங்கு குடியேறி தெப்பங்கள், படகுகள் மூலம் கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். ஒவ்வொரு குடும்பமும் சொந்தமாகத் தொப்பங்களை வைத்திருந்தனர். இவர்களின் உறவினர்கள் சிலாபம் கடற்கரைப் பிரதேசத்தில் சென் பெர்ணதெத் மாதா கோவிலுக்கு அண்மையில் இன்றும் உள்ளனர். இம் மக்களின் வழிபாட்டிற்காக சிலாபம் மறை மாவட்டச் சபையினால். 1894ம் ஆண்டில் சவேரியார் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டதுள்ளது. பின்பு ஆலய வளவினுள் பாடசாலை அமைக்க எண்ணி கம்பி வேலி கட்ட முயன்ற போது அதை ஊர் மக்கள் பிடுங்கி எறிந்ததாகவும், பின் அப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டதாகவும் பெரியோர்கள் கூறுகின்றனர். அவை தடுக்கப்படாது இருந்திருந்திருந்தால் 1895ம் ஆண்டளவில் பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கும். இருப்பினும் இதன் பின்னர் பாடசாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஊரவர்களின் கடும் முயற்சியால் 1903ஆம் ஆண்டில் காளி கோவிலுக்கு முன்னால் ஒரு அரசாங்க பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது இது உடப்பில் ஏற்றி வைக்கப்பற்ற ஒளிவிளக்கு எனலாம். இந்த பாடசாலையே இன்று உடப்பு தமிழ் மகா வித்தியாலயமாக திகழ்கிறது. அத்துடன் புத்தள மாவட்டத்தில் நூற்றாண்டு விழாவைக் கண்ட ஒரே ஒரு தமிழ் பாடசாலையாகவும் தலை நிமிர்ந்து உடப்பூரின் பெருமையை பறைசாற்றி நிற்கின்றது.

இவ்வூரின் ஆரம்பக் குடியிருப்புகள் காளி கோயிலுக்கும் திரௌபதை அம்மன் கோயிலுக்கும் இடையிலேயே இருந்துள்ளன. இன்றைய 2ம், 3ம் வட்டாரங்களிலும், 4ம் வட்டாரத்தின் சில பகுதிகளிலுமே குடி யிருப்புகள் இருந்துள்ளன. ஏனையவை புகையிலைக் காணிகளாகும். புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டிய இம் மக்கள் புகையிலை செய்கையிலும், கடல் தொழிலிலும் பெற்ற வருமானத்தைக் கொண்டு செல்வச் சிறப்பாக வாழ்ந்துள்ளனர்.

இங்கிருந்து அம்பலகாரர், அடப்பனார், ஆளவந்தார், சின்னாண்டி புரத்தவர்கள் பூனைப்பிட்டி, ஒற்றைப்பனை போன்ற இடங்களிலும், முந்தல் தொடக்கம் பதுளு ஓயா வரை உள்ள பாகங்களிலும் காடுகளை வெட்டி தென்னந்தோட்டங்களை உண்டாக்கி உள்ளனர். அப்பாகங்களில் இருந்த பட்டயக்காரன் தோட்டம், மூக்குத்தித் தோட்டம், அன்னபூரனித் தோட்டம் என்பவை அவர்களுடையதே. புளிச்சாக்குளம், பிங்கட்டி வயல்களில் பெரும்பாலானவை உடப்பின் சில குடும்பங்களுக்கே உரித்தானவையாகும்.

உடப்பில் குடியேறிய ஆதிமக்கள் தம்முடன் தமது மங்கல, அமங்கல கிரியைகளைச் செய்வதற்காக குடிமகன்களையும், சலவைத் தொழிலாளர் களையும் கூடவே அழைத்துக்கொண்டு வந்துள்ளனர். அவர்கள் வாழ்வதற் குரிய பகுதிகளையும் ஒதுக்கி கொடுத்துள்ளனர். இன்று எல்லோரும் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளதால் தமது குலத் தொழில் என ஈடுபட்டு வருவோர் அரிதாகவே உள்ளது. இங்கு வந்த மக்கள் அடிக்கடி இராமேஸ்வரம் சேதுக்கரைப் பகுதிக்குச் சென்று வந்துள்ளனர். மாரியம்மன் செப்புச் சிலையும், மாரியம்மன் ஆலயக் கண்டா மணியை யும் இராமேஸ்வரப் பகுதியிலிருந்தே பெற்றிருக்க வேண்டும். இன்று இத்தொடர்பு முற்றாகவே அற்றுப்போய்விட்டது எனக் கூறலாம்.

உடப்புக் கிராமத்தில் தமது விஸ்தரிப்புகளைச் செய்து வந்த மக்கள் 1956ம் ஆண்டில் ஆண்டிமுனைக் கிராமத்திலும் குடியேறினர். அரசின் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு ஏக்கர் காணி கொடுக்கப்பட்டுள்ளது. தெற்குப் பாகம் முழுவதும் சதுப்பு நிலமாகக் காணப்படுவதாலும், வடக்குப் பாகத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் சனத்தொகை மிகக் குறைவாக இருப்பதாலும், நன்னீர் காணப்படுவதாலும் உடப்பு மக்கள் விரும்பி அப்பிரதேசங்களில்



ஸ்ரீ பார்த்தசாரதி, ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்

விரைவாக குடியேறுகின்றனர். இன்று தென்னை மரங்கள் நிறைந்து பசுமையாகக் காட்சி அளிக்கும் ஆண்டிமுனையில் மகா வித்தியாலயமும், கிராமிய வைத்திய சாலையும், காவல் துறையும், எல்லையில் ஐயப்பசாமி கோயிலும், தாழையடி முத்துமாரியம்மன் கோவிலும், இராக்குருசி அம்மன் கோயிலும், நாகதம்பிரான் கோயிலும் அமைந்துள்ளன.

ஏறத்தாள பல நூற்றாண்டிற்கு முன்பு இராமேஸ்வரம் பிரதேசத்திலிருந்து உடப்பிற்கு வந்து குடியேறி பன்னெடுங்காலமாக, சைவத்தையும், தமிழையும், கலாச்சார தனித்துவத்தையும் கைவிடாது பாதுகாத்துக் கொண்டு அயற்கிராம மக்களுடன் புரிந்துணர்வுடன் இணைந்து வாழ்கின்றனர். உடப்பில் வாழும் சைவர்களும், கத்தோலிக்கரும், இஸ்லாமியரும்

எவ்வித மனக்கசப்புக்களுமின்றி சகோதரத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருதல் நாட்டின் முன் மாதிரியான செயற்பாடாக விளங்குகிறது.

வரலாற்று ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் கடலும், கடல் பயணமும் இவர்களின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்றாகும். தன்னம்பிக்கையுடனும், இறைநம்பிக்கையுடனும் கடல் தொழிலைத் செய்துவந்த இவர்கலில் பலர் நாட்டின் கடந்த கால சூழ்நிலை காரணமாக இரண்டு முன்று மாதங்கள் கடலில் பயணம் செய்து மிக மிகவும் கஷ்டப்பட்டு ஐரோப்பா நாடு களையும், அண்மைய காலங்களில் ஏறத்தாள ஒருமாத கடல் பயணம் செய்து அவுஸ்ரேலியாவையும் சென்றடைந்துள்ளனர். இவர்கள் இன்று இந்தியா, பிரித்தானியா, பிரான்சு, இத்தாலி, சுவிஸ், ஜெர்மனி, கனடா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற பல நாடுகளில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. எங்கிருந்தாலும் இவர்களது எண்ணம், மூச்சி எல்லாம் உடப்பிலேயே, ஆடித்திருவிழா என்றவுடன் இவர்கள் உடப்பில் நிற்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

3

# இறைபக்தியும், குலதெய்வமும்

தமிழகத்திலும், ஈழத்திலும் இந்துக்கள் செறிந்து வாழும் கிராமங்கள் பலவும், நகரங்களும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் புகழுடனும், செழிப்புடனும் விளங்குவதற்கு அவ்வக்கிராமங்களிலும், நகரங்களிலும் அமைந்துள்ள ஆலயன்களே முக்கிய காரணமாக விளங்கி வந்துள்ளமையை இந்து சமய வரலாற்றால் அறிய முடிகின்றது. சோழப் பேரரசர் காலத்திலும் அதற்குச் சற்று முன்னும் பின்னும் கோயில்கள் வெறுமனே வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி இந்துக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்களாகவும் விளங்கியமையை வரலாற்றின் மூலம் அறியலாம். மக்கள் தமக்கு ஏற்படுகின்ற இயற்கை அழிவு களினின்றும், செயற்கைப் பாதிப்புக்களினின்றும் தம்மையும், தம்மைச் சூழவுள்ளவர்களையும் பாதுகாத்துக்கொள்ள தமக்கு அப்பாற்பட்ட சக்திகளை வழிபடத் தொடங்குகின்றனர். பிற்காலத்தில் அவ்வழிபாடுகள் சடங்குகள், கிரியைகள், விழாக்கள் என விரிவடைந்து மக்களின் வாழ்க்கை யுடன் ஒன்றிணைந்து விட்டது.

ஈழத்திலே நல்லூர்க்கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், முன்னேஸ்வரம், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில், மட்டுவில் அம்மன் கோயில், கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், கதிர்காமம், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதசுவாமிகோயில், திருக்கோயில், முதலிய தளங்களினாலேயே அத்தலங்கள் அமைந்துள்ள இடங்களும் பிரசித்தி பெற்று விளங்குவதை அவதானிக்கலாம். இவ் வகையில் நோக்கும் போது ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தின் கீர்த்தியே உடப்பூரையும் புகழ் பெறச் செய்துள்ளது என்பது மனங் கொளத்தக்கது. இந்துக்களின் வாழ்வில் கோயில் பெறும் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் ஆன்றோர் வாக்கு அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

ஈழத்தில் இன்று செல்வாக்குடன் திகழும் சமயங்களுள் இந்து சமயமே மிகப் பழைமை வாய்ந்தது என்பதையும் வரலாற்றுக் காலந்தொட்டே ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்துக் கோயில்கள் சிவன், விஷ்ணு, முருகன், அம்மன், முதலிய தெய்வங்களுக்கான ஆலயங்கள் இடம் பெற்றிருந்தன என்பதையும் ஈழத்தின் பண்டைய மன்னர்கள் பலர் இந்துக் கலாகவோ, இந்து மத ஆதரவாளர்களாகவோ விளங்கினர் என்பதையும் சமஸ்கிருதம், பாளி, தமிழ், சிங்களம் முதலிய மொழிகளிலுள்ள நூல்கள், இலக்கியங்கள், சாசனங்கள், முதலியவற்றின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் இலங்கையின் புலமை சார் வரலாற்றாய்வாளர் பலரும் இவற்றை ஐயம் திரிபுர நிருபித்துள்ளமையையும் மனங்கொள்ளத்தக்கது. எனினும் ஈழத்தின் இந்துக் கோயில்கள் பலவற்றினது வரலாறு இதுகாலவரை செவ்வனே விரிவாக ஆராயப்படவில்லை. அத்தகைய கோயில்களுள் ஒன்றாக உடப்பூர் ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயமும் விளங்குகின்றமை அவதானிக்கத்தக்கது.

உடப்பூர் திரௌபதை அம்மன் ஆலய வரலாறு பல நூற்றாண்டு களைக் கொண்டுள்ளது எனலாம். இவ்வாலயத்தின் வரலாறு பற்றியும் இவ்வாலயம் அமைந்துள்ள உடப்புக் கிராமம் பற்றியும் இதுவரை காத்திரமானதும் விரிவானதுமான ஆய்வுகள் எவையும் இடம்பெற்றுள்ளன வாகத் தெரியவில்லை. எனினும் உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை யின் ஆதரவால் 1997ல் உடப்பூர் வரலாறும், மரபுகளும் எனும் நூல் திரு.வ.சிவலோகதாசன் அவர்களால் வெளியிடப்பட்டது குறிப்பிடத் தக்கது.

ஈழத்து ஆலயங்கள் பலவற்றில் தீமிதிப்பு விழா இடம்பெற்று வருகின்ற போதும் உடப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் தீமிதிப்பு விழா இந்துக்கள் பலரதும் கவனத்தை அதிகம் ஈர்ப்பதாக விளங்குகின்றது. தனித்துவம் மிக்க பாரம்பரியக் கலைகள் பலவும் பேணப்பட்டு வரும் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமும் கடந்த சில வருடங்களாகப் பக்தர்கள், ஆய்வாளர்கள், அரச அதிகாரிகள் எனப் பல திறத்தினரையும் மிகுதியும் ஈர்த்து வருவதைக் காணலாம்.

பொதுவாக நோக்குமிடத்து ஈழத்துத் தமிழர்களின் வரலாறும் ஈழத் தின் இந்து மத வரலாறும் இதுகால வரை செம்மையாக ஆராயப்பட வில்லை எனலாம். ஒப்பீட்டளவில் நோக்குகையில் இலங்கையின் வடக்கு

கிழக்குப் பிரதேசங்களின் தமிழர்களது வரலாறு பற்றியும் இந்து மதத்தினது வரலாறு பற்றியும் கணிசமான அளவுகள் காத்திரமான ஆய்வுகள் வெளிவந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அதே போன்று இலங்கையின் மலையகத் தமிழரியல் பற்றிய ஆய்வு முயற்சிகளும் கடந்த ஓரிரு தசாப்தங்களில் நம்பிக்கைத் தரும் வகையில் பெருகி வருவதை அவதானிக்கலாம்.

ஆயினும் இலங்கையின் தென்மேற்கு, வடமேற்கு (மன்னார், முதல் நீர் கொழும்பு வரையிலான) பிரதேசங்களில் நீண்ட காலமாக எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கும் சவால்களுக்கும், அனர்த்தங்களுக்கும் மத்தியில் தமக்கேயுரிய தனித்துவமான பாரம்பரிய பண்பாட்டம்சங்களையும் இந்து மதத்தினையும் பேணிப்பாதுகாத்து வரும் தமிழ் மக்கள் பற்றியும், இந்து மதம், இந்து ஆலயங்கள் ஆகியன பற்றியும் குறிப்பிட்டுக் கூறக் கூடிய காத்திரமான ஆய்வுகள் எவையும் இதுவரை வெளிவராமை துர்பாக்கியமே என பேராசிரியர் க.அருணாசலம், (1997) குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இலங்கையின் புகழ் பூத்த புராதன சிவாலயங்களாக இன்றும் புகழுடன் விளங்கும் திருக்கேதிச்சரம் முதல் முன்னேச்சரம் வரை சிறியனவும், பெரியனவுமாக ஆலயங்கள் பல அமைந்துள்ளன என்பதும் அப்பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் ஆய்வறிஞர்கள் பலரதும் கவனத்திட்குள்ளாகாமை வேதனைக்குரியதே.

இவ்வகையில் நோக்கும்போது ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம், அவ்வாலயத்தை மட்டுமன்றிக் காளியம்மன், மாரியம்மன் ஆலயங் களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் உடப்பூர் ஆகியவற்றின் வரலாற்றினைச் செவ்வனே ஆராய வேண்டிய தேவை உள்ளது எனலாம். இதன் மூலம் உடப்புக் கிராம வரலாற்றையும், திரௌபதையம்மன் ஆலய வரலாற்றையும் ஒளிபெறச்செய்யலாம் என்பதில் ஐயமில்லை. மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்னும் முதுமொழி உடப்பூருக்கும், திரௌபதை அம்மன் ஆலயத்துக்கும் மிகவும் பொருத்தமானதே.

இப்போது உடப்புக்கு பயணிக்கும் போதும் பல கிலோ மீற்றர் தொலைவில் இருந்தே உடப்பூர் கிராமத்தை அடையாளம் காணலாம், கம்பீரமாக எழுந்து நிற்கும் 108 அடி உயர ராஜகோபுரத் தரிசனத்தால்! கோபுர தரிசனமே பெரும்பேறு என்றும் அதுவே ஒரு வழிபாடு என்றும்

சொல்வார்கள். எனவே இக்கிராமத்தைச் சென்றடைவதற்கு முன்னரேயே ஒரு வழிபாட்டையும் நடத்திவிடும் பாக்கியம் இங்கே கிடைக்கிறது.

இந்தியாவிலிருந்து உடப்பில் குடியேறிய இம்மக்கள் கிராமியத் தெய்வங்களை வழிபட்டுக்கொண்டு கிராமிய வழிபாட்டு முறைகளையும், பின்பற்றி வந்தனர். இன்று உடப்பில் வட எல்லையில் மாரியம்மன் கோயில், மத்தியில் காளியம்மன் கோயில், திரௌபதை அம்மன் கோயில், தென்கிழக்கில் குளத்தடி ஐயனார் கோயிலும், தூபியுடன் கூடிய பிரதான வழிபாட்டுத் தலங்களாக உள்ளன.

தாழையடி முத்துமாரியம்மன் கோயிலும், வம்பவட்டான் ஐயப்ப சுவாமி கோயிலும், செல்வபுரம் நாகதம்பிரான் கோயிலும் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. முத்துப்பந்தி முத்துமாரி அம்மன் கோயில், ராக்குரிசி அம்மன் கோயில், முனியசாமி கோயில், கன்னியம்மன் கோயில் என்பன மரங்களுக்குக் கீழே உருவாகி வளர்ச்சி கண்டு வருகின்றன. இங்கு பிரதான வழிபாட்டுத் தலங்களாக உள்ள மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில், திரௌபதை அம்மன் கோயில், என்பவற்றின் வரலாற்றை நோக்குவது சிறப்பானது.

**உடப்பு ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்**

இலங்கையின் புத்தளம் மாவட்டத்தின் புத்தளத் தொகுதியின் தென் னெல்லைக் கிராமம் உடப்பு. கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமாகும். தென்னைகள் நிறைந்த பதினாறு ஏக்கர் தோட்டத்தின் மத்தியில் அமைந்துள்ள ஆலயமே ஸ்ரீ மாரியம்மன் ஆலயமாகும். பூர்வீக ஆலயம் இருக்குமிடம் ஆண்டிமுனை என அழைப்பர். உடப்பின் வடக்கே புத்தளத்திலிருந்து நாற்பத்திரெண்டு கிலோமீற்றரும் சிலாபத்திலிருந்து முப்பத்தாறு கிலோமீற்றர் தூரமும் கொண்ட இவ்வாலயம் உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் அதிகாரத்துக்கும் நிருவாகத்துக்கும் உரித் துடையதாகும்.

இக்கோயில் ஆண்டிமுனைக் கோயில் தோட்டத்தில் அமைந்துள்ளது. இதன் தென்மேற்குத் திசையில், கடற்கரைக்கு அருகில் பழைமையான கந்தசாமி கோயிலின் அத்திவாரமும் சிறு கந்தசாமி கோயிலும் காணப் படுகிறது. பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயம் டச்சுக்காரர் இலங்கைக் கரையோரத்தை ஆண்ட காலத்தில் காண்ட வன்னியன் வன்னியதிகாரியின்

ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அக்காலத்தில் மக்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவி மதமாற்றம் பெற்ற போதும் காண்ட வன்னியன் இவ்வாலயத்தைப் பராமரித்தே வந்துள்ளான் எனக் கர்ணபரம்பரைக் கதைகளும், வாய் மொழிக் கதைகளும் கூறப்பட்டாலும். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மத மாற்றத்துக்குட்பட்டு வடக்கே பூனைப்பிட்டிக்கு நகர்ந்த போது கி.பி. 1678 ம் ஆண்டளவில் அதாவது 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த சிவத்தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேலும் உடப்பு ஊரவர்களுக்கு இக்கோயிலின் முழு உரிமையையும் ஓலைச்சுவட்டில் எழுதி ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

செம்பலிங்க உடையாரது குறிப்பின்படி 1678ம் ஆண்டளவில் மாரியம்மன் கோயில் உடப்பு ஊரவர்களுக்கு கட்டைக்காடு உடையார் ஒருவரால் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். இது கர்ண பரம்பரைக் கதையாக இன்றும் நிலவுகின்றது. மணியகாரன் வீதி இக்கோயிலுக்கு அண்மையிலேயே கிழக்குத் திசையில் இருந்துள்ளது. கற்பிட்டியிலிருந்து கொழும்பு செல்வோர் தேத்தாப்பளை, ஒற்றைப்பனை, ஆண்டிப்பனை, கருக்குப்பனை, வெண்ண பூவல் (வெண்ணப்புவ), வத்தளை ஊடாக கொழும்பு செல்வர். ஆங்கிலேயரது குறிப்புகளில் மழை காலத்தில் சேறும் சகதியுமான, பிரயாணப் பாதை எனக் குறிப்பிட்டுள்ளனர். அதில் ஆண்டி முனை தங்குமிடமாக இருந்திருக்கலாம். அக்காலகட்டத்தில் அப்பிரதேசம் முழுவதும் சைவர்களாக இருந்திருக்க வேண்டும். கொழும்புப் பிரயாணம் செய்த சைவர்கள் ஆண்டிமுனையில் மாரியம்மன் வழிபாட்டை மரத்தின் அடியிலோ அல்லது சிறு கொட்டிலிலோ அமைத்திருக்க வேண்டும்.

கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி அவர்கள் The Ceylon Gazetteer (1834) த சிலோன் கசட்டியர் என்ற தனது நூலில் உடப்பை உடப்பங்கரை என்றே குறிப்பிடுகின்றார். ஆண்டிமுனையை அவர் ஆண்டிபனை எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் ஆண்டிமுனையைப் பற்றி கூறுகையில் ஆண்டிபனையில் ஓர் ஓய்வு விடுதியும், தபால் நிலையமும் காணப்படுகிறது. இது சிலாபத்திளிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் புத்தளம் செல்லும் வீதிலில் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளது. இங்கு குவிமாடத்தைக் கொண்ட மாரியம்மன் கோயில் ஒன்றும் காணப்படுகிறது. எனக் குறிப்பிடுகின்றார். இன்றும் மாரியம்மன்



வீடும் (இரு தசாப்தத்திற்கு முன்பு) வாசலில் வேப்பிலையும்

கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு தங்குமிட வசதி காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மாரி என்றால் மழை அல்லது அம்மை நோய் என்று பொருள்படும். இன்றும் கிராமமக்களைக் காத்து, கொடிய நோயைப் போக்கும் மாரியம்மனாக வணங்கப்படுகிறாள். இது ஒரு திராவிடத் தெய்வமாகும். ஆரியரது கதைகளிலோ, புராணங்களிலோ, இப்பெயர் காணப்படவில்லை. மாரியாத்தாளுக்கு மடை போட்டால் மழை பொழியும் என்னும் நம்பிக்கை, கிராம மக்களிடம் நிலவுகிறது. மாரியம்மனின் தோற்றம் பற்றிய பல கதைகள் வாழ்வியல் களஞ்சியத்தில் கூறப்படுகிறது.

கிராமங்களில் காணப்படும் பெரும்பாலான மாரியம்மன் கோயில் களில், பார்ப்பானர் அல்லாதோரே பூசாரிகளாக உள்ளனர். செவ்வாய், வெள்ளிக்கிழமைகள், அம்மனுக்குச் சிறப்பான நாட்களாகக் கருதப் படுகிறது. பொங்கல், மாவிளக்கு, பானகம் என்பனவற்றைப் படைப்பர். காவடி, கரகம் என்பன எடுத்து அம்மனை மகிழ்வித்து நேர்த்திக் கடன் கழிப்பர். வேப்பிலையும், மஞ்சத் துணியும் சிறந்த அணிகலன்களாகக் கருதப்படுகிறது.

இவ்வாலயத்தில் பழமையினை உணர்த்துகின்ற தொல்பொருள் இலட்சினைகள் சின்னங்கள் பல. அவற்றில் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஒலிக்கும் காண்டாமணியாகும். இக்காண்டா மணி விவகாரம் ஒன்று

நடந்தேறியது. அதாவது இராமேஸ்வரத்திலிருந்து கட்டுமரத்தின் மூலம் காண்டாமணி கொண்டுவரப்பட்டது. பரிபாலன சபைக்கும் வியாபாரிக்கு மிடையே விலைத் தகராறு காரணமாக மணி திருப்பிக் கட்டுமரம் மூலம் கொண்டு செல்லப்பட்டது. செல்லும் போது நடுக்கடலில் புயற் காற்றினால் கட்டுமரமும் வியாபாரிகளும் உயிராபத்துக்குட்படலாயினர். அவர்கள் அம்மனை வேண்ட புயல் அமைதி பெற்று அறியாமை நீங்கி அறிவு பெற்ற வியாபாரிகள் காண்டாமணியினை மாரியம்மன் கோயிலுக்கே வழங்கியதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இருந்தும் இந்த மணியில் 1750 ம் ஆண்டு ஆண்டிமுனை உடப்பங்கரையூரவர் கோயிலுக்கு உபயம் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அன்று நிகழ்ந்த அந்த நிகழ்வு உண்மையாகியுள்ளது எனவாம்.

மேலும் பழமைக்கும் சிறப்புக்கும் உயரிய தொல் பொருள் சின்னம் அம்மனின் செப்புப்படிவமாகும். இது பெரும்பாலும் சோழர் காலத்துச் சின்னமாகக் கருதப்படுகின்றது. அத்தோடு விஜய நகர- நாயக்கர் காலப் பாணியிலமைந்தனவென்றும் 16ம் 17ம் நூற்றாண்டுக்குரிய படிவமென்றும் இதை ஆய்வு செய்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தென்னந்தோட்டத்தின் மத்தியில் அமர்ந்திருக்கும் மாரிக்கு தென்னம் பாளை, குருத்தோலை, இளநீர் கொடுக்க அக்காலத்து உயர் வர்க்கத்தினர் மறுத்துள்ளனர். இதனால் ஊரவர்கள் மத்தியில் மனக்குழப்பமும் மனவேதனையும் அடைந்தனர். அவ்வேளையில் அனியாயபுரத்து ராஜா என்பவர் ஊரவர் எல்லோரையும் ஒவ்வொரு தென்னங் கன்று கொண்டு வரச்செய்து மாரியம்மன் கோயிலைச் சுற்றி நடும்படிக் கூறினார். அதன் பிரகாரம் எல்லோரும் நற்று உருவாக்கிய தென்னந்தோட்டமே இன்று பலன் கொடுக்கும் மாரியம்மன் தோட்டம் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாலயம் 1880-மாரியம்மன் சிகரம் வைத்து மூலத்தானம் உண்டு படுத்தினது என்றும், 1884-கட்டி முடிந்தது என்றும் செம்பலிங்க உடையாரது குறிப்புகளில் காணப்படுகிறது. எனவே மாரியம்மன் கோயில் ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் 1884ம் ஆண்டளவில் செங்கற்களினால் சிகரம் வைத்து கட்டிய கும்பாபிஷேகம் நடந்திருக்க வேண்டும். அன்று தொட்டு ஸ்ரீ மாரியம்மன் கற்சிலை மூலஸ்தானத்தில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டு மக்கள் வழிபாட்டுக் குலதெய்வமானது.

இதே காலப்பகுதியில் நாயக்கர் வம்சத்தவர்களால், புளிச்சாக்குளம் என்னும் கிழக்கே உள்ள அயல் கிராமத்தில் மாரியம்மன் கோயில் கட்டப்படுகிறது. அக்கோயிலுக்கு உடப்பு மாரியம்மன் கோயிலில் இருந்த மாரியம்மன் சிலை கொண்டுபோய் பிரதிஷ்டை பண்ணப்படுகிறது. உடப்புக்கு புதிய சிலை கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை பண்ணப் பட்டதாக பிறைசூடியார் கூறுகிறார்.

உடப்பு மக்களுக்கு 1889ம் ஆண்டில் பெரியம்மை நோய் பரவி பெரும் கஷ்டத்துக்குள்ளானார்கள். மக்கள் அம்மனின் கோயில் சென்று அடிபணிந்து தொழுது நின்றனர். அம்மனின் அருட்கடாற்சம் மெய்ப்பிக் கப்பட்டு நோய் நீங்கி சுகமடைந்தனர். இதனால் அம்மனைக் குளிர்மைப் படுத்த குளிர்த்தி நேர்த்தி செய்து வருக்கின்றனர். அதாவது கைக்குத்தரிசி சமையல் செய்து நீர் ஊற்றி மறுநாள் குளிர்மைப்படுத்தி அம்மன் பெயரால் கனிவர்க்கங்களுடன் படையலிட்டு அம்மன் காவியம் பாடி பூசையின் முடிவில் கோயில் முன் மண்டபத்தில் பெண்கள் பந்தியிலமர்ந்திருக்க தலை வாழை இலையிட்டு சாதம் கனிவர்க்கங்கள் பரிமாறி உண்ணக் கொடுத்தலே குளிர்த்தியாகும்.

தீராத அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்துடன் அம்மன் கோயிலில் காத்துக் கடந்து தொழுது வணங்கி நோய் பிணியிருந்து விடுபட்டு சுகம் கிடைத்தது என்ற திருப்தியுடன் வீடு வந்து சேர்வதை இன்றும் இவ்வாலயத்தில் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது. எனவே அம்மை என்றால் மாரியம்மனுக்கு குற்றமிழைத்து விட்டதாகவே கருதுவார்கள். மாரி வந்தால் மழை பொழியும் மக்கள் உள்ளம் ஓங்கி எழும் என்பர். மாரியம்மன் மீது இனியில்லாத பற்றுறுதியும் பயமும் இந்த ஊர் மக்களுக்குண்டு.

இவ்வாலயம் 1922ம் ஆண்டில் நீண்ட காலக்கட்டத்தின் பின் புனரமைக்கும் பணிக்குட்படுத்தப்ட்டன. முன்னீஸ்வரம் சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. முத்துராக்கு ஆசாரி என்பவரே பிரதான ஸ்தபதியாக இருந்துள்ளார். 1964ம் ஆண்டில் முழுமையாக உடைக்கப்பட்டு மூலஸ்தான மண்டபம் அர்த்த மண்டபம் மகா மண்டபம் தரிசன மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டு தரிசன மண்டபத்தில் பிள்ளையார் சந்நிதியும், வள்ளி தெய்வானை முருகன் சந்நிதியும் வடிவமைக்கப்பட்டது. அத்தோடு தரிசன மண்டபத்தைத்

தொடர்ந்து அலங்கார மண்டபம் முன் கோபுர மண்டபத்துடன் இணைக் கப்பட்டு அலங்கார மண்டபத்தில் சிங்கம் பலி பீடமும் வலது புறத்தில் பைரவர் சந்நிதியும் அமைக்கப்பட்டு 1966ம் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. மேலும் 1995ம் ஆண்டில் புனருத்தாரனம் செய்யப்பட்டு சிவஸ்ரீ விசுவநாதக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் மேற் கொள்ளப்பட்டது. இங்கு 2007ம் ஆண்டில் வசந்த மண்டபம் கட்டிவிக்கப் பட்டது. மேலும் 2009ம் ஆண்டில் வர்ண வேலைத்திட்டதுடன் கோயில் உட்பிரகார வேலைகளும் மேற் கொண்டு பிரமஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடாத்தப் பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் பகல் இரவுப் பூசைகளே நடந்து வந்தன. இன்று மூன்று நேரப் பூசைகள் முறையே காலை 7.00 மணிக்கும் பகல் 10.30 மணிக்கும் இரவு 6.00 மணிக்கும் தினந்தோறும் நடாத்தப்படுகின்றன. முக்காலத்தில் பூசைகளை ஊர் சைவர்கள் மேற் கொண்டனர். இடைக் காலத்தில் பண்டார வம்சத்தைச் சேர்ந்த பூசாரிமார்களும் தற்காலத்தில் பிராமணரும் மேற் கொண்டு வருகின்றனர்.

இவ்வாலயத்தில் விஷேட விழாக்களாக தைப் பொங்கல் விழா, நவராத்திரி விழா பத்துநாட்களும், மாசிமக விழா பத்து நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இங்கு 1936 ம் ஆண்டிலிருந்தே மாசிமக விழா கொண்டாடப்பட்டது. பத்தாம் நாள் தீர்த்தம் இந்துமா சமுத்திரத்தில் நடைபெறும். மூலஸ்தான மூர்த்தியான ஸ்ரீமாரியம்மன் உச்சவ மூர்த்தியாகவும் தெருவீதிப் பவனி வருவார். இக் கோயிலுக்கான வாகனங்களாக சிங்கம், குதிரை போன்றன காணப்படுகின்றன.

இக்கோயிலில் நீண்ட காலமாக மாசிமகத் திருவிழா நடாத்தப்பட்டு வருகிறது. இத்திருவிழாவின் போதே உடப்பு நாடகக் குழுவினர் தாம் பழகிய நாடகங்களை முதன் முறையாக அரங்கேற்றம் செய்வர். பெரிய ராமா குழுவினரும், வட உடப்பு கந்தசாமி நாடகக் குழுவினரும் அங்கு புது நாடகங்களை அரங்கேற்றி உள்ளனர். சகுந்தலை, அரிச்சந்திரன், பவளக்கொடி போன்றவை அங்கு அரங்கேற்றப்பட்ட சில நாடகங் களாகும்.

ஆரம்ப காலத்தில் குளத்தடிஐயனார் கோயிலில் நடைபெற்று வந்த நவராத்திரி விழாவும், சூர சம்மாரமும் 1945ம் ஆண்டிற்கு முன், பின்னாக மாரியம்மன் கோயிலில் நடைபெறத் தொடங்கியது. ஐயனார் கோயிலில்

நடைபெறுவது பொருத்தமற்றது. அம்மன் கோயில் ஒன்றிலேயே நடைபெற வேண்டும் எனக் கருதி இவ்விழா மாரியம்மன் கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கலாம்.

இக்கோயிலுக்கு பிராமணர் அல்லாத பூசகர் குடும்பத்தவரே அர்ச்சர் களாக இருந்துள்ளனர். முன்னைய காலத்தில் சிதம்பரப் பூசகரும், பின்னர் சொக்கலிங்கப்பூசகரும் பூசை செய்துள்ளனர். சொக்கலிங்கப் பூசகர் கும்மி, காவியம் போன்ற வழிபாட்டுப் பாடல்களை பாடியுள்ளார். 1929இல் திரௌபதை மான்மியத்தைப் பதிப்பித்த வரும் இவரே. இவருக்குப் பின் முத்தையாப் பூசகர் இருந்துள்ளார். அதன் பின்பு பரந்தாமன் பூசகர் அர்ச்சக ராகக் கடமை புரிந்துள்ளார். 1995ன் பின் அவர் காளியம்மன் பூசகராக மாற்றப்பட்டுள்ளார். அன்றிலிருந்து மாரியம்மன் கோயிலுக்கு பிராமணர் ஒருவர் பூசை செய்து வருகின்றார்கள்.

முன்பு உடப்பு மக்கள் கந்தசாமி கோயில் ஒன்றைக் கட்ட முனைந்து அத்திவாரம் இட்டுள்ளனர். அதற்குரிய தோட்டக்காணியும், தெப்பக் குளமும் முன்னால் இருந்துள்ளது. கோயில் அத்திவாரத்தில் ஒருவர் விழுந்து இறந்து விட்டதால் அங்கு கோயில் கட்ட விரும்பாது அங்கிருந்த வேலாயுதத்தை மாரியம்மன் கோயிலுக்கு ஒப்படைத்து விட்டனர் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். பின்பு சிறு கோயிலாக கட்டப்பட்டு வழிபடப் பட்டு வருகின்றது. இவ்வாலயம் பழம்பெருமை வாய்ந்தவை. பாரம்பரிய காணியைக் கொண்டு உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் நிருவாகத் துக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**உடப்பு ஸ்ரீ காளியம்மன் ஆலயம்**

திராவிடர்களின் பண்பாட்டு பாரம்பரியக் கூறுகளில் சக்தி வழிபாடு தொன்டுதொட்டு வாழையடி வாழையாக இடம்பெற்று வருகின்றது. இந்த வழிபாட்டு முறைகளில் மரபைத் தழுவியும், சடங்குகளுடன், சம்பிரதாயத்துடன் இடம்பெற்று வரும் பெண் தெய்வ வழிபாடுகள் மூலவிசையாக இருக்கின்றன. இதற்கு சான்றாக இருப்பதே ஸ்ரீகாளியம்மன் வழிபாடாகும்.

இவ்வாறு வடமேல் மாகாணத்தில் சிவசக்தி தெய்வ வழிபாடுகள் முதன்மை பெற்ற வழிபாடாக இருக்கின்றது. இந்த மாகாணத்திலுள்ள புத்தளம் மாவட்டத்தில் சக்தி வழிபாட்டை மேன்மைப்படுத்தும் வரலாற்றுச்

சிறப்புப் பெற்ற பல இந்து பெண் தெய்வ ஆலயங்கள் அமைந்திருக் கின்றன. இதில் பல அற்புதங்கள் நிறைந்த ஆலயமாகத் திகழ்வது தான் உடப்பு ஸ்ரீ காளியம்மன் ஆலயமாகும்.

புத்தள மாவட்டத்தின் உடப்புக் கிராமத்தின் மத்தியில் மேற்கே இந்துமா சமுத்திரத்தையும் கிழக்கே பிரதான வீதியினையும் முந்தல் சிறுகடலையும் அறுவாய் மணல் பிரதேசத்தையும் புத்தளமிருந்து 42 கிலோமீற்றர் தூரமும் சிலாபமிருந்து 35 கிலோமீற்றர் தூரத்தினையும் கொண்டமைந்த உடப்பூர் ஸ்ரீ காளியம்மன் ஆலயம் பல்லின மக்கள் வழிபாடு செய்யுமிடமாகும்.

உடப்பு மக்கள் தமக்கு ஏற்பட்டு வரும் இன்னல்கள், இடையூறுகள், கொடிய தொற்று நோய்கள், பீடைகள் ஏற்படும் போதெல்லாம் தமது குல தெய்வங்களுக்கு விழாவெடுத்து சிறப்பிக்கும் முறைமை இன்னமும் காலா காலமாக இடம்பெற்றுவருவது முக்கிய சிறப்பம்சமாகும். இதற் கிணங்க உடப்பு ஸ்ரீகாளியம்மன் ஆலயத்தின் வேள்வி விழா பத்து தினங்களாகக் கொண்டாடப்பட்டு வரும் இவ்வேள்வி விழா கும்ப விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது. வரலாற்று பின்புலத்தைச் கொண்ட இவ்வாலயம் பல அற்புதங்களையும் பல அதியங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

எருக்கலம் காடாக வளர்ந்து கிடந்த மணற்பாங்கான பூமியில் கொத்தக் கிழவர் சங்கு சக்கரங்கள் புதையுண்டிருந்ததாக கனவு கண்டு அவ்விடத்தைக் காளி அருள் பெற்ற கொத்தக் கிழவர் பராமரித்து குடில் கட்டி பக்தி வரம்பெற்று வாழ்ந்து வந்துள்ளார். ஒரு கால் உடப்புக் கிராமத்தில் அதாவது 1850ம் ஆண்டில் கலரா என்னும் கொடிய கொள்ளை நோய் ஊரில் பரவி இனியில்லாத அவலங்களையும் உயிராபத்துக் களையும் ஏற்படுத்தியது. யாதுமறியாத மக்கள் துன்பந் தாங்க முடியாது ஊரை விட்டு ஓடி ஒழிய வேண்டிய நிலைமைக்குட்பட்டனர்.

அவ்வேளையில் கொத்தக் கிழவர் காளி அருள் உருவாகி மக்களை நாடி வந்து ஊரை விட்டு நகர வேண்டாம். காளியின் கருணையால் யாவரும் காப்பாற்றப்படுவீர்கள் என அசரீரி வாக்குப் போல் ஓசை ஒலித்தார். கொத்தக் கிழவனாருக்கு இன்றைய காளி அம்மன் கோயில் மையத் தளத்தில் உரு உண்டாகிறது. காளியாக பாவனை செய்து பல அருள் வாக்குகள் கூறுகிறார். என்னை வேப்பிலைக் கும்பத்தில் வைத்து,

கடல் நீரில் விளக்கேற்றி வருடந்தோறும் வழிபட்டு வருவாயானால் உங்களையெல்லாம் நோயினின்றும் காப்பாற்றுவேன் என்று திருவாய் மலர்ந்ததாகவும் கதைகள் உள்ளன. எனவே ஊர் மக்கள் ஸ்ரீ காளிகாதேவிக்கு பச்சை இலைகளால் குடில் கட்டி வேப்பிலைக் கும்பம் வைத்து கடல் நீரை எண்ணெய்யாக வார்த்து விளக்கெரிக்கும்படி ஆணை பிறப்பித்தார். மக்களும் அவர் வாக்கினை அம்மன் வாக்காகக் கருதி அவ்விதமே செய்து அம்மனைப் பயபக்தியுடன் வழிபட்டனர். அதன் பெறுபேறாக வேப்பிலை பூத்துக் காய்த்ததாகவும் கடல் நீரில் விளக்கெரிந்ததாகவும் உடப்பு வாழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக கூறி வருகின்றனர். அன்றிலிருந்து இன்று வரையும் காளியம்மன் என்றால் பயமும் பக்தியும் இவ்வூர் மக்களின் இதயத்தில் குடிகொண்டுள்ளன. இதனால் ஸ்ரீ காளியம் மனுக்கு கோயிலும் உருவாக்கினர். தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவே காளி கோயில் சந்நிதானத்தில் வேப்பிலைக் கும்பம் வைத்து, கடல் நீரில் விளக்கேற்றி வழிபாடு செய்வதை இன்றும் காணலாம்.

செம்பலிங்க உடையார் தனது குறிப்பில் 1853ஆண்டில் காளி அம்மன் கோயில் கொத்தக் கிழவனார் என்பவரால் பேதி வியாதி வராதபடி சாமி வந்து கடல் தண்ணீர் ஊத்தி விளக்கு ஏற்றி கடல் தண்ணீரில் மண் குடத்துக்கு வேப்பிலை ...உடனே காச்சி பூத்து ஒரு ...... அதிலிருந்து நன்மை செய்து என்று எழுதி உள்ளார்.

இக்குறிப்பை சரியானது என ஏற்றுக்கொண்டால் ஏறக்குறைய பல ஆண்டுகளாக மாரியம்மன் கோயிலே இம் மக்களது வழிபட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டும். இக்கால கட்டத்துள் வேறு கோயில்கள் அமைக்கப் படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பாகத்தில் கொள்ளை நோய், பேதிநோய் என்பன பரவி பலரைப் பலி கொண்டது. பலர் காடு களுக்கு ஓடி தம்மைப் பாதுகாக்க முனைந்தனர். சிலர் காடுகளிலேயே குழந்தைகளை ஈன்றனர். அவர்களுக்கு காடுவத்தா என்ற பெயரும் உள்ளது. அது காடு பெத்தாள் என்பதன் மருவிய வடிவமாகும்.

காளி அம்மன் இவ்வூர் மக்களின் காவல் தெய்வம் பேய்கள், சூனியம், கொடிய நோய்கள் என்பவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றுபவள். கொடுமைகள், தீமைகள், செய்வோரைத் தண்டிப்பவள். முற்காலத்தில் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் மத்தியான வேளையிலும், இரவிலும் கோயிலைக் கடந்து செல்ல மக்கள் பயப்படுவார்கள். ஆடு, சேவல்களை

நேர்த்திக் கடனாகக் கொடுத்து காளி அம்மனின் கோபத்தை சாந்தப்படுத்த முயலுவதுடன் தமது வேண்டுதல்களையும் நிறைவேற்றுவர்.

கொத்தக் கிழவர் காலம் மரம் தடிகள் கொண்டு கூரையமைத்த குடில் கிடுகளால் வேயப்பட்ட ஒற்றைக் கூரை கொண்ட கோயிலும் மூலஸ் தானத்தில் சங்கு சக்கரம் புதையுண்ட இடத்தை வழிபட்ட மக்கள் அங்கு காளியம்மன் இருப்பதாகக் கருதி பயபக்தியுடன் வெள்ளி செவ்வாய் கிழமைகளில் தங்கள் நேர்த்திக் கடமைகளை செலுத்தி வந்துள்ளனர். இக்கோயில் 1853 ம் ஆண்டளவில் களிமண்ணினால் சுவர்கள் அமைத்து கிடுகுகளால் வேயப்பட்டது. இக்காலத்தில் காளியுருவம் கொண்ட சின்னத்தையே வழிபட்டனர். இவ்வாலயம் 1878ம் ஆண்டில் செங்கற் களால் சுண்ணம் சாந்து கொண்டு கோயில் கட்டிவித்து சிறிய கோபுரமும் மூலஸ்தான மண்டபமும் அர்த்த மண்டபமும் அமைக்கப்பட்டிருந்தது.

செம்பலிங்க உடையார் 1878ம் ஆண்டில் கோயில் கல்லால் கட்டி சிகரம் வைத்துள்ளனர், எனக் கூறுகின்றார். இன்னுமொரு குறிப்பில் 1898ம் ஆண்டில் காளி அம்மன் கோயிலை பாலத்தாபனம் பண்ணி முனிஸ்வரம் முத்துக் குருக்களைக் கூட்டிக் கொண்டு இந்தியாவால் கொண்டு வந்த விக்கிரகம் வைத்தது என்று எழுதியுள்ளார். இக்குறிப்பின் படி 1898இல் முதன்முதல் பாலஸ்தாபனம் பண்ணப்பட்டது. முத்துக் குருக்கள் என்பது முன்னீஸ்வரம் முத்துகுமார சுவாமிக் குருக்களைக் குறிப்பிடுகிறது. அவர் மூலமாக இந்தியாவிலிருந்து 1891ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விக்கிரகமே இன்று கோயிலின் கர்ப்பக் கிரகத்துள் பிரதிஷ்டை பண்ணப்பட்டுள்ளது.

இச்சிலையின் வடிவமைப்பு அற்புதமானது. கருங்கல்லினாலான காளி சிலை ஆண் பாதி பெண் பாதி சேர்ந்தமைந்த அழகுடையதாகும். இரு பகுதி ஆடை, அணிகளும், வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளன. வீரபத்திரரும், காளியும் இணைந்த சிலையாகக் கருதப்படுகிறது. அதன் பொலிவும் தெளிவும் சிற்ப நுட்பங்களை சீர் தூக்கி காட்டுகின்றது. உடப்பில் பாடப்படும் காளியம்மன் காவியத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் சம்மாந்துறை வாழும் வீரபத்திர காளியே என்றும் ஒரு அடி வருகிறது. சம்மாந்துறை என்பது தோணித்துறையைக் குறிப்பிடுகிறது இதனால் தான் இவ்வாலயம் இன்று ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயம் என அழைக்கப்படுகின்றது.

மேலும் புனருத்தாரனப் பணிகள் இவ்வாலயத்தில் 1918தொடக்கம் 1929ம் வரையும் பகுதி பகுதியாக உடப்பு மக்கள் மேற்கொண்டுள்ளனர். அவற்றில் 1920ம் ஆண்டில் கோயில் திருப்பணியில் மகாமண்டபத்தில் வலது புறம் பிள்ளையார் சந்நிதியும் இடது புறம் பேச்சியம்மன் சந்நிதியும் அமைக்கப்பட்டன. மேலும் முன் கோபுரம் சிங்க வாகனத்திலிருந்து ஸ்ரீ பத்திர காளியம்மன் மகுடா சூரனை வதை செய்யும் பாவனையில் சிற்பம் அமைக்கப்பட்டது. 1922ல் முன்னீஸ்வரம் சோமஸ்கந்த குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. அவ்வேளையில் கிருஷ்ணன் என்னும் சிற்பாசாரி கோயிலின் முன்பாகத்தில் வளைமாடம் அமைத்து கோபப் பார்வையுள்ள காளி அம்மனை சிற்பமாக வடித்துள்ளார். இது பார்வைக்கு பயத்தினை ஊட்டுவதாகவே அமைந்திருந்தது. அக்காலத்தி லிருந்து பூசைக் கருமங்கள் ஊரவர்களும் பின் சொக்கலிங்கப் பூசாரியார் முத்தையாப் பூசாரியார் இன்று மகன் பரந்தாமன் பூசாரியார் போன்றோரும் இடையே பிராமணர்களும் பூசை செய்து வருந்துள்ளனர்.

இக்கோயில் 1980ம் ஆண்டில் முழுமையான திருப்பணிகள் மேற் கொள்ளப்பட்டன. பின் கோபுரம் மூலஸ்தான மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், அலங்கார மண்டபம், முன் கோபுரம் மணிக்கோபுரம், வைரவர் சந்நிதி போன்றன அமைக்கப்பட்டு கோயிலைச் சுற்றி சுற்றுமதிலமைத்து இதுவரையும் கோயிலோடு இணைந்திருந்த மடைப்பள்ளியறை தங்குமிட அறைகள் தனிமைப்படுத்தப்பட்டு திட்ட மிட்ட அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது. இவ்வேலைத்திட்டம் 1983ம் நிறைவு பெற்று மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ விசுவநாதக்குருக்கள் தலைமையில் நடாத்தப்பட்டன. இக்காலத்திலிருந்து நாளாந்தம் மூன்று காலப் பூசை பூசகர் மரபினரால் செய்யப்படுகிறது.

இக்கோயில் 1997ம் ஆண்டு மீண்டும் புனருத்தாபண வேலைத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. கோபுத்திலுள்ள பொம்மைகள் புதுப்பிக்கப் பட்டன. தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்பக்கலைஞன் கனேஸ் ஆசாரியாரும் அவர் குழுவினரும் படைப்புகளுக்கு முத்திரையிட்டனர். திரு வீ. முத்துக்கிருஷ்ணன் குழுவினர் வர்ணம் தீட்டினர். இவ்வாலயத்துக்கான மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ விசுவநாதக் குருக்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. புனருத்தாரன நடவடிக்கையில் 2002ம் ஆண்டில் இவ் வாலயத்தின் சுற்றுமதில் வேலைகளும் உட்பிரகார வேலைத்திட்டமும் நிறைவு பெற்று 2005ம் ஆண்டில் வசந்த மண்டபமும் கட்டப்பட்டு,

2012ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயம் முழுமை அடைந்தாற் போன்ற தோற்றம் பெற்றுள்ளது எனலாம்.

ஆரம்ப காலத்தில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் உச்சிகாலப் பூசை மாத்திரம் நடைபெறும் ஏனைய தினங்களில் பூசகர் வந்து தீப மேற்றிவிட்டுச் சென்று விடுவார். பின்னர் செவ்வாய், வெள்ளிக் கிழமை களில் இரண்டு நேரப் பூசைகள் மேற் கொள்ளப்பட்டு வந்த இவ்வாலயம் 1983ம் ஆண்டின் பின் இன்று வரையும் காலை 7.30 மணிக்கும் மதியம் 11.30 மணிக்கும் இரவு 6.00 மணிக்கும் தினந்தோறும் பூசைக் கருமங்கள் நடைபெறுகின்றன. வருடாந்த விழாக்கள் கொண்டாடப்பட்டாலும் புரட்டாதி மாதம் நடைபெறும் வேள்வித் திருவிழா மக்களால் பயபக்தி யுடன் கொண்டாடப்படும்.

இவ்விழா பத்து நாள் நடைபெறும் விழாவாகும். கரகம் பாலித்தல் சிறப்பிடம் பெறும். முதல் நாள் காலையில் கரகம் எடுத்து மாலை வேளை கோயிலின் இடது பக்கதிலிருக்கும் அறுவாய் மணல் வெளியில் மூன்று சிறிய கிணறுகள் வெட்டி அதில் வரும் நீரை ஓர் மண் குடத்திலிட்டு மூலஸ்தானத்தில் வைத்து அதில் வேப்பிலைக் கிளைகள் நற்று கும்பம் வைப்பர். மேலும் தூண்டாமணி விளக்கினை கடல் நீரினைக் கொண்டு தொடர்ந்து பத்து நாட்களும் எரிய விடுவர். பத்து நாள் திருவிழாவில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் கரகம் பாலித்தல் வைபவம் நடைபெறும். கரகம் ஸ்ரீ காளியம்மனாகவே மக்கள் கருதுவர். இங்கும் கரகம் எடுப்பவர் பூசாரிமார்களே. கரகத்துக்குத் துணையாக காவல் தெய்வங்களாக பைரவரும், ஐயனாரும் வருவர். இவர்களைச் சூரப்புலிகள் என்பர். அதனை செய்ய நேர்த்தி செய்யும் ஊரவர்கள் பயன்படுத்துவர்.

கரகத்துக்கான அலங்காரங்கள் வேப்பிலையினை பயன்படுத்தி கரகக்குடத்தில் வைத்து தெய்வ அனுட்டானங்கள் மேற் கொள்வர். கரகம் ஊரைச் சுற்றியுள்ள வீதிகளெல்லாம் வலம் வரும். காக்கும் காளியம்மன் ஊருக்கு காவல் அரண் செய்வதாகவும் பஞ்சம் பசி பிணி நோய் நீக்கி இன்பமாக வாழ வழிவகுப்பதாகவும் மக்கள் கருதுவார்கள். கரகம் பாலிக்கும் வேளையில் அம்மன் மீதான காவியங்களும் கும்மிப் பாடல் களும் மத்தளம் கைத்தளம் ஒலித்தோங்க மனமொத்து மகிழ்ச்சியாகப் பாடி அம்மனைத் திருக்கோயில் குடி கொள்ளச் செய்வர். எட்டாம் நாள் விழா ஊர் நேர்த்திக் கடனும் அக்கினி சட்டி எடுத்தலும் நடைபெறும்.

இரவு வேளையில் கரகம் பாலித்தல் வைபவம் இடம்பெறும். இக்கரகத்தினை அர்த்தராத்திரிக் கரகம் என அழைப்பர். இதில் விஷேட கும்மியாட்டம் நடைபெறும் மக்கள் வெள்ளம் திரண்டு கண்கொள்ளாக் காட்சியாகப் பார்த்து மகிழ்வார்கள். கும்மிப் பாடல்களில் அம்மன் அதிசயங்கள் வரலாறுகள் கருத்தூன்றிக் கிடக்கின்றன. இப்பாடல்களை இயற்றியவர்களும், இசையமைத்தவர்களும் இவ்வூர்வாசிகளே. இப் பாடல்கள் பாடும் வேளையில் இடையிடையே குரவையிடும் வயதுப் பெண்கள் கும்மியோடு குரவை இடுவர். ஒன்பதாம் நாள் அக்கினி சட்டி வைபவம் காலை வேளையில் நடைபெறும். கஷ்டப்படுவோரும் பிள்ளைகளற்றவரும் அந்தத் துன்பம் நீங்க வாக்குக் கேட்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பிச்சைக் கரகம் பாலித்தல் வைபவம். ஊர் மக்கள் யாவரும் தங்களால் இயன்ற தானதர்மங்களாக அரிசி காய்கறிகள் ஏனைய பொருட்களை அன்னதானத்துக்காக வழங்குவர். இதுவே பத்தாம் நாள் படையலுக்குரிய அன்னதானமாகும். இதனை எல்லோரும் பகிர்ந்துண்பர்.

பத்தாம் நாள் கரகம் காலை வேளையில் ஊரின் நான்கு திசையும் காவல் புரிந்து பலி கொடுத்து திருக்கோயிலையிலின் முன் கும்மி நடனம் புரிந்து அருள் பெற்று கோயிலின் முன் கொதியிடப்பட்ட மஞ்சள் நீர்க் குடத்தில் கரகம் காவல் தெய்வங்கள் அருள் பெற்று நின்றாடி மஞ்சல் நீர் தாங்கள் அள்ளித் தெளிப்பதோடு மக்களுக்கும் தெளிக்கச் செய்வார்கள். இதனைத் தொடர்ந்து பலியிடல் வைபவம் நடைபெறும். இதே வேளையில் கோயிலின் முன் விநாயகப் பானை ஏற்றும் வைபவமும் தொடர்ந்து மக்கள் கோயிலின் நாற்புறமும் பொங்களிட்டு பொறுமையோடு பூசைக் காட்சிகளைக் கண்டு களித்து அன்னதானம் பெற்றுக் கொள்வர். மாலை வேளை கும்மி கொட்டுவார்கள் பெண்களும் ஆண்களுமாக கும்மி கொட்டி கும்பத்தினைக் கடலில் சொரிவர். இவ்வாறு வேள்வி திருவிழா இனிது முடிவெய்திய போதும் இது ஒரு மரபு ரீதியான விழாவாகும். மேலும் உடப்பு வாழ் மக்களின் தொழிலுக்கு ஊக்கம் கொடுக்கும் விழாவாகவும் கருதலாம். ஆரம்ப காலத்தில் கரவலைத் தொழிலாளர்கள் வருடம் தோறும் தாங்கள் தொழில் செய்யும் இடத்திற்கான பாட்டினைப் பெற கோயில் முன்றில் திருவளச் சீட்டுப் போட்டு தொழில் செய்யும் பாட்டினைப் பெறுவது வழமையாக இருந்தது. இன்று அந்த முறை மாற்றம் பெற்று விட்டது. எனவே தொழிலுக்கும் திருவிழாவுக்கும் ஒருகால் தொடர்பிருந்துள்ளது என்றும் சொல்லலாம்.

முன்னைய காலத்தில் காளி கோயிலுக்கு அருகில் காமாண்டிக் கூத்து நடைபெற்றுள்ளது. காமனை சிவபெருமான் எரித்த கதையைக் கூத்தாக நடத்தி உள்ளனர். இக்கூத்து நடந்த இடத்தை காமாண்டிக் காணி என்று கூறுவர். இக் காணி முன்பு மூக்குத்தி ஆசாரியாருக்கு (பொற்கொல்லர்) சொந்தமாக இருந்துள்ளது. காணி சீட்டு இலக்கம் 9532, இக் கூத்து வேள்வித் திருவிழாவின் போது நடந்திருக்க முடியாது. இக் கூத்து வெகு காலத்தின் முன்பே வழக்கொழிந்து விட்டதால் அது பற்றிய விபரங்களை அறியமுடியாதுள்ளது.

## உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்

இராமேஸ்வரத்திலிருந்து குடிபெயர்ந்து உடப்பிற்கு தமது உடன் கூட்டத்தோடு வந்தவர்கள் Masakazu Tanaka (1991) சந்தனக் கட்டையினால் வடிவமைக்கப்பட்ட திரௌபதையம்மன் சிலையொன்றினையும் கொண்டு வந்தனர். இவர்கள் குடியிருந்த இடங்களில் எல்லாம் திரௌபதையம்மன் ஆலயம் அமைத்து வழிபட்டதாக வாய்மொழிக் கதைகளால் அறியலாம். இதுபோல் இன்று திரௌபதையம்மன் ஆலயமிருக்கும் பிரதேசம் அன்று ஒரு மேட்டு நிலமாகவே இருந்துள்ளது. இவ்விடங்களில் தில்லை மரங்களும் நொச்சி, பிஞ்சால் செடிகளும் அடர்ந்து வளர்ந்த பூமியாக காணப்பட்டது. இவ்வாறான ஒதுக்குப் பிரதேசத்தை உடப்பூர் மக்கள் திருக் கோயிலுக்குரிய புனித பூமியாக மாற்றியமைத்தனர். இன்று இப்பூமி பெருமைக்குரிய ஸ்ரீ பார்த்தசாரதி ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ திரௌபதாதேவியம்மன் திருக்கோயிலாக நவதள 108 அடிகள் இராஜ கோபுரத்துடன் கண்கவர் கவின்கலைக் கோயிலாகக் காட்சி கொடுக்கின்றது.

உடப்பு வாழ் மக்கள் தாங்கள் குருகுலத்தவர் என்றும் வேதவியாசர் மீனவப் பெண்ணுக்குப் பிறந்த மகான் என்றும் குருகுலத்து வேதவியாச ரால் அருளப்பட்ட மகா பாரதம் பற்றி நன்கு அறிந்தவர்கள் என்றும் கூறுவர். தாய்த் தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை கொண்ட இம்மக்கள் ஸ்ரீ திரௌபதா தேவியம்மன் ஆலயத்தை முதன்முதலில் மரங்கள் தடிகள் கிடுகுகள் கொண்டு கட்டி முடித்து சந்தனக் கட்டையினாலான ஸ்ரீ திரௌப தையம்மன் சிலையை மூல மூர்த்தியாக பிரதிஷ்ட செய்து வழிபட்டு வந்துள்ளனர். அன்று மதிய நேரப் பூசையும் இரவு நேரப் பூசையுமே நடந்தேறி வந்தன. இப்பூசைப் பணியினை ஊரின் சைவப் பணியாளரே

செய்து வந்தனர். இடைக் காலங்களின் பின் பிராமணர்கள் கோயில் கடமைகளையும் பூசைகளையும் செய்து வந்துள்ளனர்.

இத்தெய்வ வழிபாடு உடப்பு ஊரவரின் கலை, கலாச்சாரத்தோடு தொடர்புடையதாக விளங்குகிறது. இக்கோயிலின் ஆடித்திருவிழா நாடெங்கும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. கரகம் பாலிக்கும் பூசகரை திரௌபதாதேவியாகவே கருதி பக்தி பூர்வமாக வழிபடுகிறார்கள். திருவிழாக் காலத்தில் பாடப்படும் பாரத அம்மானைக் கதையைக் கேட்டு சமய இலக்கிய அறிவைப் பெறுகின்றனர். விழாக் காலத்தில் பல நாடகங் களும், அரங்கேற்றப்படுகின்றன. மக்கள் புத்தாடை புனைந்து புது நகைகள் செய்து, வீடுகளைச் சுத்தமாக்கி, வீதிகளுக்கு நீர் தெளித்து திருவிழாவை ஆனந்தத்துடன் கொண்டாடுவர்.

உடப்பூரில் வாழும் ஒவ்வொரு குலத்தவரும் ஒவ்வொரு தெய்வத்தை தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபடுவர். முனிய சாமியையும், ராக்குருசிஅம்மனையும், காளியையும், மாரி அம்மனையும் தத்தமது குலதெய்வமாக வழிபாடு செய்யும் முறை இன்றும் உள்ளன. அவ்வாறு திரௌபதை அம்மனை குல தெய்வமாக வழிபடும் இம்மக்கள் ஸ்ரீ திரௌபதா தேவிக்கு கோயிலை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

ஊரில் உள்ள பெரியோர்கள் காளி அம்மன் தோன்றியதற்கு பின்பே திரௌபதை அம்மன் தோன்றியதாக உறுதியாகக் கூறுகின்றனர். 1886ல் ஊர் அளக்கப்பட்டபோது நிலை அளவைப் படத்தில் திரௌபதை அம்மன் கோயிலுக்கான எல்லைகளை வரைந்து அதன் மத்தியில் கோயிலையும் குறியீடு மூலம் காட்டி உள்ளனர். எனவே திரௌபதை அம்மன் கோயில் 1853ம் ஆண்டிற்கும் 1886ம் ஆண்டிற்கும் இடையில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாலயம் 1905ம் ஆண்டுகளில் செங்கற்களால் அத்திவாரமிடப் பட்டு சிறிய பண்டிகையுடன் பின் புறக் கோபுரம் சிறிதளவு பொம்மை களுடன் வடிவமைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் சந்தன மரத்தாலான சிலை நிறுவப்பட்டது. முத்துராக்கு ஆசாரி கோயிலைக் கட்டி முடிக்க முன்னீஸ்வரம் குமாரசுவாமிக் குருக்கள் 1908-07-10ந் திகதி மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். இக்காலங்கள் பிராமணர்களின் வருகையும் பூசைக் கிரியைகளும் ஆரம்பிக்கலாயின. பூஜைகள் இரு நேரமேயாகும். இக்காலத்தில் ஸ்ரீ திரௌபதாதேவி அம்மன் மூலஸ்தான

மூர்த்தியாகவும் உட்பிரகார சந்நிதிகள் மூர்த்தங்களாக வலது புறம் விநாயகர் சிலையும் இடது புறம் ஸ்ரீ முருகன் வேலும் வடிவமைக்கப்பட்டு ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது.

அன்று மூல மூர்த்தியாகிய ஸ்ரீ திரௌபதையம்மனுக்கே சித்திரை மாதத்தில் தீ மிதிப்பு விழா கொண்டாடப்பட்டது என கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. தீமிப்பு விழா அன்றிலிருந்து இன்று வரையும் அற்புத சக்திபடைத்த விழாவாகும். இவ்விழா பாரதக் கதையினை மையமாக வைத்து நடைபெறுகின்றது. பாரதக் கதையில் வரும் பாண்டவர் கௌரவர் யுத்தம் பதினெட்டு நாட்கள் அதுபோல் விழாவும் பதினெட்டு நாட்களேயாகும். தீமிதிப்பில் நடனமாடுவோர் தொகை வருடாவருடம் அதிகரித்து இன்று 4500 பக்தருக்குமேல் தீயில் நடனமாடுகின்றனர். இக்காட்சிகள் பார்ப்போர் கண்களை மெய் மறந்து பக்தி பரவசத்தில் ஆழ்வர்.

தீமிதிப்பு உற்சவம் கோயில் தோன்றிய காலத்திலிருந்தே நடை பெற்றிருக்க வேண்டும். புத்தளத்தில் வாழ்ந்த குடும்பங்கள் தாம் அமைத்த திரௌபதை அம்மன் கோயிலில் தீமிதிப்பு வைபவத்தை அறிமுகப்படுத்தி இருக்கலாம். ஆரம்பத்தில் ஊரில் உள்ள ஒருவர் கரகம் பாலித்து தீமிதிப்பு உற்சவத்தை நிகழ்த்தி இருக்கலாம். சொக்கலிங்கம் பூசகரது தந்தை சிதம்பரப் பூசகர் காலத்தின் பின் அவரும், அவரது பரம்பரையினருமே தீமிதிப்பு வைபவத்தை நிகழ்த்தியுள்ளனர்.

உடப்பூர் மக்கள் பாரதக் கதையினையும் கதையின் கதாநாயகியின் பத்தினித் தன்மையிலும் சக்தியிலும் பற்றுறுதியும் நம்பிக்கையும் கொண்டிருப்பவர்களாவர். இதனால் தங்கள் குலதெய்வமாகவே தாங்கள் குடியிருந்த காலத்திலிருந்து மெய்சிலிர்க்கும் தூய பக்தியினையும் தொண்டினையும் மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

தீமிதிப்பு சடங்கு பல காரணங்களுக்காக நடாத்தப்படுகிறது. இது தொடர்பாக பல கதைகள் உள்ளன. அம்மன் திரௌபதாதேவியாக துருபத மன்னன் செய்த தவத்தின் பயனாக திரௌபதாதேவி யாகாக்கினியில் தோன்றியதாக பாரதம் வலியுறுத்துகின்றது. அம்மன் மகாபாரத நாயகியின் இரண்டாவது அவதாரம் சுனீத் மன்னன் செய்த தவப் பேறாக அம்மன் யாகாக்கினியில் தோன்றி துஷ்டனான அசிலோமனைச் சங்காரம் செய்து அடியார்களுக்கு அருள் பாலித்தாள். மேலும், அத்தோடு பஞ்சபாண்டவர்

மனைவியாகவிருந்தாலும் அக்கினியில் பிரவேசித்து தான் கற்புடையவள் என்பதை நிருபித்திருக்கின்றாள். திரௌபதாதேவி தனது சபதத்தை முடித்துக் கொண்டு வாது முடித்து தீமிதிப்பதை நினைவு கூறுவதாகவும், அம்மனுக்கு தீமிப்பு விழா திருப்தி மிக்கதாகவும் சிறப்புக்குரிய விழா வாகவும் அமைந்து விடுகின்றது. அது போல் அடியவர்களும் தீமிதித்து தெய்வத்தின் மீது தமது பக்தியைக் காட்டுவதற்காக தீமிதிப்பாகிய பூமிதிப்பு நடத்தப்படுகிறது எனலாம்.

தீமிதிப்பு விழாவில் கரகம் பாலித்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கரகம் எடுப்பவர் விழாவின் கதாநாயகனாகவும் பாண்டவர் பத்தினி பாஞ்சாலியாகவும் மதிக்கப்படுகின்றார். மேலும் உட்கொடிறேற்றம், வெளிக்கொடி ஏற்றம், கரகம் பாலித்தலுடன் தொடர்பு கொண்டவையாகும். பதினெட்டு நாள் விழாவில் ஒன்றைவிட்டு ஒரு நாள் கரகம் பாலித்தல் இரவு வேளைகளில் நடந்தேறி பதினெட்டாவது நாள் காலை கரகம் எடுப்பவர் அக்கினிச் சட்டி எடுத்து திருக்கோயிலின் முன்னேயுள்ள தீக்கிடங்கில் வைத்து புளியங்கட்டைகளால் தீமூட்டி பாரதக் கதையினை பாராயணம் செய்து பாஞ்சாலி பலி தீர்த்தலுடன் வாது முடித்து மாலை வேளை தீமிப்பு விழா நடைபெறும். முதன் முதலில் கரகம் எடுப்பவரே தீயில் நடனமாடுவார். ஆரம்ப காலத்தில் கரகம் எடுப்பவராக ஊரவர்களே இருந்தனர். பிற்காலத்தில் கோயிலில் மாலைகள் கட்டுவித்த பண்டார வம்சத்தினர் பூசைக் கடமைகளைப் பொறுப்பேற்றனர். இன்றும் அதாவது பண்டார வம்சத்தைச் சேர்ந்த பூசாரிமார்களின் தலைமுறையினர் அக் கடமையைச் செய்துவருகின்றனர். அதன்வழி முறையில் சொக்கலிங்கப் பூசாரி, முத்தையா பூசாரி அவர் மகன் பரந்தாமன் பூசாரி போன்றவர்களாவர். இவ்விழா இவ்வூர் மக்களின் மரபு ரீதியான விழாவாகும். பொதுவாக பாரதக் கதையில் வரும் முக்கிய நிகழ்வுகளை காட்சிப்படுத்தி மக்கள் பயபக்தியுடன் கொண்டாடி வருகின்றனர்.

பதினெட்டு நாள் விழாவாக வடிவமைத்துக் கொண்டாடி வருகின்ற இவ்விழாவினை உடப்பு மக்கள் அன்று தங்கள் பொருளாதார சமூக நலன் கருதி சித்திரைமாதம் கொண்டாடும் விழாவினை மாற்றி பன்னெடுங் காலமாகவும் இன்றும் தெய்வங்களுக்குரித்தான ஆடி மாதத்தில் கொண்டாடத் தீர்மானித்து இவ்விழாவுக்கு ஆடித் திருவிழா என நாமம் வழங்கி கொண்டாடி வருகின்றனர். அதாவது ஆடி அமாவாசையின் முதல் ஞாயிறு அன்று உட்கொடி ஏற்றத்துடன் (அரவக் கொடி கௌர

வருக்குரியது) ஆரம்பித்து ஐந்தாம் நாள் வெளிக் கொடி (அனுமன்கொடி பாண்டவர்க்குரியது) ஏற்றப்படும். இந்நாளிலிருந்து மகா பாரதக் கதை பாராயணம் செய்யப்படும். பதினெட்டாவது நாள் போர்க் களம். (துரியோதனன் - பீமன்) ஸ்ரீ திரௌபதா தேவியம்மன் பலி தீர்த்தல், விரித்த கூந்தல் முடித்தல். பின்பு தீ மிதிப்பு விழா கொண்டாடப்படும். இவ்விழாவுக்கு மெருகூட்டுவதும் இன்றியமையாததும் கரகம் பாலித்தல் வைபவம் சிறப்பு நிகழ்ச்சியாகும். அருள் பெற்ற கரகம் மத்தளம் கைத்தளம் அடித்து காவியங்கள் பாட கோவிந்த நாம சங்கீர்த்தனத்துடன் மக்கள்வெள்ளம் வானைப் பிளக்க ஒலித்து மாரியம்மன் ஆலயம் சென்று அருள் பெற்று காளியம்மன் கோயிலில் வரம் பெற்று மீண்டும் ஸ்ரீ திரௌபதாதேவியம்மன் முன்றிலமைக்கப்பட்ட தீக்கிடங்கில் கரகம் முதல் காலடி பதிக்க தொடர்ந்து ஏனைய பக்தர்கள் நடனமாடுவர். அன்று தொடக்கம் இன்று வரை இவ்விழா வருடாவருடம் ஆடி அமாவாசைக் காலத்தில் ஆரம்பித்து பதினெட்டாம் நாள் தீமிதிப்பு வைபவம் முடிந்து பத்தொன்பதாம் நாள் பாண்டு தலைவன் தருமருக்கு பட்டாபிஷேகம் முடித்து கொடி இறக்கும் வைபவம் நிறைவுபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

முன்னீஸ்வர தேவஸ்தானத்திற்கும் உடப்பூருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததால் முன்னீஸ்வரக் கோயில் மரபுகளில் பல, ஆடித் திருவிழா நிகழ்ச்சிகளில் முத்திரை பதிந்துள்ளது. உடப்பூரில் 1908ம் ஆண்டு கும்பாபிஷேகத்திற்குப் பின்பே ஆகம முறையைப் பின்பற்றி கொடி ஏற்றும் முறை ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். துரியோதனனுக் குரிய அரவக் கொடியை பூசகர் ஏற்றுவார். நீண்ட கொடிச்சீலை, தரப்பைக் கயிறு, தர்ப்பைப் புல், அங்கு நடக்கும் கிரியை முறைகளைப் பார்க்கும் போது அதில் பிராமணச் செல்வாக்கு தெளிவாகத் தெரிகிறது. இங்கு மூல மூர்த்திக்கு கொடி ஏற்றப்படுவதில்லை. போருக்கான கொடி என்ற கருத்துடனே ஏற்றப்படுகிறது.

ஆடித்திருவிழாக் காலங்களில் உதயப் பொழுதில் விநாயகர் வீதி வலம் நடைபெறுகிறது. முன்னீஸ்வரத்திலும் இவ்வாறாக சூரிய உதயத்தில் சோமஸ்கந்த மூர்த்தி வலம் வரும் நிகழ்வு இடம்பெறுகின்றது. சைவ ஆலயங்களில் அபிஷேகம், நைவேத்தியம், தீபாராதனை, வேத தோத்திரங் கள் பாடி ஆசீர்வாதம் செய்த பின்பே சுவாமி வீதி வலம் வர வேண்டும். அடியார்களுக்கு அனுக்கிரகம் பண்ணுவதே வீதி வலம் வருவதின்

நோக்கமாகும். உடப்பில் ஒற்றைத் தீபம் காட்டிய பின் பிள்ளையார் வீதி வலம் வருதல் முன்னீஸ்வரத்தைப் பின்பற்றியே எனலாம்.

முன்னீஸ்வரத்தில் மகோற்சவ காலத்தில் சிங்களக் கலைஞர்கள் தம்பட்டம் (நாட்டுப்பறை) அடித்தல் மரபாக உள்ளது. அக்கோயிலுக்கு பல சிங்களக் கிராமத்தவர்கள் உபயகாரர்களாக உள்ளனர். ஒன்பதாம் பராக்கிரமபாகு பல நில மானியங்களைக் கொடுத்துள்ளார். சிங்களக் கலாச்சாரத் தொடர்பும் அதிகமாக உள்ளது. ஆனால் எதுவித சிங்களத் தொடர்பும் அற்ற உடப்பூர் ஆடித்திருவிழாவில் தம்பட்டம் அடிக்கும் மரபு முன்னீஸ்வரத்தைப் பின்பற்றியதேயாகும். அதுபோலவே முன்னேஸ்வர இறுதி நாள் சுவாமி ஊர்வலத்தில் கரகாட்டம், காவடி யாட்டம், மயிலாட்டம் போன்ற இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவதுபோல அண்மைக் காலம் தொட்டு ஆடித்திருவிழாவின் இறுதிநாளான அம்பாள் ஊர்வலத்தின் போதும் இவ்வாறான இசை நிகழ்ச்சிகளைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆடித்திருவிழாக் காலத்தில் மகாபாரத அம்மானைப் படிப்பு மரபு முறையாக நடைபெறுகிறது. அதைப் பூசகர் மரபினரே பாடி வந்துள்ளார். சொக்கலிங்கப் பூசகர் காலத்திலேயே கதைப்படிப்பு ஆரம்பித்திருக்க வேண்டும். அஷ்டாவதானம் க.இராமசாமிப்பிள்ளை 1903ம் ஆண்டில் பதிப்பித்த மகாபாரத அம்மானை முதலாம் பாகம், இரண்டாம் பாகங்களி லிருந்தே பாடல்களும், கதைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் மாரியம்மன் கோயில் பூசகர் இதை இணைத்து 1929ம் ஆண்டு உடப்பு திரௌபதை அம்மன் மான்மியம் என்னும் நூலையும் பதிப்பித்துள்ளார்.

ஸ்ரீ திரௌபதாதேவியம்மன் ஆலயம் கால ஓட்டத்தில் திருக் கோயில் திருப்பணிகள் நிகழ்ந்த வண்ணமே இருந்துள்ளன. இது 1917ம் ஆண்டு களில் கருவறையுடன் அர்த்த மண்டபமும் ஏனைய பகுதிகள் திறந்த மண்டபங்களாக செங்கற்களால் கட்டப்பட்டன. இவ்வாலயத்தில் சந்தனக் கட்டையினாலான ஸ்ரீ திரௌபதையம்மன் சிலை அகற்றப்பட்டு 1929ம் ஆண்டுகளில் கருங் கல்லினால் செதுக்கப்பட்ட ஸ்ரீ திரௌபதையம்மன் சிலை பிதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. திரௌபதாதேவியின் சந்தனச் சிலை முந்தல் ஊரவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அன்றும் மூலமூர்த்தியாக கருவறை நாயகியாக ஸ்ரீ திரௌபதையம்மனே காட்சி கொடுத்து வந்துள்ளார்.

இக்காலகட்டத்தில் கிருஷ்ணன் என்னும் சிற்பாசிரியனால் திரௌபதை அம்மன் கோயில் ராஜ கோபுரம் சீமேந்தினால் கட்டப்பட்டது. அதில் திருமாலின் பத்து அவதாரங்களும், மிகத் தத்துரூபமாக அமைக்கப் பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும். மகா மண்டபத்தில் முத்தாலராஜன், போஜராஜன் ஆகியோரது சிற்பம் சாந்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அருச்சுனனின் பேரனாகிய சுணீதமன்னன் செய்த தவப்பேறால் திரௌபதி யாகாக்கினியில் இரண்டாம் முறையாகத் தோன்றி அசிலோமன் என்ற அரக்கனை சங்காரம் செய்த போது இருவரும் தளபதியாக இருந்தவர்கள் என கூறப்படுகிறது. இக்கருத்து திரௌபதி மான்மியத்திலும் உள்ளது. ஆனால் சாதாரண மக்களது கதை, மரபில் அவ்விருவரும் முத்தாலராவுத்தர், பட்டாணி சாய்பு என்று கூறப்படுகிறது.

அண்மைக் காலம் வரைக்கும் திருவிழா உபயங்கள் பல சாதி யினருக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளது. வீமன்சட்டி, பானை உருட்டும் கதைபடிக்கும் நாள் குயவருக்கும்; மாலையிடும் நாள் உபயம் பூசகர் குடும்பத்தினருக்கும்; திருக்கல்யாண உபயம் பொற்கொல்லர்களுக்கும்; துகிலுரிதல் உபயம் சலவைத் தொழிலாளருக்கும் வழங்கப்பட்டிருந்தது. இன்று ஊரவர்கள் எல்லோருக்கும் உபயங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் வணக்கத்துக்குரிய ஸ்ரீ திரௌபதையம்மன் கருங்கல் சிலை யில் ஒருகால் கையிலமைந்த தாமரை மொட்டில் அப்பளுக் கேற்பட்டது. வடிவிற்கு வடிவான அழகிய சிலையினை மாற்றி புதிய சிலையினை பிரதிஷ்ட செய்தனர். அதுவே இன்றுள்ள சிலையாகும். திருக்கோயில் திருப்பணியை ஊர் மக்கள் ஆர்வம் கொண்ட பொற்காலம் 1945-1947ம் ஆண்டுகளிலேயாகும். கோயில் தென்னிந்திய சிற்பாசாரிகளான சின்னையா ஆசாரி சிதம்பரம் ஆசாரி சுவாமி நாதன் ஆசாரி போன்ற வர்களால் முழுமையான மாற்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்றிருக்கும் பின் கோபுரச் சாயலை ஒத்ததாகவே வடிவமைக்கப் பட்டது. கோயிற் கட்டிடங்கள் சிற்பசாஸ்த்திர அடிப்படையில் மூன்று வகை சார்ந்தவை. 1. நாகரம் - வட இந்திய முறை 2. வேசரம் - பௌத்த மத சாயல். 3. திராவிடம் - விந்திய மலைக்கு தென் புறக் கலை எனப்படும். திராவிடப் பண்பாட்டை மெய்ப்பிக்கும் வடிவில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஏனைய பகுதிகள் ஒரே மண்டபமாக சிறிய

முன் கோபுரத்துடன் உருகாக்கப்பட்டது. கருவறையும் அர்த்த மண்டபமும் இணைத்து 17 அடிகள் அகலமும் 27 அடிகள் நீளமும் அத்திவாரத்தின் மேல் 15 அடிகள் உயரத்திற்கு வரிவடிவங்களுடன் வியாழ மட்டம் அமைக்கப்பட்டுள்ளது. வியாழ மட்டத்தில் வலது புறம் இராமர் இலக்குமணன், சீதாதேவி போன்றவரின் சிற்பங்களும் அருகில் குரங்கும் குரங்காட்டியும் இடது புறத்தில் காளியம்மன், மகுடா சூரனை சிங்கத்தின் மீதிருந்து வதை செய்யும் காட்சியும், அருகில் பாம்பும் பாம்பாட்டியும் வடிவமைக்கப்பட்டுள்ளன. கருவறைக் கோபுரம் குமிழ் வடிவிலமைந்து ஒற்றைக் கலசத்துடன் காட்சியளிக்கின்றது. கோபுரத்தின் முதல் தளத்தில் நான்கு மூலைகளிலும் விளக்கேந்திய பெண் பொம்மைகளும் வடக்கு வலதுபுறம் புல்லாங்குழலுடன் நந்தகோபாலன் எதிரே யசோதை அருகே ஸ்ரீ கிருஸ்ணனுடன் பஞ்சபாண்டவர்களும் அடுத்து தீயில் தவம் புரியும் முனிவரும் மோகினியின் நடனக் காட்சியும் வடிவமைக்கப்பட்டுள்ளன. வலது புற இரண்டாம் தளத்தில் அல்லி ராணியும் எதிரே அருட்ச்சுணனும், மூன்றாம் தளத்தில் திருமால் புல்லாங்குழல் மீட்ட பசுவும் கன்றுகளும் இரசிப்பது போன்று பொம்மைகள் காட்சியளிக்கின்றன. குமிழ் வடிவான பண்டிகையின் மேல் தளத்தில் பூமாலைகளுடன் இணைந்த நான்கு சிறுவர்களும் சீறுமிகளும் கோபுரத்தை மென்மேலும் சிறப்படையச் செய்துள்ளன.

மேற்குப்புறக் கோபுரத்தின் முதல் தளத்தில் கண்ணன் ஐந்து தலை நாகத்தில் சையனத்தில் இருக்க ருக்குமணி சத்தியபாமா அருகிலிருக்க அதன் இரு பக்கங்களும் கருடன் நாரதர் அதே வரிசையில் வலது புறம் சிவனும் சந்திரனும் இடது புறம் சூரியனும் பிரமாவும் வடிவமைத்துள்ளன. இரண்டாம் தளத்தில் சிங்கத்துடன் போரிடும் வீரர்களும் மூன்றாம் தளத்தில் ஸ்ரீ திரௌபதாதேவியம்மன் இருந்த பாவனையில் அருகில் சேடிப்பெண்கள் சாமரை வீசும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தின் வடபுறம் ஐந்து தலை நாகத்தின் தலை மீது பாலகிருஷ்ணர் நடனமாடும் காட்சியும் யசோதரை ஆச்சரியத்துடன் பார்க்கும் நிலையும், மரநிழலில் இராதாகிருஷ்ண வடிவமும், அருகே இளைய கோபாலன் கோவர்த்தன கிரியைச் சுட்டு விரலால் தாங்கிய வண்ணம் நிற்கும் காட்சி யும், பெண் ஒருவர் பொங்கல் செய்யும் பொம்மைகளும். இரண்டாம் தளத்தில் வில்லுடன் அருட்ச்சுணனும் கிளியுடன் திரௌபதாதேவியும்

வடிவமைக்கப்பட்டதோடு, மூன்றாம் தளத்தில் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதர் வடிவங்களும் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றன.

கோபுரத்தின் கிழக்குப் புறம் முதல் தளத்தில் கையில் கிளியுடன் கூடிய திரௌபதாதேவியம்மனும், இரண்டாம் தளத்தில் அனுமனும் வாலியும் மூன்றாம் தளத்தில் மலர் மொட்டுடன் அமைந்த திரௌபாததேவி சேடிகளுடன் கூடிய பொம்மைகள் யாவும் உயிரோட்டமும், நேர்த்தி மிக்க தன்மையும் பார்ப்பவரின் மனதுக்கும் கண்களுக்கும் இனிமை தரும் காட்சிகளாகும்.

பத்து அடிகள் வாயில் கொண்ட முன் கோபுரத்தில் முதல் தளத்தில் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதர் சிற்பங்கள் வீற்றிருக்க இரு மருங்கிலும் தசாவதாரங்கள் வடிவமைக்கப்பட்டு இரண்டாந் தளத்தில் மத்தியில் ஸ்ரீ திரௌபதாதேவியும், பஞ்சபாண்டவர்களும் அவர்கள் தாயார் குந்திதேவியாரும் வண்ணக் காட்சியாக வடிவமைத்து அடிவாரத்தில் வலது பக்கத்தில் பிள்ளையார் சிற்பமும், இடது பக்கத்தில் முருகப்பெருமானும் வாயிலில் துவாரபாலகர்கள் கம்பீரமாக உயிரோட்டமுள்ளதாக உருவாக்கப்பட்டுக் காட்சி கொடுக்கப்படுகின்றன. இன்று இவ்விடத்தில் நவதள இராஜ கோபுரம் வானளாவ வளர்ந்து காட்சியளிக்கிறது.

நீண்ட காலத்தின் பின் 1950ம் ஆண்டில் திரௌபதை அம்மன் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வந்த சின்னையா ஆசாரி, சிதம்பரம் ஆசாரி ஆகியோர் கோயிலைக் கட்டினார்கள். திருக்கோயில் அமைக்கப்பட்ட போதிலும் 1950 ம் ஆண்டுகளில் உடப்பு வாழ் மக்களிடையே நெருக்கடியான காலமாகக் கருதலாம். அதாவது மூல மூர்த்தியினை வைப்பதில் முடிவெடுக்க வேண்டிய காலக் கட்டமாகும். ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமாவை மூலமூர்த்தியாக வைப்பதா? அல்லது ஸ்ரீ திரௌபதாதேவியினை மூலமூர்த்தியாக வைப்பதா? எனத் தீர்மானிப்பதில் மக்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்த முடியாது தவித்த காலமாகும். இதனால் ஊர் பொது மக்கள் பெரியவர்கள் பிராமணர்கள் ஒன்று கூடி ஓர் முடிவுக்கு வந்தனர். முடிவில் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தனர். முடிவு ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்திய பாமாவே மூலமூர்த்தியாக இருக்க இறைவன் தீர்ப்பானது. இதனடிப் படையில் இன்று இவ்வாலயம் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா

சமேதர், ஸ்ரீ திரௌபதா தேவியம்மன் ஆலயம் என அழைக்கப்பட்டு கருவறையில் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்திய பாமாவும் அர்த்த மண்டபத்தின் இடது புறம் ஸ்ரீ திரௌபதா தேவியம்மனும் பிரதிஷ்டை செய்து 1950-04-17 ம் திகதியன்று மஹா கும்பாபிஷேகம் முன்னேஸ்வர முன்னைநாதப் பெருமான் ஆலய பிரதம குருக்கள் பிரமஸ்ரீ கைலாசநாதர் குருக்கள் தலைமையில் பிரமஸ்ரீ குமாரசாமி குருக்கள் ஆலய பிதான குருவாக இருந்து நடந்தேறியது.

இங்கு 1954ம் ஆண்டுகளில் முன் கோபுரத்துக்கான திருப்பணி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஸ்தபதி சுவாமி நாத ஆசாரி அவர்களால் உயிரோட்டமுள்ள சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன. 1961ம் ஆண்டில் அஷ்டபந்தனம் கழன்று சிலைகள் ஆடிக்கொண்டிருந்த தால் புதிதாக அஷ்டபந்தனம் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. சைவ சித்தாந்தத் தத்துவத்தின் படி கோயிகளின் புனரமைப்புப் பணிகள் பண்ணிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மஹா கும்பாபிஷேகம் நடாத்தப்படுதல் வேண்டும். அதனடிப்படையிலும் 1961-11-27ம் திகதிகளில் முன்னேஸ்வரம் பிரமஸ்ரீ மாப்பிள்ளைக் குருகள்களால் மஹா கும்பாபிஷேகம் நடந்தேறியது.

இவ்வாலயம் 1973ம் ஆண்டுகளின் பின்பு கோயில் திருப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனியான திருப்பணி சபை உருவாக்கப்பட்டது. 1974ல் மதுரையிலிருந்து சங்கிலி, சௌந்தரிபாண்டி என்பவர்களைக் கொண்டு கோயிலைத் திருத்தி மகா மண்டபம் புதிதாக கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. முன்னுள்ள பின்னுள்ள கோபுரங்கள் மீள புனரமைத்து சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டு புதிய மஹா மண்டபம், தரிசன மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டன. இவ்வாறான நடைமுறைத் திட்டத்துக்கு தென்னிந்திய ஸ்தபதிகளான சங்கியன், சுந்தரபாண்டியன் போன்றோர் வரவழைக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நிறைவடைந்தது. மேலும் 1974-02-06ம் திகதிகளில் பிரமஸ்ரீ விசுவநாதக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவு பெற்றது.

இங்கு 1975ம் ஆண்டுகளின் பின்பு திருப்பணிக் கடமைகள் பெரியளவிலான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. 1979-80 ம் ஆண்டு களில் வசந்த மண்டபத்துக்கான வேலைத்திட்டம் ஸ்தபதி நாகலிங்க

ஆசாரியால் நிறைவு பெற்று மஹா மண்டபத்தில் நடந்த வசந்த மண்டபப் பூசைகள் இக்காலத்திலிருந்து வசந்த மண்டபத்தில் நடைபெற வாய்ப்புக்கள் கிட்டியது.

இங்கு 1991ம் ஆண்டுகளில் உள் வீதிக்கான வேலைத் திட்டங்களை இக் காலத்து இந்து ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டனர். இது ஓர் பாரிய திருப்பணியாகும். இவ் வேலைத் திட்டம் 1994 ம் ஆண்டு களில் நிறைவு பெற்றது. அதாவது கோபுர ஆலஞ் சுவர்கள் அமைக்கப் பட்டு குறைபாட்டுக்குரிய சிற்பங்கள் நிறைவு பெற்று நவக்கிரகம், சூரியன், ஆஞ்சநேயர் சிலைகள் அமைக்கப்பட்டு மதுரை சந்தானம் ஆசாரியின் தலைமையில் வர்ணம் தீட்டப்பட்டு 1994-06-27ம் திகதிகளில் மஹா கும்பாபிஷேகம் பிரமஸ்ரீ விசுவநாதர் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பான முறையில் நிறைவெய்தியது.

இவ்வாலயத்தில் 1994ம் ஆண்டுகளிலிருந்து முதன்முதலில் ஸ்ரீ நாராயணப் பெருமாளுக்கான பிரமோற்சவத் திருவிழா ஊர் மக்கள் அனுசரனையுடன் இறை அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றது. பத்து நாட்கள் நடைபெறும் இவ்விழா கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பெருமாளின் வேட்டைத் திருவிழா, தேர் திருவிழா, தீர்த்தத் திருவிழா முக்கியத்துவம் பெறுகின்றன. இக்காலத்திலிருந்து தரிசன மண்டபத்தில் ஸ்ரீ திரௌபதையம்மனுக்கும் ஸ்ரீநாராயணப் பெருமாளுக்கும் என இரு கொடிஸ்தம்பங்கள் இவ்வாலயத்தில் ஏற்படுத்தப்பட்டன. மேலும் கட்டுத் தேர் களியாட்டம் பிரபல்யம் பெற்றமையுடன் 2000ம் ஆண்டுகளில் ஊர் மக்கள் மெய்யடியார்களின் அயராத ஊக்கத்தால் திரு எம். மேகநாதன் சிற்பியின் குழுவினர்களால் சித்திரத் தேர் புதிதாக உருவாக்கப்பட்டு இவ்வாலயத்தில் ஒவ்வொரு மார்கழி மாதமும் ஒன்பதாம் நாள் திருவிழா வன்று ஸ்ரீ கண்ணன் தேரோட்டம் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்து பத்தாவது நாள் இந்து மாகடலில் தீர்த்தத் திருவிழாவும், மஹோற்சவத் திருவிழாவின் பெருமைக்கு முத்திரையிட்டு சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருவதை உணர முடிகின்றது. இதே விழாவுடன் அதாவது மார்கழி மாதத்தில் திருப்பாவை நோன்பு ஆரம்பிக்கப்பட்டு அதிகாலையில் பெண்கள் அணி புடைசூழ திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுவது ஆரம்பம் தொட்டே இருந்து வருகின்றன. இன்று அதன் விருச்சம் விரிவடைந்துள்ளமையை காணலாம். மேலும் மஹோற்சவத் திருவிழாவில்

வைகுந்த ஏகாதசி விரதமும், சொர்க்க வாயில் திறப்பு விழாவும் சிறப்பம் சங்களாகும். உற்சவ மூர்த்தியாக ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதர் எழுந்தருளி சிலையாக பற்பல அலங்கார வாகனங்களில் கோயில் ஊர் வலங்கள் இடம் பெறுகின்றன.

இதுவரை ஆலயத்தின் படிமுறையான மாற்றங்களை அவதானிக்க முடிகின்றன. கருவறை அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம், வசந்த மண்டபம், போன்ற மண்டபங்கள் நிறைவு பெற்றிருந்தன. திருப்பணி வேலைத் திட்டங்கள் தெய்வ கடாட்சத்துடன் நிறைவு பெற இவ்வூர் மக்களின் உழைப்பும் உதவியும் சாலச் சிறந்த ஊக்கமும் பொறுப் புணர்ச்சியுடன் ஈடுபட்ட தர்ம கர்த்தா சபைகளின் மகத்தான சேவை களாகும். தர்ம கர்த்தா சபைகள் ஊர் மக்களால் ஆரம்ப காலத்திலிருந்து முச்சந்திகளிலும் பிற்பட்ட காலத்தில் திருக்கோயில் முன்றிலும் ஒன்று கூடி வயது தகமை அடிப்படையில் தெரிவு செய்து தொண்டு முறையாக செயற்குழுவினை உருவாக்கிவந்துள்ளனர். வருடாவருடம் செயற்குழு புதிதாக தெரிவு செய்யப்படும். இச்சபையானது இன்று இந்து ஆலய பரிபாலன சபை என அழைக்கப்படுகின்றது. இச்சபையே திருக்கோயில் பணிகளைச் செய்வதோடு ஊரின் சமூகப்பணிகளையும் மேற்கொண்டு வரும் சபையாகும். மேலும் இலங்கையின் இந்து கலாசார அமைச் சினால் அங்கீகரிக்கப்பட்ட சபையாகும்.

உடப்பு திருக்கோயில் காணிகள் ஆரம்ப காலத்தில் குடியிருந்த மக்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று வரைக்கும் திருக்கோயில் காணியாகவே இருந்து அதற்கான பதிவுகள் இந்து ஆலய பரிபாலன சபையினுக்கு உடமையாக்கப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக உடப்பு ஊர் மக்களின் நிருவாகத்திலும் அதிகாரத்திலும் இங்குள்ள ஆலயங்கள் வழி நடாத்தப்பட்டு வருவது சிறப்பமிசமாகும். இவ்வாலயங் களான ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதர், ஸ்ரீ திரௌபதா தேவியம்மன் கோயில். ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் கோயில். ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில், ஸ்ரீ கந்தசாமி கோயில், ஸ்ரீ நாகதம்பிரான் கோயில் போன்றன இந்து ஆலய பரிபாலன சபையின் நிருவாகத்துக்குட்பட்டன வாகும்.

திரௌபதை அம்மன் கோயிலில் முதல் பிராமணக் குருக்களாக பஞ்சவர் என்பவர் இருந்ததாகப் பெரியோர்கள் கூறுகிறார்கள். இவர்

அண்மைக் காலத்திலிருந்த குமாரசுவாமிக் குருக்களின் தந்தையாராவார். இவருக்குப் பின் செல்லப்பாக் குருக்கள் அர்ச்சகராக இருந்துள்ளார். இவர் காலத்திலேயே மாரியம்மன் கோயிலில் சொக்கலிங்கப் பூசகர் அர்ச்சகராக இருந்துள்ளார். இதன் பின் நடேச ஐயரும், நீண்ட காலமாக குமாரசுவாமிக் குருக்களும், விக்னேஷ்வரக் குருக்களும், அதன் பின் ஸ்ரீநிவாசக் குருக்களும், சிவஸ்ரீ பத்ம ஜெயராம் குருக்களும், தற்போது சிவஸ்ரீ பஞ்ச்சாச்சர குருக்கள் அர்ச்சகராக கடமையாற்றுகின்றனர்.

இது ஒரு தமிழ்க் கிராமம் என்பதற்கு அப்பால் இன்னும் சில விசேஷங் களும் இங்கே காணப்படுகின்றன. இலங்கையிலேயே திரௌபதை அம்மனுக்கு மிகப் பெரிய ஆலயம் இங்கேயே அமைந்துள்ளது என்பதா? அல்லது மேல்நிலையாக்கம் காரணமாக திரௌபதி அம்மனைப் புறந்தள்ளி ஸ்ரீ பார்த்த சாரதி பெருமாள் ஆலயமாக மாறியுள்ளதா? என்ற கேள்விகள் ஆய்வாளர்கள் மத்தியில் எழுந்துள்ளதைக் காணலாம். இதற்கு புதிது புதிதாக அறிமுகமாகும் திருவிழாக்களும், மரபுகளை புறந்தள்ளும் செயல்களும் சான்றாக அமைவதைக் குறிப்பிடலாம். இந்து ஆலய பரிபாலன சபையே ஊர் பொது விவகாரங்களை நிர்ணயிக்கிறது. முடிவு களை எடுத்து அமுல் செய்கிறது. இப்பரிபாலன சபையின் கட்டுப்பாடு களையும், ஒழுங்கு விதிகளையும் மக்கள் மீறுவதில்லை. இக்கட்டுப்பாடு களும், ஒழுங்கு விதிகளும் பல ஆக்கபூர்வமான காரியங்களை இங்கே நடத்திக் காட்டியிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராஜ கோபுரம்

இலங்கை நாட்டின் வட மேல் கரையின் புத்தளம் மாவட்டத்தின் உடப்புக் கிராமத்தின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள் புத்தொளி மிக்க பொன்னாள், ஊர் மக்களின் ஏகோபித்த முடிவும் ஒருமித்த குரலும் ஒருங்கிணைந்து நவதள இராஜ கோபுரம் அமைப்போம் என ஓங்கி ஒலித்த அந்நாளாகும். அதன் அடிப்படை வேலைத் திட்டத்தை ஆனித்தரமாக மேற் கொள்வதற்கும் நிருவகிப்பதற்கும் தனித்துவமான திருப்பணி சபை உருவாக்கப்பட்டு 108 அடி நவதள இராஜ கோபுரத் துக்கான கல் நாட்டு விழா 2006-02-10ம் திகதிகளில் வெள்ளிக் கிழமை காலை 7.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுப வேளையில் நடந்தேறி முடிவுற்றது. முதல் கல்லினை சிவஸ்ரீ விசுவநாதர் குருக்கள்

பிரமஸ்ரீ மணி சினிவாசக் குருக்கள் போன்றோர் வைத்து ஆரம்பித்தார்கள். தொடர்ந்து திருப்பணி சபைத் தலைவர் பிரமுகர்கள் உள்ளூர் வெளியூர் மக்கள் யாவரும் பயபக்தியுடன் தட்சணை வழங்கி விழாவைச் சிறப்பித் தனர். இவ்வேலைத் திட்டம் ஸ்தபதி எஸ். சத்திவேல் ஆசாரி குழுவினர் பொறுப்பேற்று நடாத்தி வந்து புதுப் பொலிவுடன் வேலைத்திட்டம் இனிது நிறைவு பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூபா ஆறு கோடிகள் என தீர்மானிக்கப்பட்டது. கோபுரத்தின் அத்திவாரம் மூன்றடி ஆழத்தில் ஐம்பத்தைந்து அடி அகலத்தில் முப்பத்தைந்தடி நீளத்தில் வலைப்பின்னல் வடிவில் நான்கு தட்டுகளுக்கு கொங்ரீட் அமைத்து ஐந்தாவது தட்டிலிருந்து பதினாறு தூண்கள் உயர்த்தி படிமுறையாகச் சென்று நான்கு தூண்களே 108 அடியினை நிறைவு செய்து ஒன்பது கலசங்களுடன் இன்று நவதள இராஜ கோபுரமாக காட்சி கொடுக்கின்றது.

ஊர் மக்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் வெளியூர் அன்பர்களின் நல்லாசியும் அருங் கொடைகளும் நவதள இராஜ கோபுரத்தின் செயற் றிட்டத்தினை 2007 ம் ஆண்டுகளில் வியாழ மட்டம் வரையும் வளர்ச்சி யடையச் செய்தது. இவ்வளர்ச்சி மஹா கும்பாபிஷேகத்துக்கு வித்திட்டுக் கொடுத்தது. இதன் பெறுபேறாக 2007-01-28 ம் திகதிகளில் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த பாரத இதிகாசத்தைக் கொண்ட தீ மிதிப்பு என்னும் பூமிதிப்பு உச்சவத்தினையும், வைகுண்ட ஏகாதசியில் தேரோட்டம் தீர்த்தம் காணும் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்திய பாமா சமேதர் ஸ்ரீ திரௌபதாதேவியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இனிது நடந்தேறி நிறைவு பெற்றது.

பொதுவாக இராஜ கோபுரங்கள் கட்டிவிக்கும் திருப்பணி விஜய நகர அரசர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன. இதனடிப்படையில் எமது ஊரிலும் இராஜ கோபுரப் பணி தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இதனால் உடப்பு ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்திய பாமா சமேதர் ஸ்ரீ திரௌபதாதேவி அம்மன் ஆலயம் முழுமை பெறும் ஆலயமாகும். அதாவது மூலஸ்தான மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், வசந்த மண்டபம், சபா மண்டபம், இராஜ கோபுரம் என ஏழு மண்டபங்களைக் கொண்டுள்ளன எனலாம். திருக்கோயில் மூலஸ்தானத்திலிருந்து மேற்கு கிழக்கு முகமாக 125 அடிகள் நீளமும் பதினொரு அடிகள் இராஜ கோபுர வாயிலில்

முடிவடைகின்றது. இன்று இவ்வாலயம் 150அடிகள் நீளமும் 95 அடிகள் அகலமுமிக்க பரப்பினைக் கொண்டமைந்துள்ளது.

இன்று நவதள 108 அடிகள் இராஜ கோபுரத்தின் திருப்பணிகளில் ஒன்பது தளங்களுக்கான வேலைத் திட்டமும் முடிவெய்தியுள்ளன. மேலும் சிற்பங்கள் வர்ணங்கள் கொடுக்கும் வேலைத் திட்டத்தினை உள்ளூர் வெளியூர் அன்பர்கள் நிறைவேற்றி உள்ளனர். அதன் பெறுபேறாக இன்று நவதள 108 அடிகள் இராஜ கோபுரம் முழு நிறைவு பெற்றுள்ளது. ஒன்பதாம் தளத்தில் ஒன்பது கலசங்கள் நிருமானித்தமைத்து ஒவ்வொரு தளத்திற்கும் ஒவ்வொரு தள வாயில்களில் கிழக்கிலும் மேற்கிலும் இரு துவாரபாலகர்கள் நின்ற பாவனையில் பல்வேறு நிலையில் கவின்கலைச் சிற்பங்களாக உயிரோட்டமுள்ள முப்பத்தாறு பொம்மைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன. இது போல் வடக்கிலும் தெற்கிலும் ஒன்பது தளங்களிலும் ஒன்பது அம்மன்கள் பதினெட்டினை வடிவமைத்துள்ளனர். வியாழ மட்டத்தில் திருக்கோயிலின் முறப்பகுதியில் மையத்தில் ஸ்ரீ ருக்குமணி சத்தியபாமா ஸ்ரீ பார்த்த சாரதி சமேதர் சிற்பங்களும், இடது பக்கத்தில் தசாவதாரமும் தொடர்ந்து நாரைக்கு முத்தி வழங்கும் காட்சியும் வடிவமைக்கப்பட்டுள்ளன. வலது பக்கத்தில் பஞ்ச பாண்டவர்களும் தொடர்ந்து திரௌபதாதேவி துகிலுரிதல் காட்சியும் வண்ணப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் நவதள இராஜ கோபுரத்தில் 108 க்கு மேலான பொம்மைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. நவதள இராஜ கோபுரத்தினை மெருகு படுத்தும் விதத்தில் ஐம்பதடி உயரத்தில் வலது புறத்தில் கான்டா மணிக்கூட்டுக் கோபுரமும் இடது புறத்தில் மணிக் கோபுரமும் பொம்மை களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது போல வசந்த மண்டபம் நிருமானிக்கப்பட்டு கோபுரத்தில் ஸ்ரீ நாராயணப் பெருமாள் சயனத்தி லிருக்கும் காட்சி வண்ணப்படுத்தப்பட்டுள்ளன. வியாழ மட்டத்தின் கீழ் பதினொரு அடிகள் உயரங்கொண்ட இரு பக்கமும் சிங்கத்துடன் கூடிய இரு துவாரபாலகர்களும் காட்சிக்குக் காட்சியாகவும் நுழை வாயிலில் வலது புறம் பதினொரு அடியில் ஸ்ரீமகா விஷ்ணுவும், இடது புறம் ஸ்ரீதிரௌபதாதேவியும் அடுத்து பத்தொன்பதரையடி உயரமும் பதினொரு அடி அகலமும் கொண்ட இரு சித்திர கதவுகள் நவகள இராஜ கோபுரத்தினை அழகு படுத்தி வலம் வருதை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. கதவுகளில் பாரதக் கதையின் இன்றியமையாச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதனை சிற்பாசாரி எம். மேகநாதன் குழுவினர் வடிவமைத்துள்ளனர்.

இன்று இவ்வாலயம் ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதர் ஸ்ரீ திரௌபதாதேவி அம்மன் ஆலயம் என்ற பெயருடன் காட்சி கொடுத்து வருகின்றது. கருவறை மூர்த்தியாக ஸ்ரீ பார்த்த சாரதி ருக்குமணி சத்தியபாமா சமேதரும் அர்த்த மண்டபத்தின் இடது பக்கத்தில் ஸ்ரீ திரௌபதாதேவி அம்மனும் மகா மண்டபத்தின் வலது புறம் விநாயகர் சந்நிதியும் இடது புறம் வேலாயுதக் கடவுள் சந்நிதியும் மேலும் தரிசன மண்டபத்தில் கருவறையைப் பார்த்த வண்ணம் முறையே கருடாள்வார் பலி பீடம் மஹோற்சவத்திற்கான கொடிஸ்த்தம்பம், ஆடித் திருவிழாவுக்கான கொடிஸ்த்தம்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. தரிசன மண்டபத்தின் இடது பக்கத்தில் நவக்கிரக சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மேல் விதானத்தில் முகப்பில் வலமிருந்து இடமாக நர்த்தன விநாயகர் துர்க்கை லக்சுமி சரஸ்வதி திருமுருகன் பொம்மைகளும்; தொடர்ந்து பாரதக் கதையினை மையப்படுத்தி வலது பக்கத்தில் தருமனுக்கு முடி சூட்டுதல், கர்ணன் தான் செய்த தர்மத்ததை தானம் செய்தல் இடது பக்கத்தில் குற்றுயிரான பீஷ்மாருக்கு அருச்சுணன் புவியைப் பிளந்து தண்ணீர் தாகம் தீர்த்தல், கீதா உபதேசம் செய்தல் போன்ற காட்சிகள் கண்கவர் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் வசந்த மண்டபத்தில் ஸ்ரீ நாராயணப்பெருமாள் ஸ்ரீ மகாலெட்சுமி திருக்கல்யாணக் காட்சியும் காணக்கிடைக்கின்றது. உயிரோட்டமான சிற்பங்களை உணர்ந்து உரு வாக்கிய பெருமை தமிழ்நாடு, திருவாரூரைச் சேர்ந்த சிற்பாசாரியார் கலைமாமணி எஸ் செந்தில் அவர்கள் ஆக்க ஊக்கத்துடன் வடிவமைத்துக் கொடுக்க அச்சிற்பங்களுக்கு ஊனும் உயிரும் கொடுத்து அதன் உண்மையை வெளிப்படுத்திய பெருமை உடப்பூர் ஓவியக் கலைமானி எஸ்.முத்துக்கிருஷ்ணன் குழுவினரையே சாரும் எனலாம். கலைஞர்கள் நிலைத்திருப்பர் என்பதை இவை உறுதி செய்துநிற்கின்றன.

நவதள 108 அடிகள் இராஜ கோபுரம் இலங்கைத் திருநாட்டின் சமாதானம் வேண்டி நிருமானிக்கப்பட்ட கோபுரமாகும். அதன் வேலைத் திட்டம் நிறைவு பெற்று நேர்த்தியான வடிவமைப்புடன் வானளாவ வளர்ந்து காட்சி கொடுக்கின்றது. இதற்கான மஹா கும்பாபிஷேகம் 24ம் ஜனவரி 2011 திகதி நடைபெற்றது. இலங்கையின் உயரமான ராஜ கோபுரங்களில் இப்போது உடப்பூர் ஸ்ரீ பார்த்தசாரதி ருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீ திரௌபதி தேவி அம்மன் ஆலய கோபுரமும் 108 அடி உயரத்தில் எழுந்து நிற்கிறது.


கும்பாபிஷேக குருமார்களாக ஆலய பிரதம குருவானவர் வேத வித்வமணி ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ பத்ம ஜெயராம் குருக்கள், நயினை நாக பூஷணியம்மன் கோவில் சிவஸ்ரீ முத்துக்குமார சுவாமி குருக்கள், மன்னார் அந்தணர் ஒன்றிய செஞ்சொற்செல்வர் பிரம்மஸ்ரீ நா. பிரபாகர சர்மா, கண்டி பிரம்மஸ்ரீ ப. ராகவசர்மா ஆகியோர் விளங்குகிறார்கள்.

இந்த ஆலயத்தினுள் நுழைந்ததும் உட்புறவேலைப்பாடுகள் மற்றும் சுவரோவியங்களில் நீங்கள் கிரங்கிப்போய்விடுவீர்கள். கிருஷ்ண திருக்கல்யாணம், பட்டாபிஷேகம், கண்ணனின் திருவிளையாடல்கள், கீதோபதேசம், பீஷ்மரின் முட்படுக்கை என பாகவத மற்றும் மகாபாரத காட்சிகள் ஓவியங்களாக சுவரெங்கும் விரிகின்றன. இவற்றை வரைந்த வர்கள் உடப்பூரைச் சேர்ந்தவர்கள் தான் என்பது வியப்பைத் தரலாம். அதுதான் உண்மை. இக்கிராமத்தைச் சேர்ந்த திரு.வி.முத்துக்கிருஷ்ணன், திரு.கே.நித்திஜெஷ்வரன், திரு.ந.முத்துக்குமார் போன்றோர் ஓவியத்தில் அதுவும் தெய்வ உருவங்களை வரையும் கலையில் இத்தனை தேர்ச்சி பெற்றவர்கள்.

இதன் பிரதான வாயில் கதவுகள் 11 கண அடி நீளமும் 19 கண அடி உயரமும் கொண்டவை. தேக்குமரத்திலான, அதி உயரமான, பிரமாண்ட மான கதவுகள், ஆலயத்தின் உள்ளே சென்றால் சுவர், கூரையெங்கும் வண்ணச் சிலைகள், கண்கவர் வேலைப்பாடுகள், சுவரோவியங்கள் என உங்களை புதிய உலகத்துக்கு மெய்சிலிர்க்கச் சிலிர்க்க அழைத்துச் செல்கின்றன. ஒரு பக்திச் சிலிர்ப்பு உடலைப் புல்லரிக்கச் செய்கிறது.

திரௌபதையம்மன் கோவிலும் அதன் பிரசித்திபெற்ற தீ மிதித்தலும் இக் கிராமத்தின் முகவரிகள். உடப்பூர் கிராமத்தின் மையக் கருவாகவும் இயக்கு சக்தியாகவும் இந்த ஆலயமே விளங்குகிறது. எனவே அவ்வப் போது இந்த ஆலயத்தில் திருப்பணிகள் இடம்பெற்று வருவது வழமை. இத் திருப்பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்த மாதிரி ராஜ கோபுரம் எழுந் துள்ளது குறிப்பிடத்தக்கது.

உடப்பூர் மக்கள் ஆரம்பகாலத்தில் கிராமியத் தெய்வங்களையே வழிபட்டு வந்துள்ளனர். கிராமிய வழிபாட்டு முறைகளையும், சடங்கு களையும் பின்பற்றினர். பிராமணச் செல்வாக்கு அதிகரிக்க ஆகம முறையிலான கிரியைகள் வழிபாடுகள் மக்களிடம் மேலோங்குகின்றன. கிராமியத் தெய்வங்களாக இருந்தவை உயர் நிலைத் தெய்வங்களாக



உடப்பூர் நூலின் அட்டைப் படமாக ஸ்ரீ திரௌபதையம்மன், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ மாரியம்மன் ஆலயங்கள்

வணங்கப்படுகின்றன. தமது ஆன்மிகத் தேவைகளையும், மறு உலகப் பெருவாழ்வையும் வேண்டி நிற்கின்றனர். மூட நம்பிக்கைகளுக்கும், பலி இடுவதற்கும் எதிரான கருத்துக்கள் வலுவடைந்துள்ளன. இன்று கோயில் களில் கூட்டுப் பிராத்தனைகளும், அறநெறிப் பாடசாலைகளும் சிறுவர் களை வழிநடத்துகின்றன.

உடப்பு வாழ் மக்கள் மேற் கூறப்பட்ட தலங்களில் இனியில்லாத பற்றும் பயமும் கொண்டு கோயிற்றிருப்பணிகளை தவறாது செய்து வருவதுடன் பக்திக்கும் சக்திகளின் சக்திக்கும் சென்றவிடமெல்லாம் மனதால் செபிக்கும் பண்புள்ளம் கொண்டவர்களாக இன்றும் வாழ்ந்து வருகின்றனர். ஐயனார் கோயிலைத் தவிர ஏனைய கோயில்களை ஊரவர் எல்லோரும், அங்கம் வகிக்கும் இந்து ஆலய பரிபாலன சபையே நிர்வகிக்கின்றது. மக்களின் வரிப்பணத்தாலும், கோயிலுக்குரிய தென்னந் தோட்ட வருமானத்தாலும் செலவுகள் செய்யப்படுகின்றன. இச்சபையினர் ஊர்மக்களின் சமூக வளர்ச்சிக்கும், கல்வி முன்னேற்றத்துக்கும் பங்களிப்பு செய்து வருகின்றனர். அவர்களது செயற்பாடுகள் பல துறையிலும் விரிவடைந்து. உடப்பூரை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல உதவி வருகின்றது எனலாம்.

# 4

# ஈடில்லாத் தொழில்கள்

உடப்பூர் வாசிகளின் பாரம்பரியமான தொழில் மீன்பிடியேயாகும். ஆனால் அவ்வூர் வாசிகள் புகையிலைச் செய்கையிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதற்குச் சான்றாக புகையிலைக் காலை மேடைகளும் அதன் அருகே அமைந்துள்ள சிறிய குளம், குட்டைகளும் ஆதாரம் பகிர்கின்றன. இன்று புகையிலை மேடைகள் அமைந்திருந்த தென்பகுதிகள் யாவும் குடியிருப்புகளாயின. எனவே இவ்வூர் மக்களின் சீவனோபாயத் தொழில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மீன்பிடித் தொழில் என்றே கூறவேண்டி இருக்கின்றது. ஆயினும் இன்று பொருளாதார பரிணாம வளர்ச்சியில் உடப்பூர் மக்கள் பலர் பலவித தொழில்களில் ஈடுபடுவதைக் காணலாம். பிரதான மீன்பிடித் தொழிலை சார்ந்த வியாபாரம், மீன் வியாபாரம், கருவாட்டு உற்பத்தி, சிறு வர்த்தக வியாபாரம், இறால் வளர்ப்பு தொழில், இறால் வளர்ப்பு தொழில் சார்ந்த இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரம், வெளிநாட்டு தொழில், இவைதவிர்ந்த தென்னந்தோட்டங்கள், வீட்டுத்தோட்டங்கள் போன்றன உடப்பூரின் வருமான வளங்கலாகும்.

இம்மீன்பிடித்தொழிலையே கணிசமான மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இத்தொழிலை கடற்றொழில், சிறு கடற்றொழில் எனவும் வகைப்படுத்த முடியும். சிறு கடற்றொழில் தென்மேல் பருவபெயர்ச்சிக் காலத்தில் இவ்வூர் வாசிகள் மேற்கொண்டு வந்துள்ளனர். சிறுகடல் என்னும்போது தொட்டக்களி என அழைக்கப்படும். கற்பிட்டித்தொடுகடல் (முந்தல் சிறுகடல்) ஊரை அண்டியுள்ள ஆறுகள் அவையாவன: குருமன்களி, ஓட்டையா ஓடை, வெள்ளாமைத்துறை ஆறு, ஒல்லாந்தர் வெட்டுவாய்க்கால், குப்பான்வட்டி, புலவர் ஓடை, கள்ளோடை, சுத்தப் பாம்பு ஓடை, பூசாரி ஓடை என்பவற்றிலிருந்து களப்பு மீன்களைப் பிடித்துள்ளனர்.

இத்தொழிலுக்கான உபகரணங்களாவன சூட வலை, சிறு வலை, (மணி வலைகள்), கூட்டுவலை, மனளைவலை, முரள்வலை, வாளை

வலை, கட்டுவலை, கொடுவா வலை போன்ற வலைகளும், வள்ளங்கள், தோணிகள் இவர்களால் பாவிக்கப்படும் உபகரனங்களாகும்.

சிறு கடற்றொழில் முறையில் அதிகளவு அம்பாப் பாடல்கள் இடம் பெறுவதில்லை ஏனெனில் தனியாகவும் ஒரு சிலரும் சேர்ந்து இத் தொழிலை மேற்கொண்டனர். ஆனால் குழுவாக வள்ளங்களில் செல்வோர் தண்டு இழுக்கும்போதும், சிறு கடலில் இறங்கிவலை இழுக்கும் போதும் இலகுக்காக அம்பாப்பாடுவதுண்டு.

உடப்பூர் கடற்றொழில் கரவலை, வலை, வள்ளம், தொப்பம், இயந்திரப் படகுகள் என்பனவே ஆரம்பகாலக் கரவலைகளாவன; போத்திதோனி, கமலந்தோனி, சின்னடப்பந்தோணி, கப்பனார்தோனி, கலப்போத்தோணி, பாபா தோணி எழுமேயாகும். தொழில் வளர்ச்சியும் அதிகரித்து வந்தமையால் இன்று தோணிகள் யாவும் மறைந்து பாதைகளாக பல காலமிருந்து இன்று வள்ளங்கள் என்ற பெயரைப் பெற்று, முப்பதிற்கும் மேலான கரைவலைவலைகள் கடற்றொழில் நிறுவன அமைப்பு முயற்சி யாண்மையாளர்களினால் நடாத்தப்பட்டுவருகின்றன.

தெப்பங்கள் இன்றும் தொழிலில் இடம்பிடித்து வருகின்றன. ஆனால் அதன் வளர்ச்சி இயந்திரப்படகுகளாகி ஆழ்கடல் தொழில் உபகரனங் களாக, வருடம் முழுவதும் கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் அம்பாப்பாடல் குறைவாகவே மேற்கொள்ளப்படுகின்றது எனலாம். தெப்பம், படகுகள் கடலில் இறக்கும் வேளையிலும், கரைக்கு இழுக்கும் வேளையிலுமே அம்பாப் பாடுவதை அவதானிக்க முடிகின்றது. கடற்றொழில் வளத்தில் தொழிலாளர் பலத்தை ஒன்று திரட்டுவது அம்பா என்ற பாடலை மறந்து விடலாகாது. இப்பாடல் இத்தொழிலில் இல்லாது நடைபெறாது. அம்பாவுக்கான சீரடிகள் ஓசை நயத்துடன் பாடும்போது தொழிலின் உண்மை நிலைமைகள் வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அம்பாவின் முழு அசைவுகளும், ஓசை நயங்களும் கரவலைத் தொழில், தொழிலாளர்களிடந்தான் முழுமையாக கற்றுக்கொள்ள முடிகின்றது.

கரவலைத் தொழில் என்பது வள்ளம் அல்லது பாதையில் கடற் றொழிலாளர்கள் வலையினையும் ஏனைய உபகரணங்களையும் சீரான முறையில் அமைத்தெடுத்து கடலின் நீரோட்டத்திட்கேற்ப ஒரு முனையில் கடக்கயிறு (முதல் கயிறு) இட்டு, ஆழ்கடலின் வலை வளைந்து

மறுமுனையில் கரை சேர்ந்து, இரு பக்கமும் வலையை இழுத்து கரை சேர்த்து மீனைப் பிடிப்பதையே கரவலை வலைத் தொழில் என அழைக்கப் படுகிறது.

கரவலைகள் பல பலவகையின. ஆரம்பகாலத்தில் கரவலை வலை, அடைசி வலை என இரு வகையினவே, இன்று கரவலை, அடைசி வலை, சாளை வலை, தோலி வலை, புறவலை, என மீனினங்களுக்கு ஏற்றவாறும் மீனினம் தப்பித்துக் கொள்ளாமலும் குறிப்பிட்ட தொழில் நுட்பங்களைக் கையாண்டு கரவலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் ஒரு கரவலைக்கு ஏறத்தாள 30 பேர் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். ஆனால் இன்று கடற்றொழில் பருமன் அதிகரித்தமையால் ஏறத்தாள 40 முதல் 50 வரையிலான பேர் ஒவ்வொரு கரவலையிலும் இடம்பெறுகின்றனர். இக்கரவலையின் தலைவன் மண்டாடி எனவும், தண்டு வழிப்போர் சம்மான் பாக்கி எனவும், உள்வலை மண்டாடி, மேவலை மண்டாடி, தொட்டாப்புக் (தோட்டாக் கயிறு) கொருமண்டாடி, சிவப்புப்பார்க்க (மீன்கூட்டம்) ஒரு மண்டாடி எனப்பல. மண்டாடி, சம்மான் பாக்கி என்போர் ஒரு கரவலையின் முக்கிய உருப்பினராவர். இவர்களுக்குக் கிடைக்கும் மீன் வருவாயில் இரண்டு பங்கு எனவும் கரையிலிருந்து இழுக்கும் தொழிலாளருக்கு ஒன்றரைப் பங்கு எனவும் வகுத்துக் கொள்வது வழமையாகும்.

அடுத்து கரவலையின் சொந்தக்காரர் சம்மாட்டி என அழைக்கப் படுவார். இவர் பொறுப்பு வாய்ந்த மண்டாடிக்கு இக்கரவலையைப் பாரம் கொடுப்பது, மொத்த மீன் வருவாயில் மூன்றில் ஒரு பங்கினை தான் எடுத்துவிட்டு, மிகுதி மூன்றில் இரண்டு பங்கினை தொழிலாளர் களுக்குக் கொடுத்து விடுவதுதான். ஆரம்பகால கரவலைத் தொழிலிருந்து இன்றுவரை இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

உடப்பூர் கரவலைத் தொழில் வாடை காலத்தில் அதாவது வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் தான் ஆரம்பிக்கப்படுகிறது எனலாம். கரவலைத் தொழிலுடன் இணைந்து காணப்படுவது தான் அம்பாப்பாடல். கரவலைப் பாதையோ அல்லது வள்ளமோ கரையிலிருந்து கடலில் பாய்ச்சும் போதும், கரவலை கடலில் வலை வளைந்து கரை வரும் வரையும் பல்வேறுபட்ட விதமான முறையில் அம்பா தொனிக்கப்படும். ஆரம்பக்கட்டத்தில் பாதை அல்லது வள்ளத்தில் தண்டு வலிப்போர்கள்

முறையம்பாப்பாடுவர். மேலும் தலைவலை இறக்கும்போது அதன் சந்தத்தை மாற்றுவார்கள்.

அம்பா என்பது கனிவு, இனிமை என வரைவுகள் கூறப்பட்ட போதிலும் அதன் உட்பொருள் ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கத்தில் கஷ்டங்களைக் களைவதற்கு ஏற்ற வகையில் உணர்ந்து மகிழ்ச்சிகரமாகப் பாடப்படும் பாடல்களே எனக்கூறுவது மிகையாகாது.

சாத்து (நூல் வலை), சல்வாய் (செல்வாய்), மடி (மீன் மடியுமிடம்) இறக்கும் போதும், கரையை நோக்கி வரும் போதும் தண்டில் உள்ளவர்கள் அம்பாப் பாடலையும் அதன் சந்தங்களையும் மாற்றியமைப்பர். அத்தோடு மீன் கூட்டங்களை (சிகப்பு)க் கண்டால் விரைவுபடுத்தி அம்பாப்பாடப் படுவது முண்டு. மேலும் கரவலை வலை வளைந்து வரும் போதுதான் அதாவது தூக்கி வைத்து மடக்கி வருதல் என்பர். கரையிலுள்ளவர்கள் வலை இழுக்கத் தொடங்குவர், அப்போது நீட்டம்பா பாடப்படும்.

கரவலையின் தலைவலை வந்ததும் அம்பாப் பாடலின் சந்தம் வேறுபாடும். ஒரு கரவலையில் தலைவலை, ஈரவலை, கடகனி, மேலாக் கடகனி, மூளியா, நாற்படையன், ஐம்படையான், தட்டு, சாத்து, சல்வாய், மடி என்பன கரவலையின் அமைப்புகளாகும். இந்த அமைப்பு முறையில் கண்ணிகளின் நீளம், அக்கண்ணிகளின் முட்டுகளின் எண்ணிக்கை என்பவற்றுக்கு ஏற்ப குறிப்பிடத்தக்க தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது தான் கரவலை வலையாகும்.

எனவே கரவலையின் அமைப்புக்களின் வடிவங்கள் கரையை நெருங்க நெருங்க அம்பாப் பாடலிலும் வேறுபாடு ஏற்படுகின்றது. இவ்வாறு வேறுபடுவதற்குக் காரணம். விரைவு, சுறுசுறுப்பு, வலை அச்சொடுங்கி வரவேண்டும் என்ற துடிப்பு, மீன்கள் வலையிடம் நெருங்க விடக்கூடாது என்ற வீராப்பு, இரு பக்கங்களிலும் சரிபாதியாக சீராக இழுக்கப்படவேண்டும். கண்ணிகள் சீர்குலையக் கூடாது செம்மையாக அமைந்து வரவேண்டும் என்ற பல்வேறு அடிப்படை நோக்கங்களை முன்வைத்தே அம்பாப்பாடலின் சீரடிகளும் மாற்றத்திட்குட்படுகின்றன எனலாம்.

இக்கரவலைத் தொழிலின் அம்பாப் பாடல்கள், நீட்டம்பா, கட்டையம்பா, முறையம்பா, எதிர்த்தம்பா, விருத்தம்பா என வகுத்துப் பிரிக்கலாம். மேலும் மேற்கூறப்பட்ட அம்பாக்களை தனித்தனியாகவும்



கடல் தொழில்

பிரித்தும் வகுக்கலாம். எனவே அம்பாப்பாடலின் சாரம்சத்தை கரவலைத் தொழிலுடன் இணைத்து நோக்குவதே பொருத்தமானதாகும்.

கரவலைத் தொழிலில் நாள் நேரம் நன்கு பார்த்து இறைவனைப் பிரார்த்தித்து தொடங்குவதை உடப்பூர் மக்கள் விரும்புவர். தொழில் தொடக்கத்தில் வள்ளமோ அல்லது பாதையோ கடல் நீரினால் நன்கு சுத்தம் செய்து குறிப்பிட்ட நேரத்தில் விளக்கேற்றி பொங்கல் வைத்து நீராட்டியார் என்பவரினால் பால், மஞ்சல் கொண்டு நீராட்டி, கடா அல்லது சேவல் பலி கொடுத்து கடலில் பாய்ச்சுவதே அன்று தொடக்கம் இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலத்தில் பாதைகளே இருந்தன. அவற்றின் நடுப்பகுதியில் மல்லம் அமைக்கப்பட்டிருக்கும். பாதையின் இரு பக்கங்களிலும் சிறகுகள் போல் நீண்டு இருக்கும். இது பாதையினை கரையிலிருந்து கடலில் தள்ளுவதற்கும், கடலில் இருந்து பாதையை கரைக்கு இழுப்ப தற்கும் உதவியாக இருப்பதுடன் நீரில் பாதையைச் சமநிலைப்படுத்தவும் உதவி செய்கின்றது எனலாம். எனவே பாதையின் இரு பக்கங்களிலும் சராசரி ஐந்து பேர்கள் மல்லத்தில் நிற்பர், ஆணியம் பாதையின் முற்புரம், கடையாழ் பாதையின் பின்புறம், முன்னும் பின்னும் மும்மூன்று பேர்கள் நிற்பர், ஏனையவர்கள் கடையா கயிற்றில் இரு பக்கமும் இழுக்க நிற்பர் இவ்வாறு தொழிலாளர்கள் எல்லோரும் ஒருமித்த வடிவில் பாதையை கடலில் இறக்க முற்படுவார்கள் எனலாம்.

எனவே இங்கு பாதையின் அடி மல்லத்தில் நிற்பவரே தலை மன்டாடியார். அவரே பாதையை ஆண்டவனை நினைந்து இரு கை களாலும் தொட்டு வணங்கி பாதை இறக்கும் அம்பாப்பாடலைப் பாடத் தொடங்குவர். ஏனைய தொழிலாளர்கள் அவர் பாடும் பாடலுக்கு ஏற்ப பக்கம் பாடுவார். இங்கு ஒற்றுமையின் பலம் ஒருமித்து ஓசை நயத்தோடு பாடும்போது பாதை தானாக இறங்குகின்றதா எனச்சொல்லுமளவுக்கு இறங்கும். இதற்கான அம்பா பின்வருமாறு:

| மண்டாடி | மற்றவர்கள் | மண்டாடி | மற்றவர்கள் |
|---|---|---|---|
| ஏகாங் | ஐயா | ஏலோ ஈலோ | ஈலோ |
| ஏகாங் | ஐயா | ஏலோ ஈலோ | ஈலோ |
| அரிஹரி | ஏலோ | நாராயணா | ஏலோ |
| அச்சுதனே | ஏலோ | பச்சமலை | ஏலோ |
| பச்சமலை | ஏலோ | பவள மலை | ஏலோ |
| பைங்குறவர் | ஏலோ | பாடும் மலை | ஏலோ |
| ஓடா | ஏலோ | கடலைவைத்தான் | ஏலோ |
| ஓடாவி | ஏலோ | கப்பல் வைத்தான் | ஏலோ |
| கப்பல் | ஏலோ | உடையவனே | ஏலோ |
| கண்கலக்கம் | ஏலோ | தீர்த்தவனே | ஏலோ |
| தீர்த்தமடா | ஏலோ | மச்சானே | ஏலோ |
| செல்வமடா | ஏலோ | தனிக்கோடி | ஏலோ |
| தனித்தார் | ஏலோ | குலகரையார் | ஏலோ |
| தங்கினார் | ஏலோ | அம்பலத்தே | ஏலோ |
| அம்பல | ஏலோ | வெளிதனிலே | ஏலோ |
| ஆசை தந்த | ஏலோ | மானாரே | ஏலோ |
| மாரித்தா | ஏலோ | வல்லகியே | ஏலோ |
| மகராணி | ஏலோ | காரும்மா | ஏலோ |

இவ்வமைப்பில் இவ்வம்பாப்பாடல் பல்வேறுபட்ட கருத்துக்களில் கரவலைக்கு கரவலை பாடி, பாதையை அல்லது வள்ளத்தை கடலடிக்குக் கொண்டு சென்று, பாதையின் ஆறு தண்டிலும் சம்மான் பாக்கியாரும், சுக்கானில் (சவுல்) தலை மண்டாடியும், நடுபாதையில் ஏனைய நான்கு

மண்டாடிமாரும் ஏறி இருக்க, கடல் அலை அமைதி கொடுக்கும் வேளையில் அதாவது ஈராட்டியில் பாதை அல்லது வள்ளம் ஏனைய கடற்றொழிலாளரினால் கடலில் பாய்ச்சப்படும். அவ்வேளை தொழிலாளர் ஓடி..ஏலை..-..ஏலை.....ஏலை என்ற ஒருமித்த ஓசையில் உரத்த குரலில் பலம் கொண்டு கடலில் தள்ளிவிடுவர்.

கரவலை வலை வளையும் முன் நீரோட்டத்தை மண்டாடியானவர் நீர் பாட்டு மட்டையைக் கடலில் போட்டுக் கவனிப்பார். வடக்கு நோக்கி நீரோட்டமிருந்தால் அது சோழக நீர் எனவும், தெற்கு நோக்கி நீரோட்டம் அசைந்தால் அது வாட நீர் எனவும் அழைப்பர்.

கரவலை வலை வளைக்க முதலில் கடக்கயிறு (தலைக் கயிறு) உள்வலை மண்டாடியினால் வீசப்படும். அவர் அதனை இறைவனைத் தியானித்து வீசுவார். பாதை அல்லது வள்ளம் நீரோட்டத்துக்கு எதிராக முன்னெடுத்து சவுல் மண்டாடியின் உதவியுடன் சமான்பாக்கிமார் தண்டு வலிக்க செலுத்தப்படும்.

எனவே சம்மான் பாக்கி அறுவரில் (ஆறாம் தண்டில்) வாரித் தண்டிலிருப்பவர் முறையம்பா பாடத்தொடங்குவர். தனித்துப் பாடுவது தொகையறா எனப்படும். அதாவது

> கடலை முகம் பாரம்மா என் தாயே
> கடன் காரனைக்கண்பாரம்மா
> கண் பாரு பெற்றவளே தாயே
> காலு தலை நோகாமல்

மற்றவர்கள்

> ஏலை ஏலை ஏலாம் ஏலை
> ஏலை ஏலை ஏலாம் ஏலை

அடுத்து தண்டு வலிக்கத்தொடன்கியதும்.

எதிர்த்தம்பா பாடுவர். அதாவது ஒருவர் பாட மற்றவர்கள் அதற்கு எதிர்ப்பாடல் பாடுதலாகும்.

| | | |
|---|---|---|
| ஒருவர் : | வேணுமென்று காரடியோ | எலேலம் ஏலை |
| | வெப்பம் சிலையாளே | ஏலேலம் ஏலை |
| மற்றவர் : | சிலை போலே முகவடிவா | ஏலேலம் ஏலை |
| | சித்திரம் போல் நடையாளே | ஏலேலம் ஏலை |

ஏலை ஏலை ஏலாம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை

ஒருவர் : சித்திரை மாதத்தில் ஏலை ஏலை
சிவன் பொறந்த நாளையிலே ஏலை ஏலை

மற்றவர் : நாளான நாளையில ஏலேலம் ஏலை
நல்ல வெள்ளிக் கிழமையில ஏலேலம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை

மேற்கூறப்பட்ட அம்பாவை சந்தத்தை மாற்றி சுறுசுறுப்பாகவும் பாடுவர். அதாவது.

ஒருவர் : ஊராயம் ஏலேலம்மானதொரு ஏலேலை ஏலை
புதன் கிழமை ஏலேலம் சண்டையில ஏலேலை ஏலை

மற்றவர் : சண்ட ஏலேலம் வருகுதடா ஏலேலை ஏலை
சண்டான ஏலேலம் கைவிடு ஏலேலை ஏலை

ஒருவர் : கைவிடு ஏலேலம் காப்பவிடு ஏலேலை ஏலை
கைகாப்ப ஏலேலம் சோரவிடு ஏலேலை ஏலை

மற்றவர் : போரு ஏலேலம் வருகுதடா ஏலேலை ஏலை
புத்தியுள்ள ஏலேலம் தருமருக்கு ஏலேலை ஏலை

மேலும் அம்பாவின் அர்த்தம் மாறுபட்டுப் பாடுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது விரைவு குறித்துப்பாடுவது.

ஒருவர் : தருமருக்கு நேர் கிளைய ஏலேலம் ஏலோ
தடம் பெரிய போர்வீமன் ஏலேலம் ஏலோ

மற்றவர் : வீமன் ஒரு சண்டையில ஏலேலம் ஏலோ
வில்வெடுத்தான் கண்டீரோ ஏலேலம் ஏலோ

ஒருவர் : கண்டமான் விடுவதில்லை ஏலேலம் ஏலோ
காயம் பட்ட மான் எதுவோ ஏலேலம் ஏலோ

மற்றவர் : அண்டா நெருப்படியோ ஏலேலம் ஏலோ
அடங்காத செந்தணல் ஏலேலம் ஏலோ

ஒருவர் : செந்தணலை மூட்டியம்மா ஏலேலம் ஏலோ
செழித்து அரசாளையில ஏலேலம் ஏலோ

மற்றவர் : வந்த வழி தூரமடா ஏலேலம் ஏலோ
வயிற்று வலியே கொடுமை ஏலேலம் ஏலோ

கரவலை வலை வளைந்து மடி நீரில் இறக்கும் வேளையில் அம்பாவின் சந்தத்தில் மாறுபாடு மீண்டும் காணப்படுகின்றது. அதாவது

ஒருவர் : ஏலோடி ஏலோ
மற்றவர் : ஏலை வலை ஏலோ
ஒருவர் : யாலாடி யாலா
மற்றவர் : யாழிவலையாலா
ஒருவர் : ஆலமரத்தடியே
மற்றவர் : அம்மாதாயே
ஒருவர் : அவசரமாக அழைத்துக்கொண்டாயே
மற்றவர் : அம்மா தாயே
ஒருவர் : வேணும் மென்று காரும்மா
மற்றவர் : அம்மா தாயே
ஒருவர் : வேதனைகள் தீரும்மம்மா
மற்றவர் : அம்மா தாயே

மடி இறக்கி முடிந்ததும் சம்மான்பாக்கிமார் மீண்டும் முறையம்பா பாடுவர். இது வலைக்குள் அகப்பட்ட மீன்கள் பாதுகாப்பாக கரை வந்து சேர வேண்டும் என்ற நோக்கத்தில் பாடப்படுவது. அதாவது.

ஒருவர் : காவேலா வாருமையா ஏலே
கள் வருட ஐயாவே ஏலே
ஐயா பெரியவரே ஏலே
அதிகப்படித்தவரே ஏலே
தீரப்படித்தவரே... ஏலை ஏலை
தெளிவறிந்த செங்கடரே.. ஏலை ஏலை ஏலை

தண்டு வலிப்பவர்கள் விசைவு படுத்து நோக்கத்தில் அம்பாவின் சந்தத்தை மாற்றி அமைப்பர்.

ஏலேலம் ஏலை ஏலவலை ஏலை
ஏலேலம் ஏலை ஏலவலை ஏலை

ஒருவர் : செங்கோல ஏலை நாட்டியம்மா ஏலை ஏலோ
செழுத்தியரசு ஏலை ஆளையிலே ஏலை ஏலோ

மற்றவர் : சந்நியாசி ஏலை ரூபங்கொண்டு ஏலை ஏலோ
சாகிரண்டி ஏலை தன்னால ஏலை ஏலோ

ஒருவர் : உன்னால ஏலை பஞ்சவரும் ஏலை ஏலோ
ஊரிழந்து ஏலை பதியிழந்து ஏலை ஏலோ

மற்றவர் : நாடிழந்து ஏலை பஞ்சவரும் ஏலை ஏலோ
நல்லவனம் ஏலை சென்றார் ஏலை ஏலோ

ஒருவர் : சென்றுருண்டை ஏலை விழியாலே ஏலை ஏலோ
செல்வகுந்தி ஏலை மருமகளே ஏலை ஏலோ

மற்றவர் : மருகநல்ல ஏலை இறக்கி வைத்து ஏலை ஏலோ
மனங்கொள்ளடி ஏலை மாரிமுத்தே ஏலை ஏலோ

மேலும் தண்டு வலிப்பவர் தங்கள் களைப்பினை தணிக்கும் பொருட்டு மெதுவாக வலிக்கும் வகையில் சந்தத்தை மாற்றுகின்றன.

ஏலேலம் ஏலம ஏலைவலை ஏலம்
ஏலவாலே ஏலம் ஏலவாலே ஏலம்

ஒருவர் : மாரிவந்தாள் மழை பொழியும் ஏலேலம்
தேவி வந்தாள் தேன் சொரியும் ஏலேலம்
மற்றவர் : தெவிட்டாத ஏலம் தெள்ளமுதே ஏலேலம்
தெளிவறிந்த ஏலம் செங்கமரே ஏலேலம்
ஒருவர் : ஆதி நல்ல ஏலம் உடையவளே ஏலேலம்
ஆத்தாளே ஏலம் வரும்மம்மா ஏலேலம்
மற்றவர் : ஆத்தா இன்று ஏலம் கனித்தாளம்மா ஏலேலம்
அன்றொரு நாள் ஏலம் தங்கிருந்தாள் ஏலேலம்

இச்சந்தத்தினை இவ்வாறு மாற்றிப் பாடுவர்

ஏலைவலை ஏலோ தண்டு ஏலோ ஏலம்மா
ஏலேலையா ஏலேலையா ஏலோ ஏலம்மா

ஒருவர் : தங்குவேன் எங்கேயம்மா ஏலோ ஏலம்மா
தரிப்பேன் வட மதுரை ஏலோ ஏலம்மா
மற்றவர் : பொங்குவேன் எங்கேயம்மா ஏலோ ஏலம்மா
புனியமா சோலையிலே ஏலோ ஏலம்மா
ஒருவர் : சோழமழையழகா ஏலோ ஏலம்மா
சொக்கநாதா உன் காவல் ஏலோ ஏலம்மா
மற்றவர் : காவல் பயணமடா ஏலோ ஏலம்மா
கட்டழகா வீரபத்திரா ஏலோ ஏலம்மா

கரவலை வலை நீரோட்டத்து எதிராக ஏறச்சென்று (செங்கோணமாக) கடல் புறத்துக்கு (கடலின் தன்மை) ஏற்ப கம்பான் கயிறுகள் வைத்து மீனைக் கட்டி வலை வளைந்து கரையை பாதை அல்லது வள்ளம் வந்தடையும் இதனை கரைப்பாய்தல் என அழைப்பர்.

இதே வேளை கரையிலிருக்கும் தொழிலாளர்கள் கரவலை வலை வளைந்து (அதாவது தூக்கி வைத்தல் என்பது) வரும்போது பாதையி லிருப்பவர்கள் வெள்ளையடிப்பதை (அல்லது அடையாளம்) அவதானித் ததும், கயிற்றினால் பின்னப்பட்ட பட்டியலை இடுப்பிலிட்டு, வலையை

இழுக்கத்தொடங்குவர். மெதுவாக, சாதாரணமாக வலை இழுக்கும் அம்பாப்பாடலுக்கும் இடையிலும் வேறுபாடு உண்டு. சாதாரணமாக வலை இழுக்கும்போது நீட்டம்பா பாடுவர். அதாவது தனியாள் முதல் அடியைக் கூறுவார். மற்றவர்கள் அடுத்து வரும் அடியைக் கூறுவார்கள். மற்றவர்கள் கூறிய அடியை தனியாள் மீண்டும் கூறுவார். இதனை கம்மான் கயிறு இழுக்கும் வரைப் பயன்படுத்துவர். நீட்டம்மாப் பாடல் வருமாறு:

| தனியாள் | மற்றவர் |
|---|---|
| ஏலேலோ | ஏலேலோ |
| ஐயாட | யாலயாலாடே |
| யாலாடே | அம்மம்மா |
| முத்துமாரி | தாயாரே |
| தாயாரே | முகத்திரக்கம் |
| முகத்திரக்கம் | கண்பாரம்மா |
| கண்பாரம்மா | பெற்றவளே |
| பெற்றவளே | காலுதலை |
| காலுதலை | நோகாமலே |
| வனவாநல்ல | வனங்கடந்து |
| வனங்கடந்து | வாரார் |
| வாராரே | மாயவரும் |
| மாயவரும் | ஊரான |
| ஊரான | ஊர்கடந்து |
| ஊர்கடந்து | உடைப்பநல்ல |
| உடப்பநல்ல | கரைகடந்து |
| கரைகடந்து | பேரான |
| பேரான | பேர்கடந்து |
| பேர்கடந்து | பெரியவத்த |
| பெரியவத்த | புளிக்கரைச்சான் |
| புளிக்கரைச்சான் | சாண்கடந்து |

விரைவாக இவ்வம்பாவினை பாடுவார்கள் பாடுமிடத்து அதன் சந்தம் மாறுபடும்.

ஏலைவாலை ஏலோ தண்டு ஏலேலம்
ஓவேலம்மா ஓவேலம்மா ஏலேலம்

ஒருவர் : வாராள வாராளம்மா ஏலே லேம்
வடிவேல் சன்னதியில் ஏலே லேம்

| | | |
|---|---|---|
| மற்றவர் : | இருந்தா பெருந்த பசு | ஏலே லேம் |
| | ஏழிலங்க சோதிமின்ன | ஏலே லேம் |
| ஒருவர் : | அன்னம் விளையாடுது | ஏலே லேம் |
| | அஞ்ச வர்ணப் புள்ளாடுது | ஏலே லேம் |
| மற்றவர் : | கட்டாக் கடிக்குதடா | ஏலே லேம் |
| | கடலை உழக்குதடா | ஏலே லேம் |
| ஒருவர் : | ஓராப் படுவலையாம் | ஏலே லேம் |
| | ஒரு தோணி மீன்படுமா | ஏலே லேம் |
| மற்றவர் : | கீலாங்கடுவலையாம் | ஏலே லேம் |
| | சீராட்டி கரவலையாம் | ஏலே லேம் |
| ஒருவர் : | மண்டாடி வளைச்ச வலை | ஏலே லேம் |
| | மட்டதல பொறுக்க வைத்தாள் | ஏலே லேம் |
| மற்றவர் : | மூட்டுப்பட்ட சம்மாட்டிக்கு | ஏலே லேம் |
| | மூன்று மடி மீன் படவே | ஏலே லேம் |

இவர்கள் பாடும் அம்பா தொழில் முறைகளையும் தங்கள் கஷ்ட நஷ்டங்களையும், நினைந்து பாடுவர். பொதுவாக தங்கள் குல தெய்வங்களை நினைந்துருகிப் பாடுவது இன்றும் வழமையாகக் காணப்படுகின்றது.

வலை இழுப்பதற்கு கஷ்டமாக இருக்கும் வேளையில் அம்பாவின் சந்தம் மாற்றத்துக்குட்படுகின்றது. அதற்கான அம்பா எதிர்த்தம்பா என்பர்.

| | |
|---|---|
| ஒருவர் : | ஏலவலை ஏலேல ஏலே தண்டு // எலாவலை ஈலோ |
| | ஓவேலம்மா ஓலை ஓவேலம்மா // ஏலாவலை ஈலோ |
| மற்றவர் : | வாராளே ஏலேலம் வாராளம்மா // ஏலாவலை ஈலோ |
| | வாகுதலை ஏலேலம் வாராளம்மா // ஏலா வலை ஈலோ |
| ஒருவர் : | கொடியான ஏலேலம் பெருக்க // ஏலாவலை ஈலோ |
| | கொற்றவளை ஏலேலம் எங்கிருக்க // எலாவலை ஈலோ |
| மற்றவர் : | நெய்மீனுக்கென்று ஏலேலம் வளைந்தோமே // ஏலாவலை ஈலோ |
| | நெஞ்சுருகி ஏலேலம் பாடுகிறோம் // ஏலாவலை ஈலோ |
| ஒருவர் : | பாரைபடஏலேலம் வேண்டும் என்று // ஏலாவலை ஈலோ |
| | பரத்திவலை ஏலேலம் வலைவளைந்தோம் // ஏலாவலை ஈலோ |

மேலும் இப்பாடலின் சந்தம்: எதிர்த்தம்பாவில்

| | | |
|---|---|---|
| ஒருவர் : | ஏலாவலை ஏலதண்டு | ஏலாடி ஏலை |
| | ஓவலையா ஓவலைம்மா | ஏலாடி ஏலை |
| மற்றவர் : | செவ்வலாய் வாராயோ | எலாடி ஏலை |
| | திரண்ட பொரிகெழுரே | ஏலாடி ஏலை |

ஒருவர் : வண்ணப் பொரிகெழுரே — ஏலாடி ஏலை
வானரிய ஓராவே — ஏலாடி ஏலை
மற்றவர் : பன்னாப்படுவலையாம் — ஏலாடி ஏலை
பகம் பெற்றநூல் மடியாம் — ஏலாடி ஏலை
ஒருவர் : எண்ணிப் பகிரயில — ஏலாடி ஏலை
எடுத்தேனொரு ஓராவே — ஏலாடி ஏலை
மற்றவர் : பர்த்திருந்துதான் பறித்தான் — ஏலாடி ஏலை
பாவிப்பட மண்டாடி — ஏலாடி ஏலை
ஒருவர் : மண்டாடி வளைத்தவலை — ஏலாடி ஏலை
மனையாட்கள் தான் வாழ — ஏலாடி ஏலை
மற்றவர் : எல்லோரும் வாழவம்மா — ஏலாடி ஏலை
என் மகளார் பார்த்திருக்க — ஏலாடி ஏலை
ஒருவர் : பார்த்த முகங்கள் எல்லாம் — ஏலாடி ஏலை
பல்லுருவாய்த்தோனுதையா — ஏலாடி ஏலை

வலை நீரோட்டத்துக்குக் கொண்டு செல்லும் போது இருக்கும் வலையைச் செங்கோணமாக அதாவது நீரோடும் திசைக்குச் சரிவாகப் பிடித்து இழுக்கு மிடத்து பின்வருமாறு எதிர்த்தம்பா பாடுவர்.

ஒருவர் : ஏலையா ஏலவலை — ஏலை ஏலை ஏலோ
ஓவலையா ஓவலையா — ஏலை ஏலை ஏலோ
மற்றவர் : மூளியாக் கண்டவுடன் — ஏலை ஏலை ஏலோ
முறை முறை வாமீனே — ஏலை ஏலை ஏலோ
ஒருவர் : மீனம்மா உன் சுரூபம் — ஏலை ஏலோ ஏலை
வெடுக்கெடுத்து வீசுதடி — ஏலை ஏலை ஏலோ
மற்றவர் : அனலம்மா உன் சுரூபம் — ஏலை ஏலோ ஏலோ
அண்டமுடி கூடுதில்லை — ஏலை ஏலோ ஏலோ
ஒருவர் : அண்டாநெருப்பையம்மா — ஏலை ஏலோ ஏலோ
அடங்காத செந்தனலே — ஏலை ஏலோ ஏலோ
மற்றவர் : செந்தனலை மூட்டியம்மா — ஏலை ஏலோ ஏலோ
செழுத்து அரசாளையில — ஏலை ஏலோ ஏலோ
ஒருவர் : ஆளப்பிறந்தாயோ — ஏலை ஏலோ ஏலோ
அரசாளவந்தாயோ — ஏலை ஏலோ ஏலோ
மற்றவர் : குடியில் பிறந்தாயோ — ஏலை ஏலோ ஏலோ
குடியாளவந்தாயோ — ஏலை ஏலோ ஏலோ
ஒருவர் : வந்தாரை வாழவைக்கும் — ஏலை ஏலோ ஏலோ
சிங்கார உடப்பங்கரை — ஏலை ஏலோ ஏலோ

மேலும் வலை இலகுவாக இழுக்கும் வேளையில் அம்பாப்பாட்டு இலகு வாகவே பாடப்படுகின்றது. அதாவது எதிர்த்தம்பா

ஒருவர் : ஏலவலை ஏலோ ஏலேதண்டு ஏலோ
ஓவலையா ஏலோடி ஓவலையா ஏலோ

மற்றவர் : வீராதி ஏலோ வீரனடா ஏலோ
விசயனடா ஏலோ உன் தகப்பன் ஏலோ

ஒருவர் : சூராதி ஏலோ சூரனடா ஏலோ
சுப்பிரமணிய ஏலோ வேலனடா ஏலோ

மற்றவர் : வேலவனார் ஏலோ கோயிலில ஏலோ
வேலோ நல்ல ஏலோ அடையாளம் ஏலோ

ஒருவர் : கதிரவனார் ஏலோ கோயிலில ஏலோ
கதிரோநல்ல ஏலோ அடையாளம் ஏலோ

மற்றவர் : அடையாள ஏலோ காரியரே ஏலோ
அம்மமுத்து ஏலோ மாரியரே ஏலோ

ஒருவர் : மாரித்தாய் ஏலோ வல்லகியே ஏலோ
மகராசி ஏலோ காருமம்மா ஏலோ

வலை இழுக்குகையில் அதிக கம்மான் கயிறு கொடுத்து கடலின் ஆழியில் வலை வளைந்திருக்கும் போது அம்பாப்பாடலில் விருத்தம்பா பாடி குறிப்பிடத்தக்க அதாவது ஐம்பது அல்லது அறுபது யார் தூரம் ஒரே முறையில் ஒரே மூச்சில் வலையை கரை இழுப்பர் அவ்வாறான விருத்தம்பா பின்வருமாறு:

சமுத்திரதேவியாரே என் தாயே .... இரங்குமம்மா
ஏழை முகத்தையம்மா என்தாயே ... ஏறிட்டுப் பாருமம்மா.

விருத்தம்:

என்டா சின்னவேடா எனக்கொன்றும் புரியவில்லை
கண்னதோர் காட்டிலே காளியோ பூதந்தானோ

கரவலை வலை வளைக்கச் சென்று வலை வளையாதே போதும், நனைந்த வலையினை வெயிலில் விரித்துப்போட ஆயத்தம் செய்யும்போதும், குறிப்பிட்ட பாட்டிலிருந்து இன்னொரு பாட்டிட்குச் செல்லும் போதும் கீழ்வரும் அம்பாப் பாடலை எதிர்த்தம்பா வடிவத்தில் பாடுவர்.

ஒருவர் : ஏலாடி ஏலவலை ஏலேலம்
ஓவேலை ஓவலம்மா ஏலேலம்

| | | |
|---|---|---|
| மற்றவர் : | நானோடிப்போகுதடா | ஏலேலம் |
| | நடக்க வேணும் தென் மதுரை | ஏலேலம் |
| ஒருவர் : | பொழுதோடிப் போகுதடா | ஏலேலம் |
| | போகவேணும் தென்மதுரை | ஏலேலம் |
| மற்றவர் : | போகட்டோ தாயாரே | ஏலேலம் |
| | போய்வரட்டோ மாலைவனம் | ஏலேலம் |
| ஒருவர் : | மால வசங்காது | ஏலேலம் |
| | மஞ்சல் முகம் வாடாது | ஏலேலம் |
| மற்றவர் : | வட்டாளம் பூவாலே | ஏலேலம் |
| | போட்டாளே தோள் மால | ஏலேலம் |
| ஒருவர் : | பூவாட வீசவம்மா | ஏலேலம் |
| | புலவர் கவி பாட | ஏலேலம் |
| மற்றவர் : | பாடும் புலவருக்கு | ஏலேலம் |
| | பாட்டோல ஆனைம்மா | ஏலேலம் |
| ஒருவர் : | எழுதும் புலவருக்கு | ஏலேலம் |
| | ஏட்டோல ஆனையம்மா | ஏலேலம் |
| மற்றவர் : | ஆனையிருந்தபடியே | ஏலேலம் |
| | அரசாளும் மண்டபத்தே | ஏலேலம் |
| ஒருவர் : | பூனை இருந்தபடியே | ஏலேலம் |
| | புலப்பிரனே பொய் கொடியாய் | ஏலேலம் |
| மற்றவர் : | பொய்யாது பொய்யாது | ஏலேலம் |
| | பூமலரும் பொய்யாது | ஏலேலம் |
| ஒருவர் : | நாவிலிருந்து பொய்த்தாலும் | ஏலேலம் |
| | நாயகியே கண்பாரம்மா | ஏலேலம் |
| மற்றவர் : | கண்பாரு வீரசக்தி | ஏலேலம் |
| | காலுதலை நோகாது | ஏலேலம் |

அம்பாப் பாடலின் பாடலின் சந்தங்களை மேலும் வகைப்படுத்தும் போது கீழ்வரும் சந்தத்தை நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| ஒருவர் : | ஏலலை ஏலோ ஏலோ தண்டு | ஏலே ஏலோ |
| | ஓவலையா ஏலோ ஓவலையா | ஏலே ஏலோ |
| மற்றவர் : | வாழை நல்ல ஏலோ பழமேயத்தா | ஏலே ஏலோ |
| | வலது கையில் ஏலோ சர்க்கரையே | ஏலே ஏலோ |
| ஒருவர் : | ஈச்சம் ஏலோ பழமேயத்தா | ஏலே ஏலோ |
| | இனி மறக்க ஏலோ கூடுதில்லை | ஏலே ஏலோ |

| | | |
|---|---|---|
| மற்றவர் : | வண்ண நல்ல ஏலோ கரும்பெயத்தா | ஏலே ஏலோ |
| | வாகரும்பே ஏலோ தொழிதனம் | ஏலே ஏலோ |
| ஒருவர் : | தோளுருக ஏலோ தோடசைய | ஏலே ஏலோ |
| | தோழியிட ஏலோ மார்பசைய | ஏலே ஏலோ |
| மற்றவர் : | மாரழகு ஏலோ தண்ணியில | ஏலே ஏலோ |
| | மண்ணி மண்ணி ஏலோ போறவளே | ஏலே ஏலோ |
| ஒருவர் : | மானும ஏலோ களையுமங்கு | ஏலே ஏலோ |
| | மருகி நன்கு ஏலோ விளையாடலில் | ஏலே ஏலோ |
| மற்றவர் : | ஆடிடும் ஏலோ மயிலுமிங்கு | ஏலே ஏலோ |
| | அசைந்தாடும் ஏலோ பொற்சிலையே | ஏலே ஏலோ |
| ஒருவர் : | சிலைபோல ஏலோ ஒர்நடையா | ஏலே ஏலோ |
| | சித்திரம் போல ஏலோ தானடையாம் | ஏலே ஏலோ |
| மற்றவர் : | நடையாளல்ல ஏலோ நடக்கிறோமே | ஏலே ஏலோ |
| | நயினார் ஏலோ கோயிலுக்கு | ஏலே ஏலோ |
| மற்றவர் : | கொண்டு வந்து ஏலோ தாரேனடி | ஏலே ஏலோ |
| | கோமளமே ஏலோ நானுனக்கு | ஏலே ஏலோ |

கரவலை வலை கரையை அடைந்து கரையேறியதும் செல்வாயை இருபக்கமும் நிற்கும் தொழிலாளர்கள் ஒழுக்கி (சுருக்கி) மீனை மடிக்கு கட்டையம்மா சொல்லிச் செலுத்துவர். மீன் அதிகமாக இருந்தால் மடியை செல்வாயிலிருந்து பிரித்தெடுத்து சிறிய மடிகளில் செலுத்தி கரை சேர்ப்பர். செல்வாயுடன் இணைக்கப்பட்ட மடியினை தாய் மடிஎனவும், சிறிய மடியினை மாற்றுமடிகள் எனவும் அழைப்பர். இதுபோல் பாரை, சுரை போன்ற மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்துவது கொடுவாய் வலை மடி எனவும் கூறுவர். மீன்கள் மடியில் ஆட்களின் கைப்பலத்துக்கு இழுக்குமளவு இருந்தால் அதனை எல்லோரும் கூடி கரைக்கு இழுத்து எடுப்பர். அவ்வாறு இழுக்கும்போது அவர்கள் பாடும் அம்பா பின்வரும் சந்தத்தில் அமையும்.

| ஒருவர் | மற்றவர் |
|---|---|
| ஓ கொய்யோ | கொய்யோ |
| ஏலை அச்சா | அச்சா |
| ஓவலைச்சா | அச்சா |
| ஓவலையாழி | யாழி |

எனக் கரையை இழுத்து சேர்ப்பர். இவ்வாறு கரை சேர்க்கப்பட்ட மீனினை ஆரம்பகாலத்தில் காவுகளில் குறிப்பிட்ட சம்மாட்டிக்கு கொண்டு வந்து



கருவாடு பதனிடுதல்

சேர்க்கப்படும். இதனை தோளில் சுமந்து ஆண்களும் கூடைகளில் தலையில் சுமந்து பெண்களும் செய்து வந்தனர். வாகன வசதிகள் தொடங்கிய காலத்திலிருந்து இம்முறை கைவிடப்பட்டது. மேலும் ஆரம்பகாலத்தில் மீனினம் எண்ணிக்கையின் அடிப்படையில் வியாபாரிக்கு விற்கப்பட்டது. பொதுவாக கருவாடு, ஜாடி போடுதலே இடம் பெற்றது. கால ஓட்டத்தில் இம்முறைகள் மறைந்து குளிரூட்டப்பட்டு கொழும்பு போன்ற நகரங்களில் விற்பனையாகின்றது.

உடப்பூர் மக்களின் மீன்பிடித்தொழில் ஆரம்பகாலத்தில் நீண்ட கரை ஓரத்தைத் தன்னுள் அடக்கி இருந்தது. அதாவது உடப்பூரை மையமாகக் கொண்டு வடக்கே ஆறு மையிலும் தெற்கே ஆறு மையிலும் எனலாம். ஆனால் இன்று அரசியல், அயல்கிராமங்களின் அச்சுறுத்தலால் தெற்கில் உள்ள கடல் பிரதேசம் கிட்டத்தட்ட நான்கு மைல்கல் பறிமுதலாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்பத்தில் கரவலை வலை நிரந்தரமாக ஓரிடத்திலிருந்து தொழில் செய்வதில்லை. அவர்கள் பாடு, பக்கம் என்ற அடிப்படையில் ஒரு சுற்று வட்டமாக தங்களை நிரல்படுத்தியே கரவலை வலைத் தொழிலைச் செய்தனர். இதனால் முதலில் தங்களின் பாடு, பக்கங்களை நிர்ணயிப்பதற்கு காளி கோயில் வேள்வி முடிந்ததும் திருவுளச் சீட்டு குலுக்கி தங்கள்


முதல் பாட்டினைத் தெரிந்து கொள்வர். இந்நாள் ஒவ்வொரு கரவலை வலை தொழிலாளரும் பெரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திகழும் நாள் என்பதை மறக்கமுடியாது.

இப்பாடுகளின் விபரம் பின்வருமாறு: கொச்சம் (உச்சம்), நரிப்பளம் (நதி பாயுமிடம்), பணிந்தபாடு (பதிவானபாடு), பாரிப்பாடு (பார்நிரட்டி), வெள்ளப்பாடு (பாரற்றபாடு) மேந்தலைபாடு, பரியோட்டுப்பாடு, பள்ளி வாசல் பாடு, சின்னாலமுட்டி, பெரியாலமுட்டி, அறுவாய், ஆனைஇறக்கம், முத்துப்பந்தி, தலைக்காடு, எலிக்கிளையடி, நடுவெள்ளை வத்துருப்பை போன்ற பாடுகளைக் கூறலாம்.

இன்று இப்பாடுகளுக்கு 330 யார் தூரம் பிரித்து அரசால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஆரம்ப காலத்து தொழிலிருந்து இத்தொழில் அபிவிருத்தி கண்ட பொழுதிலும் தொழிலாளர்களிடையே முன்னேற்றம் என்பது குறிப்பிடத்தக்கதாக இல்லை. பெரும்பாலான தொழிலாளர்கள் இன்னும் சம்மாட்டியில் தங்கியிருப்பதிலிருந்து விடுபட வில்லை. என்பதை மறுக்க முடியாது. காரணம் தொழிலாளர்களிடம் காணப்படும் சிக்கனமின்மை, சேமிப்பு பழக்கமின்மை, கல்வியறிவில் மந்தம் என்பனவாம். ஆனால் இன்றுள்ள இளைஞர் சமூகம் புதிய முறையில் ஒன்றிணைந்து சம்மாட்டியின் கரவலையைப் பெற்று தங்கள் மீன் பங்கினை தாங்களே சம்மாட்டியிடமிருந்து எடுத்து விற்று தங்கள் வருவாயை உயர்த்தி வருகின்றனர், என்பது குறிப்பிடத்தக்கதாகும். மறுபுறம் சம்மாட்டியின் முதலீடு என்பது பாரிய முதலீடாகும் என்பதை மறுக்கமுடியாது.

அம்பா பாடல்கள் தாளம், இராகம், பல்வேறுபட்ட சந்தங்கள் கொண்டவை. இப்பாடல்கள் யாவும் கவித்துவம் கொண்டவை, எதுகை மோனை கொண்ட அமைப்புக்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களை யார் பாடினார், அல்லது யார் தொகுத்துள்ளார் எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில் இப்பாடல்கள் யாவும் இக்கரவலை தொழில் தொடங்கிய காலத்தில் இருந்து பின்பற்றப்படுகின்றன. அதாவது வாழையடி வாழையாக இவ்வூர்த் தொழிலாளர்கள் பாடி அதன் பயனைப் பெற்று வந்துள்ளனர்.

இத்தொழிலைப் பின்பற்றி வரும் சிறுவர் தொடக்கம் முதியவர்கள் வரை இப்பாடலைப் பாடிக் காட்ட வேண்டினால் அவர்கள் எல்லோருமே



கரைவலைத் தொழிலும், தொழிலாளர்களும்

முடிவில்லாத முறையில் பாடுவார்கள் என்பதையும் மறுக்க முடியாது. மேலும் இப்பாடல்கள் ஏனைய கவிதைகள் போல் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் தெரிந்தவையல்ல இங்கு இத்தொழில் செய்யும் எல்லோருக்கும் தெரிந்தவையாகும்.

இப்பாடல்களின் கருத்துக்களை நோக்குகையில் தொழில் மகத்துவம், ஆண்டவன் கருணை, பாரதக் கதைகளில் வரலாறுகள், அம்மன்களின் கருணை, அடிமையிலிருந்து விடுபடமுடியாதா, உள, உடல் கஷ்டங்கள் சமூகப் பிரச்சினை, காதல், அரசியல் என்பவற்றை ஆழமாகக் கொண்ட வையாகவே காணப்படுவதை அவதானிக்கலாம்.

மேலும் இதன் ரசனையை தெளிவாக அறிவதனால் இத்தொழில் நடைபெறுமிடத்தில் நேரடியாகச்சென்று தொழிலாளர்கள் பாடும் விதத்தை கேட்டால் உண்மையான கவிநயத்தை அறிய முடிகின்றது. எல்லோரும் ஒருவருக்கொருவர் சளைக்காத முறையில் களைப்பை, கஷ்டத்தை கலைந்து பாடும் போது எல்லோரும் கவிதை இயற்றி இசைக்கக் கூடிய வர்களா என்ற எண்ணமே எம்மிடம் ஏற்படும். அது தவறல்ல, பொதுவாக எல்லோருக்குள்ளுமே இத்திறமையைக் காணக்குடியதாக உள்ளது. அம்பா என்ற கவிதை பலரால் அனுக முடியாதபடியால் அதுபற்றி ஆய்வு

அரங்கத்தில் வறாமை ஆய்வாளர்களின் அலட்சியமா அல்லது அறியாமையா என்ற கேள்வி எழுந்து கொண்டே இருந்து வந்துள்ளது. எனவே அம்பா மீனவக் கிராமங்களில் பாடும் தெம்மாங்குப் பாடல் எனவும் கூறி முடிக்கலாம்.

கரவலைத் தொழிலைப் போன்றே இறால் வளர்ப்பு தொழிலும் பெரும் முதலீடு கொண்ட தொழிலாகும். உடப்பைச் சுற்றியுள்ள சதுப்பு நிலப்பிரேதேசத்தில், முந்தல் களப்பு, ஒல்லாந்தர் வேட்டுவாய்க்கால், குருமங்களி போன்ற நீர்நிலைப் பிரேதேசத்தை அண்டிய பகுதிகளில் உடப்பூரின் தொழிலாண்மையாளர்களால் பெரும் முதலீட்டு இட்டு மேற்கொள்ளப்படுவதுடன், அது சார்ந்த தொழில்களும் விருத்தியடைந்து காணப்படுகிறது எனலாம். இத்தொழில் பெரும் இலாபத்தை ஈட்டித் தரும் தொழிலாயினும், அதிகம் இடர்களையும், நஷ்டத்தையும் கொண்டது மொன்றாகும். இத்தொழில் மூலமும், இது சார்ந்த வர்த்தக தொழிலாலும் உடப்பின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டது என்பதை மறுக்க முடியாது.

மீன்பிடி தொழில், இறால் வளர்ப்பு தொழில் இவற்றுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்பும் உடப்பின் சமூகப் பொருளாதாரத்தில் மாற்றத்தையும், வளர்ச்சியையும் ஏற்படுத்திய தொன்றாகும். ஆரம்ப காலத்தில் இந்தியா, மத்திய கிழக்கு நாடுகளில் தொழிவாய்ப்புக்காக சென்றவர்கள் அண்மைய இரண்டு தசாப்தமாக ஐரோப்பா, கனடா, அமெரிக்க, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளை நாடிச்சென்று உடப்பின் பொருளாதாரத்தில் பொரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளனர் எனலாம்.

# 5

# உலவும் வாழ்வியல் சடங்குகள்

## திருமணச்சடங்கு

காலச்சூழ்நிலைக்கேற்ப நாகரிகத்தையும், அந்நிய கலாசாரத் தாக்கங்களுக்கு வசமாகாத தனித்துவமும் கொண்ட உடப்பூர் மக்களின் மங்கல, அமங்கல சடங்கு முறைகள் மூலம் அம்மக்களின் நீண்ட வரலாற்று வாழ்வியலை உய்த்துணரலாம். உலகளாவிய இந்து சமயத்தவர்களின் திருமணக் கோலங்கள், நாடு, ஊர், கிராமம், மொழி, இனம், என்பதற்கொப்ப வேறுபட்டாலும், அடிப்படை கருத்தியலில் பல நூற்றாண்டுகளாகப் போற்றப்பட்டு வரும் சமய தாற்பரியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதே இந்துக்களின் வழிவழியான மரபாகும்.

ஒரே சமயத்தைச் சார்ந்தவர்களாயினும், பல்வேறு குடிப்பிரிவுகளைக் கொண்ட உடப்பூர் மக்கள், தங்கள் பிரிவுகளுக்குமென குறிப்பிட்ட வளவுகளை அமைத்து அதற்குட்பட்டதாக இனங்காட்டிகொண்டு, ஏனைய பிரிவுகளுடனும் நட்புணர்வுடன் செயற்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவு. திருமண பந்தம் மூலமாக் தங்கள் பிள்ளைகளை வெளி இடங்களுக்கு அனுப்பவோ, பிரிதொரு வளவுக்கு அனுப்பவோ ஒப்பினார்களில்லை; திருமண சம்பந்தங்கள் அந்தந்த குடிப்பிரிவுகளுக்கிடையேதான் நடந்தேற வேண்டுமென்பதில் தீர்க்கத்துடன் செயற்பட்டு வந்திருப்பதை அறிய முடிகின்றது.

இன்றைய உடப்பில் அவ்வாறான வளவு வாழ்க்கை முறை அருகி சமூககலப்பு அரும்பிய நிலையில், ஓரினம், ஒரே சமயமென்ற கோட்பாட்டுக்கிணங்கியவர்களாகக்காணப்பட்ட போதும், தொட்டகுறை விட்ட குறையாக சில வகுப்பு முறைகள் இன்றும் பெயரளவில் நிலவுகின்றன. அன்று, ஒரே வளவுக்குள் வாழும் பெண் வீட்டாருக்கும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் அன்னியோன்னிய உறவுப் பரிமாற்றமிருந்தாலும் குறிப்பிட்ட நாளில் இரு பகுதியினரும் சுற்றம் சூழவிருந்து திருமணத்தை சம்பிரதாய பூர்வமாக நிச்சயித்துக் கொள்வர்; அவரவர் பிள்ளைக்கு

கொடுக்கப்படும் ஆதனங்கள், தளபாடங்கள், நகைகள், வீடு என்பனவும் அனைவருக்கும் முன்னிலையில் பேசித்தீர்க்கப்படும்.

குறிப்பிட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் உறவு முறையிலான நட்பிருந் தாலும், திருமணம் உறுதி செய்த பிறகு ஒருவரை ஒருவர் பார்க்கவோ, சந்திக்கவோ அனுமதித்தார்கள் இல்லை. மணமேடையிலிருத்தி வேதியரால் சமயபூர்வமாக திருமணம் செய்து வைக்கும் வரை ஒருவரை ஒருவர் தனியாக சந்திப்பதை கட்டுப்பாடு மீறிய செயலாகக் கருதினர். வெவ்வேறு வளவுக்குள் காதல் போன்ற பிரச்சினை ஏற்படுமிடத்து அப்பிரச்சினை அடப்பனார் (கிராமத் தலைவர்) முன் விசாரிக்கப்படும். குரித்தவர் குற்றவாளியாகக் காணும் பட்சத்தில், பிராயச்சித்தமாக தண்டம் அல்லது ஊரிலிருந்து சிலகாலம் விலக்கி வைத்தல் போன்ற தண்டனை வழங்கப் படும்.

திருமணத்தில் உடன்பாடு கண்டவர்கள் கந்தோர் எழுதுதல் எனும் பதிவுத் திருமணத்தை எதிர்கொள்வர். மாப்பிள்ளை பட்டாடை அணிந்து, மாப்பிள்ளைத் தோழன் நண்பர்கள், உற்றார், உறவினர்கள் புடைசூழ பெண்வீட்டுக்குவருவார். அங்கு பெண் வீட்டாருடன் சேர்ந்து கந்தோருக்கு செல்வர். பதிவுத் திருமணம் முடித்து மணமகன் வீட்டுக்கு செல்லும் தம்பதிகளை ஆராத்தி எடுத்து வரவேற்று, அனைவருக்கும் பாற்சோறு வழங்கி உபசரிக்கப்படுவர். பின்னொரு நாளில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கும், மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கும் விருந்து கொடுப்பர்.

பந்தற்கால் நாட்டல், பொன்னுருக்கல், திருமண நாள் என்பவற்றுக்கான நாள், சுபநேரங்களை கோயில் குருக்களிடம் பெற்று, திருமணத்துக்கான, ஆயத்தங்களைச் செய்வதற்கு முன், சகல காரியங்களும் செவ்வனே நிறைவுற மாரியம்மனுக்கு பக்திபூர்வமாக உணவுப் பதார்த்தங்கள், கனிவர்க்கங்கள்படையலிட்டு குளிர்த்தி செய்து வழிபடுவர். குளிர்த்தி செய்த பதார்த்தங்களை வாழ்வுக்கரசிகளுக்கு (சுமங்கலிப் பெண்) பகிர்ந் தளிப்பர்.

குறித்த சுப வேளையில் முறையே மணமகன் வீட்டிலும், மணமகள் வீட்டிலும், பந்தற் கால் நட்டல் நடைபெறும். இது அரசாணிக்கால் எனப்படும். அரச மரக்கிளைக்கு பதிலாக முள் முருங்கை நடப்படுகின்றது. மணமகள் வீட்டில் திருமணம் நடைபெறுவதால், அங்கு நடப்படும்

அரசாணிக்கால் மாசுமறுவற்ற வெள்ளை கட்டி, குலை தள்ளிய வாழை நிறுத்தி, மாவிலை தோரணங்களால் சோடித்து, மணப்பந்தலாக விசாலித்த, மணமேடை அமைப்பர். மண மேடை கிழக்குப் பக்கமாக அமைக்கப்படும். அரசாணிக்கால் மங்கலப்பொருட்கள் சூழ நடுவில் இருக்கும். அரசாணிக் கால் வலம்வருதல் வேத காலத்திலிருந்து தொடரும் வழக்கமென சான்றோர் கூறுவர்.

மணமகள்வீட்டார் குறித்த சுப நேரமொன்றில் மங்கலப்பொருட் களுடன் ஆசாரியார் இல்லஞ்சென்று தாலிக்கு பொன் உருக்குவர்: திருமணச் சடங்குக்கு சற்று முன்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க, வாழ்வரசிகள் மங்கலப் பொருள்களுடன் சென்று ஆசாரியாரிடமிருந்து தாலிக் கொடியினை, பெற்றுச் செல்வர். தங்கத்தால் செய்த தாலியினை தங்கக் கொடி, அல்லது மஞ்சட்கயிற்றில் கோர்த்து, திருநீறிட்டு, சந்தனம், குங்குமம் சாத்தி சமய பூர்வமாக ஆசாரி கையளிப்பார்.

திருமணச் சடங்கிற்காக மணமகள் வீட்டுக்குப் புறப்படுமுன், மணமகனுக்கு 'மீசை வெட்டுக் கல்யாணம்' எனும் முகச்சவர சடங்கு நடக்கும். தாம்பூலம் தரித்தலே மீசை வெட்டுக் கல்யாணத்தின் பிரதான உபசரிப்பாகும். இச்சடங்குக்கு ஊராரை அழைக்க இரண்டு பெண்கள் நன்கு அலங்கரித்துக்கொண்டு, அல்லது சேலைத் தலைப்பை தலையில் இட்டவாறு வீடு வீடாகச் சென்று அழைப்பர்.

ஒருவர்: மாப்பிள்ளைக்கு மீசை வெட்டுக் கல்யாணம் வந்திடுங்கோ என்பார். மற்றவர்: வெற்றிலை பாக்குப் போட வந்திடுங்கோ என்பார். குறித்த நேரத்தில் வெண்சீலை விரிக்கப்பட்ட நாற்காலியில் மாப்பிள்ளையை உட்கார வைத்து, குடிமகன் (நாவிதன்) மீசை வெட்டுக் கல்யாணத்தை நிறைவேற்றுவார். வெற்றுடம்பில் வங்கி போன்ற கைவளை பூண்ட குடிமகன், சவரஞ்செய்யுமுன்னர் சபையோரை ஊர் ஆண்ட சபையோரே மாப்பிள்ளைக்கு மீசை வெட்ட உத்தரவா? குற்றங்குறையிருந்தால் கூறுங்கள் என்று மூன்று முறை கேட்பார். சபையிலிருந்து குற்றம் குறை இல்லை... வெட்டுங்கள் என்றதும் அவர் நிறைவேற்றுவார். அவ்விடத்தில் மஞ்சள் நீர் கலந்து பால் பாத்திரம் வைக்கப்பட்டிருக்கும். அதைத் தொட்டுத் தடவியே சவரஞ்செய்வார். சமூகமளித்திருக்கும் சபையோர் நாணயங்களை அப்பாத்திரத்தில் இடுவர். அவை குடிமகனுக்கே உரியதாம்.

மணமக்களுக்கான மங்கல நீராட்டு அவரவர் இல்லத்தில் நடைபெறும். பால், அறுகம், மஞ்சள் சேர்த்து மணமக்களின் தலையில் வைத்து நீராட்டுவர். மணமகனுக்கு தாய்வழி மச்சானும், மணமகளுக்கு மணமகன் சகோதரியும் நீராட்டுவர். பின்னர், திருமணச் சடங்குகளுக்கான ஆடை, அணிகலன்களை அணிந்து, சிகை அலங்கரித்து, திலகமிட்டு, பெரியவர் களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவர்.

மணமகள் வீட்டிலிருந்து மாப்பிள்ளைத் தோழன் வந்து மணமகன் சகிதம் அவர்களது பரிவாரங்களையும் மங்கல வாத்தியங்களுடன் அழைத்துச் செல்வார். மாப்பிள்ளைத் தோழன் பெரும்பாலும் மணமகளின் சகோதரன் முறையானவராகவே இருப்பார். இருவர் மேற்கட்டி எனக் கூறப்படும், வெண் சீலை பிடித்து மணமகன் திருமணப் பந்தலை நோக்கி ஊர்வலமாக செல்வார். மணமகன் மாப்பிள்ளைத் தோழனுடன் முன்னால் செல்ல, வாழ்வரசிமார், தாம்பாளங்களில் தாலிக்கொடி, கூறைச்சேலை, மற்றும் வெற்றிலை, பாக்கு, பூ, திருநீறு, சந்தனம், குங்குமம், தேங்காய், கற்கண்டு, வாழைப்பழம், அரிசி, காய்கறிகள், பழவர்க்கங்கள் ஆகிய வற்றைச் சுமந்து கொண்டு பின்னால் செல்வார். எல்லாவற்றுக்கும் முன்னால் இருவர் இருமருங்கிலும் தீப்பந்தம் கொண்டு செல்வர். மாப்பிள்ளை வருகிறார் துஷ்ட தேவதைகளே தூரச்செல்லுங்கள் என்பதை அறிவுறுத்துவதாக அது அமையும். (சுமங்கலிப் பெண்களை இவ்வூரார் வாழ்வரசிஎன்பர். பேச்சு வழக்கில் வாவ்வரசி எனப்படுகிறது.

ஊர்வலத்தின் இடையில் மணமகனின் மச்சாள் முறையானவர், வெண்சீலை யொன்றை குறுக்காகப் போட்டு வழிமறிப்பார். மாப்பிள்ளை, அவருக்கு நன்கொடையாக பணமேதும் கொடுக்கும் பட்சத்தில் சீலைத் துணியை அகற்றி ஊர்வலம் தொடர அனுமதிப்பார். ஊர்வலம் மணமகள் இல்லத்தை வந்தடைந்ததும், தலைவாயிலில் மணமகனுக்கு ஆராத்தி எடுத்து வரவேற்பர். பின்னால் வருவோரை பன்னீர் தெளித்து வாருங்கள் நாயனார் நாச்சிமார்களே, உள்ளே வாருங்கள் (தலைவர்கள், தலைவிகள் எனப் பொருள்படும்) என்று அழைக்க அனைவரும் மணப்பந்தலுக்குள் வருவர். பெண்கள் நாக்கை பல கோணங்களில் சுழற்றி குரவை இட்டு மணமகன் வந்து சேர்ந்ததை அறிவிப்பார். குரவையிடு முறைகளையும், எண்ணிக்கைகளையும் கொண்டு திருமணம் எந்த நிலையில் இருக்கிற தென்பதை ஊரார்கள் தெரிந்து கொள்வார்களாம்; சீன வெடிகளும் கொளுத்தப்படுவதுண்டு.

அம்பலகாரர் அல்லது அடப்பனார் என்ற கிராமத்தலைவர் அங்கு சமூகமளித்திருப்பார். இன்னாருக்கு திருமணம் செய்து வைக்க உத்தரவா? ...குற்றங்குறையிருந்தால் சொல்லுங்கள் என சபையோரை நோக்கி தலைவர் கேட்க, சபையோர் குற்றம் குறையேதுமில்லைஎனக் கூறுமிடத்து, திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்குவார்.

அரசாணிக் காலைச் சுற்றி சற்சதுரமான மூன்று அடுக்குகள் கொண்ட பீடம் அமைத்து (அரசாணி) அதன்மேல் வாழைமரம் கட்டி, இளைநீர் குலையும்கட்டி, நான்கு மருங்கிலும் குடங்கள் வைத்து, நான்கு குத்து விளக்கு, மூன்று அடுக்குப்பானையில் மஞ்சள் நீரும் அதனுள் சங்கும், மோதிரமும் காணப்பட அரசாணிக்கும் மணவறைக்கும் இடையில் புரோகிதர்க்குரிய ஓமக்குண்டம் வைத்திருக்கப்படும். பிள்ளையார், சிவசக்தி (சிவவர்த்தனி), நவக்கிரக, சந்திர கும்பங்கள் உரிய இடத்தில் ஸ்தாபித்து புரோகிதர் திருமணக் கிரியை ஆரம்பிப்பார்.

மணமகன் மணமேடையில் வீற்றிருக்க மணமகளை மணமகனின் சகோதரி அழைத்து வரும் போது சங்கு பெருக்கப்படும். மங்கல காரியங்களில் சங்கு பெருக்குதல் என்றும், அமங்கலத்தில் சங்கு ஊதுதல் என்றும் சொல்வர். மங்கலம் பெருகட்டும். என்ற தொனியில் சங்கு பெருக்குதல் எனவும், அமங்கலத்தில் ஊது - அணையட்டும் எனவும் பொருள் படும்.

சிவாச்சாரியார் முகூர்த்த நேரத்தை அனுசரித்து சபையோரின் அனுமதியுடன், விக்கினேஸ்வர பூசை செய்து மணமக்களுக்கு காப்பு கட்டுவார். கிரியைகள் நிகழும் போது, அதன் பின்னரும் இடையூறுகள் ஏதும் நிகழாது, செவ்வனே நிறைவேற காப்பு - காவல் வேண்டுவதே காப்பு கட்டாகும்.

சிவபூசை, நவக்கிரக பூசைகள் முடித்த பிறகு சீக்காய்ச் சடங்கு மணமகளுக்கும், மணமகனுக்கும் தனித்தனியாக நடைபெறும். இங்கு நெல், பணிகாரம், ரொட்டி, வாழைப்பழம், நிறைகுடம் போன்றன கொண்டு மச்சாள் உரித்தான ஐந்து பேரினால் ஆராத்தி எடுக்கப்படும்.

திருமணத்தின் முக்கிய நிகழ்வு தத்தம் பண்ணல் எனும் கன்னிகா தானமும், தாலி கட்டல் எனும் மங்கல நாண் புனைதலுமேயாம். மனித தர்மத்தை விளக்க தத்தம் பண்ணலும், இறையச்சத்தை உணர்த்த தாலி கட்டலும் விளங்குகின்றன. பூ, மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு,

பொன், பழம் ஆகியவற்றை, தங்கள் ஆறு தலைமுறைகளின் பெயர்களைச் சொல்லி சங்கற்பம் செய்த பிறகு மணமகன் கையில் மணமகளின் கையை பிடித்துக் கொடுப்பது தத்தம் செய்தலாகும். பெற்றோர் இல்லாதவிடத்து குடும்பத்தில் மூத்தோர் தத்தம் செய்து கொடுப்பர். இந்நிலையில் தாலி, கூறைச்சேலை, தேங்காய், மஞ்சள், குங்குமம், கண்ணாடி, மணமாலை என்பவற்றைப் பெரிய தாம்பாளத்தில் வைத்து, பந்தலிலுள்ள இல்லறத்தில் வாழும் பெரியவர்கள், வாழ்வரசிகளுக்குக் காட்டி ஆசி பெறுவர்.

மணமகன் கூறைச்சேலை கொடுத்து; அதை அணிந்து கொண்டு மீள வந்து அமர்வாள் மணமகள். பின்னர் சுப நேரத்தில் குருக்கள் தாலிக் கொடியை எடுத்து மணமகனிடம் கொடுக்க, மங்கல வாத்தியம் முழங்க, அவையோர் பூச்சொரிய, மணமகள் கழுத்தில் மணமகன் மங்கல நாண் பூட்டுவார். பின் திருநீறு பூசி சந்தனமிட்டு குங்கும திலகமிடுவார்.

அதைத் தொடர்ந்து, மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளல், பால் பழமருந்துதல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், அக்கினி வலம் வருதல், ஏழடி வைத்தல், பசுக்கன்று தரிசனம் போன்ற தொன்று தொட்டு தொடர்ந்து வரும் சமய அனுஷ்டானங்களை மேற்கொள்வர். இவற்றின் தாற்பரியங்கள் நாமறிந்ததே.

குருக்கள், திருமணத்தை சிறப்பாக செய்து, மணமக்களை சகல சௌபாக்கியங்களுடன் நிறைவான வாழ்வு வாழ வாழ்த்தியருளிவிட்டு விடைபெறுவார். அதைத்தொடர்ந்து உற்றார், உறவினர் மூத்தோர் அறுகரிசி யிட்டு மணமக்களை வாழ்த்துவர்.

அடுத்ததாக பணஞ்செய்தல் (மொய் யெழுதுதல்) நடக்கும். பின்னர் விருந்துபசாரம் இடம்பெறும். தங்கள் வசதிக்கேற்ற பணத்தை வெற்றிலையில் வைத்து மணமக்களுக்கு அன்பளிப்புச் செய்வதே பணஞ் செய்தலாகும். இதை, மொய்விருந்து என்றும் கூறுவர். இற்றை நாட்களில் மணமகன் வீட்டிலும், மணமகள் வீட்டிலும் தனித்தனியாக மொய்விருந்து நடைபெறுகின்றன. திருமணத்திற்கு முன்னரும் மொய்விருந்து நடப்பதுண்டு.

திருமண நாளாகிய அன்று, புதுத் தம்பதியிடம் தங்கள் சாந்தி முகூர்த் தத்தினை மூன்று நாட்களுக்கு ஒத்தி வைத்துக் கொள்ளும்படி, குறிப்பின் மூலம் அல்லது மிக நெருங்கியவர்கள் மூலம் அறிவுறுத்தப்படும். மூன்றாம் நாள் மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வரும் கூறைச் சேலையை பெண்ணும்,

பெண்வீட்டார் கொடுக்கும் பட்டு வேட்டியை மாப்பிள்ளையும் அணிந்து, அலங்கரித்துக் கொண்டு, உற்றார், உறவினர் சகிதம் இடியப்பம், துவை, முறுக்கு, பணிகாரம் என்பவற்றை உண்டு மகிழ்ந்து நீராடச் செல்வர்.

மச்சாள்-மைத்துனர் முறையானவர்கள் ஆளுக்கு ஆள் மஞ்சள் நீரூற்றி விளையாடுவர். மஞ்சக் குளித்தல் என்றும் கூறுவர்; பந்தற்காலில் சாய்ந்திருப்பவரை அப்படியே கட்டிவைத்து, கட்டியவர் கேட்கும் தொகையினையோ, பொருளையோ கட்டிவைத்திருப்பவர் கொடுக்க இசையும் பட்சத்தில் அவிழ்த்து விடுவார்கள். இவையெல்லாம் களிப்பூற்றச்செய்யும் குறும்புகளாகும்.

மணமக்கள் நீராடி, அலங்கரித்துக்கொண்டு இஷ்ட தெய்வங்களை வழிபட்டு புது வாழ்வு தொடங்குவர். நிகழ்காலத்தில், மிகச் சொற்ப சிலர், பதிவுத்திருமணத்தின் மூலம் இணைந்து வாழ்ந்து, சில காலத்துக்குப் பிறகு உறவுகளை அழைத்து கோயிலில் தாலி கட்டிக் கொள்ளுகின்றனர். காலத்துக்கேற்ற கருத்துக்களைச் சீரணிக்கத்தெரிந்த உடப்பூர் மக்கள், நவீன உலகின் பிரவேசத்திற்குத் தடையாகவிருக்கும் சில பழமைகளைத் தளர்த்தி வருவது கவனத்துக்குரிய தொன்றாகும். ஒருகாலத்தில் ஊரிலுள்ள சிறுபான்மை பிரிவினருக்கு விலக்களிக்கப்பட்டதாகக் கூறப்படும் குடைபிடித்தல், பட்டணிதல், பாதணி அணிதல் என்பன இன்றைய நவீன சமுதாயத்தில் கண்டு கொள்ளப்படுவதில்லை எனலாம். திருமணத்தில் மணமக்களது சாதகம் பார்த்தல், பெண்பார்க்கும் படலம், ஆயிரம் பொய் சொல்லல், தரகர் தொல்லை, சீதனப்பிரச்சினை என்பன அன்றைய காலத்திலும் இல்லை; இன்றைய காலத்திலும் இல்லை. என்பது கவனிக்கத் தக்கது.

திருமண ஊர்வலத்தின் போது, தீப்பந்தம் பிடித்தல், மீசை வெட்டுக் கல்யாணம், குரவையிடுதல், மணமகனை வழிமறித்தல் என்பனவும் வழக்கொழிந்ததொன்றாகிவிட்டது. பொதுவாகக் கூறுமிடத்து, அன்று வெற்றிலை, வைத்து ஊரவர்களை அழைத்த காலத்திலும் சரி, இன்று அழைப்பிதழ் அச்சிடக் கொடுத்து அழைக்கும் காலத்திலும் சரி, திருமணங்களை இவ்வூரார் வெறும் சம்பிரதாய சடங்காக கருதாமல், பொதுமக்கள் கலந்து சிறப்பிக்கும் ஒரு கூட்டுறவு கலாசார விழாவாகவே நிறைவேற்றி வந்திருக்கின்றனர்; தொடர்ந்தும் நிறைவேற்றி வருகின்றனர் என்பது மனம் குளிரத்தக்க உண்மை ஆகும்.

### பிறப்புச் சடங்குகள்

தமிழ் கலாசார மரபுகள் சங்கில் ஆரம்பித்து சங்கில் முடிவடையும் என சுருக்கமாக கூறுவர். குழந்தை பிறந்தவுடன் ஊதப்படும் சங்கு, ஒவ்வொரு சடங்கின் போதும் ஊதப்பட்டு இறுதி சடங்கான மரணச்சடங்கில் முடிவடை வதைக் காணலாம். உடப்பில் பிறப்பிற்கு முற்சடங்கான வளைகாப்பு மரபு இங்கு அன்று தொடக்கம் காணப்படவில்லை. ஆனால் நிறைமாத கர்ப்பிணிகளுக்கு பிடித்த உணவுகளை உற்றார், உறவுகள் தங்கள் வீட்டிலேயே செய்து கொண்டு வந்து கொடுப்பதனைக் காணலாம். இவற்றில் முக்கியமானது கட்டுச்சோறு அதாவது சோறு, கருவாடு, வாழைக்காய், பருப்பு, இறால், முட்டை போன்றனவற்றை சமைத்து வாழையிலையில் போட்டு ஒரு சீலையில் முடிச்சாக கட்டி கொடுப்பர். இவற்றைவிட அல்வா, தொதல், அடை, லட்டு, கேக் போன்ற பல பலகாரங்களை தாங்களே செய்து பழங்கள் சகிதம் கொடுப்பர்.

உடப்பில் குழந்தை பிறந்தவுடன் நாவிதனால் சங்கு ஊதப்பட்டு முப்பது நாள் துடக்கு அனுஸ்டிக்கப்படும், வீட்டு வாசலின் இரு மருங்கிலும் வேப்பிலை வைத்து துடக்கு அறிவிக்கப்படும். மங்கலச்சடங்குகளில் அரை நாண் பூட்டும் நிகழ்ச்சி (அறு நாக் கொடி), தலைமயிர் இறக்கல் (முடியிறக்கல்), காது குத்தல், பல்லுக் கொழுக்கட்டை சொரிதல் போன்றனவும் இடம்பெறுகின்றன. அரை நாண் பூட்டும் நிகழ்ச்சி இங்கு முறுக்குக் கயிறு போடல் என அழைக்கப்படுகிறது. குழந்தை பிறந்து முப்பத்து இரண்டாம் நாள் மாமன் உரித்தானவர் இக்கயிற்றை (திரித்து) குழந்தையின் இடுப்பில் கட்டுவார். அன்றைய தினம் பல விதமான பொரியலுடன் அதாவது மீன் பொரியல், வாழைக்காய்ப் போரியல், கத்தரிக்காய்ப் பொரியல், பிலாக்கொட்டைப் பொரியல், பப்படம், போன்றவற்றுடன் மீன் கறி, மஞ்சள் சோறு சமைத்து கொச்சியம்மனுக்கு படைத்து, மருத்துவச்சி மாருக்கு கொடுத்து உற்றார் உறவுகளுடன் உபசரிப்பர். இது கொச்சியம்மனுக்கும், மருத்துவச்சி மாருகளுக்கு செலுத்தும் நன்றி செலுத்தும் கடனாகவும் கருதப்படுகிறது.

தலை முடியிறக்கல் குழந்தை பிறந்து ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்குப் பிறகு நடைபெறுகிறது. குடிமகன்(நாவிதன்) சகிதம் தங்கள் குல தெய்வ ஆலயத்துக்குச் செல்லுவர். மஞ்சள் நீர் கலந்து பால் பாத்திரம் கொண்டு குடிமகன் முடியிறக்க அங்கு வந்திருக்கும் உற்றார் உறவினர்

நாணயங்களை அப்பாத்திரத்தினுள் இடுவர். அவை குடிமகனுக்கே உரியதாம். இறக்கப்பட்ட முடி மஞ்சள் தண்ணீருடன் சேர்த்து கடலில் கலக்கப்படும். அதைத் தொடர்ந்து பிள்ளையாரின் சந்நிதானத்திற்கு முன்பு பொங்கல், கொழுக்கட்டை, மோதகம், கடலை, பயறு, வாடா, வடை முதலியன படைத்து பெண்பிள்ளையாயின் கோயிலில் பிள்ளையார் சந்நிதானத்திற்கு முன்வைத்து விலாமுள் கொண்டு காதுகுத்தல் வைபவம் இடம்பெறும். இதுபோன்றே பல்முளைத்த பிறகு பிள்ளையாரின் சந்நிதானத்தின் முன் பல்லுக் கொழுக்கட்டை சொரிதல் நிகழ்ச்சியும் நடைபெறும். இவற்றை நாம் இன்னும் காணக்கூடியதாக உள்ளது.

### பூப்புனித நீராட்டுச் சடங்குகள்

சில, தசாப்தங்களுக்கு முன் உடப்பூரில் ஒரு பெண் பூப்பெய்துமிடத்து புறம்பாக ஒரு சிறு கொட்டில் அமைத்து, அதில் அப்பெண்ணை தனிமைப் படுத்தி வைப்பார்களாம். அன்றைய பெரும்பாலான வீடுகள் குறுகிய இடவசதியைக் கொண்டிருக்குமாகையால் பெண்ணினது காரணகாரிய செயற்பாட்டுக்கு ஏதுவாய் அவ்வாறு அமைத்துக் கொடுத்திருப்பார்கள் எனலாம்; இன்றைய காலத்தில் அவ்வாறு தனிமைப்படுத்துவதில்லை. குடும்பத்தில் மூத்தபிள்ளை பூப்பெய்திவிட்டால் குடும்பத்தார் ஒப்பாரி வைத்து அழும் பழக்கமும் ஒரு காலத்தில் உடப்பூரில் நிலவியதாக மூதாதையர் கூறுவர். தங்கள் உறவுப் பந்தங்களிலிருந்து விடுபட்டுப் போக தயாராகி விட்டாள் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாக அது அமைந்திருக்கக்கூடும். பூப்பெய்திய அதே நாளில் சொந்த பந்தங்களும், ஒத்த வயதுடைய தோழிமார்களும் சூழ, கடல் நீர் மொண்டு கொண்டு வந்து பெண்ணுக்கு கண்ட நீர் வார்க்கப்படும்.

உறவினர்களும், அயலவர்களும், பூப்பெய்திய பெண்ணுக்கு அவசியமான நல்லெண்ணை, வெற்றிலை, பாக்கு, மஞ்சள், முட்டை, சீனி போன்றவற்றை கொண்டு வருவர். இவை பூப்பெய்திய பெண்ணானவள் செல்வச்சிறப்போடு, மங்கலமாக, மகாலெட்சுமி போல வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்ற குறிப்புப் பொருளாக அமைகிறது.

ஐந்து நாட்களுக்கு பெண்ணுக்கும், தோழிமார்களுக்கும் குடிமகன் (சலவையாளர்) தோய்த்த ஆடைகளை நாள்தோறும் வழங்கி வருவார். இதை மாற்றுடை என்பர், ஐந்தாம் நாள் மாமா, மாமி முறையானவர்

(பெரும்பாலும் தாய் மாமன்) சில வீட்டு உபகரணங்கள் அடங்கலாக, பட்டாடை, அலங்காரப் பொருட்கள், தங்க நகைகள் என தங்கள் வசதிக் கேற்றவாறு சீர் கொண்டு வருவர், இதை ''செப்பெடுத்தல்'' என்றும் கூறப்படும். ஆரம்ப காலங்களில் சீர்வரிசைகளை செப்புப் பேழையில் இட்டு ஒரு தட்டத்தின் மேல் வைத்து மேற்கட்டி பிடித்து கொண்டு வருவர். இதுவே செப்பு எடுத்தல் என மருகலாயிற்று, அதைத் தொடர்ந்து, பெண்ணின் தலையில் மஞ்சளும், தேங்காய்ப்பாலும் இட்டு நீராட்டி, அலங்கரித்து நிறைகுடம், தங்கநகை போன்றவற்றைத் தரிக்கச் செய்வர்.

பிட்டு, களி, துவை போன்ற உணவுப்பதார்த்தங்களும் பல்வகையான இனிப்பு வகைகள், கொண்டும், அனைவரும் உபசரிக்கப்படுவர். புஷ்பவதியான பெண்ணுக்கு, சமுகமளித்திருப்போர் வெற்றிலையில் அன்பளிப்புப் பணம் வைத்துக் கொடுப்பர். அன்பளிப்புச் செய்யும் பெரியவர்களுக்கு பெண் தாள்பணிவார்.

இந்நாளில் ஒரு சாரார் அழைப்பிதழ் கொடுத்து உறவுகளையும், ஊரவர்களையும் அழைத்து மணவறையிட்டு, மங்கல வாத்தியங்கள் மேவ, சிவாச்சாரியார் முன்னிலையில் சாமர்த்தியச் சடங்கினை விமரிசை யாக செய்கின்றனர்; செப்பெடுத்தலையும் இதே சிறப்புடன் செய்வதுண்டு. அந்நாளில் சிவாச்சாரியார் முன்னிலையில் பூப்புனித சடங்குகள் நடை பெற்றதற்கான அறிகுறி தென்படவில்லை. இவை திருமணச்சடங்குடன் சீக்காய்ச் சடங்கு (சீமெந்துச் சடங்கு) என்று சேர்த்து செய்யும் பழக்கம் இன்றும் காணப்படுகின்றது.

**மரணச்சடங்குகள்**

மனிதனானவன் இம்மையில் எத்தகைய வாழ்வு மேற் கொண்டிருந்தாலும், மறுமையில் மேலான தேவநிலையை அடைந்து, தம் மக்களை, சந்ததிகளை ஆசீர்வதித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக செய்யும் கடனே ஈமக் கடன் பிரேதத்துவத்திலிருந்து, பித்ருத்வம் (தேவநிலை) அடைந்த வரை, திருமணத்துக்கு அழைக்கும் நாத்திமுகம் எனும் கிரியை மூலம் இது அறியப்படலாம். ஆகவேதான், இந்துக்கள் ஈமச்சடங்கினை மிகுந்த பொறுப்போடும், கடமையுணர்வோடும் நிறைவேற்றி வருகின்றனர்; உடப்பூரில் நடந்தேறும் ஈமச்சடங்ககளிலும் இவற்றின் தாற்பரியம் உணரப் படுகிறது.

உடப்பு சுற்றுவட்டாரத்தில் எங்கேனும் ஒரு மரணம் சம்பவித்து விட்டால், மூன்று முறை சங்கு ஊதி ஊராருக்கு அறிவிப்பர்; இன்னார் இறந்து விட்டார் என்று ஒரு சிலருக்கு தெரிந்து விட்டால், அவர்கள் மூலமாக துரித கதியில் அனைவருக்கும் தெரிந்துவிடும். இதை வியலம் கூறுதல் என்பர். உயிர் நீத்த உடலை நாட்கணக்கில் வைத்திருப்பதை இவ்வூரார் என்றும் விரும்பினார்களில்லை. உறவுகள் அனைத்தும் சூழ விருப்பதாலும், குருக்கள் மூலம் ஈமக்கிரியைகளைச் செய்யும் வழக்க மில்லாததாலும், உறவினர்களே முன்னின்று குடிமகன் வழிகாட்டலில் சடங்குகளைச் செய்து கூடிய விரைவில் அடக்கஞ் செய்து விடுகின்றனர். ஊரில் மரணமொன்று நேர்ந்தால், பிரேதம் அடக்கஞ்செய்யும்வரை கோயில் மணிகள் ஒலிக்காது. பூசைகளும் தாமதமாகும்; இதன்பொருட்டுப் பூதவுடலை காலதாமதமின்றி அடக்கஞ்செய்யும் முறை ஏற்பட்டிருக்கலாம்.

ஊரவர்களின் சமய, கலாசார பீடங்களான கோயில்களும் இச்சோக நிகழ்வில் பங்கேற்கின்றதை குறிக்குமுகமாகவே மணிகள் ஒலிப்பதில்லை எனலாம். பிரேதத்தை வீட்டில் ஓரிரவு வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அன்றிரவு முதல் விடியும் வரை, வீட்டு முற்றத்தில் மரக்குற்றிகளை இட்டு தீ வளர்ப்பர். துஷ்ட தேவதைகள் அண்டாதிருக்கும் பொருட்டே தீ வளர்ப்பதாகக் கூறுவர்.

தலைப்பிள்ளையாகிய சிறு வயதினர் இறக்கும் பட்சத்தில் அவ்வுடலை வீட்டு வளவுக்குள்ளேயே அடக்கம் செய்யும் வழக்கம் அன்றிருந்தது. குடிசனப் பெருக்கத்தினாலும், இட வசதிகளை கருதியும், இவ்வழக்கம் இன்று அருகிய நிலையில் காணப்படுகிறது. குடும்பஸ்தர் ஒருவர் இறந்த வுடன், அவரையும் அவர் உயிர் பிரிந்த இடத்தையும் சுத்தம் செய்து தலைமாட்டில் குத்துவிளக்கொன்றை எரிய விடுவர். குடிமகன் வந்து மூன்றுமுறை சங்கு ஊதி ஊருக்கு அறிவிப்பான்.

பிள்ளைகள், உறவினர்கள் வந்து சேர்ந்ததும் உடல் சவரம் செய்யப் பட்டு, அரைப்பு தேய்த்து நீராட்டப்படும். இறந்தவரின் நெருங்கிய உறவினர், பிள்ளைகள் கடல்நீர் கொண்டுவந்து நீராட்டுவர். இதை ''நீர் மாலை'' என்பர். நீராட்டப்பட்ட உடலுக்கு பட்டுடைகள் அணிவித்து, திருநீறு, சந்தனம், குங்குமம், இட்டு மங்கலகரமாக அலங்கரித்து வைப்பர். உரிமைக்கார விதவைகள் உயிர் நீத்த உடலின் மூன்று ஸ்தானங்களில் வாய்க்கரிசியிடுவர். மாலைமணம் என்று இதனை கூறுவர். இதனைத்

தொடர்ந்து உறவினர்கள் அனைவரும் வாய்க்கரிசி இடுவர். பெண்கள் வீட்டிலும், ஆண்கள் இடுகாட்டிலும் இடுவர். வாய்க்கரிசியிட்ட உரிமைக் காரர்கள் வட்டிமா சுற்றுவர். வாய்க்கரிசிச் சட்டியினை கையிலெடுத்து மேலே இருவர் வெள்ளை பிடித்துக் கொண்டிருக்க, ஏனையோர் சுற்றி வருவர்.

பிரேதத்தின் தலை மாட்டிலிருந்து உரிமைக்காரர்கள் மாரடித்துக் குளறுவர். அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பணம் கொடுத்து ஆறுதல் கூறப்படும். மாரடித்த கூலி மடிமேலே என சிலேடையாக இவ்வூரார் கூறுவதுண்டு. இதற்கிடையில், இறந்தவரின் மனைவியை அவர் கொடுத்த கூறைச்சேலை அணிவித்து, மங்கலகரமாய் பொட்டிட்டு பூச்சூடி வாழ்வரசியாக அழைத்து வந்து, இறந்தவரின் பக்கத்தில் ஓரளவு அணைத்தவாறு படுக்கவைத்து வெள்ளைத் துணியொன்றினால் மூடி வைப்பர். சிறிது நேரத்தில் அகற்றி பெரும்பாலும் மயக்க நிலையி லிருக்கும் அவரை கைத்தாங்கலாக தூக்கி வைத்து உரிமைககாரரினால் விதவைக்கான வெள்ளைச்சீலை கொடுக்கப்படும். இதை உடன் கட்டை யேறுதல் என்பர். உடன்கட்டையின் பாவனை முறையை இன்று ஓரளவு இவ்வூரில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பூதவுடலைத் தாங்கும் பாடை கட்டுதல், இக்கிராமத்தில் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் நடைமுறையாகும். பல்வகை சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டும், இக்கிராமத்தின் சூழல், சம்பிரதாயங்களுக்கு இசைவானதாகவும் காணப்படுவதால் பாடை முறை நிலைத்து நிற்கிறது. வெளியூர்களில், ஆஸ்பத்திரிகளில் மரணிக்கும் ஒரு சில உள்ளூர் வாசி களின் உடல்கள் மட்டுமே சவப்பெட்டிகளில் அடக்கம் செய்யப்படுகின்றன. இவ்வூராரில் பெரும்பாலானோர் பாடை கட்டுவதில் கை தேர்ந்தவராகவே இருப்பர். மனிதனுக்கு இறுதியாக செய்யும் கைங்கரியத்தை செவ்வனே நிறைவேற்றும் எண்ணம் மேலோங்கியிருப்பதையே இவை சுட்டிக் காட்டுகின்றது. தேர் பாடை, கப்பல் பாடை என பாடை பல வகையுண்டு. மிக வயதான முதியவர் இறந்தால், அவருக்கான பாடை மிக விசேஷ மாகவும் செய்யப்படுவதுண்டு. பட்டுகள் சுற்றி வர்ண கடதாசிகளால் சோடித்து, தோரணங்கட்டி அலங்கரிக்கப்படும்.

அகால மரணமாகும் இளம், நடுத்தர வயதினருக்கு மிதமான அலங் காரத்துடன் பாடை அமைப்பர். பிரேதத்தை தாங்கிய பாடையை வீட்டை

விட்டு வெளியே கொண்டு போகும் போது, உரலில் எள்ளும், தண்ணீரும் இட்டு விசுறுவர். ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு தாழாமை யினால் ஒப்பாரி வைப்பர், இதை கட்டியழுதல் என்பர். குடிமகன் சங்கு ஊதிச்செல்ல, கொள்ளி வைப்பவர் முக்காலி வடிவிலான உறியில்புகை நெருப்புடன், கொள்ளிக்குடத்தினை இடப்பக்கமாகத் தாங்கி, பாடைக்கு முன் செல்வார். இடுகாடு வரைக்கும் பாடைக்கு மேலால் பொரி தூவிக் கொண்டு வருவார்கள்.

இடுகாட்டில் கொள்ளி வைப்பவருக்கு முடியிறக்கல் இடம்பெறும். தாய்க்கு மூத்த மகனும், தந்தைக்கு இளைய மகனும் கொள்ளி வைப்பர். தற்காலத்தில் கொள்ளி வைப்பவர் முடியிறக்குவதில்லை, மாறாக, புறங்கையில் லேசாக மழித்துக் கொள்கின்றனர். கொள்ளி வைப்பவர் கடல்நீர் அடங்கிய கொள்ளிப் பானையை இடது தோளில் வைத்து பிரேதத்தை மூன்று முறை சுற்றி வர, பின்னால் செல்லும் குடிமகன் கத்தியொன்றினால் மூன்று முறை துவாரமிட்டு, அந்நீர் பிரேதத்தில் படும் படி கைகளினால் விசுறுவார். மூன்று முறை சுற்றியதும் அப்பானையை பின்புறத்தால் நழுவவிட்டு உடைக்கச் செய்து, கொள்ளி வைத்தவரை திரும்பிப் பார்க்காமல் தலையை மூடிக்கொண்டு போகச் செய்வார். இதுவே கொள்ளி வைத்தல் எனப்படுகிறது.

பின்னர் அனைவரும் சேர்ந்து பூதவுடலை நல்லடக்கம் செய்துவிட்டு, உடுத்துச் சென்ற ஆடைகளைத் தோய்த்துக் குளித்துவிட்டு வீடு திரும்புவர். வாசலில் உலக்கையை கடந்து, வீட்டுக்கு வரும் அனைவருக்கும் துக்க கஞ்சி காய்ச்சி பரிமாறப்படும். சில தினங்களுக்கு துக்க வீட்டின் அடிப்படை செலவீனங்களை உரிமையுடையோர் பகிர்ந்து கொள்வர். இறந்தவரின் நெருங்கியவர்கள் கருமாதி முடியும் வரை கோயில்களுக்குச் செல்லவோ, பொட்டிட்டு பூச்சூடிக் கொள்ளவோ மாட்டார்கள். கொள்ளி வைத்தவரை எட்டுமுடியுமட்டும் வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க மாட்டார். பாதுகாப்புக்கு அவருக்கு இரும்புக் காப்பு அணிவிக்கப்படும்.

மூன்றாம் நாள் காடாற்றல் நடைபெறும். தைலம், அரப்பு, பழங்கள், இளநீர் போன்றவற்றால் சிதையை அபிஷேகம் செய்து, கால், கொப்பூல், மார்பு, நெற்றி, தலை கூறுபடுத்தி, மனப்பூசை செய்து, கண்ணை மூடிக் கொண்டு அவற்றிலிருந்து மண் எடுத்து ஒரு பாத்திரத்தில் இடுவர். பின் அவற்றைக் கடலில் கரைப்பர். அதற்கு முன்னர், சிதையின் மேலால்

கிளறி தானியம் விதைத்து, நெற்பொரி, தாம்பூலம், பழவகைகள் முதலிய வற்றை பூதபலியாக செய்து விடுவர்.

முப்பதாம் நாள் ஒற்றைப்படை நாள் ஒன்றிலே கல்லெடுப்பு செய்வர். இதன் நோக்கம் பிரேத வடிவத்தை நீக்குதலாம். கல்லில் அலங்கரித்து இறந்தவரின் கோத்திரம், பெயர் கூறி பிரதிபிம்பமாய் பாவித்து அரைப்பு, அரிசிமா, மஞ்சள், பழம், இளநீர், பன்னீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து, இறந்தவர் அணிந்திருந்த ஆடைகளை அணிவித்து வழிபாடு செய்வர். பின் கல்லுக்கு இருபத்தொரு பச்சையரிசி உருண்டையை பிண்டமாக இட்டும் இறந்தவர் விருப்போடு உண்ட உணவு வகைகள், பழங்கள், பணிகாரங்கள் ஆகியவற்றைப் படையலிட்டு, தீபாராதனை செய்வர்.

அடுத்த நாள் நீர் சார்ந்த இடத்தில் சிறு கொட்டில் கட்டி சைவக் குருக்களால் இறந்தவருக்காக பிதிர் சாந்தி செய்யப்படும். சைவக் குருக்கள் இக்கல்லை வைத்து பிரேதத்திற்குரிய சகல கடமைகளையும் செய்வார். அடக்கம் பண்ணப்பட்ட பிரேத உடலாக பாவை கட்டி அதற்கு சகல கிரியைகளும் செய்து ஆண், பெண் இருபாலாரும் அதற்கு வாய்க்கரிசி செய்வர். பிரேதம் எடுக்கும் அன்று சைவக் குருக்களைக் கொண்டு பிரேதத்திற்குரிய கிரியைகள் செய்யாது, அதை 31ம் நாளில் செய்கின்ற அந்தியட்டிக் கிரியையில் பாவை கட்டி செய்கின்ற படியால் ஆண், பெண் இருபாலாரும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டியுள்ளது. பின் பாவையை எரித்து சாம்பர் எடுத்து திருப்பொன்சுண்ணம் இடித்து கல்லை நீராட்டி வழிபாடு முடிந்ததும் கல்பிண்டங்கள், சாம்பர் ஆகியவற்றை கடலில் கரைத்துவிட்டு நீராடிச் செல்வர். அன்று வீட்டில் விசேஷமாக சமைத்து அனைவரும் உண்பர். அத்தோடு துக்கம் முடிந்ததாக கருதுவர். கல் லெடுப்பு வீட்டுக் கிரியை ஆகும். கருமாதி எனும் அந்தியேட்டி நீர் சார்ந்த இடத்தில் இறந்தவருக்காக வேதியரால் செய்யப்படும் சாந்தியாகும். அதனைத் தொடர்ந்து இடுகாட்டில் இறந்தவரை புதைத்த இடத்தில் தலைப் பக்கம் நடுகல் வைத்து அல்லது வசதி படைத்தோர் சிறு சமாதி அமைத்து வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் விளக்கேற்றி வழிபட்டு வருவர். இது எமது பண்டைய தமிழர் மரபான நடுகல் வழிபாட்டை நினைவு கூர்ந்து நிற்கின்றது எனலாம்.

6

# ஊர்த் திருவிழாக்கள்

## திரௌபதையம்மன் தீமிதிப்பு திருவிழா

மகாபாரதத்தின் கதாநாயகியாகத் திரௌபதை விளங்குகின்றாள். துருபத மன்னன் குழந்தை வரம் வேண்டி மேற்கொண்ட வேள்வித் தீயிலிருந்து இவள் வெளிப்பட்டவள் என்று கருதப்படுகின்றது. திரௌபதைக்கு வைதேகி, பாஞ்சாலி, கிருஷ்ணி, யக்னசேனி, பரிஷதி என வேறு பல பெயர்களும் வழங்கப்படுகின்றன. பராக்கிரமம் மிக்க உயர்ந்த குடும் பத்தில் உதித்தவள் திரௌபதை. சந்தர்ப்ப வசத்தாற் பாண்டவர்கள் ஐவரையும் இவள் மணக்க வேண்டி ஏற்படுகின்றது. திரௌபதைக்கென்று நடாத்தப்பட்ட சுயம்வர தினத்திலே அர்ச்சுனன் அவளைக் கரம்பற்றி வீட்டுக்கு அழைத்து வந்து தாயை அழைத்து அம்மா இன்று நாங்கள் ஒரு சிறந்த பொருளைக் கொண்டு வந்துள்ளோம். வந்து பார் என்று அழைக்கின்றான். அதற்குக் குந்தி பார்க்க என்ன இருக்கிறது? எது வானாலும் ஐவருமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்கிறாள். பிறகுதான் வந்திருப்பவள் பெண் என்று அவளுக்குத் தெரிகின்றது. இருப்பினும் தன் வாக்கைப் பொய்யாக்காது ஐவரையும் அவளை மணக்கும்படி கூறுகின்றாள். இதுவே திரௌபதை ஐவருக்கும் உரியவளாவதற்கு முக்கிய காரணமாகின்றது. ஐந்து சகோதரர்களுக்கும் மனைவியாக இருந்தாலும், திரௌபதை அவர்களது ஒற்றுமைக்கும், உறுதிக்கும் காரணமாக இருந்தாள். ஆனால் மகாபாரதத்தின் முடிவுவரை திரௌபதை பலரினாலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றாள்.

திரௌபதைக்கு ஏற்பட்ட துன்பம் திரௌபதை என்ற பாத்திரப் படைப்பிலே மக்கள் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. இந்த ஈடுபாட்டின் காரணமாகத் திரௌபதை தெய்வ நிலைக்கு உயர்த்தப் பட்டு திரௌபதை அம்மனாக வழிபடப்படுகின்றாள். தென் இந்தியாவின் பல பகுதிகளிலும், இலங்கையின் சில பகுதிகளிலும் இத்தகைய திரௌபதையம்மன் வழிபாட்டை இன்றும் நாம் காணக்கூடியதாக உள்ளது. பாரம்பரிய சக்தி வழிபாட்டின் தாற்பரியங்களை இத்திரௌபதையம்மன் வழிபாடு உணர்த்தி நிற்கின்றது.

திரௌபதையம்மன் வழிபாட்டின் தோற்றம் குறித்த வரலாற்றைச் சுருக்கமாக இங்கு நோக்குதல் அவசியம். கி.பி.670ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வந்த பல்லவ மன்னனான முதலாம் பரமேஸ்வரவர்மன் காலத்திலே போருக்கு ஏராளமான வீரர்கள் தேவைப்பட்டார்கள். எனவே ஊர் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, அவர்களை போரிலே ஈடுபட வைப்பதற்காகக் கோயில்களிலே பாரதக் கதை படிக்க இம்மன்னன் ஏற்பாடு செய்தான். இத்தகைய பாரதக் கதையை படிக்கச் செய்த பல்லவ மன்னனது காலத்திலேயே திரௌபதையம்மன் வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றும், தெய்வத்தோடு தொடர்புபடுத்தினால்தான் தன் முயற்சி வெற்றியடையும் என்ற நோக்கில் திரௌபதையம்மன் கோவில்கள் முதலாம் பரமேஸ்வரவர்மனால் நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் என்றும் துளசி இராமசாமி தெருக்கூத்துஎன்ற தமது கட்டுரையில் விபரிக்கின்றார்.

பல்லவர் காலத்துக்கு முன்னர் ஊர்ப்புறங்களில் மக்கள் நாட்டுப்புற மரபுத் தெய்வங்களையே வணங்கி வந்தார்கள். இத்தகைய கோயில்கள் பல்லவர் காலத்தில் திரௌபதையம்மன் கோயில்களாக மாற்றப்பட்டிருக் கலாம். என்றும் துளசி இராமசாமி கூறுகின்றார். இத்தகைய திரௌபதை யம்மன் வழிபாட்டு முறையே இந்திய மக்களால் இலங்கைக்கும் கொண்டு வரப்பட்டது. இலங்கையிற் புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு, முந்தல் ஆகிய ஊர்களிலும், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மண்முனை, பாண்டிருப்பு, புளியந்தீவு, போரதீவு ஆகிய ஊர்களிலும் திரௌபதையம்மன் கோயில்கள் அமைந்துள்ளன. இத்திரௌபதையம்மன் வழிபாடு சடங்கு நிலைப்பட்ட வழிபாட்டு முறையாக விளங்குகின்றது. மேலும் இச்சடங்கு முறையில் நாட்டுப்புற அம்சங்களும், கூத்து அம்சங்களும் விரவிக் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் திரௌபதையம்மன் வழி பாட்டோடு தொடர்புடைய பாரதக் கதை படிப்பு தனித்துப் பிரிந்த நிலையில் கதாகாலட்சேபமாகவும் (உடுக்கடிப்பாட்டு) தெருக் கூத்தாகவும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. ஆனால் இலங்கையில் இவ்வழிபாடு அதனுடைய பாரம்பரியத் தன்மையை இழக்காத வகையில், பாரதக்கதை படிப்புடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையிலேயே இன்றும் மக்களாற் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாட்டார் இயலின் தன்மைகள் நிறையப் பெற்று ஒரே நேரத்தில் நாடகமாகவும், சடங்காகவும் நிகழ்த்தப்படுவ

தனாலேயே மக்களை இலகுவில் ஈர்க்கின்ற வழிபாட்டு விழாவாக இது காணப்படுகின்றது.

திரௌபதையின் துன்பம் யதார்த்தமானதாகவும், மனிதத் தன்மை கொண்டதாகவும் அமைந்துள்ளது. பாரதக் கதை முழுவதுமே திரௌபதை அவமானத்துக்கு மேல் அவமானம் அடைகிறாள். அவள் ஐந்து பேருக்கு மனைவியாக இருந்தபோதிலும் விதவையைப் போன்றது அவளது நிலை. ஒவ்வொரு முறையும் அவள் அவமரியாதையை அனுபவிக்கும் போதும் அவளுடைய கணவர்களும், மாமனார்களும் பார்த்துக் கொண்டிருப் பார்கள். திரௌபதை மக்கள் பார்க்கும்படியாக வீதிவழியே துச்சாதனனால் ஆடை களைய முனைந்து அவமரியாதை செய்யப்படுகின்றாள். இங்கு திரௌபதை என்ற பாத்திரத்தினூடாக மனித பலவீனங்களும் குரூரச் செயல்களும் உள்ளது உள்ளபடியே சித்திரிக்கப்படுகின்றன. திரௌப தைக்கு நடந்த அநீதி சமுதாய நடப்புகளோடு இணைந்தும், பிணைந்தும் காணப்படுகின்றது. இதனாலேயே திரௌபதையின் துன்பநிலை மக்கள் மனதில் மிக இலகுவில் இடம்பிடித்து விடுகின்றது.

திரௌபதை போன்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலையுண்ட அல்லது தற்கொலை புரிந்துகொண்ட பெண்கள் சிலரின் நினைவாகத் தென்னிந்தியாவிலே பல திரௌபதையம்மன் கோயில்கள் தோற்றம் பெற்றுள்ளமையை நாம் காணலாம். இலங்கையிலும், உடப்பு திரௌபதையம்மன் கோயிலானது பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்ட கமலக்கன்னி என்ற பெண்ணின் நினைவாகவே எழுப்பப்பட்டுள்ளது என்பது கர்ண பரம்பரைக் கதையாகும். எனவே நாட்டுப்புற மக்கள் பாலியல் வன்முறைகாரணமாக இறந்த தம் முன்னோர்களுட் சிலரைத் திரௌபதியுடன் தொடர்புபடுத்தித் திரௌபதையைத் தமக்குரிய தெய்வமாகப் போற்றி அவளுக்கென்று பல கோயில்களை எழுப்பினார்கள் எனலாம். இதுவே நாட்டுப்புற மக்கள் மத்தியில் திரௌபதை வழிபாடு அதிக அளவில் செல்வாக்குப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

தென்னார்க்காடு, செங்கல்பட்டு முதலிய தமிழகத்தின் வட மாவட்டங் களிலே ஏராளமான திரௌபதையம்மன் கோயில்கள் உள்ளன. இக் கோயில்களுக்கு வன்னியர்கள் பூசாரிகளாக உள்ளனர். விழா எடுப்பதும் இவர்களே, தாங்களும் பாண்டவர்களைப் போலவே நெருப்பிலிருந்து தோன்றியவர்கள் என்று வன்னியர்கள் கருதுகின்றனர். எனவே பாரதக்

கதைக்கு இவர்கள் முதன்மை கொடுத்துத் திரெளபதையை தெய்வமாக வழிபடுகின்றார்கள். இங்கு பாரதப் பாத்திரங்கள் மக்களினால் தங்களுடைய வரலாற்றோடு பிணைத்து எண்ணப்படுவதனைக் காணலாம். இதே பண்பு இலங்கையிலுள்ள உடப்புக் கிராம மக்களிடையேயும் காணப்படுகின்றது. தாம் பாண்டவர்களது வம்சத்தினர், குருகுலத்தார் என்று உடப்புக் கிராம மக்கள் பெருமையோடு கூறுவர். உடப்புத் திரெளபதையம்மன் கோயில் விழாவிலே படிக்கப்படுகின்ற பாடல்கள் இதனை உணர்த்தி நிற்கின்றது.

திரெளபதையம்மன் வழிபாடானது பாமர மக்களின் அன்றாட வாழ்வோடு கலந்த ஒன்றாகப் பாரத நாடு முழுவதும் பரவியுள்ளது. இலங்கையிலும் இது குறிப்பிடத்தக்க அளவில் தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது. இத்தெய்வத்தின் வழிபாட்டிற்கு உகந்த சிறப்பு நாளாகத் திங்கட்கிழமை கருதப்படுகின்றது. பெரும்பாலான திரெளபதையம்மன் கோயில்களிலே உட்புறத்திலே திரெளபதை சிலையும், பஞ்சபாண்டவர்சிலையும், கிருஷ்ணர்சிலையும் காணப்படுகின்றன. திரெளபதையின் வாகனமாக அன்னப்பறவை கருதப்படுகின்றது.

திரெளபதையம்மன் கோயில்களில் ஆண்டுக்கு ஒருமுறை பதினெட்டு நாட்களுக்குத் தொடர்ந்து திருவிழா நடத்தும் வழக்கம் உள்ளது. இந் நாட்களில் பாரதக்கதை படிப்பும், கூத்தும் நடத்தப்படும். கோயிலின் முன்புறத்திலே பாரதக் கதை படிப்பதற்காக மேடை ஒன்றினை அமைத்து, பதினெட்டு நாட்களும் இரவில் சுமார் ஒன்பது மணிமுதல் ஒரு மணி வரை மகாபாரதக் கதையைத் தகுந்த இசை விற்பனர்களைக் கொண்டு சொல்லச் செய்கின்றனர். பாரதக் கதை கூறுவோர் சில வேளைகளில் பாரதக்கதையைச் சாராத துணைக்கதைகளாக நகைச்சுவைக் கதைகள் சில வற்றையும் கதையைக் கேட்போர் உற்சாகம் பெறவேண்டிக் கூறுவார்கள்.

தமிழிற் பாரதக் கதையைப் படிப்பவர்களிற் பெரும்பாலானவர்கள் தங்களின் கதைக்கு ஆதாரமாக வில்லிபுத்தூராழ்வாரின் மகா பாரதத்தையே கொள்கிறார்கள். கதைப்படிப்பை நிகழ்த்தும் போது முதலில் வில்லிபாரதப் பாடல்களை இசை கூட்டிப் பாடிப் பின்னர் அதகுப்பொருள் கூறுவார்கள். கதைப்படிப்பை நிகழ்த்துகின்ற பிரதான பாட்டுக்காரரின் முன்னால் பிற்பாட்டுக்காரர் ஒருவர் அமர்ந்திருந்து கதையின் முக்கியமான இடங்களில் ஆமாம், ஆஹா, அப்படியா போன்ற சொற்களைக் கூறுவார். அத்தோடு உரையாடல் மூலமாகக் கதையின் போக்கை வளர்க்கவும்,

கதையை திருப்பிச் சொல்லவும், இடையிடையே தனிப்பாடல்கள் சிலவற்றைப் பாடவும் வல்லவராக இவர் இருப்பார். இதைவிடப் பக்கவாத்தியக்காரர்களாக ஓரிருவர் அமர்ந்திருப்பார்கள்.

பாரதக் கதைப்படிப்பின் முடிவில் ஐந்து நாட்களுக்குக் கூத்துக்கள் நடாத்தப்படும். திரௌபதை கல்யாணம், துகிலுரிதல், பஞ்சபாண்டவர் வனவாசம், அர்ச்சுனன் தபசு, கிருஷ்ணன் தூது, தேத்தரசன் கோட்டை பிடித்தல், அரவான் களப்பலி, திரௌபதை கூந்தல் முடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் கூத்துவடிவில் நிகழ்த்திக் காட்டப்படும். இதுவே பாரதக்கூத்து என வழங்கப்படுகின்றது. கோயிலுக்கு கோயில் நிகழ்த்தப்படும் கூத்துக்கள் வேறுபாடும். சில கோயில்களிற் கிருஷ்ணன் தூது, அரவான் களப்பலி, தேத்தரசன் கோட்டை பிடித்தல் போன்றவை கூத்தாக நிகழ்த்திக் காட்டப்படுவதில்லை. காலம், பொருள், வசதி முதலியவற்றைப் பொறுத்து இக்கூத்துக்கள் நிகழ்த்தப்படும் நாட்கள் தீர்மானிக்கப்படும்.

திரௌபதையம்மன் விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இறுதிநாட் திருவிழாவின்போது நிகழ்த்தப்படுகின்ற தீமிதிப்பு உற்சவம் விளங்குகின்றது. இதுவே இவ் வழிபாட்டின் உயர்வான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இது தனியான ஒரு நாள் விழாவாகப் பெரும்பாலான திரௌபதையம்மன் கோயில்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. தீ மிதிப்புச் சடங்கு இரண்டு காரணங்களை முன்னிட்டு நடாத்தப்படுகின்றது. அவை வருமாறு:

மகாபாரதத்தின் கதாநாயகியான திரௌபதை துருபத மன்னன் செய்த தவத்தின் காரணமாக யாகாக்கினியில் தோன்றியவள் என்று கருதப்படுகின்றது. அதை நினைவு கூரும் முகமாக இந்தத் தீமிதிப்பு உற்சவம். மேற்கொள்ளப்படுகிறது. மற்றும் சந்தர்ப்ப வசத்தால் திரௌபதை பஞ்சபாண்டவரையும் மணக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. பஞ்சபாண்டவர்களுக்கு மனைவியாக இருந்தாலும் ஒருவருடன் தனது ஒரு வருட வாழ்வை வாழ்ந்ததன் பின்னர் மற்றவருடன் மறு வருடம் இணைந்து வாழ்வதற்கு முன்னர் தீயின் மீது நடந்து தனது கற்பின் தூய்மையை நிரூபிப்பது திரௌபதையின் வழக்கம் எனவே அடியவர்களும், தீமிதித்துத் தெய்வத்தின் மீதான தமது பக்தியை நிரூபித்து வருகின்றனர்.

திரௌபதையம்மன் வழிபாடு தென்னிந்தியாவிற் பிரசித்தி பெற்றுள்ள அளவிற்கு இலங்கையிற் பிரசித்தி பெறவில்லை என்பது மனங்கொள்ளத் தக்கது. காலவோட்டத்திலே பல்வேறு காரணங்களால் இவ்வழிபாடு

இலங்கையிற் செல்வாக்கு குறைந்து கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. புத்தளம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் வாழும் இந்து சமய மக்களிற் பெரும் பாலானோருக்கு இத்தகையதொரு வழிபாடு இலங்கையில் நிலவுகின்றது என்றோ, இது நாட்டாரியல் அம்சங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட தாக விளங்குகின்றது என்றோ தெரியாத நிலை காணப்படுகின்றது. திரௌபதையம்மன் வழிபாடும் அதனுடன் தொடர்புடைய பாரதக் கூத்துக்களும், போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

**வேள்வித் திருவிழா**

அழியாத உண்மைகளாகிய சமய தத்துவங்களை விளக்கும் நோக்கமாகக் கொண்டே தெய்வங்கள் படைக்கப்பட்டுள்ளன, இத்தெய்வவழிபாடு மக்களின் தன்னம்பிக்கையையும், மன ஆறுதலையும் ஏற்படுத்துகின்றது. காலத்தால் பழமையான ஆலயங்களுள் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வூர் மக்களுக்கு இடையூறுகளும், துன்பங் களும் வரும்பொழுது அவர்கள் தங்களை அறியாமலே காளிதாயே எம்மைக் காப்பாற்று என்று நா தழுதழுக்கும் அளவிற்கு இங்குள்ள காளி தெய்வம் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது.

ஆரம்பத்தில் இங்குள்ள மக்களுக்கு கொலரா எனப்படும் கொள்ளை நோய் (வாந்திபேதி) ஏற்படவே மக்கள் பயத்தினால் திகைத்தனர். ஒரு நாள் கொத்தக் கிழவன் உருவில் காளி தோன்றி நீங்கள் என்னை கடல் நீர் கொண்டு வேப்பிலைக் கும்பமேற்றி, கடல்நீரில் விளக்கெரித்து வருடாவருடம் வழிபடுங்கள். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் காப்பாற்றுவேன் என திருவாய் மலர்ந்தருளியதாகவும், அன்றிலிருந்து நோய் நீங்கியதும் கொத்தக் கிழவனுக்கு காளி உருக்கொண்ட இடத் திலேயே ஒரு ஒலைக்குடிசையிலான ஆலயம் தாபிக்கபட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதையினால் அறியப்படுகின்றது. தெய்வங்கள் மகிழ்ச்சியாக இருப்பர் எனும் நோக்குடனேயே வேள்வி விழா செய்யப்படுகின்றது. காளி நல்லோரைக் காப்பாற்றி தீயோரை அழிக்கும் பாணியிலேயே கடாய், சேவல் போன்ற உயிர்ப்பலிகளை ஏற்றுக்கொள்ளுகின்றாள்.

இவ்வாலயத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரே ஒரு விழா வேள்வி விழா மட்டுமே! இவ்விழா புரட்டாதி மாதத்தின் மகா

பரணி நட்சத்திரத்தை உள்ளடக்கிய புதன் கிழமை நாளில் கும்பம் தாபிக்கப்பட்டு அன்றிலிருந்து பத்தாவது நாள் வெள்ளிக்கிழமையில் வேள்விவிழா நிறைவு பெறும். இது இவ்வாலயத்திற்குரிய ஒரு பாரம்பரிய மரபுத் திருவிழாவாகும்.

முதலாம் நாள் புதன்கிழமை மாலை எல்லா மூர்த்தங்களுக்கும் அபிஷேகம் அலங்காரம் செய்து சுமார் 7.00 மணியளவில் சாதாரண பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிள்ளையார், அம்மன், ஆகிய வற்றின் ஆசீர்வாதங்களைப் பெற்றுகொண்டு கரகச்செம்பு, வேப்பிலை, வெள்ளிப்பிரம்பு போன்ற இத்தியாதிப் பொருட்களுடன் பாட்டு, மத்தளம், பக்தர்கள், சகிதம் கடலும், களப்பும் வெள்ளப்பெருக்கு காலத்தில் சங்கம மாகும், இடமான அறுவாயிற்குச் செல்லுவர். அங்கு களப்புப் பகுதியில் மூன்று நீரூற்றுக்களை ஏற்படுத்தி அவற்றை ஒன்றாக்கி அதிலிருந்து பெறப்படும் நீர் புதிய அகப்பை கொண்டு கரகச் செம்பில் எடுக்கப் படுகின்றது.

இம்மூன்று நீரூற்றுகளும் கங்கை, ஜமுனை, காவேரி என சித்தரிக்கப் பட்டு அம்மூன்று நதி நீர்களையும் ஒன்றாக்கி எடுப்பதாகவே அது அமைந்துள்ளது. இதனை காவேரி தீர்த்தம் எனக் கூறுவர். கரகச் செம்பு நிறையதீர்த்தம் எடுக்கப்படுகின்றது. ஒரு ஊரின் வளத்திற்கு நீர்வளம் மிக அவசியமாகும். அதன் காரணமாக வற்றாத நதிகளில் இருந்து நீரும், எப்போதும் செல்வச் செழிப்புடன் திகழ வேண்டும் எனும் நோக்குடன் அதனுள் ஒரு ரூபா நாணயமும் இடப்படுகின்றது. அதன் மீது மக்களின் நோய் தீர்க்கும் வேப்பிலைக் கும்பம் தாபிக்கப்படும். அக்கும்பத்திற்கு நைவேத்தியங்கள் படைத்து பூசை செய்து பூசையின் முடிவில் இந் நைவேத்தியங்களை தோண்டிய கங்கை நீரூற்றினுள் இட்டு மூடப்படும். பின் கரகத்தைப் பூசகர் தோளில் சுமந்து கொண்டு கோயிலை வலம் வந்து மகாமண்டபத்தின் ஈசான மூலையில் மேடையொன்று அமைத்து வெள்ளைச் சீலை விரித்து அதன்மீது கரகத்தை இருத்தப்பட்டதும், கொண்டுவந்த கடல்நீரில் விளக்கேற்றப்படும். இத்தூண்டாமணி விளக்கு பத்து நாளும் கடல் நீரில் எரிவது குறிப்பிடத்தக்கது.

இவ்வேளை காவல் தெய்வங்களான வைரவர், வீரபத்திரர் ஆகியோர் களை மனித உருவில் காட்டுவதற்காக நேர்த்திக்காரர்கள் இருவர் ஊரவர் களினால் நியமிக்கப்படுவர். அவர்கள் இருவரும் புதிய மண் கலயம் இரண்டைத் தாங்கி அருகிலுள்ள இந்துமாக் கடல் நீர் எடுத்து அவற்றினுள்

ஒரு ரூபா நாணயங்களைத் தட்சணையாக இட்டு வேப்பிலைக் கும்பமத்தை வைரவரும், மாவிலைக் கும்பத்தை வீரபத்திரரும் தோளில் தாங்கியவாறு ஆலயத்தின் உள்வீதி வலம் வந்து மூலஸ்தானத்தினுள் இருக்கும் அம்மனின் வலது புறத்தில் வேப்பிலைக்கும்பமும் இடது புறத்தில் மாவிலைக்கும்பமும் வைக்கப்படும். இவற்றில் மாவிலைக்கும்பத்திற்கு செந்நிறப்பட்டும், வேப்பிலைக்கும்பத்திற்கு பச்சை நிறப்பட்டும் உடுத்தி அலங்கரிக்கப்படும். அன்றிரவு 8.30 மணியளவில் பூசை நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு நடை சாத்தப்படும்.

மறுநாள் வியாழன் காலை உபயகாரர்களின் அபிஷேகமும் பகல் விஷேட பூசையும் நடைபெறும். இரவு விஷேட பூசையுடன் அலங்கரிக் கப்பட்ட அம்மன் உள்வீதி வலம் வந்து பூசை நிறைவுபெறும். மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை காலை உபயகாரர்களின் அபிஷேகத்துடன் அம்பாளுக்கு அலங்காரம் செய்து காலை 9.00 மணியளவில் திருக்கரகம் ஊர்வலமாக செல்லுதற்கு ஆயத்தமாகும். இதற்காக காவல்காரர்கள் இருவரும் கடல் நீராடி (வெள்ளை நிற) மஞ்சளில் தோய்த்த அங்கவஸ் திரத்தை அணிந்து கொண்டு கழுத்தில் பூமாலையும் இடுப்பில் வேப்பிலை களை வரிந்து கட்டிக் கொண்டவர்களாகக் காட்சியளிப்பர். இவற்றின் பின்னர் முதலில் பிள்ளையாருக்கும் அதன் பின்னர் அம்பாளுக்கும் பூசகரினால் தீபம் காட்டி தேங்காய் உடைத்து அம்மனை வேண்டி பூசகர் நிற்கும் பொழுது சன்னதம் ஏற்படும். அதே வேளை காவலாளிகள் இருவருக்கும் சன்னதம் ஏற்பட்டு தன்னை மறந்து ஒருவகை வெறியாட்டத் துடன் கோயிலின் வெளிவாயில் வரை மிகப்பயங்கரமான சத்தத்துடன் வந்து செல்லுவர். பூசகர் கரகத்தைத் தலையில் சுமந்து கொண்டு வெளியில் வரும்பொழுது பலிபீடத்திற்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் வேப்பிலையுடன் கூடிய ஏந்திய வைரவராகிய காவலாளி அம்மனின் இடது புறத்திலும், வேப்பிலையுடன் கூடிய சூலாயுதத்தை வீரபத்திரராகிய காவலாளி தோளில் தாங்கியவண்ணம் அம்மனுக்கு வலது புறத்திலுமாக ஆலயத்தின் உள்வீதி வலம் வந்து மாரியம்மன் கோயிலை அடைந்து அங்கிருந்து திரௌபதியம்மன் கோயிலுக்குச் சென்று மீண்டும் ஆலயத்தை அடையும். அதனைத் தொடர்ந்து பகல் பூசை நடைபெறும். இரவு விஷேட சோட சோபசாரப் பூசையும் சுவாமி உள்வீதி வலம் வந்து நிறைவு பெறும்.

ஆறாம், ஏழாம் நாட்களான திங்கள், செவ்வாய் தினங்களில் காலை வழமையான உபயகாரர்களில் அபிஷேகங்களும், இரவு பூசையுடன்

சுவாமி உள்வீதியும் வலம் வரும். எட்டாம் நாளான புதன்கிழமை அபிஷேக ஆராதனையுடன் இரவு 8.30 மணியளவில் அர்த்த ராத்திரிக் கரகம் ஊரின் மூலை முடுக்கெல்லாம் சென்று காவல் புரிந்து நாற்சந்தியில் வந்து கரகத்தை மேடைமீது வைத்து காவல் தெய்வங்களின் ஆயுதங்களை அருகில் வைத்து அவற்றைச் சூழ்ந்து பூசகர், காவல் தெய்வங்கள் இருவர், மற்றும் இருவருமாக காளியம்மனுக்குரிய எச்சரிக்கைக்கு ஏற்ப கும்மி நடனம் ஆடுவர். இது காளியம்மன் சந்தோசமாகவே இருக்கிறாள் என்பதைக் காட்டுவதாக அமைகின்றது. எச்சரிக்கையின் இறுதியில் குரவையிடுதலும், அரோகரா, கோசத்துடன் நிறைவு பெறும். மீண்டும் கரகத்தைத் தாங்கியவாறு பாட்டுமத்தள இசையுடனும் ஆலயத்தை வந்தடையும். அதனைத் தொடர்ந்து பூசை, சுவாமி உள்வீதி உலாவுடன் நிறைவு பெறும். இன்றிரவு ஆலயத்திற்கு முன்னால் தற்காலிக தென்னோலைப் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு அதனுள் வெள்ளைச்சீலை கட்டி அவை முழுவதும் வேப்பிலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

ஒன்பதாம் நாள் வியாழன் காலை அபிஷேகம், அதனைத் தொடர்ந்து 8.00 மணியளவில் பூசகரினால் அக்கினிச் சட்டி அக்கினிச் சட்டி தாங்கிச் செல்லும் வைபவம் இடம்பெறும். முதலில் சகல விக்கிரகங்களுக்கும் தீபராதனையுடன் பூசகர் மூலஸ்தான அம்மனின் முன் சென்று அம்மனின் அனுக்கிரகத்தைப் பெற்று சன்னதத்துடன் வந்து மகாமண்டபத்தில் தீமூட்டப்பட்டுக் கொண்டிருக்கும். அக்கினிச் சட்டியை கையில் ஏந்த முற்படும் வேளையில் ஊர்ப் பெரியவர் கையில் விபூதித் தட்டைத் தாங்கியவாறு மிகவும் பணிவுடனும், பயபக்தியுடனும் தாயே ஊர் மக்களை நோய் நொடிகளிலிருந்து காத்துக்கொள் என வேண்ட அம்மனும் விபூதித் தட்டில் பயப்படாதே காக்கின்றேன் என அடித்து சத்திய வாக்கைக் கொடுக்கும். அப்பொழுது அருகிலுள்ள ஊர் மக்களினால் அரோகரா எனும் கோசம் எழும். தீச்சட்டியை கையில் தாங்கியவாறு பாட்டு மத்தளம் காவல் தெய்வங்கள் சகிதம் கோயிலை வலம் வந்து ஆலய பிரதான வாயிலை அடைந்ததும் அங்கு தீராத நோய் பிணிகளை உடையவர்களும், குழந்தைச் செல்வம் இல்லாதவர்களும், பிறப்பினால் ஊனமுற்றவர்களும் கடலில் நீராடி ஈர உடையணிந்து கையில் தூபத்துடன் அம்பாளின் முன் தங்கள் குறைகளைக் கூறி மன்றாடுவர். உடன் அம்மனும் தனது இடையிலுள்ள விபூதிப்பையில் இருந்து விபூதிப் பிரசாதம் எடுத்து

பிணியாளர்களுக்கு ஒன்றுக்கும் பயப்படாதே என்று கூறிப் பூசும் இவ்வாறு கரகம் செல்லும் பாதை தோறும் சென்று மீளும் அக்கினிச் சட்டி ஆலயத்தை வந்தவுடன் அக்கினி சட்டியை ஆலய மூலஸ்தான வாசலின் முன் வைத்து விட்டு கரகத்தை சுமந்துகொண்டு மீண்டும் முன்னைய பாதைகளினூடாகச் சென்று வரும் இக்கரகத்தை பிச்சைக்கரகம் என்று கூறுவர். ஏனெனில் மறுதினமான பத்தாவது நாளில் வழங்கப்படும் அன்னதானத்திற்கான பொருட்களைச் சேகரிக்கும் பொருட்டாகச் செல்லுவதையும் காணலாம். அதனைத் தொடர்ந்து மக்கள் எல்லோரும் தத்தம் வீடுகளில் இருந்து அரிசி, முட்டை, கோழி, கடா போன்ற சமையலுக்குத் தேவையான உணவுப்பண்டங்களை கரகத்திற்கு சமர்ப்பிப்பர், பின்னால் வந்து கொண்டிருக்கும் மாட்டு வண்டில்களில் சேகரித்து அவற்றை ஆலயத்திற்குக் கொண்டு வருவர்.

ஆலயத்திலிருந்து ஒவ்வொரு முறையும் கரகம் செல்லும் வேளைகளில் வீதியின் இரு மருங்கிலும், வீட்டு வாயில்களின் முன்னால் வேப்பிலையுடன் மஞ்சள் நீர் நிறை குட கும்பங்களும் வைக்கப்பட்டிருக்கும். கரகம் வீட்டு வாயிலை அடைந்ததும் அந்நிறைகுட நீரினால் கரகத்தின் திருப்பாதங்களை கழுவி வழியனுப்புவர். அதனுடன் தொடர்பான வேப்பிலைக் கிளைகளை வீட்டு வாசலில் செருகி வைப்பர், அல்லது வீட்டுக் கூரையின் மீது எறிவர். வேப்பிலை ஒரு நோய் தீர்க்கும் நிவாரணியாகவும் தொற்று நீக்கியாகவும் பயன்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

கரகம் ஆலயத்தை வந்தடைந்ததும் மதிய பூசை நடைபெறும். மத்தியானத்திலிருந்து மறுநாள் வேள்விப்படையலுக்குரிய சமையலுக்கான ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கும். இரவுப் பூசையும், சுவாமி ஊர்வீதி வலமும் இடம் பெறும். பின் பூசையுடன் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டதும் நிறைவு பெறும். சிறிது நேரத்தின் பின் விசேட பூசை ஒன்று வைத்து காவல்காரர்களினால் தயார் செய்யப்பட்ட பொங்கல் விநாயகப் பானையும், அத்துடன் அமர் என்று கூறப்படும் பெரிய பொங்கல் பானையும், பூசை செய்து அடுப்பில் ஏற்றப்படும். இவ் அடுப்பில் இருந்து பெறப்பட்ட செந்தணல் கொண்டு மறுதினம் நடைபெறவுள்ள வேள்விப் படையலுக்கு அடுப்பு மூட்டப்பட்டு பெரும் சமையல் ஒரு புறம் ஆரம்பிக்கப்பட மறுபுறம் பொங்கிய விநாயகப் பானையை பேச்சியம்மன்

சந்நிதானத்தில் வைத்து அதன் வாயை வாழையிலையினால் மூடிக்கட்டி வைக்கப்பட்டிருக்கும். அதனைத் தொடர்ந்து ஆலய பந்தலின் முன் நாளை நடைபெறவுள்ள பெரும்படையலுக்கு முதலில் கருங்கடாயும் ஐந்து சேவல்களும் பலியிடப்படும். அதிலிருந்து சிந்தும் இரத்தத்தை கிண்ணம் ஒன்றில் எடுத்து ஆலய மூலஸ்தான அம்பாளின் முன் வைத்து திருக்கதவு சாத்தப்படும்.

பத்தாம் நாள் வெள்ளி காலையில் பறை மேள இசையொலியுடன் திருக்கதவு திறக்கப்படும். இப்பறையொலியுடனேயே திருக்கதவு திறத்தல் தொடர்ந்து பத்து நாளாக நடைபெறுவது குறிப்பிடக் கூடியதாகும். சமைக்கப்பட்ட உணவு ஸ்தம்ப மண்டபத்தில் சுத்தமான வெள்ளைத்துணி விரித்து அதன் மீது சோறும் கறியுமாகப் படை படையாகக் குவிக்கப்பட்டு பெரும்படையல் இடப்படும். அதன் மேல் காசான் கொழுக்கட்டை 05 (பெரிய அளவிலான கொழுக்கட்டை) மாவிளக்கு, அவித்த முட்டை, ஆகியன வைத்து குவியலின் நன்கு திசைகளிலும் இரவில் வெட்டப்பட்ட சேவல் தலைகளின் ஐந்தை கொதிநீரில் அவித்து படையலின் நான்கு மூலைகளிலும் தடி ஒன்றின் மீது செருகி குத்தி வைக்கப்படும். அத்தோடு காயமருந்தும் வைக்கப்பட்டிருக்கும். இதனை பூசை நடைபெறும் வரையும் சுத்தமான வெள்ளைத்துணியினால் மூடியிருக்கும். அதனைத் தொடர்ந்து பிள்ளையார் தொடக்கம் அனைத்துப் பரிவாரங்களுக்கும் விஷேட அபிஷேகங்கள் நடைபெற்று அம்மனுக்கு மஞ்சள் உடை அணிவிக்கப் படும். இவ்வேளை காவல்காரர் இருவர் பூசகர் உட்பட கடல் நீராடி, நன்னீரிலும் குளித்து மஞ்சளில் தோய்த்த அங்கவஸ்திரத்தை அணிந்து அவர்களின் இடையில் வேப்பிலைகள் வரிந்து கட்டப்பட்டிருக்கும். கோயிலுக்கு முன்னால் உள்ள பந்தலுக்கு வெளியில் மஞ்சள் நீராடுதல் வைபவத்திற்காக பெரிய மண்பானையொன்றில் மஞ்சள் நீர், பானையின் கழுத்து விளிம்பு வரை இருக்குமாறு தயார் செய்து அடுப்பில் ஏற்றுவதற்கு முன்னர் தேங்காய் உடைத்து வெற்றிலை, பழம், பாக்கு என்பன வைத்து தூபதீபம் காட்டி தொடர்ந்து பத்து (கடல் நீரில்) நாட்களாக மூலஸ் தானத்தில் எரிந்து கொண்டிருக்கும் தூண்டாமணி விளக்கிலிருந்து தீச்சுடர் கொண்டு வந்து அடுப்பு மூட்டியதும் பானை அம்மூவரினாலும் ஏற்றப் படும்.

இவ்வேளையில் ஊர்மக்களால் குறிப்பாக பெண்களால் ஆலயத்தின் நாற்புறமும் பொங்கல் பானைகள் ஏற்றப்படும். இதற்குத் தேவையான நெருப்பு மஞ்சள் நீராடலுக்குதயார் செய்யப்பட்ட அடுப்பிலிருந்து எடுத்துச் செல்லுவர். அதனைத் தொடர்ந்து கரகம் வெளிச் செல்லுவதற்காகப் பிள்ளையார் தொடக்கம் சகல பரிவாரங்களுக்கும் தீபம் காட்டப்பட்டு கரகம் பறை வாத்தியம், பாட்டுமத்தளம், காவல் தெய்வங்களுடன் ஊரைக் காவல் செய்வதற்குப் புறப்படும். முதலில் ஊரின் மேற்குத் திசையான ஒரு எல்லையில் கரகத்தை மேடையொன்றின் மீது அதனருகே காவல் தெய்வங்களின் ஆயுதங்களையும் வைத்துப் பின் சிவப்புச் சேவல் ஒன்றை கடலில் நீராட்டி, அதற்குத் தூப தீபம் காட்டி சிறு கத்தி கொண்டு பலியிடப்பட்டு இந்தா ஏற்றுக்கொள் என்று ஒருவரினால் விண்ணதிர உரத்துக் கத்தி கடல் நோக்கி எறியப்படும், அங்கிருந்து கரகத்தைத் தாங்கிக்கொண்டு ஊரின் மற்றைய தெற்கு, கிழக்கு, வடக்கு எல்லைகளுக்குச் சென்று இவ்வாறு சேவலைப் பலியிட்டு ஊர்க்காவல் செய்த பின் கரகம் மீண்டும் ஆலயத்தை வந்தடைந்து, ஆலயத்தினுள் செல்லுவதற்கு முன்னர் கரகத்தை ஆலய முற்றவெளியில் மேடையொன்றின் மீது வைத்து அதற்கு அருகில் வீரபத்திரர், வைரவர் எனப்படும் காவல் தெய்வங்களின் ஆயுதங்களையும் வைத்து இக்கிராமத்திற்கேயுரிய கலாச்சாரப் பண்புகளுடன் கும்மி நடனம் ஆடுவர். கும்மி நடனத்தில் பூசகர், காவல் தெய்வம் இருவர் மற்றுமிருவர் கலந்து கொள்வர். மறுபுறம் பெண்களின் பொங்கல் நிகழ்ச்சியும், ஆலயத்தினுள் பக்த அடியார்களினால் அருச்சனைத் தட்டுகள் கொடுத்து அம்பாளின் ஆசிவேண்டிச் செல்லுதலும் நடைபெறும்.

கும்மி அடித்தல் வைபவம் நிறைவு பெற்றதும் அக்கரகம் பந்தலில் அமைக்கப்பட்ட மேடையின் மீது வைக்கப்படும். சிறிது நேரத்தின் பின், மஞ்சள் நீராடும் வைபவம் நடைபெறும். இதற்காகப் பூசகர், காவலாளிகள் இருவர் ஆகியோர் திருக்கரங்களிலும், தென்னம்பூ கொடுக்கப் பட்டிருக்கும். மூவரும் தென்னம்பூவைக் கையில் தாங்கி அசைந்து அசைந்து பானையை வலம் வரும்பொழுது சன்னதம் ஏற்பட்டுவிடும். சன்னதத்துடன் பானையை நோக்கியவாறு ஆடி, அசைந்து வலம் வந்து கொண்டிருப்பர். மஞ்சள் நீர் கொதித்துப் பொங்கி வழியும் வேளையில் கையிலுள்ள தென்னம்பூவினால் தோய்த்து அதன் மூலம் தலையில் ஊற்றுவர். அப்பொழுது மூவரும் மிகவும் ஆவேசமாகச் செயற்பட்டுக்

கொண்டிருக்கும் பொழுது உதவியாளர்களினால் தடுத்து நிறுத்தப்படும். உடன் மஞ்சள் நீர்பானை அடுப்பில் இருந்து இறக்கி அருகில் வைக்கப் படும். மஞ்சள் நீர் பொங்கி வழிய ஆரம்பிக்கும் வேளையில் முன்னர் போன்று அம்பாளிடம் ஊரை நோய் நொடிகளில் இருந்து காப்பாற்றுமாறு வேண்டி சத்திய வாக்கு எடுக்கப்படுகின்றது.

பின்னர் பலியிடுதல் வைபவம் நடைபெறும். இதற்காக பலியிடுப வருக்கு மனத்துணிவு ஏற்பட அம்மனுக்குத் தீபாராதனை செய்து அம்மன் அருகில் இருக்கும் பெரிய கத்தியையும் காளாஞ்சியும், விபூதிப் பிரசாதமும் கொடுக்கப்படும். பின் பந்தலின் முன் மக்கள் வெள்ளம் திரண்டிருக்க ஊரின் சார்பாக முதலில் கருங்கிடாய் ஒன்றிற்கு நீரூற்றிதூப தீபம் காட்டி உணர்வு கொண்டதும், அம்மனின் அனுக்கிரகம் கிடைத்து விட்டதாகக் கொண்டு அதன் தலையில் கயிறு ஒன்றைப் பொருத்தி முன்னாலும், அதன் கால்களைப் பின்னாலும் இழுத்தவாறு இருக்க பலியிடுபவரினால் அதன் கழுத்துத் துண்டிக்கப்படும். அவ்வேளை பலியிடுதல் தொடங்குவ தற்கு முன்னமே சன்னதத்துடன் நின்று கொண்டிருக்கும் காவல் தெய்வங் களிருவர் பலியிட்ட கடாயில் இருந்து வெளியேறும் குருதியை மாறி, மாறி உறிஞ்சிக் குடிப்பர். அவர்களில் இருந்து வெட்டிய கடாய் பறித் தெடுத்து தூரத்தில் எறியப்படும். இவ்வாறு பல கிடாய்கள் வெட்டப் பட்டதும் சேவல்களும் வெட்டப்படும். சிலர் நடை கிடாக்கள் என்று அதனைப் பலியிடாமல் ஆலயத்திற்கே கொடுத்து விட்டுச் செல்லுவர். இன்று பலி கொடுப்பதைவிட நடை கிடாக்களும், சேவல்களும் பலி யிடாமல் கோயிலுக்கே விடப்படுவதைக் காணலாம்.

இவ்வைபவம் நிறைவு பெற்றதும் ஆலய பந்தலின் முன்னே கூரிய தடியினால் ஆன கழு மர மொன்றின் மீது வெண்ணிறச் சேவல் ஒன்றை கடல் நீரில் நீராட்டி, அதற்கு விபூதி, சந்தனமிட்டு, தூபதீபம் காட்டி, அதன் குதத்தினூடாக செலுத்தப்பட்ட கழு மரக்கூர்வாய்வழியாக வெளியேற, சேவலின் தலை கிழக்கு நோக்கியவாறு கழுமரம் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து வைரவர் ஆலயத்திற்கு அருகிலுள்ள பாதாளக் குழியில் சேவல் ஒன்றை நீரூற்றி தூபதீபம் காட்டி வைத்து பலகை ஒன்றினால் மூடி வைக்கப்படும். இது அமுக்குக் கோழி என அழைக்கப்படுகின்றது.

இந்நிகழ்ச்சி முடிவடைந்ததும் பூசகர், காவல் தெய்வங்கள் தங்களை இரத்தக்கறையில் இருந்து சுத்தப்படுத்திக் கொள்வர். அதனைத் தொடர்ந்து

பூசை நடைபெறும். பூசையில் படையல், பலியிட்ட கடாய், சேவல், கழுமர மேற்றிய சேவல், ஆகியவற்றிற்கெல்லாம் தூபதீபம் காட்டப்படும். வைரவருக்குரிய படையலில் விசேடமாக சாராயம், சுருட்டு போன்ற போதைப் பொருட்களும் வைக்கப்படுகின்றன. பூசை நிறைவு பெற்றதும் படைக்கப்பட்ட பெரும்படையல் சாதம் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

கடல்நீரில் ஏற்றிய தூண்டாமணி விளக்கு பத்து நாளும் எரிந்து கொண்டிருப்பதும், கடல் நீர் கொண்டு ஏற்றிய வேப்பிலைக் கும்பம் பூத்துக் காய்ப்பதும், கழுமரம் ஏற்றப்பட்ட சேவல் கூவுவதும், அன்னையின் அருள்வாக்கையும் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மனின் அருட்கடாட்சத்தையும், இவ்வூர் மக்களின் பக்தி சிரத்தையையும் உலகத்தோருக்கு எடுத்தியம்புகிறது எனலாம்.

மாலை சுமார் நாலரை மணியளவில் பொதுமக்கள் புடைசூழ பரிவாரங்கள், பாட்டு, மத்தளம், சகிதம் பூசகர் கரகத்தைத் தலையில் சுமந்து கொண்டு கந்தசுவாமி கோயிலை அடைவர். அங்கு திறந்த வெளியில் கரகத்தை மேடை ஒன்றின் மீது வைத்து அதனைச் சூழ்ந்து காவலர்கள், ஊர்ப்பெண்கள் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியும் ஆரவாரமுமாக கும்மி கொட்டுதல் நடைபெறும். இது முடிவடைந்ததும் பின் கரகத்தை கடற்கரையோரமாக வைத்து பூசகர், காவல் தெய்வங்கள் இருவருமாகக் கும்மி கொட்டும்பொழுது காளி தெய்வத்திற்குரிய எச்சரிக்கை படிக்கப் படும். அதில் கடலோடு..........எனும் அடிவரும்பொழுது உடன் பூசகர் கரகத்தை கையில் ஏந்தி கடலில் நீராடுதல் இடம்பெறும். அப்பொழுது கரகநீர் கடலில் விடப்பட்டு மீண்டும் கடல் நீர் கரகச் செம்பில் எடுக்கப்படும். அங்கிருந்து கந்தசுவாமி கோயிலை அடைந்து பூசகர் உலர்ந்த ஆடைமாற்றி அங்கிருந்து அனைவரும் காளி கோயிலை அடைவர். கொண்டுவந்த கடல் நீர் எடுக்கப்பட்ட கரகச் செம்பைக் கதிரை மீது வைத்து உடன் பூசகர் பத்து நாட்களாக மூலஸ்தானத்தினுள் வைக்கப்பட்ட மண்கலயத்தை காவலாளிகள் இருவரிடம் கொடுப்பர். அவர்கள் இருவரும் மண்கலயத்தை தாங்கி கோயிலை வலம் வந்து கடலில் கொண்டு சென்று கலக்கச் செய்து மீண்டதும் நிகழ்ச்சி முடிவடையும்.

அதன் பின்னர் பல ஆண்டுகளாக குழந்தைச் செல்வம் இல்லாத உள்ளூர், வெளியூர் வாசிகள் (பெண்கள்) கடலில் நீராடி ஈர உடையுடன் ஆலயத்தினுள் வந்து முழந்தாளில் மண்டியிட்டு இருகரம் கூப்பியவாறு

அம்பாளை நோக்கி இருக்க படையலில் இருந்த காயம் எனப்படும் மருந்து பூசகரினால் ஊட்டப்படும் ஒரு முறை இக்காயம் உண்டவர்கள் மறுமுறை இவ்விழாவிற்கு வரும் பொழுது அம்பாளின் அருளை வியக்காமல் இருக்க முடியாது. அதன்பின் இரவுப்பூசை நடைபெறும் இது உதிரவாய் துடைத்தல் என்று அழைக்கப்படுகின்றது.

அதாவது வீரபத்திர காளியாகிய சக்தி நல்லோரைக் காப்பாற்றும் நோக்குடன் தீயவர்களை அழிக்கும் பாணியிலேயே இவ்வேள்வி விழா அமைந்துள்ளது எனலாம். சக்தியானவள் கரிய நிறமான மகிடாசூரன் எனும் சூரனை அழிப்பது போன்றே முதலாவதாக வெட்டப்படும், கடாய் கறுப்பு நிறமானதாக உள்ளது. இரத்தப்பலி எடுத்த சக்தி மிகவும் அகோர மான நிலையில் உள்ளதால் சாந்தப்படுத்தும் நோக்குடனேயே உதிரவாய் துடைத்தல் எனும் பூசை நடைபெறுகின்றது. பூசையில் வைரவருக்கு விசேட பூசை அவரின் படையலில் கஞ்சா, அபின் சுருட்டு, சாராயம், பாயாசம் போன்ற உணவுப்பொருட்களும், வைக்கப்பட்டிருக்கும். பத்து நாட்களும் உபயம் செய்த உபயகாரர்களுக்கு காளாஞ்சிகள் வழங்கப் படும். பூசை இனிது நிறைவு பெற்றதும் திருக்கதவு மூடப்படும்.

அன்றிரவு பத்து நாட்களாக விரதம் இருந்து பூசகர், காவல்தெய்வங்கள் இருவர், மற்றும் தொண்டர்கள் ஆகியோருக்கு அருகிலுள்ள மடப்பள்ளி யில் வைத்து விருந்துபசாரம் வழங்கப்படும். இவை முடிவடைந்ததும் இம்மூவரையும் தத்தம் வீடுகளுக்கு சகல மரியாதைகளுடன் கொண்டு சென்று விடப்படுவர். அவர்களின் வீட்டார் நிறை குட கும்பங்களுடன் ஆராத்தி கொண்டு ஏற்றுக்கொண்டதும் விழா நிறைவு பெறும்.

**பிரமோற்சவவிழா**

ஸ்ரீ சத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி, ஸ்ரீ திரௌபதா தேவி யம்மன் ஆலயத்திலே, மூல நாயகராகியா ஸ்ரீமத் நாராயணனுக்கு நடைபெறும் உட்சவங்களிலே ஒன்றானதும், இவ்ஆலயத்திலே நடை பெறும் விழாக்களில் இரண்டாவது பெரிய விழாவாகிய பிரமோற்சவ விழா 1994ஆம் ஆண்டு தொடக்கம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்விழாவானது பத்து நாள் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்ட ஆகமத் திருவிழாவாகும். மார்கழி மாதத்திலே வரும் வைகுந்த ஏகாதசித் தினத்தை இரதோற்சவ தினமாகவும், துவாதசியை சமுத்திரத்தீர்த்த தினமாகவும்

கொண்டு இவ்விழாவானது நாடாத்தப்படுகின்றது. இவ்ஆகமத் திருவிழா வானது பஞ்ச கிருத்திய கோட்பாட்டுக்கு அமைய (படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்) நடைபெறும் உற்சவமாகும். மார்கழி மாதத்தில் வருகின்ற வளர்பிறை துதியை திதியில் ஆலயத்தின் ஸ்தம்ப மண்டபத்தில் அமைந்திருக்கின்ற செப்பிலான கொடித்தம்பத்தில் முப்பொருளின் (பதி,பசு,பாசம்) தத்துவத்தை குறிக்கின்ற தரப்பைக் கயிறு, நூல் கயிறு, அத்தோடு துணியிலான கருடனும், அஷ்ட மங்களத் தையும் கொண்ட கொடியானது ஆகம முறைப்படி வேதியர்கள் வேதமோத ஆலய பிரதம சிவாச்சாரியாரால் கொடியேற்றப்படும். இத்திருவிழாவின் கொடியேற்ற தினத்துக்கு முதற்தினத்தில் கிரியைகளான புண்ணியாகம், விநாயகப் பெருமானிடத்து அபிஷேகம் பிரார்த்தனை அனுக்ஜை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிர்த்சங்கிரணம் (மண் எடுத்தல்) என்கின்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கொடியேற்ற தினத்தன்று ஸ்ரீமத் நாராயணப் பெருமானுக்கு நடை பெறும் அபிஷேகத்தை தொடர்ந்து புண்ணியாகம், பாலிகை, காப்புக் கட்டுதல் என்னும் இரட்சாபந்தனம், ஸ்தம்ப பிரதிட்டை, கும்பபூசை கொடிபிரதிட்டை பூசை, தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையுடன் கொடியானது வீதி வலம் கொண்டு வரப்படும். பின்பு அஷ்டதிக்குப் பூசையுடன் பகல் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும். மாலை விசேட வசந்த மண்டப பூசையுடன் யாக தரிசனமும், சூரிய பிரபை வாகனத்தில் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும்.

இரண்டாம் நாள் சேஷ வாகன பவனியும் மூன்றாம் நாள் கருட வாகனத்தில் கருட சேவா உற்சவமும், நான்காம் நாள் திருத்தொங்கல் உற்சவமும் ஐந்தாம் நாள் புஷ்பபல்லக்கு உற்சவமும், ஆறாம் நாள் கஜவாகன பவனியும், ஏழாம் நாள் கண்ணாடிச் சப்பர உற்சவமும், எட்டாம் நாள் மாலை ஐந்தரை மணிக்கு ஆலய முன்றலில் வேட்டைத் திருவிழாவும், இரவு அஸ்வவாகன பவனியும் நடைபெறும். ஒன்பதாம் நாள் விடிகாலை ஐந்து மணிக்கு சொர்க்கவாயில் தரிசனமும், அபிஷேகமும், பத்து மணிக்கு அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் எம்பெருமானது இரதோற் சவம் எனும் தேர்த்திருவிழாவும் நடைபெறும். மாலை மூன்று மணிக்கு பச்சை சாத்தும் திருவிழாவும், ஐந்து மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், இரவு சர்வாலங்கார உற்சவமும் நடைபெறும். பத்தாம் நாள் காலை

அபிஷேகத்தைத் தொடர்ந்து, திருப்பொற்சுண்ண அபிஷேகமும் ஒன்பது மணிக்கு கருட வாகனத்தில் எழுந்தருளி, ஸ்ரீ பத்திரகாளியம்மன் கடற் கரையில் தீர்த்தமாடும் நிகழ்ச்சியும் இடம்பெறும். பதினொரு மணிக்கு மூல நாயகருக்கு கும்பாபிஷேகமும் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்ன தானமும் நடைபெறும். இரவு நிகழ்ச்சியாக கொடியிறக்கலும், ஆசியுரையும், ஆச்சாரிய உற்சவமும் நடைபெறும். இப்பத்து நாட்களிலும் காலை விஷேட அபிஷேகமும் யாக பூசையும், காலை மாலை ஸ்தம்ப பூசையும் பிரவேசப் பலியும் நடைபெறும்.

பதினொராம் நாள் மாலை எம்பெருமான் சப்பரத்தில் ஆண்டிமுனை யில் அமைந்திருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் வரை சென்று ஊர் மக்களுக்கு அருள் பாலிப்பார். இந்தப் பிரமோற்சவத்தின் போது ஆலயத்தின் ஐந்து இடங்களில் இருந்து எம்பெருமான் அருள்புரிகின்றார். அதாவது கருவூலத்தின் மூல நாதராகவும், கொடித்தம்பத்திலும், வசந்த மண்டப உற்சவ மூர்த்தியாகவும், யாக சாலையில் இந்த உற்சவத்தை நடாத்தும் சிவாச்சாரியாராகவும், ஆலயத்தின் மூலகர் ஐந்து இடங்களிலும் வியாபித்து அருள் பாலிக்கின்றார். அவ்வண்ணமே திருவிழா முடியும் போது அவ்விடங்களில் வியாபித்திருக்கும் சக்தியானது அனைத்தும் ஒன்று சேர்ந்து கொடியிறக்க உற்சவ முடிவோடு மீண்டும் மூலவரைச் சென்றடைகின்றது. இந்நிகழ்வோடு இந்த பிரமோற்சவ திருவிழாவானது முற்றுப் பெறுகின்றது.

இவ் ஆலயத்தில் மூலநாயகராகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்திக்கு நடைபெறும் உற்சவங்களிலே திருக்கல்யாண உற்சவமும் ஒன்றாகும். இவ் உற்சவமானது, இவ்வாலயத்தின் கும்பாபிஷேக தினமாகிய ஆனி மாதத்தில் வருகின்ற அவிட்ட நட்சத்திர தினத்தில் நடைபெறுகின்றது. இத்தினத்தன்று மூலவருக்கு வருடா அபிஷேகமும் சங்காபிஷேகமும், காலை வேளை நடைபெற்று மாலை மணவாளக்கோலமென்னும் திருக் கல்யாண உற்சவமும் திருவூஞ்சலும் நடைபெற்று வருகின்றது.

கிருஸ்ண ஜெயந்தி உற்சவமானது கிருஸ்ண பரமாத்மாவின் ஜனன தினமான ஆவணி மாத அட்டமி திதியில் நடைபெறுகின்றது. காலையில் அபிஷேகமும் இரவு நடுநசியில் கிருஷ்ண ஜனனத்தில் சுமங்கலிகள் மங்கையர்கள் கலந்து கொள்ளும் அகல் விளக்குப் பூசையும் தொடர்ந்து விஷேட வசந்த மண்டபப் பூசையும் குழந்தைகளின் பாலகிருஸ்ண

பூசையும், உறியடிப் பூசையும் கிருஸ்ணனுடைய திருவிளையாடல்களும் தத்ரூபமாக நடித்துக் காண்பிக்கப்படும். இந்நிகழ்ச்சிக்கு அன்னையர்கள் தமது மூன்றே வயது நிரம்பிய பாலகர்களை பாலகிருஸ்ணனாக அலங்கரித்து கலந்து கொள்ள வைக்கும் இவ்விழாவானது இலங்கையில் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் நவக்கிரகம் வழமையாக எல்லா விதிமுறைகளுக்கும் இனங்க ஏனைய ஆலயங்களில் அமையும் இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வாலயத்தின் நவக்கிரகத்திற்கு தனிச் சிறப்பு உண்டு. இது முதன் முதலாக 1994ம் ஆண்டு ஆகம முறைப்படி நவாலியூர் சுவாமி விஸ்வநாதக் குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுவாக நவக்கிரகங்கள் ஒன்றை ஒன்று பார்க்காது என்ற கோட்பாட்டை மறுதலிப்பது போன்று இங்கு நவக்கிரகங்கள் அமைந்துள்ளன. நவக்கிரகத்தில் இருக்கும் சூரியனை சூரிய நாராயணணாக பிரதிட்டை பண்ணி கிழக்கு நோக்கி இருப்பது போன்றும் அந்த சூரியனை ஏனைய எட்டுக் கிரகங்களும் பார்ப்பது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது. சூரியனுக்கு முன் நேராக கிழக்கில் சந்திரனும் அக்கினி மூலையில் செவ்வாயும், தெற்கில் புதனும், நிருதி மூலையில் சனியும், மேற்கில் வியாழனும், வாயு மூலையில் ராகுவும், வடக்கில் சுக்கிரனும், ஈசான மூலையில் கேதுவும் இருந்து சூரியனைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. இந்த நவக்கிரகத்தை வழிபடும் போது எந்தக் கிரகமும் அடியாரை நேரடியாகப் பார்க்காததால் கிரகப் பார்வையால் ஏற்படுகின்ற தோசங்கள் அடியாரை வந்து சேராது. அத்துடன் தீய கிரகங்களும் சூரியனைப் பார்ப்பதால் சூரியப் பிரகாசத்தில் தீமை ஒடுங்கி நன்மை நடக்கும் எனவே ஏனைய ஆலயங்களில் நடைபெறும் நவக்கிரக வழிபாட்டு முறையை விட இவ்வாலயத்தில் இருக்கின்ற நவக்கிரக வழிபாட்டு முறை சிறப்புறுகின்றது. இந்த நவக்கிரக வழிபாட்டுக்காக இலங்கையின் பல்வேறு இடங்களிலும் இருந்து மாதப்பிறப்பு, சனிக்கிழமை, பௌர்ணமி தினங்களில் அடியார்கள் வந்து தரிசனம் பெற்றுய்கின்றனர்.

# 7

# எளிமை மிகு கிராமிய வழிபாடு

இந்து மதத்தின் மேன்மையை நிலைநிறுத்த எழுந்த இலக்கியங்கள் கூட தத்தமது முழுமுதற் கடவுளர்களை உயர்த்தியும், ஏனைய கடவுளர்களை சற்றுத் தாழ்த்தியும் கூறுவதை வேதங்கள் முதல், பக்தி, இலக்கியங்கள், பிற்பட்ட இலக்கியங்கள் வரை காணலாம். பக்தி இயக்கம் தமிழகத்திற் தீவிரமாகச் செயற்பட்ட போது அவற்றின் பிரசாரகர்களான சைவ நாயன் மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் ஆரம்பத்தில் ஒன்றாக இணைந்து செயற்பட்டுக்கொண்டிருந்த போதும் தத்தமது கடவுளர்களது மேன்மைத் தன்மையை நிலை நிறுத்தப் பின் நிற்கவில்லை. மறுபுறம் பெருந்தெய்வம், சிறு தெய்வம் என்ற பாகுபாடுகளும் அவை சார்ந்த மரபுகளும் தோன்றி வளர்ந்த தன்மையினையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

சைவ வழிபாட்டு முறையினை இருவகையாக வகுத்து நோக்குவது மரபு. அவை பின்வருமாறு அமையும். ஆகம விதிமுறைகளுக்கமைந்த வழிபாடு, கிராமிய வழிபாடு, இவ்வழிபாட்டு முறைகளைப் பண்பாட்டாய் வாளர்கள் முறையே பெருந்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு எனப் பகுத்து நோக்குவர். பண்பாட்டு மானிடவியலாளர்கள் இவ்வழிபாட்டு முறையினைப் பெருமரபு, சிறு மரபு எனவும் வகுத்து நோக்குவர். சிறுமரபு என்பது கட்டுப்பாடற்ற, நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடி யற்றுவதாகும். பெருமரபு என்பது கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்குற்பட்டு வழிபாடு இயற்றுவதாகும்.

பெருந்தெய்வங்கள் பெருமைக்குரிய தன்மைகளைக் கொண்டன வாகவும், சிறுதெய்வங்கள் சிறுமைத் தன்மைகளைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. முன்னையவை பரந்த செல்வாக்குக் கொண்டவை யாகவும், பின்னையவை குறுகிய செல்வாக்குக் கொண்டவையாகவும் போற்றப்படுகின்றன. பெருந் தெய்வங்கள் ஆகம முறைப்படி அமைக்கப் பட்ட கோயில்களைப் பெற்றவையாகவும், ஆகம பூசை விழாக்களைக் கொண்டவையாகவும் இருக்க, சிறு தெய்வங்கள் வசதிக்கேற்ப கோயில்கள் கொண்டவையாகவும், பிரதேச வழக்காற்று முறையில் பூசைகளை

ஏற்பவையாகவும் உள்ளன. பெருந்தெய்வங்கள் சமயத்தின் இறுதி இலட்சியமாகிய மோட்சத்தை அல்லது ஆன்ம விடுதலையை அளிப்பதோடு வழிபடுபவருக்குத் தேவையறிந்து அருளுபவையாகவும் காணப்பட, சிறு தெய்வங்கள் இல்வாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு பயன்களை நல்குபவையாகவும், நோய்கள், சூனியம், கண்ணூறு, நாவூறு, கெடுதல், துன்பம் முதலிய தீமைகளிலிருந்து காப்பாற்றுவனவாகவும் காணப்படுகின்றன. பெருந்தெய்வங்கள் தம்மை வழிபடுபவருக்கு அருளுவதோடு வழிபடாதவருக்குத் தீமைகள் செய்யாதிருக்க சிறு தெய்வங்கள் தம்மை வழிபடுபவர்களுக்கு அருளைச் செய்வதோடு வழிபடாதவருக்குத் தீமைகள் செய்வனவாகவும், சிறு தெய்வங்களுள் சிறுமையுள்ள தெய்வங்கள் மந்திரவாதியின் ஏவுதல் படி ஒன்றும் அறியாத அப்பாவிகளுக்குக் கூடக் கெடுதல் செய்வனவாகவும் காணப்படுகின்றன எனக் கூறுவர். உண்மையில் தெய்வங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளனவாக படைக்கப்பட்டுள்ளன. அவை காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்து பெருப்பதும், சிறுப்பதுமான தோற்றப்பாடுகளையும் கொண்டுள்ளன. (பேராசிரியர் வ. மகேஸ்வரன், 1997)

சிந்துசம வெளி நாகரிகத்திலும் அதற்கு முன்பும் பின்பும் இந்தியாவில் பல பாகங்களிலும் பெண் தெய்வவழிபாடுகள் தோன்றி வளர்ந்துள்ளன. இதுவே பெருவழக்காயுமிருந்திருக்கின்றது ஆயின் ஆரியருடைய வருகையின் பின் ஆணாதிக்க சமூக அமைப்பில் ஆண் தெய்வங்கள் முதன்மை பெறத்தொடங்க பெண் தெய்வங்கள் ஆண் தெய்வங்களுக்கு அடங்கினவாக அல்லது அவ்வாண் தெய்வங்களின் மனைவியராக பதவி இறக்கம் பெறுகின்றார்கள். தமிழ் நாட்டிலும் கொற்றவையாக இருந்த தாய் - சிவனின் மனைவியாக மாற்றமுற்றுத் தனது தனித்துவத்தை இழந்துவிடுகிறாள். தென்னகத்தில் மிகவும் வலிமையுடன் பேணப்பட்ட அல்லது வாழ்ந்த பெண் தெய்வங்கள் பின்பு ஆரிய மயமாதலின் போது உப தெய்வங்களாக மாற்றமுற்றதை அறியலாம்.

பண்டைத் தமிழரின் கிராமியத் தெய்வமான குறிஞ்சி நிலத் தெய்வம் சேயோன் அல்லது முருகன் வழிபாடு பிற்காலத்தில் ஆரியமயமாதலினால் சுப்ரமண்யன் அல்லது கார்த்திகேயனாக மாறி விடுகின்றான். அவன் பெருந்தெய்வ மரபுக்குள் உள்வாங்கப்பட்டான் இவ்வாறாகக் கால மாற்றங்களுக்கேற்ப பெருந்தெய்வங்களானவை சிறு தெய்வங்களாகவும், சிறு தெய்வங்களானவை பெருந் தெய்வங்களாகவும் மாற்றம் பெற்றுள்ளன.

பெருமரபும், சிறுமரபும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. எனவே இவ்விரண்டும் இடையறாமல் தொடர்பு கொண்டிருக்கும். சிறுமரபின் கூறுகள் பெருமரபினைச் சென்றடையும் அது போன்றே பெருமரபின் கூறுகள் சிறுமரபைச் சென்றடையும். சிறுமரபின் கூறுகள் சிறுமரபில் உள்ளவாறே பெருமரபைச் சென்றடைவதில்லை. மாற்றங்களைப் பெற்ற பின்னரே அவை பெருமரபில் சேருகின்றன. அது போன்றே பெருமரபின் கூறுகளும் மாற்றங்களைப் பெற்றுச் சிறுமரபோடு இணையும். இந்தியா வில் பெருமரபு (சமஸ்கிருத மரபு) இடையறாமல் பல்வேறு வகைகளில் வெளிப்படையாகத் தொடர்பு கொண்டுள்ளது. இவ்வாறான பண்பாட்டுக் கலப்பு என்பது தவிர்க்க முடியாதது என்று கோ. சாம்பா குறிப்பிடுகிறார்.

சிறு தெய்வங்களை வழிபடுவோர் பெரும்பாலும் சார்ந்த இக்கட்ட மைப்பைத் தீண்டத்தகாதவர்கள் அல்லது பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகக் காணப்படுகின்றனர். இவர்களுள் சாதிக்கு ஒரு தெய்வம் உண்டு அத் தெய்வங்கள் பெரும்பாலும் அவர்களுடைய நிலையில் நின்று அவர்களது சமூகத்தைப் பாதுகாத்த கடவுளர்கள் அல்லது பெருந்தெய்வங்களின் உறவு முறைக்கதை மரபுகளினூடாக வந்த தெய்வங்கள், அல்லது அவர்களது சமூகம், அல்லது சாதிக்காகப் போராடி உயிர்நீத்தவர்கள் (பெரும்பாலும் அடக்குமுறைக்குட்பட்டு தட்டிக் கேட்க முற்பட்டபோது அதிகார கலாசார வர்க்கத்தால் கொலை செய்யப்பட்டவர்கள்) அடக்கு முறைச் சமூகத்தால் மானபங்கப்பட்டு உயிர் நீத்த பெண்கள் ஆகியோர் தெய்வங்களாயினர். இன்னும் கிராம நம்பிக்கைகளும் அவர்களது சமய வழிபாடாயின. இவ்வித மனோநிலை பொதுவாக இந்தியாவின் எல்லா நிலையிலும் இடம்பெற்றுள்ளது தமிழகத்தில் இந்த நிலை நிலவி வந்துள்ளது.

சிறு தெய்வங்கள் தொடர்பான நம்பிக்கைகள் வலுத்தல் அவற்றின் ஆலயவருமானப் பெருக்கம், வழிபடுவோருடைய அந்தஸ்து கல்வியறிவு வளர்ச்சி, அரசியல் பின்னணிகள் முதலியன ஒன்று சேர்கின்ற போது சிறு தெய்வங்கள் பெருந் தெய்வங்களாகி மதிப்புடன் கொலுவீற்றிருக்கும் அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றன.

மேற்குறித்த மாற்றங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்குகின்ற போது காலம் காலமாக பேணப்பட்டு வரும் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் மாற்றங்கள் என்பவை எந்தவித வன்முறையும் இன்றி இயல்பாகவே

நிகழ்ந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. பண்பாட்டு பரிவர்த்த னையில் கொள்ளலும் கொடுத்தாலும் இயல்பான ஒன்றே. ஆயின் இந்த மாற்றங்களுக்கெல்லாம் அவ்வப்போது சட்டங்களை வகுத்து, பேதங் களைப் புகுத்தி ஒன்றை ஒன்று எதிரிடையாக நோக்குமளவிற்கு செய்தது நீண்டகாலமாக நிலவிவந்த அதிகார கலாசார முறைமையே ஆகும். இந்த முறைமையினால் எமக்கே உரித்தான பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பலவற்றை நாம் இழந்து கொண்டு வருகின்றோம் என்பது கசப்பான உண்மையாகும்.

உடப்பூர் கிராமிய வழிபாடு இம்மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. ஊர்க் குலதெய்வங்கலான ஸ்ரீ திரௌபதாதேவி, ஸ்ரீ வீரபத்ரகாளி, ஸ்ரீ மாரியம்மன் வழிபாடுகளைத் தவிர்ந்த ஏனைய வழிபாடுகள் இங்கு ஆயிந்து தொகுக்கப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானவை பெண் கிராமியத் தேவதைகளின் வழிபாடுகளே, பாமர மக்கள் தமது நல்வாழ்க்கைக்கு இத்தேவதைகளின் திருப்தி மிக அவசியம் என்று கருதியுள்ளனர். சனச் செறிவும் போக்குவரத்து வசதிகளும், சுகாதார நலன்களின் வாய்ப்பும், கல்வி அறிவும் அற்ற நிலையில், சிறு அச்சம் தரும் சூழ்நிலையையும், மிகப்பிரமாண்டமானதாகக் கருதி அஞ்சி இத் தேவதைகளைச் சரணடைந்து அவற்றின் அருளைப்பெற முயன்ற முயற்சி களே இந்த வழிபாடுகள் எனலாம்.

ஆரம்ப காலத்தில் காடுகளை அழித்து உழுது பயிர் செய்து பயனடைய நினைக்கும் பலமற்ற மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள அளவிட இயலாத இயற்கை சக்திகளால் தனது பயிர்களுக்கும், கன்று காலிகளுக்கும் தீங்கு ஏற்படும் எனப் பயந்தான். இவ்வாறு பயமடைந்த தன் மனதைத் திட மடையச் செய்யவும், தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கை மகிழ்வு கொண்டு தனக்குத் தீங்கிழைக்காதிருக்குமாறும், உதவி செய்யுமாறும் துதி பாடினான். இதுவே தனக்குப் புறம்பாயுள்ள சக்திகளைப் பற்றி நினைக்க-துதிக்க ஆரம்பித்த வரலாறு எனலாம்.

இயற்கையை மீற முடியாது, அதுவே தன் துன்பங்களுக்குக் காரணம். ஆகவே அச்சத்துடன் வழிபடல் வேண்டும், அதற்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கிராமிய வழிபாட்டிற்கு காலாயிற்று. உடப்புப் பிரதேசக் கிராமியத் தேவதைகளின் வழிபாட்டை ஆழமாக நோக்கும்

போதும் அச்சமும் நன்றிக் கடனுமே வழிபாட்டுக் குறிக்கோள்களாக உள்ளன என்பது புலப்படும்.

ஊரைக் காக்கவும், குலங்களைக் காக்கவும் இத்தெய்வங்கள் பொதுவாக ஊரின் எல்லைகளிலும், ஊர் நடுவே அமைந்துள்ள மன்றங் களிலும் இடுகாட்டுப்பகுதிகளிலும், அமைக்கப்படுவதுண்டு. திருட்டு, தொற்று, நோய்கள், ஊர்த்தெய்வங்களின் சினத்தால் ஏற்படுவதாகவே மக்கள் கருதினர். இத்தெய்வங்கள் ஊர் எல்லைகளில் பயங்கரமான முகத்துடன் இடம்பெறுவது, தீய சக்திகளும் பகைவர்களும் ஊரினுள் நுழைவதைத் தடுப்பதற்கே.

ஆரம்ப காலங்களில் மாரி அம்மன் ஆலயம் உடப்பின் வடக்கெல்லை யிலும், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் தெற்கெல்லையிலும், ஸ்ரீ வைரவர் ஆலயம் வடகிழக்கெல்லையிலும், ஐயனார் ஆலயம் தென்கிழக்கிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ராக்குருசி ஆலயம் கிழக்குக் கோடியிலும், ஐயனார் ஆலயங்கள் காடுகளை நோக்கியும் அமைக்கப்பட்டன.

தீய தேவதைகள் சில சக்தி ஆலயங்களில் பரிவார தெய்வங்களாக உள்ளன. சக்தி விழாக்களில் இத்தேவதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப் படுகின்றன. சுடலை மாடன், கருப்பண்ண சாமி, கழுவேறி, பேய்ச்சி என்பவை ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்தின் வேள்வி விழாவின்போது அச்சம் தரும் தேவதைகளாக வருகின்றன.

பெரும் கட்டிடங்கள் இன்றி உயர்ந்த மரச்சோலைகளிடையே சில தேவதைகள் வழிபடப்படுகின்றன. முனியசாமி, கருப்பண்ண சாமி, பட்டாணி சாகிபு போன்றவை கூட்டமாக இடம்பெறுகின்றன. கன்னி வழிபாடும் இதற்குள் அடங்குகின்றது. வீட்டிலும் வளவுகளிலும் குறித்த சடங்குகளை நிறைவேற்றுவதனூடாகச் சில தெய்வங்கள் வழிபடப் படுகின்றன. குளிர்த்திச் சடங்கு, சித்திரைச் செவ்வாய்ச் சடங்கு, கன்னித் தேவதைச் சடங்கு, ஆடிச்செவ்வாய்ச் சடங்கு என்பன முக்கியமானவை.

உடப்புப் பிரதேச கிராமிய வழிபாட்டை பெண்தெய்வ வழிபாடு, ஆண் தெய்வ வழிபாடு என வகைப்படுத்தலாம். ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ இராக்குரிசி அம்மன், ஔவையாரம்மன், பேய்ச்சி அம்மன், தேவகன்னி என்பன பெண் தெய்வங்கள் ஆகும். ஸ்ரீ பைரவர், ஸ்ரீ கந்தசாமி, ஸ்ரீ ஐயனார், முனியசாமி, இடும்பன் என்பன ஆண் தெய்வங்கள் ஆகும். பெண் தெய்வங்கள் ஆற்றலும் அதி பயங்கரமும் அன்பும் கொண்டனவாக

விளங்குகின்றன. மக்கள் ஆண் தெய்வங்களை விடப் பெண் தெய்வங் களிலேயே அச்சமும், நம்பிக்கையும் கொண்டுள்ளனர். ஆண் தெய்வங் களுள் பல பெண் தெய்வங்களின் பரிவாரங்களாக இருப்பதும் அதற்கொரு காரணமாகலாம்.

**மாரியம்மன் வழிபாடு**

உடப்பு மக்கள் வழிபாடு இயற்றும் பழைமை மிகு ஆலயம் இது. மாரி என்பது மழையைக் குறிக்கும். வெப்பத்தைத் தணிவித்து அம்மை முதலியவற்றைத் தீர்த்து நாடு, மாடு பிழைக்கச் செய்பவள். மக்களை மலை போலக் காப்பவள் என்றும், மகிஷா சூரனை மும்மூர்த்திகளால் அழிக்க முடியவில்லை. காளி என்னும் அம்மை மும்மூர்த்தியாக மாறி அவனை அழித்தாள். அதனால் மாறி என்று ஆயிற்று எனவும் கூறுவர். மாரி என்பதனால் வற்றாத அருள் சுரப்பவள், குளிர் நிறைந்தவள் என்பதும் மாறி என்பதனால் ஆற்றல் மிக்கவள் என்பதும் உட்கிடை. மாரியம்மன் வேப்பமரத்தடியில் வசிப்பவள், கையில் கபாலம், சூலம், கத்தி, அரவம், தீச்சுடர் அணிந்தவள்.

உடப்பு மக்கள் வழங்கும் பெயர்களைக் கொண்டு ஆய்வு செய்யும் போது மாரியம்மன் மீதே ஈடுபாடு கொண்டிருப்பது புலப்படும். அதற்கான சில காரணங்களைக் காட்டலாம். பழங்காலத்தில் தீர்க்க இயலாத நோய்கள் சமூகத்தில் தோன்றின. இவற்றுள் கொடியது வைசூரி. தென்னிந்தியாவின் பல பாகங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதனால் பலியாயினர். அதனைக் குணப்படுத்தும் சிகிச்சை தெரிந்திருக்கவில்லை. காற்றினால் இந்நோய் மேலும் பரவியது. சக்தி மிக்க ஆற்றலின் சீற்றத்தினால் அது தோன்றியதாக மக்கள் கருதினர். அத்தெய்வத்தை மாரி, முத்துமாரி, மாரியம்மன் என்று அழைத்தனர். அவளை வணங்கினால் அவள் அருள் கிடைத்தால் நோய் தீருமெனக் கருதினர். அவளுக்கு வழிபாடு இயற்றினர். தமிழ் நாட்டிலும், உடப்பிலும் மாரி வழிபாட்டிற்கு இதுவே காரணம் எனலாம்.

பெரியம்மை நோய் அல்லது சின்னம்மை பொக்குளிப்பான் போன்ற நோய்களுக்கு மக்கள் வைத்தியம் செய்வதில்லை. முழுக்க முழுக்க அம்மையையே சரணடைந்து குணமாக்கிக் கொள்வதே மரபு. அதுவரை மாரியம்மனின் புகழ்பாடி அவள் அருளைப் பெற முயற்சி செய்வர்.

அம்மை வார்த்த காலங்களில் இரவு நேரங்களில் மாரியம்மன் தாலாட்டு பக்தியுடன் ஓதப்படும். அம்மை வார்த்தவர் தலை குத்தல், கழுத்துவலி, உடல் குலைதல், தூக்கமின்மை ஆகிய துன்பங்கள் தீரவும் நலமாக உறங்கவும். இப்பாடல் பாடப்படுகிறது. இது தாலாட்டுப் பாடல் அன்று மாரியம்மன் பெருமைகளை பலவாறு கூறிச்செல்வது, இப்பாடலில் பல்வேறு கூறுகள் உள்ளன. அக்கூறுகள் இருபது என மா. கோதண்டராமன் குறிப்பிடுகிறார்.

மாரியம்மனை வாவென்றழைத்தல், அம்மையிடம் பொருள்கள் வந்த முறை, கரகம் ஆடி வரல், கொலுவிருக்கும் திருத்தலங்கள், முத்து வார்த்ததால் படும் தொல்லை, அம்மையின் மனமிரங்காமை, அழைத்தல் கேட்கலையோ, தவறுகளைப் பொறுத்து காத்திட வேண்டல், அம்மையின் வாதாடும் திறன், அம்மையின் பேராற்றல், அம்மையுடன் விளையாடும் பாம்புகள், தேவியின் தவவலிமை, தண்டனை வழங்கும் முறை, முழங்கி வரும் வாத்தியங்களின் வர்ணனை, பளிங்கு மா மண்டபத்துள் கொலு, கேட்டோர் அனைவரும் வாழ்க ஆகிய கூறுகள் உள்ளன என்பார்.

அம்மையைப் பல்வேறு பெயர்களால் அழைப்பதும், அவள் ஆற்றலை விதந்துரைப்பதும் அவளின் சிறப்பை புகழ்ந்துரைப்பதும் அவள் மேற்கொண்ட அளவிறந்த அச்சம் கலந்த பக்தியின் வெளிப்பாடு எனலாம். தனது துன்முரைப்பதும் அதனைத் தீர்க்குமாறு பணிவுடன் வேண்டியிரங்குவதும் எதிர்க்கணிய சார்பு நிலை ஆகும். முழுமையான அடைக்கலத்தை உணர்த்தி பக்தன் நலம் பெற வேண்டப்படுகின்றது.

### குளிர்த்தி வழிபாடு

அம்மை வரம் கொண்டோர் அது வடிந்ததும் குளிர்த்தியியற்றுவதாகவும், மாரியம்மன் கோயிலுக்குச் செலவு தந்து பொங்கற்படையல் நடத்துவ தாகவும் நேர்த்தி செய்வதுண்டு. சிலர் மாரியம்மன் கோயிலுக்கு தமது குடும்பத்தினர் சகிதம் வந்து ஓரிரு வாரங்கள் காவல் காப்பதுமுண்டு. அம்மை வார்த்தல், தீராத நோய்கள், துன்பங்கள் அடைந்தோர் இவ்வாறு நேர்த்திக் கடன் கழிக்கின்றனர். குளிர்த்திச் சடங்கு வீடுகளிலும், மாரியம்மன் கோவிலிலும் நடைபெறுகின்றது. அம்மை வார்த்ததிற்காக மட்டுமன்றி புதுமனை புகல், திருமணம், தொழில் விருத்தி போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காகவும் இச்சடங்கு இயற்றப்படுகின்றது.

மட்டக்களப்பு பகுதிகளிலும், திருகோணமலைப் பகுதிகளிலும், குளுத்திச் சடங்கு இயற்றப்படுகின்றது. குளிர்த்தி என்பதன் திரிபு வடிவம் குளுத்தி எனலாம். குளிர் என்ற பதம் அன்பு, இரக்கம், தண்ணளி, அமைதி, இன்பம், வளம், மழை, கொடை என்ற பல பொருள்களின் உட்கிடையாக வழங்கப்படுகின்றது. பசியும், பகையும், நீக்கி வசியும், வளனும் சுரக்க இயற்றப்படும் சடங்கே குளிர்த்தி என்பது பொருத்தமானது.

குளிர்த்திச் சடங்கின் மூலம் அம்மை குளிர்ந்து அருள்வாள் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் உண்டு. குளிர்த்திச் சடங்கில் இடம்பெறும் படையலில் குளிர்ந்த உணவுகளே நிவேதிக்கப்படுகின்றன. குளிர்த்திச் சடங்கின் முதல் நாளிரவு சோறு சமைக்கப்பட்டு ஆறவிடப்படுகிறது. மறுநாள் சாதத்தில் தண்ணீர் ஊற்றிக் குளிரவிடப்படுகின்றது. சாதத்தில் தயிர், தேங்காய்ப்பால், வெங்காயம் என்பன கலந்து அச்சாதம் படைக் கப்படும். இதனைக் கரையல் என்று மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வழங்குவர். பழ வகைகள், துள்ளுமா (மாவிளக்கு) என்பனவும் இடம்பெறும். பக்கத்திலுள்ள பெண்கள், உறவினர்கள் இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்வர். பங்குபற்றும் அனைவருக்கும் மிகத் தாராளமாக நிவேதித்த படையல், சீனி, பாலுடன் வழங்கப்படும். அம்மையின் அருள் தாராளமாகக் கிடைத்தது என்பதன் குறியீடாக குளிரானதும் இனிப்பு மிக்கதுமான இப்பொருட்கள் வழங்கப்படுகின்றன.

மாரி அம்மன் வழிபாட்டில் வேப்பிலை முக்கிய பங்கு வகிக்கின்றது. வேப்பிலை கிருமி நாசினி என்பதுடன் குளிர்மை கொண்டதாகவும் உள்ளது. அம்மை நோய் மாரியம்மனின் குறியீடாக உணர்த்தப்படுகின்றது. அம்மை வரம் கொண்டோர் வீடுகளில் வெளி வாசலில் தொங்க விடப் படுகின்றது. இங்கே அம்மை இருக்கிறாள், வருவதைத் தவிருங்கள், புனிதமாக வாருங்கள் என்பதை அது உணர்த்துகின்றது. துஷ்ட தேவதைகள் வேப்பிலை கண்டால், அனுக மாட்டா என்ற நம்பிக்கையும் உண்டு. அதற்கு அம்மா பத்திரம் என்ற பெயர் உண்டு. அம்மை வரம் கண்டவர் தம் உடல் அரிப்பை வேப்பிலையால் வருடிப் போக்குகிறார்.

அம்மை வார்த்தவரை உள்ளே ஒதுக்கமான ஓர் அறையில் இருக்கச் செய்வார். தூய்மையான வெள்ளைத்துணியைப் பரப்பி வைப்பர். ஒவ்வொரு நாளும் அவர் படுக்கையைத் தூயதாக்குவர். அவர் அறையை விட்டு வெளியே செல்கையில் கையில் அம்மா பத்திரத்தைக் கொண்டு

செல்வார். நீர் வார்க்கும் போது மஞ்சள், வேப்பிலை, நெல், கர்ப்பூரம் ஆகியவற்றை அரைத்து உடலில் தடவுவர். அம்மை கண்ட வீடுகளில் மாமிச உணவுகள் சமைக்கக் கூடாது. என்ற கடுமையான விதி உண்டு. வறுத்தல், பொரித்தல், இடித்தல், அரைத்தல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது. அவற்றை மீரிச்செய்தால் தாய் கோபப்படுவாள் என்றும், நோய் அதிகமாகும் என்றும் மக்கள் நம்புகின்றனர். சாத்தீட்டு, பிறப்புத்தீட்டு, கன்னித்தீட்டு என்பவை குத்தப்பாட்டை உருவாக்கு மென்றும். அதனால் அம்மா ஆங்காரபடுவாள் என்றும் அத்தீட்டுக்களில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மக்கள் உறுதியாக நம்புகின்றனர்.

அம்மை கண்டவர்க்கு அவர்கள் வேண்டும் உணவுப்பொருள்களை இங்கு வழங்குகின்றனர். மாமிச உணவு கூட வழங்கப்படுகின்றது. அம்மன் மகிழும்போது அவள் அவரை விட்டு நீங்கிச் சென்றுவிடுவாள் என்று நம்புகின்றனர். மாரி அம்மையின் கோபத்தினாலேயே அம்மை உண்டாகிறதென்று மக்கள் கருதுவதை இது உறுதிப்படுத்துகின்றது. குளிர்த்திச் சடங்கு முடியும்போது போய் வருகிறோம் என்று கூறி துள்ளு மாவில் ஒரு பிடியை கலந்து கொள்வோர் எடுத்துச் செல்வர். நோய் அவர்களுடனே சென்றுவிடும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

**சித்திரைச் செவ்வாய் விழா**

உடப்பில் மாரியம்மன் வழிபாட்டின் மற்றொரு அம்சமாகச் சித்திரை மாதத்தில் வளவுகளில் நடத்தப்படும் சித்திரைச் செவ்வாய் விழாவைக் குறிப்பிடலாம். அக்கினி நட்சத்திரம் என மக்கள் குமுறுகின்ற காலம் இது. அக்கினி நட்சத்திரம் என்பது சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இருந்து விசாக நட்சத்திரம் வரை இருபத்தொரு நாட்களைக் குறிக்கும். இக்காலப் பகுதியே மிகவும் வெப்பமானது.

இந்தக் காலத்திலேயே தமிழ் நாட்டின் மாரியம்மன் கோவில்களில் விழாக்கள் இடம்பெறும். மழை வருவிப்பதையே இவ்வழிபாடு உணர்த்தும். அங்கு கோயில் திருவிழா தொடங்கி விட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும். அன்று முளைப்பாரி கொட்டுதல் என்ற ஒரு நிகழ்ச்சி உண்டு. கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும், குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒரு குடத்தில் நெல், தானியங்கள், பயறுவகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள். எட்டாம் நாள் அந்தக் குடங்களை கோயிலுக்கு கொண்டு

வருவார்கள். அந்த மூன்று நாட்களும் பெண்கள் பலர் சேர்ந்து மாரியம்மன் புகழைக் கும்மியடித்துப் பாடுவார்கள். பிறகு வணக்க ஒழுக்கமாக பானைகளை வலம் வருவர். திருவிழாவின் இறுதியில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்து விடுவர். என சோமலே (1983) குறிப்பிடுகின்றார்.

அவரது இந்தக் கூற்றுகளிலிருந்து தமிழ் நாட்டு வழிபாட்டுச் சடங்கு களின் ஒரு கூறு, சிற்சில மாறுதல்களுடன் உடப்பில் சித்திரைச் செவ்வாய் விழாவாகப் பின்பற்றப்பட்டு வருவது புலப்படும். உடப்பிலுள்ள சக்தி விழாக்களில் நீரேந்திய கும்பம் சக்தியின் வடிவமாகவே கொள்ளப்படு கின்றது. பெண்கள் வளத்தின் சின்னம். அவர்கள் நீரேந்திய கும்பத்தையும் முளைப்பாரியையும் வணங்குவதும் கும்மி கொட்டி ஆடி மகிழ்வதும், பயிர், மனித வளர்ச்சிக்கான வளச்சடங்காக நாம் கொள்ளலாம். மாரி அம்மன் வழிபாட்டில் வளச்சடங்கும், உடல்நலச்சடங்கும் இடம் பெறுகின்றன. சித்திரைச் செவ்வாய் வழிபாட்டில் இந்த இரு அம்சங் களையும் காணலாம்.

சித்திரைச் செவ்வாய் முருக வழிபாட்டு விழா என்றும் பெண்களின் செவ்வாய் தோஷம் நீங்கவும், சிறந்த கணவனைப் பெறவும், நடத்தப் படுவது என்றும் நவதானியங்கள், நவக்கிரகங்களை உணர்த்துகின்றன என்றும் ஒரு கருத்துண்டு. ஆயினும் வேப்பிலை சூடிய கும்பம், விழாவில் பாடப்படும் பாடல்கள், தென்னிந்திய வழிபாட்டம்சங்கள் என்னும் சான்றுகளைக் கொண்டு இது மாரியம்மன் வழிபாடே எனத் துணிதல் சாலும்.

செவ்வாய் விழாவில் இசைப்பாடல்களும், செவ்வாய்க் கொட்டும் கலை நயம் மிக்கன. மாரியம்மன் தாலாட்டு, துரோபதை குறம், வள்ளி குறம் என்னும் நாட்டார் இலக்கியங்களில் பகுதிகள் கிராமிய லயம் துலங்கப் பாடப்படுவது இனிமை பயப்பதாகும். வண்ணச் சட்டை, பாவாடை அணிந்த இளம்பெண்கள் பாடலுக்கு அமைய அசைந்து செவ்வாய்க் கொட்டுவது மிகமிக ரம்மியம் மிக்கது. தென்னிந்தியாவில் உள்ளதைப் போலவே இறுதியில் முளைப் பாத்திகள் கும்பம் சகிதம் கடலில் கலக்கப்படுகின்றன. பாரெங்கும் செழிப்பு மலரும் என்பது இதன் அடையாளம் எனலாம்.

**ஆலய விழாக்கள்**

உடப்பு மாரியம்மன் ஆலய விழாக்களில் பொங்கல் விழா முக்கியமானது. வருடத்தில் ஒரு நாள் வெள்ளிக்கிழமை இரவில் இந்தப் பொங்கல் விழா நடைபெறும். எல்லா மக்களும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இது. பல ஆண்டுகளுக்கு முன் இந்த ஆலயத்தில் இந் நிகழ்ச்சிக்கென ஓர் ஆட்டுக் கடா பலியிடப்பட்டது. தற்போது பலியிடப்படுவதில்லை. இன்று கரகம் பாலிக்கும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது.

புரட்டாதி மாதத்தில் மகேசுவர பூசை இடம்பெறும். இங்குள்ள கரவலைச் சொந்தக்காரர்கள் இதனை இயற்றுவர். முருகன் சிலைக்கு முன் இப்படையல் இடம்பெறும். மீன்பிடித்தல் தொழிலின் ஆரம்ப விழாவாக இதனைக் கொள்ளலாம். பெருங்கிடாரங்களில் பாற்சோறு பொங்கி அடியார்க்குத் தானம் வழங்குவர். முன்னேஸ்வர மகேசுவர பூசையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். முருகனை கடலின் தெய்வமெனக் கருதி இப்பூசை நடத்தப்படுவதாக மசாகாசு தானாகா குறிப்பிடுகின்றார்.

நவராத்திரி விழாவும் மகிஷாசுர சங்காரமும் புரட்டாதி மாதத்தில் நிகழ்கின்றன. மாசி மாதத்தில் மாசி மக விழா இடம்பெறுகின்றது. இவ்விரண்டு விழாக்களும் பத்து நாள்கள் இடம்பெறுகின்றன.

**மாரியம்மனும் தீமிதிப்பு விழாவும்**

திரௌபதி அம்மன் விழாவின் போது திரௌபதியாக பங்குபற்றும் பூசகர் மாரியம்மன் கோவிலிலிருந்தே உருக்கொண்டு கரகம் பாலித்துச் செல்கின்றார். இந்நேரம் மாரியம்மன் காவியம் பாடப்படுகின்றது. பக்திச் சுவை செறிந்த அப்பாடல்களில் பல்வேறு செய்திகள் தரப்படுகின்றன. அம்மை பல பெயர்களால் அழைக்கப்படல், நாவால் உரைக்க இயலா, அவள் பெருமை, அடியவர் மீது அன்பு செலுத்துபவள், அற்புதம் நிறைந் தவள், அம்மை நோயைப் பரப்பும் சக்தியைச் சிவனிடம் பெற்றவள். அவள் பார்வையில் இருந்து தப்ப இயலாது. கும்பம் வைத்து வழிபடின் குறை தீர்ப்பவள். ஆண்டிமுனையில் அமர்ந்து துன்பம் தீர்ப்பவள் எனபனவே அவை.

முத்துமாரியம்மன் கும்மி, முத்துமாரியம்மன் ஊஞ்சல் என்பனவும், அவள் புகழ் பாடி, அவள் அருளை வேண்டுகின்றன. அவள் மீது பதிகம் பாடப்பெற்றுள்ளது சுவை மிக்கவற்றுள் ஒன்று.

உன்னைத் தவிர – அம்மா
உடப்பினிலே ஏது இன்பம்
இருக்கும் வரை தொடர்ந்திடுவேன் உன்
பல விழியினிலே எங்கும்
இடறுகளைத் தடுத்திடுமே தாயே
ஏழு பிறப்பினிலும் உனதன்பு
யாருமில்லா பிள்ளைகட்கும் – நீ
நலங்காக்கும் எங்கள் மாரி
வரும் வினை தொடரமுன்பே நீ
வந்தவருக்கு அருள் கொடுப்பாய்
விண்ணிலும் மண்ணிலும் நடமாடும்
அன்னையே என்றும் துணை வருவாய்

நோய், கஷ்டங்களால் வருந்துவோர் அவற்றைத் தீர்க்க காவடி, பாற்செம்பு எடுக்க நேர்கின்றனர். அவை நிவாரணம் ஆனதும் தீமிதிப்பு விழாவின் போது தமது நேர்த்திக்கடனை மாரியம்மன் கோயிலிலிருந்து மேற்கொள் கின்றனர்.

அம்பாப்பாடல்களின் மாரி வழிபாட்டைக் காணலாம். வலையை வீசிய மீனவர் முறையம்பாப்பாடும் போது மாரியம்மனை வேண்டிப் பாடுகின்றனர். அம்பாப் பாடல்கள் கொதிக்கும் வெய்யிலிலும், மணலிலும் குளிர் தரும் நயமிக்கவை.

மக்கள் பெயர்களும் மாரி வழிபாட்டுடன் தொடர்பு பட்டுள்ளதைக் காணலாம். மக்கள் அம்மனின் பெயர்களைத் தமது பிள்ளைகளுக்கும், பரம்பரையினர்க்கும் இட்டு மகிழ்கின்றனர். முத்து, மாரி, ஆயி, செல்லி, எக்கலா என்றெல்லாம் மாரியின் பெயர்களை முன்னீடு-பின்னீடாக அமைத்து அழைக்கின்றனர். முத்து என்பது கொப்புளத்தைக் குறிக்கும். மாரி முத்து, நல்லமுத்து, அம்மமுத்து, காமாட்சிமுத்து, தங்கமுத்து என்று பெயர்கள் இடுவர். மகமாயி, மாரியாயி, முத்தாயி, நல்லாயி, செல்லாயி என்பவை ஆயி யைப் பின்னொட்டாகக் கொண்டவை. மாரி, மாரியம்மா, மாரியப்பன் என்ற பெயர்களும் செல்லி, செல்லியம்மா, சின்னச்செல்லி, பெரியசெல்லி, எக்கலாதேவி என்ற பெயர்களும் மாரியின் வழிபாட்டை நினைவு கூர்பவையே.

தென்னிந்தியாவிலும் இலங்கையின் மலை நாட்டிலும் மாரியம்மன் கோவில்களில் தீச்சட்டி எடுத்தல், தீமிதித்தல் என்பன நிகழ்கின்றன. ஆனால் உடப்பில் அவை நிகழ்வதில்லை. ஆரம்ப காலங்களில் மக்கள் மாரியம்மன் மீது பயங்கொண்டனர். அவள் கோவில் பக்கம் யாரும் தலை காட்டுவதில்லை. இன்றோ குழந்தையை அன்புடன் அணைக்கும் அன்னையென அவள் அருள் சுரக்கின்றாள்.

**ராக்குரிசி [ராக்சசி] வழிபாடு**

இது குருதிப்பலி வாங்கும் தெய்வம். ராக்குரிசி கோவில் உடப்பில் ஆண்டிமுனையிலும், முந்தல் கிராமத்திலும் அமைந்துள்ளது. காளி, மாரி, பிடாரி, இராக்குரிசி, காடேறி என்பனவற்றை சகோதரத் தெய்வங்களாக மக்கள் கருதுகின்றனர். உடப்பு மக்களில் பல குழுவினர் இந்த வழிபாட்டில் மிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

ஆரம்பத்தில் உடப்பு மக்கள் முந்தலில் சிறுகடலை அண்டிய பகுதி களில் குடியேறி வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் அங்கிருந்த போது இந்த வழிபாட்டை தொடங்கியிருக்கலாம். பொருளாதார நலம் கருதி அவர்கள் மேற்கே நகர்ந்த போது இந்த வழிபாட்டை உடப்பிலும் நிகழ்த்த விரும்பினர். நொண்டியாலையில் நான் இருப்பேன், எனக்கு அது போதும் என்னை வேறு எங்கும் கொண்டு போனால் மூன்றே முக்கால் நாழிகையில் நான் ஊரையே அழித்துவிடுவேன் என்று கோவிலின் பூசகரான திரு. சொக்கலிங்கப் பூசாரியின் கனவில் வந்து நெஞ்சில் தடவி அம்மை கூறினாள். அதனால் உடப்பில் கோவில் அமைக்க மக்கள் தயங்கினர் என பெரியோர் கூறுவர். முந்தலில் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம் தொடங்குவதற்கு முன் ராக்குருசி ஆலயமே அமைக்கப்பட்டிருக்கலாம். இன்று இரண்டு கோயில்களும் ஒரே இடத்தில் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

ஆலயத்தில் நொண்டி ராக்கப்பர் என்பவரே இதன் பூசகராக இருந்தார். அவரது சந்ததியினர்க்கு ராக்கு அடி நிலைப் பெயராக உள்ளது. இன்றும் அக்குடும்பத்தவரது குல தெய்வம் ராக்குரிசியே. ராக்குரிசி மிக மூர்க்கமான தெய்வம். கிழித்து மாலையாகப் போட்டு விடக்கூடியவள். அவளது கோபப்பார்வைக்கு அகப்பட்டு விடக்கூடாது. பூசை நேரத்தில் யாருமே குறுக்கே போகக் கூடாது. அவள் உண்மையான தெய்வம். ராக்குரிசி

யினாலேயே நாங்கள் வாழ்கின்றோம், என்று பெரியோர்கள் இன்றும் கூறுக்கின்றனர்.

வழிபாட்டின் நோக்கங்களும், சடங்குகளும் பல வகையின, குழந்தை யின்மை, நோய்கள் தீரல் என்னும் நோக்கம் கருதி நேர்த்திக்கடன் செய்யப் படுகின்றது. அவள் நம்பியவரைக் கை விடுவதில்லை. ஒருவர் பத்தாண்டு கள் குழந்தையின்றி வருந்தினார். ராக்குரிசிக்கு நேர்ந்த பின் குழந்தை கிடைத்தது என்பர். ஒருவர் தனது வலது கால் இயங்காது பல ஆண்டுகள் வருந்தி ராக்குரிசியின் அருளால் சுகம் பெற்றார் என பல அற்புத கதை களும் உண்டு.

நோய் அல்லது எதிர்பார்ப்புகளின் தன்மைக் கேற்ப ஒற்றைப்பூசை, இரட்டைப்பூசை என்பன நேர்த்திக்காக நடத்தப்படுகின்றன. இரட்டைப் பூசை என்பது சாதாரண பூசைப் பொருள்களைப் போல இரண்டு மடங்கு படையலில் இடம்பெறுவதைக் குறிக்கும். காலையில் அபிஷேகம், பிற்பகலில் பூசையும் இடம்பெறுகின்றன. படையலில் அம்மிக் (குழவி போன்ற) கொழுக்கட்டைகள், சாத்துக் கொழுக்கட்டைகள் உள்ளன, கஞ்சா ரொட்டி, கஞ்சா, கள், சாராயம், பச்சை (அரை அவியல்) இறைச்சி, குடலுடன் கூடிய கோழித்தலைகள் என்பன முக்கியமாக இடம் பெறுகின்றன. இருபத்தொரு தொகை முட்டை இருபத்தொரு அம்பிக் கொழுக்கட்டைகள் என்று படைக்கப்படுகின்றன.

காலை நேரத்தில் அபிஷேகத்தின் பின் ஒருவர் மீது தெய்வம் ஏறிச் சாமியாடும். கருப்பண்ணசாமி அவ்வாறு ஆடுவதாகக் கூறுவர். அவரிடம் நான்கு சேவற்கோழிகள் ஒவ்வொன்றாக வழங்கப்படும். உருவேறிய நிலையில் அந்தக் கோழிகளை பற்களால் தலைகளைக் கடித்துத் துண்டாக்கிக் கொல்வார். அதன் கழுத்திலிருந்து வடியும் குருதியைக் குடித்து நான்கு பக்கங்களில் வீசி ஆடுவர். தெய்வ உருவேறிய அவரிடம் நல்வாக்குக் கேட்பர். அவ்வாக்கில் மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். பின் ஆட்டுக் கடா ஒன்று பலியிடப்படுகின்றது. பின்னேரப்பூசையின் போதும் வீரபத்திரர் உரு ஏறி நல்வாக்கு வழங்குகின்றார்.

பூசை முடிந்து செல்கின்ற போது பெண்கள் கோவில் முன் செவ்வாய்க் கொட்டி மாரியம்மனுக்குரிய பாடல்களைப் பாடி ஆடுவர். தாயின் அருள் கிடைத்த மகிழ்ச்சியில் அம்மையை மகிழ்விக்கும் வெளிப்பாடாக இதனைக் கருதலாம்.

முந்தல் தீமிதிப்பு விழாக்காலங்களில் இக்கோவிலில் பூசை நிகழ்கின்றது. கரகம் பாலிக்கும் போது ராக்குருசி காவியம் பாடப்படுகின்றது. இந்த ராக்குருசி காவியத்தில் அம்மனைப் பற்றிய பல செய்திகள் கூறப்படுகின்றன. ராக்குருசி சிவன் கையில் உள்ள சூலத்தில் தோன்றியவள். ஆங்காரம் மிக்கவள். திரிசூலம் கபாலத்தை ஏந்தியவள். ஐந்து சக்திகளுள் ஒருத்தி. சொல்லுறுதி தப்பாதவள். அவளை அனுகியோருக்குப் பிணி அணுகாது. பேய், பில்லி, சூனியம் நெருங்காது. ராட்சதரைக் கண்ட துண்டாடியவள். அவளது கொலுவில் காத்தான், கறுப்பன், பாதாள பைரவர், அனுமான், பட்டாணி, ராவுத்தர், துர்க்கை முதலான தேவதைகளும், தேவர்களும் இடம் பெறுவர். அவர்களுக்கான படையல்களில் சூலாடு, கோழி, புழுங்கலரிசி, பாற்சோறு, மோதகம், தோசை, பலகாரம், கறிவகைகள் என்பன இடம்பெறும். பக்தர்களைக் காக்க வேண்டும் என்ற வேண்டுகோள் இறுதியில் உண்டு.

உடப்பு ஆண்டிமுனையிலும் ஸ்ரீ ராக்குரிசி அம்மன் ஆலயம் ஒன்று 1995ல் அமைக்கப்பட்டுள்ளது. இது 1997ல் திரு. வ. சிவலோகதசன் அவர்களின் தலைமையில் ஊர்மக்களின் ஆதரவுடன் கோயில் கட்டப்பட்டு, கும்பாபிஷேகம் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. உடப்பில் உள்ளவர்கள் ராக்குரிசியை வழிபட முந்தலுக்கு வரவேண்டி இருந்தது. அதிக தூரம் இயல்பாக அது பொருந்தி வரவில்லை. தற்போது அமைக்கப்பட்ட கோயில் உள்ள இடம் முந்தல் ராக்குரிசிக் கோயிலுக்கு நேராக உள்ளதெனவும், அத்திடல் ராக்குரிசித் திடல் என அழைக்கப்பட்டதெனவும் மக்கள் கூறிவர்.

ஆண்டிமுனையிலுள்ள தெட்சணாமூர்த்தி செல்லியம்மாவுக்கு சாமி உரு ஏறுவதுண்டு. ஒரு நாள் அவர் சாமி ஆடி அங்கே (முந்தலில்) என்னைக் கவனிக்க ஆளில்லை, நான் இங்கேயே இருக்கப்போகிறேன் என்று கூறி, அந்தத்திடலுக்கு ஓடினார். அத்திடலில் இந்த ஆலயம் அமைக்கப்பட்டது. இன்று காது குத்தல், முடி இறக்கல், முதலிய சடங்குகள், இங்கு நிறைவேற்றப்படுகின்றன. குருதிப்பலி இடம்பெறாமை முக்கியமானது. நேர்த்திகளின் போது சாமி உரு ஏறி ஆடல் நல்வாக்குக் கேட்டல் என்பன இடம்பெறுகின்றன.

தென்னிந்தியாவில் கன்னியா குமரி தவிர்ந்த தென் மாநிலங்களில் இந்த வழிபாடு ராக்காயி வழிபாடு எனப்படுகின்றது. ராக்சசி என்ற பதம்

உடப்பில் ராக்குரிசி என திரிபு அடைந்திருக்க வேண்டும். மதுரை மாவட்டத்தில் அதிக கோவில்கள் உள்ளன. பிள்ளை தின்னும் ராக்காயி என்றும் அவள் அழைக்கப்படுகின்றாள். அக்காலத்தில் குழந்தைகள் பெரும் நோயொன்றினால் கொல்லப்பட்டிருக்க வேண்டும். அவர்களை மருந்திட்டுக் காப்பாற்ற இயலாத நிலையில் ஒரு ராக்சசியின் கொடூரமே இது என மக்கள் நம்பியிருக்கிறார்கள்.

பண்டைய இனக்குழு வாழ்க்கையின் நம்பிக்கை சார்ந்த சடங்குகளின் எச்சொச்சமாக இந்த வழிபாட்டை நாம் காணலாம். பௌத்த மதத்தில் இராஜகிருக நகரத்தின் காவல் தெய்வமான ஆரிதி போன்ற ராக்குரிசி பிள்ளைகளைத் தின்கிறாள். இந்த எண்ணக் கருத்துக்கள் பிற்கால சந்ததியினருக்கு ஊட்டப் பட்டிருக்கலாம். சிலப்பதிகார காலத்தில் வரோத்தமை என்ற தெய்வம் இருந்த இடமொன்றில் இன்று ராக்காயி கோவில் கொண்டுள்ளாள். ஒரு குறித்த காலத் தெய்வப்பண்புகள், அத்தெய்வம் வழக்கற்ற சமயத்திலும் கூட வேறொரு தெய்வத்தின் பண்புகளுடன் கலந்து விடுவதை நாம் காணலாம்.

சுருள் முடிகளான சடாபாரத்துடன் வலக்கரத்தில் சூலம், அல்லது கத்தியுடனும், இடக்கரத்தில் கபாலத்துடனும் அவள் காட்சி தருவாள். இடது காலைப் பீடத்தில் குத்திட்டு வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் விளங்குவாள். எனவும் இராக்குரிசி அம்மனை உருவப்படுத்துவர். இன்று ஆண்டிமுனையில் அமைந்துள்ள இராக்குரிசி அம்மன் நாகம் குடைபிடிக்க நிலத்திலிருந்து தோன்றும் நிலையில், உடம்பின் அரைப்பகுதி தெரிய காட்சி தருகின்றாள்.

இராக்காயி கோயிலில் இருபத்தொரு தெய்வங்கள் இடம்பெறுகின்றன. இருபத்தொரு பந்தி என மக்கள் இதனை அழைப்பர். உடப்பில் ராக்குரிசி வழிபாட்டில் இருபத்தொன்று என்பது இத்தெய்வங்களுக்கு இடப்படும் படையலை குறிக்கின்றது.

உடப்பில் பயன்படுத்தப்படும் மாவினால் செய்யப்பட்ட அம்மிக் குழவி மாமிசப்பிண்டத்தின் குறியீடு. படைக்கப்படும் குடல்கள், கருவளத்திற்கான ஆதாரத்தையே தந்து விட்டோம், எம்மைக் காப்பாற்று என இறைஞ்சி நிற்பதைக் குறிக்கின்றது. கருவளத்தை அழிப்பவனிடத்தில் கருவளத்திற்கான மூலத்தை வழங்குவது ஒத்துச் சடங்கை உணர்த்துகின்றது. மரபு மரபாகப் பேணப்படுவதால் இதன் பொருள். அல்லது

நோக்கம் தெளிவு பெறவில்லை. ஒரு வழிபாடு என்ற வகையில் அதனை நடத்துகின்றனர். வெறியாட்டமும், அச்ச உணர்வும், இறைஞ்சி வேண்டலும் வழிபாட்டின் இயல்புகளாக உள்ளன.

மக்கள் பெயர்களில் ராக்குருசி வழிபாட்டைக் காணலாம். மக்கள் தமது பரம்பரைக்கு ராக்குருசியின் பெயர்களை இட்டு தமது பயபக்தியை வெளிப்படுத்துகின்றனர். ராக்காயி, ராக்காத்தா, ராக்கன், ராக்கப்பன், முத்துராக்கு, முத்துராக்காயி, நல்லராக்காயி, நல்லாக்கி, சின்ன ராக்கு, மதளைராக்காயி என்றெல்லாம் பெயர்கள் இடப்படுகின்றன.

**ஆடிச்செவ்வாய்ச் சடங்கு (ஔவையாரம்மன் நோன்பு)**

ஆண்கள் தெரிந்து கொள்வது கூடத் தடுக்கப்பட்ட, பெண்களால் மட்டும் மேற்கொள்ளப்படும் சடங்கு ஆடிச் செவ்வாய்ச் சடங்கு எனப்படுகின்றது. இது ஆடி மாதத்தில் அனுட்டிக்கப்படுகின்றது. பக்க வீடுகளில் உள்ள பெண்கள் பத்துப் பன்னிரண்டு பேர் இதில் பங்கு பற்றுகின்றனர். சிலர் தாமே தனித்து மற்றவர்களுடைய பங்கையும் பொறுப்பேற்று நடத்துவதாக நேர்த்திக்கடன் செய்து செலவேற்பதுண்டு.

ஔவைபிராட்டியார் ஒரு நாள் ஒரு வீட்டிற்கு பிச்சை கேட்கச் சென்றபோது வீட்டுக்காரியிடம் வழங்க உணவில்லை. வறுமை வீட்டில் குடிகொண்டிருந்தது. அவருக்கு உணவு வழங்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அவளுக்கு இருந்தது. தன் கைகளைப் பிசைந்து கதவிடுக்கிற்குள் நின்றாள். அப்போது அவள் வளம் பெருக இச்சடங்கைச் செய்யுமாறு ஔவையார் வலியுறுத்தினார். அதனால் இந்த வழிபாடு மேற்கொள்ளப் படுகின்றது. யாருக்காக இந்தப்பூசை செய்கிறீர்கள் என்றால் அது பற்றிய தெளிந்த பதில் கிடைக்கவில்லை. தெளிந்த அறிவு இல்லை என்பது தெரிகின்றது.

இரவு பத்து மணிக்கு மேல் ஆண்கள் தொடர்புபடாத அவர்கள் அறியாத வகையில் ஓர் வீட்டறையில் பெண்கள் குழுமுவர். கன்னிப் பெண்கள் வாழ்வரசிகள் இதில் இடம் பெறுகின்றனர். ஒரு குறித்த அளவு நெல், ஒரு புதிய சட்டி, பயறு, சீனி, தேங்காய், உப்பு போன்ற பொருள் களைக் கொண்டு வரவேண்டும். அல்லது இவற்றுக்கான ஒரு தொகைப் பணத்தை அதை நடத்துபவரிடம் கொடுத்து விடுவர். நெல்லைக் குற்றி ஊறப் போட்டு பின் இடித்து மாவாக்குவர். ஒவ்வொருவருக்கும் கிட்டத்

தட்ட ஒரு கிலோ அளவுள்ள மா பங்கிடப்படும். இந்த மா அள்ளுபிடி, நெள்ளுபிடி, அகங்கை, புறங்கை என்ற அளவைகள் மூலம் எல்லோர்க்கும் சரிசமமாகப் பங்கிடப்படும். ஒரு பொதுப்பானையில்நீர் கொதிக்கும். இந்த நீரையும் உப்பையும் கலந்து ஒவ்வொருவரும், தமக்குக் கிடைத்த மாவில் சில உருவங்களைச் செய்வர். அம்மி, குழவி, துருவிலை, வாழைப் பழச்சீப்பு, உரல், உலக்கை, தேங்காய், இடையன், இடைச்சி, குயவன் போன்ற வடிவங்களைச் செய்வர்.

பின் தம்மிடமுள்ள புதுச்சட்டியில் நடுப்பக்கத்தில் சூரியனைப்போன்ற வடிவம் செய்வர். அதில் கண், மூக்கு, வாய் போன்ற உறுப்புக்களை அமைத்துக்கொள்வர். அந்த நடுப்பகுதிக்கு மேல் வட்டமாக ஒவ்வொரு வரும் செய்த உருவங்களை விழாது அப்பி வைப்பர். ஒவ்வொருவருக்கும் ஒரு சட்டி இருப்பது போல பொதுச்சட்டிஒன்றும் இருக்கிறது. முதலில் பொதுச் சட்டியை அடுப்பில் வைத்து பொதுப்பானையில் இருந்து மிகச் சூடான நீர் ஊற்றுவர். சட்டி முழுவதும் கொதிநீர் இருக்கும். அது அவிந்த பின் அந்தச் சட்டியிலுள்ள நீர் மறு சட்டிக்கு மாற்றப்பட்டு அடுப்பில் வைக்கப்படும். பொதுப்பானையில் உள்ள கொதிநீரும் ஊற்றப்படும். இவ்வாறே ஒவ்வொரு சட்டியிலுள்ள நீர் மறு சட்டிக்கு மாற்றப்படும். நிகழ்ச்சி தொடரும். ஒரு சட்டியிலுள்ள நீர் ஊற்றப்பட்ட பின் அந்தச் சட்டியின் அடிப்பாகத்தில் பிடிக்கப்பட்டிருந்த கரியை வைக்கோல் துடைப்பம் ஒன்றினால் தண்ணீரை குமாரா தண்ணி குடி, குமரி தண்ணி குடி என்று என்று கூறிக் கழுவி சட்டியை சாய்த்து வைத்திருப்பர். இவ்வாறே எல்லாச் சட்டிகளும் வட்டமாக படைப்பைச் சுற்றிச் சாய்த்து வைக்கப்படுகின்றன.

படைப்பில் பிள்ளையார் மூல மூர்த்தியாக இருப்பார். விரும்பிய கடவுளரின் படங்களையும் அங்கு வைத்திருப்பர். பூசையில் அனுபவ மிக்கவர் பூசையை நடத்துவார். மந்திரம் கூறி இலைகளைப் பிய்த்து ஒவ்வொரு சட்டியிலும் போடுவார். அத்தி இலை, அகத்தி இலை, வாகை இலை, வில்வ இலை, புங்க இலை, புளிய இலை, இசங்கைஇலை, சங்கிலை போன்ற இலைகள் அர்ச்சதைகளாகப் பயன்படுகின்றன. பயறை அவித்து தேங்காய், சீனி, இட்டுப் பயற்றுருண்டைகள் வழங்கப்படு கின்றன.

இறுதியில் இடைய வாழ்வு எங்களோடே என்றும்,வண்ணாத்தி வாழ்வை எனக்குத் தா என்றும் கோருவர். பின் சட்டிகள் அனைத்தும் கவிழ்த்து வைக்கப்படும். இந்த நோன்பு சுமார் அதிகாலை மூன்று அல்லது நான்கு மணியளவில் நிறைவெய்துகின்றது. அரிசி குற்றுவது, கொழுக் கட்டை செய்வது, மந்திர உச்சாடனங்கள் போன்ற எதுவும் ஆண்கள் காதுகளில் எட்டாது ரகசியமாகச் செய்யப்படுகின்றன. பலவந்தமாக ஆண்கள் பூசையைக் காண முயன்றால் அல்லது படையல் உணவுகளை உண்டால் அவர்களது கண்கள் குருடாகும் என்ற நம்பிக்கை உண்டு. இவ்வாறு காண முயன்ற ஒருவரின் கண்கள் குருடாகிவிட்டதாக இங்குள்ள பெண்கள் நம்புகின்றனர்.

குழந்தையின்மை, இடையூறுகள், குடும்பப் பிரச்சினைகள், வறுமை நீங்க இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இச்சடங்கின் நோக்கம் பற்றி விளக்கம் இல்லை. பரம்பரையான சில வழிபாடுகள் மரபுக்காகவே உடப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விழா பெண்கள் ரகசியமாகச் செய்வதாலும், ஆண்களுக்கு அதைப் பார்ப்பதால் துன்பம் நேர்வதாலும், ஆண்களில் பெரும்பாலானோர் அதை அறிவதில் ஆர்வம் செலுத்துவதில்லை. மிகப் பலருக்கு அத்தகைய சடங்கு ஒன்றுள்ளதா என்பது பற்றியே தெரியவில்லை.

வண்ணாத்தி வாழ்வை எனக்குத் தா இடையன் வாழ்வு எங்களோடே என்ற உரையின் மர்மம், அல்லது பின்னணி விளக்கப்படல் வேண்டும். பாரத விழாவில் சட்டி, பானை உடைக்கும் நாளில் (அன்றுதான் இக்கதை படிக்கப்படுகின்றது). இச்சடங்கு இடம்பெறுகின்றது. வண்ணாத்திக்கும் சட்டிபானைக்கும் தொடர்புண்டு. வண்ணாத்தி போல் வாழக் கோருவதால் வண்ணார இனத்தவர்க்கும், இந்தச் சடங்கிற்கும் ஏதாவது தொடர்புண்டா என ஆராய்தல் வேண்டும்.

தென்னிந்தியாவில் கன்னியா குமரி மாவட்டத்தில் தாழக்குடி, முப்பந்தல், அழகிய பாண்டியபுரம் போன்ற இடங்களில் ஔவை யாரம்மன் என்ற ஓர் அம்மனுக்கு தனிக் கோவில்கள் இருக்கின்றன. இந்தத் தெய்வத்திற்கு அவ்வை நோன்பு என்ற பெயரில் பெண்களே நோன்பு செய்யும் வழக்கம் உள்ளது.

இந்நோன்பின் நோக்கம் இன்ப ஆர்வமாகும். இந்நோன்பு மரபு வழி இயற்றப்பட்டு வந்த இனக்குழுச் சடங்கின் எச்சசொச்சமாக கதைக்கப்

படுகின்றது. அவ்வை என்பது சமண சமயக் குரத்தியரைக் (பெண் ஆசிரியர்) குறிக்கும். எனினும் மாயங்கள், தந்திரங்கள் செய்யவல்ல இயக்கியையே குறிக்குமென்பர். ஔவை என்ற பெயர் தமிழ்ப்புலவர் ஒருவரின் பெயரன்று. அது சமண சமயத்தின் இருபத்து நான்கு இயக்கியர் களுள் ஒருவரான பத்மாவதியை அவளது மூப்புக் கருதி வழங்கிய பெயராகும் என்ற கருத்துமுண்டு.

இரண்டாம் வரகுண பாண்டியனின் கல்வெட்டு சந்த இயக்கியை அவ்வை என்றே குறிப்பிடுகின்றது. இந்த இயக்கியை வழிபடுவதன் மூலம் மந்திர தந்திரங்களைச் செய்யும் வழக்கமும் உரியவற்றைக் கேட்டுப் பெறும் முறையும் சமண சமயத்தில் இருந்துள்ளன. உடப்பில் அனுட்டிக் கப்படும் இச்சடங்கு ஔவையாரம்மன் நோன்பு தான் என்பதை ஓரளவு ஊகிக்கலாம். எனினும் நுணுகிய ஆய்வின் மூலமே இதனை உறுதிப் படுத்தல் சாலும்.

**பேய்ச்சி அம்மன் வழிபாடு**

உடப்பில் இதனை பேச்சி அம்மன் வழிபாடு என்பர். பேய்ச்சி என்னும் பெயரே குரூர வடிவமும் உருத்திர உணர்வும் மிக்கது என்பதை உணர்த்து கின்றது. பேய்ச்சி அனல் மகுடத்துடன் நீண்டு தொங்கும் பேய் வடிவத் திற்குரிய மார்பகங்களுடன் ஓங்கிய வலக்கரத்தில் குறுங்கத்தியைக் கொண்டு நீட்டிய இடக்கரத்தில் கபாலத்தையும் ஏந்தி நிற்பாள். என்றும் இயக்கி வழிபாடு, கடைவாயின் இருபுறமும் பக்கதொரு கோரைப் பற்களைக் கொண்டு விளக்குவாள். அரையில் பாவாடை கட்டியிருப்பாள் என்றும் அம்மனை உருவப்படுத்துவர்.

உடப்பில் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் பரிவார தெய்வங் களுள் ஒன்றாக பேச்சி அம்மன் விளங்குகின்றாள். பேச்சியின் வடிவத் தையும், இயல்பையும் நோக்கும்போது சங்ககாலத்திலும், அதன் முன்பும் விளங்கிய பேய் மகளிர் நினைவுக்கு வருகின்றனர். இறந்த மக்களின் புலாலை சுடுகாட்டிலும், போர்க்களத்திலும் இப்பேய் மகளிர் உண்டனர். சிலப்பதிகாரத்திலும் மற்றவர்களின் வாளுக்கு இரையாகும் வீரர்களின் பிணத்தை உண்பவர்களாகவே இவர்கள் வருகின்றனர். இந்த வகையில் புலாலை உண்ணும் மக்கள் கூட்டத்தினர் உலகின் பல பாகங்களில் இருந்துள்ளனர் என்பதை க. கைலாசபதி எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தப் பேய் மகளிர் அச்சம் தரும் இயல்பினர். அவர்களின் துணைக் கூத்தை ஆடினர். அவர்களது தலைமயிர் சாய்ந்து கிடந்தது. பல்நிரை ஒவ்வாது கிடந்தது. வாய் திறந்து கிடந்தது. கோபத்தால் சுழலும் விழி களுடைய பசிய கண்ணையுடையவளாக இருந்தாள். அவள் பார்வை கொடுமை செய்யும் தன்மையோடு விளங்கியது. பிதுங்கிய கண்ணையுடைய கூகையும் பாம்பும் தூங்குவதனால் முலைகளை வருந்தின. அவள் காதுகள் உட்டுதல் பொருந்திய நடையினையும், பெரிய வயிற்றையும் உடையவளாகவிருந்தாள். உதிரத்தை அளைந்த நகத்தையுடைய கொடிய விரலாலே தோண்டி உண்ணப்பட்ட முடை நாற்றமிக்க கருந்தலையை வளைகள் நிரம்பிய கையினாலே ஏந்தியுள்ளாள். எதிர் நின்று கொல்கின்ற வெற்றிக்களத்தைப் பாடி தோளை அசைத்து பிணத்தை தின்கின்ற உடையவாய் ஆடினாள் என்று திருமுருகாற்றுப்படை கூறும்.

உடப்பிலும் பேய்ச்சி குருதிப்பலி எடுப்பதில்லை. அவளுக்கு சதைப் பலியே வழங்கப்படுகின்றது. உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் அமுக்குக் கோழிப்பலி பேய்ச்சிக்கே வழங்கப்படுகின்றது. அதாவது கிட்டத்தட்ட இரு சதுர அடி ஆழமுள்ள கிடங்கில் சேவல் ஒன்று வைக்கப்பட்டு மூடப்படுகின்றது. இது புதைக்கப்பட்ட பிணத்தின் குறியீடாக இருக்க வேண்டும். பேய்ச்சி புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி உண்பவள் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே இது.

பேய்ச்சி சிவனின் மகள் எனவும், பத்ரகாளியின் இளமைத் தங்கை என்றும் உடப்பில் கருதுகின்றனர். சங்ககாலப் பேய் மகளிர் பற்றிய எண்ணக்கருத்துக்கள் காலந்தோறும் பரிணாமம் அடைந்து இனக்குழு வழிபாடாக மாறி அவற்றின் எச்ச சொச்சங்களே பேய்ச்சி வழிபாடாக மாறி இருத்தல் வேண்டும் எனக் கொள்ளமுடியும்.

பூப்பெய்தாது இருக்கும் பெண்களை பேய்ச்சியின் வழிபாட்டால் பூப்பெய்தச் செய்யலாம் என்ற நம்பிக்கை தென்னிந்திய நாட்டுப்புற மக்களிடையே உள்ளது. ஒரு அமாவாசைத் தினத்தில் பேச்சிக்கும் படையலிட்டு இருபத்தொரு பணம் வைத்து பரிவட்டம் கட்டுகிறார்கள். வெள்ளைச் சேலை ஒன்றை பூப்பெய்தாதிருக்கின்ற பெண்ணின் தலையைச் சுற்றி எடுத்து வந்து பேச்சிக்கு அருகில் வைத்து பலி கொடுப்பர். பின் பேய்ச்சி உடலிலிருந்து எண்ணெய்ச்சாத்துடன் திருநீற்றையும் அப்பெண் ணிற்கு பூசி வெந்நீரும் வழங்குவர். அப்பெண் அதன்பின் விரைவில்

பூப்பெய்துவாள் என்று மக்கள் நம்புகின்றனர். பெண்கள் கருத்தரிப்பதற்கு ஏதுவாக பூப்பெய்தும் வளச்சடங்காக இதனை நாம் கருதலாம். மனிதப் பெருக்கத்திற்கு உதவுபவளாக மக்கள் பேய்ச்சியை நம்புகின்றனர்.

உடப்பிலும் இந்த வளச்சடங்கு இடம்பெறுகின்றது. ஸ்ரீ-வீரபத்திர-காளியம்மன் வேள்வி விழா முடிந்த பின்னேரம் குழந்தைகள் இல்லாத பெண்கள் கோயிலுக்கு வருகின்றனர். இவர்கள் மூன்று நாட்கள் மச்ச மாமிசம் உண்ணாது விரதம் இருந்து, நீராடி புனிதமாக வரவேண்டும். அவர்களுக்குக் காயம் என்னும் மருந்து வழங்கப்படுகின்றது. செம்மண் நிறத்தில் லேகியம் போல் இது உள்ளது. பெண்கள் இதனை வாயில் பெற்றதும் பேய்ச்சியை வழிபடுவர். இதன்மூலம் குழந்தை கிடைக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். தென்னிந்தியாவிலும், உடப்பிலும், பேய்ச்சி வழிபாட்டில் மாறு வடிவங்களுடன் இச்சடங்கு இடம்பெறுகின்றது. இது அடிப்படையில் கருவளச் சடங்காக அமைந்துள்ளமை புலப்படும். அவ்வகையில் பேச்சி ஒரு வளத்தெய்வமாக கருதப்படுகின்றாள்.

**தேவகன்னியர் வழிபாடு**

இளம் பெண்கள் கலந்து கொள்ளும் தேவகன்னியர் வழிபாடு உடப்பில் சிற்சில இடங்களில் மேற்கொள்ளப்படுன்கிறது. இதனை கன்னித் தேவதை வழிபாடு என்றும் அழைப்பர். குடும்பத்துள் தோன்றும் கஷ்டங்கள், நெருக்கடிகள் என்பவற்றுக்குப் பரிகாரம் தேடும் முகமாக எவரும் தேவ கன்னியர்க்கு நேர்த்திக்கடன் வைப்பர். எந்த நாளிலும் இந்த வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

இவ்வழிபாட்டின் பின்னணி பின்வருமாறு விளக்கலாம்; இராமேஸ்வரக் கரையோரத்தில் உடப்பு மக்களின் பழைய மரபினர் வாழ்ந்தனர். சேதுக்கரை என்ற அந்தப் பகுதியின் தலைவன் பெயர் முத்துராமு அம்பலகாரன் அவரது மகள் கமலகன்னி அவள் மிக அழகானவள். அக்காலத்தில் மொகலாய சாம்ராஜ்யத்தின் முஸ்லிம் ஆட்சி அதிகாரிகள் அப்பிரதேசத் தின் மேற்பார்வையாளர்களாக இருந்தனர். அவர்கள் மதமாற்றத்தில் தீவிர ஈடுபாடு காட்டினர். பக்கத்தே உள்ள அக்காமடம், தங்கச்சி மடம் ஆகிய பகுதி மக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். கமலகன்னி மீது கொண்ட ஆசை காரணமாக அவளை மணமுடிக்க ஒரு முஸ்லிம் அதிகாரி முத்துராமு அம்பலகாரனை வற்புறுத்தினான். ஒரு குறித்த நாள் தான்

வருவதாகவும், கட்டாயம் மணம் செய்து தரவேண்டுமென்றும் நிபந்தனை யுடன் அவன் சென்றான். தமது மதத்தையும், மகளையும் இழக்க விரும்பாத அம்பலகாரன் தன்னினத்தவருடன் ஏழு பெரிய வள்ளங்கள் மூலம் மன்னாரை நோக்கி வந்தான். மறுநாள் சேதுக்கரைக்கு வந்த முஸ்லிம் அதிகாரி முத்துராமு அம்பலகாரனின் வீடு அலங்கரிக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ந்து உள்ளே சென்றான். அங்கே இருந்த மணவறையில் பக்கத்தில் வாழை மரமொன்றில் ஒரு பெட்டை நாய் கட்டி வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஆத்திரம் கொண்டான்.

வல்லங்களுடன் சென்ற அம்பலகாரனையும், ஏனையவர்களையும் பிடிப்பதுடன் கமலகன்னியையும், கொண்டுவருமாறு ஆணையிட்டான். அவனது வள்ளங்கள் அம்பலகாரனின் வள்ளங்களை நெருங்கிய போது கமலகன்னி தன் மார்பில் கல்லொன்றைக் கட்டிக்கொண்டு கடலில் மூழ்கடிக்குமாறும் அதனால் தனதும், தன் குலத்தினதும் மானம் காக்கப் படுமென்றும் வற்புறுத்தினாள். வேறு வழியின்றி அவளைக் கடலுக்குப் பலியாக்கினர். அதனைக் கண்டு துரத்தி வந்தவர்கள் மீளச் சென்றனர். அவ்வாறு பலியிடப்பட்ட கமலக்கன்னி அவர்களின் குல தெய்வமாக நின்று காக்கிறாள் என்று மக்கள் நம்பி அவள் நினைவால் இந்தவழி பாட்டை ஆற்றுகின்றனர்.

பொங்கலுடன் பழவகைகளும் படையலில் இடம்பெறுகின்றன. படையலின் முன் பாவாடை, சட்டை, காதோலை, கரிசமணி, பட்டுச்சேலை என்பவற்றை ஒரு பொட்டாணியில் வைக்கின்றனர். ஒற்றைப் பட இளம் பெண்கள் தொகையையும், வாழ்வரசிமாரும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். மச்சம், மாமிசம் படையலில் பயன்படுத்துவதில்லை. மரக்கறிகளுடன் சோறும் வழங்கப்படும். இரவு நேரங்களில் இந்தச்சடங்கு இடம் பெறும். ஆண்களுக்கு இந்த உணவு வழங்கப்படுவதில்லை. எச்சில் இலைகள் உட்பட உணவுக் கூறுகள் அனைத்தும் வீட்டின் புறத்தே நிலத்தில் புதைக்கப்பட்டு விடுகின்றனர்.

கொண்ட கொள்கையில் உறுதி குலையாமை, பிறரால் கவரப்படாமை, குலத்தின் மானம் காத்தல், அதற்காக தியாகம் செய்தல், தியாகத்திற்கான துணிவு என்பன நோக்கி இவ்வழிபாடு பேணப்படுகின்றது. தொழில் சார் சடங்குகளிலும் தேவ கன்னி வழிபாட்டைக் காணலாம். மீனவர்கள் வருடத்தில் தமது பாதைகளை மீன்பிடிக்காக முதலோட்டம் செய்யும்

அதிக காலைப்பொழுதில், அதற்குச் சொந்தக்காரனான சம்மாட்டி வீட்டில் ஒரு படையல் இடப்படும். அப்பூசையில் தேவகன்னிக்கும் பங்குண்டு. சாரிகள், நகை என்பன வைக்கப்படுகின்றன. இவை தேவகன்னிய வேண்டுதலைக் குறிக்கின்றன. பாதையை நீராட்டும் போதும் பாதையின் ஆணியத்திலும் இவை மீள வைக்கப்படுகின்றன. பாதையின் அன்று பிடிக்கப்பட்ட மீன்களுக்கு பணத்தொகை பங்கிடப்படும் போதும் அத் தொகையில் ஒரு பகுதி விளக்கடியில் வைக்கப்படுகின்றது. மீதி பங்கிடப் பட்ட பின் விளக்கடியில் உள்ள தொகை இளம் பெண்களுக்கு வழங்கப் படும் மரபுமுண்டு. சில வீடுகளில் இளம்பெண்கள் திருமணமாகாமல் இறக்க நேரிட்டால் அவர்களைத் தேவதைகளாக் கொண்டும் இந்த வழிபாடு இயற்றப்படுகின்றது.

ஆண்டிமுனை கிராமிய வைத்தியசாலையின் முன்னால் நாவல் மரத்தின் கீழ் கன்னியம்மன் கோவில் உண்டு. கற்களால் அமைக்கப்பட்ட சிறிய கோவில். முன்பு மீனாட்சி என்பவர் பூசாரியாக இருந்தார். பொங்கல், பழவர்க்கங்கள் படையல் செய்யப்படுகின்றன. இது காளியம்மன் கோவிலா, கண்ணகி அம்மன் கோவிலா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. பாலா குளத்தில் உள்ள கண்ணகி வழிபாடு கோவில் பரிமாணத் திற்கே இது நடைபெறுகிறது எனச் சிலர் கூறுகின்றனர்.

கமல கன்னியின் செவிவழிக் கதை போல தமிழ் நாட்டில் பல மரபு வழிக்கதைப் பாடல்கள் வழக்கில் உள்ளன. உதாரணத்திற் கொன்று தரப்படுகின்றது. மங்காத்தியம்மன் கதை என்ற தமிழ்க் கதைப் பாடலில் அகம்படியார் சாதி மன்னன் ஒருவன் அனஞ்ச பெருமாள் கோனார் என்பவரது மகள் பத்ரகாளியை தன் மகனுக்குப் பெண் கேட்கிறார். முதலில் பெண் தர மறுத்த அவர் பின்னர் இதன் காரணமாக ஏற்படும் விளைவுகளுக்கு அஞ்சி திருமணத்திற்கு இசைவு தெரிவிக்கின்றார். பின் திருமணப் பந்தல் அமைத்து முகூர்த்த நாளில் பெண் நாயைக் கட்டி விட்டு அவரது குடும்பத்துடன் ஊரை விட்டுச் சென்று விடுகின்றார். வீட்டிற்கு வந்த மன்னன் இதைக்கண்டு அவமானமடைந்து அவரைத் துரத்திச் சென்றான். ஆனால் பத்ரகாளியின் அருளால் அனஞ்ச பெருமாள் கோனாரின் குடும்பம் தப்பி விடுகின்றது. இவ்வாறான கதைகள் பல தமிழ் நாட்டில் நிலவுகின்றன. அண்மையில் தென்னிந்தியாவில் வெளியான மகிழ்ச்சி என்னும் தமிழ் திரைப்படமும் தாயம்மை-தங்கமை என்ற

கதையைப் பின்புலமாகக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. பெண்கள் மீது பொருளாதார மேலோர் தொடுத்த பாலியல் வன்முறைக்கஞ்சி பல இனக் குழுக்கள் புலம் பெயர்ந்தன. சேதுக்கரை மக்களின் இடப்பெயர்வுக்கு இவ்வன்முறையே காரணம் என்பதை இவ்வழிபாடு உணர்த்துகின்றது.

## ஸ்ரீ பைரவ வழிபாடு

பைரவர் கிராமத்தின் காவல் தெய்வங்களுள் ஒருவர். எல்லைப் புறங்களில் அவர் வீற்றிருப்பார். உடப்பின் வடகிழக்கெல்லையில் அவர் கோயில் உண்டு. புராணக் கதைகளின் படி தக்கன் யாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரருடன் தோன்றியவர். ஈஸ்வர புத்திரர், உக்கிரமூர்த்தி, அர்த்த யாமப் பூசை காவல் கடனாக பைரவர்க்கே வழங்கப்படுகின்றது.

சாமுண்டா காளி என்பது அவர் மனைவி. நிர்வாணம் அவரது வடிவம். கோவில்களில் உள்ள சேத்திரபாலர் அவரது பிரதி ரூபங்களுள் ஒன்று ஆயுதம் சூலம், அவரது சாடை அக்கினிச் சுடர், அவரது வாகனம் நாய், நாய் வீட்டுக் காவல் மிருகம். அக்குறியீடு காவலுக்கான கடவுள் என்பதைக் குறிக்கின்றது. வடை மாலைப் பிரியர் அவர்.

உடப்பில் சக்தியின் பரிவார தெய்வமாக உள்ளார். வடகிழக்கெல்லையில் மூலமூர்த்தியாக உள்ளார். புளிச்சாக்குள பைரவர் கோவிலில் காவடி, பாற்செம்பு என்பன எடுக்கப்பட்டு, உடப்பு மாரியம்மன் கோவிலுக்குச் சென்று திரௌபதியம்மன் ஆலயத்தில் நிறைவேய்துகின்றன. நேர்த்திக் கடன்கள், பொங்கல், படையல் ஊடாகவும், உயிருக்கு உயிராகவும், (ஒரு சேவற் கோழியை விடுதல்) கழிக்கப்படுகின்றன. வாடா, ரொட்டி, சுட்ட இறைச்சி, கஞ்சா, கள்ளு, சாராயம், பீடி, சுருட்டு என்பன பைரவருக்கு நிவேதிக்கப்படுகின்றன.

தீமிதிப்பு விழாவின் போது காவடி, பாற்செம்பு என்பன வரும்போது வைரவர் காவியம் பாடப்படுகின்றது. வைரவர் காவியத்தில் இடம்பெறும் முக்கிய செய்திகளாவன. பைரவர் கர்த்தர் என அழைக்கப்படுகின்றார். தூண்டி, கறுப்பன், காடேறி, வண்ணாரப்பேய், வேதாளப்பூதம், பாதாள பைரவன் ஆகியோர் அடி பணிகின்றனர். ஆதி பரமசிவனின் மைந்தன் சோதியாய் அக்கினியாய் நின்றவர். சுடலையின் நாதன், பூத கண நாதன், அரக்கர், பூதப்பிசாசுகள், காளபைரவன், மாடன், சங்கிலி மாடன், இருளன், வீரன், கூனிகள், பேய்வகைகள் அனைத்தும் அவரைத் தொழுகின்றன.

கச்சுளி, கமண்டலம், கையில் புத்தகம், கொண்டவர். காவி ஆடை இடையில் தரித்தவர். வச்சிர குண்டலம் காதில் அணிந்தவர். தறி சூலத்தை முன் கையில் கொண்டவர். சகல பிசாசுகள், தேவதைகளிடமிருந்து பாதுகாக்கவும் சூரியனைக் கண்ட பனிபோல துன்பங்கள் நீங்கவும் இன்பம் வந்து சூழவும் பைரவர் வேண்டப்படுகின்றார்.

உடப்பில் ராக்குரிசி பூசை போடுவதாயின் முதலில் பைரவருக்கு பூசை போடப்படும். சில வீடுகளில் சாமி அறைகளில் பைரவர் முக்கிய தெய்வ உருவமாக வழிபடப் படுகின்றார். ஒரு மரத்தின் தடி, சிறப்பாக கருங்காலிப் பொல்லு வைரவரின் குறியீடாகக் கருதப்படுகின்றது. சில கிராமியத் தெய்வங்களைப் போலவே பைரவரும் உருவேறி வருவார் என மக்கள் கருதுகின்றனர். பைரவர் பூசையின் போது உருவேறி ஆடுவோர்க்கு அவர் வெளிப்படுகிறார். அவரிடம் நல்வாக்கு வேண்டப் படுகிறது. குஞ்சுகள சிந்தனை இல்லாம பாதுகாப்பேன் என்று அவர் கூறுவார். உண்மையாகவே பைரவர் வந்துள்ளார். என்று நம்பி அவர் கூறும் நேர்த்திகளை நிறைவேற்றியும் மக்கள் வழிபாடு இயற்றி வருகின் றனர். தீமிதிப்பு விழாவில் அக்கினி குண்டக் காவல் காரர்களுள் ஒருவராக பைரவரும் இடம்பெறுகின்றார்.

மந்திரச் சடங்குகளிலும் பைரவர் இடம்பெறுவதைக் காணலாம். மந்திரச் சடங்குகளில் இடம்பெறும் கும்பம் காளி அல்லது பைரவர்க்கே உரியன. தீய ஆவிகளை விலக்க பைரவரையே மந்திரவாதிகள் அழைக் கின்றனர். அந்தி பைரவன், சந்தி பைரவன், காலை பைரவன், மாலை பைரவன், கரையாக்க பைரவன், உளத்த ரூடி பைரவன், புலி பைரவன், புலியாண்ட பைரவன், காகாள பைரவன், பறபைரவன், பறச் சாமுண்டி பைரவன், உஜாராகி பைரவன், உடைய பைரவன், உன்மத்த பைரவன், சுடலை பைரவன், சக்தி பைரவன் என்றெல்லாம் உருக்கொடுத்து பைரவர் அழைக்கப்படுகின்றார். இந்த வகையில் சில மந்திரவாதிகளின் வாலாய தேவதையாக பைரவன் இடம்பெறுகின்றார்.

நூல் போடல், தேசிக்காய் வெட்டுதல் என்பவற்றில் பைரவர், ஆவாகனம் செய்யப்படுகின்றார். அம்மனை விலக்க பைரவ மந்திரமே பயன்படுகின்றது. கர்ப்பிணிப் பெண்கள் குழந்தைப்பேற்றில் இடர் உறும்போது பைரவர் மந்திரமே உச்சரிக்கப்படுகின்றது. சில நாட்டார் சடங்குகளில் பைரவர் வழிபாட்டைக் காணலாம். குக்கல் என்பது சிறுவர்

களைப் பாதிக்கும் நோய். அது பைரவரால் ஏற்படுவதாகக் கருதுகின்றனர். ஒரு செம்புத் தகட்டில் நாய் வடிவமொன்று வெட்டப்பட்டு நூலால் இணைத்து நோயுள்ள குழந்தையின் கழுத்தில் தொங்கவிடப்படுகின்றது. ஒரு நாய்க்கு உணவு படைத்து, அது உண்ட உணவின் ஒரு பகுதியை குழந்தைக்கு உண்ணக் கொடுக்கும் மரபு இருந்தது. இதனால் குக்கல் நீங்கிவிடும் என்று நம்பினர். இது பைரவர் வழிபாட்டின் ஒரு கூறே.

மக்கள் பெயர்களில் பைரவரைக் காணக்கூடியதாக உள்ளது. வைரன், காலவைரன், நல்லவைரன், முத்துவைரன், சின்னவைரன், வயிரடப்பன், வைரையா, வைரவநாதன், வைரலிங்கம், வைரவ மூர்த்தி, வைரவசுந்தரம், வைரி, வைராத்தை, பெரிய வைராத்தை, முத்துவைரி, முத்துவைராத்தை, வைரம்மா என்ற பல பெயர்களில் மக்கள் தம் குழந்தைகளை அழைத்து மகிழ்கின்றனர்.

## ஸ்ரீ கந்தசாமி வழிபாடு

இங்கு ஓரளவு பழைமைமிக்க வழிபாடு இது. இக்கோவில் சிறு கற்கட்டு மானமாக இருந்து. சாதாரணக் கோவிலாக எழுந்துள்ளது. கந்தசாமி காவியம் இக்கோவிலுக்காக எழுந்தது. தீமிதிப்பு காலத்தில் கரகத்தை முன் தொடர்ந்து செல்லும் இசைக்குழுவினர் இதனை இசைத்துச் செல்வர். இக்காவியத்தில் கூறப்படும் செய்திகள், திருப்புகழில் தரப்படும் செய்தி களை ஒத்துள்ளன. கதிர்காம யாத்திரைத் தொடர்புள்ளவர்களால் இவ் வழிபாடு தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும். முன்னர் மணியக்காரர் வீதி வடபகுதியிலிருந்து கதிர்காமம் செல்லும் யாத்திரை வழியாக காணப் பட்டது குறிப்பிடத்தக்கது. பொங்கல், பழவர்க்கங்கள், இட்டு பூசை செய்யப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் நிரந்தர பூசகர் இல்லை. ஆனால் இன்று நிரந்தர பூசகருடன், மூன்று காலப் பூசையும் இடம்பெறுகிறது.

## ஸ்ரீ ஐயனார் வழிபாடு

ஐயனார் ஒரு காவல் தெய்வம், காடுகளில் பயணம் செய்வோர் தமது பயணம் இனிதே பயமின்றித் தொடர ஐயனாரை வழிபடுகின்றனர். பௌத்த மக்களும் ஐயநாயக்க தெய்யோ என்று வீதி ஓரங்களிலும் மரத்து ஓரங்களிலும் தம் வீடுகளின் மூலைகளிலும் சிறு கூண்டு அமைத்து வழிபடுகின்றனர்.

உடப்பிலுள்ள ஐயனார் ஆலயம் பொருளாதார மேலோர்களால் அமைக்கப்பட்டது. தனியார் கோவிலாக அது உள்ளது. வெகு ஜன வழிபாடு அதற்குக் குறைவே. 1925ம் ஆண்டு அமைக்கப்பட்ட அது பெருமளவு தன் முக்கியத்துவத்தை இழந்துள்ளது. இருப்பினும் 2012ல் புனர்நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. சக்தியை ஆற்றலுள்ளவளாக கருதுவதனால் போலும். மக்கள் ஐயனாருக்கு அவ்வளவு முக்கியத்துவம் வழங்கவில்லை என்று கருதத் தோன்றுகின்றது. ஆரம்ப காலத்தில் உடப்பில் நவக்கிரகங் களைக் கொண்ட ஒரே ஒரு ஆலயமாக விளங்கியது. பெங்கல் விழாவும், பங்குனி உத்தர விழாவும் சிறப்பாக இடம்பெறும். ஆண்டிமுனை பெரும்படை ஐயனார் கோவில், ஸ்ரீ ஐயப்பன் சுவாமி ஆலயம் என்பன உடப்பிலுள்ள வேறு சில ஐயனார் ஆலயங்களாகும்.

**முனியசாமி வழிபாடு**

முனி என்பது ஒரு பேய். மரங்களில் வாழ்வது என்று கருதப்படுகின்றது. உடப்பிலுள்ள சிறு குழுவினரின் குல தெய்வமாக அது வழிபடப்படு கின்றது. மாரியாயின் மகனாகக் கருதப்படும் முனியாண்டி கெட்ட ஆவி யாகக் கருதப்பட்ட போதும் அவனை வழிபடுவதனால் இரவு நேரப் பயணங்களை ஆபத்தின்றி மேற்கொள்ளலாம் என்று மக்கள் கருது கின்றனர். தொல்லை தந்து அகால மரணமடைந்த கெட்ட ஆவியே முனி என்பது வேறு சிலரின் கருத்தாகும்.

பூனைப்பிட்டியில் உயர்ந்த மரங்கொடிகளுக்கிடையே சிறு நடை பாதை ஒழுங்கையை அமைத்து இத்தெய்வம் வழிபடப்படுகின்றது. முனியசாமி, கருப்பண்ணசாமி, லாடசாமி, ஐயனார், காளி, சாகிபு, சுடலை மாடன் ஆகிய ஏழு தெய்வங்கள் மரத்தூர்களில் உள்ளன. உருவ வழிபாடு கள் இல்லை. முனியசாமிக்கு கருங்காலிப் பொல்லுகளே குறியீடாக உள்ளன. இவை குழுமி இருப்பதனால் கூட்டச்சாமி என அழைக்கப் படுகின்றன. வழிபடுவோருக்கு இத்தெய்வங்கள் பற்றிய விளக்கம் இல்லை.

தீராத நோய்கள் தீரல், பிள்ளையில்லாக்குறை தீரல், நோய் நொடி யின்றிப் பாதுகாத்தல், பகை, கெட்ட பிசாசுகளிடமிருந்து பாதுகாத்தல் ஆகிய காரணங்களால் முனியசாமி பூசிக்கப்படுகின்றது. குருதிப்பலி

நிகழ்வதில்லை. பொங்கல், பழவர்க்கங்கள் பிரதான படையல், நேர்ந்து சேவல்கள் விடப்படுகின்றன. சேவலின் மீது நீரை ஊற்றுவர். அது உதறினால், கடனைத், தெய்வம் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுகின்றது. இங்கு உருவந்து ஆடும் மரபு உண்டு. நல்வாக்குக் கேட்பதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

முனியசாமி மீது இம்மக்கள் ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளனர். என் மகன் பேசும் வயதில் பேசாதிருந்தான். முனியசாமிக்கு நேர்த்தி வைத்தேன், பேசத்தொடங்கினான் என்றும். உன் வயித்தில் ஒரு கொம்பன் இருக்கான், சதுர சொகம் (சரீர சுகம்) தருவேன் ஒரு பொல்லுக் கொண்டு வந்து வை என்று சாமியேறிய தெய்வம் கூறியது. அப்படியே நிறை வேறியது என்றும் பல அற்புத கதைகள் உள.

பூசை முடிந்ததும் எல்லோரும் தமது பொருள்களைக் கொண்டு சென்ற பின்னர் திரும்ப எக்காரணத்தாலும் கோவிலுக்கு வரக்கூடாது. என்றும், அந் நேரத்தில் தெய்வங்களின் கோபத்திற்கு இலக்காக வேண்டு மென்றும் மக்கள் கருதுகின்றனர். யாழ்ப்பாணத்திலும் முனி வழிபாடு உண்டு. வல்லைமுனி, உயிலங்கன்றடி முனி, திக்கத்து முனி, சாக்கோட்டை முனி, தாமரைக்குளத்துமுனி, பருத்தித்துறைச் சந்தைப்புளியடி முனி என இவை பலவகை. மலை நாட்டின் கொம்பு முனி, கழுகுமுனி, ரோந்தை முனி என்பன முக்கியமானவை.

பழங்காலத்தில் சனச்செறிவு அற்ற பிரதேசங்களில் மக்கள் பயமின்றி வாழவும், நடமாடவும் இம்முனிகளை வணங்கினர். உடப்பில் மக்கள் நெருக்கடிக்குள் வாழ்வதிலிருந்து ஒரு நாள் மாற்று வாழ்க்கைக்கு துணை செய்வதாக இது அமையலாம். முனியன், முனியான், முனியாயி, முனியாண்டி, முனியசாமி என்ற பெயர்கள் முனியசாமி வழிபாட்டை நினைவுக்குக் கொணர்கின்றன.

## இடும்பன் வழிபாடு

திருத்தலங்களில் மகோற்சவத்தை அடுத்து இடும்பன் பூசை நடைபெறுதல் வழக்கு. உடப்பில் கதிர்காம யாத்திரையின் பின் பக்தர்கள் அதனை வீடுகளில் நடத்துதல் மரபு ஆகும். இடும்பன் பூசை என்பது நன்றிக்கடனே. பழங்காலத்தில் கதிர்காமம் செல்வது கடினமானது. காடுகளுக்கூடாகச் செல்லும் சிரமங்களைக் கொண்ட நீண்ட காலப் பயணம். தம்மைச்

செவ்வனே இல்லம் சேர்த்தான் என்று நம்பி அக்கைகங்கரியம் செய்த இடும்பனுக்கு நன்றிக்கடனாகவும் மக்கள் இப்பூசையைச் செய்வர்.

முருகனின் பரிவாரத் தெய்வங்களுள் இடும்பனும் ஒருவன் கயிலாயத்தில் இருந்த சிவகிரி, சத்தகிரி என்னும் மலைகளை பொதிய மலையில் இருந்த அகத்திய முனிவரிடம் சேர்க்கும்படி இடும்பாசுரனுக்குச் சிவபெருமான் ஆணையிட்டார் எனவும், இம்மலைகளைக் காவடி போலக் கட்டித் தூக்கி வந்த இடும்பன் பழனியில் களைப்படைந்து இறக்கி வைத்து, முருகனின் வாயில் காவலனாக இருக்க வரம் வேண்டி முருகனது வாயில் காவலனாகினான் என்னும் ஐதீகம் தென்னிந்திய இந்துக்களிடையே நிலவுகின்றது. கதிர்காமத் தொடர்பு, பெருந்தெய்வ வழிபாட்டுத் தழுவல் ஆகியன காரணமாக இவ்வழிபாடு ஏற்பட்டிருக்கலாம்.

கருத்துக்கள், குறிக்கோள்கள், அவற்றைத் தாங்கி நிற்கும் நிறுவனங்கள் என்பன சுயம்புவானவையன்று. அவை சமூகத் தேவைகளை நிறைவு செய்வன. சமூக விருப்பத்தின் அறுவைகளே அவை. இவற்றுட் சில இயக்காற்றலில் முதன்மையும் முனைப்பும் பெறுவன. அதனால் சமூகம் கடந்தும் பரவும் தன்மையன. சமூக மாறுதல்களையொட்டி, இவை மாறியும், மருவியும், தேறியும், திருந்தியும் வளர்வன.

பண்பாட்டுச் சிந்தனைகளும் அவற்றின் நடத்தைக் கோலங்களும் இத்தகையனவே.சடங்குகள், வழிபாடுகள் என்பன ஒரு குறித்த சமூகக் கட்டுமானத்தின் கட்டொழுங்கிற்கு ஆதாரமாக அமைவனவே.

தென்னிந்திய ராமாநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட வாழ்நிலைப் புலங்களில் இருந்து பெயர்ந்த உடப்பின் பண்டைய இனக்குழுக்கள் இறுக்கமாகப் பற்றி நின்ற இறையியற் சிந்தனைகளின் நடத்தைக் கோலங்களாகவே நாம் மேலே கண்ட வழிபாடுகளின் பெரும்பகுதி அமைகின்றன. சமூக நோக்கு, அவற்றிற்கான பின்னணி, வழிபாட்டியற் சிறப்புகள், பண்டைத்தமிழ் மரபுகள் என்னும் வகையில் அவதானத் திற்குரிய சில கூறுகள் சமூக மானிடவியல் நோக்கில் விளக்கப்பட்டன.



உடப்பூர் கடற்கரையில் சிறுமிகள்



காளியம்மன் கோயில் வேள்வித்திருவிழா

8

# ஏற்றம் தரு கல்வி

கல்வியழகே யழகு என நாலடியார் சுட்டிக் காட்டுவதற்கு அமைய மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வியே சிறந்த அணிகலனாகும். நாங்கள் இப்போது விந்தை மிகு விஞ்ஞானத்தின் வெளிப்பாடுகளை அறிந்தும் அறியாத நிலையிலும் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். புதிய பிரஜைகளாக வாழவிருக்கும் இன்றைய இளைய தலைமுறையினரை வளர்த்தெடுப்பதில் கல்வி மிக முக்கியமான பங்கினை வகித்து வரவேண்டியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. புதிய நூற்றாண்டில் இடம்பெறவிருக்கும் பிரமிக்கத்தக்க பெருமாற்றங் களுக்கு ஈடுகொடுத்து புதிய சூழ்நிலையின் யதார்த்தங்களை அனுசரித்து வாழ்வதற்கு கல்வி அவர்களைத் தயார்படுத்துகின்றது. இன்றைய உடப்பூர்த் தேவையும் அதுவேயாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வி வளர்ச்சியானது அந்நியராட்சியின் பின்னரே உருவெடுத்தது எனலாம். இலங்கைத் தமிழ் சைவர்களது பண்டையகால சமய, கல்வி நிலையங்களாக விளங்கிய ஆலயங்கள் பெரும்பாலானவை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இடித்தழிக்கப்பட்டன. பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே சமய சுதந்திரம் வழங்கப்பட்டாலும், அவர்கள் கிறிஸ்தவ திருச்சபைகள் மூலமாக பாடசாலைகளை நிறுவி, ஆங்கிலக் கல்வியினைப் புகட்டி மக்களை மதமாற்றிய செயல் ஆறுமுக நாவலர் போன்ற பெரியார்களால் சைவப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட காரணமாக அமைந்தது. புத்தளம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சைவப் பாடசாலைகளின் தோற்றத் திற்கு அரசாங்கம், கிராம முன்னேற்றச்சங்கம், இந்து சபை, தனிப்பட்ட பெரியார்கள், இந்துமகா சபை என்பன அரும்பணியாற்றின.

புத்தளப் பிரதேசத்தில் தனித் தமிழ் பண்பாட்டுக் கலாச்சாரம் சமயப் பற்று என்பன ஒருங்கேயமைந்து காணப்படும் கிராமங்களில் உடப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது. புத்தள மாவட்டத்திலேயே சுமார் 80% வீதமான தமிழ்ச் சைவர்கள் வாழும் கிராமம் இதுவாகும். நெற்றியிலே

திருநீற்றுடன், சிவப்பொலிவுடனும் உடல், உள, உறுதி மிக்கவர்களாகத் திகழும் இவர்கள் இன்றுவரை மதமாற்றத்திற்ககப்படாமல் வாழ்வதற்கு இவ்வூர் மக்களின் பண்பாட்டிலும், மரபிலும் தோய்ந்து இனிமை பரப்பும் சைவமும், தமிழும் கலந்த கலையம்சங்களும், இக்கலையார்வம் தழைத் தோங்க காரணியாய் அமைந்த ஆலய உற்சவங்களும் காரணம் எனலாம். அத்துடன் மதமாற்றம் என்பது, பெரும்பாலும் படித்தவர்கள் மட்டத் திலேயே தான் இடம்பெற்றது. அவ்வாறான ஒரு சூழ்நிலை அக்காலத்தில் இங்கு இருக்கவில்லை. சாதாரண மக்களும் வசதி வாய்ப்புக்களுக்காகத் தமது சமயத்தைப் பலியிட்டு பிற மதத்தைத் தழுவக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அவர்கள் எப்பொழுதும் சுயதொழிலையே நம்பியிருந் தனர் எனலாம்.

ஆரம்பத்தில் நிரந்தரப் பாடசாலைகள் இங்கு இருக்கவில்லை. திண்ணைப் பள்ளிகளிலேயே கல்விகற்று வந்தனர். ஆரம்பத்தில் குடிமகன் (நாவிதன்) ஒருவராலேயே திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப் பட்டு கல்வி போதிக்கப்பட்டு வந்தது என சான்றோர்கள் கூறும் செவிவழிக் கதையுமுண்டு. இத்திண்ணைப் பள்ளிகளில் மகாபாரதக் கதை, இராமாயணக் கதை போன்ற தர்ம கதைகளே அதிகம் அன்றிலிருந்து போதிக்கப்பட்டு வந்தன. திண்ணைப் பள்ளிகளின் இறுதிக் காலத்தில் அதாவது பத் தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் திரு. முத்துராக்கு, திரு. முத்துவைரன், திரு. நல்லவைரன், திரு. சொக்கலிங்கம் போன்றோர் திண்ணைப் பள்ளி ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர்.

கல்வி மாணவர்களின் ஆளுமையை வளர்க்கக் கூடியனவாயும் பிற்கால வாழ்வைக் கொண்டு நடாத்த உதவுவனவாயும், ஆன்மீகப் பண்புகள் மிளிரக் கூடியனவாகவும் அமைய வேண்டும். மாணவர்களது ஒவ்வொரு பருவத்திலும், ஒவ்வொரு உளப்பண்புகள் சிறப்பிடம் பெறு கின்றன. அதற்கேற்றவாறு உள்ளத்தில் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணரக் கூடியதாக கல்வி அமைய வேண்டும். எனவே மாணவரின் ஒவ்வொரு நிலையையும் நாட்டின் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு கல்வி நிலைகளை பாகுபடுத்தலாம். அவை பாலர் பாடசாலைகளில் பெறும் குழந்தைக் கல்வியும், பாடசாலை மட்டத்திலும், கல்லூரியிலும் பெறும் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி என்பனவுமாகும். உடப்பில் தற்போது பத்து பாலர் பாடசாலைகளும், இரண்டு மகா வித்தியாலயங்களும் கல்விக் கூடங்களாக

காணப்படுகின்றன. இங்கு முக்கியமாக உடப்பூர் என்று குறிப்பிடும்போது 1959ம் ஆண்டுகளின் பின் உடப்பிலிருந்து குடியேற்றப்பட்ட ஆண்டி முனைக் கிராமத்தையும், செல்வபுரக் கிராமத்தையும் உள்ளடக்கியே நோக்கவேண்டும்.

கண்ணுங்கருத்துமாக வருங்காலத் தலை முறையினருக்கு கல்வி யளிக்க வேண்டியிருப்பதால் எல்லாப் பகுதிகளிலும் குழந்தைக் கல்வி நிலையங்களின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. உடப்பில் கிராம சபையால் 1976 ம் ஆண்டு குழந்தைப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. அப்போது இருபத்தைந்து மாணவர்கள் சேர்ந்துபடித்துள்ளனர். ஆனால் அது தொடர்ந்து ஒரு வருடமாக நடைபெற்றதோடு, அதன் பின் உள்ளூராட்சி மன்றத்தின் நன்கொடைப்பணம் நிறுத்தப்பட்டதால் அப் பாடசாலை மூடப்பட்டு விட்டது. இவற்றுக்குக் காரணம் பெற்றோரின் கவனமின்மையும் ஆர்வமின்மையுமாகும். இவற்றை விட ஒரிரு தசாப்த காலமாக தமிழ் சங்க கட்டிடத்தில் இந்து இளைஞர் மன்றத்தின் அனுச ரனையுடன் பாலர் பாடசாலை நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக அதாவது ஏறத்தாள கடந்த இரண்டு தசாப்த காலமாக வளர்ச்சியடைந்துள்ள மீன்பிடிச் சங்கங்களின் அனுசரனையுடன் சன சமூக நிலையங்கள் அமைக்கப்பட்டன. அக்கட்டிடங்களில் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. அவை தெற்கு மீன்பிடிச்சங்க பாலர் பாடசாலை, வடக்கு மாரியம்மன் மீன்பிடிச்சங்க பாலர் பாடசாலை, அமுதசுரபி மீன்பிடிச்சங்க பாலர் பாடசாலை, ஆண்டிமுனை கிராமோதய சங்க பாலர் பாடசாலை, வட உடப்பு பாலர் பாடசாலை, ஐயப்ப சுவாமிகள் பாலர் பாடசாலை, நாகதம்பிரான் பாலர் பாடசாலை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவை கடந்த இரு தசாப்த காலத்துக்களுக்குள் தோற்றம் பெற்றவைகளாகும். ஒவ்வொன்றிலும் சராசரியாக ஐம்பது மாணவர்கள் கல்வி கற்று வருகின் றனர். பாலர் பாடசாலை ஒவ்வொன்றிலும் தலா இரண்டு ஆசிரியைகள் கற்பிக்கின்றனர். அவர்களுக்கான சம்பளம் மாகாண சபைகளினாலும், மீன்பிடிச்சங்கங்களினாலும், பெற்றோர்களினாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

சொந்தப் பண்பாட்டினையும், சொந்தக் கலை, கலச்சாரத்தினையும் நிலைக்களனாகக் கொண்டு அமைக்கப்படும் பள்ளிக்கூடங்களே ஒரு

நாட்டின் உயர் செல்வங்களாகும். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வீதியிலும் பள்ளிக்கூடங்கள் அமைத்திட வேண்டும் என்னும் கருத்தினை வீடு தோறும கலையின் விளக்கம் வீதி தோறும் இரண்டொரு பள்ளி என மகாகவி பாரதியார் வற்புறுத்திக் கூறுவதனைக் காணலாம். இவ் வகையிலேயே தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் இங்கு இரண்டு தமிழ் மகா வித்தியாலயங்கள் திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் வித்தியாலயம்**

உடப்புக் கிராமத்தில் குல தெய்வமாகப் போற்றப்படும் ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயத்தின் முன்னால் 1903ம் ஆண்டு உடப்பு தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஒரு ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக் கப்பட்டதே இன்றைய உடப்பு தமிழ் மகா வித்தியாலயமாகும். வெற்றி கரமாக நூறாவது ஆண்டை கொண்டாடிய இப்பாடசாலை இப்பகுதியின் கல்வி நிலையை மதிப்பிடக்கூடிய ஓர் உரைகல்லாக உள்ளது. சுமார் 150 மாணவர்களுடன் ஆரம்பமாகி இன்று 1800 மாணவர்கள் வரை தொகை யால் வளர்ந்துள்ள இது கல்வித்துறையில் பாரிய வளர்ச்சி கண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. 1903ம் ஆண்டின் முதலாவது தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று இன்றைய வளர்ச்சிக்கான அடி ஆணிவேரினை உறுதியாக ஊன்றச்செய்த பெருமை யாழ்ப்பானத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அமரர் இளையதம்பி ஆசிரியர் அவர்களையே சாரும்.

திண்ணைப் பள்ளிக் கூடங்களின் வளர்ச்சியாகவே தோற்றம் பெற்ற இது 1912ம் ஆண்டில் உடப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என அரசால் பொறுப்பேற்கப்பட்டது. அக்காலத்தில் ஆர்வமுடைய சிலர் புத்தளத்திலிருந்த அரச அதிபர் மூலம் அவரது உதவியைப்பெற்று இப்பாடசாலையை உடப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையாக மாற்றினர். ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரையுமே இருந்தது. பின்பு 1928ம் ஆண்டில் எட்டாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1932ம் ஆண்டில் சிறப்புப் பாடசாலை தராதரப்பத்திரம் (சி.பா.த.ப.- இப்போதைய க.பொ.த. சா/த) ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இங்கு மூன்றாம் நிலைக் கல்விபெறும் வசதி 1966ம் ஆண்டிலேயே ஏற்பட்டது. அதாவது கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர (க.பொ.த. உ/த) வகுப்புக்கள் இவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. கல்விப் பொதுத்

தராதர உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் கூட 1972ம் ஆண்டிலேயே ஏற்பட்டன.

ஊரவர்களின் முயற்சியால் கட்டப்பட்ட ஓலைக் கொட்டிலில் ஆரம்பமான இது பல வருடங்களுக்குப் பிறகு 1912ம் ஆண்டில் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு அரசினால் பொறுப்பேற்றகப்பட்டது. இரண்டாவது கட்டிடத்தை 1932ம் ஆண்டில் பெற்றுக் கொண்டது. சனத்தொகை வளர்ச்சி, மாணவர் தொகை அதிகரிப்பு காரணமாக இட நெருக்கடி ஏற்பட தற்காலிக ஓலைக் கொட்டில்களிலேயும் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். அதன் பின் 1972ம் ஆண்டிலேயே மற்றும் இருகட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இக்கட்டிடங்கள் தானத்துரையில் (உடப்பின் தென்பகுதி) கட்டப்பட்டன. இக்காலத்திலிருந்தே உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் இரு பிரிவாக செயற்பட ஆரம்பித்தது எனலாம். அதாவது ஆரம்ப இரு கட்டிடங்களிலும் ஆரம்பபிரிவும், உடப்பின் தெற்கே கட்டப்பட்ட இரு கட்டிடங்களிலும் மேற்பிரிவுகளுமாக இயங்கத் தொடங்கின. நாற்பதும் வருடங்களின் பின் கட்டிட வசதி செய்யும் வரை மாணவர்கள் தற்காலிக ஓலைக்கொட்டில் களில் படித்தனர் என்பது பெற்றோரின் ஆர்வமின்மையையும், அரசின் அக்கறை யின்மையையும் காட்டுகிறதெனலாம். அதன் பின்னர் ஆரம்பப் பிரிவில் ஒரு விஞ்ஞான கூடத்தையும், மேற்பிரிவில் தற்காலிக கொட்டில் களையும், கிராம அபிவிருத்தி சங்கம் கட்டிக்கொடுத்தது. இவற்றை விட பெற்றோர்களால் ஒரு கட்டிடமும், அரசினாலும், பாராளுமன்ற உறுப்பினர் களின் சிபாரிசினாலும் மூன்று கட்டிடங்களும் கட்டப்பட்டன. இவ்வாறு வளர்ச்சியடைந்த இது 2003ம் ஆண்டு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆரம்பப்பிரிவையும் தானத்துரைக்கு கொண்டு சென்றதுடன் ஏழுக்கும் மேற்பட்ட கட்டிடங்களையும் கொண்டு ஒரே இடத்தில் காணப்படுகிறது.

குடும்பச் சூழலில் வளர்ந்த பிள்ளைகள் பாடசாலைச் சூழலுக்கு பிரவேசிக்கும் முதற்கட்டமாக ஆரம்பக் கல்வி அமைகின்றது. இதனைப் பெரும்பாலும் பிள்ளைப் பருவத்திலேயே பெறுகின்றனர். ஆரம்பக் கல்வி ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஆறு வரை வழங்கப்படுகிறது. உடப்பில் ஆரம்பக் காலங்களில் பெருந்தொகையானோர் ஆரம்பக் கல்வி வரையுமே பாடசாலை சென்றனர். 1975ம் ஆண்டளவில் பாடசாலை சேரும் மாணவர்களில் 75% வீதத்தினரே இடை நிலைக் கல்வியை தொடர்ந்தும் பெற முன் வந்துள்ளனர். இது 1990களிலிருந்து 50%மாக

வளர்ந்துள்ளதை அவதானிக்கலாம். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரையில் பல வருடங்களுக்கு ஒரு முறையே சித்தியடையும் தன்மை காணப்பட்டது. 2000ம் ஆண்டு வரைக்கும் சுமார் இருபது மாணவர்களுக்குள்ளேயே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்து இருந்தனர். ஆனால் இன்று நிலைமை முற்றாக மாறியுள்ளது. இரண்டு பாடசாலைகளிலும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட மாணவர்கள் சித்தியடையும் தன்மை காணப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

பாடசாலைக் கல்வியின் இரண்டாம் நிலையாக விளங்குவது இடை நிலைக் கல்வியாகும். பெரும்பாலும் கட்டிளம் பருவத்தினரே இந்நிலையில் கல்வி பயில்கின்றனர். இப்பருவத்தினருக்குப் பொதுவான கலாச்சாரத்தை நல்குவதற்கும், சமயவாய்ப்பு அடிப்படையிலேயே தங்கள் திறமை, சுயதீர்ப்பு, ஒழுக்கம், சமூக பொறுப்புணர்ச்சி என்பவற்றை வளர்த்துக் கொள்ளக்கூடிய கல்வியை ஊட்ட வேண்டியுள்ளது. இங்கு இடைநிலைக் கல்வி பெறுவோர் மிகக் குறைவாகவேயுள்ளனர். பாடசாலை சேரும் மாணவர்களில் 15%த்தினரே 1975ம் ஆண்டுகளில் பத்தாந்தரம் வரைப் படித்தனர். இது படிப்படியாக அதிகரித்து தற்போது கிட்டத்தட்ட 50%தினர் ஆண்டு 11 வரையும் படிப்பைத் தொடர்வதை காணலாம்.

அன்று இந்நிலைக்குப் பல காரணங்கள் உண்டு. அதில் மிக முக்கிய மானது குறைந்த வருமானமாகும். வீட்டுச்செலவைத் தாங்க முடியாத பெற்றோர் படசாலைச் செலவையும் சமாளிக்க முடியாது. பிள்ளைகளை பாடசாலையை விட்டு விலக்கி விடுகின்றனர். படித்து என்னத்த கிழிக்கிறது என்ற கருத்துக்களோடு பெற்றோர்கள் கல்வியில் ஆர்வமற்றவர்களாக இருப்பதனால் மாணவர்களும் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை. அத்துடன் இப்பாடசாலைக்கு சாபக்கேடு போன்று தொடர்ந்து இருந்து வரும் ஆசிரியர் பற்றாக்குறையும் மற்றொரு காரணமாகும். கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்த வரையில் ஆரம்ப காலங்களில் (1932 1984) சராசரியாக 12 பேரளவில் பரீட்சைக்குத் தோற்றி ஓரிருவர் சித்தியடைவதுடன் சில வருடங்களில் சித்தியடையாத் தன்மையும் காண முடிகின்றது. ஆனால் கடந்த இரு தசாப்தங்களாக சராசரியாக 30% மாணவர்கள் சித்தியடைவதனைக் காண முடிகின்றது.

இப்பாடசாலையின் மூன்றாம் நிலைக் கல்விக்குரிய க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் மிக அண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்டன. 1966ம் ஆண்டு ஐந்து மாணவர்களுடன் திரு வீ.நடராசா அவர்களின் அயராத முயற்சியால் க.பொ.த.உ/த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது எனலாம். ஆரம்ப காலங்களில் (1966-1975) கலையும், பின்பு இடைக்காலமாக இல்லாம லிருந்து மீண்டும் ஆரம்பமாகி (1980-1982) காலங்களில் விஞ்ஞானமும், வர்த்தகமும் க.பொ.த.உ/த. வகுப்பில் பயின்றனர். இக்காலங்களில் சரியாக ஆறு பேரளவில் பரீட்சைக்கு தோற்றி ஓரிருவர் சித்தியடைவர். மீண்டும் ஒரு இடைவெளியின் பின் 1986இல் ஆரம்பமானது. அன்றி லிருந்து இன்று வரை கலை, வர்த்தகம் போதிக்கப்படுவதுடன் சிறந்த பெறுபேறுகளையும் காணக்கூடியதாக உள்ளது. ஏறத்தாள பத்து பேரளவில் பரீட்சைக்கு தோற்றி சராசரியாக 80% தினர் சித்தியைப் பெற்றுக் கொள்வ துடன் பல்கலைக்கழகங்களுக்கும், கல்வியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகு வது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் உடப்பு, ஆண்டிமுனை பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைப் பெற்று வெளி மாவட்டங்களில் இடைநிலை மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்று பலபேர் பல்கலைக் கழக வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அவ்வகையில் உயிரியல் வைத்தியம், பல் வைத்தியம், பொறியியல், தாவரவியல், முகாமைத்துவம், கலை போன்றவற்றிற்கு பத்து பேரளவில் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. அத்துடன் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்தும், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்தும் இன்றுவரை இருபது பேரளவில் கலை, முகாமைத்துறைகளுக்கு தெரிவாகி உள்ளமையும் சிறப்பம்சமாகும். அதில் 1968, 69 களில் இரண்டு பேரும், 1990க்குப் பிறகு மிகுதிப் பெரும்பாலானோரும் சித்தியடந்துள்ளமை அண்மைக் காலத்தில் கல்வி வளர்ச்சியின் தன்மையினைக் காட்டுகிறது. அத்துடன் அண்மைக் காலமாக கல்வியற் கல்லுரிகல்லுக்கும் மாணவர்கள் தெரிவாவது எதிர்கால ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்த்து வைக்க துணைபுரியும் என்பதில் ஐயம்மில்லை.

**ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம்**

இயற்கை எழிலும் நெய்தல் வனப்பும் கொண்ட ஆண்டிமுனைக் கிராமம் 1956இல் உடப்பு மக்களைக் கொண்டு குடியேற்றப்பட்டதாகும். முப்புறமும் எருக்கலைச்செடிகளும், தாளை மரங்களும், முட்பற்றைகளும், நீர் தேங்கி நிற்கும் பள்ளங்களும் மேற்குப்பகுதியில் மண் மேடுகளும், பற்றைக்காடு களும் சூழ செப்பனிடப்படாத பாதையோரமாக ஓலையால் வேயப்பட்ட ஆரம்பப் பாடசாலை காணப்பட்டது. இது உடப்பு, ஆண்டிமுனை கிராம முன்னேற்றச்சங்கத்தால் தாபிக்கப்பட்டது. திரு. சொ. முத்தையா பூசகர் அவர்களும், திரு.சரவணமுத்து போன்றோர்களும் இதற்கு மூலகாரணமாக இருந்தனர். அப்போதிருந்த ஆராச்சிகட்டு கிராம சபைத் தலைவரான உடப்பூரைச் சேர்ந்த திரு ந. சிற்றம்பலம் அவர்களால் 1960.01.25ல் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அதிபராக திரு கா. வைரையா நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக உடப்பூரைச் சேர்ந்த ஐந்து ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதற்கு முன்வந்தனர். 104 பிள்ளை களுடன் ஆரம்பித்த இப்பாடசாலை ஆரம்பத்தில் மதிய உணவுடன் நிறைவு பெற்றது.

இன்று தமிழ் மகா வித்தியாலயமாகத் திகழும் இது ஏறத்தாள 1600 மாணவர்களைக் கொண்டுள்ளது. கிராம மக்களின் அயராத உழைப் பினாலும் விடா முயற்சியினாலும் 1966ல் கட்டிடமொன்று கட்டப்பட்டது. ஐந்தாம் வகுப்புவரை இயங்கிய இப்பாடசாலை சில பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியால் 1960.11.15ல் அரசுடைமையாக்கப்பட்டது. 1975ம் ஆண்டளவில் இது ஏழாம் வகுப்பு வரை தரம் உயர்த்தப்பட்டது. அவ்வாறாக 1987ல் க.பொ.த.(சா/த) வகுப்புக்கள் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1996ல் எட்டு மாணவர்களுடன் க.பொ.த. (உ/த) கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

1960ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடத்திற்குப் பிறகு 1985ம் ஆண்டிலேயே இரண்டாவது கட்டிடம் கட்டப்பட்டது. மாணவர்களின் அதிகரிப்புக் காரணமாக அதுவரையும், தற்காலிக கொட்டில்கள் அமைக்கப் பட்டிருந்தன. 1991இல் இந்து ஆலய பரிபாலன சபை, பெற்றோர், மாணவர்கள் ஆகியோரின் உதவியோடு மற்றொரு கட்டிடம் பூர்த்தியானது. 1992ம் ஆண்டில் மைதானம் செப்பனிடப்பட்டு, ஓர் கலையரங்கமும்

அமைக்கப்பட்டது. ஐரோப்பிய வாழ் உடப்பூரவரின் உதவியுடன் 1993ல் நான்காவது கட்டிடம் அமைக்கப்பட்டது. 1996இல் உலகவங்கியின் உதவியுடன் ஐந்தாவது கட்டிடமும், பெற்றோர், இந்து ஆலய பரிபாலன சபையினரின் உதவியுடன் ஒரு நூல் நிலையமும் அமைக்கப்படது. அதைத் தொடர்ந்து சுற்று மதில், கணனிக் கூடம் எனப் பல கட்டிடங் களையும் கொண்டதாக உள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்ப காலத்தில் ஆரம்பக் கல்வியை மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது. பாடசாலை சேரும் மாணவர்களில் மிகக் குறைந்த தொகையினரே இடை நிலைக் கல்வியை பெற ஆரம்பிக்கின் றனர். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் பலவருடங்களுக்கு சித்தியடையாத தன்மையே 1993ம் வரை காணப்பட்டது. 1993ம் ஆண்டிலிருந்தே பலர் சித்தியடையும் தன்மை காணப்படுகின்றது. இதுவரைக்கும் கிட்டத்தட்ட 20-30 பேரளவிலேயே சித்தியடைந்துள்ளனர் எனலாம்.

1975ம் ஆண்டில் ஏழாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதும் இங்கு இடைநிலைக் கல்வியையும் பெறக்கூடியதாக இருந்தது. மேலும் இடை நிலைக் கல்வியை தொடர்வதற்காக உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்திற்கு செல்லவேண்டி இருந்தது. 1987இல் க.பொ.த. (சா/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அப்பிரச்சினை தீர்ந்தது எனலாம். இக்காலங் களில் பாடசாலை சேரும் மாணவர்களில் 50%தினர் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் நிலை காணப்பட்டது. இது படிப்படியாக அதிகரித்து தற்போது 30%தினர் பதினோறாம் ஆண்டு வரையும் படிப்பை தொடர் வதைக் காணலாம்.

க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் எண்ணிக்கை 1990 வரையும் பத்துக்கும் குறைவாகவே காணப்பட்டது. அது இன்று 30பேர் வரையாக அதிகரித்துள்ளது. பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் 25% மாக இருந்த சித்தியடையும் வீதம் கடந்த தசாப்த காலமாக சராசரியாக 50%மாக அதிகரித்து காணப்படுவதைக் காணலாம். இவர்கள் இப்பாடசாலையிலேயே க.பொ.த.(உ/த)த்தை தொடர்வதற்காக 1996ல் க.பொ.த.(உ/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. இன்று இப்பாடசாலை இலங்கையின் ஆயிரம் பாடசாலைகளில்

ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**கல்வி வளர்ச்சியில் சமூக நிலையங்களின் பங்கு**

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல சமூக நிலையங்கள் மிகவும் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன. மாணவர்களது நடத்தையிலும், கல்வி வளர்ச்சியிலும் இந்நிலையங்கள் ஓரளவு செல்வாக்குப் பெறுகின்றன. ஒருவனது வாழ்க்கையில் சமூக நிலையங்களின் தொடர்புகள் பிறப்பு தொடங்கி இறப்பு வரை உன்னத பங்கை வகிக்கின்றது. உடப்பூரிலும் இவ்வாறான சமூக நிலையங்களைக் காணலாம்.

**உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை**

உடப்பிலே திரௌபதையம்மன் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே பரிபாலன சபையும் தொடக்கப்பட்டு விட்டது. இற்றைக்குப் பல நூற்றாண்டுகள் பழமையானது மேற்படி ஆலயமாகும். திரௌபதையம்மன், காளியம்மன், முத்துமாரியம்மன் எனும் மூன்று ஆலயங்களையும் ஆரம்ப காலம் தொட்டு பரிபாலனம் செய்து வருவது உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலையாய பணியாகும். அத்துடன் இங்கு காணப்படும் இரு மகா வித்தியாலயத்திற்கும் பல வழிகளிலும் உதவி வருவது இதன் சிறப்பம்சமாகும். இப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக பல வருடங்களாக இருந்து வருகின்றது. இதனை நிவர்த்தி பண்ணும் முகமாக தொண்டராசிரியர்களாக கடமை புரியும் பலருக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை வேதனமாக வழங்கி வந்தது. மேலும் பாடசாலைக்குத் தேவையான தளபாட கட்டிட உதவிகளையும் வருடாவருடம் குறிப்பிட்ட தொகைப்பணத்தை வழங்குவதன் மூலம் செய்து வருகின்றது.

இவற்றை விட உடப்பு தமிழ்ச் சங்கமும், இந்து இளைஞர் மன்றமும், மீன்பிடிச்சங்கங்களும் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழ்ச்சங்கம் 1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனது குறிப்பிடக் கூடிய பணி கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றல், மாணவர்கள் மத்தியில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளை, வைத்து பரிசில்களை வழங்கல், விவாத அரங்குகளை நடத்துதல், பெரியார்களை வரவழைத்து சொற்

பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்றனவாகும். 1956ம் ஆண்டு தமிழக அறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரை இங்கு வரவழைத்தமை குறிப்பிடத்தக்கது. இது போன்றே இந்து ஆலய பரிபாலன சபையும் சுவாமி கிருபானந்த வாரியாரையும், இன்னும் பழைய சமயப் பெரியார் களையும் காலத்துக்கு காலம் வரவழைத்து சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்கின்றமையும் மறக்கமுடியாது. ஆனால் இன்று தமிழ் சங்கத்தின் செயற்பாடும், தமிழ் சொற்பொழிவுகளும், அற்றுப் போய் இவைகள் இங்கும் காணப்பட்டதா?, எவ்வாறு இல்லாது போனது என்ற கேள்வி களை இளையோர் மத்தியில் எழுப்புகின்றது. எவ்வாறே 1971இல் உருவாக்கப்பட்ட இந்து இளைஞர் மன்றம் பாலர் பாடசாலை ஒன்றை தமிழ்ச்சங்க காரியாலயத்தில் ஆரம்பித்து அதன் ஆசிரியர்களுக்குரிய வேதனத்தை வழங்கி பல வருடங்களாக நடாத்தி வந்தது. அதுவும் மறைந்து போக இதன் பணியை அண்மைக்காலங்களாக உருவெடுத்த மீன்பிடிச்சங்கங்கள் தொடர்ந்தும் பேணி வருவது சிறப்பாக குறிப்பிடத் தக்கது.

## நூல் நிலையமும், தொடர்பு சாதனங்களும்

தினசரிப் பத்திரிகைகளும், பலவகையான வார, மாத இதழ்களும் மாணாக்கரது அறிவை வளர்க்கப் பயன்படுகிறன. இவை உள்நாட்டுச் செய்திகளையும், உலக சம்பவங்களையும், சிறப்புக் கட்டுரைகளையும், கதைகளையும் மிக விரைவாக எமக்குத் தருவதால் எம்மை பரந்த உலகுடன் மிக நெருக்கமாக தொடர்பு கொள்ள வைக்கின்றன. இவற்றை மாணவர்கள் வாசிக்கும் போது அவர்களது அறிவு அகன்று பரந்து செல்கின்றது. இதன்மூலம் மொழியறிவும், சிந்தனை ஆற்றலும் வளர் கின்றன. இவ்வகையில் இலங்கையில் முக்கிய தமிழ் தினசரிகளான தினகரன், வீரகேசரி, தினமுரசு, தினக்குரல், தின வார இதழ்களும் இங்கு செல்வாக்குப் பெற்றுள்ளன.

ஏறக்குறைய 4000 குடும்பங்கள் வசிக்கின்ற உடப்பு, ஆண்டிமுனைக் கிராமங்களில் ஏறத்தாழ 100 தினசரிப்பத்திரிகைகளும், 200 வார இதழ் களும் எடுக்கப்படுகின்றன. அவற்றில் அநேகமானவை தேனீர்க் கடை களும், சில்லறைக்கடைகளும் வாங்குகின்றன. இக்கடைகள் வாடிக்கை யாளர்களைக் கவரும் நோக்குடனேயே பத்திரிகைகளை எடுக்கின்றன.

இக்கிராமத்தில் வாசிகசாலை இல்லாத காரணத்தினாலும் இப்போது தேனீர்க் கடைகளும், சில்லறைக்கடைகளுமே வாசிப்பு நிலையங்களாக இருந்து வருகின்றன.

இக்கிராமத்தில் 1979ம் ஆண்டு உள்ளூராட்சி சபையின் உதவியுடன் ஒரு வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் நிலையத்தின் அங்கத் தவர்களின் தொகை 1979ல் 50ஆக இருந்து 1996ல் ஆக அதிகரித்துள்ளது. இக்கிராமத்து சனத்தொகையோடு இதனை ஒப்பிடும்போது இது வாசிப்பு ஆற்றலையும், அவர்கள் கல்வியில் கொண்டுள்ள ஆர்வத்தையும் மட்டிடு கின்றது. அதிலும் கூடியளவு மாணவர்களே அங்கத்தவராயுள்ளனர். பெண் அங்கத்தவர்கள் மிகவும் குறைவு. இவை பெண்கள் கல்வியும், முதியோர் கல்வியும் எவ்வளவு தூரம் பின்தங்கியுள்ளது என்பதை விளக்குவதாயுள்ளது. அத்துடன் தினந்தோறும் வசிகசாலைக்கு 25 பேரளவில் வருகை தருவதுடன் சராசரியாக 10 புத்தகங்களே எடுக்கப் படுகின்றன. ஒரு வரப்பிரசாதமாக ஒரு பெரிய கட்டிடம் வாசிகசாலைக்கு கட்டப்பட்ட போதிலும் ஒழுங்கான பராமரிப்பின்மையால் அக்கட்டிடம் கைவிடப்பட்டதும் குறிப்பிட்டுக் காட்டவேண்டிய தொன்றாகும்.

இப்பிரதேசத்தில் கல்வியறிவு குறைந்த முழுநேர தொழிலாளரே பெரும்தொகையாக இருப்பதனால் வாசிக்கும் ஆர்வமும், காலமும் அவர்களுக்கு இல்லை. ஆகவேதான் இங்கு ஆரம்ப காலங்களில் வாசிகசாலைகளும் தோன்றவில்லை எனலாம். வறுமை காரணமாகவும், விலைவாசிகள் உயர்வினாலும் பத்திரிகை வாங்கிக்கொண்டு வந்தவர் களும் அப்போது வாங்குவதில்லை. கடந்த காலங்களில் இங்குள்ள பாடசாலைகளில் கூட நூல் நிலையம் இருக்கவில்லை. அண்மைய காலத்தில் இரு பாடசாலைகளிலும் ஒரு நூல் நிலையம் கட்டப்பட்டு பேணி வருவது போற்றத்தக்க காரியமாகும். இதன் காரணமாகவே இப்பிரதேச மாணவர்கள் நாட்டின் ஏனைய பிரதேச மாணவர்களுடன் ஒப்பிடும்போது அறிவாற்றலில், மொழியறிவில், எழுத்து வன்மையில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர் எனலாம். எனவே பாடசாலை களில் கட்டாயம் மாணவர் சங்கங்கள் மூலம் வாசிகசாலைகளை ஏற்படுத்தி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பெற்றோரும், ஆசிரியர்களும், அரசும் ஊக்கம் காட்ட வேண்டும். இவை மாணவர்களின் எதிர்கால சுபீட்சத்திற்கு வழிவகுக்கும்.

இவைகளைவிட வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் போன்றனவும் கல்வி வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்த வல்லன. தென்னிந்திய திரைப்படங்கள் உடப்பில் விவேகமற்ற பிற்போக்கான சினிமாக் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளமை கண்கலங்கத்தக்கதொன்றாகும். இவை மாணவர்களிடையே தவறான செய்திகளையும் மலிந்த உணர்ச்சிகளையுமே தூண்டிவிடக் கூடியதாக இருக்கின்றன. கடந்த ஓரிரு தசாப்த காலத்தில் இங்கு சினிமாக் கொட்டகைகள், பெருகிக் காணப்பட்டன. பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களுக்கு தெளிவான வழியைக் காட்டி அவர்களை நேர்மையான வளர்ச்சிப் பாதையிலிருந்தும் தவறிவிடாது பாதுகாக்க முன்வரவேண்டும்.

**கல்வி வளர்ச்சியில் எதிர் நோக்கும் பிரச்சினைகள்**

இலங்கயின் சில பகுதிகளுடன் ஒப்பிடும்போது இங்கு வாழும் மக்களின் கல்வித்தரம் பின்தங்கியே காணப்படுகின்றது. இரண்டு பாடசாலைகள் இருந்தாலும் எதிர் பார்க்கும் பலன் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும். ஒரு பள்ளிக்கூடம் சமுதாயத்தின் மாதிரிச் சிறு உருவம், பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்துக்குமிடையே உணர்வுத் தொடர்பு இருத்தல் வேண்டும் என கல்வி நெறியாளர் ஜோன் டூபி கூறியுள்ளார். ஆனால் இங்கு மாணவர்களின் வரவே பெரும் அவலமாக உள்ளது. 1981ம் ஆண்டு சனத்தொகை கணிப்பில் 18 வயதிற்கு கீழ்ப்பட்டோர் 2568ஆக இருந்தனர். அதேயாண்டு உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் 614 பேரும், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 283 பேரும் இருந்திருக்கின்றனர். கல்வி பெறவேண்டிய வயதுடையவர்களில் 35% பங்கினரே கல்வி பெற்றுள்ளனர். 1995ம் ஆண்டு ஒரு கணிப்பின்படி 3798 பேர் 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாக காணப்பட்டனர். அவர்களில் சுமார் 50%மானவர்களே பாடசாலை செல்பவர்களாக காணப்பட்டனர். இன்று நிலைமை மாறி ஏறத்தாள 70% ற்கும் மேற்பட்டோர் பாடசாலை செல்வதனை காணலாம். ஆனால் கல்வியில் ஆர்வம் குன்றி வெளிநாட்டு மோகம் அதிகரித்து காணப்படுவதைக் காணலாம். இவை இன்றைய சூழல் மாற்றத்திற்கு ஏற்ப தவிர்க்கமுடியாத தொன்றாகவும் காணப் படுகிறது எனலாம்.

பாடசாலையில் மாணவர்களின் தின வரவு மிகக் குறைவாகவே யுள்ளது. 1980ம் ஆண்டில் உடப்பில் 526 மாணவரில் 412 பேரும், ஆண்டிமுனையில் 280 மாணவரில் 249 பேரும் மாணவரின் சராசரி தின வரவாக இருந்தது. இது அண்மையில் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் 1800பேருக்கு 1400 பேரும், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 1600 பேருக்கு 1200 பேரும் சராசரி தினவரவாக உள்ளதைக் காணலாம்.

இவ்வாறான நிலைமைக்கு பல காரணங்கள் உள்ளன. இதில் முக்கிய மானது பொருளாதாரக் காரணியாகும். எங்கு பொருளாதாரமின்றி வறுமை தாண்டவமாடுகின்றதோ அங்கு எவ்வகையான செழிப்பும், வளர்ச்சியும் ஏற்படமுடியாது. கடல் தொழிலாளர்களான இவர்களது வருமானம் மிகக் குறைவாக இருப்பதாலும், சேமிக்கும் பழக்கமின்மையாலும் பெற்றோர் தனியாக உழைத்து குடும்பத்தை பாதுகாக்க முடியாத நிலையில் பிள்ளைகளையும் அவர்களது படிப்பை இடை நிறுத்தி தமக்கு உதவியாக அழைத்துச் செல்கின்றனர். இலவசக் கல்வியுடன் புத்தகமும், சீருடையும் வழங்கப்பட்டாலும், ஏனைய செலவுகளை ஈடுசெய்ய முடியாதுள்ளனர். அண்மைக் காலத்தில் இவை மாறியிருந்தாலும் கல்வியின் முக்கியத்துவம் இன்னும் முழுமையாக உணரப்படவில்லை என்றே கூறலாம்.

குடும்பப் பின்னணியும் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்கின்றது. குழந்தையின் நல்வளர்ச்சிக்கு குடும்ப நிலைமைகளே அடிப்படையாக விளங்குகின்றன. குடும்பத்தின் பண்பாடும், நடத்தைகளும், மனப்பாங்கும் மாணவர்களது வாழ்க்கையை முறையாக வளப்படுதுகின்றன. பெற்றோரே சமூக வாழ்க்கையை, நோக்கங்களை, கற்றுக் கொடுப்பதுடன் பயின்று காட்டுவதால் மாணவர்கள் பெரும் பலன் பெறுகின்றனர்.

இப்பிரதேசங்களில் கல்வியறிவு குறைந்த தொழிலாளரே பெரும் பாலும் காணப்படுவதால் கல்வியில் ஆர்வம் மிகக் குறைவாகவே கொண்டுள்ளனர். பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் கூடி கல்வி முன்னேற்ற செயற்பாடுகள் பற்றி தீர்மானங்கள் எடுக்கும் போது அவர்களை மிகவும் வற்புறுத்தியே அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. வேறு பிரதேச பெற்றோரின் முன்மாதிரியைக் கொண்டும், சமூக சூழ்நிலையாலும் பிறர் தூண்டலின்றியும் ஊக்கமாகவும் மாணவர்கள் படிப்பதைக் காணலாம். ஆனால் இங்கு பெற்றோர்கள் தூண்டினால் கூட மாணவர்கள் படிப்பில்

ஆர்வம் காட்டுவதில்லை. காரணம் கல்வியில் ஆர்வமற்ற சமூகப் பின்னணியாகும்.

பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கம் பெற்றோருக்கு இல்லை. வீட்டில் கரைச்சல் (தொல்லைகளை) தாங்க முடியல்ல, பள்ளிக்கூடம் போய்த் தொலையன்னாலும் போக மாட்டேன்கிறான் என்று பல பெற்றோர்களின் கருத்து பிள்ளைகள் கல்வியில் முன்னேறி பிற்கால வாழ்க்கையை சீராக அமைக்க வேண்டும் என்ற நோக்குடன் பாடசாலைக்கு அனுப்புவதை காட்டுவதாகவில்லை. எனவே பிள்ளைகள் ஆர்வம் குறைந்தவர்களாக பெருங்கஷ்டத்தைப் பெறப்போகின்றோம் என்ற விரக்தியிலேயே பாடசாலைக்குச் செல்கின்றனர்.

பெற்றோர்கள் தொழிலின் பொருட்டு இடமாற்றம் செய்யும் போதும் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது. மேற்குக் கடற்கரையில் வடகீழ் பருவக்காற்று வீசுகின்ற காலம் வரை மீன்பிடித்தொழில் நடை பெறும். எனவே இக்காலங்களில் ஊரிலேயே தங்கியிருப்பர். ஆனால் தென்மேற்குப் பருவக்காற்று ஆரம்பமானதும் இவர்கள் கிழக்குக் கரைக்குச் சென்று தொழில் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அவர்கள் தமது குடும்பத்துடன் கிழக்கே செல்வதனால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப் படுகிறது. கடந்த தசாப்தங்களில் வடக்கு கிழக்கு பிரச்சினையின் காரணமாக இந்த இடம் பெயர்வு குறைந்திருந்தது. ஆரம்ப காலங்களில் பெண்களின் கல்வியானது அவர்கள் பருவமடைந்ததும் நிறுத்தப்பட்டு வந்தது. தற்போதைய சூழ்நிலையில் பெண்கள் அதிகமானோர் படிப்பதையும், ஆண்கள் தொழில், பொருளாதாரம் காரணமாக தங்களது படிப்பை இடைநிறுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு நாட்டின் கல்விமான்களை உற்பத்தி செய்யும் பாரிய தொழிற்சாலை யாகத் திகழும் பாடசாலை மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்தும் கருவியாகவும் அமைகின்றது. பாடசாலை அமைப்பும், கல்வித்திட்டமும், கற்பிக்கும் முறைகளும், ஆசிரியர்களின் நடத்தைகளும் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும். பாடசாலைகளில் மாணவர் ஆசிரியர்களுக்கிடை யிலான ஒழுக்க சீரழிவினாலும், அவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. இங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறையும், அவர்களது மனப்போக்குகள், அரசியல் செல்வாக்குகளும், இட நெருக்கடியும், குடும்ப சமூகப்

பின்னணியும், பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இங்கு இருபாடசாலைகளிலும் இடவசதிகளோ, தளபாட வசதிகளோ, குறைவாக இருப்பதால் மாணவர்களது ஆர்வம் குறைகின்றது எனலாம். இடவசதியின்மையால் கீழ் வகுப்பு மாணவர்கள் மரங்களின் கீழ் தரையில் இருந்து படிக்கின்றனர். இரு வகுப்புக்கள் வைக்கவேண்டிய கட்டிடங்களில் மூன்று, நான்கு வகுப்புகள் நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். சில வேலைகளில் மாணவர்கள் கதிரை மேசையின்றி இருப்பதையோ அல்லது இரு மாணவர்கள் ஒரு கதிரை மேசையில் இருப்பதையோ காணலாம். இக்காரணங்களினால் இவர்கள் களைப்படைந்து கல்வியில் ஆர்வம் குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் 1800 பிள்ளைகளுக்கு பல உதவி ஆசிரியர்களும், மிகக் குறைவான பட்டதாரி ஆசிரியர்களுமே உள்ளனர். அவ்வாறே ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 1600 பிள்ளைகளுக்கு சில உதவி ஆசிரியர்களும், ஓரிரு பட்டதாரி ஆசிரியர் களுமே உள்ளனர். இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறையை பல தொண்டர் ஆசிரியர்கள் பலவருடமாக நிவர்த்தி செய்து வருகின்றனர். இவர்களுக் கான ஊதியப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. இரண்டு பாடசாலைகளிலும் கடந்த பல வருடங்களாக ஆசிரியர்கள் இடம்பெயர் வதும், இளைப்பாறுவதையுமே கானமுடிவதுடன், புதிய நியமனங்களைக் காண முடியாதுள்ளது.

அறியாமை நீங்கப் பெற்றவர்களே ஆசிரியர்களாவர். மாணாக்கரின் அறியாமையை நீக்கி அறிவொளி கொடுத்தல் ஆசிரியர்களின் பணி ஆகும். இப்பணியின் மூலம் மனிதப் பண்பினையே மாற்றியமைத்திடும் வல்லமையினை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றனர் என கல்வி நெறியாளர் பெஸ்ட லோசி கூறியுள்ளார். ஆசிரியர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு மாணவர்களின் நடத்தைகளை உருவாக்குவதற்கு ஒரு கருவியாக உள்ளனர். அவர்களது முன்மாதிரிகளும் கற்பித்தல் முறைகளும், பள்ளிச்செயல்களில் கொள்ளும் பங்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கும், கல்லூரிகளின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கின்றது.

இப்பிரதேசத்தில் உள்ளூர் ஆசிரியர்கள் பெரும்பாலானோரும், வெளியூர் ஆசிரியர்களும் கற்பிக்கின்றனர். ஆரம்ப காலங்களில் இங்கு

யாழ்ப்பாண ஆசிரியர்களே அதிகமாக இருந்து கற்பித்து வந்திருக் கின்றனர். திருமதி.வீ. மகேஸ்வரி, திரு. சங்கரப்பிள்ளை, திரு. பரமநாதன், திரு. இராமசாமி, திரு.மா. சுப்பையா, திரு. சின்னத்தம்பி என இன்னும் பலர் பலவித சீர்திருத்தங்களை செய்திருக்கின்றனர். அவர்கள் ஊரிலேயே தங்கியிருந்தமையினாலும், அவர்களுக்குப் பிரத்தியோக உழைப்புக்கள் இன்மையாலும் மாலை வகுப்புக்கள் நடத்தி மாணவர்களின் கல்வியில், பாடசாலையின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த முடிந்தது. இந்நிலைமை தற்போது மேலும் அதிகரித்துள்ளது. ஆசிரியர்கள் பெரும்பாலானோர் ஊரவர் என்றபடியாலும, அவர்களுக்கு ஊர்ப்பற்றும், ஊர்க்கல்வியில் பற்றும் அதிகரிக்க சேவையும் அதியுன்னதமாகக் காணப்படுகிறது.

உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்தைப் பொறுத்தவரையில் 60 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியரும், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியால யத்தைப் பொறுத்தவரை 75 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியரும் காணப் படுவது ஆசிரியர் பற்றாக்குறையின் அகோரத்தை வெளிக்காட்டுகிறது. பொதுவாக 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் காணப் படுவதே சிறந்ததொன்றாகும். இது திட்டமிட்ட புறக்கணிப்பா? இல்லை இங்கு கடமையாற்ற ஆசிரியர்கள் விரும்பவில்லையா? போன்ற கேள்வி களை தோற்றுவிக்கின்றது. அத்துடன் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை எங்கும் தலைதூக்கி நிற்கும் பொதுவான பிரச்சி னையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அயலூர்களில் வசிக்கும் ஆசிரியர்கள் பாடசாலை வேளையில் மாத்திரமே பாடசாலையுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். இவ்வூரின் சீரற்ற போக்கு வரத்துப் பிரச்சினையினால் பாடசாலையின் வளர்ச்சியில் இவ்வாசிரியர் களின் பங்கைக் குறைவடையச் செய்கிறது. அத்துடன் உறுதியற்ற நிர்வாகத்திறமை, சில விஷமிகளால் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்படும் பேதம், பல்துறைகளிலும் ஆசிரியர்களின்மை, அவர்களுக்கிடையில் கல்வியறிவு பற்றிய விழிப்புணர்ச்சியின்மை போன்றன மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஒரிரு தசாப்தத்திற்கு முன்பு மிகவும் குறைவாக காணப்பட்ட படித் தவர் வீதம் அண்மைக்காலங்களில் 50% மளவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மாணவர்களுக்கு வெளியகத் தொடர்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் கல்வி

பற்றிய விழிப்புணர்ச்சியையோ, உட்சாகத்தையோ காணமுடியாதுள்ளது. மேலதிக வகுப்புகள் போன்ற வசதிகள் மிகவும் குறைவு, பாடசாலைக் கல்வி போதும் என்ற நிலை காணப்படுகின்றது. மேலதிக வகுப்புக்களின் முக்கியத்துவங்களும், அதன் பிரதிபலிப்புக்களும் எட்டாத தூரத்திலே யுள்ளது. இதனால் மாணவர்களின் மத்தியில் பல்துறையில் சித்தியடை வதையோ, போட்டியிட்டு படிக்கும் தன்மையினையோ, சூழலையோ காணமுடியாதுள்ளது.

ஏறத்தாழ 18000 பேர் வாழும் உடப்பு, ஆண்டிமுனைக் கிராமங்களில் சுமார் 120 பேரளவிலேயே அரச உத்தியோகத்தர்கலாக உள்ளனர். இது கல்வி வளர்ச்சியின் தன்மையினையும், அதில் மக்கள் கொண்டுள்ள அக்கரையையும் தெளிவுபடுத்துகின்றது. அத்துடன் ஊரில் ஆரம்பக் கல்வியைப் பெற்று வெளியூர் பாடசாலைகளில் படித்தவர்களும், உடப்பி லேயே படித்தவர்க்களுமாக இதுவரைக்கும் 35 பேரளவில் பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைய காலங்களில் வெளித்தொடர்புகள் சற்று அதிகரிக்க மாணவர்கள் மத்தியில் ஒரு ஆர்வமும், ஊக்கமும் உயிர்ப் பெற்றுள்ளதைக் காணலாம். கடந்த தசாப்த பெறுபேறுகள் இதனைக்காட்டுகிறது. இதில் ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. உள்ளூர் ஆசிரியர்கள் பிள்ளைகளின் குடும்ப நிலைமை களை தெளிவாக அறிந்திருப்பதால் பெற்றோருக்கும், பாடசாலைக்கும் சுமூகமான தொடர்பை ஏற்படுத்தி கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றனர் எனலாம். பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் ஆர்வமும் அர்ப் பணிப்பும் அதிகரிக்குமாயின் உடப்பூர் கல்வி வறுமை நீங்க கல்வியறிவு பெற்று தன்னிறைவு பெற்ற சமூகமாக மாற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

## 9

# ஐவர் கதையும், ஆடித்திருவிழாவும்

இலங்கையின் சிவபூமி எனச் சிறப்புப்பெறும் வடமேல் மாகாணத்தில் பல்லாண்டு பழைமையான வரலாற்றைக் கொண்ட உடப்பங்கரைதனிலே மூன்று ஆலயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவற்றுள் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம், ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயம், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், என்பனவாகும். இவ்வூர் மக்களின் வழிபாட்டு முறையில் சக்தி வழிபாடு சிறப்பம்சம் பெறுவதைக் காணலாம். இவ் வாலயங்களுள் பெரும்பாலானவை ஆகம முறைப்படி அமைந்துள்ளன. அவற்றில் நடைபெறும் கிரியைகளும், பூசை வழிபாடுகளும் ஆகம முறைப்படி நடைபெற்றாலும், நடைபெறும் திருவிழாக்கள் மரபு ரீதியான வையாகும். ஆனால் 1994ம் ஆண்டின் பின் ஸ்ரீ ருக்மணி, சத்தியபாமா சமேத பார்த்தசாரதி, ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய மூலமூர்த்திக்கேயுரிய மார்கழி மாதத்து வைகுண்ட ஏகாதசித் தினத்தை சிறப்பிக்குமுகமாக பிரமோட்சவ உற்சவம் கொடியேற்றத்துடன் நடைபெற்றுவருவதை ஆகமத்திருவிழாவாகக் குறிப்பிடலாம்.

மகாபாரதத்தை அடிப்படையாக வைத்து நடைபெறும் ஆடித்திருவிழா ஆரம்ப காலங்களில் தமிழ் சித்திரைப்புத்தாண்டு தினத்தில் நடைபெற்ற தாகவும், பின்னர் மக்களின் தொழில் முறைகளில் மாற்றம், வருமானம், காலநிலை, போன்ற காரணங்களினால் ஆடிமாதத்திற்கு மாற்றப்பட்ட தாகவும் 1929 இல் வெளியிடப்பட்ட ஸ்ரீ திரௌபதியம்மன் மான்மியம் கூறுகின்றது. அக்காலத்தில் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் திரௌபதியம்மன் உருவச்சிலையே இருந்து வந்தது. பின்னர் மூலஸ்தான திருவுருவச் சிலையை அகற்றிவிட்டு மகாபாரதத்தின் கதாநாயகனான ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேதரர் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானின் திருவுருவச் சிலையை வைத்து மக்களால் பூசிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அவ் விடத்தில் இருந்த அம்பாள் சிலையை ஆலயத்தின் அர்த்த மண்டபத்தில் இடதுபுறமாக வைத்து நித்திய, நைமித்திய பூசைகளுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**உட்கொடியேற்றம்**

இவ்வாலயத்தில் நடைபெறும் கொடியேற்றல் வைபவவிழா இலங்கையில் வேறெங்கும் காணப்படாத ஒரு வித்தியாசமான முறையில் அமைந் துள்ளது. அதாவது இங்கு இரண்டு கொடியேற்றங்கள் நடைபெறுகின்றன. உட்கொடியேற்றம், வெளிக்கொடியேற்றம்.

ஆடித்திருவிழா வருடாவருடம் ஆடி மாதத்தில் அமாவாசையை யொட்டிய ஒரு ஞாயிறு தினத்தில் உள் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகின்றது. உற்கொடி மகாபாரதத்தில் வரும் கௌரவர்களின் போருக்குரிய தொடக்கக் கொடியாகவே ஏற்றப்படுகின்றது.

அமாவாசைத் தினத்தன்று கொடியேற்றி எதிர் உரோமம் உடைய (அரவாணை) ஒருவனை காளி தெய்வத்திற்குப் பலியிட்டால் பஞ்ச பாண்டவர்களின் முதல்வனான தருமனின் தலை தோல்வி அடைவர். என பஞ்சபாண்டவர்களில் சாஸ்திர விற்பன்னனான சகாதேவன், துரியோதனாதிகளுக்கு ஆருடம் பார்த்துக் கூறிவிடுகின்றான். இதையறிந்து எல்லாம் வல்ல ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அமாவாசை தினத்தன்று கௌரவர்கள் மேற்கூறப்பட்ட யாக வழிபாட்டுடன் கொடியேற்றினால் தான் சார்ந்த பஞ்ச பாண்டவர் படை தோல்வியடையும் என்பதற்காக ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அமாவாசை தினத்திற்கு முன்தினம் பிதிர்க்கடன் யாகத்தை மேற்கொள்ளுகின்றனர். பிதிர்க்கடன் அமாவாசைத் தினத்தில் செய்யப்படும் ஒரு நிகழ்வாகும். இந்நிகழ்வு அமாவாசைத் தினத்திற்கு முன்தினம் நடைபெறுவதால் அன்று சூரிய, சந்திரர்கள் கண்ணனின் மர்மத்தை அறியாது பிரசன்னமாகின்றனர். மகா பிரபுவே இது தவறான விடயமல்லவா என்று வினவுகின்றனர். அப்பொழுது கிருஷ்ணன் சூரிய, சந்திரர்கள் ஒன்றாக சேரும் வேளை அமாவாசை தினமாகும். இங்கு தாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்துள்ளீர்கள் எனவே இன்றுதான் அமாவாசை தினத்திற்குரிய சரியான தினமாகையாற் பஞ்சபாண்டவர்கள் கொடியேற்றி விடலாம் எனக்கூறிவிடுகின்றனர்.

இதனாலோ, என்னவோ ஒரு வருடத்தில் ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை, அல்லது இரண்டு பௌர்ணமி தினங்களாவது ஏற்படுவது நிச்சயமாகிவிட்டது போலும். இவ்வாறு மக்களின் வாழ்க்கை முறையோடு ஒன்றித்துக்காணப்படுவதால் தான் மகாபாரதம் இன்றும் நிலைத்து

நிற்பதற்கும், அது நடந்து முடிந்த உண்மைச்சம்பவம் என்பதற்கும் சான்றாக அமைகின்றது.

ஞாயிறு சூரியனின் பெயராகும். அன்றைய தினத்தில் கொடியேற் றினால் யுத்தம் வெற்றியளிக்கும். எனும் நோக்குடன் ஞாயிறு தினத்தில் கொடியேற்றப்படுகின்றது. இதன் காரணமாகவே அமாவாசை தினத்திற்கு முன்பின்னாகவுள்ள ஞாயிறு தினத்தில் கௌரவர்களுக்கான உட்கொடி யேற்றுவதற்கு சற்று முன்னர் பஞ்ச பாண்டவருக்குரிய கொழுந்தன் கொடியேற்றப்படும். இக்கொழுந்தன் கொடி பித்தளை உலோகத்தினால் வடிவமைக்கப்பட்டதும் பஞ்ச பாண்டவர்களின் எண்ணிக்கைக்கு(05) ஏற்ப ஐந்து கூறுகளைக் கொண்ட அமைப்பாகும்.

கொடியேற்ற தினத்தன்று காலை கோயிலை திருவிழாவுக்காக தயார் படுத்திய நிலையில் அபிஷேகம் நடைபெறும். பகல் பிள்ளையாருக்கு விஷேட பூசை நடைபெறும். சைவசமயிகள் எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் அது எதுவித இடையூறுகளுமின்றி நிறைவேற வேண்டும் எனும் நோக்குடனேயே பிள்ளையாருக்கு விசேட பூசை நடைபெறுகின்றது. பிற்பகல் ஓமம் வளர்த்து ஆலய குருக்களினால் கரகம் பாலிக்கும் பூசகருக்குக் காப்புக் கட்டப்படும். காப்பு என்பது மஞ்சள் துண்டு ஒன்றுடன் மஞ்சளில் தோய்த்தெடுக்கப்பட்ட நூலாகும். அதனைத் தொடர்ந்து பூசகர் ஏனைய பரிவாரங்களான மூலஸ்தான அம்பாள், உட்சவ அம்பாள், அக்கினிக் கடவுள் (வீரபத்திரர்) ஆகியோருக்கும் விழாக்களில் பங்கு வகிக்கின்ற கைமணி, மகாபாரத ஏடு, கொழுந்தன் கொடி, ஆகியவற்றுக்கும் காப்புக் கட்டுவர்.

மாலை ஐந்து மணியளவில் கரகம் எடுப்பதற்கான ஆயத்தங்களுடன் கரகச் செம்பைப் பூசகர் தாங்கிய வண்ணம் பாட்டு மத்தள இசைக்குழு வினர், பக்த அடியார்கள் புடைசூழ அருகிலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்குச் செல்வர். இதில் கலந்து கொள்ளும் ஆண்கள் யாவரும் மேற்சட்டை இல்லாமல் கழுத்தில் உருத்திராக்க மாலை அணிந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அங்கு பூசகர் நீராடி, ஆலயத்திற்கு முன்னால் மண் மேடையமைத்து அதன் மீது வெள்ளைத்துணி விரித்து அலங்கரிக் கப்பட்ட கரகச் செம்பு வைக்கப்பட்டிருக்கும். கரகச் செம்பினுள் நிறைய நீரும், அதனுள் ஒரு ரூபா நாணயமும் வாயிலில் வரிசையாக நிரைப்

படுத்தப்பட்ட மாவிலைகளும் அதனைச் சூழ பூவினால் ஆன சரமாலை சுற்றப்பட்டிருக்கும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நீர்வளம் மிக முக்கியமானதாகும். நீரைக் கொண்ட கரகம் எப்பொழுதும் குளிர்மையாகக் காணப்படுவதால் அந் நாட்டு மக்களும் சந்தோஷத்துடனும், ஒரு ரூபா நாணயம் இடப்பட்டிருத்தல் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டும் எனும் நோக்குடனேயே கரகச் செம்பு மாவிலைகளினால் சிவலிங்க வடிவில் பிரதிட்டை செய்யப்படு கின்றது. நீராடிய பூசகர் விபூதி தரித்து கரகம் தாபிக்கப்பட்ட இடத்திற்கு வந்து ஆலய மூலஸ்தானத்தை நோக்கியவாறு இறைவியைத் தியானிப்பார். அப்பொழுது அரோகரா, கோவிந்தா எனும் கோசங்கள் எழ பூசகர் தன்னை மறந்த ஒரு அனந்தல் (சன்னதம்) நிலையை அடைவார். மாரியம்மன் ஆலய மூலஸ்தானத்தில் இருந்து தீபாராதனை கொண்டு வந்து காட்டப் பட்டதும் பூசகர் கரகச் செம்பைத் தலையில் சுமந்து கொண்டு ஒரு கையில் வெள்ளிப்பிரம்பும், மறுகையில் சம்சாடுமாக பாட்டு மத்தள இசைக் குழுவினர், பக்தர்கள் சகிதம் கோயிலை வளம் வந்து திரௌபதியம்மன் ஆலயத்தை நோக்கி வரும். கரகம் வரும் வழியில் ஊர்மக்கள் யாவரும் கூட்டி சுத்தம் செய்து மஞ்சள் நீரினால் புனிதப்படுத்தி வீட்டு வாசல்களின் முன் நிறைகுடம் வைத்து பக்தி சிரத்தையுடன் வரவேற்பர். கரகம் மாரியம்மன் ஆலயத்திலிருந்து அருகிலுள்ள முருகன் ஆலயத்தையும் வலம் வந்ததும், பிரதான ஆலயத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும். வீடுகளின் வாசலுக்கு முன்னால் வைக்கப்பட்ட நிறைகுட மஞ்சள் நீரினால் அம்பாளாகத்தன்னைப் பிரதிபலிக்கின்ற பூசகரின் கால்களைக் கழுவி வழியனுப்பி வைப்பர்.

கரகத்தைத் தாங்கி வரும் பூசகர் திரௌபதியம்மனாகவே தன்னைப் பிரதிபலிப்பதால் ஊர் மக்கள் அனைவரும் மிகவும் பயபக்தியுடனேயே வரவேற்கின்றனர். கரகத்தைச் சூழ்ந்து முன்னால் கை மணியொலித்துச் செல்ல அதனுடன் சூரிய சந்திரர் கொடிகளைத் தாங்கிய வண்ணம் மத்தள மேள ஒலியுடன் பக்த அடியார்கள் செல்லும் காட்சி பார்ப்பவரை மெய்சிலிர்க்கச் செய்யும். அடுத்து ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தை வலம் வந்து தீபாராதனை தரிசனம் பெற்று இறுதியில் தேங்காய் உடைத்து, திரௌபதியம்மன் ஆலயத்தை அடைந்து வெளிவீதி, உள்வீதி வலம் வந்து ஆலயத்தின் மூலஸ்தானத்தை அடைந்ததும் திருக்கதவு சாத்தப்படும்.

சிறிது நேரத்தில் அம்பாளின் திருப்பாதத்திற்குக் கீழ் உள்ள கரகத்திற்கு பஞ்சாலாத்தியுடன் திருக்கதவு திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து இரவுப் பூசை 7.30மணியளவில் நடைபெறும்.

அதன் பின்னர் உட்கொடியேற்றத்திற்குரிய விசேட மேடையில் நவதானியங்கள், சில்லரைநாணயங்கள் இட்டு கொடிமரத்தை நீராட்டி சுமங்கலிப் பெண்கள் 07 அல்லது 09 எனும் ஒற்றை எண்ணிக்கையில் மஞ்சள், விபூதி பூசி, சந்தனம் குங்குமப் பொட்டிட்டு தீபாராதனையுடன் கொடித்தம்பம் நாட்டப்படும். பின் துரியோனாதிகளுக்கான 16 முழம் நீளமான கொடிச்சீலையில் ஐந்து தலை நாகம், சங்கு, சக்கரம் வரையப் பட்டிருக்கும். அதனுடன் தருப்பைக்கயிறு, தருப்பைப்புல் ஆகியன பெரிய செப்புத்தாம்பாளத்தில் எடுக்கப்பட்டுப் பிள்ளையார் சந்நிதியில் வைக்கப்படும்.

இவ்வேளையில் பஞ்சபாண்டவர்களுக்கான பாகத்தைக் கேட்டுக் கிருஷ்ணர் தூது செல்லும் மகாபாரதக் கதை படிக்கப்படும். மறுபுறம் பிள்ளையாருக்குத் தீபாராதனை சாட்டி செப்புத்தாம்பாளத்தை ஆலய பட்டையத்தாரால் மிகவும் பயபக்தியுடன் தலையில் தாங்கிய வண்ணம் அரோகரா, கோவிந்தா எனும் கோசத்துடன் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து கொடிக்கம்பத்தின் முன் கொண்டு வந்து பூசகரினால் கொடிச்சீலை ஏற்றப்படும். கொடிமரம் பதியாகிய சிவனையும், கொடிச்சீலை ஆன்மா வையும் அதனுடன் சுற்றப்பட்டுள்ள தருப்பைக்கயிறு ஆன்மாவாகிய உயிர் பந்த பாசத்தினால் கட்டுண்ட நிலையை சித்தரிக்கக் கூடியதாக தருப்பைக்கயிறு கொடிக்கம்பத்தைச் சுற்றிக் கட்டப்படும் பொழுது ஆணையிட்டேன் ஆணையிட்டேன்..... எனும் தமிழ்வேதமந்திரத்தை ஓதி முக்கோடித் தேவர்கள், தெய்வங்கள், பேய்பிசாசுகள், அனைத்து ஜீவராசிகளும் இத்திருவிழாவில் கலந்து சிறப்பாக நடைபெற பக்கபலமாக உதவவேண்டும் எனும் வேண்டுகோளாகவே அழைக்கப்படுகின்றது. கொடிச்சீலை ஏற்றப்பட்டது. தருப்பைப்புல் வைத்து கட்டப்பட்டு அதனை சிவப்புத்துணியினால் மூடிக்கட்டப்படும். விசேட பூசையுடன் அன்றைய முதல்நாள் உற்கொடியேற்றல் வைபவம் நள்ளிரவு ஒரு மணியளவில் நிறைவு பெறும்.

அடுத்து வரும் இரண்டாம், மூன்றாம் நான்காம் நாட்களான திங்கள், செவ்வாய், புதனில் காலையில் படிக்கட்டு அபிஷேகமும் அதனைத்

தொடர்ந்து விசேட அபிசேகங்களும் ஆலய குருக்களினால் நிகழ்த் தப்படும். புதன் கிழமை இரவு ஆலயத்திற்கு முன்னால் தற்காலிக தென்னோலைப்பந்தல் அமைக்கப்படும்.

### வெளிக்கொடியேற்றம்

ஐந்தாம் நாள் வியாழக்கிழமை காலையில் கோயில் முழுவதும் பூசைக்குரிய ஆயத்தம் செய்யப்படும். அதனைத் தொடர்ந்து எல்லாச் சுவாமிகளுக்கும் விஷேட பூசைகள் நடைபெறும். பஞ்ச பாண்டவருக்குரிய வெற்றிக்கொடி ஏற்றுவதற்காக 80 அடி நீளமான கொடிக்கம்பத்தை ஆலயத்திற்கு முன் உள்ள முற்ற வெளியில் வைத்து வயது முதிர்ந்த இந்து இல்லற வாசி ஒருவரினால் கடல் நீர் கொண்டுவந்து அதனைக் கழுவி இல்லற வாசி கள் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது என்னும் ஒற்றை எண்களில் ஆண் பெண் இரு சாரரிலும் மஞ்சள் நீராட்டி தூபதீபம் காட்டி அரோகரா கோவிந்தா எனும் கோசத்துடன் ஊர்மக்கள் பெரியவர், சிறியவர் எனும் பேதமின்றி அதனுடன் தொடர்பான கயிற்றையிழுத்து இராகு காலம் தவிர்ந்த சுபநேரத்தில் ஏற்றப்படும். இக்கொடிக்கம்பத்தின் உச்சியில் தருப்பைப்புல் கட்டப்பட்டிருக்கும். பறக்கும் கொடிச்சீலையில் வாயு புத்திரனான அனுமனின் உருவம் வரையப்பட்டிருக்கும். இந்த கொடிச் சீலையானது கரகம் எடுக்கும் நாட்களில் மட்டும் பறக்க விடப்படும். கொடிச்சீலையை ஏற்றி இறக்குவதற்காகவே கொடிமரத்தை நாட்டுவதற்கு முன்னமே கப்பி, கயிறுகள் பொருத்தப்பட்டிருக்கும். கொடிச்சீலையில் பறக்கவிடப்படும் அனுமன் கொடியானது பஞ்சபாண்டவர்களில் ஒருவனான வீமன் பாருசாத மலர் பறிப்பதற்காக இந்திரலோகம் செல்கின் றான். வழியில் கிழன்குரங்கொன்றை சந்தித்து அந்த கிழன்குரங்காகிய அனுமனின் வேண்டுதலின் பேரில் அதாவது நடைபெறவிருக்கும் மகாபாரத யுத்தத்திற்குப் பக்கபலமாகவும் வெற்றிக்கு உறுதுணையாகவும் இருந்து அருச்சுணனின் தேர்க்கொடியில் பறக்க விடுமாறு வேண்டு கின்றான். அதனை நினைவு கூறுவதாகவே அது அமைந்துள்ளது.

வெளிக்கொடி கம்பத்திற்கு பூசகரினால் காப்புகட்டி சிறிய பூசை தூபதீபத்துடன் நடைபெறும். அதன் பின்னர் கோயிலின் முன்னால் உள்ள தற்காலிக பந்தலின் கீழ் ஊரவர்களினால் பழங்காலத்து பஞ்சாயத்துப் போன்ற கூட்டம் நடைபெறும். பஞ்சாயத்தில் திருவிழாக் காலங்களில்

நிகழ்ச்சியை சிறப்பிக்கு முகமாக நாடகங்கள், 15ம் நாள் ஞாயிறு வனம் புகும் காட்சிக்கு பஞ்ச பாண்டவர்களை தெரிவுசெய்தல், 16ம் நாள் திங்கள் தவநிலைக் காட்சிக்கான அருச்சுனனை தெரிவு செய்தல், 17ம் நாள் செவ்வாய் அக்கினிக் குண்டக்காவல் தெய்வங்களை தெரிவு செய்தல், மற்றும் ஆலயத்திற்கு சொந்தமான நிலத்தை மணிக்கடைக்காரர்களுக்கு குத்தகை கொடுத்தல் விடயமாகவும் ஆராயப்படும். அதனைத் தொடர்ந்து பூசை நடைபெறும்.

அன்று மாலை கரகம் பாலித்தல் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று பூசகர் நீராடி பக்தர்களின் அரோகரா, கோவிந்தா எனும் கோசம் எழவும் தூபதீபத்தின் மணம் விண்ணைத் தொடுமாறு பரவவும் பூசகராகிய அம்பாள் தன்னை மறந்து அனந்தல் நிலையில் கரகத்தை சுமந்து கோயிலை வலம் வந்து ஆலய தரிசனம் பெற்று முதலாகவுள்ள முருகன் ஆலயத் தையும் இரண்டாவதாகவுள்ள வீரபத்திரகாளி கோவிலையும் வலம் வந்து அங்கும் தீபாராதனை பெற்றதும் காளிகோவிலில் இருந்து திரௌபதை கோயிலுக்குச் செல்லும் பிரதான பாதையில் முதலாவதாக வரும் நாற்சந்தியில் இருந்து கிராமிய பாட்டு மத்தளம், கைத்தாளம், சகிதம் பக்தர்கள் அம்பாளுக்குரிய அம்மானைப் பாடலை இசைக்க, கரகம், கும்மி நடனம் ஆடும் காட்சி அம்பாளே ஆனந்தக் களிப்பில் ஆடுகின்றாள் என்னும் ஐதீகமும் அவ்வூர் மக்களின் பாரம்பரிய கலைகலாச்சாரத்தை அன்றிலிருந்து இன்றுவரை பேணிப்பாதுகாப்பதையும், இன்றும் காண முடிகின்றது. இக்கும்மி நடனம் உடப்பூர் சந்தி வரை இடம்பெறும். இறுதியில் கைமணி ஒலிக்க பெண்கள் குரவையிட அரோகரா, கோவிந்தா ஓசையுடனும் கும்மி நடனம் நிறைவுபெறும். திரௌபதியம்மன் கோயிலை வெளிவீதி, உள்வீதி வலம் வந்து கரகம் விரிக்கப்பட்ட நிலப்பாவாடை மீது செல்லும். மூலஸ்தானத்திற்குள் செல்லுவதற்கு முன்னால் அம்பாளுக் குரிய எச்சரிக்கை இசைக்கப்படும். மூலஸ்தானத்தினுள் சென்றதும் திருக்கதவு சாத்தப்படும். சிறிது நேரத்தில் அம்பாளின் பாதத்தின் கீழ் வைக்கப்பட்ட கரகத்திற்கு தீபராதனையுடன் திருக்கதவு திறக்கும் வரை மக்கள் வைத்த கண் வாங்காது காத்து நிற்பர். அப்பொழுது கரகத்தின் வெளிக்கழுத்து விளிம்பில் மூன்று அடி நீளமும் ஒன்றரை அங்குலம் அகலமுமுடைய வெள்ளிவாள் அதன் கைப்பிடி மேல் இருக்கத்தக்கவாறு செங்குத்தாக நிறுத்தப்பட்டிருப்பது பார்ப்பவர் அனைவரையும் இன்று வரை வியப்பில் ஆழ்த்தும்.

உடன் இரவுப் பூசை நடைபெறும். இரவு 9.00 மணியளவில் ஆலயப் பந்தலின் கீழ் மணலாக இருப்பதனால் பின்னப்பட்ட தென்னோலை இரண்டின் மீது வெள்ளைச்சீலை விரிக்கப்பட்டு அதற்கு அருகில் எண்ணை விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கும். அதனுடன் காளாஞ்சியும் மகா பாரதக்கதையின் தொகுப்பு நூலும் அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும். ஊர்மக்கள் அனைவரும் சிறியோர், பெரியோர் என்று வேறுபாடு இன்றி அவ்விடத்தில் ஆண்களும் பெண்களும் குழுமி இருப்பர். பூசகரும் அவருக்கு உதவியாக பக்கம் பாடும் ஒருவரும் எதிரும் புதிருமாக, விரிக்கப்பட வெள்ளைச்சீலை மீது அமர்ந்துகொண்டு மகாபாரதத்தில் வரும் பஞ்சபாண்டவர் பிறப்பு, வளர்ப்புப்பற்றி பாடலுடன் உரையுமாக எடுத்துக்கூறுவர். பின்னர் இரவு பதினொரு மணியளவில் முடிவடைந்ததும் நடை சாத்தப்படும். ஆறாம் நாள் வெள்ளிக்கிழமை வழமைபோல் விசேட படிக்கட்டு அபிஷேகம், விசேடப்பூசை பகல் பதினொரு மணியளவில் நடைபெறும். இரவு பூசை ஏழரை மணியளவில் நடைபெறும். இரவு ஒன்பது மணிக்கு வழமையான நடைமுறையுடன் பஞ்சபாண்டவர் பிறப்பு வளர்ப்பு துஷ்யந்தன் சுருக்கமும் கதையில் இடம்பெறும்.

ஏழாம் நாள் சனிக்கிழமை கரகம் பாலித்தல் இருப்பதால் அதிகாலை வெளிக் கொடிக்கம்பத்தின்மீது அனுமான் கொடி பறக்க விடப்பட் டிருக்கும். காலையில் பட்டாபிஷேகம், பகல்பூசை, மாலையில் கரகம் மாரியம்மன் கோயிலை அடைதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். 1970ம் ஆண்டிற்கு முன்னர் கரகம் பாலித்தல் மாரியம்மன் கோயிலின் பிரதான வீதிக்கும் மேற்கில் கடற்கரைப்பிரதேசத்தில் சிறிய மண்மேடை ஒன்றை அமைத்து அதன் மீது வெள்ளைச் சீலை விரித்து கரகம் வைக்கப் பட்டு ஆயத்தம் நடைபெறும். இவ்வேளை பூசகராகிய அம்பாள் நீராடி, விபூதி அணிந்து, ஆயத்தங்களுடன் கரகம் தாபிக்கப்பட்ட இடத்திற்கு வருவார். இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் உள் கொடியேற்றி தீக்குளிப்பு நடைபெறும் வரையுள்ள பதினெட்டு நாட்களும் அம்பாள் ஆகிய பூசகரும் நீண்ட தலைமுடியை உடையவர் ஆதலால் திரௌபதையின் சபதத்தை நிறைவேற்றும் நோக்குடன் விரித்த கூந்தல் முடிப்பதும் இல்லை. அத்துடன் குளித்து குளித்து சீப்பினால் தலைமயிர் வாருவதும் இல்லாத கோலத்திலேயே இருந்து பதினெட்டாம் நாள் துரியோதனனின் நெஞ்சைப் பிளந்து அந்த இரத்தத்தில் தன் சபதத்தை

நிறைவேற்றும் நோக்குடன் விரித்த கூந்தல் முடிக்கும் வரையும் சோகமே உருவான தோற்றத்திலேயே காணப்படுவது ஒரு குறிப்பிடக் கூடிய விடயமாகும். கரகம் தாபிக்கப்பட்ட இடத்தில் பக்தர்கள் புடைசூழ அவர்களின் அரோகரா, கோவிந்தா எனும் கோஷம் எழும்ப வெள்ளிப் பிரம்புடன் இருகை கூப்பியவாறு இறைவனை வேண்டி சன்னதத்துடன் பரிவாரங்கள் புடைசூழ மாரியம்மன் கோவிலையடைந்து தீபாராதனை பெற்று அங்கிருந்து திரௌபதியம்மன் கோயிலை நோக்கி வரும்.

ஆனால் மக்கள் தொகை அதிகரிப்பும் இட நெருக்கடிகளும் அவ் விடத்தில் தூய்மையும் அற்றதால் அவ்விடம் கைவிடப்பட்டு மாரியம்மன் கோயிலில் கரகம் பாலித்தல் நடைபெறலாயிற்று. கரகம் பிரதான ஆலயத்தை நோக்கி வரும் வழியில் கும்மியடித்தலும் இடம்பெறும். இரவு பூசையின் பின்னர் பாரதத்தில் திருதராட்டினன்-பாண்டு உட்பலம் பற்றிய சுருக்கம் படிக்கப்படும். எட்டாம் நாள் ஞாயிறு காலை வழமையான படிக்கட்டபிஷேகம், பகல் பதினொரு மணியளவில் பூசை, மாலைபூசை அதனைத் தொடர்ந்து இரவு பாரதக்கதையில் வானரவதைச் சருக்கம் இடம்பெறும். ஒன்பதாம் திங்கள் காலையில் பூசைகளும் பிற்பகல் கரகம், இரவுப்பூசை, குருபுத்திர விநோதப் பரீட்சை விடயமாக பாரதக்கதை படிக்கப்படும். பத்தாம் நாள் செவ்வாய் வழமையான பூசைகளும் இரவு பாரதக்கதையில் இடம்பெறும் கௌரவர்கள், பஞ்ச பாண்டவர்களைக் கொள்வதற்காக அரக்கு மாளிகை கட்டுதல், பின்னர் தீமூட்டியதும் பஞ்ச பாண்டவர் மாறுவேடத்தில் வெளியேறுவதும் உள்ளடக்கிய வேத்திரகீய சுருக்கம் கதை படிக்கப்படும்.

**சுயம்வரம் அல்லது மாலையிடல்**

பதினொறாம் நாள் புதன் கிழமை உடப்பு ஊரவர்களின் உபயங்களும், எண்பது கும்பங்களில் தாபிக்கப்பட்ட சமானபிஷேகங்களும் இடம்பெறும். சுபநேரம் பார்த்து மூலஸ்தான உட்சவ அம்பாளை நிலப்பாவாடை விரித்து மேளதாளஇசைஒலியுடன் காவியம் பாடி ஊஞ்சல் பாட்டுக்கேற்றவாறு அசைத்துக் கொண்டு, தூபதீபம்காட்டி, உடுக்கடித்து பூசகரினால் வசந்த மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதற்கு முன்னர் பிள்ளையார் சிலையை கொண்டு வந்திருத்துவர். அத்துடன் ஸ்ரீ சத்தியபாமா ஸ்ரீ பர்த்தசாரதிப் பெருமாள் சமேத உருவச்சிலைகளையும் எழுந்தருளச்

செய்வர். நண்பகல் வசந்த மண்டப பூசை ஆரம்பமாகும். மாலை சாதாரண பூசை அதனைத்தொடர்ந்து பெருச்சாளி வாகனத்தில் எழுந்தருளிய பிள்ளையார் ஊர்வலம் முதலில் இடம்பெறும். பதினொறாம் நாள் புதன் கிழமை இரவு பிள்ளையார் ஊர்வலத்தை அடுத்து பதினேழாம் நாள் செவ்வாய் வரையுள்ள காலங்களில் இரவில் சுவாமி ஊர்வலம் நடை பெறுவதும், இறுதி நாளான பதினெட்டாம் நாள் புதன்கிழமை சுவாமி ஊர்வலத்தில் தீவட்டிகள் தாங்கிய இருவர் முன்செல்ல மேளதாள இசை யொலியுடன் வீதி வலம் வரும். ஊர்மக்கள் அனைவரும் வாசல்கள் தோறும் நிறைகுடம் வைத்து அர்ச்சனைத் தட்டுகள் கொடுத்து வரவேற்று வழியனுப்புவர். அத்துடன் பிரதான ஊர்ச்சந்திகளில் நாதஸ்வரக் கச்சேரிகள் நிகழும். பிரதான பாதையினூடாகக் காளி கோயிலை அடைந்து அங்கு சிறிது நேரம் தரித்து தீபாராதனை பெற்று திரும்பி அதே பாதையில் முதலாவதாகவுள்ள நாற்சந்தியில் கிழக்கு வீதியினூடாக திரௌபதியம்மன் ஆலயத்தை வந்தடையும். உடன் விசேட பூசைகள் நடைபெற்று முடி வடைந்ததும் பாரதக்கதை படிக்கப்படும். பாரதக்கதையில் திரௌபதி யானவள் அருச்சுனனுக்கு மாலையிடுதல் (சுயம் வரம்) நடைபெறும். அவ்வேளை வந்ததும் இடைநடுவில் கதை நிறுத்தப்பட்டு பூசகர் எழுந்து சென்று மூலஸ்தான அம்பாளுக்கும், வசந்த மண்டபத்தில் எழுந்தருளி யுள்ள அம்பாளுக்கும் மாலையிடுவார். அப்பொழுது ஆலயமணி உட்பட சகல விதமான வாத்திய ஒலி எழவும் தீபாராதனை காட்டப்பட்டு மீண்டும் பாரதக்கதை தொடரும். பின் கதை நிறுத்தப்பட்டு நடை சாத்தப்படும்.

**திருக்கல்யாணம்**

பன்னிரண்டாம் நாள் வியாழன் அதிகாலை பிள்ளையார் பவனி, புதன் இரவு சென்ற வீதியினூடாக நடைபெறும். பதினொன்றாம் நாள் புதன் மாலையிட்ட தினத்திலிருந்து பதினேழாம் நாள் செவ்வாய் வரையுள்ள காலங்களில் பிள்ளையார் பவனி மாலையிலும், அதிகாலையிலும் இடம் பெறுவதைக் காணலாம். பிள்ளையார் பவனியை அடுத்து காலை சமணா பிஷேகம் நிகழும். பகல் பூசை பதினொரு மணியளவில் முடிவடையும். மாலை கரகம் பாலித்தல், திரௌபதியம்மன் ஆலய வெளிவீதி, உள்வீதியை வலம்வந்ததும் விரிக்கப்பட்ட நிலப்பாவாடைமீது கரகம் குந்துகாலில் இருந்து பாடப்படும் எச்சரிக்கை அம்மானைக்கு ஏற்றவாறு மூலஸ்

தானத்தை அடைந்து திருக்கதவு சாத்தப்பட்டதும் தீபராதனையுடன் மீண்டும் திருக்கதவு திறக்கப்படும். இதில் குறிப்பிடக்கூடிய விடயம் கரகத்தின் கழுத்து விளிம்பில் மயிரிழையில் மிகவும் ஆச்சரியப்படக் கூடியவாறு செங்குத்தாகவும் தலைகீழாகவும் நிறுத்தப்பட்டிருக்கும் வெள்ளிவாள் நிலைத்து நிற்கும் நேரமும் அதாவது வெளிக்கொடியேற்ற கரகத்தில் இருந்து தவநிலைக்கரகம் வரை அதிகரித்துச் செல்வதைக் காணலாம். உடன் பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வந்ததும் பிள்ளையார் முன் செல்ல ஸ்ரீ ருக்மணிசத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமாள் அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தின் மீதேறி பிரதான பாதையின் ஊடாக ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தை அடையும்.வழியில் வீடுகளின் வாயில்கள் தோறும் அடியார்கள் அர்ச் சனைத் தட்டுக்கள் கொடுத்து அருள்பெறுவர். அத்துடன் நாற்சந்திகளில் நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறும். இவ்வாறு காளியம்மன் ஆலயம் வரை சென்று தீபாராதனை பெற்றுத் திரும்பி மறு வீதியினூடாக திரௌபதி யம்மன் ஆலயத்தை அடையும். அங்கு உள்வீதி வலம்வந்ததும், இருக் கையில் அமர்த்தப்பட்டுப் பூசைகள் நடைபெறும்.

இவ்வேளையில் அன்று கோயிலின் தென்மேற்கு மூலையில் கிழக்கு முகம் பார்த்தவாறு மணவறையை வைத்து அலங்கரிக்கப்படும். திரௌபதி யம்மன் திருக்கலியானத்தன்று இங்குள்ள அனைத்து வீடுகள் தோறும் தங்கள் குடும்பங்களில் நடைபெறவுள்ள கலியாண நிகழ்வு போன்று பலகாரங்கள் மற்றும் சிறப்புச் சிற்றுண்டிகளான முறுக்கு, பனியாரம் என்பன ஒரு நாளைக்கு முன்னமே தயாரிக்கப்பட்டுவிடும். அவற்றில் தயாரிக்கப்பட்ட பலகாரங்களே அம்பாளின் திருக்கலியாணத்திற்கும் கொண்டு வரப்படுகின்றது. அவை திருமணநிகழ்ச்சி முடியும் வரை எச்சில்படுத்தப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் சிறியோர் முதல் பெரியோர் வரை ஆண்களும் பெண்களுமாக விலையு யர்ந்த பட்டாடை, ஆபரணங்கள் அணிந்து ஆலயத்தின் உள்ளும், புறமும் வீற்றிருப்பர்.

வெளிப்பந்தலின் கீழ் பாண்டவர்களின் பாரதக்கதை பாராயணம் செய்யப்படும். கதையில் திரௌபதியம்மனின் திருக்கலியாண வேளை வந்ததும் சுமார் நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் கதை நிறுத்தப்பட்டு அனைவரும் திருக்கலியாண மண்டபத்தில் மணவறைக்கு முன்னால்

வீற்றிருப்பர். அவ்வேளை அலங்கரிக்கப்பட்டு வசந்த மண்டபத்தில் உள்ள திரௌபதியம்மனைத் திருமண மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்படும். இது ஒரு திருமணப் பெண்ணை சகல மரியாதைகளுடனும் அழைத்துச் செல்வது போன்று இடம்பெறும். மங்கள வாத்தியங்கள் இசைக்க மணப்பெண்ணை மணவறையில் வைத்து ஆலயக்குருக்களினால் மணப்பெண்ணுக்கு ஒற்றைத்தீபம் காடப்படும். தொடர்ந்து முதல் நிகழ்ச்சி யாகப் புண்ணியானம் செய்யப்பட்டு ஓமத்தீ வளர்க்கப்படும். மகாபாரதக் கதையில் வரும் தருமனின் முதல் பூர்வ கோத்திரங்கள் சொல்லப்படும்.

அம்பாள் மணவறைக்கு எழுந்தருளுவதற்கு சற்று முன்னர், நீண்ட காலமாகத் தாலிப்பாக்கியம் கிட்டாத பெண்களும், கணவன் தீராத நோயினால் பீடிக்கப்பட்டு அதிலிருந்து மீண்ட பெண்களும், அன்றைய நிகழ்ச்சிக்குரிய உபயகார்களும் தங்கள் குடும்பம் சகிதம் தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களினால் செய்யப்பட்ட நேர்த்தித் தாலி, பொட்டு ஆகிய வற்றையும், குடங்களில் எடுக்கப்பட்ட திருமணப் பலகாரங்களையும் மஞ்சள் துணியினால் மூடிக்கட்டி மேற்கட்டித்துணியின் கீழ் பொற்கொல்லர் பட்டறையில் இருந்து மேள தாள நாதஸ்வர ஒலியுடன் எடுத்துக் கொண்டு வருவர். ஓமகுண்டத்திற்கு அருகில் பஞ்சபாண்டவர்களை ஐந்து கும்பங் களில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். மொய்ப்பணம் கொடுத்தல் எழுதப்பட்டுக்கொண்டிருக்கும். மணப் பெண்ணாக அலங்கரிக்கப்பட் டிருக்கும் திரௌபதியின் கழுத்தில் தருமனாகப் பாவனை செய்துள்ள பூசகர் ஊர்மக்களின் ஆசியுடன் வேதமந்திரங்கள் ஒலிக்க ஊரின் சார்பான திருமாங்கல்யத்தை மணவறையில் உள்ள உட்சவ அம்பாள் கழுத்தில் கட்டும்பொழுது கோயில் மணியுடன், மேளதாள நாதஸ்வர ஒலிகளும், ஒத்திசைக்கும். மற்றும் நேர்த்திக்கடனுக்காகக் கொண்டு வந்த திருமாங் கல்யம் அனைத்தையும் பூசகரே மூலஸ்தான அம்பாள் கழுத்திலும் சுட்டுவார். இது நிறைவு பெற்றதும் மணவறையில் உள்ள திருமணத் தம்பதிகளைக் கோயிலின் வடக்கு வீதி வழியாக வசந்த மண்டபத்திற்கு அழைத்து வந்து விசேட கலியாணப்பூசை நடைபெறும். பிள்ளையார் தொடக்கம் வசந்த மண்டப அம்பாள் வரை விசேட கலியாணப்பூசை நடைபெறும். பிள்ளையார் தொடக்கம் வசந்தமண்டப அம்பாள் வரை விசேட சோட சோபசாரப் பூசையுடன் வேத பாராயணம், பஞ்சபுராணம் ஓதப்பட்டு திருவூஞ்சல் பாட்டுப்பாடப்படும். இவ்வாறாக வைகறை

மூன்று மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் விபூதி, பிரசாதங்கள் வழங்கப்பட்டு திருக்கதவு சாத்தப்படும்.

### அருச்சுனனின் தீர்த்த யாத்திரை

பதின்மூன்றாம் நாள் வெள்ளி காலையில் பிள்ளையார் பவனி முடிவடைந்ததும் காலப் பூசைக்கு முன்னர் பல்வேறுபட்ட நேர்த்திக்கடன்காரர்கள், மூன்று நாட்களுக்கு முன்னமே ஆலயத்தில் இருந்து விரதம் அனுட்டித்தவர்கள் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று கடல், நன்னீரில் நீராடி அம்பாளின் அனுக்கிரகத்தை வேண்டி நிற்பர். சன்னதம் வந்ததும் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட காவடிகள், பாற்செம்பு, அக்கினிச்சட்டிகளைத்தாங்கிய வண்ணம் மேள நாதஸ்வர வாத்தியங்கள் முன்செல்ல கோயிலின் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து பக்தர்களின் அரோகரா, கோவிந்தா எனும் கோசங்களும், தேவாரம், திருவாசகப்பாடல்களும் பாடியவாறு மேளநாதஸ்வர இசைக்கு ஏற்றவாறு ஆடியவண்ணம் முருகன் கோயிலையும், காளி கோயிலையும் வலம் வந்து திரௌபதியம்மன் ஆலயத்தை வந்தடையும். இதேவேளை முந்தல் ஸ்ரீ திரௌபதையம்மன், ஆலயத்திளிருந்தும், பாலையடிப் பிள்ளையார் கோயில், புளிச்சாக்குளம் ஸ்ரீ மாரியம்மன் கோயில், வைரவர்கோயில், முத்துப்பந்தி ஸ்ரீ மாரியம்மன் கோயில், வம்பிவட்டான் ஸ்ரீ ஐயப்பன் கோயில், ஆண்டிமுனை தாழையடி ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்தும் நேர்த்திக்காவடிகளும் பாற்கட்டுகளும், கால்நடையாக மாரியம்மன் ஆலயத்தை அடைந்து மீண்டும் அங்கிருந்து திரௌபதியம்மன் ஆலயத்தை இறுதியாக வந்தடையும். காவடிகளில் சன்னதக்காவடியாளர்களுக்கு நாக்கில் அலுமினிய ஊசியினால் குத்தப்பட்ட நாவலகும், தூண்டல், அமைப்புடைய முதுகுச் செடிகளும் பாய்ச்சியவாறு ஆடிவரும் காட்சி பார்ப்பவரை மெய்சிலிர்க்கச் செய்யும். இந்நிகழ்ச்சியில் பங்குகொண்டவர்களுக்கு உறவினர்களும், நண்பர்களுமாகக் களைப்பு தீருவதற்குப் பானங்களுடன் ஆலயத்தின் பின் வீதியில் குழுமி நிற்பர். இவை நிறைவு பெற்றதும் காவடி பாற்செம்புகளிளிருந்து பெற்றபாலை எடுத்து அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் பகல் பூசையில் நேர்த்திக்கடன் தீர்த்த அனைவரும் கலந்து கொள்வர். 7.30 மணிக்கு இரவுப்பூசை ஆரம்பமாகும்.

பூசையின் பின்னர் சுவாமி ஊர்வலத்தில் பிள்ளையார், கருடன் வாகனத்தில் ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேதரர் ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமாள் ஊர்வலமும் நடைபெறும். இரவு பாரதக்கதையில் அருச்சுனனின் தீர்த்த யாத்திரை செல்லும் சம்பவமும் பாடலும் விளக்கமுமாக எடுத்துரைக்கப்பட்டு முடிவடைந்ததும் நடை சாத்தப்படும்.

**துகிலுரிதல் கதை**

பதினான்காம் நாள் சனி காலையில் பிள்ளையார் பவனி இடம்பெறும். இது சைவசமயிகள் எக்காரியங்களையும் செய்வதற்கு முன்னர் கடவுள் வணக்கம் செய்தபின்னரே ஆரம்பிப்பது போன்று ஊர்மக்கள் இறையருளைப் பெற்ற பின்னர் அல்லது தரிசனம் பெற்றதும் தங்கள் கடமைகளைச் செய்வதற்கு ஆயத்தமாவதை இவ் ஊர்வலம் எடுத்துக் காட்டுவது போன்று உள்ளது.

பகல் ஒரு கும்பம் வைத்துத் தாபிக்கப்பட்ட ருத்திரா அபிஷேகப் பூசை நடைபெறும். மாலையில் கரகம் பாலித்தல் நடைபெறும். கரகம் ஆலயத்தை வந்தடைந்து தீபாராதனை பெற்றதும் உடன் இரவுப் பூசை ஆரம்பமாகும். பூசையை அடுத்து சுவாமி ஊர்வலத்தில் பிள்ளையார் பெருச்சாளி வாகனத்தில் முன்செல்லப்பின்னால் பட்சியின்மீது ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேதரர் ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமாளன் காட்சியளித்து மக்களுக்கு அருள் பாலிப்பார். ஊர்வலம் நிறைவுபெற்றதும் பூசை நடைபெறும். அன்றைய தினத்தில் பாரதக்கதையில் துரியோதனன் சபையில் சகுனி, பஞ்சபாண்டவர் களுக்கிடையே சூதாட்டம் நடைபெற்று நாடு நகரங்கள் யாவும் இழந்த பின்னர் திரௌபதையைப் பணயம் வைத்து அவளையும் இழந்து துச்சாதனனால் துயிலுரிதல் படலமும் கதையில் இடம்பெறும். அன்றைய தினம் வசந்த மண்டப அம்பாளுக்கு எதுவித அலங்காரங்களும் செய்யப்படாமல் வெண்ணிறப்பட்டுடுத்தி தலைவிரி கோலத்துடன் சோகமே உருவான தோற்றத்தில் வைக்கப்பட்டிருக்கும். இதே கோலத்திலேயே திரௌபதையாகத் தன்னைப் பாவனை செய்துள்ள பூசகரும் பதினெட்டாம் நாள் சபதம் நிறைவேறும் வரையும் விரித்த கூந்தல் முடிக்காமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வனம் புகும் காட்சி**

பதினைந்தாம் நாள் ஞாயிறு காலை பிள்ளையார் பவனி, அதிகாலை பூசை வழமையான முறையில், விரதத்திலிருந்தவர்களினால் காவடி, பாற்கட்டு, அக்கினிசட்டி போன்றவை நடைபெறும். பாற்கட்டு செம்பி லிருந்து எடுக்கப்பட்ட பாலை கொண்டு அபிஷேக பூசையுடன் வசந்த மண்டபப் பூசைகளும் நடைபெறும். அன்று மாலை பஞ்சபாண்டவர்களின் வனம் புகும் காட்சி படலம், இதற்காக நேர்த்திக்கடன்காரர்களில் பஞ்சபாண்டவர் ஐந்து, திரௌபதை, பிற்காலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மகா விஷ்ணு, குலகுரு தௌமியர், சூரியன், குரங்கு வடிவாகிய அனுமன், ஆகியோர் ஸ்ரீ வீரபத்திரகாளி கோயிலிலிருந்து அவர்களுக்கே உரிய நிஜ வேடம் தரித்து, அவர்களுடன் பாரதக்கதை பாராயணம் செய்யும் பூசகர் சகிதம் ஊர் மக்கள் அனைவருமாக பூசை, தீபாராதனை பெற்று கோயிலை வலம் வந்து திரௌபதையம்மன் ஆலயத்தை நோக்கி வருவர். வரும் வழிகளெல்லாம் மரம், செடிகள் நிறைந்த வனம் போன்று சித்தரிக் கப்பட்டிருக்கும். இடைக்கிடையில் மகாபாரத கதை படிக்கப்படும். ஒரு இடத்தில் வனத்தில் பஞ்சபாண்டவர்களை கொடிய பாம்பு வேடத்தில் நகுஷன் என்னும் அரக்கன் விழுங்கும் காட்சியை சித்தரிக்கக் கூடியவாறு அங்கு நிகழ்வதையும் வீமன் கதாயுதத்தை தாங்கிய வண்ணம் மகா பாரதத்தில் ஊர் மக்கள் கொடுத்த காய்கறிகளை தாங்கி வருவது போன்று கடைகள் தோறும் சென்று உணவுப்பண்டங்களைப் பறித்து வருவதும் குரங்கின் சாகசங்களையும், வெளியூர்களில் இருந்து வந்து பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தும். பஞ்சபாண்டவர் கோயிலை வலம் வந்து மூலஸ்தான தரிசன மண்டபத்தில் வைத்து ஆலய குருக்களினால் பஞ்சாலாத்தி காட்டி விபூதி, பிரசாதம் வழங்கப்படும். பின்னர் வனம் புகும் காட்சிக்கு வேடம் இட்டவர்கள் தங்கள் வேடங்களை களைவர். பின்னர் இரவு பூசை சுவாமி ஊர்வலத்தில் பிள்ளையார் முன் செல்ல ஸ்ரீ ருக்மணிசத்தியபாமா சமேதரர் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமான் விளாமர விருட்சத்தில் பவனி வருவார். மீண்டும் கோயிலை அடைந்ததும் பிரதான பூசை நடைபெற்று அன்றைய கோயில் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும். அன்றிரவு பன்னிரண்டு மணியள வில் அவ்வூர் நாடக குழுக்களினால் திருவிழாவை சிறப்பிக்கவும் இரவுப் பொழுதைப் போக்குமுகமாகவும் ஹாசிய, சமூக, புராண, நாடகங்கள்

மேடையேற்றப்படும். அது ஐந்து மணியளவில் நிறைவுபெற்று மக்கள் தங்கள் இடங்களுக்குச் செல்லுவர்.

**தவநிலைக்காட்சி**

பதினாறாம் நாள் திங்கள் காலையில் பிள்ளையார் ஊர்வலம், காலைப் பூசை, அதனுடன் காவடிகள், பாற்கட்டு, அக்கினிச்சட்டி, ஆகியவை இடம்பெற்று முடிவடைந்ததும், அருச்சுனன் பாசுபதம் எனும் அம்பைப் பெறுவதற்காகத் தவஞ்செய்யும் தவநிலைக் காட்சி இடம்பெறும். 28அடி நீளமான தவநிலைக்கம்பம் ஆலயமுற்ற வெளியின் தென்கிழக்கு மூலையில் முதலில் குழிகள் தோண்டப்பட்டு அதற்கு அருகில் தவநிலைக் கம்பத்தைகிடையாக வைத்து வெளிக்கொடிக் கம்பத்திற்கு செய்தவாறு கிரியைகள் செய்யப்படும். இக்கம்பத்தில் 10 படிகள் ஏறக்கூடியவாறு தடைகள் அமைக்கப்பட்டிருக்கும். உச்சியின் மேற்பகுதியில் ஒருமுனை கூறானதும் மறுமுனை மழுங்கிய அமைப்புடையதுமான சிவலிங்க வடி வான ஆவுடையார் இருக்கை ஒன்று கூறிய முனை கிழக்கு நோக்கியவாறு பொருத்தப்பட்டிருக்கும். அதனுடன் கூறான மேற்பகுதியில் தருப்பைப் புல் வைத்துக் கட்டப்பட்டிருக்கும். அன்று காலை ருத்திரா அபிஷேகம் நடைபெறுவதுடன் அம்பாள் உட்பட அனைத்துச் சுவாமிகளையும் அன்று சிறிது சிறப்பாகவே அலங்கரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நல்ல நேரம் பார்த்துப் பூசகர், அருச்சுனனாகப் பாவனையிலுள்ளவர், மேள வாத்திய இசைக்குழுவினர், ஊர்மக்கள் ஆகியோர் தவநிலைக்கம்பத்தை அடைந்து பூசகரினால் பூசை செய்யப்பட்டு அரோகரா, கோவிந்தா எனும் கோசத்துடன் தவநிலைக்கம்பம் ஏற்றப்படும். பின் இதற்கு பூசகரினால் காப்புக்கட்டி தூபதீபம் காட்டி முடிவடைந்ததும் சாட்டைக் கயிற்றைப் பூசகர் கழுத்தில் தாங்கிய வண்ணம் மேளவாத்தியப் பரிவாரங்களுடன் கோயிலை வலம் வந்து தீக்குளிப்பு இடத்திற்கான எல்லை நிர்ணயித்தல் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து பகல் பூசை நடைபெறும். பிற்பகல் மூன்று மணியளவில் அருச்சுனன் தவநிலைக் காட்சிக்குரிய ஆயத்தமாக காளி கோயிலுக்குச் சென்று அருச்சுனனாகப் பாவனை செய்பவர் தவவேடம் தரித்து வில்லும் அம்பராத்துணி சகிதம் பூசை தீபாராதனை பெற்று கோயிலை வலம் வந்து சூரிய, சந்திரர் கொடிகளைத் தாங்கிய வர்களும் கைமணி, பறைமேளம், ஆகியன முன்செல்ல வீதிகளில்

இடைக்கிடை அருச்சுனன் தவநிலைக்குரிய பாரதக்கதை படித்து விளக்கம் உரைக்கப்படும். பின் அங்கிருந்து தவநிலைக் கம்பத்தை அடைந்து அருச்சுனனாக தவக்கோலம் பூண்டவர் பத்து படிகளுக்கும் ஒவ்வொரு பாடல் வீதம் பாடி உச்சியை அடைவர். உச்சியில் கிழக்கு முகமாக இருந்து இறைவனை வேண்டித் தவம் செய்வார். ஒவ்வொரு பாடல் முடிவிலும், சங்கு, சேகண்டி, மத்தளம், கைமணி, மேளம் போன்றவை இசைக்கப்படும் பொழுது ஒரு படியில் இருந்து அடுத்த படிக்குக் காலடி எடுத்து வைப்பார்.

அருச்சுனன் பாசுபதம் அம்பைப் பெறுவதற்காக நெருப்பின் மீது ஒற்றைக்காலில் நின்று தவம் செய்யும் முறையைச் சித்தரிக்கக் கூடியவாறு அருச்சுனன் தவநிலைக் கம்பத்தின் உச்சியில் தவம் செய்யும் பொழுது அடியில் சிறு தீ மூட்டி எரிக்கப்படும். அருச்சுனனின் தவத்தை கலைக்கும் நோக்குடன் துரியோதனனால் ஏவப்பட்ட முகாசுரன் எனும் அரக்கன் பன்றி வேடம் தாங்கி வந்தபொழுது அருச்சுனனால் பாணங்கள் எய்து கொல்லுவதைச் சித்தரிக்கு முகமாக அருச்சுனன் மேலிருந்து மூன்று பாணங்களைக் கீழே எய்யப்பட்ட பின் அவன் இறந்ததாகப் பாவனை செய்து ஒருவரை நிலத்தில் கிடத்தி வெள்ளைத்துணியினால் மூடப்படும். இவ்வேளை சிவபெருமான் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களைப் பன்றிகளாக்கி பன்றிகளாகிய சிறுவர்கள் முன் செல்ல வேடுவ உருவத்தில் சிவனும், சக்தியுமாக அவ்விடத்தில் காட்சி யளிக்க இதனைக் கண்ட அருச்சுனன் தவநிலைக் கம்பத்தில் இருந்து இறங்கி இறைவன் தாழ் பணிந்து பாசுபதத்தைப் பெறுகின்றார். பின்னர் பன்றிகள் சகிதம் அருச்சுனன், சிவம், சக்தி, மக்கள் புடைசூழ ஆலயத்தை வலம் வந்து உட்சென்று தீபராதனையுடன் விபூதி பிரசாதம், பெற்றவுடன் அந்நிகழ்ச்சி நிறைவு பெறும். கோவிலின் பின் வெளிவீதியில் உறவினர் களினால் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்குப் பானங்கள் வழங் கப்படும்.

அதனைத் தொடர்ந்து ஏழாம் கரகமான தவநிலைக் கரகம் இடம்பெறும். இது இதுவரை நடைபெற்ற கரகங்களிலும் பார்க்க இன்று நடைபெறும் கரகம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். பக்தர்கள் கோயிலினுள் நிறைந்து வழிவர்.ஆலயத்தினுள் கரகத்தின் கும்மி நடனம் மும்முறை மூலஸ்தானத்தை நோக்கிச் சென்று பின் ஆலய முன் வாயிலில் இருந்து

குந்து கால் நிலையில் எச்சரிக்கைக்கு ஏற்றவாறு அசைந்து மூலஸ்தானத்தினுள் அடைந்ததும் திருக்கதவு சாத்தப்படும். பின் தீபராதனையுடன் திருக்கதவு திறக்கப்படும். இக்கரகம் தவநிலைக் கரகம் என்பதால் இதன்மீது நிறுத்தப்பட்ட வெள்ளி வாள் ஒரு நிமிடம் அல்லது ஒரு மணித்தியாலம் அல்லது ஒரு நாள் முழுவதும் செங்குத்தாக விழாமல் நிற்கலாம். ஆனால் முதலாவது கரகத்தில் இருந்து வாள் நிலைத்து நிற்கும் காலமும் அதிகரித்துச் செல்வதைக்காணலாம். இதனைப் பார்ப்பதற்காக பக்த அடியார்கள் மிகவும் பயபக்தியுடன், இருகரகம் சிரசின் மீது கூப்பிச் சென்று அம்பாளின் அனுக்கிரகத்தை பெற்றுச்செல்வதை நாம் இன்றும் காணமுடிகின்றது.

உடன் இரவுப்பூசை நடைபெற்று பிள்ளையார், ஸ்ரீ ருக்மணிசத்திய பாமா சமேதரர் ஸ்ரீ பர்த்தசாரதிப்பெருமாள் சகிதம் உள்வீதி வலம் வந்து மூஷிக வாகனத்தில் பிள்ளையார் முன் செல்ல பின்னால் புன்னை விருட்சத்தின் கீழ் ஸ்ரீ ருக்மணிசத்தியபாமா ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமானுடன் உள்வீதி வலம் வரும். மீண்டும் ஆலயத்தை அடைந்து தீபாராதனை விபூதி பிரசாதத்துடன் நடை சாத்தப்படும். இரவு, நாடகக் குழுக்களினால் இனிய நாடகங்கள் மேடையேற்றப்படும்.

**அக்கினி குண்டக்காவல்**

பதினேழாம் நாள் செவ்வாய்க்கிழமை காலை நடை திறந்ததும் பிள்ளையார் ஊர்வலம் காலைபூசை, ஒற்றைத்தீபத்துடன் காட்டப்பட்டு ருத்திராபிஷேகம் நடைபெறும். அதன் பின் தேவசபைக்கு முன்னால் அக்கினி குண்டக்காவல் திருவுருவச் சிலையை வைத்து ஓமம் வளர்த்து அபிஷேகம், அலங்காரம் செய்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அக்கினி குண்டக்காவல் தெய்வங்களான வடக்கு - வடபத்திரகாளி கிழக்கு - ஐயனார், தெற்கு - வைரவர், மேற்கு - வீரபத்திரர் ஆகியோர்களை மானிட வடிவத்தில் ஆரோகணம் பண்ணி புனிதப்படுத்தி வீரபத்திரர் திருவுருவச் சிலைக்கு சிவப்புப் பட்டாடை உடுத்தி அலங்காரம் செய்து விசேட பூசையுடன், அந்நால்வரையும் கொண்டு உருவச்சிலையை தூக்கி உள்வீதி வலம் வந்து உட்கொடிக்கம்பத்திற்கு முன்னால் மேடையமைத்து அதன்மீது வைக்கப்படும்.

ஆரம்பகாலங்களில் வீரபத்திரர் திருவுருவச் சிலைக்கு பதிலாக கருங்காலியினால் ஆன பொல்லு ஒன்றையே பாவனை செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பகல் சமனாபிஷேகம் நடைபெற்றுக் கொண் டிருக்கும்பொழுது அக்கினி குண்டக் காவல் தெய்வங்கள் நால்வரும் மாரியம்மன் ஆலயத்தில் ஆயத்தம் செய்து கொண்டிருப்பர். பூசை, தீபாராதனை பெற்று அங்கிருந்து பறை முழக்கத்துடன் கலியடிகம்பத்தின் இருமுனைகளையும், தமது இருகரத்தினால் பற்றிப்பிடித்துக் கொண்டு கொண்டு சன்னதத்துடன் பறை இசையொலிக்கு ஏற்றவாறு ஆடி, ஆடி வந்து கொண்டிருப்பர். ஆலயத்தை வலம் வந்து ஏற்கனவே தயார் நிலையில் உள்ள அக்கினிக்குண்டத்தில் நான்கு திக்கிலும், சிறிய மண் மேடையமைக்கப்பட்டு அவற்றின் மீது தென்னம்பாளையுடன் தென்னம் பூவும் இளநீர் காளாஞ்சி ஒரு ரூபா நாணயம் ஆகியனவும் வைக்கப் பட்டிருக்கும்.

அக்கினிக்குண்டகாவல் தெய்வங்கள் நால்வரும் பறையொலிக்கு ஏற்பதில்லை நடராஜர் ஒரு காலைத் தூக்கிய வண்ணம் திரு நடனம் ஆடுவது போன்று இரு கரங்களால் சங்கிட்டுத் தடியைப் பற்றிப் பிடித்துக் கொண்டாடுவர். பூசகர் முதலாவதாக அக்கினிக்குண்டத்திற்கு வடக்கு திசையாக இறுக்கும் மண்மேட்டின் அருகில் சென்று வட பத்திரகாளியை நினைத்து மந்திரங்களை ஓதி அவளின் சத்திய வாக்கைப் பெறுவார். அதனைக் குறிக்குமுகமாகசங்கிட்டு ஆடிய ஒருவர் ஓடிவந்து சங்கிட்டுத் தடியை மண்மேடையில் குத்தியவாறு மயங்கி விறைத்த நிலையில் விழுவார். உடன் பூசகர் தன் தோளில் கிடந்த சாட்டைக் கயிற்றினால் மயங்கியவரின் வலது மணிக்கட்டில் மும்முறை அடித்ததும் அவர் விறைத்த நிலையை அடைய அவரை ஆதரவாளர்கள் தூக்கி எடுத்துச் செல்லுவர். இவ்வாறு மற்றைய காவல் தெய்வங்களும், முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு எனும் ஒழுங்கு முறையில் அக்கினிக்குண்டகாவல் செய்து தாகசாந்தி தீர்க்கப்படும். அத்துடன் அன்று மாலை நடைபெறவுள்ள சயந்தவன் எனப்படும் தேத்தரசன் கோட்டைக்கான எல்லையை ஆலயத்தின் வடக்குப் புறமாகவும், நாடக மேடைக்கு முன்னாலும் நிர்ணயித்த பின்னர் கோயிலை வலம் வந்து பகல் பூசையுடன் நிறைவு பெறும்.

பிற்பகல் மகாபாரதத்தில் வரும் தேத்தரசன் கோட்டை பிடித்தல் காட்சி நடைபெறும். இதற்காக அன்று காலை தீர்மானிக்கப்பட்ட எல்லையில்

பூசகர், பக்கம் தேத்தரசனாகிய சயந்தவன் பாவனையில் உள்ள ஒருவரும் மத்தியில் இருக்க அவர்களைச் சூழ்ந்து நான்கு புறமும் கோட்டை வாயில் காவலர்களாக நான்கு சிறுவர்கள் வேடமிட்டு நிறுத்தப்படுவர். மகாபாரதக் கதை தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது இடைநடுவில் ஆலயத் தினுள் இருந்து கிழவி வேடம் பூண்ட மகாவிஷ்ணு தன் தலையில் கடகம் ஒன்றைத் தாங்கிய வண்ணம் கோட்டையின் காவலாளிகளுடன் இரகசிய மாகக் கலந்துரையாடி அவர்களைத் தன்பக்கம் இழுக்கும் சம்பவங்களும் காட்சியாக நடைபெறுவதைக் காணலாம்.

இவ்வேளை நகுலன், அபிமன்யு உடன் குதிரைப்பாகன் இருவருமாக அதற்காக வடிவமைக்கப்பட்ட பொய்க்கால் குதிரையில் பறையொலியுடன் காளி கோவிலில் இருந்து பூசை பெற்று வீதி நடுவில் ஆடிவந்து தேத்தரசன் கோட்டையை மும்முறை வலம் வந்து முற்றுகையிடுவர். அப்பொழுது தேத்தரசனைப் பக்தர்கள் கைத்தாங்கலாக ஊர்மக்கள் அரோகரா, கோவிந்தா எனும் கோசம் எழுப்ப ஆலய வெளிவீதி வலம் வந்து கோவிலினுள் சென்று தீபாராதனை, தரிசனம் பெற்று மயக்கம் தெளிந்ததும், விபூதி பிரசாதம் பெற்று உறவினர்களினால் பானம் வழங்கப்படும். இரவுப் பூசை நடைபெற்று சுவாமி ஊர்வலத்தில் பிள்ளையாரும், முருகனும் மூஷிக வாகனத்திலும் ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேதரர் ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமாள் ஆதி சேடன் பாம்பின் மீது சயனம் செய்தவாறு காட்சியளிப்பார். ஊர்வலம் நடைபெற்று பூசையுடன், விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு, அன்றைய நிகழ்ச்சி நிறைவுபெறும். அதனைத் தொடர்ந்து நாடகக் குழுக்களின் நாடக நிகழ்ச்சி நடைபெறும். இதேவேளை மறுநாள் நிகழ்ச்சிகள் அதிகாலையிலேயே ஆரம்பிக்க இருப்பதனால் அதற்கு முன்னேற்பாடாக எல்ல மூர்த்தங்களுக்கும் சந்தனக்காப்பிட்டு அலங்கரிக் கப்பட்டிருக்கும். ஆலயத்தின் உள்வீதி புதிய மகர தோரணங்களினால் அலங்கரிக்கப்படுவதுடன் வீரபத்திரர் திருவுருவச் சிலைக்கு முன்னால் வசந்த மண்டபத்திற்கு எதிரிலும் ஓமகுண்டங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

### தீக்குளிப்பு

பதினெட்டாம் நாள் புதன் கிழமை அதிகாலை சுமார் நான்கு மணியளவில் திருக்கதவு திறக்கப்படும். ஊர்மக்கள் 2.00 மணிக்கெல்லாம் சிறுவர்,

சிறுமியர் வயது முதிர்ந்தவர்கள் குளிர் என்றும் பாராது நீராடி பட்டாடைகள் அணிந்து ஆலய வாசலின் முன் குழுமி நிற்பர். திருக்கதவு திறந்ததும் சனத்திறள் ஆலயத்தினுள் நிரம்பி வழியும். மேலும் ஆலயத்தினுள் செல்ல முடியாதோர் வாயிலின் முன்னால் காத்து நிற்பர். சுருங்கச்சொல்லின் அன்று உடப்பு நகர் முழுவதும் ஒரு விழாக்கோலம் பூண்ட நிலையிலேயே காணப்படும். மக்கள் யாவரும் ஒரு இனம் புரியாத ஆனந்தக்களிப்பிலும் பக்திப்பரவசத்திலும், திளைத்திருப்பதைக் காண முடியும். 4.30 மணி யளவில் சாதாரண பூசை நடைபெறும் பிரதான ஆலயக் குருக்களினால் புண்ணியான வேலைகள் ஆயத்தப்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கும் ஓமத்திற்குரிய தீ மூலஸ்தானத்தில் திரௌபதியம்மனுக்கு முன்னிலையில் பதினெட்டு நாட்களாகத் தொடர்ந்து இரவு பகலாக எரிந்து கொண்டிருக்கும் தூண்டாமணி விளக்கிலிருந்து பூசகரின் திருக்கரத்தினால் தீச்சுடர் எடுத்துக் கொண்டு வந்து ஓமத்தீ வளர்க்கப்படும். இவ்வேளை ஆலயத்தைச் சுற்றி யுள்ள ஒவ்வொரு திசைக்கடவுளுக்கும், சுற்றுப்பலியிடுதல் நடைபெறும். அம்பாளாகிய பூசகர் முதலில் பிள்ளையார் சந்திதானத்திலும், அடுத்து முத்தாளராஜன், போசராஜன் எனப்படும் காவல் தெய்வங்களையும் முருகனையும் வழிபட்டுப் பின் மூலச்தானத்திலுள்ள நாராயணனையும், இறுதியாகத் திரௌபதியம்மனையும் வணங்கி அருள் வேண்டுவர். அப்பொழுது ஆலயத்தின் உள்ளும் புறமும் உள்ள பக்த அடியார்கள் கோவிந்தா, அரோகரா எனும் கோசங்கள் இடைவிடாது எழும்பொழுது கல் மனதுடைய நாஸ்திகனையும், மெய் சிலிர்க்கச் செய்யும். இக்கோசம் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும்.

பூசகராகிய அம்பாள் சன்னதத்துடன் கூடிய அனந்தல் நிலையில், கூப்பிய கரங்களுக்கு இடையில் வெள்ளிப்பிரம்பு இருக்கத்தக்கவாறு மூலஸ்தானத்திலிருந்து விரிக்கப்பட்ட நிலப்பாவாடை மீது வந்து ஓமத்தீ வளர்க்கப்பட்ட இடத்தில் நிற்க வயது முதிர்ந்தவரும், இந்து இல்லர வாசியுமாகிய ஒருவர் விபூதித் தட்டை தாங்கியவாறு மிகவும் பணி வுடனும், பயபக்தியுடனும் தாயே ஊர்மக்களைக் காப்பாற்று என வேண்டும் பொழுது கோயில் முழுவதும் ஊசி விழுந்தால் கூட சத்தம் கேற்கும் அளவிற்கு நிஷப்தமாகிவிடும். அதற்கு அம்பாள் ஒன்றுக்கும் பயப் படாதே! காப்பாற்றுகின்றேன் என சத்தியவாக்கை உரைத்ததும் அரோகரா, கோவிந்தா எனும் கோசம் மீண்டும் வானைப்பிளக்கும் அளவிற்கு எழும்.

இவ்வேளை ஓமகுண்டத்தில் தகதகவென எரிந்து கொண்டிருக்கும் செந்தனலைப் பூசகர் தனது இரு திருக்கரத்தினால் பூவை வாரி அள்ளி எடுப்பது போன்று மிகவும் ஆறுதலாகவும், பக்குவமாகவும் அள்ளி எடுத்து ஏற்கனவே ஆயத்தப்படுத்தப்பட்டதும் பூமாலையினால் அலங்கரிக் கப்பட்ட அக்கினிச் சட்டியின் மீது வைப்பார். அதனை ஒரு கையில் ஏந்திய வண்ணமும் மறு கையில் வெள்ளிப்பிரம்புடனும் நிலப்பாவாடை விரிக்கப்பட்ட உள்வீதி, வெளிவீதிகளிலும் மேளம்,நாதஸ்வரம் ஒலியுடன் மக்களின் அரோகரா, கோவிந்தா எனும் கோசத்துடனும் வலம் வந்து தாமரைப் பூவிதழ்களினால் பஞ்சணையிடப்பட்ட அக்கினிக்குண்டத்தின் மத்தியில் அக்கினிச் சட்டியை வைத்ததும் பாண்டவர்களின் கொழுந்தன் கொடி அருகில் நாட்டப்படும். அக்கினி குண்டங்களின் நான்கு மூலை களுக்கும் பூசகரினால் பூசை செய்து அக்கினிச் சட்டியை சூழ்ந்து முதலில் சிறிய புளியம் சுல்லிகளினால் தீவளர்க்கப்பட்டு படிப்படியாக அதன் மீது உயரத்தாலும், பருமனாலும் அதிகரித்த பாரிய புதிதாக வெட்டப்பட்ட புளியம் கட்டைகள் அடுக்கப்பட்டு தீ வளர்க்கப்படும். தீ இலகுவாக எரிவதற்கு விளைகற்பூரம், நெய் என்பன மெய்யடியார்களினால் அதன் மீது இடப்படும்.

இவ்வாறு தீவளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை அக்கினிக் குண்டத்தின் மேற்கில் மகாபாரதக்கதை படிக்கப்படும். கதையில் அக்கினிக் கடவுளாகிய வீரபத்திரர் கிருஷ்ணனிடம் சங்குபதி திருமணம் செய்வ தற்காக சீதனம் கேட்கும் சம்பவமும் உரைநடையில் இடம்பெறும். அதில் மலையளவு சாதமும் பனையளவு கடாயும் கொடுப்பதைக் காட்டுமுகமாக அவ்விடத்தில் சாதம் சிறிதளவு வைத்து கருங்கிடாய் ஒன்றை நிலத்தில் அடித்ததும் இறந்த நிலை போன்று கிடக்கும். பின் பூசகர் தன் கழுத்தின் மீதுள்ள சாட்டைக் கயிற்றினால் கிடாயின் மீது மும்முறை அடிக்க கிடாய் சுய நினைவடைந்து எழுந்து செல்வதையும் இன்றும் காண முடிகின்றது. இந்நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும் பூசகர் சாட்டைக் கயிற்றைக் கழுத்தில் தாங்கியவண்ணம் மேளதாள வாத்தியங்களுடன் அன்றைய பதினெட்டாம் நாள் துரியோதனனின் படுகளத்திற்கான இடத்தைத் தீர்மானித்து அவ் விடத்தில் சூரியக் கொடியை நாட்டி விட்டு ஆலயத்தை அடைவர்.

ஆலயத்தின் பந்தலில் இருவர் எதிரும்புதிருமாக இருந்து கொண்டு மகாபாரதத்தில் பதினெட்டு நாள் யுத்தம் பற்றிய வருணனையை பாடலும்,

பொழிப்புமாக படிப்பர். அவ்வேளை ஊர்மக்கள் அனைவரும் அர்ச்சனைத் தட்டுகள் கொடுத்து வசந்த மண்டபத்தில் அலங்காரமாக வீற்றிருக்கும் இறைவி அருள் பெற்றுச் செல்லுவர். இதேவேளை அக்கினிக்குண்டத்தில் தொண்டர் அடியார்களினால் பெரிய புளியங்கட்டைகளை விரைவில் எரிப்பதற்காகப் பாரிய இரும்புச் சங்கிலிகள், நீண்ட மரத்தடிகளினால் புரட்டி எடுத்துக்கொண்டிருப்பர். இத்தொன்டர்கள் சுட்டெரிக்கும் சூரிய, செந்தணல் வெப்பத்தையும் பொறுப்படுத்தாது அன்று முழுவதும் செந்தணல் செப்பனிடுவதிலேயே காலத்தைக் கழிப்பர். 9 அடி நீளமும், 4.5 அடி அகலமும் 1.5 அடி உயரமும் உடையதான அக்கினிக்குண்டம் இறுதியாக செந்தணல் செப்பனிடப்பட்டதும், சுமார் 12 நீளமும் 8 அகலமும் உடையாதவும் இருக்கும். மாலை மூன்று மணியளவில் காலையில் படுகளத்திற்கு தீர்மாணிக்கப்பட்ட இடத்திற்கு; துரியோதனன் பாவனையிலுள்ள ஒருவரும், வீமன் பாவனையில் கதாயுதத்துடன் ஒருவரும் விழாவுக்கு முக்கிய பங்கு வகிக்கின்ற பூசகரும், கொழுந்தக் கொடி தாங்கியவரும் மணி, மேளவாத்தியங்கள்சகிதம் ஆலயத்தை வலம் வந்து அவ்விடத்தை அடைவர். இவ்விடம் மகாபாரதத்தில் ஸ்கந்தபஞ்சம் என்றும் அழைக்கப்படுகின்றது. ஊர்மக்கள் அனைவரும், சூழ்ந்திருக்க பதினெட்டாம் நாள் யுத்தம் பற்றிய கதை படிக்கப்பட்டு வீமன் பாவனையில் உள்ளவர் கதாயுதத்தினால் துரியோதனனின் தொடையில் அடித்ததும் விரிக்கப்பட்ட வெள்ளைச்சீலையின் மீது துரியோதனன் மயங்கிக் கிடப்பான். இவ்வேளை பூசகர் ஆலயத்தினுள் சென்று மஞ்சள் உடை யுடுத்தி சம்சாடுடன் தன்னை திரௌபதியம்மனாகப் பாவனை செய்து கொண்டு வருவார். அங்கு மயங்கிக் கிடப்பவரின் நெஞ்சில் சம்சாடினால் கீறி இரத்தத்தை எடுத்து தனது தலையில் தேய்த்து சபதத்தை நிறைவேற்றும் காட்சி இடம்பெறும்

மயங்கிய நிலையில் உள்ளவரை இருவர் கைத்தாங்கலாகத் தமது தோளின் மீது தாங்கிய வண்ணம் மக்களின் அரோகரா, கோவிந்தா கோசத் துடன் ஆலயத்தின் வெளிவீதி, உள்வீதி வலம் வந்து மயக்கம் தெளியும் வரை அரோகரா, கோவிந்தா கோசம் எழுப்பியவாறு இறைவியை வேண்டுவர். விபூதிப்பிரசாதத்துடன் அந்நிகழ்ச்சி நிறைவு பெறும். அதனைத் தொடர்ந்து பரிவாரங்களுக்குப் பூசையுடன் வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். பூசையின் முடிவில் என்றும் இதுவரை ஊர் வலத்தில் பங்கு பெறாத கொலுவிருக்கும் திரௌபதியம்மன் மிகவும்

அலங்கரிக்கப்பட்ட நிலையில் முதலில் பிள்ளையார், முருகன் முன் செல்ல அதன் பின் பள்ளி கொண்ட பெருமானும், அம்பாளுமாக உள்வீதி வலம் வந்து வெளியே வைக்கப்பட்டிருக்கும் மூசிக வாகனத்தில் பிள்ளை யாரும், முருகனும், சப்பரத்தில் திரௌபதியம்மனும், ஐந்து தலை நாகத்தில் பள்ளி கொண்ட பெருமாளையும் எழுந்தருளச் செய்யப்படும். பக்தர்கள் மேல்சட்டை அணியாது மிகவும் பக்தியுடன் சுவாமிகளைத் தோளில் சுமந்து, பலவர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை ஒருவர் தலையில் சுமந்தவண்ணம் மெதுவாக இவைகளுக்கு முன்செல்ல பக்தர்களின் அரோகரா, கோவிந்தா ஓசை பொலிந்தவாறு வெளிவீதி வலம் வந்து ஆலயப்பந்தலின் முன் அக்கினிக்கிடங்கை. நோக்கியவாறு இருத்தப்படும். உடன் பஞ்சாலாத்தி காட்டப்பட்டு மஞ்சளில் தோய்க்கப் பட்ட வேட்டியணிந்த பூசகர் அக்கினிக் கரகத்தை தாங்கியதும் அரோகரா, கோவிந்தா எனும் கோசத்துடன் சகல வாத்தியங்கள் முன்செல்ல மாரியம்மன் ஆலயத்தை அடையும். இந்த கரகத்தி னுள் வெள்ளை அரிசி, மஞ்சள், ஒரு ரூபா நாணயம், வெற்றிலை, பழம், பாக்கு ஆகியவை இடப்பட்டிருக்கும். இவ்வேளையில் ஆலய முற்றவெளியில் இன, மதபேதமின்றி அந்த கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்காக சனத்திரள் வெள்ளம் நிரம்பி வழியும், மறுபுறம் அக்கினிக் கிடங்கைச் செப்பனிட்டு அச்செந்தணல் மங்காமல் இருப்பதற்காக அன்பர் இருவர் புதிய சுழகு கொண்டு இரு மருங்கிலும் கரகம் வரும்வரை, காற்று வீசிக்கொண்டிருப்பர்.

மாரியம்மன் கோயிலை அடைந்தவர்கள் அதாவது மதத்தால், மொழியால், இனத்தால், கலாச்சாரப் பண்புகளால் வேறுபட்டவர்கள் கூட விரதம் இருந்து கடல் நீராடி, நன்னீரில் குளித்து, விபூதி, மஞ்சள், சந்தனம் போன்ற மங்களப் பொருட்களினால் தங்கள் உடலைப் புனிதப்படுத்தி உருத்திராக்க மாலை அணிந்து கையில் அம்பாளின் திருப்பாதத்தில் வைக்கப்பட்ட நூலினால் காப்புக்கட்டப்பட்டவர்களாக காணப்படுவர். பூசகர் மூலஸ்தானத்தினுள் சென்று அம்பாளின் அனுக்கிரகத்தை தீபராதனையுடன் பெற்று அக்கினிக் கரகத்தை தலையில் சுமந்து கொண்டு பக்தர்களின் அரோகரா, கோவிந்தா கோசம் விண்ணைத்தொடும் அளவு எழவும் திரௌபதியம்மன் ஆலயத்தை நோக்கி வரும் பொழுது சகல வாத்தியங்களும் முன்செல்ல கரகமானது ஆனந்தக்களிப்பில் வீதியில் நடனமாடியவாறு செல்ல பின்னால் தீக்குளிக்கும் பக்தர்கள் தங்களை அறியாமலே ஒருவித இனம் புரியாத பக்திப்பரவசத்துடன் மேல்சட்டை

இல்லாமல் சங்கிலிக் கோர்வை போன்று மிகவும் நெருக்கமாக அரோகரா, கோவிந்தா கோசத்துடன் வந்து கொண்டிருப்பர்.

கோயிலின் முற்ற வெளியில் மக்கள் நடமாட முடியாதவாறு சன நெருக்கமாகவும், தீக்குளிக்கும் காட்சியைக் காண்பதற்காக மக்கள் வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருப்பர். அக்கினிக் கரகம் தீக்கிடங்கை நெருங்கியதும் பக்தர்கள் சிரசின் மீது இருகரம் கூப்பி அரோகரா, கோவிந்தா கோசம் எழுப்ப கரகமானது பூவின் மீது நடப்பது போன்று மிகவும் அமைதியாக நடந்து செல்லும். அதனைத் தொடர்ந்து பக்த அடியார்களும் ஒருவர் பின் ஒருவராக தீக்குளிப்பர்.இவற்றில் தீக்குளிப்பது ஆண் பக்த அடியார்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. நேர்த்திக்கான கைக்குழந்தைகளைப் பெரியவர்கள் தோளில் சுமந்துகொண்டும் தீக் குளிப்பர். இவ்வேளை கரகமானது, பக்தர்களை ஆசீர்வதிக்கும் பொருட்டு அருகில் ஆனந்தக்களிப்பில் அங்கும் இங்குமாக நடனமாடும்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் அனற்குலத்தில் நடனமாடி தமது இம்மைப் பிணிகளைத் தீர்த்துக்கொள்வர். இறுதியாக சூரியன் கொடியைத் தாங்கியவர் இறங்கியதும் தீக்குளிப்பாகிய பூமிதிப்பு நிறைவு பெறும். உடன் பக்தர்கள் தமது கையிலுள்ள எழுமிச்சம் பழங்களை விண்ணை நோக்கி எறிந்து பற்றிப் பிடிப்பர். அத்துடன் நேர்த்திக் கடன்காரர்கள் தீக்கிடங்கினுள் உப்பிட்டு நேர்த்திகளை நிறைவு செய்வர். அதன் பின் தீக்கிடங்கினுள் யாரும் இறங்குவது இல்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். கொடி இறங்கியதும் அவர் மயக்க நிலையை அடைவார். தலையிலுள்ள அக்கினிக்கரகம் இறக்கப்பட்டு சுவாமிக்கு முன்னால் வைக்கப்படும். குருக்களினால் சுவாமிகளுக்கு பஞ்சாலாத்தி காட்டப்பட்டு விபூதி பிரசாதம் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து பக்தர்களினால் அர்ச்சனை செய்யப்படும்.

பதினெட்டு நாட்களாக விரதம் இருந்து ஆலயத்தில் தங்கியிருந்த பூசகரை ஆலய பரிபாலன சபையினர் அவரின் இல்லத்திற்கு, மேள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்வர். செல்லும் வழியில் பூசகருக்கு மக்கள் தட்சணையிட்டு பாத நமஸ்காரம் செய்வர். வீட்டு வாசலில் நிறைகுடம் வைத்து பூசகரை வரவேற்பர். அன்றிரவு வெளியூர்களில் இருந்து வந்திருக்கும் பெருந்திரளான மக்களை வரவேற்கும் முகமாக நாடகக் குழுக்களினால் நாடகங்கள் மேடையேற்றப்படும்.

**தருமர் பட்டாபிஷேகம்**

பத்தொன்பதாம் நாள் வியாழன் காலை வெளிப்பந்தலினுள் இருத்தப் பட்டிருந்த திரௌபதியம்மனைப் பந்தலினுள்ளும் மற்றைய பரிவாரங் களான பிள்ளையார், முருகன், பள்ளி கொண்ட பெருமான் ஆகியோர் களை ஆலயத்தின் வசந்த மண்டபத்திலும் கொண்டிருத்துவர். பகல் பூசை நடைபெறும் மாலை வெளிப்பந்தலின் கீழ் இருத்தப்பட்ட அம்மனை அலங்கரிக்கப்பட்டு முத்துச் சப்பரத்தில் எழுந்தருளச் செய்து அவற்றின் இரு பாகங்களிலும் சூரிய சந்திரர் கொடிகளும்,கொழுந்தன் கொடி, மத்தியில் கரகம், பூசகரும், ஆலயக்குருக்களும் சுவாமிக்கு இரு மருங்கிலும் இருந்து தீபாராதனை காட்டப்பட்டதும் பக்தர்களினால் அர்ச்சனைத் தட்டுகள் கொடுத்து ஆசி பெறுவர். பின்னர் இரவு ஒன்பது மணியளவில் சுவாமி, கோயிலை வலம் வந்து ஊர்வலம் செல்லும். முன்னால் தீவட்டி சகிதம் இடையிடையே நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறும். வீதிகள் இருமருங்கும் மகா தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வீட்டு வாயில்கள் தோறும் நிறைகுடங்களும் வரவேற்பு பந்தல்களும் அமைக்கப்பட்டு, அர்ச்சனைத் தட்டுகள் கொடுத்து அம்பாளின் அனுக் கிரகத்தைப் பெற்றுய்வர். இவ்வாறாக காளி கோயில், மாரியம்மன் கோயிலை அடைந்து தீபாராதனை பெற்று மீண்டும் அங்கிருந்து பாதையி னூடாக வந்து காளி கோவிலையடுத்து முதலாவதாகவுள்ள நாற்சந்தியின் கிழக்குப் புறமான பாதையினூடாக திரௌபதியம்மன் ஆலயத்தை இரவு பன்னிரண்டு மணியளவில் வந்தடையும். இவ்வேளை சுவாமிக்குப் பின்னால் கன்னியர்களும், சுமங்கலிப் பெண்டிரும் மாவிளக்கு தாங்கிய வண்ணம் பக்தர்கள் புடை சூழ வந்து கொண்டிருப்பர்.

ஆலயத்தை வந்தடைந்த அம்பாளுக்கு ஆலய குருக்களினால் பாய தீர்த்தம் வழங்கப்பட்டு வேத மந்திரங்கள் ஒலிக்க வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளச் செய்ததும் பஞ்சாலாத்தி காட்டப்பட்டதும் திரை மூடப்படும். உடன் பாரதக்கதையில் வரும் தருமர் பட்டாபிஷேகம் பூசகரினால் கதையாகப் படிக்கப்படும். அம்பாளுக்கு முன்னால் கன்னியர்கள், சுமங்கலிப் பெண்டிராலும் தயார் செய்யப்பட்ட மாவிளக்குகள் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். உட்கொடித்தம்பத்திற்கு அருகில் தருமருக்குரிய பட்டாபிஷேகம் கதையாகப் படிக்கப்பட்டு கதையில் ஆணையிட்டேன்... எனும் பாடலைப் பாடி உட்கொடியை மெதுவாக இறக்கி பெரிய செப்புத்

தாம்பாளத்தின் மீது வைக்கப்பட்டு அதனுடன் மூலஸ்தான அம்பாள், உட்சவ அம்பாள், கைமணி, ஏடு, கொழுந்தன் கொடி, வீரபத்திரர் வெளிக் கொடிக்கம்பம், தவநிலைக்கம்பம் ஆகியவற்றில் கட்டப்பட்ட காப்புகள் பூசகரினால் அறுக்கப்பட்டு கொடிச்சீலையுடன் வைத்து பிரதான ஆலய பட்டையத்தாரின் தலையில் முண்டசுத்துணி கட்டி அதன் மீது வைத்துத் தாங்கியவாறு ஆலய மணியொலிக்க கோவிந்தா எனும் கோசத்துடன் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து பிள்ளையார் சந்நிதானத்தின் முன் தாம்பாளத்தட்டை வைத்ததும் தருமர் பட்டாபிஷேகப் பூசை பிள்ளையார் தொடக்கம் வசந்த மண்டபம் வரையுள்ள சுவாமிகளுக்கு ஆலயக் குருக் களினால் நிகழ்த்தப்படும். அம்பாளுக்கு விஷேட சோடசோபசாரப் பூசை, மாவிளக்குப் பூசைகளும் அதனைத் தொடர்ந்து பெண்களின் மாவிளக்கு அருச்சனைகளும் தேவாரம், திருவூஞ்சல் பாட்டு, என்பனவற்றுடன் நிலப்பாவாடை விரித்து வசந்த மண்டபத்தில் சகல அலங்காரத்துடனும் வீற்றிருக்கும் அம்பாளை அர்த்தமண்டபத்தில் கொண்டிருத்தச் செல்லும் வேளை பெண்களின் திருக்கரத்திலுள்ள தாமரைப் பூவிதழ்களினால் மலர் மழை பொழியும்.

இவை நிறைவுற்றதும் மகாமண்டபத்தில் ஒரு குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கும். அதன் அருகில் சிறிதளவு பச்சையரிசி, பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை ஆகியன வைக்கப்பட்டிருக்கும். பூசகர் மகாவிஷ்ணு, திரௌபதியம்மாள் ஆகியோரிடம் சென்று வேண்டுதல் பெற்று அவ்விடத் தில் வந்திருப்பார். அவரின் கையிலுள்ள காப்பை ஆலய குருக்களினால் அவிழ்த்ததும் பூசகருக்கு விபூதி, பிரசாதம், காளாஞ்சி வழங்கப்படும். பின் பூசகர் குருக்களின் திருப்பாதங்களில் வீழ்ந்து பாத நமஸ்காரம் செய்து உள்வீதி, வெளிவீதி வந்ததும் தருமர் பட்டாபிஷேகம் இனிது நிறைவு பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை பகல் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

இங்கு நடைபெறும் விழா, மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மரபு ரீதியானதாகும். விழாவில் அனைத்து நிகழ்ச்சிகளும் காட்சி களாக சித்தரிக்கப்பட முடியாது. எனவேதான் சில பகுதிகள் நன்கு வேடமிடப்பட்ட காட்சிகளும், மிகுதி கதையுமாக இடம்பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஆரம்பகாலங்களில் எழுந்தருளிய திருவுருவச் சிலைகள் இன்மையினால் இறைவியை கரகக்கும்பங்களில் தாபித்து



திரௌபதையம்மனும், உயர்திரு பரந்தாமன் சுவாமியும்

வழிபட்டு வந்துள்ளனர் எனலாம். மற்றும் தெய்வம் சந்தோசமாகவும், ஆனந்தமாகவும் இருந்தால்தான் ஊர் மக்களும் மகிழ்ச்சியாக இருப்பர். எனும் நோக்குடன் கரகம் முக்கிய சந்திகளில் கும்மி நடனம் ஆடியிருக்க வேண்டும் என்பதையும் உணரமுடிகின்றது. இத்தீக்குளிப்பு விழா இலங்கையில் வேறு பிரதேசங்களிலும் நடைபெற்றாலும் அவற்றையெல்லாம் விட இவ்வூர் மக்களின் நாட்டார் இலக்கியத்தை பெரிதும் தழுவி நடைபெறுவதன் மூலம் சிறப்புப் பெறுகின்றது.

# 10

## ஒன்றிணைக்கும் நாட்டாரிலக்கியங்கள்

பாட்டாளி மக்களாகிய நாட்டுப்புற மக்களின் அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு துறையே நாட்டாரியலாகும். இது முன்னைப் போலன்றி அனைவராலும் விரும்பபடுகின்ற ஒரு துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டாரிலக்கியங்கள் என்பது இதன் வகைப் பாடுகளுள் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. நாட்டுப்புற அல்லது கிராமப்புற எழுத்தறிவற்ற மக்கள் தமது வேலை நேரங்களில் வேலைப்பளுவை போக்கிக் கொள்வதற்காகவும், ஒய்வு நேரங்களிற் பொழுதை இன்பமுடன் கழிப்பதற்காகவும், கொண்டாட்டங்கள், விழாக்கள் போன்ற களியாட்ட நிகழ்ச்சிகளைச் சிறப்பிப்பதற்காகவும் தமது உள்ளத் தில் எழுகின்ற உணர்ச்சிகளுக்கு உருக்கொடுத்து, தாம் அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்திப் புனைந்து கொள்ளுகின்ற பாடல்கள், பழமொழிகள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள் என்பனவே நாட்டரிலக்கியங்களாகும்.

உலகளாவிய ரீதியில் நோக்கும் பொழுது நாட்டாரியல் ஆய்வு முயற்சிகளும், சேகரிப்பு முயற்சிகளும், பல்கிப் பெருகி வளர்ந்து வருகின்றன. எனினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையைப் பொறுத்தவரை நாட்டாரியல் ஆய்வு முயற்சிகளோ, சேகரிப்பு முயற்சிகளோ, இன்னும் குறிப்பிடத்தக்க அளவு பெருகவில்லை எனலாம்.மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், மலையகம் போன்ற பகுதிகளில் நாட்டாரியல் தொடர்பான சேகரிப்பு முயற்சிகள், ஆய்வு முயற்சிகள் என்பன ஓரளவிற்கு நடைபெற்றுள்ளன, நடைபெற்று வருகின்றன. ஆயினும் சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளில் நாட்டாரியல் தொடர்பான சேகரிப்பு முயற்சிகளோ, ஆய்வு முயற்சி களோ இதுவரை நடை பெற்றிருப்பதாக அறிய முடியவில்லை.

உடப்பிலும் பல்வேறு காரணங்களினாலும் ஏறத்தாள கடந்த இரண்டு தசாப்த காலம் வரை நாட்டாரிலக்கியங்கள் பற்றியோ நாட்டாரியலின் ஏனைய கூறுகள் பற்றியோ சேகரிப்பு முயற்சிகளோ, ஆய்வு முயற்சி

களோ நடைபெறவில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலை காரணமாகவும், தேவை காரணமாகவும் நாட்டாரியல் தொடர்பான ஆய்வு முயற்சிகளும், சேகரிப்பு முயற்சிகளும் ஓரளவு நடைபெற்று வருகின்றன. குறிப்பாக திருமதி.பி.தேவகுமாரி உடப்புக் கிராம நட்டாரிலக்கியங்கள் பற்றிய ஆய்வு கட்டுரைகளையும், திருமதி.வே. அம்பிகை உடப்பு, பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவில்களில் பாடப்படும் மகாபாரதக் கதைப்பாடல்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும், திரு.கி. ஸ்ரீஸ்கந்தராசா உடப்பூர் நாட்டாரிலக்கியங்கள், மொழிகள் பற்றிய பல ஆய்வு கட்டுரைகளையும், திரு. வீர சொக்கன் உடப்பூரும், திரௌபதி அம்மன் தொடர்பான பல கட்டுரைகளையும், புத்தகங்களையும் எழுதியுள்ளனர். அத்துடன் எங்கள் வில்லிசை வேந்தன் அமரர் பெரி. சோமாஸ்கந்தர் உடப்பு நாட்டாரியல், மகாபாரதக் கதை தொடர்பாக பல வில்லுப்பாட்டுகளையும் அரங்கேற்றி யுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் உடப்பு கிராம நாட்டாரிலக்கியங்கள் பற்றி நோக்கு கின்ற பொழுது, அவற்றைப் பின்வருமாறு ஐந்தாக வகைப்படுத்தி நோக்கலாம். பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் என்பன. நாட்டார் பாடல்கள் தமது இயல்புக்கேற்ப வாய்மொழிப்பாடல்கள், பாமரர் பாடல்கள், எழுதாக் கவிதைகள் எனப் பல்வேறு பெயர்களைப் பெறுகின்றன. இவை நாட்டுப்புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையின் ஒவ்வொரு கட்ட நிகழ்வையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. அவர்களின் வாழ்வில் ஏற்படும் இன்பத்தின் குதூகளிப்பையும், துன்பத்தின் அவலத்தையும் இப்பாடல்களின் மூலம் கண்டு கொள்ளலாம்.

எவ்வித கட்டுப்பாடுகளுக்குள்ளும் அடங்காமல் வாய்மொழியாகப் பிறந்து வாய்வழியாக வாழ்ந்து வளர்ந்து வரும் நாட்டார் பாடல்களை வகைப்படுத்துவதென்பது சற்றுச் சிரமமான காரியமே. எனினும் நாட்டாரியல் ஆய்வாளர்கள் பலரும் நாட்டார் பாடல்களைப் பல்வேறு விதமாக வகைப்படுத்தியுள்ளனர். உடப்பு கிராம நாட்டார் பாடல்களை நாம் ஆராயும் பொழுது அவற்றைப் பின்வருமாறு ஆறாக வகைப் படுத்தலாம். வழிபாடு தொடர்பான பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழிற் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், காதற் பாடல்கள் என்பனவாம்.

**வழிபாடு தொடர்பான பாடல்கள்**

இக்கிராமத்தில் வாழும் மக்களின் ஒரு பகுதியினர், இந்தியாவில் இராம நாதபுர மாவட்டத்தில் இராமேஸ்வரத்திலிருந்து பல்வேறு காரணங் களினால் இடம் பெயர்ந்து பல இன்னல்களின் மத்தியில் இலங்கையை அடைந்துள்ளனர். அதன் பின்னர் மன்னார் தொடக்கம் முந்தல் வரை இவர்களது இடப்பெயர்வும் குடியமர்வும் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு பல துன்பங்களையும் அனுபவித்த இம் மக்களிடம் அவர்களுடைய வழிபாட்டம்சங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் வலுவடைந்து வந்துள்ளன. அதனால் வழிபாடு தொடர்பான பாடல்கள், கதைப்பாடல்கள் என்பன இக்கிராமத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்ற நாட்டாரிலக்கியப் பிரிவுகளாக உள்ளன. இவை மாற்றமின்றியும் திரிபுகளின்றியும் வழங்கப் பட்டு வருவதைக் காணலாம்.

மாரியம்மன், காளியம்மன், திரௌபதை அம்மன் வழிபாடுகள் இக்கிராம மக்களிடத்தில் ஆதியிலிருந்தே முக்கியத்துவம் பெற்றுவரும் வழிபாடுகளாக உள்ளன. திரௌபதையம்மன் ஆலயம் இன்று திருத்திய மைக்கப்பட்டுப் பிராமணரால் பூசை செய்யப்பட்டு வருகின்ற பொழுதும் திரௌபதையம்மனுக்காக ஆதியில் இருந்து நிகழ்த்தப்பட்டு வரும் கிராமிய வழிபாட்டம்சமாகிய தீமிதிப்பு விழாவும் அதனுடன் தொடர் புடைய விழாக்களும் அவ்வேளையில் பாடப்பட்டு வரும் பாடல்கள், கதைப்பாடல்கள், தெருக்கூத்து முறையிலான நிகழ்ச்சிகள் முதலியனவும் எவ்வித மாற்றமுமின்றி அன்று போல் இன்றுவரையும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. திரௌபதை அம்மன், மாரியம்மன், ஆலயங் களைத் தவிர ஏனைய காளியம்மன், ஐயனார், நாகதம்பிரான், ஐயப்பன், இராக்குரிசி, முத்துமாரியம்மன் ஆலயங்களும் இன்று திருத்தி அமைக் கப்பட்டிருப்பினும் அக்கோயில்களில் பூசகர்களே (பண்டாரம்) பூசை செய்வதை அவதானிக்கலாம்.

இங்குள்ள ஆலயங்களில் விழாக்களின் போதும் விஷேட பூசைகளின் போதும் மங்கள இசையாக பக்திநயங்கனிந்த பாடல்களை மத்தளம் ஒலிக்கத் தாளமிட்டுப் பாடி வருகின்றனர். இப்பாடல்கள் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் நாட்டார் பாடல்களாக உள்ளன. இப்பாடல்களை காவியம், கும்மி, எச்சரிக்கை, ஆனந்தக் களிப்பு, சாமியழைப்பு விழா என ஐந்தாக வகைப்படுத்தி நோக்கலாம். திருவிழாக் காலங்களிலும்

விஷேட தினங்களிலும் எல்லாத் தெய்வங்களின் மீதும் பூசை வேளைகளிலும் கரகம் பாலிக்கும் வேளைகளிலும் காவியப் பாடல்கள் பாடப்படுகின்றன. இக்காவியப் பாடல்கள் எண் சீராலான நான்கு அடிப்படைகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. இப்பாடல்களுக்குரிய தரு பின்வருமாறு அமைகின்றது.

**தெந்திநதி னாதினதி னாதினதி னானா**
**தினனாதி னாதிநதி னாதினதி னானா**

ஒவ்வொரு பாடல் முடிவின் பின்னும் இத்தரு பாடப்பட்ட பின்பே அடுத்த பாடல் பாடப்படும். இத்தருவினுடைய சந்தத்திலேயே பாடல்களும் பாடப்படும்.

காவியப் பாடல்களை நோக்குகின்ற பொழுது அவை அந்தந்த தெய்வங்களின் சிறப்புக்களையும் புகழையும் எடுத்தக் கூறி தெய்வங்களிடம் அருள் யாசிப்பனவாக உள்ளன. காளியம்மன் காவியம் பன்னிரு உயிரெழுத்துக்களையும் முதலாகக் கொண்டு முறையாகப் பாடப்பட்டு வருகின்றது. இது விழாக்காலங்களில் காளியம்மனுக்கு பூசை நடைபெறும் பொழுதும், வேள்வித் திருவிழாவின் போது கரகம் பாலிக்கும் வேளையிலும் பாடப்படுகின்றன.

மாரியம்மன் காவியம் அந்தாதி முறையில் அமைந்துள்ளது. இக் காவியப் பாடல்கள் கரக உற்சவத்தின் போது வழி நடையாகவும் நம் முன்னோர்கள் பாடிய முறையிலிருந்து மாறாதும் இன்றுவரை பாடப்பட்டு வருகின்றன. இக்காவியப் பாடல்களை மனமுருகிப் பாடும் வேளை அதற்கு ஏற்ப மத்தளமும் தாளமும் இணைந்து ஓசை எழுப்புகின்றன. அவ்வேளை ஏற்படுகின்ற ஒத்திசைவான இசை சிறந்த பக்தி உணர்வை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

திரௌபதையம்மன் வழிபாடு தோன்றிய காலத்திலிருந்தே பாடப்பட்டு வருகின்ற மரபு ரீதியான பாடல்களே திரௌபதையம்மன் கும்மிப் பாடல்களாகும். மாரியம்மன் ஆலய முன்னால் பூசகரான சொக்கலிங்கம் பூசகரினால் கி.பி.1925 ஆம் ஆண்டு இப்பாடல்கள் தொகுக்கப்பட்டன. இத்தொகுப்பு திரௌபதியம்மன் மான்மியத்திலும் இடம்பெற்றுள்ளது.

திரௌபதியம்மன் கும்மிப் பாடல்களில் திரௌபதையம்மனின் வரலாறு, கும்மியாடிவரும் கரகத்திற்கு மக்கள் செய்யும் உபசாரச் சிறப்பு, இதனைக் கண்களால் காண்பதனால் ஏற்படும் தெய்வீகச் சிறப்பு என்பன

கருப்பொருளாக அமைந்துள்ளன. திரௌபதையம்மனுக்காக கொண்டாடப் படும் பதினெட்டு நாள் திருவிழாவின் போது கரகம் பாலிக்கும் வேளையில் திரௌபதையம்மன் ஆலயத்தை நோக்கிக் காவிய நடையாக ஊர்மனைப் பகுதியை அடைந்ததும் ஆனந்தக் கும்மியாடலைச் செய்யும். அவ் வேளையில் திரௌபதியம்மன் கும்மிப் பாடல்கள் பாடப்படுகின்றன.

இதே போன்று காளியம்மன் வேள்வித் திருவிழாவின் போதும் கும்மிப் பாடல்கள் பாடப்படுகின்றன. திரௌபதியம்மன் கும்மிப் பாடல் களிலிருந்து காளியம்மன் கும்மிப் பாடல்கள் வேறுபட்டிருப்பினும் திரௌபதியம்மன் கும்மிப் பாடல்கள் பாடப்படும் சந்தத்திலேயே காளியம்மன் கும்மிப்பாடல்களும் பாடப்படுகின்றன. திரௌபதையம்மன் கரகம் ஊர்மனைப் பகுதியில் ஆனந்தக் கும்மியாடலைச் செய்த பிற்பாடு திரௌபதையம்மன் ஆலயத்தை அடைந்து, மஞ்சள் நீரினால் கால்கள் கழுவப்பட்டு ஆலயத்துட் பிரவேசித்ததும், அங்கு விரிக்கப்பட்டிருக்கும் நிலப்பாவடை மீது நடனமாடியபடிச் செல்லும். அவ்வேளை முழங்கால் களினால் நடந்து செல்லுவதையும் அவதானிக்கலாம். இவ்வாறு கரகம் திரௌபதையம்மன் ஆலயத்துட் பிரவேசித்தபின் பாடப்படும் மரபு ரீதியான பாடல்களே எச்சரிக்கை என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன. காவியம், கும்மிப்பாடல்கள் போன்று இவையும் தரு பாடப்பட்டு அதன் பிறகே பாடப்படுகின்றன. இப்பாடல்கள் திரௌபதை யம்மன் புகழ் பேசுவனவாக அமைந்துள்ளன.

**கும்பமிலங்க குடமிலங்க**
**கும்பத்தின் மாவிலை தானிலங்க—அம்மா**
**கும்பத்தின் மாவிலை தனிலங்க**
**சம்பந்தமாக திரௌபதா நாயகி**
**தாயார் வருவதைப் பாருங்களேன்...........................!**

**மத்தாள தாள முழங்கிட சுத்தி**
**மாதர்கள் நின்று குரவையிட அம்மா**
**மாதர்கள் நின்று குரவையிட அம்மா**
**நித்தம் அடியார்கள் கூடிடவே அம்மா**
**நீள்வீதி வாரதைப் பாருங்களேன் அம்மா**
**நீள் வீதி வாரதைப் பாருங்களேன்.........................!**

இக்கிராமத்தில் சித்திரை மாதத்தில் ஒரு செவ்வாய்க்கிழமையில் தொடங்கி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் சித்திரைச் செவ்வாய் என்னும் ஒரு சடங்கு நிகழ்ச்சி நிகழ்த்தப்படுகின்றது. இச்சடங்கு நிகழ்ச்சி வழிபாடு

தொடர்பானதாக இருக்கின்றமையால் அவ்வேளையில் பாடப்படும் பாடல்களும் வழிபாடு தொடர்புடையனவாக அமைகின்றன. இச்சடங்கின் போது கும்மி ஆட்டத்துடன் பாடலும் இடம்பெறுகின்றது.

இச்சடங்கு நிகழ்ச்சியின் போது நவதானியங்கள் முளைக்க வைத்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. முளைக்க வைக்கத் தேவையான நவதானியங்க்களை வீடு வீடாகச் சென்று பெற்றுக்கொண்டனர். அவ்வாறு நவதானியங்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய பாடலைப் பாடினர். தற்பொழுது வீடு வீடாகச் சென்று நவதானியங்களை பெறும் நிகழ்ச்சி மறைந்து வருகின்றது. எனவே, அதற்குரிய பாடலும் இனிவரும் காலங்களில் மறைந்து விடக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

மாரியம்மனுக்காக கொண்டாடப்படும் இச்சடங்கில் நவதானியங் களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. குறிப்பிட்ட பத்து தினங்களிலும் நவதானியங்கள் நன்கு வளர்ச்சியடைந் திருப்பின் அம்மன் அருள்பாளித்துள்ளாள் என்றும், அவ்வாறு இல்லை யெனின் நவதானியங்கள் முளைக்க வைத்ததிலும், அம்மனை வேண்டிக் கொண்டதிலும் ஏதோ குறையுள்ளது என்றும் கூறுவதை அவதானிக்கலாம்.

ஓராம் நாள் முளை எழுந்து
ஓங்கி வளருமாம் மாரிமுளை
ஈராம் நாள் முளை எழுந்து
இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை

என்று தொடங்கும் பாடலானது குறிப்பிட்ட பத்து நாட்களுக்குள்ளும் முளைக்க வைத்த நவதானியங்களின் வளர்ச்சி பற்றி கூறுவதாக அமை கின்றது.

இக்கிராமத்தில் வாழும் மக்களின் ஒரு பகுதியினர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதையும், அங்கு சித்திரைச் செவ்வாய் சடங்கு அவர்களது மூதாதையர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் இங்கு வந்ததன் பின்னரும் அச்சடங்கு நிகழ்ச்சியும், அவ்வேளையில் பாடப்படும் பாடல்களும் மாற்றமின்றி நிகழ்த்தப்பட்டும் பாடப்பட்டும் வருவதை

..................................தஞ்சாவூரிலே
சாணி எடுக்கப் போகையிலே
மதுரை கொண்ட ஐயனார்
குதிரையில வாறார்.

என்ற பாடல் வரிகளின் மூலம் ஊகித்தறிய முடிகின்றது.

சித்திரை மாதம் சாதாரணமாக வெப்பம் மிகுந்த காலப்பகுதி ஆகும். எனவே இக்காலத்தில் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுவது இயற்கை அந்நோய்களிளிருந்து எம்மைப் பாதுகாத்தருள வேண்டும். (குறிப்பாக அம்மை நோயிலிருந்து) என மாரியம்மனிடம் வேண்டிக்கொண்டு மாரியம்மனுக்காகவே இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. எனவே, இச் சடங்கின் போது மாரியம்மன் தாலாட்டிலிருந்து சில பகுதிகளும் பாடப் படுகின்றன. மேலும் மின்னலொழி யாழ்குறம், திரௌபதை குறம் போன்ற நாட்டார் கதைப்பாடல்களின் சில பகுதிகளும் பாடப்படுகின்றன. இந்த சித்திரைச் செவ்வாய்ச் சடங்கு நிகழ்ச்சி இலங்கையின் ஏனைய பிரதேசங் களில் இருப்பதாக அறிய முடியவிலை. ஆனால், இதனுடன் தொடர் புடையதாக இந்தியாவில் இராமநாதபுர மாவட்டத்தில் நடைபெறும் முளைப்பாரிச் சடங்கு நிகழ்ச்சி காணப்படுவதாக அறிய முடிகின்றது.

உடப்பில் மக்கள் ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் கூட்டாகத் தட்டி எழுப்பும் வடிவம் கும்மி. கும்மிப் பாடல்களுடன் சேர்ந்த ஆட்டத்தை மக்கள் குழுமி நின்று ரசிப்பர். கை குவித்து கொட்டி ஆடும் ஆட்டம் கும்மி. பெண் தெய்வ வழிபாட்டில் கும்மி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. உடப்பில் அம்மனாக உருவகிக்கப்படும் பூசகரும் கும்மி கொட்டுவார். கும்மிப் பாடல்கள் தெம்மாங்கு மெட்டில் பாடப்படுகின்றன. சித்திரைச் செவ்வாய் விழாவில் கும்மி.....

**செவ்வாயில் எருஎடுத்து**
**சிவந்த சித்திரக் கோலமிட்டு**
**கோலமிட்டு குரவையிட்டு**
**குங்குமத்தால் நீராடி**
**நீராடித் துகிலுடுத்து**
**நீல வர்ணப் பொட்டுமிட்டு**
**பொட்டுடனே பூமணங்கள்**
**பூமணங்கள் பளபளக்க**
**பாய்ந்து அடிங்கடி சித்திரப் பெண்காள்...!**

திரௌபதி அம்மன், காளியம்மன், மாரியம்மன் ஆகிய கடவுளர் மீது கும்மி பாடப்படுகின்றது. சித்திரைச் செவ்வாய் விழாவின் போது இளம் பெண்கள் பாடும் கும்மியும் ஆட்டமும் கலையழகு மிக்கன, பரவசம் தருவன.

### விளையாட்டுப் பாடல்கள்

வழிபாட்டுப் பாடல்களை அடுத்து இங்கு விளையாட்டுப் பாடல்கள் ஓரளவுக்கு முக்கியம் பெறுகின்றன. விளையாட்டு என்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆரோக்கியத்தை வழங்குவதுடன் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகவும் திகழ்கின்றது. நகர்ப்புரங்களைவிட கிராமப்புறங்களில் விளையாடப்படும் அதிகமான விளையாட்டுக்கள் பாடல்களுடன் இணைந்ததாகவே உள்ளன. விளையாட்டில் மகிழ்ச்சியும், ஆரவாரமும் எல்லோரிடமும் இருக்கவேண்டும் என்பதற்காகவே பாடல்களும் பாடப் படுகின்றன.

உடப்புக் கிராமத்தைப் பொறுத்தவரை மரபுரீதியான பல விளை யாட்டுக்களும் அவை தொடர்பான பாடல்களும் மறைந்து வருகின்ற பொழுதும், கிடைக்கக் கூடியதாகவிருந்த விளையாட்டுப் பாடல்களை வினாவிடை தொடர்பான விளையாட்டுப் பாடல்கள், எண்ணிக்கை தொடர்பான விளையாட்டுப் பாடல்கள், உச்சரிப்பு விளையாட்டுப் பாடல்கள், ஏனைய விளையாட்டுப் பாடல்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

இங்கு களிகம்புப் பாடல், கழங்கு விளையாட்டுப் பாடல் என்பனவே பெரியவர்களுக்கான விளையாட்டுப் பாடல்களாக காணப்படுகின்றன. இங்கு சேகரிக்கக் கூடியதாக இருந்த விளையாட்டுப் பாடல்களுள் வினாவிடை தொடர்பான பாடல்களே அதிகமாக உள்ளன. இவ்வினா விடை தொடர்பானபாடல்கள் யாவுமே இருவருக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுக்களிலேயே பாடப்படுகின்றன.

ஆரம்ப காலங்களைப் போலன்றி இப்பொழுது இக்கிராமத்திற்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையிலான தொடர்புகள் அதிகரித்துள்ள மையால் ஏனைய பிரதேசங்களிலுள்ள விளையாட்டுப் பாடல்கள் பலவும் இங்கு வழங்கப்படுகின்றமையும் அவதானிக்க முடிகின்றது.

### அம்பாப் பாடல்கள் [தொழிற் பாடல்]

விளையாட்டுப் பாடல்களைப் போன்று தொழிற்பாடல்களுள் ஒன்றான அம்பாப்பாடல்களும் இங்கு ஓரளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடித்தொழில் காணப் படுகின்றது. இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் உயிராபத்தையும் கருதாது

மேற்கொள்ளும் கடின உழைப்பினிடையே பாடும் பாடல்களே அம்பா என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இப்பாடல்களுக்கு இப்பெயர் வந்தமைக்கு பல்வேறு விதமான விளக்கங்களைத் தருகின்றனர். கடல் பெண் தெய்வமாகக் கருதப்பட்டமையாலும், கடலன்னை என்று அழைக் கப்பட்டதனாலும், அது பின்பு அம்பாள் பாடல்என்ற பெயரைப் பெற்று, ஈற்றில் அம்பாப் பாடலயிருக்கலாம் என்பர்.

இங்கு இவ் அம்பாப் பாடல்கள் படகைக் கடலில் இறக்கும் பொழுதும், தண்டு வலித்துக் கடலிற் செல்லும் பொழுதும், படகு கரையை அடையும் பொழுதும் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்படுகின்றன. இங்கு மரபு ரீதியான அம்பாப்பாடல்கள் மறைந்து வருவதுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொழிலில் ஈடுபடுபவர்களின் மனநிலை எவ்வாறு அமைகின்றதோ அதற்கேற்ப புதிது புதிதாகவும் புனைந்து பாடப்படுவ துடன் சினிமாப் பாடல்களையும் இணைத்துப் பாடுகின்றமையையும் அவதானிக்கலாம்.

தொழிற்கஷ்டத்தை மறக்குமுகமாக இவர்கள் பாடும் அம்பாப் பாடல்களை ஆராயும்பொழுது, தொழிலின் போது ஏற்படும் இன்னல்கள், வறுமை, சிலவேளை உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காததினால் ஏற்படும் மனச்சோர்வு, வீட்டிலுள்ள மனைவி, மக்களுடைய நினைவுகள், காதலியைப்பற்றிய நினைவுகள், வழியில் செல்லும் பெண்களைக் கேலி செய்தல், சமையற் காரணை ஏசுதல், ஆணும் பெண்ணும் சேர்ந்து காதற் பாடல் பாடுவது போல் பாடுதல் எனப் பல்வேறு தன்மைகளைக் கொண்ட வையாக இருப்பதை அறியலாம். அம்பாப் பாடல்களை ஊன்றிக் கவனிக்கும் பொழுது அவற்றின் மூலம் அம்மக்களின் அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் அறிந்து கொள்ள முடிவதுடன், அவர்களின் பேச்சு வழக்குப் பிரயோகம், அவர்கள் மத்தியில் இடம்பெறும் உவமைகள், உருவகங்கள் முதலியவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

மனித இனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடல் மகிழ்ச்சி, சோகம், காதல், குழுவுணர்வு, பெருமிதம் போன்ற பல அகவியல் நிலை மனித உணர்வுகளைத் தூண்டுகின்றது. அதன் விளைவாக சாதாரண மக்களிடத்தில் பாடல் எழுகின்றது. இலக்கண வரம்புகளின்றி-உடனே தன் உணர்வை எளிமையாகச் சுருக்கமாக இசை தழுவியதாக நயத்துடன் வெளிப்படுத்துவன நாட்டுப் பாடல்களாகின்றன.

நாட்டுப்பாடல் என்பது உயிருள்ளதோர் வடிவம் மனித குலம் எங்கெல்லாம் வாழ்ந்ததோ அவரவர் சிறப்புகளுக்கும் வாழ்க்கை முறைமைக்கும் தக்கவாறு வாய்மொழிப்பாடல்கள் தோன்றின.

மனிதனது தொழில் அவனது கலை வடிவத்துக்கு ஆதாரமாயிற்று. உடப்பு மீனவர்கள் வலை இழுக்கும்போது அம்பாப் பாடல்கள் அவர்களது உணர்வின் வெளிப்பாடாகப் ப்ரிணமிக்கின்றன. ஒவ்வொரு சாதாரண மீனவனுக்குள்ளும் ஒரு கவிஞன் மறைந்துள்ளதை நாட்டுப் பாடல்கள் உணர்த்துகின்றன. வட்டார மொழி வழக்கு அற்புதமானசுகானுபவத்தை நாட்டுப்பாடல்களின் ஊடாக வழங்குகின்றது.

அம்பாவில் தாலாட்டுப் பண்பைக் காணலாம். மீனவன் சிந்தனை: வலையில் கை வைத்திருக்கும் போது வீட்டிலேயே பதிகின்றது. தொட்டிலில் உள்ள குழந்தை இதயத்தில் உதிக்கின்றது. தாயாகக் கூடு விட்டுக் கூடு பாய்கிறான். அம்பாவில் அவன் உணர்வு தெறிக்கிறது. சிறிய சொற்கள் சித்திரங்களாக்கி கருத்தைக் கவர்கின்றன.

| | | |
|---|---|---|
| சின்ன சின்ன | ஏலேலோ வேத்திலயாம் | ஏலேலோ |
| சின்னத்தங்கம் | ஏலேலோ நித்திரையாம் | ஏலேலோ |
| நித்திரைக்கோ | ஏலேலோ நீயழுதாய் | ஏலேலோ |
| சித்திரைப்பூ | ஏலேலோ தொட்டிலிலே | ஏலேலோ |
| தொட்டில் | ஏலேலோ பணிந்தாட | ஏலேலோ |
| தோழிமார் | ஏலேலோ ஆராட்ட | ஏலேலோ |
| ஆராட்டும் | ஏலேலோ பாராட்டும் | ஏலேலோ |
| ஆண்டவனே | ஏலேலோ நீ தருவாய் | ஏலேலோ |

அம்பாவில் சோக உணர்வையும் உணர்த்துகின்றனர். வானத்தில் சூரியன் எரிக்கிறான் கீழே மணல் கங்குகள்போக்களிக்கின்றன. கொதிப்பது மணல் மட்டுமா? அவனது உணர்வுக்களும்தான். வாழ்வின் சிறுமையை வரிகளால் வடிக்கிறான். கீழே பாய்ந்தடிக்கின்ற அலைகளாய் ஓங்கி வெடிக்கும் அவன் உணர்வு நாட்டுப்பாடலில் இலக்கியமாகின்றது.

| | | |
|---|---|---|
| கரவல | ஏலேலோ பொழப்பும் வேண்டாம் | ஏலேலோ |
| காசி வேண்டாம் | ஏலேலோ பொழப்பும் வேண்டாம் | ஏலேலோ |
| கரவல | ஏலேலோ பொழப்பும் ஒரு | ஏலேலோ |
| கற்ற ஒரு | ஏலேலோ வித்தையம்மா | ஏலேலோ |
| கரவலய | ஏலேலோ காட்டினவன் | ஏலேலோ |
| கண்கெட்டு | ஏலேலோ போயிடுவான் | ஏலேலோ |
| நீர்பாட்ட | ஏலேலோ காட்டினவன் | ஏலேலோ |

| | | |
|---|---|---|
| நெஞ்சடச்சு | ஏலேலோ செத்திருப்பான் | ஏலேலோ |
| சூடு | ஏலேலோ பொறுக்குதில்ல | ஏலேலோ |
| சுடு மணலும் | ஏலேலோ ஆறுதில்ல | ஏலேலோ |

அம்பாவில் காதல் உணர்வு அதிகமாகவே உள்ளது. காதல் என்பது ஆண் பெண்களுக்கிடையில் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் தோன்றுகின்ற உடல், உளம் சார்ந்த ஒருமித்த உணர்வுமிக்க உயிரியல் அன்பு ஆகும். அம்பாப் பாடலில் இரு ஆண்கள் தம்மைப் பெண்டிராகப் பயன்படுத்திப் பாடுகின்ற பாடலில் கற்பனை ரஸவாதவித்தை செய்கிறது. ஆழ்வார்கள் தம்மைத் தாயாகப் பாடி தம் ஆன்ம அனுபவத்தை வெளிப்படுத்தியது போலவே இக்காதலிகளும் தம் அன்பை வெளிப்படுத்துவது நயமாகவே உள்ளது.

| | | |
|---|---|---|
| கண்ணான | ஏலேலோ கண்ணாளா | ஏலேலோ |
| காதல் நல்ல | ஏலேலோ மணவாளா | ஏலேலோ |
| வாழ நல்ல | ஏலேலோ குருத்தது போல | ஏலேலோ |
| வாடுறனே | ஏலேலோ பெண்கிளியே | ஏலேலோ |
| கிளி வளத்தான் | ஏலேலோ மொழி பேச | ஏலேலோ |
| கிளிலும் மொழி | ஏலேலோ பேசுதில்ல | ஏலேலோ |
| அணில் வளத்தேன் | ஏலேலோ மொழி பேச | ஏலேலோ |
| அணிலும் மொழி | ஏலேலோ பேசுதில்ல | ஏலேலோ |
| உம்மயின்றி | ஏலேலோ வேறெனக்கு | ஏலேலோ |
| உத்ததுண | ஏலேலோ இல்லையம்மா | ஏலேலோ |
| கொஞ்ச நல்ல | ஏலேலோ முகம் தருவேன் | ஏலேலோ |
| குழந்த வந்தா | ஏலேலோ என்ன செய்வேன் | ஏலேலோ |
| புடிக்க நல்ல | ஏலேலோ முல தருவேன். | ஏலேலோ |
| புள்ள வந்தா | ஏலேலோ என்ன செய்வன் | ஏலேலோ |

### தாலாட்டுப் பாடல்கள்

நாகரிகம் வளர வளரத் தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், காதற் பாடல்கள் போன்றன இக்கிராமத்தவர்களிடமிருந்து மறையத் தொடங்கி யுள்ளமை கண்கூடு. சேகரிக்கக் கூடியதாக இருந்த தாலாட்டுப் பாடல்களை ஆராய்ந்த பொழுது, தாலாட்டுப் பாடல்கள் இங்கு தாலாட்டுப்பாடல்கள், ராராட்டு, ஆராட்டு என்ற பெயர்களினால் அழைக்கப்படுகின்றன என்பதை அறிய முடிந்தது. மிகக் குறைந்த அளவிலேயே தாலாட்டுப் பாடல்களைச் சேகரிக்ககூடியதாக இருந்த போதும் அவை அங்குள்ள மக்களின் தொழில், குடும்பநிலை, வழிபடு தெய்வங்கள், குழந்தையில்லாமல் (ஒரு

பெண்) சமூகத்தில் அடையும் இழிநிலை, அதனை போக்க மேற்கொள்ளப் படும் பரிகாரங்கள், குடும்ப உறவுநிலை என இன்னோரன்ன வாழ்வியல் அம்சங்களையும் புலப்படுதுவனவாக உள்ளன.

**பிள்ளை வரங்கேட்டு**
**காளியம்மன் முன்னால**
**பிள்ளை வேலக்கேடுத்தேன்.**

என்ற வரிகள், பிள்ளையில்லாதவர்கள் தனக்கொரு குழந்தை கிடைத்தால் அம்மன் சந்நிதியில் விலை கூறி விற்பதாக நேர்த்திக்கடன் வைப்பதும், அவ்வாறே குழந்தை கிடைத்துவிட்டால் எண்ணியவாறு செய்வதும், அவ்வாறு செய்யும் பொழுது, குழந்தை இல்லாதவர்கள் அக்குழந்தையைக் கூறிய விலை கொடுத்துவிட்டு வாங்கு வதும், பின்பு சொற்ப வேளையில் உரியவரிடம் குழந்தையை ஒப்படைத்து விடுவதுமாகிய, குழந்தை யில்லாதவர்கள் வைக்கும் நேர்த்தியை விளக்குவதாக அமைந்துள்ளன. இலங்கையின் வேறெந்தப் பிரதேசத்திலும் இந்த வழக்கம் இருப்பதாக அறிய முடியவில்லை. ஆனால் இன்று இக்கிராமத்திலும் இவ்வாறான வழக்கங்கள் அருகி வருவதை அவதானிக்கலாம்.

## ஒப்பாரிப் பாடல்கள்

தாலாட்டுப் பாடல்கள் முகவுரை எனின் ஒப்பாரிப் பாடல்கள் முடிவுரை எனலாம். இதில் சிறப்பு என்னவெனில் இரண்டுமே பெண்களால் எழுப்பப் படுகின்றன. இன்றைய சூழ்நிலையில் இக்கிராமத்தில் முதியவர்களைத் தவிர ஏனையவர்களிடம் ஒப்பாரி சொல்லி அழும் தன்மை குறைந்து வருகிறது. இங்கு அதிகமான மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் பொதுவாக ஆண்களாகவே உள்ளனர். எனவே, தற்செயலாகக் குடும்பத்தைக் காப்பாற்றும் தலைவன் இறக்கும்படி நேர்ந்துவிட்டால் தலைவியின் நிலை, அதிலும் உதவிக்கு உறவினர்களோ, உழைத்துக் காப்பாற்றக்கூடிய பிள்ளைகளோ இன்றி இருந்து விட்டாலோ அவளது பரிதாபத்திற்குரிய நிலையை வார்த்தை களால் விபரிக்க முடியாது.

பாதுகாப்பளித்து, ஆதரித்து, அனுசரிக்கத் தலைவன் இல்லாத அந்த நிலையில், அவளைப் பற்றிப் பலரும் பலவிதமாகக் கதைக்க முற்படு

கின்றனர். அவ்வேளையில் தனது துன்பத்தைப் பின்வருமாறு ஒப்பாரியாக வெளிப்படுத்துகிறாள் அந்தத் தலைவி,

பல்லுப் படைச்சவளே எங்களைப்
பரிகாசம் பண்ணுராப்பா....
நாக்குப் படைச்சவளே எங்களுக்கு
நாகரிகம் சொல்லராப்பா....
நாங்க சோத்தால வாடாமே
சொல்லால வாடுரமே ..

இங்கு சேகரிக்கக் கூடியதாக இருந்த ஒப்பாரிப் பாடல்கள் பொதுவாக நீண்ட பாடல்களாகவே உள்ளன. சில ஒப்பாரிப் பாடல்களிலே ஏனைய பிரதேசப் பாடல்களின் கலப்பும் காணப்படுகின்றது. பொதுவாக எல்லா ஒப்பாரிப் பாடல்களிலும் எதுகை, மோனை என்பன அமைந்துள்ளமையை அவதானிக்ககலாம். சில ஒப்பாரிப்பாடல்களில் தமிழக ஒப்பாரிப் பாடல் களின் செல்வாக்கையும் காணலாம். சில வரிகளை மீண்டும் மீண்டும் கூறி அழுகின்றனர்

**காதற்பாடல்கள்**

இயற்கைத் தூண்டலால் இயல்பாகவே நிகழும் ஒருவகை ஒழுக்கமே காதலாகும் எல்லா உயிரினங்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுகின்ற இவ்வுணர்வு பருவ வயதை அடைந்ததும் மலர்ச்சியடைகின்றது. மனித சமுதாயத்தில் அவ்வுணர்வு பாடலாக வெளிப்படுகின்ற வேளையில் அது காதற் பாடல் என்ற பெயரைப் பெறுகின்றது. நாட்டாரிலக்கியங்களில் இக்காதற் பாடல்கள் முக்கியம் பெறுகின்றன. காதற்பாடல்களை காதலுணர்விற்கு ஆட்பட்டவர்கள் பாடுவது, காதலர்கள் போல் ஏனையவர்கள் பாடுவது என இரண்டாக வகைப்படுத்தலாம்.

இக்கிராமத்தில் மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையிற் சேகரிக்கக் இருந்த காதற் பாடல்களை நோக்குகின்ற பொழுது, அவை காதலர்கள் அல்லாதவர்களாற் பாடப்பட்டவையாகவே இருக்கின்றன. இவை யாராற் பாடப்படுகின்ற பொழுதும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக உள்ளமையால் இவை காதற் பாடல்களுக்குள்ளேயே அடங்குகின்றன. இப்பாடல்களில் காதல்

உணர்வுகள் மட்டுமன்றிக் குடும்பநிலை, தொழில், சாதி பற்றிய குறிப்புகள், பொருளாதார நிலை போன்ற விடயங்களையும் அறியலாம்.

**கதைகளும், கதைப்பாடல்களும்**

கதை கூறுவதும் கேட்பதும் உலகெங்கிலும் உள்ள எல்லா மக்களிடமும் காலங்காலமாக இருந்து வரும் இயல்பாகும். பாமரர் முதல் படித்தவர் வரை, சிறுவர் முதல் பெரியவர்வரை அனைவராலும் விருப்புடன் கேட்கப்படும் ஒன்றாகக் கதை திகழ்கின்றது. இக் கிராமத்திலும் கதை கூறுவதும் கேட்பதும் வழக்கிலுள்ள ஒன்றாகும். இவ்விதத்தில் ஓரளவு நாட்டார் கதைகளையும் இங்கு சேகரிக்கக் கூடியதாக உள்ளது.

இங்கு சேகரித்த கதைகளைக் கொண்டு நோக்கும்பொழுது, அவை உண்மைக் கதைகளாக இருந்தாலென்ன கற்பனைக் கதைகளாக இருந் தாலென்ன யாவுமே ஏதோ ஒரு விதத்தில் அறிவுரை கூறுவனவாகவே விளங்குவதை அவதானிக்க முடிகின்றது மேலும், இலங்கையின் ஏனைய தமிழர் வாழும் பிரதேசங்களான மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், வன்னி, மலையகம், ஆகிய இடங்களில் வழக்கிலுள்ள சில கதைகளும் இங்கு இடம்பெறுவதை அறியலாம். பொதுவாகக் கதைகளில் மனிதர்கள், தேவர்கள், மிருகங்கள், பறவைகள் என்பன கதாபாத்திரங்களாக வருவது இயல்பு. இக்கிராமக் கதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

உடப்புக் கிராமத்தில் வழக்கிலுள்ள கதைகளை வரலாற்றுக் கதைகள், புராண இதிகாசக் கதைகள், மந்திரக் கதைகள், ஏனைய கதைகள் என வகைப்படுத்தலாம். ஆரம்ப காலத்தில் இக்கிராமத்திற்கு மக்கள் வருகை தொடர்பான கதைகள் மிகவும் சுவாரசியமானவையாக உள்ளன. இவற்றை வரலாற்றுக் கதைகள் என்ற பிரிவில் அடக்கலாம். நல்லதங்காள் கதை, சகுந்தலை துஷ்யந்தன் கதை, அரிச்சந்திரன் கதை என்பவற்றைப் புராண இதிகாசக் கதைகள் என்ற பிரிவிலும் உப்பார் கதை போன்ற கதைகளை மந்திரக் கதைகள் என்ற பிரிவிலும் அடக்கலாம். மாதுளம்பூ நிறத்தாள் கதை, கடல் அலையின் கதை, மீனுராசனின் கதை, புளுகுனியும் நரியும் கதை, மரிக்கொழுந்து கதை, மகர மீன்கதை, தோலிருக்கச் சுளை முழுங்கி கதை, வனதேவதையின்கதை, போன்ற கதைகள் ஏனையவைகள் என்பதனுள் அடங்குகின்றன. உப்பார் கதை என்பது இக்கிராமத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவமாக உள்ளது.

இக்கதைகளைக் கொண்டு இங்குள்ள மக்களது அறிவு வளர்ச்சி, கற்பனைத் திறம், அவர்களது வாழ்க்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள், புராண இதிகாசக் கதைகளில் அவர்களுக்குள்ள ஈடுபாடு, இவர்கள் இக்கிராமத்திற்கு வந்து குடியேறிய வரலாறு போன்ற இன்னோரன்ன அம்சங்களையும் அறிந்து கொள்ளலாம்.

இங்கு கதைப்பாடல்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்ட பொழுது, சமூக, வரலாற்றுப் புராண, இதிகாசக் கதைப்பாடல்கள் வழக்கில் இருந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனினும் மகாபாரதக் கதைப்பாடல் தவிர்ந்த ஏனைய சில கதைப்பாடல்கள் வில்லிசைக் குழுவினரால் வில்லுப்பாட்டாக இசைக்கப்பட்டு வருகின்ற பொழுதும், தற்போது அதிகமான கதைப்பாடல்கள் அருகிக் கொண்டு வருவதைக் காண முடிகின்றது.

இக்கிராமத்தின் பிரதான வழிபாடாகத் திரௌபதையம்மன் வழிபாடு உள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை திரௌபதையம்மனுக்கு ஆண்டு தோறும் பதினெட்டு நாட்கள், பாரதப் போரை மையமாகக் கொண்டு திருவிழாக் கொண்டாடி வருகின்றனர். பாரதப்போரில் திரௌபதை சபத முடிப்பு வரையுள்ள பதினெட்டு நாட்போர் தொடர்பான கதையை, திருவிழா தொடங்கியதும் முதற்கொண்டு முடியும் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியாக கதைப்பாடல் வடிவில் பாடி வருகின்றனர். எனவே, திரௌபதையம்மன் ஆலயவழிபாட்டுடன் தொடர்புடையதாக இன்றும் மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகின்ற காரணங்களினாலும் பிற காரணங்களினாலும் மகாபாரதக் கதைப் பாடல்கள் அன்றிலிருந்து இன்றுவரை மாற்றங்களின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

திரௌபதி அம்மன் ஆலயத்தில் பாடப்படும் மகாபாரதக் கதை அறிமுகப் பாடல்கள் தெம்மாங்கு மெட்டுக்களில் எளிய சொற்களில் சுருக்கமான வடிவில் ஓசை நயத்துடன் எதுகை மோனை துலங்க உடுக்கடித் தாளத்துடன் ஒலித்து நெஞ்சை இழுக்கும் தன்மை மிக்கன.

**நெருப்பினிலே பெண் பிறந்தாள்**
**நீல வர்ணன தங்கையரே**
**அனலிலே பெண் பிறந்தாள்**
**அருங்கினிலே துரோபதம்மா**
**பத்தினியாள் பெண் பிறக்க**

பாலால் மழை பெய்யுதம்மா
உத்தமியாள் பெண் பிறக்க
உதிர மழை பெய்யுதம்மா

சமூகப் பாடல்களும் சிறப்புற்று காணப்படுகின்றன. ஒரு மகன் வளர்ந்ததும் தாய்க்குத் தெரியாமலே தன் காதலி வீட்டில் நிரந்தரமாகத் தங்கி விடுகின்றான். தாய் குறியீட்டுப் படிமங்கள் ஊடாக தன் வேதனை உணர்வை வெளிப்படுத்துகிறாள். சாவல் என்பது ஆண்மகனையும், தங்கம்,பொன் முதலான உலோகங்கள் அன்பின் வெளிப்பாட்டையும் உணர்த்துகின்றன.

தங்கத்தினால் சலங்க கட்டி
தரயில் விட்ட சாவல் நான்
தரயில் விட்ட சாவல்
தரயில் விட்ட சாவல் தன்ன
சாச்சுக் கொண்டது ஆரோ

பொன்னினால சலங்க கட்டி
போகவிட்ட சாவல்—நான்
போகவிட்ட சாவல்
போகவிட்ட சாவல் தன்ன
புடிச்சடச்சது யாரோ.

வெள்ளியினால் சலங்க கட்டி
வீதியில் விட்ட சாவல் நான்
வீதியில் விட்ட சாவல்
வீதியில் விட்ட சாவல் தன்ன
வெரசா அழைச்சது யாரோ.

பவள மணி சலங்கை கட்டி
பார்த்துவிட்ட சாவல் நான்
பார்த்துவிட்ட சாவல்
பார்த்துவிட்ட சாவல் தன்ன
பதுக்கிக் கொண்டது யாரோ.

முத்துமணி சலங்க கட்டி
முன்னே விட்ட சாவல் நான்
முன்னே விட்ட சாவல்
முன்னே விட்ட சாவல் தன்ன
மூடிக்கொண்டது யாரோ.

## விடுகதைகள்

ஒரு பொருளைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்ள முடியாதபடி ஆனால், அப்பொருளுக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் நுணுக்கமான விளக்கங்கள் கொடுத்து, பின் அந்த விளக்கத்தின் மூலம் உணர்த்தப்படும் பொருள் எதுவென்று வினாவுவது விடுகதையாகும். என்ன பொருளுக்காக இந்த விளக்கம் கொடுக்கப்பட்டது. என்று விடுவிக்க வேண்டியுள்ளதால் விடு கதை என்றும், சொற்ப நேரத்தில் கேட்கப்பட்டு விடையும் எதிர் பார்க்கப் படுவதால் நொடி என்றும், புரியாது மறைந்து இருக்கும் விடையைக் கண்டுபிடிக்க வேண்டி இருப்பதால் புதிர் என்றும் விடுகதைகள் பெயர் பெறுகின்றன.

உடப்புக் கிராமத்தைப் பொறுத்தவரை விடுகதைகள், பழமொழிகள் என்பன அதிகமாக வழக்கிலுள்ள நாட்டாரிலக்கியங்களாகும். விடுகதை களை நோக்கும் பொழுது மிகுதியான ஒய்வு நேரத்தைக் கொண்டிருந்த இம்மக்களிடம் சிறிது காலத்திற்கு முன்பெல்லாம் விடுகதைகள் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியமை காண முடிந்தது. சிறார்கள் மட்டுமன்றித் தொழிலுக்குச் செல்லும் ஆண்கள் தாம் தங்கியிருந்து தொழில் செய்யும் இடங்களில் ஓய்வு நேரங்களில் ஒன்று கூடித் தங்களுக்குள் விடுகதைகளைக் கூறுவதும் கேட்பதுமாகப் பொழுது போக்கினர்.

இன்று இம்மக்களுக்கு ஓய்வு கிடைக்கின்ற பொழுதும் சிறார்கள் முதியவர்களை அழைத்து வைத்துக்கொண்டோ, தமக்குள்ளேயே விடு கதைகளைக் கேட்பதற்கோ, விடையளிப்பதற்கோ, வயது வந்தவர்கள் தமக்குள் விடுகதைகளைக் கேட்டுக் கொள்வதற்கோ, விடை கூருவதற்கோ வாய்ப்புக்கள் குறைந்து வருவதை அறியலாம். வீட்டுக்கு வீடு தொலைக் காட்சிப் பெட்டிகளும், அதன் நிகழ்ச்சிகளும் இதற்குக் காரணம், இதனால் இக்கிராமத்திற்கென்றே வழங்கி வந்த பெரும்பாலான விடுகதைகள் அருகி வருவதை அவதானிக்க முடிகின்றது. எனினும், இங்கு சேகரிக்கக் கூடியதாக இருந்த விடுகதைகளை பொதுவான விடுகதைகள், தனித்துவ மான விடுகதைகள் என இரண்டாக வகுத்து நோக்கலாம்.

வீடுகளிலும் பாட்டிமார், துணையின்றித் தவிக்கும் பொழுதுகளில் எல்லாம் பெயரன், பெயத்தியரை தம் அருகில் அழைத்து நாட்டார் கதைகளுடன் விடுகதைகளையும் வழங்கி மகிழ்கின்றனர். பொழுது போக்கு சாதனங்கள் மிகக் குறைந்த அக்காலங்களில் செவி வழிக்

கதைகளில் சிறார் மிக்க ஆர்வம் செலுத்தினர். பாட்டிமாரை கதை கூறுமாறு நெருக்கி வற்புறுத்தியமை நிறைய இருந்தது. சில மர்மப்படங்களை அதன் புதிரை ஆவலாக காணத்துடிக்கின்ற நிலையில் நொடிகளை அவிழ்க்க அல்லது அழிக்க அவர்கள் முனைந்தனர். ஆர்வமும் சிந்தனா திறனும், விவாதமும், துண்திறனும் வளர்க்க அந்தப் பாட்டியர் உதவினர். இழவு அல்லது பூப்பு வீடுகளிலும் மக்கள் நிறையக் கூடும் தன்மை உண்டு. கழியாத நேரத்தை காணப்பொழுதாக மாற்ற விடுகதைகள் உதவின. விடுகதைகள் மாறா அமைப்புடைய நாட்டுப்புற இலக்கிய மெனலாம். இன்னும் உடப்பு மக்கள் நாவில் நிலைத்து நயம் பயக்கும் இலக்கிய வடிவம் விடுகதை எனலாம்.

இக்கிராமத்திற்கென்றே வழங்கிவரும் விடுகதைகள் தனித்துவ மானவையாக உள்ளன. இவை இம்மக்களின் அறிவு வளர்ச்சி, சிந்தனை விருத்தி, பழக்க வழக்கங்கள், பயன்படு பொருட்கள் போன்ற பல விடயங்களைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

## பழமொழிகள்

மனிதன் சமூக வாழ்வின் ஊடாக பல்வேறு அனுபவங்களை அடை கின்றான். அவை மீண்டும் மீண்டும் எய்தப்பெற அந்த அனுபவங்களில் கை தேர்கின்றான். அவனது பட்டறிவு மற்றவர்களுக்கும் வழி காட்ட முயல்கிறது. சுருக்கமும் அறிவுப் பொருண்மையும், தெளிவும், கூர்மையும், கச்சிதமும், நயமும், அங்கதமும் மிக்கதான பழமொழிகள் அதன் பயனாக உருவாகின்றன. பொருட்செறிவு, குறிப்பாழம், உவமைத்திறன், உருவகத் திறன், ஒப்புமையாக்கம், முனைப்பாக உணர்த்தும்திறன், தைக்கும் ஆற்றல், பழமொழிகளில் உள்ளன.

நாகரிகம் அற்றவர்கள் தொடக்கம் நாகரிகம் உள்ளவர்கள் வரை உலகில் வாழும் அனைத்து மக்களிடமும் பழமொழிகள் வழங்கி வருவதை அவதானிக்கலாம். உடப்புக் கிராமத்தில் பொதுவான பழமொழிகளே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற போதும், அவை அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப பொருள் கொள்ளப்பட்டுவதுடன், அம்மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் புலப்படுத்துவனவாகவும் உள்ளன, எனினும் இக்கிராமத்திற்கென்றே தனித்துவமான பழமொழிகளும் இல்லாமலில்லை. அது மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலுள்ள சில பழமொழிகள் சிறிது

மாற்றத்துடனும் மாற்றமின்றியும் வழங்கி வருவதையும் அறியமுடிகின்றது. எனவே, இங்கு வழக்கிலுள்ள பழமொழிகளை பொதுவான பழமொழிகள், ஏனைய பிரதேசங்களிலிருந்து சற்று மாற்றமுடன் வழங்கி வருபவை, தனித்துவமானவை என வகைப்படுத்தலாம்.

இக்கிராமத்திற்கென்றே வழங்கும் தனித்துவமான பழமொழிகளைக் கொண்டு இங்கு வசிக்கும் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். பலகாலம் கஷ்டப்பட்டு பல மூலிகைகளைத் தேடி, ஒன்று சேர்த்துப் பெறப்பட்ட சிறிய மாத்திரை போல, பழமொழியும் பல்லாண்டு காலமாக மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களைத் திரட்டி ஒன்றோ இரண்டோ வரியில் அமைத்து, அழகான கருத்தைப் புலப்படுத்துகின்றது. சமூகத்தின் போக்கைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவனவாகவும் பழமொழிகள் உள்ளன.

பழமொழிகள் வெறும் பழமொழிகளாக மட்டும் இருக்கவில்லை. அவை மனிதன் வாழ்வில் செய்யத்தக்கவை எவை, தகாதவை எவை என்று அறிவூட்டுவனவாகவும் உள்ளன. சில சமயங்களில் ஒருவரையொருவர் கேலிசெய்யும் முகமாகக் கூடப் பழமொழிகள் பயன்படுத்தப் படுகின்றன.

> ''உள்ளூரில் கல்யாணமும்
> உழைப்பால் வரும் உல்லாசமும் உறுத்தாது.''

> ''ஊர்விட்டு ஊர் உறவு கொண்டாடினால்
> ஊருக்குள்ள உறவற்றுப் போகும்''

> ''மடிநிறைஞ்சாத்தான் பிடி சோறு''

போன்ற பழமொழிகள் இம்மக்களின் அனுபவ அறிவையும் சிந்தனை ஆற்றலையும் புலப்படுத்துவனவாக அமைகின்றன. மேலும் இவை இக்கிராமத்திற்கென்றே வழக்கிலுள்ள தனித்துவமான பழமொழிகளாகும். இவ்வாறு உடப்புக் கிராமத்தில் சேகரிக்கக் கூடியதாக நாட்டாரிலக்கியங்களை ஆராய்கின்ற பொழுது, இம்மக்களின் பழக்கவழக்கங்கள், தொழில், வழிபடு தெய்வங்கள் இவர்களுக்கென்றே தனித்துவமாக இருந்துவரும் அம்சங்கள் என இன்னோரன்ன விடையங்களை அறிய முடிகின்றது.

## உடப்பில் வழக்கிலுள்ள பழமொழிகள்

### பொதுப் பழமொழிகள்

அகத்தி ஆயிரங்கா காச்சாலும் பொறத்தி பொறத்திதான்.

அகப்ப புடிக்கிறவன் நம்மாளா இருந்தா அடிப்பந்தி என்ன, நுனிப்பந்திஎன்ன

அடி ஒதவுற மாதிரி அண்ணன் தம்பி ஒதவமாட்டான்.

அடிச்சு வளக்காத புள்ளயும் முறுக்கி வளக்காத மீசையும் பயனில்ல.

அறப் படிச்ச மூஞ்சசூறு களனிப் பானைக்குள்ள விழுந்ததாம்.

ஆக்கப் பொறுத்த அம்மைக்கு ஆறப்பொறுக்க ஏலாதாம்.

ஆச இருக்கு அரசனப் போல அதிஷ்டம் இருக்கு கழுத மேல்

ஆடத் தெரியாதவ தெருக்கோணல் எண்டாளாம்.

இளனி குடிச்சவன் இருக்க கோம்ப திண்டவன் தலமேல.

உங்கம்மா அம்மா எங்கம்மா சும்மா.

உழுந்தாலும் மீசையில மண் ஒட்டயில்ல.

உன்னாச்சொத்து மண்ணாப் போகும்.

ஊரா ஊட்டு நெய்யோ என் பொண்டாட்டி கையே.

ஊரார் தாலியறுத்துத் உம்மா பேரில பாத்தியா ஓதுறதா

ஊரோடு ஒக்க ஓடு, ஒருத்தன் ஓடுனா கேட்டோடு.

எரிகிற வீட்டில் சுருட்டுப் பத்த வைக்கிறதா

எரிகிற வெளக்கானாலும் தூண்டு கோல் வேணும்.

எழுதினவன் ஏட்டக் கெடுத்தான் படிச்சவன் பாட்டக்கெடுத்தான்.

எள்ளுக்காயுது எண்ணக்கி எலிப்புளுக்கை ஏன் காயுது.

ஒலவாயை மூடியாலும் ஊர்வாயை மூடேலாது.

ஓடுறவனக் கண்டா தொரத்துறவனுக்கு லேசு.

ஓரலுக்கு ஒரு பக்க இடி மத்தளத்துக்கு இரு பக்க இடி.

கடன் இல்லாக் கஞ்சி கால்வயிறு போதும்.

கண்டா கட்டாடி காணாட்டி வண்ணான்.

கல்லக் கண்டா நாயக்காணோம், நாயக்கண்டா கல்லைக் காணோம்.

கழுத கெட்டாகுட்டிச்சுவர்.

காடு வா வா என்கிறது வீடு போ போ என்கிறது.

காத்து இருந்தவன் பொண்டாட்டிய நேத்து வந்தவன் கொண்டு போனான்.
குட்டி நாய்க்கும் கொழந்தப் புள்ளைக்கும் செல்லம் கூடாது.
குப்பி கூழுக்கழுவுது கொண்ட பூவுக்கழுவுது.
கொளத்தோட கோவிச்சுக்கொண்டு குண்டி கழுவாமப் போறதா

**உடப்புக்கேயுரிய பழமொழிகள்**

அட்டயப் புடிச்சு மெத்தையில போட்டா அது சருகுக்குள்ள தான் போகும்.
அடிக்கிறது மொசலுக்கு படுவுறது பத்தைக்கு
அடிச்சவன் பொண்டாட்டிய என் கையில போடு, அடிக்காம பாத்துக்கிறேன்.
அது புதுனமாம் தோழி ஆட்ட முழுங்கிச்சாம் கோழி.
அம்பட்டக் குப்பயக் கிண்டினா அத்தனையும் மசிர்.
அம்பட்டக்கிறுக்கும் வண்ணார ஒயிலும் போகாது.
அமுத கள்ளி ஆசாரக் கள்ளி கோயிலைக் கண்ட எடத்தில கும்பிடும் கள்ளி.
அள்ளிப்போட்ட யானைக்கு கிள்ளிப் போட்டா ஆகுமா
அறக்கப் பறக்கத் தேடினாலும் படுக்கப் பாய்க்கு விதியில்லை.
அறுபத்து நாலடி கம்பத்திலேறி ஆடினாலும்
அன்பற்றார் வாசல் பின்பற்றிப் போகாதே.
ஆடியிறங்கித்தான் தியாயம் வாங்கவேனும்.
ஆடு கொழுத்தா எடையனுக்கு வாசி.
ஆண்டானோடு அடி மாண்டு போச்சு.
ஆணை அடிச்சி வளக்கோணும், பெண்ணைப் பொத்தி வளக்கோணும்.
ஆயிரம் நச்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரனாகாது.
ஆனை அசஞ்சு தின்னும் வீடு இருந்து தின்னும்.
இஞ்சிக்கு ஏலம் கொண்டாட்டம், எலுமிச்சம் பழத்துக்கு புளிப்புக் கொண்டாட்டம்.
இருக்கிறவன் சரியா இருந்தா செரக்கிறவன் சரியாச் செரப்பான்.
இருந்து அடிக்க பரந்து கெடுவான்.
இரும்பு புடிச்ச கையும் செரங்கு புடிச்ச கையும் சும்மா இருக்காது.
உண்டு கொழுத்த நண்டு வலையில இருக்காது.

உழைப்பானுக்குப் பெண்ணில்ல உண்பானுக்கு சோறில்ல.

ஊம ஊரக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

ஊரில் ஒருவனே தோழன் ஆறும் அத்தது தாரம்.

எங்க புகையிருக்கோ அங்க நெருப்பிருக்கு.

எட்டுக்கும் எழவுக்கும் நாங்க புட்டுக்கும் களிக்கும் நீங்க.

எண்ணிச் செய் சம்பந்தம், எண்ணாமச் செய் வெள்ளாம

எவ, எவனோடபோனாலும் லெப்பைக்கு நாலு பணம்.

எழுத்தறப் படிச்சாலும் பெண்புத்தி பின்புத்திதான்.

ஓஞ்சுது பாளை உக்காந்தா சாணாத்தி.

ஓட்டச்சட்டியானாலும் கொழுக்கட்ட வெந்தாச்சரி.

கச்சான் வருவுது மச்சான் கவனமடா.

கஞ்சி ஊத்த ஒருத்தருமில்ல கச்ச முறுக்க மட்டும் ஆளிருக்கு.

கஞ்சிக்கு காணம் கொண்டாட்டம் கடகெட்டமூளிக்கு கோபம் கொண்டாட்டம்.

கட்டாக்கருவாட்ட சுட்டாலும் மணவாது.

கடல்,கரை பொரண்டாலும் நாய்க்கு நக்குத் தண்ணிதான்.

கடுங்காத்து மழை கூட்டும், கடும் சிநேகம் பகை கூட்டும்.

கணக்கன் கணக்கறிவான்தன் கணக்கைத் தானறியான்.

கண்குத்தம் நெமக்கித் தெரியாது.

கத கேட்ட நாய்க்கு செருப்பாலடி.

கம்மாளன் பசுவ காதறுத்துப் பார்த்தாலும் உள்ளுக்கு செல்வரக்கு இருக்குமாம்.

கருப்பட்டியானாலும் கள்ளுக் கெடக்கும்.

கழுத படுக்கிறது குப்பத்தெடல் கனவு கண்றது பஞ்சனமெத்த.

கழுதைக்குப் பேரு சதாசிவமாம்.

கழுதைக்குபதேசம் காதில சொன்னாலும் அபயக்குரலே அன்றி அங்கொன்றுமில்லை.

களவு போனா உப்புச்செரட்டையாவது மிஞ்சும், நெருப்புப் பத்தினா செரட்டகூட மிஞ்ஞாது.

கள்ளனுக்கு ஓடுறதெல்லாம் திருட்டுப் புத்தி.

காக்கா நோக்கறியும் கழுதை டொப்பறியும்.
காக்கைக்கு ஒரு புத்தி காக்கைட குஞ்சுக்கு நூறு புத்தி.
காக்கைக்கு கனவில பீயும் சர்க்கரை.
காணாத நாய்க்கு கரிச்சோறு நெய்ச்சோறு.
காணாம கெடந்த கழுத கூவாம குடிச்சதாம் தவிட்ட.
காரியமாகும் வரை கழுதையும் காலைப் பிடிக்கும்.
காலால தள்ளும் கோழிப்பீய கையால அள்ளக் காலம் வரும்.
குட்டி நாய் கொழுத்தாலும் வழுவழுப்புப் போகாது.
குடுக்காத இடையன் செனயாட்டக் காட்டினானாம்.
குடும்பக்காரிய கொளத்தங்கரையில தெரியும்.
குத்திக் கெட்டது பல்லு கொடஞ்சு கெட்டது காது.
குதிரையின் கொனமறிஞ்சுதான் கொம்பு கொடுக்க இல்லை.
குருவிக்கேற்ற ராமேஸ்வரம்.
கொடல் காஞ்சா குதிரையும் வைக்கோல் தின்னும்.
கொடிக்கு கொமட்டிக்கா கனக்குமா
கொடுத்தது கேட்டா அடுத்தது பகை.
கொண்டாரக் கொள்ளும் கொல.
கொமரி முத்தினா கொரங்கு.
கொல்லக்கிப் பல்லி குடிக்கச் சகுனி.
கோடு போனா ஓடு கூட மிஞ்சாது.
கோப்பையில் நெய் வடியுறதண்டா கேப்பாருக்கெங்கே மதி
கோயில் பூன கருவத்துக்கன்சாது.
சம்பளமில்லாத மந்திரியும் கோபமில்லாத ராசாவும்.
சரக்கு மலிஞ்சா சந்தைக்கு வரும்.
சாவிற நாய் கூரையில ஏரிச்சாம்.
சித்திரையில் செல்வன் பொறந்தா நற்குடி நாசம்.
சிறியோர் செஞ்ச வெள்ளாமை வீடு வந்து சேராது.
சீலைக்குள்ள பாம்ப உட்டு கொடையுதெண்டு சொல்றதா
சும்மா கெடச்ச மாட்டுக்கு பல்லப் புடிச்சுப் பார்த்தானாம்.
சும்மா கெடந்த அம்மையாருக்கு கால் பணத்துத் தாலி போதாதா

சுருண்ட மயிர்க்காரியையும் செவந்த மேனிக்காரியையும் நம்பாதே.
செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு.
செய்யிறவங்களுக்குச் செய்ய வேணும் செத்தவங்களுக்கு அழ வேணும்.
செல்வமா இருக்கிறதும் செருப்படி படுறதும் வாயாலே.
சொல்கேளாப் புள்ள கொலத்துக்கீனம்.
சொல்வார் சொன்னால் கேட்பார்க்கு மதியில்லையா
தகப்பனார் வெட்டுன கெணறுண்டு தல கீழாகப் பாயுறதா
தணிந்த வில்லுத்தான் தக்கும்.
தலக்குத்தும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
தாய் வார்த்தை கேளாப் பிள்ளை நாய் வாய்ச் சீலை.
தாயக் கொளத்தடிய பார்த்தா மகள ஊட்டில பார்க்கத் தேவையில்லை.
தாயும் புள்ளயுமெண்டாலும் வாயும் வயிறும் வேற.
திங்கிற மாட்டுக்குத்தான் கெலி.
தூரத்துத் தண்ணி ஆபத்துக் கொதவாது.கடயரிசி கஞ்சிக்குதவாது.
தெருவுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி.
தேன்தொட்ட கை நக்கத்தான் செய்யும்.
நடக்க மாச்சப்பட்டவன் சித்தப்பன் ஊட்டில பொண்ணு கட்டினானாம்.
நடுக்கடலில் போனாலும் நாய்க்கு நக்குத் தண்ணிதான்.
நரிக்கு எடம் கொடுத்தா, கௌக்கி ரெண்டு ஆடு கேக்கும்.
நாய் எங்கின அடிபட்டாலும் காலத்தான் நொண்டும்.
நாயக் கொஞ்சினா வாயக் கொஞ்சும்.
நாய்க்கு வேலையில்ல நடக்க நேரமில்லை.
நாயுட வேலைய கழுத பாப்பானேன்.
நிண்டமாட்டில பால் குடிச்சு, உழுந்த மாட்டில எறச்சி தின்னுற ஆக்கள்
நெட்டயன நம்பினாலும் கட்டையன நம்பக்கூடாது.
பகலில பார்த்துப் பேசு ராத்திரியில அதுவும் பேசாதே.
பச்சைத்தண்ணியில் பலகாரம் சுடலாமா
பஞ்சத்துக்கு ஆண்டியா பரம்பரை ஆண்டியா
படை மொகத்திலும் அறிமுகம் வேணும்.

பண்டியக் குளுப்பாட்டி பவுடர் போட்டு விட்டா திரும்பவும் சேத்துக் குள்ளதான்.

பணியாரத்தை திண்ணவா சொன்னான், பொத்தல என்னவா சொன்னான்

பருப்புக்கு மிஞ்சின கறியில்ல, செருப்புக்கு மிஞ்சின அடியில்ல.

பல்லக்குத்தி மூக்கில வச்சா பல்லுக்கும் நாத்தம் மூக்குக்கும் நாத்தம்.

பல்லாக்கு ஏறுறதும் வாயால, பல் ஒடபடுறதும் வாயால.

பாடுபாடுண்டா பறையனும்பாட மாட்டான் தானாப் பாடுவான் தத்தாரிநாய்.

பாம்பு திண்ணிற ஊருக்குப் போனா நடுத்துண்டு நமக்கு.

பாம்புக்கும் நோகாமல் பாம்பு அடிக்கிற கம்புக்கும் நோகாமல்.

பாவத்துக்குப் புள்ளப் பெத்தா பரிசாரி என்ன செய்வான்.

பிச்சையெடுத்தானாம் பெருமா, அதை பிடுங்கித் திண்டானாம் அனுமா.

பெரு நெருப்புக்கு ஈரம் தெரியாது.

மட்ட சுட்டே கரியில்ல மயிர் சுட்டா கரி.

மயிர் ஊடாத நட்பு பொருள் ஊடாடிக் கெடும்.

மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்.

மனிசன மனிசன் அறிவான் நாத்த மீன சூத்தப்புளியங்கா அறியும்.

மாதா பிதா செய்தது மக்க தலமேல.

மாமி ஒடச்சா மண்சட்டி மருமக ஒடச்சா பொன்சட்டி.

மீன் மொகத்திலேயும் நாய் மொகம்.

முகத் தாழ்ச கொலத்துக்கீனம்.

முள்ளு மேல சீலையைப் போட்டா மொள்ள மொள்ளாத் தூக்க வேணும்.

முன் கை நீண்டா மொழங்கை நீளும்.

மூக்குள்ள வரையில சளி.

மூலைக்குத் தெரியுமா சவலப்பிள்ளை.

மேயுற மாட்ட ஏறுற மாடு கெடுத்தது.

வந்ததடி மகளே சண்ட, இறக்கடி மகளே கூடய.

வந்தபோது மாமியார் பந்தடிச்சா, வரவர மாமியார் கழுதையாப் போனா.

வலியப் போனா கெழவி, மாட்டேனேண்டா கொமரி.

வாய்க்கொழுப்பு சீலையில் வடியுது.

வாயுள்ள பானைக்கு தூரில ஓட்டை.

வாழைக்கும் அடிக்கண்டு உண்டு.

வானத்தப் பாத்துத் துப்பினா மொகத்திலதான் உழும்.

வியாதிக்கு மருந்திருக்கு, விதிக்கு மருந்திருக்கா

விளக்கு மாத்துக்கு பட்டுக் குஞ்சம்.

வெங்க நாய்க்கு தங்கப் பல்லு.

வெத ஒன்னு போட்டா, சொர ஒண்ணா மொளைக்கும்.

வேசையை நம்பினாலும் கள்ளியை நம்பேலாது.

வேலயத்த அம்பட்டன் பூனயப்புடிச்சுச் செரச்சானாம்.

றாலு மண்டையில என்னத்தையோ வச்சுக்கிட்டு நாறுது நாறுதுண்டு சொல்லுமாம்.

**உடப்பூர் விடுகதைகள்**

அட்டைக்கு ஆயிரங்கண்ணு நான் வளர்த்த புள்ளைக்கு ஒரு கண்ணு (வலை,தேங்காய்,ஊசி.)

அண்ணன் வெட்டின கிணத்தில குடிக்க ஏலும், குளிக்க ஏலாது (குரும்பை)

அண்ணன் கொண்டுவந்த பசு ஒண்ணு இரவில மேயும், ஒண்ணுபகலில மேயும். (சந்திரன், சூரியன்).

அடி காட்டில நடு மாட்டில நுனி வீட்டில (நெல்)

அப்பா ரெண்டு மாடு கொணர்ந்தாரு ஒண்டு இழுப்பாணி, ஒண்ணு சப் பாணி. (அம்மி, குளவி).

அண்ணன் வாங்கிவந்த பீரிசுக்கூட்டத்தை தரையில போட்டா ஒடையாது. தண்ணில போட்டா உடையும். (கடதாசி)

அம்மா கீழே பிள்ளை மேலே (அம்மி,குளவி).

அடுக்கடுக்கா பட்டுடுத்தி அங்காடியில் காத்திருப்பாள். (வெங்காயம்)

ஆனைக்கும் குதிரைக்கும் அஞ்சாத தண்ணீர் மங்களா தேவிக்கு மாரளவு தண்ணீர். (தோணி)

ஆனை அடிபோல ஆலங் கொடி போல அதன் பூ சங்கு போல இதை அவிழ்த்தவர்க்கு எட்டுக்கட்டு வெத்திலை, எண்ணூறு பாக்கு தொட்டுத்திண்ண சுண்ணாம்பு (வாழை மரம்.)

ஆத்தூரு'மாம்பழம் பழுத்து மாற்றூரில் விழ கண்டவன் இருக்க காணாதவன் எடுக்க திண்டவன் இருக்க தின்னாதவன் ருசி பார்க்க ஒண்ணும் தெரியாதவன் அடிபட்டான். (முதுகு)

ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண் பட்டு உடைஞ்சதாம் மண்டபம். (தேன் கூடு)

ஆழக்குழி தோண்டி நீள வெத வெதச்சு ஆறு மாதமானாலும் மொளக்காத மொள (பிணம்)

ஆழக்குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பாத்தா தொண்ணூறு முட்டை. (பனை, தென்னை)

எட்டுக்கால் ஊன்றி இரு கால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வறாராம் வன்னியார். (நண்டு).

ஒரு பிடி ஓல திருமுடி ராசன் எண்ணிக்க ஏலாம மலையேறிப் போனான். (தலைமுடி)

இலையில்லாத மரத்தின் கீழ் முலையில்லாதவன் பிள்ளைபெற, கையில்லாதவன் பார்த்து வர, காலில்லாதவன் கைலாசமாகக் கொண்டுபோனான். (மலை, பறவை, சூரியன், பாம்பு)

ஆட்டம் புழுக்கை நெரங்கொடுத்துதின்னக் காய் காய்க்கும் தின்னாத பழம் பழுக்கும். (மார்க் கம்பு)

உடுத்த சீலைய உரிஞ்சு போட்டு உள்ள இருக்கத பிடுங்கிப்போட்டு உனக்குப் பாதி எனக்குப் பாதி. (பனங்கிழங்கு)

கட்டப் பனைக்கு எட்டு முட்டி (நாய் மார்பு)

கறியக்கறி தின்ன கறியுடையாள் மகள் கல் விட்டெறிய கறிய முறிய பாஞ்சதாம் கறி (ஆடு பயிர்கள்)

கண்ணாடிப் பொட்டிக்குள்ள கல்யாணப் பொண்ணு வட்ட வட்ட மைதானத்திலே ஓட்டப் போட்டியாம் அண்ணன் வெத்தியா? தம்பி வெத்தியா? (கடிகாரம்)

கண்டு பூப்பூத்து காணாது காய்காய்க்கும். (அத்திக்காய்)

கண்ணுக்கு ஒப்பானது, பெண்ணுக்கும் அவசியமானது அது என்ன? (கல்வி)

காட்டுக்குள்ள கடுஞ்சோலைக்குள்ள கம்மான் கயிறு இழுபடுது (சாரைப்பாம்பு)

காட்ட வெட்டினன் கள்ளன் வந்து பாய்ஞ்சான் கள்ளன வெட்டினன் வெள்ளி சிரிச்சது வெள்ளிய வெட்டினன் வெள்ளம் வந்து பாஞ்சுது. (தேங்காய்)

காலாறு இறகு ரெண்டு கண்ணிரண்டும் கடுகி போல ஈயடா இளிச்ச வாயா (ஈ)

காட்டுத்தேசி பூத்த பூ, கருமணலில் உழுந்த பூ வேட்டையாடி வந்த ராசா, விரும்பி எடுத்து மோந்த பூ (தாழம்பூ)

கொத்துக் கொத்தா ஈச்சங்கா கொலையோட ஈச்சங்கா மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்கா (பவளம்)

தலையுண்டு வாலில்லை, உடம்புண்டு காலில்லை, தட்டச்சீறும் பாம்பில்லை. (நெருப்புக்குச்சி)

தூரத்தூர மழை பெய்ய துத்திரிக் காட்டுல வெள்ளம் போட நாலு ஊரு ராசாக்களும், நனையாம வாராங்க (பால்மடி)

தொலைவில் தெரியும், தொட்டுவரத் தோன்றும், தொடர்ந்து சென்றால் தூரத்துப் போகும் அது என்ன? (தொடுவானம்)

தொட்டாச்சிணுங்கி தொடையில பிடுங்கி (தொட்டால் வாடி)

துரு துரு மலையில சுந்தர மலையில அந்தரமாக வந்து கூத்தாடும். (மத்து)

பச்சக் கிளில் ஒருகூட்டம், பகளக் கிளில் ஒரு கூட்டம், கற்பித்தான் வளர்த்த கருத்தக்கிளில் ஒரு கூட்டம். (ஈச்சங்காய்)

பச்சைப் பசேல் என்றிருக்கும் பாகற்காயல்ல, பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல, உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல, உருக்கினா நெய் வடியும் வெண்ணெயுமல்ல. (முத்தாமணக்கு)

பட்டய பட்டய நீக்கி, பதினாறு பட்டய நீக்கி, முத்துப் பட்டய நீக்கி முன்னே வாறா தேவடியா. (வாழைப்பூ)

பால் போல் எறிப்பான், பகலில் மறைவான், பாருக்குள் ஒருவன் அவன் யார்? (நிலவு)

பூக்காத மல்லிகப்பூ பூத்துக் கிடக்கு பொறுக்க நாதியில்ல தங்கக் காம்பரா கிழிஞ்சிருக்கு தங்க நாதியில்ல ராசா மக அழுதுகிட்டுப் போறா அழைக்க நாதியில்ல.
(வான் வெள்ளி,செவ்வானம்,மழை)

சின்னச் சிறுக்கனும் சின்னச் சிறுக்கியும் சேர்ந்து கட்டின மால, அத சிக்கில்லாம அவுத்தெடுத்தா திருச்சிராப்பள்ளி சீதனமாம்
(இடியாப்பம்)

சாந்து போட்ட கோயிலுக்குள்ள பூந்து கும்பிட இடமில்ல. (முட்டை)

சின்னக் கெனத்தில தண்ணி ருசி. (தெம்பிளி)

சிலு சிலுங்குது ஒரு குருவி சிதறிப் பாயுது ஒரு குருவி மதுரையை அழிக்குது ஒரு குருவி ராசா மடியிலிருக்குது ஒரு குருவி,
(இறுங்கு,நெருப்பு,தேசிப்பழம்)

நெட்டுடலால் நீண்டிருக்கும் விளக்குமல்ல நெருப்பினில் விளையாடும் சிவனுமல்ல தட்டி விட்டால் வில் பிடிக்கும் விஜயன் அல்ல காரிடி போல் மேல் விளங்கும் மேகமல்ல. (துப்பாக்கி)

நாக்க நீட்டும் படமெடுக்கும் நாலு மாசம் அட கெடக்கும்.நானறியப் பாம்புமில்லை. (பனங்கிழங்கு)

நேரோடி நிலம் பிழந்து நிலத்து வாழக் குருத்திட்டு காரோடிய மணலிலே கப்பிட்டுக் கணுக்கிட்டுக் கருக்கில்லாத முட்டை. (காளான்)

நீறு பூசின கோயிலில நிண்டு கும்பிட இடமில்லை. (முட்டை)

சின்ன வெங்காயம் ஊரெல்லாம் சிங்காரம் (நெருப்பு)

வானம் எங்கும் பூத்திருக்கும் மகா பூசணிக்காய் தின்ன வந்து காத்துக் கெடக்கு சீமையப்பண்டி (வெள்ளி,நிலா)

நாலு மூலப் பொட்டி,சந்திர வானப் பொட்டி,ஓடும் குதிரக் குட்டி.
(அம்மி,குளவி)

நீயிருக்கிறது சங்கு சக்கரக் கடலில நானிருக்கிறது தூங்கு மாங்காக் கொப்பில, நாளைக்கு சந்தைக்கு வந்தா சந்தித்துக் கொள்ளுவம்
(மீன்,புளி)

செக்கச் சிவந்திருப்பா எங்கக்கா செவ்விளநீர் போலிருப்பா எங்கக்கா சந்தையில வந்திருப்பா எங்கக்கா (வெங்காயம்)




உடப்பு வரவேற்கிறது



உடப்பு கடற்தொழில்

11

# ஓங்கி உலகளந்த எங்கள் தமிழ் மொழி

மொழி என்பது புலன்களால் உணரப்படும் குறியீடுகள் கொண்டது எனலாம். ஒலி வடிவான குறியீடுகளைப் பேச்சு மொழியும், வரி வடிவான குறியீடுகளை இலக்கிய மொழியும் கொண்டுள்ளன. மொழி என்பது உண்மையாக, நேருக்கு நேர் நின்று கருத்தை உணர்த்துவதற்காக ஒரு பரிமாற்றூடகமாகத் தோன்றிய சாதனமே. அந்த வகையில் நாட்டார் மொழி எனப்படும் பேச்சு மொழியே முதன்மை மிக்கதாக அமைகின்றது.

மக்களின் உணர்வுக் கூறுகளின் விளைவாகவும், ஒரு பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்களின் கொள்கலமாகவும், பேச்சு மொழியே அமைகின்றது. சமூகம், சமூக வாழ்க்கை, சமூக உறவுகள், உணர்வுகள், பொருள் சார் நிலைகள், பண்பாடு, இலக்கிய, அழகியல் அம்சங்கள் என்பவற்றைத் தேடும் ஒருவர்க்கு பேச்சு மொழி பற்றிய ஆய்வு முக்கிய மானதாகும்.

மக்கள் படைக்கும் இலக்கியத்தின் அடித்தளமாகவும் பேச்சுமொழி அமைகின்றது. நமது தமிழ் இலக்கியங்களில் அதற்கு நிறையவே உதாரணங்கள் உண்டு. சங்க இலக்கியத்தில் பேச்சோசை, எளிமை, சுருக்கம், பொருள் விளக்கம், உணர்ச்சி, வெளிப்பாடு மிக்கனவாகச் செய்யுள்கள் அமைந்துள்ளன. குறுந்தொகை, புறநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை நூல்களில் இப்பண்பு மிக்க செய்யுள்கள் உள்ளன.

சிலப்பதிகாரத்தில் கானல் வரி, அம்மானை வரி, வள்ளைப் பாட்டு, ஒப்பாரி போன்ற நாட்டார் இலக்கிய வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. மணிவாசகர் திருவாசகத்திலும், திருப்பொற்சுண்ணம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், திருச்சாழல் போன்ற நாட்டார் இலக்கிய வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆடம்பரமான வர்ணனைகள் தோன்றிய பிற்காலத்தே அவற்றை விடுத்து குறவஞ்சி, பள்ளு, அம்மானை, தூதுமலை, காதல், நொண்டி நாடகம் போன்ற மக்கள் இலக்கிய வடிவங்கள் இலக்கியத்த விசில் இடம்பிடித்தமை இலக்கிய வரலாறு உணர்த்தும் உண்மை.

வாய்மொழி சார்ந்த இலக்கியங்களின் நிழலிலேயே எழுத்திலக் கியங்கள் தோன்றுகின்றன என அறிஞர்கள் கொள்வர். நாட்டுப்பாடல் என்னும் மண்ணில் இருந்து தோன்றிய செடியே இலக்கியம் என்பார் தோமஸ்மான்.

கூடியவரை பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம். எந்தவொரு விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும், வார்த்தை சொல்கிற மாதிரி யாகவே அமைந்துவிட்டால் நல்லது. (எம்.ஏ. நுஃமான், 1985).

பாரதியின் வசன நடை எழுத்து, பேச்சு மொழியின் முக்கியத்துவம் பற்றி உணர்த்துகின்றது. பாரதியே, ஆடுது, பாடுது, பாயுது, ஐயா, அடி, பாப்பா, சின்ன, கன்னங்கரிய, சங்கதி போன்ற பேச்சு மொழிச்சொற்களை கையாண்டிருக்கின்றான். பாரதிக்குப் பின்னால் வந்த சக்தி மிக்க இலக்கியப் பிரமாக்கள் தமது பிரதேச நாட்டார் மொழி வழக்கை மிக அற்புதமாக தமது இலக்கியங்களில் கையாண்டனர்.

புதுமைப்பித்தன், ரகுநாதன் என்போர் திருநெல்வேலித் தமிழையும் ஜெயகாந்தன் சென்னை சேரித் தமிழையும், கி. ஜானகிராமன், லா.சா. ராமாமிர்தம் என்போர் பார்ப்பனர் தமிழையும், சி.க. செல்லப்பா மதுரை மாவட்டக் கள்ளர் தமிழையும், க. சண்முகசுந்தரம் கோயம்புத்தூர் தமிழையும், தமது எழுத்துக்களில் பயன்படுத்தினர். டொமினிக் ஜீவா, டானியல், மகாகவி, பேராசியர் கணபதிப்பிள்ளை, எஸ்.பொ.செ. கதிர்காமநாதன், தெணியான் போன்ற பலர் யாழ்ப்பாணத் தமிழையும், வ.அ. இராசரத்தினம் கிழக்கு மாகாணத் தமிழையும், வெ. முருகபூபதி, முத்துலிங்கம் நீர்கொழும்புத் தமிழையும் இலக்கிய வாகனமாக்கினர்.

இருபதாம் நூற்றாண்டு பொதுமக்கள் யுகமாக மலர்ந்தமை, அரசியல் நெறியின் மையம் மக்களைச் சார்ந்தமை, வெகு சனத் தொடர்புக் கருவிகள் பொதுமக்கள் சார்பாக நெகிழ்ந்தமை, மக்களின் கல்விப்பரப்பு விரிவு பெற்றமை, மக்களின் சமூக வாழ்க்கை பற்றிய இலக்கியம் உதித்தமை, இலக்கிய நெறிகளாக இயற்பண்பும், யதார்த்தப் பண்பும் அமைந்தமை போன்ற பல காரணங்களால் நாட்டார் வழக்குகள் என்றுமில்லாதவாறு முக்கியம் பெறத் தொடங்கின.

நாட்டார் வழக்கை, கொச்சை மொழி, இழிசனர் மொழி எனப் பழைமை வாதிகள் இழித்துரைத்ததும் இலங்கையில் தேசிய இலக்கியக்

கோட்பாட்டாளர் போர்க்கொடி உயர்த்தியதும், ஜெயம் பெற்றதும், நாட்டார் வழக்குகள் இலக்கிய உலகில் சுதந்திர நடமாட்டம் செய்வதும் வரலாற்றுச்செய்திகள்.

ஆகவே ஒரு பிரதேசத்தை இலக்கியப் பகைப்புலமாகக் கொள்கின்ற போது அப்பிரதேச மக்களின் முழு வாழ்வியலையும் நாட்டார் வழக்கினூடாகத் தரிசனப் படுத்தும் தேவை எழுகின்றது. மொழியின் அர்த்த புஷ்டியான வடிவங்கள் இலக்கிய ஆளுமைக்கும் அதன் கனதிக்கும் உதவுகின்றன. இலக்கியப் படைப்பாளி தான் வாழும் பகைப் புலத்தை, தாளத்தை ஆழ உணர்ந்து மொழியின் பொருளையும், குறிப்பாழத்தையும், விளங்கினால் மட்டுமே இலக்கியம் அதன் இலக்கில் வெற்றி பெற இயலும்.

உடப்புப் பிரதேசத்தைக் கொண்டு இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள் இது வரை தோன்றவில்லை. அத்தகையோருக்கு உடப்பு பல நூறு கருப்பொருள்களை வழங்கும். கடல் படு செல்வமாக அமையும் அவர்களுக்கு வழிகாட்ட உடப்பு நாட்டார் மொழி வழக்குகள் பற்றிய ஆய்வு துணை செய்யும். பாரம்பரியமாக மக்கள் வாழ்வியலுடன் இணைந்துள்ள ஆற்றல் மிகு வழக்குகள் படிப்படியாக மெல்ல மறைந்து வருகின்றன. பயனற்றவை கழிவதும் பயன்மிக்கவை புகுவதும் மாற்றத்தின் விளைவுதான். எனினும் பயனுள்ளவை மறைய இடமளிப்பது கலாசார அழிவுக்குத் துணை போவதாகும். எனவே அவற்றை கவனமாகத் திரட்டுவதும், ஆவணப்படுத்துவதும் எதிர்கால சந்ததிக்கு முதுசொமாகப் பகிர்வதும் இன்றைய அவசியத் தேவையாகி உள்ளன.

கடந்த தசாப்த கால ஆய்வாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்களின் கவனத்தை உடப்பு கிராமம் பெருமளவுக்கு ஈர்க்கவுமில்லை. நாடக வரலாறு எழுதுகின்ற பேராசிரியர்கள் இலங்கையின் ஏனைய பகுதிகள் பற்றி குறிப்பிட்டுள்ள போதும், உடப்பு பற்றிக் அறிந்திருக்கவும் இல்லை எனலாம். ஆனால் அண்மைய காலங்களில் பேராசிரியர்களான சி. பத்மநாதன், கா. சிவத்தம்பி போன்றோர்களது கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. திரௌபதியம்மன் தீமிதிப்பு பதச்சோறாக அமைந்த போதும், வேறு பல கூறுகளும், உடப்புக் கிராமம் பற்றிய பல தகவற் கூறுகளின் சங்கமத்தில் பேச்சு வழக்கையும் ஆராய்வது அவசியமாகின்றது.

உடப்புப் பகுதியின் மதப் பண்பாட்டில் திரௌபதி வணக்கம் முக்கியமானதாகும். இப்பகுதியிலுள்ள திரௌபதி வழிபாட்டு முறைமை தொடர்பினை ஆராய்தல் வேண்டும். இங்கு ஒரு பழைமையான கூத்து பராம்பரியமும் உண்டு. இப்பிரதேசத்தின் தமிழ்த்தன்மையைப் பேணுவதில் இன்னும் தங்கள் தனித்துவத்தை பேணுகின்றனர் என பேராசிரியர் க. சிவத்தம்பி தனது இலங்கைத் தமிழர் யார் என்ற நூலில் கூறியுள்ளதைக் காணலாம்.

தவிரவும் நாட்டுப்புறவியல் துறை தற்போது மிக ஆழமாகத் தடம் பதித்து வருகின்றது. மானிடவியல், சமூகவியல், மொழியியல், இலக்கியம் ஆகிய துறைகளில் ஆய்வு செய்வோர் நாட்டுப்புறவியலில் கூர்மையாகக் கவனம் செலுத்தி தம் கண்டுபிடிப்புக்களுக்கு நாட்டுப்புறவியலில் சான்று களைத் தேடுகிறனர். நாட்டுக்கு நாடு, பிராந்தியத்துக்குப் பிராந்தியம் என பிரத்தியோக வாழ்வியலைக் கொண்ட மக்களே இத்துறைகளின் சான்றுகளாக அமைந்துள்ளனர். அதனால் நாட்டுப்புறவியல் துறை மிக வேகமாக நாற்பக்கமும் பக்கவேர்களை நீட்டி சடைத்துச் செழித்து வளர்ந்து வருகின்றது.

நாட்டுப்புறவியல் என்பது மரபு வழிப்பட்ட பண்பாட்டுப் பெட்டக மாகும். மக்கள் தம் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவற்றை அறிவிக்கும் காலக் கண்ணாடி எனலாம். அது பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், ஆடல், தெருக் கூத்து, ஓவியம், சிற்பம், இசை, விளையாட்டுக்கள், கை வினைகள், மந்திரங்கள் ஆகிய கூறுகளை நுணுகி ஆராய்கிறது.

உடப்புப் பிரதேசத்திலும் இலக்கியக் கலைப்பிரிவுக்கான கூறுகளின் ஆய்வுக்கு நிறைய விடயங்கள் உள்ளன. மக்கள் வாழ்க்கையினூடே செறிந்துள்ளன. ஆனால் அஸ்தமிக்க தொடங்கியுள்ள. இவை குறித்து நாட்டுப்புற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது. உடப்பு பற்றிய அடிப் படையான மதிப்பீட்டைக் காட்டுவதுடன் ஒப்பீட்டு ரீதியில் அதன் கலைச் செல்வ வளத்தைக் கோடிட்டுக் காட்டவும் உதவும்.

வடமேற்குக் கரையோரங்களில் ஒரேயொரு, இந்துமதக் கிராமமாக உடப்பு விளங்குகின்றது. ஏனைய கரையோரப் பிரதேசங்களைப் போல கிறிஸ்தவத்துக்குக் தன்னைக் காவு கொடுக்காத கிராமமாக பண்டைய பண்பாட்டுக் கூறுகளை உறுதியாகப் பின்பற்றுவதும், தென்னிந்திய

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சக்தியர் வழிபாட்டை கால மாறுதல்கள் நாகரிக மாறுதல்கள் நிலவிய போதும் இறுக்கமாக இன்று வரை நடை முறைப்படுத்தப்படுவதும் உடப்பை ஏனைய பிரதேசங்களில் நின்றும் தனித்துவப்படுத்துகின்றது எனலாம்.

வாழ்வியற் சடங்குகள், மந்திர சடங்குகள், பாடல்கள், பழங்கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என்பவற்றை ஆராயும் களமாக உடப்பு பயன்பட இடமுண்டு. மக்களின் நாட்டார் மொழி வழக்குகள் கூட அயற்கிராமங்களில் இருந்து வேறுபடுகின்றது. மரபுச்சொற்கள், இணை மொழிகள், இரட்டை மொழிகள், உவமைத்தொடர்கள், உருவகத் தொடர்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் பாடல்கள் என்பன அதன் பண்பாட்டுச் செழுமையை உணர்த்தவள்ளன. ஆகவே மொழி வழக்கினூடாக உடப்பை ஆய்வதும் பொருத்தமாகப்படுகின்றது.

உடப்பு பல கோணங்களில் இன்று நோக்கப்படுவது மிகப் பயன் தரும் முயற்சியே, உணர்வுக்கும், பெருமைக்கும் அப்பால் நடுநிலை நோக்கி ஆய்வதே அதன் நிலைப்பாட்டைக் காட்டத் துணை செய்யும். எமது வாழ்வியல் புலத்தின் வரலாற்றை ஆய்ந்தறியும் முயற்சிகள் பெருமளவாக மேற்கொள்ளப் படவில்லை செவிவழிப் பாரம்பரியத்தின் விளைவாக எழுந்த நியாயமான அகங்காரமே மூதாதையரிடமிருந்தன. பழைய தகவல்களை ஒளித்து மறைக்கும் கண்ணாம் பூச்சி விளையாட்டுக் களும் இன்று வரையும் நிலவுகின்றன. வரலாறு பற்றிய தக்க சான்றுகள் இல்லை, எனினும் வாழ்வியற் கூறுகள், இயக்கற்றல்கள் என்பவற்றை இனங்கண்டு பிறமக்கள் குழுவினருடன் ஒப்புமை காண்பதாலும், தென்னிந்திய ஒளியில் அவற்றை தெளிவுபடுத்துவதனாலுமே அர்த்தம் மிக்க வரலாற்றைக்காண இயலும்.

தனது இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் உணராத மனிதனுக்கு எதிர்காலமில்லை. இது ஒவ்வொரு சமுதாயத்துக்கும் பொருந்தும். எனவே சமுதாயத்தின் பல் கூறுகளை ஆராயப்படும் இத்தருணத்தில் மொழி, அதன் வழக்கு அதன் செழுமை எத்தகைய பாங்கை ஆற்றுகின்றது, என்பதை ஆய்தல் பொருத்தமானதே. ஏனெனில் நாம் ஏலவே குறித்தது போல ஒரு பிரதேசத்தின் மொழிக் களஞ்சியம் அதன் வாழ்வியல் முழுமையை உணர்த்தவல்லது.

மொழி தோன்றி வளர்ந்த வரலாறு மக்களின் மனப்பண்பாட்டையும் சமூக அமைப்பையும் ஒட்டியதாகவே இருந்திருக்கின்றது. கருத்தைப் பிறருக்கு உணர்த்தி, பிறர் கருத்தை தாமும் உணர்ந்தமையாலேயே வளர்ச்சி பெற்றது. மக்கள் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்கின்றனர். ஒரே மொழியை பல் பிரதேசங்களில் பலவாறாகப் பேசுகின்றனர். தமிழகத்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களது மொழி தமிழாயினும் அதனை உணர்த்தும் திறனில் வேறுபாடு உண்டு. பொதுத்தமிழில் இருந்து அவை வேறுபட்டிருத்தல் காணலாம்.

தமிழகத்திலும் சென்னைத் தமிழுக்கும், கோயம்புத்தூர் தமிழுக்கும் வேறுபாடு உண்டு. இலங்கைத் தமிழிலும், மழை நாட்டுத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், கிழக்கு மாகாணத் தமிழ், தென்னிலங்கைத் தமிழ், கரையோரத் தமிழ் எனப் பேசும் முறைமையால் பிரிவுகள் உள்ளன. அவ்வாறே மீனவர் தமிழ், பார்ப்பனர் தமிழ், முஸ்லிம்கள் தமிழ், உத்தியோகத்தர் தமிழ் எனச் சமூக ரீதியிலும், பேசும் மொழி வேறுபட்டிருக்கின்றது. இடம், பழக்கம், சமயம், மக்கள் தொடர்பு, நாகரிகம், தொழில் போன்ற பல காரணங்களால் ஒரு பொது மொழி பல்வகைப்பட்டு ஒலிக்கின்றது. அதனைக் கிளைமொழி என்பர்.

கிளை மொழி என்பது ஓர் இடத்தவர் அல்லது ஓர் இனத்தார் அல்லது கூட்டத்தைச் சார்ந்தவர் அல்லது ஒரு தொழிலைச் சார்ந்தவர் தமக்குள் தடையின்றி விளங்குமாறு இயல்பாகப் பேசிவரும் மொழியாகும். சமுதாயத்தில் உள்ள பல வகைக் குழுக்கள் ஒன்றோடொன்று பழகுவதிலும், உள்ள பல் வகை வேறுபாடுகளே கிளை மொழிகள் பலவாக அமையக் காரணம்.

உடப்புப் பிரதேச மக்கள் வடக்கே பூனைப்பிட்டி, கிழக்கே புளிச்சாக்குளம், தெற்கே பிங்கட்டி ஆகிய பிரதேசங்களுக்கிடையே வாழ்பவர்கள். தொழில், சமயம், வாழ்க்கை முறைகள் என்பவற்றில் ஏனைய கிராமங்களில் இருந்து உடப்பு வேறுபட்டுள்ளது.

மீன்பிடிக் காலங்களில் மீன் பெற அயலூர் மக்கள் வருகின்றனர். நாளாந்தச் சந்தையின் போது அயல் கிராம சிங்களப் பெண்கள் தம் பொருட்களை சந்தைப்படுத்த வருகின்றனர். தமது அத்தியாவசியத் தேவை கருதி, சிலாபம், புத்தளம் ஆகிய நகரங்களுக்கு மக்கள் செல்கின்

றனர். எனினும் இத்தொடர்புகளால் காத்திரமான மாற்றங்கள் மொழிப் பிரயோகத்தில் ஏற்படவில்லையெனக் குறிப்பிடவேண்டியுள்ளது.

மீனவ மக்கள் பெரும்பாலும் உறவினர்கள் ஒரே மதத்தவர்கள் கொண்டு கொடுத்தல் கூட அவர்கள் மட்டத்திலேயே நிகழ்கின்றது. அயல் பிரதேசங்களுடன் கொண்டு கொடுத்தல் அறவே இல்லை. கல்வி பெற்றோர் சிலரே. ஆகவே அவர்கள் மொழி பெரும்பாலும், பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. எனவே உடப்பு மக்களின் பேச்சு மொழி ஒரு கிளை மொழியாக இன்றும் நின்று நிலவி வருகின்றது.

ஒரே மொழி பேசும் மக்களாயிருந்தாலும் கூட அவர்கள் தமது பிரதேச வாழ்க்கையினூடே வளர்ந்த நடையையும் பிரத்யேகமான சொல் வழக்கையும் கொண்டிருப்பது கண் கூடான உண்மை. உடப்பு மக்களுக்கே உரிய வகையில் அவர்களது மொழி சில பிரத்தியேகமான சொல்வழக்கு களை கொண்டிருக்கின்றது. அது அவர்களது வட்டாரப் பண்பையும், தனித்துவப் போக்கையும் சுட்டிக் காட்டுகின்றது. இங்கு பொது மொழி வழக்குகள், சிறப்பு மொழி வழக்குகள், நாடக வளர்ச்சி என்ற தலைப்புக் களின் கீழ் உடப்புத் தமிழ் மொழி வழக்குகளையும், நாடக வளர்ச்சி யையும் ஆராய முனைகிறோம். சிலவற்றை ஆய்வு என்பதனை விட அறிமுகம் என்று கொள்ளலே பொருந்தும்.

## பொது மொழி வழக்குகள்

உடப்பில் வாழ்கின்ற மக்கள் யாவரும் பொதுவாக வழங்கி, விளங்குகின்ற வழக்குகள் பொது மொழி வழக்குகள் எனப்படுகின்றன. பற்பல தொழில், சமய நிலையில் உள்ள மக்களும், இவற்றை வழங்குகின்றனர். நடைமுறை வழக்குகள் அதற்குரிய இலக்கண பண்புடன் வழங்கப்படுகின்றன.

பொது மொழி வழக்குகள் பெரும்பாலானவை திரிந்தே ஒலிக்கின்றன. பல ஒலிகள் சேர்ந்து அமைந்த ஒரு சொல்லில் சில ஒலிகள் ஒலிக்கப் படாமல் விடுதலும் உண்டு. இது சொல்லின் திரிபு எனப்படும் மீண்டும் மீண்டும் பயிலும் சொற்கள் ஒலித்திரிபு அடைவது இயற்கை. அவர்கள் மொழியை கேட்கும் வெளியார் அதனைக் கொச்சை மொழி எனக் கருதலும் உண்டு.

முயற்சி, எளிமை, உணர்ச்சி, வெளிப்பாடு, துரித செயல்கள், ஒப்புமை யாக்கம், தெளிவுறுத்தல், சோம்பல், தனித்துவம், வாழ் நிலைகள் ஆகிய இன்னோரன்ன காரணிகளால் சொற்கள் ஒலித்திரிபு அடைகின்றன.

எல்லா மொழிகளிலும் இலக்கண சுத்தமாக ஒலிப்போர் இல்லை. சொற்கள் ஒலி திரிந்தே ஒலிக்கின்றன. தன்மை, முன்னிலை, பன்மைப் பெயர்கள், வேற்றுமை பெறும்போது அமையும் மாற்றங்கள், முக்கால இடைநிலை பெற்று வினை முற்றுக்கள் ஒலிக்கும்போது பெறும் ஒலியியல் மாற்றங்கள் இங்கு ஏற்படுகின்றன.

தன்மைப் பெயர்களில் பன்மை படிவங்களிலேயே மாறுதல் உண்டு. நாம் என்பது நாம என்றும், நாங்கள் என்பது நாங்க என்றும் ஒலிக்கின்றன. இறந்த கால தன்மை ஒருமை வினை முற்றுக்களில் தன்மை விகுதி திரிந்து படித்தேன் என்பது படிச்சன் என வருகின்றது. தன்மைப் பன்மைப் பெயர்களின் படித்தோம் என்பது தன்மை ஒருமைப் பெயர்களைப் போலவே படிச்சம் என திரிந்தொளிக்கிறது. அதுபோலவே தன்மை ஒருமை நிகழ்கால வினை முற்றுக்கள் போகின்றேன் என்பது போறன் எனவும், படிக்கிறேன் என்பது படிக்கிறன் எனவும், தன்மைப் பன்மை நிகழ்கால வினைமுற்றுகள் போகிறோம் என்பது போறம் எனவும், படிக் கிறோம் என்பது படிக்கிறம் எனவும், எதிர்கால தன்மை வினைமுற்றுகள் போவேன் என்பது போவன் எனவும், போவோம் என்பது போவம் எனவும் திரிந்து ஒலிக்கும்.

முன்னிலைப் பெயர்களும் திரிபுபடுவதைக் காணலாம். உயர்ந்தோர் தமக்குக் கீழுள்ளவரை சம தகுதி கொண்டவர்களை நீம என அழைப்பதுண்டு. நாம் என்பதன் முன்னிலைப் படிவம் நீம் ஆக முன்னர் இருந்திருக்க வேண்டும். நீம் என்ற முன்னிலைப் பெயர் சீவக சிந்தாமணியிலும் வருகிறது (மு.வரதராசன், 1993). மலையாளம், கன்னட மொழியிலும் நீம் என்ற முன்னிலை வடிவம் பயன்பட்டு வருகின்றது. முன்னிலை இறந்த கால வினை முற்றுக்கள் வந்தாய் என்பது வந்தா என்றும், வந்தீர்கள் என்பது வந்தீம எனவும், போனீர்கள் என்பது போனீங்க எனவும் வருவதுடன். முன்னிலை நிகழ்கால வினைமுற்றுக்கள் போகிறாய் என்பது போறா என்றும், படிக்கிறாய் என்பது படிக்கிறா எனவும், போகிறீர் கள் என்பது போறீம, போறியள், போறிய எனவும் பயன்படுத்தப்படு கின்றன. அவ்வாறே முன்னிலை எதிர்கால வினைமுற்றுக்கள் போவாய்

என்பது போவா என்றும் போவீர்கள் என்பது போவீம, போவியள், போவிய எனவும் திரிந்து ஒலிக்கின்றது.

படர்க்கைப் பெயர்களான அவள், அவர்கள் என்பன உச்சரிப்பில் மாறுபட்டு ஒலிக்கின்றன. அவள்-அவ என்றும், அவர்கள், இவர்கள் என்பன அவங்க, இவங்க அல்லது அவுங்க, இவுங்க என்றும் வழங்கப் படுகின்றன. உடப்பில் அவ்வ என்பது பெண்பாலை மட்டும் குறிக்கின்றது. அவ்வாறே போகிறான்-போறான் எனவும், போகிறாள்-போகிறா என்றும் போகிறார்கள்-போறாங்க, போகிறார்கள்-போராவ எனவும் ஓலிக்கின்றது.

அது, இது போன்ற சொற்கள் அறு, இரு என்றும், அதுகள், இதுகள் என்பன அதுக, இதுக அருவ, இருவ எனவும் உச்சரிக்கப் படுகின்றன. அஃறிணைச் சுட்டுப் பெயர்களை மரியாதையை, அன்பு கருதி மனிதருக்கும் பயன்படுத்துகின்றனர். அதாவது அது இப்பதான் வந்திச்சுது, இதுட கொணமே இப்படித்தான் என்ற சொற்தொடர்கள் புழக்கத்தில் உள்ளன.

உடப்பு மக்களுடைய பேச்சு வழக்கில் பல பிரத்தியேக வழக்குகள் பயின்று வருகின்றன. கருத்துக்களை தெளிவாக, முனைப்பாக வெளிப் படுத்த இவை துணைபுரிகின்றன. இவற்றுள் சில திரிந்தவை. அடியில் என்ற சொல் அடிய என வழங்குகின்றது. அண்மையக் குறிக்க இதனைப் பயன்படுத்துகின்றனர். தோணியருகில்-தோணியடிய எனவும், சந்தை யருகில்-சந்தையடிய எனவும் வருவதுண்டு. அவ்வாறே அதிக சத்தமிட்டு -பெலக்கனா எனவும், மிக விரைவாக-சுறுக்கனா எனவும் பயன்படு கின்றது. இடத்தைச் சுட்டும் பெயர்கள் அங்கு என்பது அங்கிண, அங்கிட்டு எனவும், இங்கு என்பது இங்கின, இங்கிட்டு என பயன்படுகின்றது. வரவேண்டாம்-வாராணா, இருக்க வேண்டாம்-இருக்காணா போன்றும், வர இயலுமா-வரலுமா, இருக்க இயலுமா-இருக்கலுமா எனவும் திரிபுபட்டு ஒலிக்கின்றன.

உடப்புப் பிரதேசத் தமிழில் இரட்டைக் கிளவிகள் பல பயின்று வருகின்றன. மக்கள் தமது மொழி, அர்த்த புஷ்டியும், ஆழமும் புலப்படும், நறுக்கென அமைய இரட்டைக் கிளவிகளை பயன்படுத்துகின்றனர். உதாரணம். அவுக்கெண்டு, அவுக் அவுக் கெண்டு, கறட்டுக் கறட்டு, கறு கறு, கலாரெண்டு, கிறிச்சுக் கிறிச்சு, சரசர, சடாஸ் எண்டு, சடக்கு சடக்கு, தடக்குத் தடக்கு, தாறு தாறு, படக்குப் படக்கு, வக்கு வக்கெண்டு, வறுவறுண்டு, வழு வழுண்டு, நக நக, நரு நரு, நொளு நொளு, மற மற,

மூசு மூசு என்பன, இவை குறிப்புப் பொருள் உணர்த்துகின்றன. வழக்கு மொழிக்கு கவர்ச்சியும் சுவையும் அளிக்க வல்லன.

உடப்பு மரபுச்சொற்கள் குறிப்பாழம்மிக்கவை. நுட்பமாகப் பொருள் உணர்த்துபவை. அதாவது அமுக்குக் கோழி தந்திரக்காரன், ஆத்துவா காக்க பேராசைக்காரன், இருதல மணியம் நடிப்பவன், தெம்மாடி - மோளை - முட்டாள் போன்ற இன்னும் பல மரபுச் சொற்கள் பயன்பாட்டில் உள்ளன.

இணை மொழிகள் பேச்சு மொழி உணர்ச்சித் தோண்டுதலால் தோன்றுவது. விவரணத்தின் போது இணை மொழிகள் இயல்பாக அமைந்து விளக்கத்திற்கு அணிகலனாக அமைகின்றன. உடப்பிலும் அட்டா துட்டி, அரணி பொறணி குண்டு குழி, தாட்டுப் பூட்டு போன்ற இன்னும் பல இணைமொழிகளின் தொகுதி உபயோகத்தில் உள்ளன. பொது வழக்குகளில் வேறு சில பண்புகள் ஒலியியல் மாற்றம் பெறுகின்றன. இளங்காரம்-எளக்காரம், சிவப்பு-செவப்பு, பிறகு-பெறகு போன்று மாற்றமடைவதும் உண்டு.

**சிறப்பு மொழி வழக்குகள்**

சிறப்பு மொழி வழக்குகள் என இங்கு பொருளியல் சார் மொழி வழக்குகளே அழைக்கப்படுகின்றன. இங்கு மீன்களின் பெயர்களைத் தவிர ஏனையவை பெரும்பாலும் மீன்பிடித் தொழிலுடன் சம்பந்தப் பட்டவர்கள மட்டுமே பொருள் விளங்கக் கூடியதாக இருக்கும். ஒரு குழுவினர் தமக்கு மட்டுமே சிறப்பாகப் புரியும் வண்ணம் பயிலப் பெறும் மொழியை குறுமொழி என்பர் மோழியியலாளர். பொது மொழியிலிருந்து வேறுபாட்டுச் செயற்கையாக அமைக்கப்படும் மொழிக் கூறுகள் குறுமொழி எனப்படும். ஆகவே கரவலைத் தொழிலில் பயன்படுத்தப்படும் தொழில் சார் சொற்கள் குறுமொழி என்ற வகைக்குள் அடங்குபவை. இவற்றை பொருளியல் சார் மொழி வழக்கு எனலாம்.

உடப்பு மக்களில் சுமார் 95% மானோர் மீனவ சமூகத்தினர் ஆவர். மீனவத் தொழிலே அவர்களது வாழ்நிலை, பண்பாட்டைத் தீர்மானிக் கின்றது. மீனவத் தொழில் சார்பாக அவர்கள் பயன்படுத்தும் தொழில்கள், பெயர்கள், அவர்கள் பிடிக்கும் மீன்களின் வகைகளின் பெயர்கள் மிக

ஏராளமானவை. அவற்றை விளங்கிக் கொள்ளல், உடப்பு என்னும் தனித்துவமிக்க கிராமத்தையே விளங்கிக் கொல்வதற்கே சமமாகும்.

உடப்பு பிரதேச மீனவர்களின் தொழில் சார் மொழி வழக்குகளைப் தொழில் சார் உறவு நிலைகள், தொழிற்கருவிகள், கால நிலைகள், மீன்கள் மற்றும் தொழில் சார்ந்த ஏனைய வழக்குகள் போன்றவற்றுடன் தொடர்பு படுத்தி ஆய்வது சிறப்பானது.

தொழில் சார் உறவு நிலை இங்கு முக்கியமானது. மீன்பிடித் தொழில் என்பது ஒரு கூட்டு முயற்சியே ஏறத்தாழ முப்பது பேர் கொண்ட மீனவர்கள், அவர்களை மேற்பார்வை செய்து அம்முயற்சியை வெற்றி கரமாக நிறைவேற்றும் முகாமையாளர்கள் (மண்டாடி), லட்சக்கணக்கில் முதலீடு செய்யும் முதலாளி (சம்மட்டி) ஆகியோரைக் கொண்ட குழுவின் இடையறாத ஊக்க உழைப்பினாலையே ஒரு பாதை பெரும் செல்வத்தைத் திரட்டுகிறது. இவர்கள் அனைவரையும் குறிப்பதற்காக உரிய பரியாயச் சொற்கள் உடப்பில் வழங்கப்படுகின்றன. அதாவது

| | | |
|---|---|---|
| சம்மாட்டி (சம்மானோட்டி) | - | கரவலைச் சொந்தக்காரன் |
| மண்டாடி (மன்றாடி) | - | கரைவலையை நடத்துபவன். |
| உள் வல மன்டாடி | - | உள் வலைக்கு பொறுப்பானவர் |
| மே(ல்)வல மண்டாடி | - | மேல் வலைக்கு பொறுப்பானவர் |
| கரை வல மண்டாடி | - | கரை வலைக்கு பொறுப்பானவர் |
| சம்மான் | - | தண்டு இழுப்பவன் |
| இழுப்புக் காரன் | - | வலை இழுக்கும் மீனவன் |

மீனவர்களின் பிரதான கருவிகள் பாதையும் (வள்ளம்), வலையுமாகும். பாதை பல்வேறு பிரிவுகளைக் கொண்ட சாதனம். அவ்வாறே வலையிலும் பல கூறுகள் உள்ளன. இந்தக் கூறுகள் பற்றி மீனவர்கள் நுணுக்கமான அறிவு கொண்டிருத்தல் இயற்கையே. சத்திர சிகிச்சை நிபுணன் ஒருவன் உடற்கூற்றியலில் புலமை பெற்று ஒவ்வொரு குருதிக் குழாய்களையும் கூட தெரிந்திருத்தல் போல மீனவர்களும் பாதை, வலை, அவை பற்றிய ஆக்கம் திருத்தம் பற்றியெல்லாம் மிக நன்கு அறிந்து வைத்துள்ளனர். அவற்றின் வழக்குகளை முழுமையாக இல்லாவிடினும் ஓரளவாவது தருதல் வேண்டும். தொழிற் கருவிகளுடன் தொடர்பு பட்ட வழக்குகளை பாதைகள், வலைகள், தொழில் வினைமைகள் என மூன்று பகுப்புகளாக

நோக்கப்படுகிறது. இவற்றின் வழக்குகள் முடிவில் உடப்புச் சொற் களஞ்சியத்தில் தரப்படுகின்றன.

காலநிலையுடன் தொடர்புபட்ட வழக்குகள் இங்கு பிரதானமானவை, காற்று, கடல் நீரோட்டம், வானிலை, நீர்நிலைகளின் தன்மை போன்றன சிறப்பான பெயர்களைக் கொண்டே அழைக்கப் படுகின்றன. தென் மேல் பருவக்காற்று-கச்சான் காத்து என்றும், வடகீழ் பருவக்காற்று-வாடக் காத்து என்றும், தென்மேல் நீரோட்டம், வட கீழ் நீரோட்டம் என்பன முறையே சோழ நீர், வாடநீர் எனவும் அழைக்கப்படுகிறது.குறித்த திசையை நோக்கிய கடல் நீரோட்டம் நீர் பாடு என்றும், நீரோட்ட வேகம் அதிகம் நீர் பாடு ஓரம், மப்பும் மந்தாரமும்-மூசாப்பு, மாலையின் பின்பகுதி (செவ்வானம்) செக்கல், இருட்டு-கருக்கல் என்றவாறு வானிலையும் வழங்கப்படுகிறது. சாதாரண நிலையிலிருந்து அலை கொந்தளித்தல், வெள்ளம் மேலேறுதல்-பெருநீர் அல்லது வாவாட்டம், அலைவாங்கல், எத்தகைய நீரோட்ட மு‌மின்றி இருத்தல்பட்ட நீர் அல்லது தந்திமி, ஆற்றுத் தண்ணீர் கடலில் பாய்தல் நுரை எழல்நத்தண்ணி, கடல் நீர் தெளிவின்மை கலக்கு என நீர்நிலைகளையும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர்.

உடப்பு மீனவர்கள் பாரம்பரியமாகவே மீன்பிடித் தொழிலில் கைதேர்ந்தவர்கள். மீன்பிடித்தலை உடப்பில் மட்டுமன்றி, மன்னார், பேசாலை, முல்லைத்தீவு, நாயாறு, திருகோணமலை, புல்மோட்டை, வாகரை போன்ற வடகிழக்குத் திக்குகளிலும் மேற்கொள்கின்றனர். மீன்களுக்குப் பெயர்கள் பொதுவாக வழங்கப்பட்டபோதும் சிறப்பாக வழங்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. முடிவில் உடப்புச் சொற் களஞ்சியத்தில் தரப்படும் பெயர்களுட் பல சிறப்பானவை. உடப்புக்கே குறிப்பானவை. சில யாவர்க்கும் பொதுவானவையாக அமையக்கூடும்.

இன்னும் பல தொழில் சார்ந்த ஏனைய வழக்குகளும் உள்ளன. அவை எல்லைகள், பொருட்கள் போன்றன. இவற்றுக்கு சிறப்பான வழக்குகளும் உள. அதாவது, மீன் பிடிக்கும் எல்லைப் பிரதேசம் பாடு என்றும், ஆற்றுவாய் (களப்புப் பகுதி) ஆத்துவா, கடலில் தெரியும் மீன்களின் எண்ணை - மாம்பாடு, வலையிழுக்கும் போது பாடும் நாட்டார் பாடல் அம்பா, பாதையை நீராட்டும் போது பயன்படுத்தப்படும் பல மணப் பொருள்கள் சேர்ந்து அரைக்கப்பட்ட கலவைப் பொருள் பெருக்கி,

வலை இழுக்கும் பட்டி பட்டியல், சம்மாட்டியிடம் பெற்ற கடன்- நிந்தம், பற்றுவழி, உழைப்பில்லாத போது பெறும் பணம் பத்து வழி என பல சிறப்பான மீன்பிடி தொழில்சார் வழக்குகளைக் காணலாம்.

சமுதாயத்தின் திரண்ட அறிவு, பாரம்பரிய அனுபவத்திறன், சிறு சிறு வாக்கியங்கள் ஊடாக பாரம்பரியமாக உணர்த்தப்பெற்றும், உணரப் பெற்றும் வருகின்றன. இவையே பழமொழிகள் ஆகும். சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தன, மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து நற்செயலைத்தூண்டச் செய்வன, பழமை நம்பிக்கைகளையும் வரலாற் றினையும், பண்பாட்டினையும், மனித உணர்வுகளையும் காட்டுபவை பழமொழிகள்.

உடப்புப் பிரதேச மக்கள் தென்னிந்திய பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுபவர்கள். புராதன மொழியியற் கூறுகளுள் ஒன்றான பழமொழி கள் அவர்களது நாளாந்த வாழ்வில் அனுபவத்தேறல்களாக நடமிடக் காணலாம். பறவைகள், செடிகொடிகள், மிருகங்கள், இயற்கை, குடும்பம், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், தத்துவம், அறவுணர்வு, மக்கள் இயல்புகள், போதனைகள், சமுதாய எள்ளல், சமூக இலக்குகள் போன்றவை அவர்களது பழமொழிகளில் முக்கிய கூறுகளாக உள்ளன. கேட்கும் தோறும் புதுச்சுவை பயக்கும் அப்பழமொழிகள் தமிழிற்குக் கிடைத்துள்ள கருவூலம் எனில் அதில் தவறொன்றும் இல்லை.

மனித மனத்தின் ஆராயும் திறனை வளர்க்கவும் விவேகத்திறனை இனம்காணவும் புதிர்மைப் பண்பு கொண்ட விடுகதைகள் உதவுகின்றன. அவை அறிவூட்டுகின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கப் பயன்படுகின்றன. விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது, மறை பொருளின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதையின் பிரதான பண்புகள் பொருட்களிடையே ஒப்புமை காணலும், உருவகப்படுத்தலுமாகும்.

உடப்பு பிரதேச ஆண்மக்கள் மீன்பிடித்தல் தொழிலுக்காக பாடு களுக்குச் செல்கின்றனர். பலரின் கூட்டுமுயற்சி அத்தொழில், மீன் வளைப்பதற்கு முன் அதற்கான நேரம் வரும்வரை கடற்கரை மணலில் அமர்ந்து பொழுதைப் போக்குவர். அந்நேரம் விடுகதைகள் பிறக்கின்றன. இவை நாட்டார் பாடலைப் போலன்றி ஏற்கனவே பயின்று பதிந்து வைத்தவைகளே. மூத்தாரின் நொடிகள் இங்கு பறந்து விளையாடும். சில

சமயங்களில் மீன் வாடிகளில்தங்க நேர்வதும், பொழுதைக் கழிக்க நேர்வதும், ஏனையோரின் விவேகத்திறனைப் பரீட்சிக்க முயல்வதும், விடுகதைகள் தோன்றக் காரணமாகின்றன. வெடித்துச் சிதறும் வித்துக்கள் போல இவை பல்லிடங்களிலும் பரந்து பொதிகின்றன.

உவமைத் தொடர்கள் மொழிப் பிரயோக உத்திகளுள் ஒன்று. மற்றப் பொருள்களுடன் ஒப்புமை காட்டி நறுக்குத் தெரித்தாற் போல் முனைப்பாக தன் கருத்தை வலியுறுத்த உவமைகள் உதவுகின்றன. இயற்கைப் பொருட் களிடையே உவமை கண்டு அவற்றை வழக்காற்றில் பயன்படுத்தும் ஆற்றல் உடப்பு மக்களிடையே உண்டு என்பதைப் இங்கு பயன்பாட்டில் உள்ள உவமைத்தொடர்கள் நிரூபிக்கின்றனர். அதாவது அடப்படுத்த கோழி போல, சந்தியில முந்தி அவுத்தது போல, நார வாங்கின கெளிறு போல, ஓட்டப் பானைக்குள் நண்டு புகுந்தது போல போன்ற இன்னும் பல உவமைத் தொடர்கள் வழக்கில் உள்ளதைக் காணலாம்.

உடப்புப் பிரதேச வழக்காறு தனித்துவமிக்கது. தனித்துவமிக்க மக்கள் தொகுதியின் ஆணி வேராகத் திகழ்வது அதனை வெகு குறுகிய எனது வாழ்க்கைக் காலத்தில் தேடித் திரட்டிச் சமர்ப்பிப்பதில் பூரண நிறையைக் காண்பது அரிது. இல்லாததை விட இருப்பதே பயன் தருமாதலால் சமூக அக்கறை கருதி இவை திரட்டப்பட்டன. தமிழ்ப் பொதுமொழியுடன் இந்த வழக்காறுகளும் ஆற்றல் மிகு இலக்கியங்களூடாக இணைக்கப்பட வேண்டும் என்பது முக்கியம். சிற்றூர்களின் ஆற்றல் மிக்க சொற்கள் முற்றூர்களுக்கு முழுதுமாய்ச் சென்றடைதல், எமது வழக்காற்றிற்குப் பெருமை தேடித் தருவதாகும். ஆற்றல் மிக்க இளஞ்சந்ததியினர் மொழி வழக்காய்வின் ஆர்வத்துடன் பங்கு பற்றுவதுடன் தாம் படைக்கும் இலக்கியங்கள் இந்தச் சொற்தொகுதியைப் பயன்படுத்தல் வேண்டும். எமது தாய் மொழிக்கும் நாம் பிறந்த மண்ணிற்கும் நாம் ஆற்றுகின்ற பயன் மிக்க தொண்டு அதுவே.

**கிராமத்தின் கலைவளம்**

நாடகக் கலையானது ஒரு சமூகத்தின் கலை, கலாசார பண்பாடுகளை வெளிக்கொணரும் சாதனம் எனலாம். இதனடிப்படையில் உலகிலுள்ள எல்லா சமூகத்திலும் நாடக மரபுகள் காணப்படுவதை அவதானிக்கலாம். இதற்கு மூலகாரணமாக அச்சமூகங்களின் சமயச் சடங்குகள், ஆலய

விழாக்கள், மந்திரச்சடங்குகள் என்பவற்றின் ஆரம்பங்கள் நாடகமாக மலர்ந்துள்ளன என்பதை பேராசிரியர் சி.மௌனகுரு ஈழத்தின் நாடக அரங்கு என்ற நூலில் விபரித்துள்ளார்.

சடங்குகளின் அடியாக நாடகம் உருவாகியது எனவும் நாடகத்தின் தோற்றம் பற்றிய பல்வேறு கொள்கைகள் இன்று நின்று நிலவுகின்றன. இன் விஞ்ஞான ரீதியானதும் பொதுவாகப் பலராலும் ஏற்கப்படுவதுமான கொள்கை சடங்குகளின் அடியாக நாடகம் உருவாகியது என்னும் கொள்கையை பேராசிரியர் சி.மௌனகுரு வரையறை செய்துள்ளார்.

இதன் பிரகாரம் உடப்பூர் கிராமத்தில் பாரம்பரியமாக நடாத்தப்படும் தீமிதிப்பு விழாவின் போது நடித்துக் காட்டப்படும் பஞ்சபாண்டவர் வனம் புகுதல், அருச்சுனன் தவநிலை, கர்ணன், துரியோதனன் படு களங்கள் போன்ற காட்சிகளும், காளிகோயில் வேள்வித் திருவிழாவில் இடம் பெறும் கும்மியாடுதல், மஞ்சள் நீராடுதல் என்பனவும், மாந்திரீகச் சடங்குகளில் பேய் பிடித்து அடித்தல், உருப்பெற்றாடுதல் (சாமியாடுதல்) வேப்பிலை அடித்தல், கோலாட்டங்கள், கரகாட்டங்கள், காவடியாடுதல், அக்கினிச்சட்டி எடுத்தல் போன்ற சடங்கு முறைகளை நோக்குமிடத்து, உடப்பூர் நாடகங்கள் இதன் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ளன என்பதை மெய்மைப்படுத்துகின்றன. நாடமென்பது ஒரு சமூக பிரதி பலிப்பே சமூக கலை, கலாசார பண்பாடுகளை எடுத்துக் காட்டும் என்பதை கலைமாமணி கவிஞன் கு.சா. கிருஸ்ணமூர்த்தி தமிழ் நாடக வரலாறு என்ற தனது நூலில் பின்வருமாறு கூறியுள்ளதைக் காணலாம்.

நாடகம் நாட்டிற்கு அணிகலம். நாகரீகத்தின் அளவுகோல். நாட்டின் பிரதிபலிப்பு பாமரர்களின் பல்கலைக்கழகம், சமுதாய சீர்கேடுகளை தகர்க்கும் வாள்வீச்சு இதய நாதத்தின் எழுச்சி, காலத்தின் கண்ணாடி லட்சியக் கனவுகளையெல்லாம் ஈடேற்றி வைக்கும் அற்புத சாதனம். வாழ்க்கையின் விளக்கம், வரலாற்றின் பொன்னேடு, கற்பனைக் கருவூலங் களை விளக்கும் அற்புத ஒளிவிளக்கு, உலகக் கலை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட உயிரோவியம். ஞானக் கலை புகட்டும் நற்பள்ளி, காதற்கருவூலம், கலைகளின் பிறப்பிடம், தத்துவங்களின் சித்திரக் கோவை, உண்மையின் ஒளிப்பிழம்பு, உணர்ச்சிகளின் உயிர்த்துடிப்பு என இன்னும் எத்தனையோ வர்ணனைகளை அடுக்கிப் போகலாம் எனக் கூறியுள்ளார்.

இவருடைய கூற்றுக்களை நோக்குமிடத்து உடப்பு மக்களின் புராண நாடகங்கள் மூலம் பக்தி, சமய, நம்பிக்கைகள், மதம் மாற்ற முடியாத உறுதி, அறிவு வெளிப்பாடு கலையார்வம் தனித்துவமான கலை, கலாசார பண்புகள் என்பன அவரின் கூற்றை தெளிவுபடுத்துகின்றன.

இவ்வூர் மக்கள் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரக் கரையிலுள்ள அக்காமடம், தங்கச்சிமடம், சேதுக்கரை போன்ற கிராமங்களிலிருந்து வந்தவர்களென அறியப்படுகிறது. இவர்கள் இலங்கை வந்தபொழுது தங்களின் குல தெய்வ வழிபாட்டையும், சமய, சடங்கு, முறைகளையும், மந்திரகச் சடங்கு முறைகளையும், நாடக முறைகளையும் கொண்டு வந்திருக்கலாம் எனவும் அறிய முடிகிறது. ஏனெனில் இங்கு காணப்படும் காளியம்மன் ஆலயத்தின் சூழலிலுள்ள நிலங்கள் காமுண்டிக் காணிகள் எனவும் அழைக்கப்படுகின்றது. காமுண்டிக் காணி என்பது காமன் கூத்து நடாத்தப்பட்ட இடமென நேர்காணல் மூலம் அறிய முடிகின்றது. எனவே காமன் கூத்து இன்றும் சேதுக்கரையில் நடாத்தப்பட்டு வருகின்றது. அங்கிருந்து எம் முன்னோர் இக்கூத்தினை இங்கு நடாத்தி இருக்கலாம் என்பதில் வியப்பில்லை.

நாடகம் பயிலப்படும் நிலையில் அது முழுக்க முழுக்க ஒரு சமூக நிறுவனமாகவே உள்ளது. நாடகம் போடப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் தேவை. பெரும்பாலும் முழுச் சமூகமும் ஈடுபடும் சந்தர்ப்பமாகவே அது இருக்கும். பாரம்பரிய நாடுகளில் அது மதச்சூழலாகவே இருக்கும். எனவே நாடகத்தை ஒரு சமூக நடவடிக்கை என்ற நிலையிலும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

உடப்பூர் மக்கள் ஒருமித்து சமூகமளிக்கினற சந்தர்ப்பங்கள் அனேகம் உண்டு. அதாவது ஆடித்திருவிழா, வேள்வித்திருவிழா, மாசிமகத் தீர்த்தம் என்பன முக்கியமாக குறிப்பிடத்தக்கவை. இதிலிருந்து உடப்பு நாடக வரலாற்றை உற்று நோக்குகையில் காலத்துக்குக் காலம் இவ்வூர் இளைஞர் குழுவினரால் பல்வேறுபட்ட நாடகங்கள் பயிற்றுவிக்கப்பட்டு மேற் குறிப்பிட்ட விழாக்களில் நடித்துக் காட்டப் படுகின்றது. எனவே உடப்பூர் மக்கள் நாடகத்துறையில் கைதேர்ந்தவர்கள் என்பதோடு இவர்களின் நாடக வரலாறு தொன்மை வாய்ந்ததெனவும் காட்டுகின்றது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய Drama in Ancient Tamil Society என்ற நூலில் தமிழ் நாடகத்துக்கு தெருக்கூத்து மூலதனமானது. அதற்கான

மூலாதாரத்தை இந்தியாவிலுள்ள பெரம்பூரிலும், சேயூரிலும் நடக்கும் பாரதக்கதை படித்தல் சடங்குகளிலிருந்து கூறுகிறார். அவர் கூறும் உண்மை உடப்பூரில் இடம்பெற்றுள்ளது என்பதை அறியலாம். அதாவது உடப்பு திரௌபதாதேவி ஆலயத்தில் நடைபெறுகின்ற ஆடித்திருவிழாவின் போது பதினெட்டு நாட்கள் பாரதக்கதை படித்து விழா கொண்டாடப் படுகின்றது. அந்நாட்களில் பதினைந்தாம் நாள் பஞ்சபாண்டவர் வனம் புகும் காட்சி நாடகத் தன்மை வாய்ந்ததே. இக்காட்சிக்கு பஞ்சபாண்டவராக ஐந்து பேரும்திரௌபததேவியாக ஒருவரும் சமூகமளித்து காட்சியை நடித்தே காட்டுவர். இது போன்று பதினாறாம் நாள் அருச்சுனன் தவநிலைக் காட்சிக்காக காவியுடை அணிந்து அருச்சுணனாக நடிப்பார். இவருக்கான தவநிலை மரத்தில் படிகளை அமைத்து அதனை உறுதியாக நட்டி ஒவ்வொரு படி ஏற்றுக்கும் ஒவ்வொரு பாடல் பாடி உச்சியைச் சென்ற டைந்து தவநிலையில் இறைவனை நினைந்துருகி பாடுவார். அவ்வேளை சிவனும் சக்தியுமாக வேடமிட்டோர் தோன்றி அவரது எண்ணத்தை பூர்த்தி செய்யும் காட்சியும் நடித்துக் காட்டப்படும்.

மேலும் பதினேழாம் நாள் போர்க்களக் காட்சி காட்டப்படும். இந்நாள் கர்ணனுக்கான போர் நாள். இங்கு கர்ணனாக ஒருவரும் அருச்சுனனாக இன்னொருவரும் காட்சியை நடித்துக் காட்டுவர். இதுவொரு படுகளக் காட்சியாகும். இது போன்று பதினெட்டாம் நாளும் போர்க்களக் காட்சியே. இதில் துரியோதனனாக ஒருவரும் வீமனாக மற்றொருவரும் போர் செய்வது போன்ற பாவனைக் காட்சியாகும். இப்போரில் துரியோதனன் இறப்பதும் அவனது தொடையைப் பிளந்து இரத்தம் எடுத்து திரௌபதை யாக வருபவர் தலையில் தேய்த்து கூந்தலை முடிக்கும் காட்சியும் நடித்துக் காட்டப்படுகின்றது.

இக்காட்சிகளை மையமாக வைத்து மேற்கூறப்பட்ட நாட்களின் இரவு வேளைகளில் பாரதக்கதையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட நாடகங்கள் ஆரம்ப காலந்தொட்டு நடாத்திக் காட்டப்பட்டு வருகின்றன. அவ்வாறான நாடகங்கள் பின்வருமாறு: தர்மநாடகம், விராடபருவம், அல்லி அருச்சுனா, நளாயினி, துகிலுரிவு, அபிமன்யுசுந்தரி, கர்ணன், வனவாசம், பாரதப்போர், இளம்பஞ்சபாண்டவர், சீமந்தனி போன்ற நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டு வந்திருக்கின்றது. இது உடப்புக் கிராமத்தில் பழமையான நாடக வரலாறு உண்டு என்பதை தெளிவாக்கு கின்றது.

உடப்பூர் நாடக வரலாறு எப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கு எச்சான்றுகளும் இல்லை. ஏனைய பிரதேசங்களில் உள்ளது போல இவ்வூரிலும் இலக்கியம், கலாசாரம், மொழி, சமயம் போன்ற அனைத்து துறைகளைப் பற்றி தெளிவான வரலாறு இல்லாதபடியால் நாடக ஆய்வில் குழப்ப நிலையே காணப்படுகின்றது.

திருவாளர் செம்பலிங்கம் பிறைசூடி (உடப்பூர் உடையார்) என்பவரின் நேர்காணல்படி 1920ம் ஆண்டு முன்னேஸ்வரத் திருவிழாவின்போது அரிச்சந்திரா, வாளவிமன், இரணியன் போன்ற நாடகங்களை உடப்பூர் நாடக மன்றத்தார் நடாத்திக் காட்டினர். அதை தான் பார்த்ததாக கூறு கின்றார். இந்நாடகத்தை முன்னேஸ்வரத்தைச் சூழவுள்ள மக்களும் ரசித்துப் பார்த்ததாகவும் கூறுகின்றார்.மேலும் இந்நாடகம் நான்கு பக்கமும் திறக்கப்பட்ட, மறைப்புக்கள் இல்லாமல் தரையில் நடித்துக் காட்டப்பட்டது. நடிகர்கள் தோன்றும் முன் இருவர் வெள்ளைச் சீலையினை விரித்துப் பிடித்து காட்சிக்கு காட்சி நடிகர்களை அறிமுகம் செய்து திரையை நீங்கிக் கொள்வர்.

நடிகர்கள் முதலில் தோன்றும் போது தங்கள் பாத்திரப் படைப்பினை அறிமுகப்படுத்தி தங்கள் பாவனைகளைக் காட்டி பாடியாடிக் கொண்டே நடித்துள்ளனர். இவ்வகையான கூத்தினை வடமோடி என்று கூறுவர். இந்நாடக உடையலங்காரம் அதாவது மணி உடுப்புக்கள் அணிந்து முடிகள் மரத்தினால் செய்யப்பட்டு கண்ணாடி பதிக்கப்பட்டவையாக இருந்துள்ளன. ஒப்பனைகள் முத்து வெள்ளை கொண்டு செப்பனிடப் பட்டுள்ளது. பெண் வேடத்தை ஆண்களே ஏற்றுள்ளனர். பக்க வாத்தியங் களாக மத்தளம், கைமணி, இரண்டுமே, இந்நாடகங்கள் அண்ணாவிமார் களால் நெறியாக்கப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நாடகம் கூத்து என்றவகையில் உருவாக்கப்பட்டதே. கூத்து என்பது உரை நடையே இல்லாமல் பெரும்பாலும் பாடல்களும் விருத்தங்களும் நிறைந்தவையாக இருந்ததால் அதில் வரும் பாத்திரங்கள் அனைவருமே அந்த பாடல்களில் வரும் தாள சந்த பேதங்களுக் கேற்ப மேடையில் ஆடிக்கொண்டே நடிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தது என தமிழ் நாடகம் வரலாறு என்ற தனது நூலில் கவிஞர் கு.சா. கிருஷ்ண மூர்த்தி குறிப்பிடுகின்றார். எனவே இவரது கூற்றை உற்று நோக்கும்போது 1920க்கு முன்பே உடப்பில் நாடகம் தோன்றி வளர்ந்து வந்துள்ளது.

ஆதாரங்கள் இல்லை என்றாலும் நேர் காணல்கள் ஆரம்பகாலப் பாடல் களின் வரிகள், சந்தங்கள், தாளங்கள், தெம்மாங்கு மெட்டுக்கள் என்பன சான்றாக நிலைத்து நீடித்திருக்கின்றன.

அன்று உடப்பூர் நாடக மன்றத்தினரால் நடாத்தப்பட்ட வாளவீமன், நாடகத்தின் ஒரு காட்சியை நோக்குவோம். வாளவீமன் அதாவது அபிமன்யு தன்னை சபையோருக்கு அறிமுகப்படுத்தும் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

அணி தொந்தி மிதி லங்க
மணி மந்திர வாளி லங்க
அழகிய வாள வீமன் வந்தேனே

இந்நாடகக் குழுவினருக்குக் பின்னர் வாளவீமன் நாடகக் குழுவினர் உருவாகினர். இவர்களும் வாளவீமன், கோவலன், அல்லி அருச்சுனா போன்ற நாடகங்களை ஆடித்திருவிழா காலங்களில் அரங்கேற்றியுள்ளனர். கூத்து என்ற அடிப்படையில் தாள, சந்த பேதங்களுக் கேற்ப பாடியாடி நடித்துள்ளனர். இக்குழுவில் பெரியோர்களும், இளைஞர்கள் நடிகர்களாக இருந்துள்ளனர். இக்குழுவினர் கிட்டத்தட்ட 1933ம் ஆண்டளவில் தங்கள் குழுவை ஆரம்பித்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. இவர்களின் கோவலன் நாடகத்தில் கோவலன் மாதவியைத் தேடிச் செல்லும் காட்சி பின்வருமாறு சித்தரிக்கப்படுகிறது.

ஆட்டத்திலுற்ற அரிவை னாசை
அங்கமதை என் வீட்டிலுள்ள
ஓட்டைப் பிரித்து சுவரேறி
குதித்தோடி வந்தேன்........

வாளவீமன் நாடகக் குழுவினருக்குப் பின் 1935இல் தர்ம நாடகக் குழுவினர் உருவாகியுள்ளனர். இக்குழுவுக்கு இப்பெயர் வரக்காரணம் தர்ம நாடகத்தை முதன்முதலில் திரௌபதையம்மன் ஆடித்திருவிழாவில் அரங்கேற்றி நடித்தமையால் ஆகும். இவர்கள் பல நாடகங்களை உடப்பு ஆடித்திருவிழாவிலும் முன்னீஸ்வரத் திருவிழாவிலும் நடாத்தி இருக் கின்றனர். இக்குழுவினரின் நாடகங்களாக: தர்ம நாடகம், இளம் பஞ்ச பாண்டவர், மோகினி, சீமந்தனி, சிறுத்தொண்டர், துகிலுரிவு, கீசகன் வதை, மர்ர்கண்டேயர், அபிமன்யு, சுந்தரி மாலை, அல்லி அரசாணி, போன்ற நாடகங்களை குறிப்பிடலாம். இந்நாடகங்கள் சிறு வசனங்களுடன்

கூடிய பாடல் நாடகங்களே. இதனை யார் இயற்றி எழுதினார் என்பதை அறிய முடியவில்லை. இந்நாடகக் குழுவுக்கு ஆரம்பத்தில் அண்ணாவி யாராக திரு. வீரபத்திரனும் பிற்காலத்தில் திரு.மா. இராமலிங்கடப்பனும் இருந்து வந்துள்ளனர்.

நாடக மேடை அமைக்கப்பட்டு திரைச்சீலையில் காட்சிகளை வரைந்து, காட்சிக்கு காட்சி திரை நீக்கப்பட்டு நாடகத்தை நடாத்தியுள்ளனர். இக்கால ஒப்பனைப் பொருள்: முத்து வெள்ளை: உடை அலங்காரப் பொருள்கள், மணியால் அலங்கரிக்கப்பட்ட உடைகள், தலையில் பட்டுத் துணிகளால் வேட்டா கட்டி ஆண்களே பெண்வேடம் தாங்கி நடித்துள்ளனர். பக்க வாத்தியங்களாக மத்தளம், கைம்மணி பாவிக்கப்பட்டுள்ளது. கூத்துப் போன்றே தாளத்துக்கு ஏற்ப பாடி ஆடி நடித்துள்ளனர். இக்கால சிறப் பம்சம் நடிகர்களைப் பொருத்தே அமைந்திருந்தது. நடிகர்கள் பாடலுக்கான தாளம், இராகம், சந்தம் என்பவற்றைத் தழுவி உரத்த குரலில் ஒலிவாங்கி இல்லாமல் கிட்டத்தட்ட முந்நூறு மீற்றர் தூரம் கேட்குமளவுக்கு பாடி ஆடி நடித்துள்ளனர். இது குறிப்பிடத்தக்க அம்சமாகும். நாடகங்கள் பாடல் நிறைந்தவையே, உதாரணத்திற்கு தர்ம நாடகத்தில் நூற்றி எட்டுப் பாடல்களும், வாளவீமன் நாடகத்தில் தொன்னூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களும் இடம்பெற்றதாக பெரியோர்கள் மூலம் அறியமுடிகின்றது.

துகிலுரிவு நாடகத்தையும் பாடல் வரிசையிலேயே நடாத்தியுள்ளனர். சகுனியும் தர்மரும் பாடிவிளையாடும் சொக்கட்டான் காட்சிப் பாடல் பின்வருமாறு அமைகிறது.

தனனன்னா தனனன்னா
அடிபடிஅக்கக்கா சோபி சொக்கட்டான்
விளையாட்டல்லோ கவி பாட்டல்லோ
ஆறாலே பதினாறாலே பகடை
போட்டல்லோ முழுவதும் வேன்றேனோ — அடி

இதே நாடகத்தில் துச்சாதனன் திரௌபதையை துரியோதனன் சபைக்கு இழுத்து வரச் செல்லும்போது

தன்னன்ன தானன்னா தானன்னா
தொட்டிழுக்காமல் நான் போவேனோ — நானு
துரியோதனன் தம்பி யாவேனோ
பட்டியும் பாண்டவர் பரதேசியானாலும்
பலி வாங்கிச் சோறுண்டு அடிமையாய்
போனாலும் — தொட்டிழுக்.....

இந்நாடகங்கள் யாவும் ஒரே விதமான சந்தங்கள், தாளங்கள், ராகங்கள் கொண்டு அமைக்கப்பட்டமையினால் இந்நாடகங்களின் அண்ணாவிமார் தெம்மாங்குப் பாடல்களில் கூடிய தேர்ச்சி பெற்றவர்கள் என மதிப்பிடலாம். உடப்பூர் நாடக வளர்ச்சிப் படிகள் 1936ம் ஆண்டில் பெரியராமா குழுவினர் உருவாகி உடப்பு நாடக வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளனர். ஏனெனில் இக்குழுவினர் இந்தியப் பாணியைப் பின்பற்றி சீரான ஒழுங்கமைப்புக் கொண்டு வளர்ச்சியடைந்த ஒரு குழுவாகக் கருதலாம். இக்குழுவினரை இயக்கியவர் இந்தியாவைச் சேர்ந்த (தமிழ் நாடு) கருப்பையா என்பவர் எனக் கூறப்படுகிறது. இவர் பல இசைக் கருவிகளை மீட்டக் கூடியவர்: நாடகத் துறையில் தேர்ச்சி பெற்றவர். இவரால் பெரிய ராமாக் குழுவினர் தாளம், இராகம், சுருதியோடு பாடுதல், இசைக் கருவிகளை இயக்குதல் போன்றவற்றில் தேர்ச்சியடைந்துள்ளனர்.

இக்குழுவினரின் வள்ளித்திருமணம், சத்தியவான் சாவித்திரி, சகுந்தலை போன்ற நாடகங்கள் உடப்பு ஆடித்திருவிழாவிலும், முன்னீஸ்வரத் திருவிழாவிலும் நடாத்தப்பட்டு வந்துள்ளன. மேலும் இவர்கள் உடப்பை அண்டிய கீரியங்கள்ளி, ஆராய்ச்சிக்கட்டு போன்ற கிராமங்களில் வசூலுக்காக நாடகங்களை நடத்தியுள்ளனர்.

பெரிய ராமாக் குழுவினரின் வருகையால் கூத்து என்ற பழைமையான நாடகங்கள் குன்றி வசனங்களில் உரையாடி பாடல்கள் பாடி ஆட்டங்களின்றி நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முன்மாதிரியான மாற்றங்கள் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் நாடகத்திற்குப் பயன்படுத்திய பக்கவாத்தியங்களில் மிருதங்கம், ஆர்மோனியம், கைத்தாளம் போன்ற புதிய கருவிகள் உள்வாங்கப்பட்டன. இதன் பெறுபேறாக கூத்துக்களில் பின்னணி பாடுவது முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இக்காலத்தில் பின்னணி பாடுவது குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நாடக வளர்ச்சிப் படியில் நகைச்சுவைக்காக கோமாளிகள் பயன்படுத்தப்பட்டனர். நாடக அரங்கம் மூன்று பக்கங்களும் அடைக்கப்பட்டு பலகை கொண்டு மேடைகள் அமைக்கப்பட்டு திரைச்சீலைகளில் நாடகத் தேவைக்கான காட்சிகள் வரையப்பட்டு பாத்திரப்படைப்புக்களுக்கேற்ப மணி உடுப்புக்கள், தலையில் வேட்டா கட்டி பறவைகளின் இறகுகள்

செருக்கப்பட்டு முடிகளை அலங்கரித்ததோடு, ஆண்களைப் பெண்களாக மாற்றுவதற்கு அவர்களது தலை முடிகள் நீளமாக வளர்த்தெடுக்கப்பட்டது.

அடுத்து சின்னராமாக் குழுவினர் 1937இல் மேற்கூறிய குழுவைத் தொடர்ந்து உருவானது. இவர்கள் தங்களை சின்னராமாக் குழுவினர் என அழைத்துக் கொண்டனர். இவர்களின் நாடகங்கள் ஆடித்திருவிழா விலும், முன்னீஸ்வரம் திருவிழாவிலும் மேடை ஏற்றப்பட்டுள்ளன. இவர்களது நாடகங்கள் யாவும் பெரியராமாக் குழுவின் தழுவலேயாகும். இக்குழுவால் வள்ளிதிருமணம், சத்தியவான் சாவித்திரி, சகுந்தலை பவளக்கொடி போன்ற புராண நாடகங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

உடப்பூர் நாடக வளர்ச்சியில் காடக்கம்பனி, இக்குழுவிற்கு இப்பெயர் வரக் காரணம் உடப்பூர்க் கிராமத்தில் வெளியூரவர்களினால் அச்சுறுத் தல்கள் ஏற்பட்டால் வாதிடும், போரிடும் ஓர் இளைஞர் கூட்டமே ஆகும். இக்குழுவினர் இளமைத்துடிப்புடன் விறுவிறுப்பான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள். இவர்களும் குறிப்பிடத்தக்க நாடகங்களை மேடையேற்றி யுள்ளனர். வள்ளித்திருமணம், கோவலன், தூக்குத்தூக்கி போன்ற நாடகங் களை மேடையேற்றி உள்ளனர். தூக்கித்தூக்கி ஓர் சரித்திர நாடகம், எனவே எமது நாடக வரலாற்றில் புராண இதிகாச நாடகங்களிளிருந்து விடுபட்டு சரித்திர நாடகத்திற்கு தள்ளப்பட்ட காலம் இக்குழுவினர் காலமாகும்.

பாலர் செட் நாடக மன்றம் 1939இல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் சிறுவர்களே, இவர்களால் நந்தனார், விராட பருவம், சீமந்தனி, சுபத்திரை கலியாணம், வள்ளி திருமணம் போன்ற நாடகங்கள் மேடையேற்றப் பட்டுள்ளன. இந்நாடகத்தின் அண்ணாவியார் ராகவன் (தமிழ் நாடு) என்பவராவார். இவர் மேற்குறிப்பிட்ட நாடகங்களுக்கு கதைவசனம், பாடல்களை அமைத்து மேடையேற்றியுள்ளார்.

இளைஞர்களால் 1957இல் வீரபாண்டி கட்டப்பொம்மன் என்னும் சக்தி கிருஷ்ணமூர்த்தி எழுதிய நாடகத்தை ஆடித்திருவிழாவில் மேடை யேற்றினார். பாடல்களை பெரி. சோமாஸ்கந்தர் இயற்றி இசையமைத் திருந்தார். இது ஒரு வசன உரையாடல் நாடகமாகும். இடையிடையே பாடல்கள் மிதந்தன. மிக சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் ஒலி, ஒளிவாங்கியின் உதவியுடனும் சினிமா முறையைத் தழுவி மக்களைக் கவரும் விதத்தில் நாடக வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார் எனலாம். இந்நாடகத்தின் அண்ணாவியார் பெரி. சோமஸ்கந்தர் ஆசிரியர்

முதன் முதல் இவ்வூரில் சினிமா மெட்டில்பாடல்களை எழுதி நாடக வரலாற்றில் உட்புகுத்தியவராவார். இவர் இலங்கையிலே புகழ்பெற்ற வில்லுப்பாட்டு வித்தகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினரைத் தொடர்ந்து 1963இல் மறுமலர்ச்சி நாடக மன்றம் என்ற பெயரில் பெரி.சோமாஸ்கந்தர் ஆசிரியர் தலைமையில் இளைய தலைமுறையினரினால் உருவாக்கப்பட்டது. இக்குழுவினர் கங்கைக் கரையிலே, மணிமகுடம், புலித்தேவன், ஆயிரத்தில் ஒருத்தி, கலிங்கத்தின் கைதி போன்ற நாடகங்களை நடாத்தி உள்ளனர். இந்நாடகங்கள் வசன நாடகங்களே. சினிமா மெட்டில் பாட்டியற்றப்பட்டு ஒலிநாடாவில் பதிந்து நடிகர்களால் வாயசைத்து நடித்துக் காட்டப்பட்ட காலமாகும். மேலும் திரைகள் குறைக்கப்பட்டு ஒப்பனையில் சினிமாப் பாணியை மேற் கொண்டு நாடகங்களை நடாத்தி உள்ளனர்.

உடப்பூர் நாடக வரலாற்றில் நளாயினி நாடக மன்றம் 1950இல் உருவாக்கப்பட்டது. இந்நாடகம் இற்றைவரை இருபது தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டு சிறு வசனங்களைக் கொண்டு நிறைந்த தெம்மாங்குப் பாடலுடன் கூடிய நாடகமாகும். இதனை கூத்து என்று கூறினாலும் மிகையாகாது. இந்நாடகம் முதன்முதலில் 1950ம் ஆண்டு உடப்பு திரௌபதாதேவி கும்பாபிஷேகத்தின்போது அரங்கேற்றப்பட்டு தொடர்ந்து உடப்பு ஆடித்திருவிழா, முந்தல் திருவிழா, முன்னேஸ்வரத் திருவிழா காலங்களில் சிறப்பாக மேடையேற்றப்பட்டு வந்துள்ளது.

1960இல் ஸ்ரீ கந்தசாமி நாடக மன்றம் உருவாக்கப்பட்டது. இவர்கள் அல்லி அருச்சுனா, பவளக்கொடி போன்ற இசை நாடகங்களை நடத்தி உள்ளனர். கண்ணியின்சபதம், பாண்டிய மகுடம், ஒரே முத்தம் போன்ற நாடகங்களை நடித்து வந்துள்ளனர். இக்குழுவின் புதிய தலைமுறை யினருக்கு இணைந்த இதயம், இருவிழிகள், ராஜபுதல்வன், தென்றலும் புயலும் போன்ற சமூக, சரித்திர நாடகங்களை மேடையேற்றி உள்ளனர்.

1960ம் ஆண்டு ஸ்ரீ கிருஷ்ணலீலா நாடக மன்றம் திரு.எஸ். கேசவமூர்த்தி அண்ணாவியார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இக்குழு கிருஷ்ணலீலா, அஞ்சா நெஞ்சன், தூக்குமேடை போன்ற புராண, சரித்திர, சமூக நாடகங்களை சிறப்பான உரையாடலுடன் நடித்து காட்டி யுள்ளனர். இம்மன்றத்தின் தொடர்ச்சியாக கலைவாணி நாடக மன்றம், இளந்தென்றல் நாடக மன்றம் தோன்றியது எனலாம். இம்மன்றம் இடை

விடாது காலத்துக்குக் காலம் தங்கள் கலைத்திறனை தொடர்ந்து ஒவ்வொரு ஆடித்திருவிழாவிலும் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இம்மன்றத்தோடு ஆரம்பித்த ஏனைய நாடக மன்றங்கள் நிலை குலைந்த நேரத்தில் இம்மன்றம் இன்னும் நிலைத்து நிற்கின்றது எனலாம்.

இதே காலத்தில் இளங்கதிர் நாடகமன்றம் உருவாக்கப்பட்டது. இது வீரபாண்டிய கட்டபொம்மன், பணத்திமிர், அவளில் நான் போன்ற நாடகங்களை மேடையேற்றி உள்ளனர். தற்காலத்தில் ஐயப்பசாமி நாடக மன்றம், உதய நிலா நாடகமன்றம், என்.கதிரவேல் நாடக மன்றம், உறுதிக்கரங்கள் நாடகமன்றம் போன்றவற்றைக் குறிப்பிடக் கூடியதாய் இருக்கின்றது. இந்நாடக மன்றங்களின் வளர்ச்சி குறிப்பாக இரு தசாப்தத் திற்கு உட்பட்டதேயாகும்.

இரு தசாப்த காலங்களுள் தோன்றிய நாடக மன்றங்கள் யாவும் வசன உரையாடல் நாடகங்களே. பாடல்கள் சினிமா மெட்டில் இயற்றப் பட்டு ஆரம்பத்தில் பாடியாடி நடித்த நடிகர்கள் இன்று பொருத்தமான சினிமாப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளி, ஒலிபோன்ற தொழிநுட்ப உதவிகளுடன் காட்சி அமைப்புக்களை கூடிய வரையில் தத்வரூபமாக காட்சி நடிப்பில் சினிமாப் பாணிகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதேவேளை மேற்குறிப்பிட்ட காலத்தினுள் இசை நாடகங் களை மேடையேற்றுவதில் சளைக்காதவர்களாக இருந்த நாடகமன்றங்கள் பேச்சுத்திறனும், நடிப்புத்திறனும், தற்கால நடனங்களை ஆடுகின்ற திறனும் வளர்ந்த போதிலும் சுருதியோடு பாடுகின்ற திறமை ஒளிமங்கியே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

உடப்பூர் நாடக மன்றங்களின் வளர்ச்சிப்போக்கை சற்று உற்று நோக்கும்போது சில சிறப்புத்தன்மைகள் காணப்படுவதை நோக்கக் கூடியதாக உள்ளது. உடப்பூரில் தோன்றிய நாடகமன்றங்கள் எல்லாம் என்ன காரணத்துக்காக தோற்றுவிக்கப்பட்டன என்றோ ஏன் தோற்றம் பெற்றன என்றோ? தெரியாமல் காணப்படுகிறது.

ஆரம்பகாலம் தொட்டு ஒரு நாடகக் குழுவானது எந்த நாடகத்தை அரங்கேற்றினார்களோ அதே பெயரையே நாடகக் குழுவுக்கும் பெயராக அழைக்கப்பட்டு இருப்பதை பார்க்கக் கூடியதாக உள்ளது. இந்த நிலை கிட்டத்தட்ட 1960ம் ஆண்டுகளின் பின்னர் மாற்றம் அடைந்துள்ளதாக தெரிகின்றது.

காலத்துக்குக் காலம் இளைஞர்கள் இவ்வூரில் சிறப்பாகக் கொண்டாடப் படும் ஆடித்திருவிழாவின் இறுதி நான்கு நாட்களில் இரவு வேலையைச் சிறப்பிப்பதற்காக நாடகங்கள் பழக்கப்பட்டு அரங்கேற்றி மக்களை ஆனந்தப்படுத்துவதோடு இவர்களின் முயற்சி நின்று விடும் இடைவெளி காணப்படுகின்றது.

இவ்வூரின் ஆரம்பகால நாடகங்கள் எல்லாம் பாரதக்கதையை அடிப் படையாகக் கொண்டே அமைந்து காணப்பட்டது. பாரதக் கதையையும் அதோடு தொடர்புடைய பாடலையும் மக்கள் பார்த்து புரிந்து விளங்கிக் கொள்பவராக இருந்தார்கள். ஏனெனில் இக்காலங்களில் ஆடித்திருவிழா காலம் பதினெட்டு நாட்கள் பாரதக்கதையை படித்துக் காட்டுவதால் அதை நாடகமாகக் காட்டும்போது மக்களுக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் கூட இளம் தலைமுறையினரால் சமூக வரலாற்று நாடகங்கள் அரங்கேற்றப் படுகின்றது. அதை மக்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொள்வார்கள் என்பதை வரையறை செய்ய முடியாது உள்ளது. இதேவேளை இப்பொழுது கூட பாரதக்கதையை தழுவிய நாடகங்கள் அரங்கேற்றப்படுமாயின் அந்த நாடகங்கள் மக்கள் பார்த்து ரசித்து விளங்கிக்கொண்டு புரிந்து கொள்ளக் கூடியதை காண முடிகின்றது.

இங்கு அரங்கேற்றப்பட்ட எந்த நாடகமும் எந்த விதமான தொழில் ரீதியான வளர்ச்சியையோ தொடர்ந்து மேடையேறுகின்ற தொடர்புகளையோ வெளியிடங்களில் சென்று மேடை ஏற்றுகின்ற பண்பையோ கொண்டு இருக்கவில்லை. இவ்வூரிலுள்ள இளைஞர்கள் ஓர் இரு நாடகங்களில் நடித்து முடித்ததும் தங்களின் நடிப்புப் பயணத்தை முடித்துக் கொள்கின்ற போக்கு இன்னும் காணப்படுகின்றது.

இவ்வூரின் நாடக மன்றங்கள் தங்களின் நாடகங்களை இவ்வூர் வருடாந்த திருவிழாவான ஆடிவிழாவை சிறப்பிப்பதே நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னர் சிலவேளை முன்னீஸ்வர ஆலயத்தில் விழாவின் போது நாடகங்களை அரங்கேற்றினர். இப்போது அங்கு நாடகங்கள் வைக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளபடியால் அங்கும் நாடகங்கள் அரங்கேற்றுவது இல்லை

இவ்வூரில் ஆரம்ப காலத்தில் உருவாகிய நாடக மன்றங்கள் எல்லாம் பெரும்பாலும் ஒரே நாடகத்தையே மாறி மாறி அரங்கேற்றும் போக்கு

காணப்பட்டது. உதாரணமாக ஒரு நாடகக் குழு வள்ளி திருமண நாடகத்தை அரங்கேற்றினால் அடுத்த ஆண்டும் இன்னும் ஒரு நாடகக் குழுவானது இதே நாடகத்தை வேறு ஆண்டில் அரங்கேற்றுவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆனால் ஒவ்வொரு குழுவும் புதுப்புது நடிகர்களை அறிமுகம் செய்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நாடகத்தின் கதை பாடல் அம்சம் சந்தம், தாளம், பாவம் எல்லாம் கிட்டத் தட்ட ஒன்று போலவே காட்சியளிக்கும். புதுமைகள் இருப்பதாக கூற முடியாது. ஆனால் அண்மைக் காலமாக நாடகக் குழுக்கள் ஆடித் திருவிழாவின் போது புதிய புதிய சமூக நாடகங்களை காலம் தவறாது அரங்கேற்றி வருகின்றது.

இவ்வூரின் நாடக வரலாற்றில் ஆரம்ப காலத்தில் எவர் நடித்து வந்தார்களோ அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் இப்போது நாடகங்களில் நடித்து வருகிறார்கள். இதைவிட சம காலத்தில் ஒரு குடும்பத்தில் பல ஆண்பிள்ளைகள் இருந்தால் அவர் களில் அனேகமானவர்கள் ஒரே நாடகக் குழுவில் நடித்திருப்பதையும் காணலாம்.

இவ்வூரின் நாடக வரலாற்றை பார்க்கையில் இவ்வூரில் உள்ள எந்தப் பெண்ணும் நாடகங்களில் பங்கு கொண்டதற்கான சான்றுகள் எவையும் இல்லை. அதே வேளை இங்குள்ள பெண்களுக்கு வெளி உலக தொடர்பு அற்று இருப்பதாலோ என்னவோ தெரியவில்லை சங்கீதம், பரதநாட்டியக் கலை தெரியாமல் காணப்படுவதும் விந்தையாகும். ஆனால் அண்மைக் காலத்தில் இது இளம் சிறுமியர்கள் நாடகங்களில் வரும் பாடல் காட்சியில் குழு நடனங்கள் ஆடிவருவதையும் ஓர் இருவர் பரத நாட்டியத்தை படிக்கத் தொடங்கி உள்ளதை கவனிக்க முடிகிறது.


இவ்வூரில் நடாத்தப்படுகின்ற எல்லா நாடகங்களுக்கும் பக்க வாத்தியங்களை உள்ளூர் இசைக் குழுவினரே பங்களித்து வருவது பாராட்டக்கூடிய தன்மை ஆகும் ஆனால் இக்கலைஞர்கள் எல்லோரும் இக்கலையை நெறிமுறையாக கற்று வளர்ந்தவர்கள் அல்ல. எல்லாக் கலைஞர்களும் அனுபவரீதியாகவே வளர்ச்சி பெற்ற அபூர்வக் கலைஞர்களே.

இவ்வாறான சில சிறப்புத் தன்மைகள் இவ்வூர் நாடக வளர்ச்சியில் காணப்படுவதால் இக்கிராமத்தின் நாடக வளர்ச்சியில் சில நன்மைகள்

தீமைகள் காணப்படுகின்றன. சிறப்பாக இவ்வூர் மக்கள் தெய்வ நம்பிக்கையும் கொண்டவர்கள். இவர்கள் தங்களின் குலதெய்வமாக திரௌபதை, காளி, மாரி போன்ற தெய்வங்கள் இருப்பதால் இவ்வூரில் அரங்கேற்றப்படும் நாடகங்கள் பாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டமைந்தது. இதனால் இவர்கள் இத்தெய்வங்கள் மீது அசையாத நம்பிக்கை கொண்டு உள்ளனர்.

அந்நியர் ஆட்சியின் போது அனேகமாக வடமேல் கரை எங்கும் எல்லாக் கிராமங்களும் சமய மாற்றத்துக்கு உட்பட்டபோது இக்கிராமம் மட்டும் இன்றும் தனித்துவம் பொருந்திய சைவக் கிராமமாகவும், தமிழ் பேசும் மக்களாகவும், இந்துக்களின் கலை கலாச்சார பண்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்களாகவும் காணப்படுவதற்கு இவ்வூரில் அரங்கேறிய பாரதக் கதை நாடகங்களே உறுதுணையாக அமைந்துள்ளது. கவிஞர்.கிருஷ்ணசாமி அவர்களின் தமிழ் நாடக வரலாறு என்ற நூலில் நாடகம் பாமர மக்களின் பல்கலைக்கழகம் என்றார். அந்த உண்மையை இவ்வூர் இளைஞர்கள் அனைவரையும் இங்கு அரங்கேறிய நாடகங்கள் மூலம் அறிமுகப்படுத்தியதில் இருந்து உணரமுடிகின்றது.

மேலும் இவ்வூரில் தோன்றிய நாடகங்கள் எல்லா திருவிழாவைச் சிறப்பிப்பதோடு தோன்றி மறைந்து விடுகின்றது. தொழில் ரீதியான வளர்ச்சி அடையாமல் மருவி விடுகின்றது. அதே போல் நாடக நடிகர் எல்லோரும் ஓர் இரு நாடகத்தோடு தமது நடிப்பை நிறுத்திக் கொள்வதாலும் தேசிய ரீதியில் வளர்ந்து செல்லும் போக்கு காணப்படுவதில்லை. இவ்வூரில் உருவாக்கப்பட்ட நாடகங்கள் எல்லாம் நூலுருப் பெறாமல் போனபடியாலும் இலங்கையின் நாடக வளர்ச்சி பற்றி எழுதிய அல்லது ஆராய்ந்த பேராசிரியர்களுக்கும் போன்றவர்களுக்கும் இவ்வூரின் நாடக வளர்ச்சி தெரியாமல் போனது, வெளி உலகுக்கு தெரியாமல் போவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இனியாவது இக்கிராமத்தின் கலை கலாச்சாரம் நாடக வளர்ச்சி என்பன ஆய்வுக்கு உட்படும், உட்பட வேண்டும் என்ற அசையாத நம்பிக்கையில் இயன்றளவு தரவுகளைத் தொகுத்து, முன்வைத்துள்ளேன்.



ஸ்ரீ பார்த்தசாரதி சமேத ருக்மணி, சத்தியபாமாவும்,
ஸ்ரீ திரௌபதியம்மனும்.



திரௌபதியம்மன் கோயிலும், தேர்த்திருவிழாவும்

## 12

# ஔவை வழி எங்கள் மொழி

மனித இனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடல் மகிழ்ச்சி, சோகம், காதல், குழுவுணர்வு, பெருமிதம் போன்ற பல அகவியல் நிலை மனித உணர்வுகளைத் தூண்டுகின்றது. அதன் விளைவாக சாதாரண மக்களிடத்தில் பாடல் எழுகின்றது. இலக்கண வரம்புகளின்றி-உடனே தன் உணர்வை எளிமையாகச் சுருக்கமாக இசை தழுவியதாக நயத்துடன் வெளிப்படுத்துவன நாட்டுப் பாடல்கலாகின்றன. நாட்டுப்பாடல் என்பது உயிருள்ளதோர் வடிவம் மனித குலம் எங்கெல்லாம் வாழ்ந்ததோ அவரவர் சிறப்புகளுக்கும் வாழ்க்கை முறைமைக்கும் தக்கவாறு வாய்மொழிப்பாடல்கள் தோன்றின.

உடப்பூர் மக்களின் வாழ்வியலில் செவிவழியாக வந்த நாட்டுப் பாடல்கள் முக்கியம் பெறுகின்றது. அவ்வகையில் காவியங்கள், எச்சரிக் கைகள், ஊஞ்சல்கள், கும்மிகள், தாலாட்டுப் பாடல்கள், அம்பாப் பாடல்கள், நாட்டுக் கூத்துப் பாடல்கள், பேச்சி மொழி என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

ஆலயங்களிலே பூசை வேளையில் விநாயகர் சந்நிதானத்தில் பூசை நடைபெறுகின்ற பொழுதும், உற்சவ காலங்களிலும் விநாயகர் காவியம் பாடப்படுகின்றது. பெரும்பாலும் திருவிழாக் காலங்களிலேயே இக் காவியம் பாடப்படுகின்றது. அவ்வாறே ஐயனார் காவியம், வீரபத்திரர் காவியம், கந்தசாமி காவியம், திரௌபதி அம்மன் காவியம், காளியம்மன் காவியம், மாரியம்மன் காவியம், ஸ்ரீ ராமர் காவியம் என இங்கு கோயில்களில் வீற்றிருக்கும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் காவியங்கள் உண்டு.

ஆடித்திருவிழாவின் போது பதினேழாம் நாள் செவ்வாய்க்கிழமை காலையில் திரௌபதாதேவி ஆலய முன்றலில் அக்கினி குண்டக்காவல் நிகழ்ச்சி இடம்பெறும். அவ்வேளையில் ஐயனாராகவும், வீரபத்திரராகவும் உருவகித்திருக்கும் மணல் மேடையின் அருகில் ஐயனார் காவியம், வீரபத்திரர் காவியங்கள் பாடப்படுகின்றன.

ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் பொங்கல் விழாவின் போது ஆலய முன்றலில் அவர் தம் நாமம் உரைக்கின்ற கந்தசாமி காவியம் பாடப் படுகின்றது. அத்தோடு திரௌபதாதேவியின் கரகம் திருவுலா வரும் வேளையில் கந்தசாமி ஆலயத்தை அண்மிக்கும் பொழுதும் இக்காவியம் பாடப்படுகின்றது.

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் ஆலயத்தில் உற்சவ காலங்களில் அன்னை ஸ்ரீ திரௌபதாதேவிக்கு நைமித்திய பூசை நடைபெறுகின்ற பொழுது அன்னையின் அருள் வேண்டி பாடப்படுகின்ற காவியம் திரௌபதி அம்மன் காவியமாகும். அத்தோடு காளியம்மன் ஆலயத்திலே உற்சவ காலங்களில் அம்பாளின் அருள் வேண்டி அவள் சந்நிதானத்தில் காளியம்மன் காவியம் பாடப்படுகின்றது. ஆண்டிமுனைப் பதியினிலே அன்னை பராசக்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்திலே உற்சவ காலங்களில் மாரியம்மனின் சந்நிதானத்தில் அவள் மனம் குளிரப் மாரியம்மன் காவியம் பாடப்படுகிறது. ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் ஆலயத்தில் அவர்தம் பெருமைகளை எடுத்துரைத்து உற்சவ காலங்களில் இசையோடு இறைஞ்சுகின்ற காவியம் ஸ்ரீ ராமர் காவியமாகும்.

ஆடித்திருவிழாவின் போது பதினாறாம் நாள் திங்கட் கிழமை மாலை, திரௌபதையம்மன் ஆலய முன்றலில் அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறச் சென்ற நிலையை புலப்படுத்தும் காட்சி இடம்பெறும். அவ் வேளையில் அருச்சுனனாக வேடம் பூண்டிருப்பவரினால் பாடப்படுகின்ற பாடல் தவநிலைப் பாட்டு என அழைக்கப்படும். உடப்பு ஆடித்திருவிழா வின் போது திரௌபதாதேவியின் கரகம் ஆண்டிமுனை மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று திரும்பி வந்து திரௌபதையம்மன் ஆலயத்தினுள் நுழையும் போது திரௌபதியம்மன் எச்சரிக்கை பாடப்படுகின்றது. அவ்வாறே ஆடித் திருவிழாவின் போது பன்னிரண்டாம் நாள் திரௌபதை யம்மனுக்கு திருக்கல்யாணம் நிகழ்வுறும். திருக்கல்யாணம் நிறைவு பெற்றதும் திரௌபதையை வசந்த மண்டபத்தில் வைத்து ஊஞ்சல் ஆட்டப்படும் பொழுது பாடப்படுகின்ற ஊஞ்சல் பாடலே திரௌபதை யம்மன் ஊஞ்சலாகும்.

உடப்பில் மக்கள் ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் கூட்டாகத் தட்டி எழுப்பும் வடிவம் கும்மி. கும்மிப் பாடல்களுடன் சேர்ந்த ஆட்டத்தை மக்கள் குழுமி நின்று ரசிப்பர். கை குவித்து கொட்டி ஆடும் ஆட்டம் கும்மி. பெண் தெய்வ வழிபாட்டில் கும்மி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

உடப்பில் அம்மனாக உருவகிக்கப்படும் பூசகரும் கும்மி கொட்டுவார். கும்மிப் பாடல்கள் தெம்மாங்கு மெட்டில் பாடப்படுகின்றன. திரௌபதி அம்மன், காளியம்மன், மாரியம்மன் ஆகிய கடவுளர் மீது கும்மி பாடப் படுகின்றது. சித்திரைச் செவ்வாய் விழாவின் போது இளம் பெண்கள் பாடும் கும்மியும் ஆட்டமும் கலையழகு மிக்கன. பரவசம் தருவன.

ஆடித்திருவிழாவின்போது திரௌபதாதேவியின் கரகம், ஆண்டிமுனை மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று திரும்பிவருகின்ற பொழுது உடப்பின் பிரதான சந்தியில் கரகம் கும்மியடிக்கும் வேளையில் திரௌபதியம்மன் பூர்வீகக் கும்மி, திரௌபதியம்மன் மான்மியக் கும்மி என்ற இருவகை யான கும்மிப்பாடல்கள் பாடப்படுகின்றன.

காளியம்மன் ஆலயத்திலே நடைபெறுகின்ற வேள்வி விழாவின் போது எட்டாம் நாள் புதன் கிழமை இரவு அர்த்த ராத்திரிக் கரகம் ஊரின் சகல தெருக்களிலும் திருவுலாச் செல்லும். இறுதியாக ஊரின் நடுச்சந்தியில் கரகத்தை வைத்து கும்மியடிக்கும் போது பக்திச் சுவை சொட்டச்சொட்ட, முற்றிலும் நாட்டுப்புறவியற் குரலில் காளியம்மன் கும்மி பாடல் பாடப் படுகின்றது. இப்பாடல் பாடப்படுகின்ற பொழுது, இடையிடையே பெண்களின் குரவை ஒலி கேட்பதையும் அவதானிக்கலாம். மேலும் சித்திரைச் செவ்வாய் திருவிழாவில் பாடப்படும் கும்மி, கலியடி கம்புகும்மி எனவும் கும்மிப் பாடல்கள் உண்டு.

மனிதனது தொழில் அவனது கலை வடிவத்துக்கு ஆதாரமாயிற்று. உடப்பு மீனவர்கள் வலை இழுக்கும் போது அம்பாப் பாடல்கள்அவர்களது உணர்வின் வெளிப்பாடாகப் பரிணமிக்கின்றன. அம்பாள் பாடல்கள் அம்பாப் பாடலாயிருக்கலாம் என்பர் ஆய்வாளர்கள். ஒவ்வொரு சாதாரண மீனவனுக்குள்ளும் ஒரு கவிஞன் மறைந்துள்ளதை நாட்டுப் பாடல்கள் உணர்த்துகின்றன. வட்டார மொழி வழக்கு அற்புதமான சுகானுபவத்தை நாட்டுப்பாடல்களின் ஊடாக வழங்குகின்றது.

வலையில் கை வைத்திருக்கும் போது வீட்டிலேயே பதிகின்றது. தொட்டிலில் உள்ள குழந்தை இதயத்தில் உதிக்கின்றது. தாயாகக் கூடு விட்டுக் கூடு பாய்கிறான். அம்பாவில் அவன் உணர்வு தெறிக்கிறது. சிறிய சொற்கள் சித்திரங்களாக்கி கருத்தைக் கவர்கின்றன. வானத்தில் சூரியன் எரிக்கிறான் கீழே மணல் கங்குகள் போக்களிக்கின்றன. கொதிப்பது மணல் மட்டுமா? அவனது உணர்வுக்களும் தான். வாழ்வின் சிறுமையை வரிகளால் வடிக்கிறான். கீழே பாய்ந்தடிக்கின்ற அலைகளாய் ஓங்கி வெடிக்கும் அவன் உணர்வு; நாட்டுப்பாடலில் இலக்கியமாகின்றது.

# உடப்பூர் சொற்களஞ்சியம்

அக்கிறுமம் - அக்கிரமம்
அங்கிட்டு - அந்தப்பக்கம்
அங்கின - அங்கு
அசுவ - சுத்தம்
அஞ்சி - அஞ்சு
அஞ்சு - ஐந்து
அடசு வல - சாளை வலை
அடப் வல - ஆற்றில் வளைக்கும் ஒரு வகை வலை
அடாத்து - எல்லை மீறல்
அடிக்கிறம் - அடிக்கிறோம்
அடிக்கிறன் - அடிக்கிறேன்
அடிக்கிறா - அடிக்கிறாய்
அடிச்சா - அடித்தான்
அடிச்சாங்க - அடித்தார்கள்
அடிச்சான் - அடித்தான்
அடிப்பாங்க - அடிப்பார்கள்
அடிப்பாவ - அடிப்பார்கள்
அடுக்கள - சமையற்கட்டு
அடுப்பாங்கர - அடுப்பங்கரை
அடை - பாதையை கடலில் இறக்கும் போதும், இழுக்கும் போதும் பயன்படும் மரக்குற்றி
அண்ணாவி - மந்திரவாதி
அப்பச்சி - சிற்றப்பா
அப்பாத்தை - அப்பாவின்தாய்
அம்பா - வலையிழுக்கும் போது பாடும் நாட்டார் பாடல்
அம்புரஸ் - அம்புலன்ஸ் (Amblance)

| | | |
|---|---|---|
| அம்மாத்தை | - | அம்மாச்சி எனவும் அழைப்பர், அம்மாவின் தாய் |
| அமாறு | - | கஷ்டம் |
| அமுசடக்கம் | - | அடக்கம் |
| அய்யா | - | பாட்டனார் |
| அயத்துப் போதல் | - | மறத்தல் |
| அர | - | அது |
| அரக்குளா | - | ஒரு வகை மீன் |
| அரால | - | அதனாலே |
| அரிட | - | அதனுடைய |
| அரிலே | - | அதனிலே |
| அருக்கு | - | அதற்கு |
| அருவட | - | அவருடைய |
| அருவள | - | அதுகள |
| அருவளால | - | அவராலே |
| அருவளிலே | - | அவர்களில் |
| அருவளுக்கு | - | அவர்களுக்கு |
| அவ்வ | - | அவர் |
| அவ்வட | - | அவருடைய, அவளுடைய |
| அவ்வளாலே | - | அவரால், அவளாள் |
| அவ்வளிலே | - | அவர்களில் |
| அவ்வளுக்கு | - | அவருக்கு, அவளுக்கு |
| அவ்வளை | - | அவரை, அவளை |
| அவ | - | அவள் |
| அவக | - | அவர் |
| அவங்க | - | அவர்கள் |
| அவனுக்கிட்ட | - | அவனிடம் |
| அவிச | - | அவிந்த பொருள் |
| அவியல் | - | அவித்த பொருள் |
| அவுக | - | அவர்/அவள் |

| | | |
|---|---|---|
| அவுங்க | - | அவர்கள் |
| அவுசாரி | - | விபசாரி |
| அவுத்தான் | - | அவிழ்த்தான் |
| அளப்புதல் | - | ஏமாற்றுதல் |
| அறுவாய் | - | களப்புநீர் உடைத்து கடலுக்கு பாயுமிடம் |
| அன்னம் பாடல் | - | பிரலாபித்தல் |
| அன்னாசிக்கா | - | அன்னாசிப்பழம் |
| ஆக்குதல் | - | சமைத்தல் |
| ஆச்சி | - | பாட்டி,வயது முதிர்ந்த பெண்களை குறிப்பர். |
| ஆசூரியம் | - | குறை |
| ஆடினா | - | ஆடினாய் |
| ஆடினீம | - | ஆடினீர்கள் |
| ஆடுது | - | ஆடுகின்றது |
| ஆடுவா | - | ஆடுவாய் |
| ஆடுவியள் | - | ஆடுவீர்கள் |
| ஆடுவீம | - | ஆடுவீர்கள் |
| ஆடுறம் | - | ஆடுகிறோம் |
| ஆடுறன் | - | ஆடுகிறேன் |
| ஆடுறா | - | ஆடுகிறாய் |
| ஆடுறிய | - | ஆடுகிறீர்கள் |
| ஆடுறியள் | - | ஆடுகிறீர்கள் |
| ஆடுறீம | - | ஆடுகிறீர்கள் |
| ஆணியம் | - | பாதையின் முன்னுச்சி |
| ஆத்தா | - | சின்னம்மா |
| ஆத்துவா | - | ஆற்றுவாய், கலப்புப் பகுதி |
| ஆவலாதி | - | குறை |
| ஆவிசம் | - | பிசாசு |
| ஆஸ்பத்து | - | ஆஸ்பத்திரி |
| இக்குளு | - | கக்கம் |
| இக்குளுகுத்தல் | - | கூச்சம் காட்டல் |

| | | |
|---|---|---|
| இங்கிட்டு | - | இந்தப்பக்கம் |
| இங்கின | - | இங்கு |
| இடு கூறு | - | பழிகூறல் |
| இணங்குதல் | - | இயற்றுதல் |
| இருக்கங்காட்டியும் | - | இருக்கும் வரையும் |
| இருக்கச்சில | - | இருக்கும்போது |
| இருக்கச்சொல | - | இருக்கும்போது |
| இருக்கலுமா | - | இருக்க இயலுமா |
| இருக்காணா | - | இருக்க வேண்டாம் |
| இருக்காப்பில | - | இருக்கிறாற் போல |
| இருக்கிறம் | - | இருக்கிறோம் |
| இருக்கிறன் | - | இருக்கிறேன் |
| இருக்கிறா | - | இருக்கிறாய் |
| இருக்கோணும் | - | இருக்க வேண்டும் |
| இருந்திச்சுது | - | இருந்தது |
| இருந்திட்டுது | - | இருந்தது |
| இருளம் | - | மேகம் |
| இவங்க | - | இவர்கள் |
| இவனுக்கிட்ட | - | இவனிடம் |
| இவுங்க | - | இவர்கள் |
| இழுக்கிறாப்பில | - | இழுக்கிறாற் போல |
| ஈரவல | - | கரைவலையின் இரண்டாம் துண்டு |
| உச்சாட்டம் | - | உக்கிரம் |
| உசிர் | - | உயிர் |
| உசும்புதல் | - | பேசுதல் |
| உண்டானா | - | அதிகமாக |
| உம்மளை | - | நீமள் |
| உமல் | - | பன்னால் ஆன பை |
| ஊடம் | - | உணவு |
| ஊத்து | - | ஊற்று |

| | | |
|---|---|---|
| ஊருபுடி | - | உறுதி, கட்டுக்கோப்பு |
| எங்கிட்டு | - | என்னிடம் |
| எங்கின | - | எங்கு |
| எத்தனம் | - | பாத்திரம் |
| எபிச்சோல் | - | அயோக்கியன் (Habbitual) |
| எம்முடன் | - | திருடன் (Emdon) |
| எருத்தம்பா | - | ஒருவரையொருவர் எதிர்த்துப் பாடல்; எதிர்த்தம்பா |
| எருத்து வல | - | எதிர் வலை |
| எளக்காரம் | - | இளங்காரம் |
| ஏந்தல் | - | ஒரு வகை மீன்பிடி வலை |
| ஐம்படையான் | - | கரைவலையின் ஐந்தாம் துண்டு |
| ஓசரம் | - | உயரம் |
| ஓமல் | - | பன்னால் பின்னப்பட்ட பை |
| ஓயர | - | உயர |
| ஒற்றையம்பா | - | ஒருவரினால் தனியாகப்பாடப்படும் அம்பா |
| ஒன்னட | - | உன்னட |
| ஓட்டங்காச்சி | - | ஓட்டுத்துண்டு |
| ஓமலிப்பு | - | பொறாமை |
| ஓரல் | - | உரல் |
| கக்கிசி | - | கக்கூசு (மலசல கூடம்) |
| கங்குன் கீரை | - | வள்ளைக் கீரை |
| கச்சப்பொட | - | ஆண்களின் இடைத்துணி |
| கச்சி | - | வளைவுள்ள பலகை |
| கசிக்கா | - | கசுப்பழம் |
| கஞ்சி | - | பழஞ்சாதம் |
| கட்டாக்கு | - | வாட்டப்பட்ட தென்னோலை |
| கட்டையம்பா | - | ஓரிரு சொற்களைக் கொண்டு குறுகியதாக இருக்கும் அம்பா |
| கடக்கர | - | கடற்கரை |

| | | |
|---|---|---|
| கடக்கவுறு | - | கரைவலையின் ஆரம்பக்கயிறு |
| கடிச்சன் | - | கடித்தேன் |
| கடையால் | - | பின்னுச்சி |
| கண்டிச்சுது | - | கண்டது |
| கண்டிட்டுது | - | கண்டது |
| கம்மான் கயிறு | - | பெருங்கயிறு |
| கம்முக்கட்டு | - | கக்கம் |
| கரக்காடை | - | கடற்கரை |
| கரண்டகம் | - | சுண்ணாம்புச் சிமிழ் |
| கரத்த | - | மாட்டு வண்டி |
| கரதர | - | தொல்லை |
| கலபல | - | குழப்பம் |
| கலவடை | - | பாத்திரங்களின் கீழே வைக்கும் தாங்கி |
| கவக்கம்பு | - | மடவலக்கம்பு |
| கவுத்தான் | - | கவிழ்த்தான் |
| கவுறு | - | கயிறு |
| கள்ள வளையம் | - | வலையில் ஒரு பகுதி |
| காகூட | - | காவிச்செல்லும் கூடை |
| காத்தடி | - | காவும் தடி |
| காத்தியல் | - | கார்த்திகை |
| காமட்ட | - | தென்னோலையின் மட்டை |
| காய் வளையம் | - | வலையில் ஒரு பகுதி |
| காவந்து பண்ணல் | - | காப்பாற்றுதல் |
| கிணற்றடிய | - | கிணற்றருகில் |
| கிரிகை | - | ஒழுங்கு, கிரியை |
| குச்சி | - | குச்சு |
| குச்சில் | - | குசினி |
| குட்டி | - | வயது வந்தோரால் பெண்கள், கணவனால் மனைவியர் அழைக்கப் படுவர். |
| குடிச்சன் | - | குடித்தேன் |

| | | |
|---|---|---|
| குண்டு | - | உயரமான பகுதி |
| குருணால் | - | அரிசித்துகள் |
| குருணால் | - | அரித்துகள் |
| கூட்டு வல | - | இறால் பிடிக்க பயன்படுத்தப்படும் வலை |
| கெக்கரிக்கா | - | கெக்கரிக்காய் |
| கெப்பறி | - | இடும்பு |
| கைக்கல் கம்பு | - | இழுப்புச் சிறு வலைக் கம்பு |
| கையலி | - | உடுத்தாடை |
| கைவாறு | - | சூரத்தனம் |
| கொடுவா வல | - | கொடுவா மீன் பிடிக்கும் வலை |
| கொண்டன் | - | கொன்றேன் |
| கொம்பேணி | - | கூட்டம் (Company) |
| கொல்ல | - | வீட்டின் பின்புற சலகூடம் |
| கோசான் துண்டு | - | தலை வலை |
| கோப்புசம் | - | வீட்டுக்கூரை |
| கோவாணி | - | பாற்பேணி |
| சடப்பு | - | சடவு மனமுறிவு |
| சந்தையடிய | - | சந்தையருகில் |
| சமுசயம் | - | சந்தேகம் |
| சரி பண்ணுதல் | - | உருவாக்கல், திருத்தல் |
| சல்வாய் | - | கரைவலையின் ஏழாம் துண்டு |
| சவுள் ஒட்டு | - | சவுளின் காது |
| சவுள் | - | பாதையை நேர்செலுத்தும் கருவி |
| சள்ளை | - | ஒரு பகுதி |
| சித்தமல் | - | பன்னால் பின்னப்பட்ட சிறிய பை |
| சித்திரி | - | ஒருவகை வலை |
| சிலாவிஅரிசி | - | மில்சாட் அரிசி |
| சிறுக்கி | - | புள்ள பெண்கள் |
| சீத்துவம் | - | கவனம் |
| சுடுதண்ணி | - | சாராயம் |

| | | |
|---|---|---|
| சுருவம் | - | சொரூபம் |
| சுறுக்கணா | - | மிக விரைவாக |
| சூதானம் | - | கவனம் |
| செஞ்சிச்சுது | - | செஞ்சது |
| செஞ்சிட்டுது | - | செஞ்சது |
| செஞ்செழிப்பு | - | செழிப்பு |
| செப்பட்டா | - | கன்னப் பகுதி |
| செய்குது | - | செய்கிறது |
| செய்தா | - | செய்தாய் |
| செய்தா | - | செய்தான் |
| செய்தாங்க | - | செய்தாங்கள் |
| செய்தீங்க | - | செய்தீர்கள் |
| செய்தீம | - | செய்தீர்கள் |
| செய்வன் | - | செய்வேன் |
| செய்வா | - | செய்வாய் |
| செய்வியள் | - | செய்வீர்கள் |
| செய்வியள் | - | செய்வீர்கள் |
| செய்வோம் | - | செய்வோம் |
| செய்றம் | - | செய்கிறோம் |
| செய்றன் | - | செய்கிறேன் |
| செய்றா | - | செய்கிறாய், செய்கிறாள் |
| செய்றாங்க | - | செய்கிறார்கள் |
| செய்றாவ | - | செய்கிறார்கள் |
| செய்றான் | - | செய்கிறான் |
| செய்றிய | - | செய்கிறீர்கள் |
| செய்றியள் | - | செய்கிறீர்கள் |
| செய்றீம | - | செய்கிறீர்கள் |
| செரட்டக்காச்சி | - | தென்னஞ்சிரட்டை |
| செவப்பு | - | சிவப்பு |
| சைசு | - | அளவு (Size) |

சோங்காளிப்பு - சோம்பேறித்தனம்
டொக்குத்தர் - வைத்தியர் (Doctor)
டொப்பபி - இனிப்பு (Toffe)
தட்டுவல - கரைவலையின் ஆறாம் துண்டு
தண்டு - ஓடத்தைச் செலுத்தும் வலிபலகை
தண்டோட்டு - தண்டின் காது
தத்தாரி - ஒழுக்கம் கெட்டவள்
தரித்திரியம் - வறுமை
தல - தலை
தலவாணி - தலையணை
தலை இழுத்தல் - தலை சீவுதல்
தலை வெட்டுதல் - முடி வெட்டுதல்
தன்மானியம் - இரக்கம்
தாச்சி - பொரிக்கன் சட்டி
திடர்க்கம் - உறுதி
திடாரிக்கம் - கட்டுக்கோப்பு
திண்டன் - தின்றேன்
தீவறன - தீபம்
துடினம் - துடிப்பு
தூப்பான் கட்டு - விளக்குமாறு
தூப்பான்மல் - விளக்குமாறு
றேசிக்கா - தேசிக்கா என வழங்கப்படும் எலுமிச்சம்பழம்
தோடங்கா - தோடம்பழம்
தோலி வல - சிறிய கண்ணுள்ள வலை
நடிச்சன் - நடித்தேன்
நடுச்செண்டர் - நடுப்பகுதி (Center)
நடையம்பா - மொதுவாக வலை இழுக்கும் போது பாடும் அம்பா
நம்மட - நம்முடைய
நம்மளாலே - எம்மால்

| | | |
|---|---|---|
| நம்மளிலே | - | எம்மில் |
| நம்மளுக்கு | - | எங்களுக்கு |
| நம்மளை | - | எங்களை |
| நறுவிக | - | ஒழுங்கு |
| நனஞ்சம் | - | நனஞ்சம் |
| நனைஞ்சன் | - | நனைந்தேன் |
| நாத்தம் | - | நாற்றம் |
| நாத்து | - | நாள் |
| நாம்புளி | - | அரிசி அரிக்கும் மண் பாத்திரம் |
| நாம | - | நாம் |
| நாற்படையான் | - | கரைவலையின் நான்காம் துண்டு |
| நிட்டூரியம் | - | கொடுமை |
| நிந்தம் | - | சம்மாட்டியிடம் பெற்ற கடன் |
| நிந்தாச்சினை | - | பழி மொழி |
| நிலுவம் | - | தொல்லை |
| நிவரண | - | நிவாரணம் |
| நெஞ்சி | - | மார்பு (பொது) |
| நெத்தலி வல | - | நெத்தலி மீன் பிடிக்கும் வலை |
| நெத்தி | - | நெற்றி |
| நேசி | - | தாதி (Nurse) |
| நேத்து | - | நேற்று |
| நோய்த்தல் | - | விட்டுக் கொடுத்தல் |
| பக்கடா | - | பகோடா உணவு |
| பக்கிஸ் பெட்டி | - | பெட்டி (Box) |
| பகர் | - | பெருமை (Power) |
| பச்ச மாங்கா | - | பழுக்காத மாம்பழத்தைக் குறிக்கும். |
| பச்சாளக்கா | - | பழுக்காத வாழைக்காய். |
| பசண்டை | - | செழிப்பு |
| பஞ்சி | - | பஞ்சு |
| பட்டியல் | - | வலை இழுக்கும் பட்டி |

| | | |
|---|---|---|
| படிக்கிறம் | - | படிக்கிறோம் |
| படிக்கிறன் | - | படிக்கிறேன் |
| படிக்கிறா | - | படிக்கிறாய் |
| படிச்சம் | - | படித்தோம் |
| படிச்சன் | - | படித்தேன் |
| படினம் | - | பழக்கம் |
| படுகதை | - | குத்துக்கதை |
| படுசொல் | - | குத்துச்சொல் |
| பத்தார் | - | விளிம்பு ஓரப்பலகை |
| பத்தி | - | வீட்டின் ஒரு பக்கச் சாய்தளம் |
| பத்து வழி | - | பற்றுவழி உழைப்பில்லாத போது பெறும் பணம் |
| பப்புளிக்கா | - | பப்பாளிப்பழம் |
| பய | - | சிறு பையன் |
| பலுமாறுதல் | - | பயன்படுத்தல் |
| பழக்கம் பேசுதல் | - | உரையாடல் |
| பள்ளயக்கட்டி | - | சோற்றுக்கட்டி |
| பள்ளயம் | - | நெருப்புக் கிடங்கு |
| பள்ளயம் | - | நெருப்புக் கிடங்கு |
| பன்னாங்கு | - | பச்சை ஓலையால் இழைக்கப்படும் கிடுகு |
| பாஞ்சம் | - | பாய்ந்தோம் |
| பாஞ்சன் | - | பாய்ந்தேன் |
| பாடினா | - | பாடினாய் |
| பாடினீம | - | பாடினீங்கள் |
| பாடு | - | மீன் பிடிக்கும் எல்லைப் பிரதேசம் |
| பாடுது | - | பாடுகிறது |
| பாடுவா | - | பாடுவாய் |
| பாடுவியள் | - | பாடுவீர்கள் |
| பாடுவீம | - | பாடுவீர்கள் |
| பாடுறம் | - | பாடுகிறோம் |

| | | |
|---|---|---|
| பாடுறன் | - | பாடுகிறேன் |
| பாடுறா | - | பாடுகிறாய் |
| பாடுறிய | - | பாடுகிறீர்கள் |
| பாடுறியள் | - | பாடுகிறீர்கள் |
| பாடுறீம | - | பாடுகிறீர்கள் |
| பாதை | - | தோணி |
| பிடிச்சா | - | பிடித்தான் |
| பிடிச்சாங்க | - | பிடித்தார்கள் |
| பிடிச்சான் | - | பிடித்தான் |
| பிப்பிஞ்ஞுக்கா | - | வெள்ளரிக்காய் |
| பிபிஞ்ஞுக்கா | - | வெள்ளரிக்காய் |
| புட்டு | - | பிட்டு |
| புடுங்கு | - | பிடுங்கு |
| புணை | - | மிதப்பு |
| புழுக்க | - | பிழுக்கை |
| புறவல | - | கரைவலையின் பின்னால் வளைக்கப்படும் வலை |
| பூசுதல் | - | மினுக்குதல் |
| பெத்தன் | - | பெற்றேன் |
| பெருக்கி | - | பாதையை நீராட்டும்போது பயன்படுத்தப்படும் பல மணப் பொருள்கள் சேர்ந்து அரைக்கப்பட்ட கலவைப் பொருள் |
| பெலக்கணா | - | அதிக சத்தமிட்டு |
| பெற்றம் | - | பெற்றோம் |
| பெறகு | - | பிறகு |
| பெனரப்பட்ட | - | அரிதட்டு |
| பேச்சி | - | பேச்சு |
| பேசிப்போடல் | - | கண்டித்தல் |
| பேந்த வல | - | பெரிய கண்ணுள்ள வலை |
| பைபோஸ் | - | சண்டித்தனம் (Byforce) |

| | | |
|---|---|---|
| பொடியன் | - | சிறுக்கன், சிறு பையன்மார் |
| பொண | - | புணை |
| பொரிக்கன் சட்டி | - | பொரிக்கும் பாத்திரம் |
| பொரிக்கன் சட்டி | - | பொரிக்கும் பாத்திரம் |
| பொழுசாய | - | பொழுதுசாய |
| பொறணி | - | கோள் |
| பொன்னரிப்பட்ட | - | அரிதட்டு, பெனரப்பட்ட எனவும் வழங்கப்படும். |
| போகங்காட்டியும் | - | போகும் வரையும் |
| போகச்சில | - | போகும்போது |
| போகச்சொல | - | போகும்போது |
| போகலுமா | - | போக இயலுமா |
| போகாணா | - | போக வேண்டாம் |
| போகுது | - | போகிறது |
| போகோனும் | - | போக வேண்டும் |
| போலு | - | ஒரு வகை மீன் |
| போவம் | - | போவோம் |
| போவன் | - | போவேன் |
| போவா | - | போவாய் |
| போவியள் | - | போவீர்கள் |
| போவீம | - | போவீர்கள் |
| போறம் | - | போகிறோம் |
| போறன் | - | போகின்றேன் |
| போறா | - | போகிறாய், போகிறாள் |
| போறாங்க | - | போகிறார்கள் |
| போறாப்பில | - | போகிறாற் போல |
| போறாவ | - | போகிறார்கள் |
| போறான் | - | போகிறான் |
| போறிய | - | போகிறீர்கள் |
| போறியள் | - | போகிறீர்கள் |

போறீம - போகிறீர்கள்
போனீங்க - போனீர்கள்
மசிர் - மயிர்
மஞ்சக்கா - மயுறுக்கிழங்கு எனவும் வழங்கப்படும் மரவள்ளி
மடவல - கீழ் வரும் வலை
மடி - மீன் குவி வலை
மணல வல - மணல மீன் பிடிக்கும் வலை
மல்லம் - இடைத்துண்டு
மாங்கா - மாம்பழம்
மாத்த - மாதம்
மாம்பாடு - மீன்களின் எண்ணை
மாரு - மார்பு (பெண்)
மீசை வெட்டுதல் - மீசை மழித்தல்
முசுடு - சோம்பேறி
முஞ்சி - மார்பு (பெண்)
முட்டாசி - மிட்டாய்
முடுமை - வறுமை
முரல்வல - முரல் மீன் பிடிக்கும் வலை
மூளியா - கரைவலையின் மூன்றாம் துண்டு
மே(ல்)வல - மேல் வரும் வலை
மேல் - உடம்பு
மொகற - முகம்
ரெக்கமண்ட் - அதிகாரம் (Recommond)
ரோத - வண்டிச்சில்லு
லட்டர் - டிரக்டர் (Tractor)
லெக்கு - அடையாளம்
லெச்சர் - போதனை (Lecture)
லெம்பு(தெம்பு) - சக்தி
வங்குசம் - பரம்பரை, வம்சம்

| | | |
|---|---|---|
| வசி | - | பஸ் (ஆதண்) |
| வட்டக்கா | - | பரங்கிக்காய், பூசணிக்காய் |
| வண்டக்கா | - | வெண்டிக்காய், பண்டக்கா |
| வணிசி | - | பணிஸ் (ஆதண) |
| வத்து வளந்து | - | அரிசி களைந்து வைக்கும் பாத்திரம் |
| வந்தா | - | வந்தாய், வந்தான் |
| வந்தாங்க | - | வந்தார்கள் |
| வந்திச்சுது | - | வந்தது |
| வந்திட்டுது | - | வந்தது |
| வந்தீம | - | வந்தீர்கள் |
| வர்மம் | - | பழியுணர்வு |
| வரங்காட்டியும் | - | வரும்வரையும் |
| வரச்சில | - | வரும்போது |
| வரச்சொல | - | வரும்போது |
| வரலுமா | - | வர இயலுமா |
| வராணா | - | வரவேண்டாம் |
| வருவாங்க | - | வருவார்கள் |
| வருவாவ | - | வருவார்கள் |
| வரோணும் | - | வரவேண்டும் |
| வல்கட்ட | - | பலவந்தம் |
| வவுறு | - | வயிறு |
| வளந்து | - | பாத்திரம் |
| வாசற்கடவல் | - | வாயிற் கடவை |
| வாசி | - | இலாபம் |
| வாரிப்பலகை | - | தண்டிழுக்கும் தொழிலாளர் அமரும் பலகை |
| வாவுறுக்கா | - | மகிழம் பழம் |
| வாழக்கா | - | வாழைப்பழம் |
| விசுப்பு | - | ஏற்பு |
| விடியக்காலை | - | அதி காலை |
| வித்தன் | - | விற்றேன் |

| | | |
|---|---|---|
| விதனம் | - | வேதனை |
| வியளம் | - | செய்தி, விடயம் |
| விரட்டல் | - | வாகனம் செலுத்துதல் |
| வில்லவத்திரிக்கா | - | வில்வம்பழம் |
| விற்றம் | - | விற்றோம் |
| வீட்டடிய | - | வீட்டருகில் |
| வெண்டம் | - | வென்றோம் |
| வெண்டன் | - | வென்றேன் |
| வெப்பிசாரம் | - | துன்பம் |
| வெரல் | - | விரல் |
| வெள்ளன | - | காலை |
| வெள்ளாப்பு | - | அதி காலை |
| வேக்கு | - | உறை (Bag) |
| வேளம் | - | செய்தி |
| வேனு | - | வேன் வண்டி (Van) |
| ஹைபாட் | - | சண்டித்தனம் (Highpart) |

**தொழில்சார் சொற்கள்**

கொட்டையடித்தல் : பாதை கட்டும்போது சிறு துவாரங்களை சனல் பஞ்சு வைத்து அடைத்தல்.

கண் தாக்கிப் போடல்: மால்(வலை)பிரையும் போது கண்களைச் சேர்த்துப் பிரைதல்.

பொத்துதல்: பிய்ந்த வலைக் கண்களை இணைத்தல்

பிரை தல்: இரண்டு பக்கக் கண்களை இணைத்தல்.

பட வாங்குதல்: கயிற்று வலை பின்னும்போது கண்ணி குறைத்தல்

மந்தடித்தல்: வலையை சீர்படுத்திக் கட்டல்.

நீராட்டல்: கடலில் பாதையை இறக்கச் செய்யும் சடங்கு.

வெள்ளையடித்தல்: அல்லது வெள்ளை போடுதல், ஓர் சமிக்கை

வாக்கிடுதல்: இரண்டு பகுதிகளில் ஒரு பகுதி கூடுதலாக கழுவையில் ஈடுபட்டால் மற்றைய பகுதியை இழுக்கப் பணித்தல்.

தலை சுத்தி வெள்ளை போடல்: வலை இழுக்க வேண்டாம் எனக் கூறுதல் மாட்டுக் கட்டுதல்.

மண் வெட்டிப் போதல்: அல்லது இளமண் ஏறிப்போதல்

கொக்களி பட்டு வருதல்: இழுக்கும் போது வலை சீரின்றி வருதல்.

இணைப்ப(றி)றுதல்: எந்தக் காரணமுமின்றி வலை அறுதல்.

சாய வருதல்: ஒரு பக்கம் நோக்கி வலை இடம்பெயர்ந்து வருதல்.

புறத்திற்கு வலை வைத்தல்: பின் பகுதியை நோக்கி இடம்பெயர்தல்.

குறுகுதல்: வலை கரையை அண்மித்தல்.

மடிபின்னுதல்: மீன் ஒருங்கிணையும் வலையின் வாயைக் கட்டுதல்.

மடி மாத்துதல்(மாற்றுதல்): (நிறைய மீன்களை தாய்மடியிலிருந்துசிறு மடிகளுக்கு இடல்.

**உடப்பூர் இணைமொழிகள்**

| | |
|---|---|
| அட்டா துட்டி | அத்தா பத்தா |
| அழுது பொலம்பி | அள்ளு கொள்ள |
| அரணி பொறணி | அருவல் நொருவல் |
| அடி புடி | ஆகாசம் பூமி |
| இடு முடுக்கு | ஈமம் சாமம் |
| ஈவு நோவு | எசகு பெசகு |
| எசக்கு மொசக்கு | ஏப்ப சாப்ப |
| ஏறுதல் மாறுதல் | ஓட்ட ஒடசல் |
| கறுக்கு முறுக்கு | காறு பாறு |
| கண்டானும் முண்டானும் | கீறிக் கெதறி |
| குண்டு குழி | குண்டாமணி முண்டாமணி |
| குறுக்க மறுக்க | கைக்கு மடிக்கு |
| கொசமொசக்க | கொண்டு குடுத்து |
| கொள்ள மொள்ள | கொள்வின குடுப்பின |
| கோயில் கொளம் | சள்ளு புள்ளு |
| சடக்குப் புடக்கு | சப்புச் சவறு |
| சாட்டுப் பூட்டு | சாக்குப் போக்கு |

| | |
|---|---|
| சீறு பூறு | சுத்து மாத்து |
| செஞ்செழிப்பு | தத்தக்கா பித்தக்கா |
| தடபுடல் | தாட்டுப்பூட்டு |
| தேச பாச | திக்காலுக்குத் திக்கால் |
| திட்டு முட்டு | பச்சி பறவ |
| வல்லடி வம்பு | வாக்கு வடிவு |
| வாசி கீசி | நருக்குப் பிருக்கு |
| நத்து நருவல் | நண்டு சுண்டு |
| நல்லது கெட்டது | ஞாயமும் நீதியும் |
| நீட்டுப் போக்கு | பொடு போக்கு |
| நோய் நொம்பலம் | மானம் மருவாதி |
| முக்கி மொனகி | மூக்கு மொகற |
| லேசு மாசு | |

**உடப்பூர் மரமரபுச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| அமுக்குக் கோழி | : | தந்திரக்காரன் |
| ஆத்துவா காக்க | : | பேராசைக்காரன் |
| இருதல மணியம் | : | நடிப்பவன் |
| தெம்மாடி/தெம்மாங்கு | : | மோளை, முட்டாள் |
| திருவாலி | : | அயோக்கியன் |
| கரு நாக்கு | : | தீமை விளைவித்தல் |
| கக்க வைத்தல் | : | வெளியிடச் செய்தல் |
| கவுத்தால போதல் | : | கை நழுவுதல் |
| தாளித்தல் | : | விபரிதத்ல், புகழ் பேசுதல் |
| தலையாட்டிப் பொம்மை | : | சுய சிந்தனையற்றவன் |
| வளத்தாட்டுதல் | : | சாக்காட்டுதல் |
| உண்டாயிருத்தல் | : | கருத்தரித்தல் |
| உரித்து வைத்தல் | : | ஒரே மாதிரியாக அமைதல் |
| வெள்ளையப்பன் | : | காசு பம்முதல்/தந்திரத்துடன் ஒளித்தல் |
| வலி வாங்குதல் | : | துன்பப்படுதல் |
| இடுதடியன் | : | பயனற்றவன் |

**உடப்பூர் வசைமொழிகள்**

அவளக் குடுக்க
அவனக் குடுக்க
இடு தடியா
ஒன்னக் குடுக்க
கல்லுப் படைக்க
பல்லாக்கில போக
பாம்பு கடிக்க
புள்ளத் திம்பா
போற எடத்திலபெரண்டு போவா
குத்துண்டு போவ
அண்ணனத் திம்பா
அக்காவத் திம்பா
எழு முடுவுக்கு
ஒன்னக் குடும்பேனே
கசம் புடிச்சவன்
பாடையில் போக
பிசாசு அடிக்க
போக்காப் போவா
கொள்ளையில போவ
ராஸ்கோல்

**உடப்பு மீன் வகைகள்**

அஞ்சீலா
ஊமக்கிளாத்தி
கண்ணாடிப் பாரை
பேப்பாரை
கிண்ணட்டிப் பாரை
கீரி மீன்
சேங்கை
சிலுவன் முரலி
தண்ணிப்பன்னா (நாய்மீன்)
ஆக்கணங் கெளிரறு
பூச்சகண்ணி
வெங்கடை
பொறமீன்
மங்கு
குத்தா
தோலி
வெம்பறை
ஊளி
கறுக்காப்பாரை
சூவாப்பாரை
பெற்றியன் பாரை
கிளி மீன்
கும்பளா
சாளை
சூடை
தட்டை மீன் (சீலா)
நீர் வாளை
பன்னா
தொண்டன்
தடங்கி
உழுவ (உழுவை)
தோட்டா
செத்தல்
சிங்கிறால்

| | |
|---|---|
| சிவப்புச்சிங்கி | பச்சைச்சிங்கி |
| மஞ்சள் சிங்கி | வெள்ளியா |
| மஞ்சள் பேத்தை | முள்ளுப் பேத்தை |
| முட்டிப் பேத்தை | அரக்குளாப் பேத்தை |
| கெடுத்தல் | கஞ்சாக்குட்டி |
| வெள்ளத்தோலன் | செப்பலி |
| செவ்வல் மீன்தொகுதி | மீவெட்டியோ-விளைமீன் |
| யப்பான் | பசறி |

**உடப்பூர் உவமைத் தொடர்கள்**

அடப்படுத்த கோழி போல
ஊம கனாக் கண்டது போல
எரும மாட்டில மழை பெஞ்சது போல
காஞ்ச மாடு கம்புல உளுந்து போல
சந்தியில முந்தி அவுத்தது போல
மொசல் மூக்கில புல்லுக் குத்தினது போல
வேலையத்த அம்பட்டன் பூனையைச் செரச்சது போல
வேசி வீட்டு வெத்திலப்பெட்டிபோல
நல்ல மாட்டில நரையான் விழுந்தது போல
நார வாங்கின கெளிறு போல
ஊக்கா வடிச்ச நண்டு போல
விரால் இல்லாக் கொள்ளத்துக்கு மண்டுரால் ராசா போல
பூனையும் பூன போட்ட குட்டியும் போல
ஓட்டப் பானைக்குள் நண்டு புகுந்தது போல
மீரா பள்ளியில செருப்பு அடஞ்சுகெடக்குறது போல
பொரிச்ச மீன பூன பார்க்கிறது போல
தல பிஞ்ச கும்பளா போல
அம்பட்டன் குப்பயக் கௌறுவது போல
ஆன தன் தலையில மண்ண வாரிப் போட்டது போல
எச்சிலிலைக்கு நாய் அடிச்சுக் கொண்டு நிற்கிறது போல
குட்டி போட்ட நாய் போல

# வாசிப்புத் துணை நூல்கள்


Casie Chitty, Simon (1834), *The Castes, Customs, Manners and Literature of the Tamils*, Ceylon Printers Ltd, Colombo

Casie Chitty, Simon (1834), *The Ceylon Gazetteer*, Cotta Church Missions Press, Ceylon.

G.C. Mendis (1954), *The Early History Of Ceylon*, Colombo.

M.D. Raghavan (1961), *The Karava of Ceylon& Society and Culture*, K.V.G. De Silva Sans, Colombo.

Pathmanathan, S. (1978), The Kingdom of Jaffna & Colombo,.

Tanaka. M (1991), Patrons, Devotees and Goddesses Ritual and Power among the Tamil Fishermen of Sri Lanka (About Udappu), Kyoto University, Japan.

கணபதிப்பிள்ளை, க. (1956), *இலங்கை வாழ் தமிழர் வரலாறு*, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

குணரத்ன, அ. (1987), வரலாற்றுப் பிரக்ஞையின் உருவாக்கம் மகாவம்சத்திலிருந்து சிங்களத் தேசியவாதத்தை நோக்கி (தமிழில் மனோ) Chicago Anthropology Exchange, Volume 16, Autum 1987 Viyooham, http://www.keetru.com/index.

கைலாசபதி, க. (1991), *பண்டையத்தமிழர் வாழ்வும்*, வழிபாடும்.,

கோதண்டராமன், மா. (1995), *நாட்டுப்புறவியலும், பண்பாடும்*, சென்னை.

சக்திவேல், சு. (1991), *மேற்கோள்-தமிழ் மொழி வரலாறு*, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

சங்கரப்பிள்ளை, பொ. (1991) *நாம் தமிழர்* (A Short History Of The Tamils Up To British Period), கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

சபாநாதன், குல. (1953), *யாழ்ப்பாண வைபவமாலை*, கொழும்பு.

சாஜஹான், ஏ.என்.எம். (1992), *புத்தளம் வரலாறும்*, மரபுகளும், புத்தளம்.

சிவத்தம்பி, கா. (1978), *ஈழத்தில் தமிழ் இலக்கியம்*, சென்னை.

சிவத்தம்பி, கா. (2003), *இலங்கைத் தமிழர் யார், எவர்?*, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

சிவதம்பி, கா. (1981), *Drama Ancient Tamil Society*, New Century Book House, Madras.

சிவலோகதாசன், வ. (1997), *உடப்பூர் - வரலாறும், மரபுகளும்*, இந்து ஆலய பரிபாலன சபை, உடப்பு.

சொக்கலிங்கசாமி, மு. (1982), *சிலாபப் பிரதேச கல்வி வளர்ச்சி*, பட்டபின் படிப்பு ஆய்வறிக்கை, கொழும்பு.

சொக்கலிங்கம், க. (1978), *ஈழத்துத் தமிழ்நாடக இலக்கியம்*, யாழ்ப்பாணம்.

சொக்கலிங்கம், சி. பூசகர் (1929), *உடப்பு திரௌபதியம்மன் மான்மியம்*, யாழ்ப்பாணம்.

சொர்ணலிங்கம் (1968), *ஈழத்தில் நாடகமும் நானும்*, யாழ்ப்பாணம்.

சோமலே (1983), *தமிழ் நாட்டு மக்களின் மரபும், பண்பாடும்*, நேசனல் புக் டிரஸ்ட், இந்தியா.

நடராசா, F.X.C. (1962), *மட்டக்களப்பபுமான்மியம்*, கொழும்பு.

பத்மநாதன், சி. (1970), *இலங்கையில் வன்னியர்*, இலங்கைப் பல்கலைக்கழகம், வரலாற்றுத்துறை. பேராதனை.

மௌனகுரு, சி. (1993), *ஈழத்து தமிழ் நாடக அரங்கு*, கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

மௌனகுரு, சி., சித்திரலேகா, மௌ., நுகுமான், எம்.ஏ. (2001), *இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்*, மதுரை.

வரதராசன், மு. (1994), *மொழிவரலாறு*, சைவசித்தாந்த நூற்பதிப்பகம், சென்னை.

வானமாமலை, நா. (1997), *தமிழர் நாட்டுப் பாடல்கள்*, சென்னை.

வித்தியானந்தன், சு. (1954), *தமிழர் சால்பு*, தமிழ் மன்றம், கண்டி.

வீரசொக்கன் (1989), *உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு*, உடப்பு.

வேலுப்பிள்ளை, ஆ. (1980), *தமிழர் சமய வரலாறு*, சென்னை.



பழைய திரௌபதியம்மன் கோயில்



காளியம்மன் கோயில்





இரு கொடிக்கம்பம்



கரகம் பாலித்தல்



வனவாச உற்சவம்



கதை படிப்பும் திருவிழாவும்



தவசியும், பாசுபதம் பெறலும்



தேத்தரசன் கோட்டை பிடித்தல்



அக்கினிக் குண்டக் காவல்



அக்கினிச் சட்டி



வேள்வித் திருவிழா



தீ மிதிப்பு



சித்திரைச் செவ்வாய்க் கும்மி

## உடப்பு: தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று

**வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்**

இந்நூல் உடப்பூரின் வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடுகள், மரபுகள் போன்றவற்றை ஆராய்வதுடன், அவற்றின் பரிணாம வளர்ச்சி அதில் உடப்பு ஊரவரின் பங்களிப்பு என்பவற்றையும் விபரிக்கின்றது. மேலும், இவ் அம்சங்களை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் பலவும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. உடப்பின் வரலாறு, இறைபக்தி, குலதெய்வங்கள், தொழில்கள், வாழ்வியல் சடங்குகள், திருவிழாக்கள், கிராமிய வழிபாடு, கல்வி, நாட்டாரிலக்கியங்கள், உடப்பு மக்களின் வீரம், பக்தி நிறைந்து வளர்ந்து ஓங்கி நிற்கும் உடப்பூர் தமிழ் கலாச்சாரமும் பண்பாடும் வேகமான நவீனத்துவத்திற்கு மத்தியிலும் பேணிப் பாதுகாத்து வளர்ந்து வருதல் போன்ற பல விடயங்கள் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுன. உடப்பூரைப் பற்றியும், அதன் ஆலயங்களின் மகிமை, செல்வாக்கு போன்றன பற்றியும் ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும், எமது எதிர்கால இளைய தலைமுறைக்கும் உடப்பூரின் பெருமையையும், பெறுமதியையும் இந்நூல் விளக்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.



கலாநிதி வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்: இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஓர் முதுநிலை விரிவுரையாளராவார். உடப்பூரில் கல்வி கற்று, பேரதனைப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக இளமாணி சிறப்புப் பட்டம் பெற்ற இவர், தாய்லாந்து ஆசியன் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் வியாபார முதுமாணிப் பட்டத்தையும், சீன நாட்டின் ஜெஜியாங் பல்கலைக்கழகத்தில் புத்துமை முகாமைத்துவ (Innovation Management) துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக மட்டுமன்றி உதவிப்பதிவளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், சர்வதேச நிறுவனங்களில் மனிதவள முகாமையாளராகவும் பணிபுரிந்துள்ளார். 'இந்து தர்மம்' (1996), 'உடப்பூர்: வரலாறும், மரபுகளும்' (1997), 'மனிதவள முகாமைத்துவம்' (2010), 'மனித முகாமைத்துவ நடைமுறைகள்' (2012) ஆகியவை இவர் எழுதிய நூல்களாகும்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: சமூகவியல்

ISBN 978-955-659-xxx-x

9 789556 594393

விலை ரூபா 650.00

#626